D
V24,31'P60.
P00.100.2.

223314

வெளியீடு 21-2-2001 Issued 21-2-2001

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

சனிக்கிழமை, ஏப்ரல் 29, 2000 – தொகுதி 100 – எண் 2

Saturday the 29th April, 2000 – Volume 100 – No. 2

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

விலை ரூ. *3.00*] [Price Rs. 3.00

29-4-2000

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. | 215-257 |
| **2. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விலை வீழ்ச்சி | 257-284 |
| திரு. பா.மு. முபாரக் .. | 258-261 |
| திரு. ச. அழகிரி .. | 261-264 |
| *திரு. கே. சுப்பராயன் .. | 265-268 |
| திரு. பி.ஆர். சுந்தரம் .. | 268-271 |
| திரு. ம. அப்துல் லத்தீப் .. | 271-275 |
| *திரு. லா. சந்தானம் .. | 275-277 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் .. | 277-279 |
| திரு. சி. வேலாயுதன் .. | 279-280 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி .. | 280-284 |
| **3. அறிவிப்பு—** | |
| அடுத்து எடுக்கப்பட வேண்டிய பொருள் நேரமின்மை கருதி பிறிதொரு நாள் எடுத்துக்கொள்ளப்பெறுதல் .. | 284 |
| **4. அறிக்கை அளித்தல்—** | |
| அரசு உறுதிமொழிக் குழு .. | 284 |


53-118—1

223314




பக்கங்கள்

5. [stamp] கோரிக்கைகள், 2000-2001-விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 35 - பாசனம்

(ஆ) கோரிக்கை எண் 36 - பொதுப் பணிகள் - கட்டடங்கள்

(இ) கோரிக்கை எண் 54 - பாசனம் குறித்த மூலதனச் செலவு

(ஈ) கோரிக்கை எண் 55 - பொதுப் பணிகள் - கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு

(உ) கோரிக்கை எண் 44 - காட்டுவளத் துறை

(ஊ) கோரிக்கை எண் 58 - காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு

285-426

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. துரைமுருகன் .. | 285, 293, 298, 301, 304, 309, 311, 345, 346, 348, 349, 351-352, 374-375, 378-379, 385-390, 391-409 |
| *திரு. ஓ.ஆர். இராமச்சந்திரன் .. | 310-317 |
| திரு. எல். மூக்கையா .. | 317-323 |
| *திரு. நா. பெரியசாமி .. | 323-328 |
| திரு. சுப. தங்கவேலன் .. | 329-335 |





பக்கங்கள்

5. மானியக் கோரிக்கைகள், 2000-2001 - விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

| | |
|---|---|
| *திரு. டி. மணி .. | 335-342 |
| *திரு. இரா. தாமரைக்கனி .. | 342-351 |
| திரு. ப. பாலசுப்பிரமணியன் .. | 352-354 |
| *திரு. ச. புரட்சிமணி .. | 354-357 |
| *திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் .. | 357-363 |
| *திரு. பி.என். வல்லரசு .. | 364-367 |
| திரு. ம. அப்துல் லத்தீப் .. | 368-375 |
| திரு. சி. வேலாயுதன் .. | 377-380 |
| திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் .. | 381-384 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் .. | 384-388, 393-394, 395 |

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 426

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 17, விக்கிரம — திருவள்ளுவர் ஆண்டு 2031

## 2000 ஏப்ரல் 29, சனிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்

காடும் உடையது அரண்".

ஆழமும் அகலமும் கொண்ட அகழ், பரந்த நிலம், உயர்ந்து நிற்கும் மலைத் தொடர், அடர்ந்திருக்கும் காடு ஆகியவற்றை உடையதே அரணாகும்.

## 1. வினாக்கள் - விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 441, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

441—

**உதவித்தொகை**

***14174 திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரண்டாவது உலக யுத்தத்தில் கலந்துகொண்ட முன்னாள் இராணுவத்தினர் குடும்பங்களுக்கு வழங்கும் உதவித்தொகையை உயர்த்தும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு?

[2000 ஏப்ரல் 29

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இரண்டாம் உலகப் போரில் கலந்துகொண்ட முன்னாள் படைவீரர் மற்றும் அவர்தம் விதவைகளுக்கு முன்னாள் படைவீரர் நல நிதியில் இருந்து மாதம் ரூ. 150 வீதம் வழங்கப்பட்டு வந்த உதவித்தொகை 1-12-1998 முதல் ரூ. 300/-ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டினுடைய விடுதலைக்காகப் பாடுபட்ட, இருபது ஆண்டு காலமாகக் கேட்பாரற்றுக்கிடந்த அந்தத் தியாகிகளின் குடும்பங்களை எல்லாம் தேடிப்பிடித்து, அவர்களுக்கெல்லாம் நல உதவிகளை அளித்து வாழவைத்த நம்முடைய முதல்வர் அவர்கள், இரண்டாம் உலகப் போரில் கலந்துகொண்டவர்களுடைய குடும்ப நிதியை ரூ.300-லிருந்து ஆயிரம் ரூபாயாகவாவது உயர்த்தித் தர ஏற்பாடு செய்வார்களா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இப்போதுதான் ரூ. 150 என்பது 300 ரூபாய் என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. எப்போதுமே எதிர்க்கட்சிகள்தான் இத்தகைய கேள்விகளைக் கேட்டு, ஆளுங்கட்சியைச் சிரமத்திலே வைப்பது வாடிக்கை; அது இலக்கணமும்கூட. அந்த ரோலை நம்முடைய வைதியலிங்கம் அவர்கள் எடுத்திருப்பது பாராட்டுக்குரியது. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைச் சேர்ந்த முன்னாள் இராணுவத்தினர் எத்தனை பேர், இன்னாள் இராணுவத்தினர் எத்தனை பேர் எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அந்த எண்ணிக்கை என்னிடத்திலே இல்லை. ஆனால், இந்த உதவியின் மூலமாகப் பயன்பெறுகின்ற பயனாளிகளுடைய கணக்கு என்னிடத்திலே இருக்கிறது. இதிலே, ஓய்வூதியம் பெறாத, இரண்டாவது உலகப் போரிலே பணியாற்றிய படைவீரர்களுடைய எண்ணிக்கை 7,453 அவர்களுடைய துணைவியார் 1,185 பேர். ஆகமொத்தம் 8,638 பேருக்கு இந்த உதவித்தொகை வழங்கப்படுகிறது.



2000 ஏப்ரல் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாம் உலகப் போரில் உயிர்நீத்த இராணுவ வீரர்களுடைய குடும்பத்திற்கு உதவித்தொகை வழங்கப்படுவதுபோல, சமீபத்தில் ஏற்பட்ட கார்கில் யுத்தத்திலே மரணமடைந்த வீரர்களுடைய குடும்பத்திற்கும் உதவித்தொகை வழங்கப்படுமா? அவர்களுக்குக் கணிசமான அளவுக்கு உதவிகளும் மற்ற காரியங்களும் செய்வதைப்போலவே, இந்த இரண்டாம் உலகப் போரிலே உயிர்நீத்த தியாகிகளுக்கு இணையான அந்த உதவித்தொகைகளை வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, கார்கில் போரில் வீர மரணம் அடைந்தவர்களுக்கு நிதி ஐந்து இலட்சம் ரூபாய் மாநில அரசின் சார்பாக வழங்கப்பட்டது. அவர்களுக்கு ரூபாய் ஐந்து இலட்சத்திலே இருந்து பதினோரு இலட்சம் வரையிலான ரூபாய் மதிப்பில் வீடு வழங்கப்பட்டது. அஃதன்னியில், அவர்களுடைய வாரிசுதாரர்கள் யாராவது இருந்தால், அவர்களுக்கு வேலைவாய்ப்பும் வழங்கப்பட்டது; வழங்கப்படும் என்று சொல்லப்பட்டது மாத்திரமல்ல, வழங்கப்பட்டேவிட்டது. அஃதன்னியில், அவர்களுடைய குடும்பத்தாருக்கு மகனோ, மகளோ இருந்தால், அவர்களுடைய படிப்பு வசதியையும் அரசு கவனிக்கும் என்று உறுதியளிக்கப்பட்டு, அவ்வாறு அந்த உதவியும் செய்யப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது உலகப் போரிலே எங்களது தலைவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களுடைய I.N.A. படையைச் சார்ந்தவர்களும் இந்த நாட்டினுடைய விடுதலைக்காகப் போராடியிருக்கிறார்கள். இன்றைக்கு உயிரோடு இருக்கின்ற அவர்களுக்கெல்லாம் தியாகி பென்ஷன் வழங்கப்படுகிறது. அதுபோல, இராணுவத்திலே கலந்துகொண்டு உயிர்நீத்த வீரர்களின் குடும்பங்களினுடைய பட்டியலைக் கொடுத்தால், இரண்டாவது உலக யுத்தத்திலே கலந்துகொண்ட இராணுவ வீரர்களுடைய குடும்பத்திற்கு அளிக்கப்படுகின்ற சலுகை அவர்களுக்கும் அளிக்கப்படுமா என்று தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[2000 ஏப்ரல் 29

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இது மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து செய்ய வேண்டிய காரியம். ஏற்கெனவே ராணுவத்தினருக்கு, குறிப்பாக நேதாஜி படையினருக்குச் சில உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்த அறிக்கையும் தரப்பட்டால் அதுபற்றிய பரிசீலனை நடைபெறும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரஷ்ய நாட்டினர் 2-வது உலக யுத்தத்தில் இறந்தவர்களுடைய சமாதியில் போய் திருமணம் முடிக்கிறார்கள். திருமணம் ஆகாதவர்கள் திருமணம் முடிக்கிறார்கள். அந்த அளவு நாட்டுப்பற்று உருவாகி இருக்கிறது. அதேமாதிரி அந்த நாட்டிற்குப் பாடுபட்ட லெனின் போன்றவர்களையெல்லாம், நினைவு கூறத் தக்க வகையில் டி.வி. நிகழ்ச்சிகள் முடிந்த உடனேயே "லெனின், லெனின்" என்று சொல்லி நாட்டுப்பற்றை உண்டு பண்ணுகிறார்கள். அதேமாதிரி நம் டி.வி.க்கள் மூலமாகவும் திருமணங்கள் போன்ற வைபவங்களை எல்லாம் இரண்டாவது உலக யுத்தத்திலே இறந்த ராணுவ வீரர்கள் சமாதியிலே சென்று நடத்துகிற அளவிலே, ஒரு நாட்டுப்பற்றை உருவாக்க நம் தமிழக அரசு மற்றும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்படுமா? 2-வது உலக யுத்தத்தின்போது 100-க்கு 100 அல்லது 90 விழுக்காடு மக்கள் இராணுவத்திலே பணிபுரிந்து இறந்துள்ளவர்களை உடைய கிராமம் தமிழ்நாட்டிலே எங்கே இருக்கிறது என்று தேர்ந்தெடுத்து அந்த கிராமத்தைத் தத்தெடுத்து அந்தக் குடும்பங்களிலே உள்ளவர்களுக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளையும் உதவிகளையும் செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, ரஷ்யா போன்ற நாடுகளில் இதுபோன்று கல்லறைகளில் அல்லது நினைவிடங்களில் அல்லது சமாதிகளில் திருமணம் செய்துகொள்வதை ஒரு மூட நம்பிக்கையாகக் கருதி வெறுக்கமாட்டார்கள். ஆனால், தமிழ்நாட்டிலே திருமணத்திற்கு சமாதிக்குப் போகிறோம் என்று சொன்னால் திருமணத்தன்றே சமாதிக்குப் போக வேண்டுமா என்கின்ற ஐயப்பாடு மூட நம்பிக்கையின் காரணமாக ஏற்படும். எனவே, அவர்களையெல்லாம் திருத்தி, முதல் வழிகாட்டுதலாக



2000 ஏப்ரல் 29]

திருவில்லிப்புத்தூரிலே நம்முடைய தாமரைக்கனி அவர்களுடைய வீட்டுத் திருமணம் ஒன்றை அப்படி நடத்தி வைப்பாரேயானால், அது மற்றவர்களுக்கும் வழிகாட்டுதலாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 442, திரு. ரா. சேதுநாதன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

442—

### வாரிசுகளுக்கு அரசுப் பணி

***26486—திரு. ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தனியார், பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்கள் பணிக் காலத்தில் இறந்தால் அவர்களின் வாரிசுகளுக்குத் தகுதி அடிப்படையில் அரசுப் பணி வழங்கப்படுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பணிக்காலத்தில் காலமான, அரசு உதவிபெறும் தனியார்ப் பள்ளி பணியாளர்களின் வாரிசுகளுக்குத் தொடர்புள்ள உதவிபெறும் பள்ளி அல்லது அதே நிர்வாகத்தின்கீழ் உள்ள பிற உதவிபெறும் பள்ளிகளில் தகுதி அடிப்படையில் பணி வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அரசு உதவிபெறும் பள்ளிப் பணியாளர்கள் அரசு ஊழியர்கள் ஆகமாட்டார்கள் என்பதால், அன்னாரது வாரிசுகளுக்கு அரசுப் பணிகள் வழங்க இயலாது.

**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பள்ளிகளிலும் தனியார் பள்ளிகளிலும் ஆசிரியர்கள் பணியாற்றுகின்ற பணியாற்றுகின்றார்கள். அரசுப் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் இறந்துவிட்டால் வாரிசுகளுக்கு பணி வழங்கப்படுகிறது. அதேபோல தனியார் பள்ளிக்கூடங்களில் பணி செய்யும், அரசு சம்பளத்தைப் பெற்றுப் பணி செய்யும் ஆசிரியர்கள் இறந்துவிட்டால் அந்த வாரிசுகளுக்குப் பணி கிடைக்காமல் அலைகிறார்கள். தனியார்களால் ஒரேயொரு நிறுவனம் மட்டும் நடத்தப்படுகின்ற காரணத்தால் அங்கே தகுதிக்கேற்ற பணி இல்லை என்று அவர்கள்

புறக்கணிக்கப்படுகிறார்கள். எனவே, அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் இறந்தவர்களுடைய வாரிசுகளுக்குப் பணி வழங்க அரசு ஆவன செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதிமுறைகளை அரசு கட்டாயம் பின்பற்ற வேண்டும். எந்தெந்த நிறுவனத்தில் பணியாற்றியவர்கள் இறக்க நேரிட்டு, அவருடைய வாரிசுகளுக்குப் பணி வழங்குவதற்கான நியாயம் இருக்கிறதோ, அதை வழங்க அந்த நிறுவனங்கள்தான் கடமைப்பட்டவை. தனியார் பள்ளிக்கூட நிர்வாகத்திற்குள் பலபேர் பணியாற்றுகிறார்கள். அவர்களிலே யாராவது தவறிப் போனால் அந்த நிர்வாகத்திற்குள் அடுத்த வாய்ப்பு அவர்களுக்கு வழங்கக்கூடிய நிலை வேண்டும். ஒரு தவறான அடிப்படையிலே இந்த வினா மாண்புமிகு உறுப்பினரால் கேட்கப்படுகிறது. அரசுப் பணியாளர்கள் இறந்துவிட்டால் உடனே அவர்களின் வாரிசுகளுக்கு வேலை கிடைத்து விடுகிறது என்பது ஒரு தவறான எண்ணம். கடந்த காலத்தில் அப்படி இறந்துபோனவர்களுடைய வாரிசுகளுக்கு வேலை தருகிற பணி ஒரு ஆண்டுக்கு 100 பேர் 120 பேருக்கு வழங்கப்பட்டாலும்கூட 1991 ஆம் ஆண்டு வரையிலே இறந்துபோன பணியாளர்களுக்குத்தான் வழங்கப்பட்டிருக்கிறதே தவிர, அதற்குப் பின்னர் இந்த 6 ஆண்டுகளில் 1500 பேர், 1800 பேர் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வழங்குவதற்கு இன்னும் 4 ஆண்டுகள், 5 ஆண்டுகள் ஆகும். ஆகவே, அந்த முறை மூலமாக ஏதோ உடனடியாக வேலை கிடைக்கும் என்ற தவறான எண்ணத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 443, திரு. குழந்தை தமிழரசன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**443—**

### தமிழ்மொழிப் பாடப் புத்தகங்கள்

***29552—திரு. குழந்தை தமிழரசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தமான் தீவிலுள்ள உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளியில் தமிழ் வழி படிக்கும் மாணவர்களுக்குப் போதிய தமிழ்மொழிப் பாடப் புத்தகங்கள் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?





**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

—அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகளிலுள்ள பள்ளிகளில் தமிழ் வழிக் கல்வி பயிலும் 1 முதல் 8ஆம் வகுப்பு மாணவர்களுக்கு அவர்களின் தேவைப்பட்டியலின் அடிப்படையில் தமிழ் வழிப் பாட நூல்கள் 1999-2000 ஆம் ஆண்டு முதல்—கடந்த ஆண்டு முதல்—தொடர்ந்து இலவசமாக தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

*முற்பகல் 9-40*

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு முறை சுற்றுப்பயணமாக சட்டமன்ற உறுப்பினர்களோடு அந்தமான் சென்றபோது அங்கே தமிழ் மன்றத்தில், தமிழ் அறிஞர்கள் எங்களுக்கு ஒரு தேநீர் விருந்து கொடுத்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அமைப்பாளர்களும் அதிலே கலந்துகொண்டு, "அங்கே பள்ளியில் படிக்கின்ற +2, உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு போதிய பாடப்புத்தகங்கள் தமிழக அரசினால் வழங்கப்படுகின்றன, ஆனால், அந்தத் தேவையை அது பூர்த்தி செய்யவில்லை. எனவே, அதிகப்படியாக வழங்க வேண்டும்" என ஒரு கோரிக்கையை எங்களிடம் வைத்தார்கள். அதன் அடிப்படையில்தான் இந்த வினாவை நான் எழுப்பினேன். எனவே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 8 ஆம் வகுப்புவரை படிக்கின்ற மாணவர்களுக்கு இலவசமாக வழங்குவதாக தற்போது தெரிவித்துள்ளார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் உயர்நிலைப் பள்ளி, பத்தாம் வகுப்பு, +2 மாணவர்களும் இப்போது அங்கே தமிழ்மொழிக் கல்வி பயின்றுகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் இலவசமாகப் புத்தகங்கள் வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே எட்டாம் வகுப்பு வரையிலும் சத்துணவு உண்ணுகிற பிள்ளைகளுக்கு இலவசப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. தொடக்கப்பள்ளியிலே மட்டும் அனைவருக்கும் இலவசப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. அந்தமானிலே உள்ளவர்களுக்கு அவர்கள் கேட்பார்களேயானால் — ஏற்கெனவே அரசு மூலமாகக் கேட்டு 1 முதல் 8ஆம் வகுப்புக்கு 2,68,000 ரூபாய்க்கு இலவசமாக புத்தகங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதற்கு மேற்கொண்டு மேல் வகுப்பிற்குப்

[2000 ஏப்ரல் 29

புத்தகங்கள் தேவையானால்—அதை அடக்க விலைக்குத் தருவதானால் அரசு எளிதாகத் தர முடியும். அப்படி ஒரு வேண்டுகோள் அந்த அரசினுடைய அலுவலர்களிடமிருந்து, கல்வித் துறை ஆணையரிடமிருந்து எங்களுக்குக் கிடைக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், அங்கே தேநீர் சாப்பிட்டுவிட்டு வந்து இங்கே சொல்லாமல் விட்டுவிட்டார்கள். ஒருவேளை வந்தவுடனே அந்த வேண்டுகோளை வைத்திருப்பாரேயானால் அதை ஆய்வு செய்திருக்கலாம். இருந்தாலும், அவர்கள் சொன்ன கருத்து இப்போதுதான் மாண்புமிகு உறுப்பினர் மூலமாக எனக்குத் தெரிகிறது. 9, 10 ஆம் வகுப்பிற்குப் புத்தகங்கள் தேவை என்று தெரிவிப்பார்களேயானால் அதுபற்றி ஆலோசிக்கலாம். இருந்தாலும் தமிழ்நாட்டிலேயே விலை வைத்துத் தருகிறபோது, அந்தமானிலே இலவசமாகத் தர முடியுமா என்பது ஆலோசிக்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. பாலகிருஷ்ணன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தமான் தீவில் தமிழர்கள் ஏராளமாக வாழ்கிறார்கள். அங்கே இருக்கின்ற உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி ஆகிய எல்லாப் பள்ளிகளுடைய கேள்வித் தாள்களும் ஆங்கிலத்திலே வருகின்றன. காரணம், அங்கே பல மொழிகள் பேசுவோர் இருக்கிற காரணத்தால், ஆங்கிலத்தில் டெல்லியில் இருந்து தயார் செய்து கேள்வித் தாள்கள் அங்கே வருகின்றன. ஆகவே, நம்முடைய தமிழ்க் குழந்தைகள் சிரமப்படுகிறார்கள். நம்முடைய அரசு மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்து தமிழிலேயே கேள்வித் தாள்கள் கொடுப்பதற்கு அல்லது தமிழ்நாட்டில் இருந்து கேள்வித் தாள்கள் தயாரித்து அனுப்புவதற்கு நம்முடைய அரசு உதவி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அந்தமான் நிர்வாகத்தினுடைய பொறுப்பு. ஒரு மாநில அரசு, பாண்டிச்சேரி மாநில அரசாக இருந்தாலும்கூட அந்த மாநில அரசு என்ன செய்ய வேண்டுமென்று சொல்வதற்கு, நமக்கு நேரடி உரிமை கிடையாது. அந்தமான் மாநில அரசு சார்பாகக் கேட்கப்படுமானால் தமிழக அரசு உதவி செய்ய முன்வரலாம். இரண்டாவது, அங்கே தமிழ் மொழி பேசுகிறவர்கள்மட்டும் இருக்கிறார்கள் என்று கருத முடியாது. வேறு மொழிகளான வங்காள மொழி பேசுகிறவர்கள், மலையாளம் பேசுகிறவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். ஒருவேளை, அவர்களுடைய கேள்வித்தாள் தமிழ் பாடத்தைத் தவிர மற்றப் பாடங்களுக்கு ஆங்கிலத்திலே இருக்கக்கூடும். அது தவறு என்று வலியுறுத்திச் சொல்ல வாய்ப்பில்லை.



2000 ஏப்ரல் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.என். சுப்பிரமணி.

**திரு. பி.என். சுப்பிரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மியான்மர் என்று சொல்லுகின்ற பர்மா எல்லையில் மோரி நகரத்தில் வாழ்கின்ற தமிழர்களுக்கு 2 ஆண்டுகளுக்கு முன் தமிழ்ப் புத்தகங்கள் அனுப்பப்பட்டன. தொடர்ந்து வருடா வருடம் தமிழ்ப் புத்தகங்கள் அனுப்பி வைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாருக்குப் புத்தகம் அனுப்புவதாக இருந்தாலும், அந்தஅந்த ஆண்டு ஒரு வேண்டுகோள் கடிதம், எந்தெந்த வகுப்பிற்கு எவ்வளவு புத்தகங்கள் தேவை என்று வருமானால் அனுப்பி வைக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 444, திரு. பெ. ஆசையன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

444—

### குடிநீர்

***9212—திரு. பெ. ஆசையன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிப்பட்டி தொகுதி, ஆண்டிப்பட்டி, பேரூர் ஆகிய இடங்களுக்குக் குன்னூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் சரியான முறையில் செயல்படாத நிலையில் இருப்பதால், இரண்டு வாரத்திற்கு ஒரு முறைதான் குடிநீர் வழங்கப்பட்டு வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தினமும் போதிய குடிநீர் வழங்கிட அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை இங்கே அளிக்கிறேன்.

[2000 ஏப்ரல் 29

*(அ)* மற்றும் *(ஆ)* ஆண்டிப்பட்டி தொகுதி, ஆண்டிப்பட்டி பேரூராட்சிக்குத் தற்போது சீரான முறையில் குடிநீர் விநியோகிக்கப்படுகின்றது.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 445, திரு. ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**445—**

**தொழிற்சாலை**

***18310—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதியில் தேங்காயை மூலப் பொருளாகக் கொண்டு தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பாபநாசம் தொகுதியில் தேங்காயை மூலப் பொருளாகக் கொண்டு தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாபநாசம் தொகுதியிலே தனியார் துறை மூலம் ஒரு சர்க்கரை ஆலைதான் இருக்கிறது. அரசு மூலமாக வேறு எந்த ஒரு தொழிற்சாலையோ அல்லது வேறு எதுவுமோ அங்கே இல்லை. அந்தப் பகுதியிலே தேங்காய் அதிகமாக விளைகிறது. அதை முன்வைத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அங்கு தேங்காயை மூலப் பொருளாகக் கொண்டு ஒரு தொழிற்சாலை அமைக்க முன்வருவார்களா என்று மீண்டும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 3.28 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் தென்னை சாகுபடி செய்யப்பட்டு 381.16 கோடி தேங்காய்கள்



2000 ஏப்ரல் 29]

உற்பத்தியாகின்றன. தஞ்சாவூர் மாவட்டத்திலே 19,189 ஹெக்டேர் நிலப்பரப்பில் தென்னை சாகுபடி செய்யப்பட்டு 2,584 இலட்சம் தேங்காய்கள் உற்பத்தியாகின்றன. பாபநாசத்தைப் பொறுத்தவரை பாபநாசம் வட்டத்தில் 756 ஹெக்டேர் நிலப்பரப்பில் தென்னை சாகுபடி செய்யப்பட்டு 68 இலட்சம் தேங்காய்கள் உற்பத்தியாகின்றன. தேங்காயை மூலப்பொருளாகக் கொண்டு தொழிற்சாலை அமைக்க யாராவது தனியார் முன்வந்தால் அரசாங்கம் அதற்கான உதவிகளைச் செய்வதற்குத் தயாராக இருக்கிறது. இதிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1996-ல் கன்னியாகுமரியில் தேங்காயை மூலப்பொருளாகக் கொண்டு ஒரு தொழிற்சாலை தொடங்கப்படும் என்று அறிவித்து, அந்தத் தொழிற்சாலையைத் தொடங்குவதற்கு பெரும் முயற்சியை T.A.I. நிறுவனத்தின் மூலம் எடுத்து இப்போதுதான் ஒரு இறுதி வடிவம் பெறப்பட்டிருக்கிறது. தேங்காயிலிருந்து பவுடர் தயாரிக்க கன்னியாகுமரி A.V.T. Coconut என்ற தனியார் நிறுவனமும், தமிழ்நாடு அரசு வேளாண்மைத் தொழிலியல் கழகமும் இணைந்து சுமார் 12 கோடி ரூபாய் செலவில் தொழிற்சாலை ஒன்று செப்டம்பர் 2000-க்குள் தொடங்கவிருக்கிறது. மொத்தத் திட்ட மதிப்பீட்டில் 11 சதவிகிதம் வரை T.A.I. நிறுவனம் முதலீடு செய்கிறது. அதைப்போல மீதித் தொகையைத் தனியார் நிறுவனம் முதலீடு செய்கிறது. அந்தப் பவுடர் தயாரித்து, முழுவதையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய ஒரு தொழிலாக அது அமைய இருக்கிறது. பாபநாசத்தில் அப்படி ஒரு தொழிற்சாலை அமைக்க வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தேங்காய்கள் நிறைய எங்கள் ஏரியாவிலே உற்பத்தியாகின்றன. மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படி உற்பத்தியாகக் கூடிய சூழ்நிலையிலே தேங்காய்க்கு இப்போதெல்லாம் நல்ல விலையில்லை. ஆகையால் இந்தத் தேங்காயிலிருந்து தேங்காய்ப்பூவைத் துருவி, அதிலிருந்து பால் எடுத்து, அதை வெளிநாட்டிற்கு அனுப்பக்கூடிய சூழ்நிலை எங்கள் ஏரியாவில் ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வரிடத்திலே நான் சில ஆண்டுகளுக்கு முன்பு "அதற்கு நீங்கள் ஏதாவது பெர்மிஷன் கொடுக்க வேண்டும், வரியே இல்லாமல் செய்யுங்கள்" என்று சொன்னவுடனேயே அவர்கள் எந்தவிதமான தயக்கமுமின்றி அதற்கு உடனே உத்தரவு கொடுத்தார்கள். அப்பேர்ப்பட்ட தொழிலை நாம் ஆரம்பித்தால்கூட

[2000 ஏப்ரல் 29

நிறைய விவசாயிகளுக்கு நல்ல வேலை வாய்ப்புக் கிடைக்குமே; Foreign Exchange-க்கு எல்லாம் நல்ல சந்தர்ப்பம் உண்டாகுமே; எனவே அந்தத் தொழிலை ஆரம்பிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது முயற்சி எடுத்துக்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தேங்காய்த் தொழிற்சாலைகள் தொடங்குவதைப்பற்றி மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பதிலளிப்பார்கள். ஆனால் தமிழ்நாட்டிலே தேங்காய் உற்பத்தி அதிகமாகி கொள்முதல் விலையெல்லாம் குறைவாக இருக்கிறது என்பதால் விவசாயிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க நம்முடைய தமிழ்நாடு TANFED நிறுவனமும், மத்திய அரசினுடைய NAFED-ம் சேர்ந்து தேங்காய்ப் பருப்புகளை கிலோ 31 ரூபாய் வீதம் எவ்வளவு இருந்தாலும் அதைக் கொள்முதல் செய்துகொண்டிருக்கிறார்கள். அதைக் கொள்முதல் செய்து மத்திய அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. TANFED நிறுவனம் வெளிமார்க்கெட்டிலே கிலோ 26, 25 ரூபாய்க்கு விற்ற தேங்காய்ப் பருப்புகளை நிறுவனமே இப்போது 31 ரூபாய்க்குக் கொள்முதல் செய்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களின் பகுதிகளில் இருக்கிற விவசாயிகள் விற்க முடியாமல் இருப்பார்களேயானால், அவர்கள் TANFED நிறுவனத்தை அணுகினால் அந்நிறுவனத்தினர் அதை வாங்கிக்கொள்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேங்காயைப் பவுடராக்கி வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்கிறார்கள். தேங்காயில் இருக்கக்கூடிய தண்ணீரைப் பதப்படுத்தி அதையும் ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. தேங்காய் ஓட்டையும் பவுடராக்கி வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆனால் அந்தத் தொழிற்சாலையை அரசாங்கம் தொடங்குவதற்கான வாய்ப்பு இல்லை. தனியார் யாராவது தொடங்குவதற்கு முன்வந்தால், அவர்களை ஊக்கப்படுத்த அல்லது தேவையான உதவிகளைச் செய்ய அரசாங்கம் தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 446, திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.



2000 ஏப்ரல் 29]

முற்பகல் 9-50

446—

### வேளாண்மைப் பயிற்சிப் பள்ளிகள்

***30720—திரு. தங்கம் தென்னரசு:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிற் பயிற்சிப் பள்ளிகளைப்போல வேளாண்மைப் பயிற்சிப் பள்ளிகளை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நவீன விஞ்ஞான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விவசாயத் துறையிலே ஒரு பெரும் முன்னேற்றத்தைக் கொண்டுவருவதிலே நம்முடைய தமிழக அரசு முனைப்பாக இருக்கிறது. அதனுடைய ஒரு கட்டமாக நம்முடைய வேளாண் விரிவாக்க அலுவலர்களுக்கெல்லாம், உரிய முறையிலே பயிற்சி கொடுத்து, அவர்கள் அறிவியல் அலுவலர்களாக இன்றைக்கு மாற்றப்படுவதன் அவசியத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே வலியுறுத்தியிருக்கிறார்கள். Prime Minister's Council on Industries and Trade என்று சொல்லக்கூடிய, பிரதம மந்திரிக்கு, தொழில் மற்றும் வர்த்தக நிலைகளிலே ஆலோசனை வழங்கக்கூடிய ஒரு குழு, Food and Agro Industries Management Policy-யைக் குறித்த தன்னுடைய அறிக்கையிலேகூட, விவசாயத் துறையிலே விவசாயிகளுடைய திறனை அதிகரிக்க, இத்தகைய பயிற்சிப் பள்ளிகள் நாடெங்கிலும் நிறுவப்பட வேண்டுமென்ற அவசியத்தைத் தன்னுடைய பரிந்துரையாக அது வலியுறுத்தி இருக்கிறது. எனவே, இவற்றையெல்லாம் கருத்திலேகொண்டு, இத்தகைய வேளாண் பயிற்சிப் பள்ளிகளை, தமிழகத்திலே அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

[2000 ஏப்ரல் 29

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 12 வேளாண்மைப் பயிற்சிப் பள்ளிகள் முன்பு இயங்கி வந்தன. கடந்த ஆட்சியில் இந்த ஓராண்டுப் பயிற்சிப் பள்ளிகள் தேவையில்லை என்று மூடப்பட்டுவிட்டன. அதற்குப் பின்னால் 2 இடங்களில், 2 ஆண்டு பட்டயப் படிப்பாகப் பயிற்சி அளிக்கலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது. அதுவும் ஒரு பள்ளியில் ஆண்டுக்கு 40 மாணவர்களைத்தான் சேர்க்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டது. ஏற்கெனவே, பட்டயப் படிப்பு படித்துப் பணியிலே இருப்பவர்கள், உதவி வேளாண்மை அலுவலர்களாகத் தரம் உயர்த்தப்பட்டு, அவர்கள் முழுமையாக அந்த எண்ணிக்கையிலான இடங்களைப் பதவி உயர்விலே பெறுகின்ற வரை, புதியதாக இந்தப் பட்டயப் படிப்பு படிப்பவர்களுக்குக்கூட வேலைவாய்ப்பு அளிக்க இயலாது என்று ஒரு கொள்கை முடிவு எடுக்கப்பட்டு, கடந்த ஆட்சிக்காலத்திலே அறிவிக்கப்பட்டுவிட்டது. ஆகவே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் தங்கம் தென்னரசு அவர்கள் சொல்வதைப்போல, Agricultural Training Institute ஒன்று புதியதாகத் தொடங்கவேண்டுமானால், அதற்கும் நிதி தேவை. ஆகவே, நிதி வசதிகளைக்கொண்டுதான் இதைப் பரிசீலிக்க இயலும். தற்போதுள்ள சூழ்நிலையில் அது சாத்தியமில்லை என்று கருதப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 447, திரு. கொ.வீ. நன்னன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**447—**

## பேருந்து இயக்குதல்

***11345—திரு. கொ.வீ. நன்னன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*திருவண்ணாமலை மாவட்டம், செங்கத்தில் இருந்து ஒசூருக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செங்கம் வழியாக ஒசூருக்குத் தினசரி 80 நடைகள் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. 20 நிமிடத்திற்கு ஒரு பேருந்து என்ற அளவில் செங்கத்திலிருந்து ஒசூர் சென்றுவர பேருந்து வசதிகள் உள்ளன. தனியாக செங்கத்திலிருந்து ஒசூருக்குச் செல்ல, தக்க போக்குவரத்து அடர்வு இல்லை. எனவே, செங்கத்திலிருந்து ஒசூருக்குத் தனியாகப் பேருந்து இயக்க வேண்டிய நிலை நிலவவில்லை.



2000 ஏப்ரல் 29]

**திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், பாண்டிச்சேரியிலிருந்து பெங்களூர் செல்கின்ற பேருந்துகள், செங்கம் வழியாக வரும்போது பயணிகள் நிரம்பி வழிகின்ற காரணத்தினால், அங்கிருந்து பயணிகள் சுகமாகப் பயணம் செய்ய முடியாத நிலையிருக்கிறது. எத்தனை பேருந்துகள் வந்தாலும் அங்கே கூட்டம் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், செங்கத்திலிருந்து நேராக ஒசூருக்குப் புறப்பட்டுச் செல்கின்ற வகையில் ஒரு பேருந்தை இயக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு உறுப்பினரும், தங்களுடைய தொகுதியிலேயிருந்து, புதிய நகரங்களுக்குப் பேருந்துகள் வேண்டுமென்று சொன்னால், அந்த போக்குவரத்துக் கழகமும் இயங்க முடியாது. அங்கே தேவையான அளவிற்குப் பேருந்து வசதிகள் இருக்கின்றன. அந்த வழியாகப் பேருந்துகள் 80 நடைகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன; ஆகவே அடர்வும் இல்லை. ஒரு பேருந்து விடுகிறோம் என்று சொன்னால், குறைந்தபட்சம் 50 பேர் இருந்தாலும் பரவாயில்லை. 10 பேர், 15 பேருக்காக ஒரு பேருந்து இயக்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறைவாக இருக்கின்றன. ஆகவே, நிறையப் பேருந்துகள் இருக்கின்ற காரணத்தினால், செங்கத்திலிருந்து, ஒசூருக்குத் தனியாகப் பேருந்து இயக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 448, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**448—**

## சுழற்பேருந்து

***24976—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 ஏப்ரல் 29

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறையிலிருந்து எலந்தங்குடி, கிளியனூர், கடக்கம், வடகரை, மன்னம்பந்தல், மயிலாடுதுறை எனும் தடத்தில் சுழற்பேருந்து எதிரெதிர் தடத்தில் இயக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

முற்பகல் 9-55

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவை நான் எழுப்பியதற்கான அடிப்படைக் காரணம், மயிலாடுதுறை வளர்ந்து வருகிற ஒரு பெரிய நகரம். வருவாய்க் கோட்டத்தினுடைய தலைநகரம். நான் கேட்டுள்ள வழித்தடத்திலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள், குறிப்பாக கல்லூரி, பள்ளி மாணவர்கள் வருகிற ஒரு பெரிய நகரமாகும். அத்தோடு இது மூன்று தொகுதிகளை, அதாவது மயிலாடுதுறை, குத்தாலம், பூம்புகார் ஆகிய தொகுதிகளில் பெரும் பகுதிகளை இணைக்கிற ஒரு வழித்தடம்; சாலைகளும் நல்ல முறையிலே உள்ளன. மேலும், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அறிவிப்பின் மூலம் சிறப்பிக்கப்பட்டிருக்கிற சாமி சிதம்பரனார் அவர்கள் பிறந்த கடக்கம் இந்த வழித்தடத்திலே வருகிறது. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அறிவிப்பிற்குச் சிறப்புச் சேர்க்கும்வகையில் இந்தத் தடத்தில் சுழற்பேருந்து விட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலித்து, ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறையிலேயிருந்து எலந்தங்குடி, கிளியனூர், கடக்கம் வரை 16 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அதேபோல் மயிலாடுதுறை, மன்னம்பந்தல், வடகரை வரை 38 வழித்தடங்கள் இயக்கப்படுகின்றன. வடகரைக்கும், கடக்கத்திற்கும் இடையிலே இருக்கிற தூரத்தில் mini bus- சிறிய பேருந்து - அங்கே இயக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே அந்தச் சிறிய பேருந்து இயங்குகிற காரணத்தால் அங்கே சுழற்பேருந்து இயக்குவது இயலாத காரியம். அதுமட்டுமல்ல, வடகரை-கடக்கம் ஆகிய ஊர்களுக்கு இடையே இருக்கிற பாலமும் குறுகிய பாலமாக இருக்கிறது என்றும் இங்கே குறிப்பிலே



2000 ஏப்ரல் 29]

குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே பேருந்து சென்று திரும்புவதற்கு வாய்ப்பு இல்லையென்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, வடகரையிலேயிருந்து கடக்கம் வரை உள்ள சாலை விரிவுபடுத்தப்படுகிற காலகட்டங்களில் இந்தச் சுழற்பேருந்து விடுவதற்கான வாய்ப்புகள் பற்றி அந்தப் போக்குவரத்துக் கழகம் ஆய்வு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 449, திரு. எல். மூக்கையா, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

449—

**சாலை வசதி**

***1292—திரு. எல். மூக்கையா:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் தொகுதி, கும்பக்கரை அருவியில் இருந்து வெள்ளக்கவி வழியாகக் கொடைக்கானலுக்குச் சாலை வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அப்பணி எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பக்கரை அருவியிலேயிருந்து வெள்ளக்கவி வழியாகக் கொடைக்கானலுக்குச் சாலை அமைத்தால், கொடைக்கானலுக்குச் செல்லக்கூடிய தூரம் சுமார் 20 கிலோமீட்டருக்கு மேலாகக் குறைவாகும். மேலும், கொடைக்கானலுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகள், குறுக்குப் பாதையாக கும்பக்கரை வந்து, அங்கே அருவியிலே குளித்துவிட்டு அதற்குப் பிறகு வைகை அணையைப் பார்த்துவிட்டு, தேக்கடிக்குச் செல்வதற்கெல்லாம் வசதியாக இருக்கும். மேலும் கொடைக்கானல் சாலையில் மழைக்காலங்களில் அடிக்கடி நிலச்சரிவு ஏற்பட்டு கொடைக்கானலுக்குச் செல்கின்ற போக்குவரத்து பாதிக்கப்படும்போது,

இந்தச் சாலை, மாற்றுச் சாலையாகக்கூட அமையும். எனவே, இந்தச் சாலையினுடைய அவசியம், அத்தியாவசியம், தேவையைக் கருதி மீண்டும் பரிசீலனை செய்து, இச்சாலையை அமைத்துத்தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பக்கரையிலிருந்து வெள்ளக்கவி வழியாக கொடைக்கானலுக்கு அமைக்கின்ற சாலை குறித்து ஏற்கெனவே பரிசீலிக்கப்பட்டது. மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இதை நிறைவேற்றுவதற்கு 93 இலட்சம் ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல்கூட வழங்கப்பட்டது; மொத்தம் 17.950 கிலோமீட்டர் தூரம் இருக்கிறது. இதிலே 550 மீட்டர் தவிர, மீதிப் பகுதிகள் எல்லாம் வனத் துறைப் பகுதியாக இருக்கின்றன. வனத் துறையினுடைய அனுமதி இதற்குக் கிடைக்கவில்லை. வனத் துறையிலே இருந்து ஒன்பதாவது மாதம் எழுதப்பட்ட கடிதத்தில், "இந்தப் பகுதியில் சாலை அமைப்பதற்கு வாய்ப்பு இல்லை, சாலை அமைக்க இயலாது" என்று பதில் வந்திருக்கிறது. எனவே, வனத் துறையினுடைய அனுமதி இல்லாமல் இந்தச் சாலையை அமைப்பதற்கு வாய்ப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 450, திரு. ரா. ஈஸ்வரன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**450—**

### இருவழிச் சாலை

***28842—திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் தொகுதியில் இராஜபாளையம்-திருநெல்வேலி செல்லும் சாலை 70 சதவிகிதம் இருவழிச் சாலையாக உள்ளதை முழுவதும் இருவழிச் சாலையாக மாற்றும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





பெருந்தொகை தேவைப்படும் இப்பணியினை உடனடியாகச் செயல்படுத்தும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராஜபாளையம் முதல் திருநெல்வேலி வரைக்கும் சுமார் 85 கிலோமீட்டருக்கு மேலே தூரம் உள்ளது. இதிலே 60 கிலோமீட்டர் இருவழிச் சாலையாக இருக்கிறது. மீதி 25 கிலோமீட்டர் ஒருவழிச் சாலையாக இருக்கிறது. ஆகையினால், போக்குவரத்துக்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. இது வெள்ளைக்காரன் காலத்தில் போடப்பட்ட ரோடு. இப்போதுள்ள வாகன வசதி, ஜனத்தொகைப் பெருக்கம் ஆகியவற்றை முன்னிட்டு மீதியுள்ள 25 கிலோமீட்டர் தூரம் சாலையையும் இருவழிச் சாலையாக மாற்ற மறுபரிசீலனை செய்து, அந்த வேலைகளைத் தொடங்குவதற்கு ஏதுவாக நிதி ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவில் வழியாகச் செல்லக்கூடிய அந்தச் சாலை வெள்ளைக்காரர்கள் காலத்தில் போடப்பட்டதாக இருந்தாலும் அப்போது அது வெறும் கற்சாலையாக இருந்தது; இப்போது தார்ச்சாலையாக மாற்றப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அந்தச் சாலையின் ஒரு பகுதி இருவழிச் சாலையாக இருக்கிறது. இன்னொரு பகுதி இடைநிலைச் சாலையாக ஒரு பக்கத்தில் மட்டும் அகலப்படுத்தப்பட்டிருக்கிறது. இருபுறமும் அகலப்படுத்தப்படுவதற்கு இந்தச் சாலை மாநிலச் சாலை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. மாநிலச் சாலைகள், பகுதி-2 திட்டத்தின் மூலமாகத்தான் மேம்பாடு செய்யப்பட வேண்டியிருக்கின்றன. பகுதி-2 திட்டத்தில் குறைவான நிதி ஒதுக்கீடே இருக்கிற காரணத்தால், இப்படிப்பட்ட பெரிய திட்டங்களை, கிட்டத்தட்ட 1.34 கோடி ரூபாய் தேவைப்படுவதால், உடனடியாக மேற்கொள்வதற்கான வாய்ப்பு இல்லை. வருங்காலத்தில் இதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூர் - பாளையங்கோட்டை - அம்பாசமுத்திரம் - தென்காசி - குற்றாலம் - செங்கோட்டை சாலை மாவட்டச் சாலையாக இருந்தது.

அந்தச் சாலை இப்போது மாநிலச் சாலையாக 1998-லே அறிவிக்கப்பட்டது. அதிலே Road Sector Project மூலமாகப் பணிகள் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் இன்று வரையில் அது மாநிலச் சாலையினுடைய தரத்திற்கு உயர்த்தப்படவில்லை. அதுபோன்று கிலோமீட்டர் 69.8 முதல் கிலோமீட்டர் 71.2 வரையிலான மேலச்செவலுக்கும் பத்தமடைக்கும் இடையில் உள்ள சாலை மிகுந்த குறுகிய சாலையாக இருக்கிறது. அதை அகலப்படுத்துகின்ற பணியைச் செய்யவில்லை. அதனால் நிறைய விபத்துகள் எல்லாம் அங்கே நடக்கின்றன. அதுபோன்று, கி.மீ. 71.2-லிருந்து கி.மீ. 78.8 வரையிலான பத்தமடை - புதுக்குடி இடையேயுள்ள சாலையும் மிக அபாயகரமான பகுதி என்று—Accident prone Zone—அறிவிக்கப்பட்டிருக்கிறது. நெடுங்காலமாக அந்தத் திட்டத்தில் இருக்கிறது. ஆனால் அந்தப் பணியும் நிறைவேற்றப்படாததால் அந்தச் சாலை தரமில்லாத சாலையாக இருப்பதால், அதைத் தரமுள்ள சாலையாக உயர்த்தித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு பல சாலைகள் மாநிலச் சாலைகளாக அறிவிக்கப்பட்டது உண்மைதான். இந்தச் சாலையும் மாநிலச் சாலையாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, இந்தச் சாலைக்கு முக்கியத்துவம் கொடுத்து இதை Road Sector Project-ல் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. Road Sector Project-ல் எடுத்துக்கொள்ளப்பட்ட சாலைகளுக்கு உலக வங்கி நிதி ஆதாரம் தருவதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறது. அவையெல்லாம் இப்போது பரிசீலனையில் இருக்கின்றன; ஆய்வில் இருக்கின்றன. எனவே, உலக வங்கி நிதி கொடுத்த பிறகு இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும். அவசரப்படவேண்டிய அவசியமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவில் என்பது நகராட்சி; புளியங்குடியும் ஒரு நகராட்சி. இரண்டுக்குமே சுமார் 15 கிலோமீட்டர் தூரம்தான் இருக்கிறது. ஒருவழிச் சாலையாகத்தான் இருக்கிறது. அதுவும் போவதற்கு அது இருவழிச் சாலையாக இருந்தால் நன்றாக இருக்கும்.



அதையும் ஆய்வுசெய்து உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். ஒரு தொகுதிக்கு 40 கிலோமீட்டர் சாலையை எடுத்துக்கொள்வதாக அன்றைக்கு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதேமாதிரி புளியங்குடி - சங்கரன்கோவில் ஒரு வழிச்சாலையை இருவழிச்சாலையாக மாற்றி அமைப்பதற்கும் அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தொகுதிக்கு 40 கிலோ மீட்டரிலிருந்து 50 கிலோ மீட்டர் வரையில் மேம்பாடு செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 400 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் என்று என்னுடைய துறையின் மானியக் கோரிக்கை விவாதத்தில் நான் குறிப்பிட்டுச் சொன்னேன். அது இதர மாவட்டச் சாலைகளுக்கு மட்டும்; மாநிலச் சாலைகளுக்கு அந்தப் பணம் செலவிடப்படமாட்டாது. பெரிய மாவட்டச் சாலைகளுக்கும் அந்தப் பணம் செலவிடப்படமாட்டாது. O.D.R. என்று அறிவிக்கப்பட்டிருக்கிற இதர மாவட்டச் சாலைகளுக்கு மட்டும், கிராமங்களை இணைக்கக்கூடிய, பேருந்துகள் போய்க்கொண்டிருக்கக்கூடிய, கடந்த 18 ஆண்டுகளாகப் பராமரிக்கப்படாத, அந்தச் சாலைகளுக்கு மட்டும்தான் முன்னுரிமை வழங்கப்பட்டு, இந்த 400 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற சாலை O.D.R. என்பதன்கீழ் வருவதா அல்லது இதர மாவட்டச் சாலையா என்று எனக்கு உடனடியாகத் தெரியவில்லை. அப்படி இருக்குமானால் அதுவும் சேர்த்துக் கொள்ளப்படும். எனவே, பெரிய மாவட்டச் சாலைகளாக இருந்தால் அல்லது மாநிலச் சாலைகளாக இருந்தால், இந்தத் திட்டத்திலே வராது. வருகிற காலத்தில் நிதிநிலைமைக்கேற்ப அந்தத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும். நிச்சயமாக சாலைகளைப் பொறுத்த அளவில் கடந்த நான்காண்டு காலத்தில் அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு படிப்படியாக மேம்பாடு செய்யப்படுகிறது. மீதி இருக்கிற சாலைகளும் மேம்பாடு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 451. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

[2000 ஏப்ரல் 29

451—

## உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள்

***24294—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் தற்போது உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள் எங்கெங்கு உள்ளன?

(ஆ) புதிதாக மேலும் சில இடங்களில் இத்தகைய மையங்களை உருவாக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது திருவாரூர், மதுரை, திருவானைக்காவல் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள் உள்ளன.

(ஆ) ஆம்.

முற்பகல் 10-05

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழகத்திலே எத்தனை திருக்கோயில்களில் உலோகத் திருமேனிகள் இருக்கின்றன என்பதையும் அந்தத் திருமேனிகளில் அணிவிக்கப்பட்டுள்ள உயர்தர ஆபரணங்களின் மொத்த மதிப்பு என்ன என்பதையும், உயர்ந்த மதிப்புள்ள ஆபரணங்களும் நகைகளும் களவாடப்படாமல் இருக்கக்கூடிய சூழ்நிலைக்கு அரசு எடுக்கக்கூடிய நடவடிக்கை என்ன என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட மூலக் கேள்விக்கும், இரண்டாவது தொடுத்த கேள்விக்கும் ஒரு முரண்பாடு இருக்கிறது. உலோகத் திருமேனிகள் பல சிறிய கோயில்களில் இடம் பெறுகின்றன. போதுமான பாதுகாப்பின்மை கருதி அதிலேயிருக்கிற சில உலோகத் திருமேனிகளைப் பாதுகாப்பான மையங்களுக்கு எடுத்துச் சென்று, திருவிழா நடைபெறுகிற நேரங்களிலே திரும்பகொண்டு வருவார்கள். அப்படிப் போகிறபோது உலோகத் திருமேனிகள் மட்டும்தான் போகுமே தவிர அணிகலன்கள் போவது இல்லை. அவை அந்தந்தக் கோயில்களிலேயே இருக்கும், பாதுகாப்பாக இருக்கும்.



2000 ஏப்ரல் 29]

அதேநேரத்தில் திருவாரூரிலேதான் மிகப்பெரிய அளவிலே ஏறக்குறைய 352 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 2,537 உலோகத் திருமேனிகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கின்றன. இதிலே சிறிய கோயில்களிலிருந்து கொண்டு போனவை மட்டுமல்ல, ஏற்கெனவே சில கோயில்களிலிருந்து திருடப்பட்டவை கைப்பற்றப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. மேலும் அரசுக்குச் சொந்தமான சில முக்கியமான திருமேனிகளும் அங்கே பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல, திருவானைக்காவலில் 4 கோயில்களுக்குச் சொந்தமான 74 திருமேனிகள்; மதுரையில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலில் மட்டும் 79 திருமேனிகள்; திருநெல்வேலியில் 10 கோயில்களுக்குச் சொந்தமான 86 திருமேனிகள்; அதுபோக இன்னும் நான்கைந்து மாவட்டங்களுக்கு, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, உலோகத் திருமேனிகள் மையத்திற்கு அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. அவை காஞ்சிபுரம், திருவண்ணாமலை, வேலூர், குடந்தை, கடலூர் மற்றும் சேலம். இந்த இடங்களுக்கும் பகுதி-2 திட்டத்தின்கீழ் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, அணிகலன்கள் எதுவும் எந்தத் திருமேனி மையங்களிலும் பாதுகாப்புக்காக வைக்கப்படுவதில்லை; அதற்கான தேவையும் இல்லை. முற்றிலும் உலோகத் திருமேனிகள் மட்டும்தான் அங்கே பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கின்றன. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம், நீங்கள் கோயிலைப் பற்றிக் கேட்கப் போகிறீர்களா? (குறுக்கீடு) அதெல்லாம் கேட்க முடியாது. திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** நன்றி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூருக்குப் பக்கத்திலே பெரியபாளையம் என்றவொரு திருக்கோயில் இருக்கிறது. அது மத்தியப் பேரரசினுடைய பொறுப்பில் இருந்து கொண்டிருக்கிறது. அங்கேயிருக்கிற நடராஜருடைய திருமேனி நம்முடைய தில்லையிலே இருக்கிற நடராஜருக்குச் சமமாக ஒரே சிற்பியால் வார்க்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அது அற்புதமான தோற்றமுடைய திருமேனி. அதற்குத் தகுந்த பாதுகாப்பு இல்லை. ஆனால் அது மத்தியப் பேரரசிலே இருக்கிறது. அந்தக் கோயிலைத் தம்முடைய பொறுப்பில் தமிழக அரசு எடுத்துக்கொண்டு

அதற்குப் பாதுகாப்பு அளிக்க முன்வருமா? அமைச்சர் அவர்கள் அதைப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அற்புதமான திருமேனி, அமைச்சர் பார்த்து இருக்கிறாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளை ஏற்று சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்ததும் உறுதியாக வந்து நான் பார்ப்பேன். இது ஒன்று; இரண்டாவது மத்திய தொல்பொருள் துறையின்கீழ் வருகின்ற கோயில்கள் சில உள்ளன. குறிப்பாக நம்முடைய தஞ்சையில் இருக்கிற பெரிய கோயிலே மத்திய தொல்பொருள் துறையின்கீழ் வந்ததால்தான், இராஜராஜ சோழனுடைய சிலையை வெளியிலே நிறுவ வேண்டிய தேவை ஏற்பட்டுப் போய்விட்டது. அதேபோல தமிழ்நாட்டிலே மிகச் சிறந்த சிற்பங்களைக் கொண்டது என்று கருதப்படுவது குடந்தை பக்கத்தில் இருக்கிற தாராசுரம் கோயில். அந்தக் கோயில் முழுவதும் ஒரு கல் தேரின்மீது ஏற்றி வைக்கப்பட்டு ஊர்வலம் போவது போன்று இருக்கின்றது. ஒரே தூணில் 20, 30 சிற்பங்கள் இருக்கிற ஒரு திருக்கோயில் இருக்கிறதென்றால் அது தாராசுரம் கோயில்தான். அதுவும் மத்திய தொல்பொருள் துறையின்கீழ் வருகிறது. உள்ளபடியே சொல்லப்போனால், மத்திய தொல்பொருள் துறை ஒவ்வொரு சுவராக ஒழுங்கு செய்து கொண்டு வந்து இப்போது ஒரு சுவரில் இருக்கிற அனைத்துக் கற்களும் பெயர்க்கப்பட்டு வரிசையாக எண் போடப்பட்டு, படுக்கை நிலையிலே இருக்கின்றனவே தவிர, அவை இன்னும் எழுந்து நிற்கவில்லை. அவை நம்முடைய துறையில் இருந்திருந்தால் இந்நேரம் குடமுழுக்கு நடத்தி இருக்க முடியும். இந்தச் சிக்கல் இருக்கிறது. மத்திய தொல்பொருள் துறையின்கீழ் இருப்பதை நாம் உடனடியாக எடுக்க முடியாது. எடுக்கக்கூடியதாக இருந்தால் தஞ்சை பெரிய கோயிலை முதலிலே எடுத்து நாம் செம்மையாகச் செய்துவிட முடியும். எனவே, இந்த நிலையிலும் மத்திய தொல்பொருள் துறையோடு நாம் தொடர்ந்து தொடர்பு கொண்டு இங்கே இருக்கிற அலுவலர்களோடு தொடர்பு கொண்டு விரைந்து செய்ய ஆவன செய்கிறோம். ஆனால் நம்முடைய பாதுகாப்பில் இருக்கிற எல்லாக் கோயில்களுக்கும் என்னென்ன செய்ய வேண்டுமோ அதை இந்த அரசு விரைந்தும் முறையாகவும் செய்கிறது என்பதைத் தாங்கள் அறிவீர்கள்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 452, திரு. பெ.சு. திருவேங்கடம், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**452—**

## ஆலயக் குடமுழுக்கு

***26833—திரு. பெ.சு. திருவேங்கடம்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் ஆலயத்திற்குக் குடமுழுக்குச் செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலுக்குக் குடமுழுக்குச் செய்ய 9-6-1999 முதல் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துத் திருப்பணிகளையும் முடித்து இந்த ஆண்டில் குடமுழுக்குச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ.சு. திருவேங்கடம், இருக்கையில் இல்லை. திரு. ஏ. ராசேந்திரன்.

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாதமும் பௌர்ணமியன்று தீபத் திருநகரை நோக்கி பல இலட்சம் மக்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். திருவண்ணாமலை திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்வதற்குத் தனியார் ஒரு கோடி ரூபாய்

[2000 ஏப்ரல் 29

நன்கொடை அளிக்க முன்வந்தும், இன்னும் துறையில் மதிப்பீடு செய்யவில்லை என்று சொல்கிறார்கள். விரைந்து வேலை நடைபெறுவதற்கு, அங்கு தனியாக ஒரு பொறியாளரை நியமித்தால்தான், அந்தப் பணி செவ்வனே விரைவில் நடைபெறும் என்று ஆன்மீகவாதிகள் கருதுகிறார்கள். எனவே, இந்தத் துறையினுடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் தனியாக ஒரு பொறியாளரையும், அதற்குண்டான உதவியாளரையும் நியமிக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் அவர்கள் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருந்தும் இன்னும் இப்பொழுது என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை, கேள்வி கேட்கிறபோது, அறியாமல் இருந்திருக்கக்கூடும். உள்ளபடியே இந்தக் கோயிலுக்கான திருப்பணிக்கு 30 பேர் கொண்ட திருப்பணிக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்குத் தலைவர் இசைஞானி இளையராஜா. எனவே, அந்தத் திருப்பணி நடைபெறுவதற்கு 87.50 இலட்சம் ரூபாய் நிருவாக அனுமதியும் வழங்கப்பட்டிருக்கிறது; தொழில்நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டிருக்கிறது. அதுபோக, உபயதாரர்கள் தனிப்பட்ட முறையில் வழங்குகிறபோது, உபயதாரர்கள் சில நேரம் நம்முடைய கோயில் சார்பிலே தொகையைக் கொடுத்து பணி செய்வதற்கும் முன்வருகிறார்கள். சில நேரம் தாங்களே சில சிற்பக் கலைஞர்களைத் தேர்ந்தெடுத்து அந்தச் சிற்பக் கலைஞர்கள் வாயிலாகத் தங்கள் பணிகளைச் செய்கிறார்கள். அதற்கும் நாம் அனுமதி கொடுக்கிறோம், முறையான பதிவு செய்யப்பட்ட சிற்பக் கலைஞர்களாக இருந்தால். எனவே, அதில்தான் சுணக்கமே தவிர, பணிகள் நடைபெறுவதில் எந்தச் சுணக்கமும் இல்லை. கண்டிப்பாக டிசம்பருக்குள் குடமுழுக்குச் செய்யப்படும் என்று ஏற்கெனவே மானியக் கோரிக்கையின்போதும் சிறப்பாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அது நிறைவேறும், அதில் எந்தக் குறையும் இருக்காது. ஏற்கெனவே உதவிக் கோட்டப் பொறியாளர்தான் அதைப் பார்க்கிறார். ஒரு மாவட்டத்திற்கு மூன்று பேர்தான் மொத்தத்திலே இருக்கிறார்கள். மூன்று பேர் என்று சொன்னால், திருவண்ணாமலை, வேலூர் மற்றும் இன்னொரு மாவட்டத்திற்கும் சேர்த்து, மூன்று மாவட்டங்களுக்கும் சேர்த்து அவர்கள் பார்க்கவேண்டும். எனவே, நிறைய இடர்ப்பாடு இருக்கிறது. அருணாசலேஸ்வரர் கோயிலுக்கு முன்னுரிமை கொடுத்துச் செய்வோம். மலைவலம் காண்பதற்கு 14 கி.மீ.



2000 ஏப்ரல் 29]

தூரத்திற்குச் சுற்றி வருகிறபோது, பலரும் தங்களுடைய நன்கொடையைக் கொடுத்து, பல வசதிகளைச் செய்திருக்கிறார்கள். அதேநேரத்தில் அரசும், நம்முடைய கோயில் நிருவாகமும் ஏராளமாக சிமெண்ட் தளங்களை அமைத்து, பயணிகள் உட்காரவும், இளைப்பாறவும் தேவையான அளவுக்கு வாய்ப்புகளைச் செய்து கொடுத்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல், கல்மண்டபத்திற்குக்கூட விரைவில் பணி நடந்து, அதுவும் டிசம்பருக்குள் முடிந்து, அந்தப் பதினாறு கால் மண்டபமும் திறந்து வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் ஆலயத்திற்குக் குடமுழுக்கு விரைவில் நடைபெறும் என்று அறிவித்திருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அரசுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், திருவண்ணாமலையில் கிரிவலம் வருகின்ற பாதையிலே அத்தியண்டல், ஆணாய்பொறந்தான், அடிஅண்ணாமலை மற்றும் வேங்கைக்கால் ஆகிய ஊராட்சிக்கு உட்பட்டிருக்கிற 108 மின் விளக்குகளைப் பராமரிக்க முடியாமல், அந்த ஊராட்சிகளால் மின்கட்டணத்தைக் கட்ட முடியாமல் இருக்கிறது. அந்த விளக்குகளை அறநிலையத் துறையே எடுத்து அந்த விளக்குகளுக்கான மின்கட்டணத்தைச் செலுத்தவேண்டும். மேலும் அருணாசலேஸ்வரர் ஆலயத்திற்கு தினந்தோறும் ஆயிரக்கணக்கான மக்களும், மாதா மாதம் இலட்சக்கணக்கான மக்களும் அங்கே வருகை தருகிறார்கள். மத்திய தொல்பொருள் இலாகாவிலிருந்து அருணாசலேஸ்வரர் ஆலயத்தை எடுக்கவேண்டுமென்று முன்னாள் நீதிபதி தலைமையிலே அமைக்கப்பட்ட ஒரு சிபாரிசு செய்திருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த நிலையை மத்திய அரசு எடுத்தால் நிச்சயமாக அங்கே வருகிற பக்தர்களுக்கு சுவாமி தரிசனம் செய்வதற்கும், அருணாசலேஸ்வரரை வணங்குவதற்கும் போதுமான வாய்ப்பு இருக்காது என்ற நிலையை உணர்ந்து, அரசும், அறநிலையத் துறையும் ஆலயத்தை எடுத்து, அறநிலையத் துறையில் நிருவகிக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இணை ஆணையாளர்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், போதும், சொற்பொழிவுக்கெல்லாம் நேரமில்லை. மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

[2000 ஏப்ரல் 29

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் தவறான கருத்தைச் சொல்கிறார். ஏற்கெனவே அது அறநிலையத் துறையின்கீழ்தான் இருக்கிறது. நம்முடைய துறையின் சார்பில் இருக்கிற 110 பெரிய கோயில்களிலே இதுவும் ஒன்று. அதுமட்டுமல்லாமல், அதற்குத் தனியாக உதவி ஆணையாளரைப் போட்டிருக்கிறோம் என்பது உங்களுக்குத் தெரியும். அது மத்திய தொல்பொருள் இலாகாவுக்குப் போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது நம்முடைய கடமையே தவிர, இதை எடுத்துக்கொள்கிறீர்களா என்றால், ஏற்கெனவே அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், இந்த ஆட்சி தொடங்குகிறபோது, 13-5-1996-ல் பொறுப்பு ஏற்கிறபோது இந்தக் கோயிலினுடைய வருமானம் 62 இலட்சம் ரூபாய். ஆனால் இப்பொழுது அது ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏற்கெனவே நான் பலமுறை இந்த அவையிலே சொல்லியிருக்கிறேன். அடையாறில் மலர் மருத்துவமனைக்கு எதிரே இருக்கிற 313 மனை நிலமும், சென்னை மீர்சாகிப்பேட்டையில் இருக்கிற 104 மனை நிலமும் இந்தக் கோயிலுக்குச் சொந்தம். எனவே அதெல்லாம் முறைப்படுத்தப்பட்டு இப்பொழுது வாடகை ஓரளவுக்கு சிறப்பாக வந்து கொண்டிருப்பதால், குத்தகையும் செலுத்திக் கொண்டிருப்பதால், அந்த வருமானம் உயர்ந்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல், இறையன்பர்கள் ஏராளமாக வருகிறார்கள். அதுவும், அண்மைக் காலத்தில் அந்த மலைவலம் காணுவதற்கு வருகிறவர்களின் எண்ணிக்கை பெரிய அளவில் வளர்ந்திருக்கிறது. ஆனால் ஒன்றை மட்டும் நினைவில் கொள்ளவேண்டும். ஒரு எல்லை வரைக்கும் கோயில் தன் நிருவாகத்தைச் செலுத்தும். அந்த எல்லையைத் தாண்டி வருகிற அந்த மலைவலம் காணச் செல்கின்ற சாலை நகராட்சிக்குச் சொந்தம். எனவே நகராட்சி பல பணிகளைச் செய்யவேண்டும். நாங்களும் உதவி செய்யவேண்டுமே தவிர, முற்றிலும் கோயிலே பொறுப்பேற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் இருக்காது. மின் விளக்குகளுக்கெல்லாம் பணம் கட்ட ஆரம்பித்தால் பிறகு அதற்கு வரையறையே இருக்காது. தமிழ்நாட்டில் இருக்கின்ற எல்லா மாநகராட்சிகளுக்கும், எல்லா நகராட்சிகளுக்கும், எல்லாக் கோயில்களும் கட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும். எனவே, இப்போது திருப்பணி செய்ய, கல்மண்டபத்தைச் சிறப்பாக அமைக்க, அதே நேரத்தில், மலைவலம் காண்பவர்களுக்குத் துணை செய்ய, வேறு உதவிகளைச் செய்ய இந்தத் துறை சிறப்பாகப் பணி செய்யும்.



2000 ஏப்ரல் 29]

முற்பகல் *10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *453*, திரு. பி.என். வல்லரசு, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**453—**

**நடுநிலைப் பள்ளியாக உயர்த்துதல்**

***16261—திரு. பி.என். வல்லரசு:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* உசிலம்பட்டி தொகுதி, அம்பட்டையம்பட்டி, பொறுப்பு மேட்டுப்பட்டி, எருமார்பட்டி, பி.பெருமாள்பட்டி அரசு கள்ளர் தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ)* மற்றும் *(ஆ)* உசிலம்பட்டி தொகுதியில், எருமார்பட்டி தொடக்கப் பள்ளி *1998-99*-ம் ஆண்டிலும், அம்பட்டையம்பட்டி தொடக்கப் பள்ளி *1999-2000*-ம் ஆண்டிலும் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன. மேட்டுப்பட்டியிலும், பி. பெருமாள்பட்டியிலும் உள்ள தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொறுப்பு மேட்டுப்பட்டியிலும், பில்லாணி பெருமாள்பட்டியிலும் தொடர்ந்து பல வருடங்களாக அரசு கள்ளர் தொடக்கப் பள்ளிகளே இருந்து வருகின்றன. அப்பகுதியிலே படிக்கிற மாணவர்கள் அதற்கு மேல் படிக்க முடியாமல், 8 ஆம் வகுப்பு வரை கூட படிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து பொறுப்பு மேட்டுப்பட்டியிலும், பில்லாணி பெருமாள்பட்டியிலும் உள்ள தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்த முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

[2000 ஏப்ரல் 29

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, திண்டுக்கல், தேனி ஆகிய மாவட்டங்களில் மட்டும் சீர்மரபினர் வகுப்பு மாணவர்களின் கல்வி அறிவைப் பெருக்குவதற்கு 265 பள்ளிகள் இயங்கி வருகின்றன. அவற்றில் நடுநிலைப் பள்ளிகள் மட்டும் 29 ஆகும். மேட்டுப்பட்டி மற்றும் பி. பெருமாள்பட்டியில் உள்ள தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்த வேண்டுமெனில் போதுமான மாணவர்கள் இருக்க வேண்டும். மற்றும் 6, 7, 8 வகுப்பு அறைகள் கட்டுவதற்கு, அலுவலக அறை, விளையாட்டு மைதானம், மதிய உணவுக் கூடம் ஆகியவற்றிற்கு இரண்டு ஏக்கர் நிலப் பரப்பு அவசியம் இருக்க வேண்டும். மேற்சொன்ன நிபந்தனைக்குட்பட்டும் அரசு நிதிநிலையைக் கருத்திற் கொண்டும் மாண்புமிகு உறுப்பினர் கோரியுள்ள தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துவதற்குப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலம் நடத்துகின்ற அரசுப் பள்ளிகளான அரசு கள்ளர் தொடக்கப் பள்ளி, அரசு கள்ளர் நடுநிலைப் பள்ளி, அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளி, அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளி என்பவற்றை அரசு சீர்மரபினர் பள்ளி என்றாவது நீங்கள் பெயர் மாற்றம் செய்வீர்களா? கள்ளர் என்ற பெயர் அந்தப் பிஞ்சு உள்ளங்களுக்கு, பள்ளிக்குச் செல்கின்ற மாணவச் செல்வங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் அந்தப் பெயரை, கள்ளர் பள்ளி என்றே வைத்திருப்பது சரிதானா? அவற்றின் பெயரை நீங்கள் மாற்றம் செய்வீர்களா, அதற்கு ஏற்பாடு செய்வீர்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே மாற்றியாகிவிட்டதல்லவா? சீர்மரபினர் என்று மாற்றவில்லையா?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைபற்றி மாண்புமிகு முதல்வருடன் கலந்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2000 ஏப்ரல் 29]

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, பரிசீலனைக்கே இடமில்லை. நண்பர் அப்பாவு அவர்கள் தன்னுடைய உள்ளத்தைத் திருத்திக்கொள்ள வேண்டும். இப்போது கள்ளர் என்பதைத் திருத்த முடியாது. ஏனென்றால், கள்ளர் பெயரால் அங்கே கல்லூரிகள், கள்ளர் பெயரால் பல அறக்கட்டளைகள் ஆகியவை எல்லாம் இருக்கின்றன. அவற்றை மாற்றுவது என்பது இயலாத காரியம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 454, திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**454—**

**சத்துணவுக் கூடங்களைப் புதுப்பித்தல்**

***22610—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழுதடைந்துள்ள சத்துணவுக் கூடங்களைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது புதுப்பிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசாணை (நிலை) எண் 145, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 4-8-1999-ல் சத்துணவு சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள் நிதி ஒதுக்கீடு பெற்று சத்துணவுக் கூடங்களைப் பழுதுபார்க்க தக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக திண்டுக்கல் தொகுதியில் நகராட்சிப் பகுதியிலேயும், திண்டுக்கல் ஒன்றியத்திலேயும் இந்த ஆண்டு மார்ச், ஏப்ரல் மாதங்களிலே துறை அதிகாரிகள் எந்தெந்த சத்துணவுக் கூடங்களில் சுவர் பழுது பார்ப்பது, மேற்கூரைகளை மாற்றித் தருவது என்பதற்காகக் கணக்கு எடுத்துச் சென்றார்கள். அதன் பின்னால், எந்தவிதமான செய்தியும்

நமக்குக் கிடைக்கவில்லை. மழைக் காலங்களிலும், வெயில் காலங்களிலும் குழந்தைகள் அந்தச் சத்துணவுக் கூடங்களில் அமர்ந்து உணவு உண்பதற்கு மிகவும் கஷ்டமான சூழ்நிலை இருக்கிற காரணத்தினால் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சில கட்டடங்களைப் பழுது பார்க்க நாங்கள் நினைத்தோம். ஆனால், முழுமையாகச் செய்ய இயலவில்லை. காரணம் ஆரம்ப காலத்திலே போடப்பட்ட கூரைகள் மிகவும் தரம் குறைந்தவையாக இருந்தன. அவற்றை மாற்றிவிட்டு ஆஸ்பெஸ்டாஸ் போன்ற தகடுகளைப் போடுவதன் மூலமாக, நீண்ட காலம் அவை பழுதுபடாமல் இருப்பதற்கான வாய்ப்பு இருக்கும். எனவே, அரசு அதைக் கருத்திற் கொண்டு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களில் சென்ற ஆண்டு பழுது பார்த்ததைத் தவிர, இன்னும் எத்தனை கூடங்கள் பழுது பார்க்க வேண்டி இருக்கின்றன என்ற புள்ளிவிவரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அத்தகைய கூடங்கள் அனைத்தையுமே முடித்துவிட வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டு இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே அந்தப் பணிகளை மேற்கொள்கிறோம். ஊரக வளர்ச்சித் துறையின் சார்பாக இந்த ஆண்டு நிதிநிலைக்குத் தக்கவாறு எவ்வளவு முடிக்க முடியுமோ அவ்வளவு முடிக்கலாம் என்று இந்தத் துறை கருதி இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *455*, திரு. பி. வெங்கடசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**455—**

**சார்பதிவாளர் அலுவலகம்**

***26777—திரு. பி. வெங்கடசாமி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓசூர் வட்டம், பேரிகையில் சார்பதிவாளர் அலுவலகம் தொடங்குவதற்கான கருத்துரு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஓசூர் வட்டம் பேரிகையில், புதிய சார்பதிவாளர் அலுவலகம் தொடங்குவதற்கான கருத்துரு எதுவும் இல்லை.

**Thiru B. Venkatasamy:** Hon. Speaker Sir, Perigai is 18 Km. from Sulagiri and 25 Km. from Hosur. There are nearly 12 Panchayats in and around Perigai, types Sir. The people are finding it very difficult to go to Perigai or Sulagiri. So, may I request the Hon. Minister to re-consider the proposal and see that the Registrar Office is opened at Perigai, Sir.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப்போல, ஓசூரிலிருந்து பேரிகை ஏறத்தாழ 20 கிலோமீட்டருக்கு மேலும், சூளகிரியிலிருந்து 20 கிலோமீட்டர் தூரத்திலும் இருக்கிற காரணத்தால், அதிலிருந்து பிரித்து எடுக்க வேண்டும். ஓசூரிலிருந்து 40, 45 கிராமங்களையும், அதேபோல சூளகிரி, சார்பதிவாளர் பகுதிக்கு உட்பட்ட கிராமங்களையும் பிரித்து எடுத்து, பேரிகையில் ஒரு சார்பதிவாளர் அலுவலகம் அமைக்க வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையின் அடிப்படையிலே, இந்தக் கிராமங்களை எடுத்தால், எத்தனை ஆவணங்கள் வரும் என்று அரசு கணக்கிட்டதிலே சுமார் 1,800 ஆவணங்கள் வரும் என்று கணக்கிட்டுச் சொல்லி இருக்கிறார்கள். இருந்தாலும், அந்தப் பகுதியிலே ஓசூரிலே இருக்கக்கூடிய கிராமங்களிலும், சூளகிரி சார்பதிவாளர் அலுவலகத்திலே இருக்கக்கூடிய கிராமங்களிலும் இருக்கின்ற மக்களைக் கேட்டு, அவர்கள் சம்மதம் கொடுத்த பின்னால்தான் சேர்க்க முடியும். இல்லையென்றால், அதிலே ஒரு பெரிய எதிர்ப்பு வரும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைப்பற்றி நாங்கள் கேட்டு, அதற்குப் பின்னால் அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *456*, திரு. கே. தங்கமணி, மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**456—**

**கால்நடை மருத்துவமனை**

***23051—திரு. கே. தங்கமணி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, சி. கண்ணனூர் கிராமத்தில் புதியதாகக் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை தாலுகாவிலே இருக்கக்கூடிய சின்ன கண்ணனூர் கிராமத்திற்கு மானாமதுரையிலிருந்து 20 கிலோமீட்டர் செல்ல வேண்டியிருக்கிறது. அதுமட்டுமல்ல, எந்தக் கால்நடை ஆஸ்பத்திரிக்குச் செல்ல வேண்டியிருந்தாலும் 20 கிலோமீட்டர் தொலைவு செல்ல வேண்டியிருக்கிறது. கால்நடைகளுக்கு ஏதாவது நோய்கள் ஏற்பட்டால், 20 கிலோமீட்டர் அந்தக் கால்நடைகளை ஓட்டிச் செல்ல முடியாது. அதோடுமட்டுமல்ல, சின்ன கண்ணனூர் கிராமத்திற்கு சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரையின்பேரில் பார்வைக் கிளை நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனாலும்கூட மருத்துவர்களே அந்தக் கிராமத்திற்குச் செல்ல எந்த வசதியும் இல்லாத சூழ்நிலை இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து, சின்ன கண்ணனூர் கிராமத்திற்கு கால்நடை மருந்தகம் அமைத்துக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்தில் சின்ன கண்ணனூர் கிராமத்தில் கால்நடை மருந்தகமோ, கால்நடைக் கிளை நிலையமோ இல்லை. மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்தில் மானாமதுரை, வி. புதுகுளம் ஆகிய இரண்டு இடங்களில் கால்நடை மருந்தகங்களும்; மிளகனூர், முத்தனேந்தல், மேலநட்டூர், மேலபசலி, பெரியகோட்டை, கீழக்கண்டன், கல்லூரணி ஆகிய 7 இடங்களில் கால்நடைக் கிளை நிலையங்களும்; இவற்றிற்கு முறையே அன்னவாசல், சுட்டிகுளம், டி. புதுக்கோட்டை, கீழபசலி, இடைக்காட்டு, கூத்தாண்டம், காணூர் ஆகிய 7 இடங்களில் பார்வைக் கிளை நிலையங்களும் தற்போது செயல்பட்டு வருகின்றன. சின்ன கண்ணனூர் கிராமத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளது. அதன் விவரம் வருமாறு: பசுக்கள் 26, எருதுகள் 148, எருமைகள் 39, வெள்ளாடுகள் 185, செம்மறி ஆடுகள் 20, கோழிகள் 284 ஆகியவை மட்டுமே உள்ளன. மேலும் 5 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள பார்த்திபனூர் கால்நடை மருந்தகத்தில் அந்தப் பகுதியில் உள்ள கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த சிறப்புக் கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் அந்தப் பகுதி கால்நடைகள் சிகிச்சை பெற வாய்ப்பு இருக்கிறது. எனவே, மேற்படி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கத் தற்போது சாத்தியம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.





முற்பகல் 10-25

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே கால்நடைகள் மிகவும் குறைவாக இருக்கின்றன எனச் சொல்கிறார்கள். அங்கே மற்றக் கால்நடை மருந்தகம் இருக்கக்கூடிய இடத்திலிருந்து சின்ன கண்ணனூர் 20 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. சின்ன கண்ணனூர் மட்டுமல்ல, பக்கத்திலே புலிக்குளம், மானங்காத்தான், கரிசல்குளம் என்று பல்வேறு கிராமங்கள் இருக்கின்றன. ஒரு கிராமத்தினை மட்டும் மையமாக வைத்து கணக்குப் பார்க்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். எனவே, அமைச்சர் அவர்கள் மறுபடியும் பரிசீலனை செய்து அந்த இடத்திலே கால்நடை துணை மருந்தகம் அமைத்துத் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 20 கிலோ மீட்டருக்கு இடையிலே கால்நடை மருந்தகமோ, மருத்துவமனையோ இல்லையென்று சொல்கிறார்கள். பார்த்திபனூர் இந்த சின்ன கண்ணனூருக்கு 5 கிலோமீட்டர் தூரத்தில் இருப்பதாகத் துறையின் சார்பாகத் தகவல் தந்திருக்கிறார்கள். இருப்பினும் எதிர்காலத்தில் நிதிநிலைமையைக் கருத்திற்கொண்டு பரிசீலிக்கலாம் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொ. முருகேசன்.

[2000 ஏப்ரல் 29

**திரு. பொ. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997-98 ஆம் ஆண்டில் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் 5 கால்நடைக் கிளை மருந்தகங்கள் கொடுக்கப்பட்டன. அப்படிக் கொடுக்கப்பட்ட கால்நடை மருந்தகங்கள் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே, நடப்பாண்டிலே ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் 5 கிளை நிலையங்கள் கொடுக்காவிட்டாலும்கூட, 2 கிளை நிலையங்களையாவது கொடுக்க அமைச்சர் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைக் கிளை நிலையங்களோ, பார்வைக் கிளை நிலையங்களோ தற்போது அமைப்பதில்லை. மேலும் இந்த ஆண்டு அதற்காக நிதியொதுக்கீடு செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 457, திரு. ந. பாண்டுரங்கன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**457—**

### ஆட்டுப் பண்ணை

***29352—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதியில் ஆட்டுப் பண்ணை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2000 ஏப்ரல் 29]

**திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொட்டிலில் ஆடு, பெட்டியில் பணம்' என்று கிராமங்களிலே ஒரு பழமொழி சொல்வார்கள். குறிப்பாக, இப்போது இந்த ஆடு வளர்ப்புத் தொழில் விவசாயிகளுக்கு மிகவும் இலாபகரமான தொழிலாக இருந்து வருகிறது. அந்தவகையில் என்னுடைய தொகுதியில் செம்மறியாடுகள் உள்ளூர் வெள்ளாடுகள், கொடியாடு, கன்னியாடு போன்றவற்றைப் பாதுகாப்பதிலும், வளர்ப்பதிலும் அக்கறைகொள்ள வேண்டுமென்ற விதத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும். என்னுடைய தொகுதியில் அரசுக்குச் சொந்தமான நிலம் ஏராளமாக இருக்கிறது. குடிதண்ணீர் வசதி இருக்கிறது. எனவே, அத்தனை சாத்தியங்களும் உள்ள இந்த இடத்தில் ஆட்டுப் பண்ணை அமைக்க அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்துறையில் ஏற்கெனவே விழுப்புரம் மாவட்டம் சின்னசேலம், விருதுநகர் மாவட்டம் சாத்தனூர் மற்றும் வேலூர் மாவட்டம் முகுந்தராயபுரம் ஆகிய 3 இடங்களில் ஆட்டுப் பண்ணைகள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. இந்த ஆட்டுப் பண்ணைகளில் அந்தந்த மாவட்டங்களைச் சுற்றிலும் உள்ள வெள்ளாடு மற்றும் செம்மறியாடு இனங்கள் வளர்க்கப்பட்டு, இனப் பெருக்கத்திற்காக சுற்றுப்புற விவசாயிகளுக்கு அரசு நிர்ணயித்துள்ள விலைகளில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இவை தவிர, இத்துறையின்கீழ் செயல்பட்டு வரும் 11 மாவட்டப் பண்ணைகளில் உதகை, ஈச்சங்கோட்டை மற்றும் ஒரத்தநாடு நீங்கலாக ஆட்டுப் பிரிவு ஒன்றும் செயல்பட்டு வருகிறது. இப்பிரிவுகளிலும் வெள்ளாடு மற்றும் செம்மறியாடு இனங்கள் வளர்க்கப்பட்டு விவசாயிகளுக்கும், கால்நடை வளர்ப்போருக்கும் கிடாக்கள் மற்றும் பெண் ஆடுகள் அரசு நிர்ணயித்துள்ள விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. ஆட்டுப் பண்ணை புதிதாகத் தொடங்க வேண்டுமெனில் ஆடுகளுக்கு மேய்ச்சல் நிலம் உட்பட 500 ஏக்கர் நிலம் தேவை. இது தவிர உட்கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்பட வேண்டும். தற்போதுள்ள ஆட்டுப் பண்ணைகள் மூலமும் மற்றும் மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் ஆட்டுப் பிரிவுகள் மூலமும் போதிய அளவு விவசாயிகளுக்கு இனப் பெருக்கத்திற்காகத் தரமான கிடாக்களும், பெண் ஆடுகளும், நியாயமான விலையில் விற்பனை செய்யப்பட்டு

[2000 ஏப்ரல் 29

வருவதால், திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதியில் ஆட்டுப் பண்ணை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை என்பதோடு புதிதாக ஓர் ஆட்டுப் பண்ணை தொடங்க தற்போது அவசியம் ஏதும் ஏற்படவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 458, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**458—**

**பள்ளிச் சீருடை**

***14645—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு வழங்கும் இலவச பள்ளிச் சீருடை, மாணவ, மாணவிகளுக்கு அளவோடு வழங்கப்படாதது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) அதனைச் சரியான அளவில் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கடந்த ஆண்டு பள்ளி மாணவர்களுக்கு வழங்கிய சீருடைகளில் அளவு குறைவாக இருந்ததாக எந்த மாவட்டத்திலிருந்தும் புகார் அரசுக்கு வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Readymade கடைக்குச் சென்றால்கூட எல்லோருக்கும் ஏற்றாற்போல் துணி அளவாகக் கிடைக்கிறது. பள்ளிகளில் இந்த மாணவ, மாணவியர்களுக்கு, குழந்தைகளுக்குக் கொடுக்கிற சீருடை அளவு முழுக்க சரியில்லாமல், 8-வது படிக்கின்ற பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டியதை 1-வது, 2-வது படிக்கும் பிள்ளைகளுக்குக் கொடுக்கிறார்கள். அந்தக் குழந்தைகள் புத்தகங்களைத் தூக்கிக் கொண்டு, இந்தச் சீருடைகளை போட்டுக்கொண்டு, அந்தத் துணியை இழுத்துக்கொண்டு செல்கிற பரிதாபமான காட்சியைப் பார்க்கிறபோது கஷ்டமாக இருக்கிறது.



2000 ஏப்ரல் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அதுகுறித்துப் புகார் ஏதாவது கொடுத்திருக்கிறீர்களா? அமைச்சர் சொன்ன பதிலில் இதுவரை புகார் எதுவும் வரவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். உங்களிடம் புகார் இருந்தால் சொல்லுங்கள். அதை விட்டுவிட்டு, இங்கே நீங்கள் உரையை நிகழ்த்திக் கொண்டிருக்கக் கூடாது.

**திரு. க. மணிவர்மா:** அளவு குறைவாக இருப்பதைப் பார்த்துவிட்டுத் தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் இல்லையென்று சொல்லவில்லை. அமைச்சர் தன்னுடைய பதிலில் புகார் வரவில்லை என்று சொல்கிறார். அதற்கு நீங்கள் விளக்கம் சொல்லுங்கள்.

**திரு. க. மணிவர்மா:** அதிகாரிகளிடத்தில் முறையான புகார் வரவில்லையென்றாலும், கிராமங்களில் இருக்கிற மாணவ குழந்தைகளைப் பார்க்கிறபோது இது நன்றாகத் தெரிகிறது. எங்களிடம்தான் அவர்கள் புகார் சொல்கிறார்கள். இதை நீங்கள்... *(மணியடிக்கப்பெற்றது)*

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களிடம் புகார் சொன்னால் நீங்கள் புகார் கொடுங்கள். யார் வேண்டாம் என்று சொல்வார்கள்? புகார் கொடுக்காமல் இங்கே வந்து பேசினால் என்ன அர்த்தம்?

பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்ற சீருடைகளின் அளவு சரியானதாக இல்லை என்ற குறைபாடு இருப்பதாக அவருடைய பார்வையில் பட்டதை இங்கே தெரிவிக்கின்றார்கள். ஆனால் பெற்றோர்களிடமிருந்தோ அல்லது ஆசிரியப் பெருமக்களிடமிருந்தோ அப்படிப்பட்ட புகார்கள் எதுவும் அரசுக்கு இதுவரையில் வரவில்லை. இருந்தாலும் ஒரு தகவலை உங்கள் மூலமாக நான் தெரிவிக்க விரும்புகிறேன். சீருடை வழங்குவதைப் பொறுத்தவரையில், மாணவர்களுக்குத் தனிப்பட்ட முறையிலே ஒவ்வொரு குழந்தைக்கும் அளவு எடுத்துத் தருவதற்கு வாய்ப்பில்லை. எனவே, முதல் இரண்டு வகுப்புப் படிக்கின்ற மாணவ மாணவியர்களுக்கு ஒரு அளவு, மூன்று, நான்காம் வகுப்புப் படிக்கின்ற மாணவர்களுக்கு ஒரு அளவு, ஐந்து, ஆறாம் வகுப்புப் படிக்கின்ற மாணவர்களுக்கு ஒரு அளவு, ஏழு, எட்டாம் வகுப்புப் படிக்கின்ற மாணவர்களுக்கு ஒரு

அளவு என்று ஒரு அளவினை நிர்ணயம் செய்து அந்த அளவுப்படி குழந்தைகளுக்கு சீருடைகள் வழங்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னது போல முதல் வகுப்புப் படிக்கின்ற குழந்தைகளுக்கு பெரிய அளவு உடை வழங்கப்படுவது என்பதற்கு சரியான தகவல் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 459, திரு. பால. ஆனந்தன், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

**459—**

**பாய் நெய்யும் தொழிற்சாலை**

***29544—திரு. பால. ஆனந்தன்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி பகுதியில் பெருமளவு கோரை பயிராவதால் அங்கு கோரைப் பாய் நெய்யும் ஒரு சிறு தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வந்தவாசி பகுதியில், ஏற்கெனவே வந்தவாசி மத்திய கோரைப் பாய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. அதனால் அந்தப் பகுதியில் கோரைப்பாய் நெய்யும் மிகச் சிறு தொழிற்சாலை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பால. ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி பகுதியிலே செய்யப்படுகின்ற விவசாயத்தில் கிட்டத்தட்ட 25 விழுக்காடு கோரை விவசாயமாக அமைந்திருக்கிறது. அங்கே கூட்டுறவுச் சங்கம்தான் இருக்கிறதே தவிர, தொழிற்சாலை இல்லை. அங்கே இருக்கின்ற இடத்தில் ஒரு தொழிற்சாலை அமைத்தால் அதன்மூலம் உருவாக்கப்படுகின்ற பாய்களை எஸ்.சி. மற்றும் பி.சி. மாணவ மாணவியர் விடுதிகளுக்குக் கொடுப்பதற்கு வசதியாக அமையும். அதுபோல அந்தப் பகுதியில் ஒரு காகித அலகு மூடப்பட்டிருக்கிறது. அதிலே பணியாற்றக்கூடிய பணியாளர்கள் இப்போது வேலையில்லாமல்



இருக்கிறார்கள். இவர்களையும் அதில் பயன்படுத்துவதற்கு ஏதுவாக அமையும். எனவே, இதன் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரைப்பாய் தயாரிக்க சிறு தொழிற்சாலை அமைப்பது என்பது அரசினுடைய நிதிநிலைமைக்கு ஏற்ப பரிசீலிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு மும்பை கதர் ஆணைக் குழுவும், தமிழ்நாடு கதர் வாரியமும் இணைந்து விளிம்புக் கடன் தொகையை, சிறுதொழில் செய்வதற்கு வழங்கிக்கொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை அந்தப் பகுதியில் இருக்கிற தொழிலாளர்கள் பயன்படுத்திக்கொண்டால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 460, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**460—**

**மீன் உற்பத்தி நிலையம்**

***29550—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மீன் வளத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள மீன் உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் மீன்களை விற்பனை செய்யும்போது எவ்வகையான விதிமுறைகள் கையாளப்படுகின்றன?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மீன் வளத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 10 மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களில் நுண் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு துறை கட்டுப்பாட்டிலுள்ள குளங்களில் இட்டு வளர்த்தெடுத்து பின் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள பெரும் நீர்த்தேக்கங்கள், ஏரிகள், கிராமிய செயல்விளக்கக் குளங்கள், கண்மாய்கள் ஆகியவற்றில் இருப்பு செய்யப்பட்டு மீன்களாக வளர்த்து, பங்கு மீனவர் மற்றும் துறை மீனவர்கள் மூலம் மீன்பிடிப்புச் செய்யப்படுகின்றன. பிடித்த மீன்கள்

[2000 ஏப்ரல் 29

ஒவ்வொரு அரை ஆண்டிலும் துறையால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் உள்ளூரில் உள்ள மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு மீதமான மீன்கள் வியாபாரிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில நீர்த்தேக்கங்களில் நீண்ட இடைவெளிக்குப் பிறகும் நீர் தேங்குகிறது. இயற்கையாக உற்பத்தியாகக்கூடிய இந்த மீன்களை விற்பனை செய்கின்ற நேரத்திலே அங்கே பெரும் குழப்பமே உருவாகிறது என்று எண்ணுகிறேன். அது பொதுப்பணித் துறைக்குச் சொந்தமா அல்லது மீன் வளத் துறை அதிலே தலையிட்டு அந்த மீன்களை விற்பனை செய்கிறதா எனச் சில நேரங்களில் சர்ச்சை எழுகின்ற நேரத்தில், அங்கே சிறு குழப்பங்கள் உருவாகின்றன. அதனால் 'மீன் வளத் துறையின் மூலமாக மீன்கள் விற்பனை செய்யப்படும்' என்று தெளிவாகப் பெயர்ப் பலகை வைக்கப்பட வேண்டும். அதுபோல என்னுடைய ஈரோடு மாவட்டத்தில் உள்ள பெரிய நீர்த்தேக்கமான பவானிசாகர் அணையில்கூட ஒரு சில சமயங்களில் அந்த மீன்கள் எல்லாம் ஒருசில சமூகவிரோதிகளால் களவாடப்படுகின்றன. அதனால் அது நட்டத்தில் இயங்குவதாகக்கூட நாங்கள் அறிந்திருக்கிறோம். அதனால் அதுபோன்ற நீர்த்தேக்கங்களில் மீன்பிடிப்பதைத் துறைக்கு இலாபம் ஈட்டுகின்ற வகையில் தமிழக அரசு எப்படி ஏலம் விடப்போகிறது என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான நீர் நிலைகளில் மீன் வளத் துறை மீன்களை இருப்பு செய்து மீன்களை வளர்க்கிறது. ஈரோடு மாவட்டம், பவானிசாகரைப் பொறுத்தவரையில் அரசாணை எண் 638, வனம் மற்றும் மீன் வளத் துறை, நாள் 22-6-1977-ன்படி துறையிலிருந்து 30 ஆண்டு காலத்திற்குக் குத்தகைக்குக் கழகத்திற்குத் தரப்பட்டது. அந்தக் கழகம் முதலில் மீன்களை இருப்புச் செய்து, மீன்களைப் பிடிக்கும்போது அதிக இலாபம் ஏற்பட்டது. ஆனால் இதற்கிடையே அந்தப் பகுதியிலே, பவானிசாகரைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள பெரும்பாலோர், ஏறக்குறைய 1,500 பேர் திருட்டுத் தனமாக அதில் மீன்பிடித்ததால் பெருத்த நட்டம் ஏற்பட்டது. அந்த நட்டத்தைச் சரிக்கட்டுவதற்காக அரசாணை எண் 18207/மீன்.5/99-7 கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை, நாள் 10-4-2000- என்பதன்படி உச்ச விலை வருடத்திற்கு ரூபாய் 23 இலட்சம் என்று



2000 ஏப்ரல் 29]

நிர்ணயிக்கப்பட்டு, திறந்த ஒப்பந்தப்புள்ளிகளின் அடிப்படையில் தனியாருக்கு 5 ஆண்டு காலத்திற்குக் குத்தகைக்கு விட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், பவானிசாகரில் முறைப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு இலாபத்தில் இயக்க இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[*குறிப்பு:* ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விலை வீழ்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, தேயிலை விலை வீழ்ச்சி அடைந்தது குறித்து ஏராளமான உறுப்பினர்கள் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. இரா. தாமரைக்கனி, திரு. ம. அப்துல் லத்தீப் ஆகியோரும், கவன ஈர்ப்பாக திரு. டி. மணி, திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. சி. வேலாயுதன் ஆகியோரும், சிறப்புக் கவன ஈர்ப்பிற்கு திரு. பா.மு. முபாரக், திரு. எம். ரங்கநாதன், திரு. டி. குண்டன், திரு. டி. மணி, திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. கே. சுப்பராயன், திரு. பி.ஆர். சுந்தரம், திரு. ச. அழகிரி, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், திரு. ப. மோகன் கந்தசாமி, திரு. லா. சந்தானம், திரு. ஜி. நிஜாமுதீன் ஆகியோரும் அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற முறையிலும், நீலகிரி மாவட்டந்தான் இதிலே பெரும்பாலும் பாதிக்கப்பட்ட மாவட்டம் என்ற முறையிலும், அந்த நீலகிரி மாவட்ட சட்டமன்ற உறுப்பினர் சார்பில் திரு. முபாரக் அவர்களைப் பேச அழைக்கிறேன். பேசுகின்ற உறுப்பினர்கள் எல்லோரும் மிகச் சுருக்கமாகப் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இரண்டு பெரிய இலாகாக்களின் மானியக் கோரிக்கைகள்மீது விவாதம் நடைபெற இருக்கிறது. திரு. பா.மு. முபாரக்.

[2000 ஏப்ரல் 29

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக அளவில் பிரசித்தி பெற்றிருக்கிற நீலகிரி மாவட்டம் தன்னுடைய முதன்மை விவசாயத் தொழிலாகத் தேயிலையைத்தான் நம்பியிருக்கிறது. பச்சைத் தேயிலையினுடைய விலை கடந்த 6 மாதங்களாக படிப்படியாக, 15 ரூபாயிலிருந்து இன்றைக்கு 5 ரூபாய், 6 ரூபாய் அளவுக்குக் குறைந்திருக்கிறது. இது குறித்து அனைத்துக் கட்சிகளும் மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் கடந்த மாதம் சந்தித்து விவரங்கள் தெரிவிக்கப்பட்டதோடு, கடந்த 10-ஆம் தேதி பெரிய அளவில் பேரணி ஒன்றும் நடத்தப்பட்டது. இவ்வாறு தேயிலை விலை குறைந்து வருவதை நிலை நிறுத்துவதற்காக விவசாயிகள் சார்பில் 3, 4 கோரிக்கைகள் அனைத்துக் கட்சிகளின் சார்பில் வைக்கப்பட்டிருக்கின்றன. அதில் மிக முக்கியமாக ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை ரஷ்ய நாட்டினுடைய நிலையால், ஏற்றுமதிக்கு வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்போது ஏற்றுமதி செய்யப்படுவதில்லை. அதோடு வெளி நாடுகளிலிருந்து தேயிலை இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதும் இந்த விலை வீழ்ச்சிக்கு ஒரு காரணம் என்று சொல்லப்படுகிறது. அதோடு நீலகிரியில் இருக்கிற தேயிலை ஏல மையங்களில் சில குறிப்பிட்ட பெரிய கம்பெனிகள், அதாவது இந்துஸ்தான் லீவர், பண்சாலி, கிரன்னார், டோஸ் என்கின்ற குறிப்பிடத்தக்க பெரிய கம்பெனிகள் ஏலத்தில் கலந்துகொண்டு, தயாரிக்கப்பட்ட தேயிலைத் தூள் ஏல மையங்களில், தேயிலைத் தூள் அதிக விலைக்கு ஏலம் போகாமல் தடுப்பதில் கவனம் செலுத்துவதாகவும், வியாபாரிகள் மற்றும் விவசாயிகள் சார்பிலும், இந்தத் தேயிலைத் தூளைத் தயாரிக்கிற சிறு தேயிலைத் தொழிற்சாலை அதிபர்கள் சார்பிலும் கருத்துகள் தெரிவிக்கப்படுகின்றன. நம்முடைய அரசு மிகுந்த கவனத்துடன் விவசாயிகளுக்காகச் செயல்பட்டுவருகிற அரசு என்பது நாம் எல்லோரும் சேர்ந்து ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாகும்.

*முற்பகல் 10-40*

இதிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், முதன்முதலாகச் சட்டப்பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்த அவைக்குள்ளே நுழைந்தபோது, அன்றைக்கு ஆளுநராக இருந்த கவர்னர் ஜான் அவர்களுடைய உரையின்மீது நடைபெற்ற விவாதத்திலே கலந்துகொண்ட கன்னிப்பேச்சில் அவர் பேசும்போது, 4-5-1957 அன்று, "நான் இந்த அவைக்கு வந்திருக்கிறேன். இந்த அவையினுடைய கவனத்தைக் கவர வேண்டும்; ஆளுநருடைய உரையின்மீது கவனம் செலுத்த வேண்டும் என்பதைவிட, என்னுடைய குளித்தலை தொகுதியில் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதில்தான் என்னுடைய முழுக் கவனமும் இருக்கிறது" என்றுதான் தன்னுடைய கன்னிப் பேச்சையே தொடங்கியிருக்கிறார்கள். இன்றைக்கு நீலகிரி மாவட்டத்தில் இருக்கிற எங்களுக்கும், எங்களுடைய விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டும் என்கிற எண்ணம்தான் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகுந்த அளவிற்கு இதில் தனிக்கவனம் செலுத்த வேண்டுமென்று கோருகிறோம்.



2000 ஏப்ரல் 29] [திரு. பா.மு. முபாரக்]

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கிற மூன்று சட்டமன்ற உறுப்பினர்களும், அதேபோல நாடாளுமன்ற உறுப்பினரும், கூட்டுக் குழுவினுடைய தலைவர் என்று இருக்கக்கூடிய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் மாவட்டத் தலைவர் திரு. உச்சிகவுடர் அவர்களும், இன்னும் நம்முடைய சகோதரர்கள் இராமச்சந்திரன், கிருஷ்ணமூர்த்தி போன்றவர்களும் சேர்ந்து 7 பேர் டெல்லிக்குச் சென்றோம். நம்முடைய மாண்புமிகு பிரதமர் அவர்கள் உடல்நலக் குறைவாய் இருந்ததால் அவர்களைச் சந்திக்க முடியவில்லை. இருந்தாலும், மாண்புமிகு வர்த்தகத் துறை அமைச்சர் அவர்களையும், நிதித் துறை அமைச்சர் அவர்களையும் சந்தித்து, நிலைமைகளையெல்லாம் எடுத்துச் சொன்னபோது, அவர்களெல்லாம் மிகுந்த அளவிற்கு அதைக் கவனமாகக் கேட்டுவிட்டு, உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். நாங்கள் சென்றபோது மாண்புமிகு வர்த்தகத் துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டிலிருந்து நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவரோடு கலந்து பேசியிருப்பதையும், இதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, கடிதம் எழுதியிருக்கிற செய்தியையும்கூட அங்கே தெரிவித்தார்கள். ஆகவே, இதில் விவசாயிகள் வேண்டுவது என்கிற வகையில், ஒன்றிரண்டு கோரிக்கைகளை இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பு மூலமாக நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

விவசாயிகள் மிகவும் விரும்புவது, தேயிலை இறக்குமதிக்குத் தடை கோருகிற ஒரு நிலையை நம்முடைய அரசு மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். தேயிலை ஏற்றுமதிக்கு ஏற்பாட்டைச் செய்யச் சொல்லி, மத்திய அரசை நம்முடைய அரசின் சார்பில் வலியுறுத்த வேண்டும். தேயிலை இறக்குமதிக்குத் தடை விதிக்க முடியாத நிலைமை ஏற்படின், தேயிலை இறக்குமதிக்கு விதிக்கப்படும் வரி, 7½ சதவிகிதம், 15 சதவிகிதம்

என்ற அளவிற்கு இருப்பதை 35 சதவிகிதத்திற்குக் குறைவில்லாமலும், அதிகபட்சமாக 80 சதவிகிதம் வரையிலும், நெல் இறக்குமதிக்கு விதிப்பதைப்போல, இந்த வரிவிகிதத்தை அதிகப்படுத்த வேண்டும், இறக்குமதி செய்கிற தேயிலைக்கு.

அடுத்ததாக, தேயிலைத் தூள் விற்பனையைப் பொது விநியோக முறையில், ரேஷன் கடையில் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தால், அரசு Tan tea, மற்றும் Inco Tea சார்பில் இருக்கிற சுமார் 20 தேயிலைத் தொழிற்சாலைகளில் இருக்கிற தேயிலைத் தூள் ரேஷன் முறைக்குச் சென்றுவிட்டால், ஏல மையங்களுக்கு தேயிலைத் தூள் குறைவாகப் போவதால், விலை ஏறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கெல்லாம் அடுத்ததாக, தேயிலைத் தூள் விற்பனை மையங்களில் விதிக்கப்படுகிற வரி 8 சதவிகிதம். மற்ற மாநிலங்களில் 4 சதவிகிதம், 2 சதவிகிதம் என்று பல அரசியல் கட்சி உறுப்பினர்களும் பேசினார்கள். அதையே நம்பிகூட, நாங்களே முதலமைச்சரிடத்திலே, மத்திய அமைச்சரிடத்திலே கொடுக்கப்பட்ட மனுக்களிலும் அதைப்பற்றிக் கொடுத்தோம். ஆனால், விசாரித்துப் பார்க்கும்போது, எல்லா மாநிலங்களிலும், அதே நிலை இருக்கும்; அதைவிட அதிகமாக இருக்கும் என்றும் தகவல் தெரிகிறது. எப்படியிருந்தாலும் விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டிய நம்முடைய அரசு, ஏல மையங்களில் போகிற தேயிலைத் தூளினுடைய விலைக்கு மட்டிலும், 8 சதவிகித வரி என்பதை,முடிந்தால் 2 சதவிகிதமாக, முடியவில்லையென்றால் குறைந்தது 4 சதவிகிதமாகவாவது குறைத்து அதன்மூலமும் இந்த விவசாயிகள் பயன்பெறுகிற ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அவை எல்லாவற்றிற்கும் மேலாக, முக்கியமாக விவசாயிகள் மிகவும் விரும்புவது, பச்சைத் தேயிலைக்கு எந்தக் காலத்திலும் ஒரு நிரந்தரமான விலை கிடைக்கிற வகையில், கரும்பிற்கு விலை நிர்ணயிப்பதைப்போல, நெல்லுக்கு விலை நிர்ணயிப்பதைப்போல, பச்சைத் தேயிலைக்கும் விலை நிர்ணயிக்க வேண்டுமென்பதாகும். அதற்கான வாய்ப்புகள் இருக்கிறதா என்பதை மட்டிலும் கவனத்தில்கொண்டு, நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, இதில் மிக முக்கியமாக தனியார் சிலர் ஏல விற்பனை மையங்களில் தங்களுடைய ஆதிக்கத்தைச் செலுத்துகிறார்கள் என்ற நிலையைப் போக்குவதற்காக, நம்முடைய அரசின் சார்பிலேயே விற்பனை மையம் ஒன்றைத் தொடங்கி, அந்த மையத்தின் மூலமாக ஏலத்திலேயே அரசின் சார்பிலே கலந்துகொண்டு





வெளிநாடுகளுக்கும், இந்தியாவின் பிற மாநிலங்களுக்கும் தேயிலைத் தூள் விற்பனை செய்வதற்கான ஒரு குழுமம் ஏற்படுத்தினால், அது தனியாருடைய ஆதிக்கத்தைப் போக்குவதற்கு உறுதுணையாக இருக்கும் என்கிற தகவலையும் தெரிவித்து, ஒரு நல்ல சூழ்நிலையை, நம்முடைய நீலகிரி மாவட்ட மக்கள் பயன்பெறுகிற வகையில், ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-45*

இந்த அரசு பொறுப்பேற்ற நான்கு ஆண்டுகளில் அந்த மாவட்ட மக்களினுடைய கோரிக்கைக்கேற்ப வீடு கட்டுகிற தடைச் சட்டத்தை நீக்கிக் கொடுத்திருக்கிறோம். விவசாயிகளுக்கு மிகவும் பயன்பெறுகிற சில்வர் ஓக் மரங்களை ஷெட்யூல்டு டைப்பிலே இருந்து எடுத்து, அவர்கள் எளிதாக அந்த மரங்களை வெட்டி விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். அந்த மாவட்ட மக்கள், நுழைவு வரி செலுத்துவதிலிருந்து விதிவிலக்குத் தரப்பட்டிருக்கிறது. அந்த மாவட்டத்தில் சாலைப் பாதுகாப்புக்காக அதிகக் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. இப்படிப் பல்வேறு வகையிலே உதவி செய்திருக்கிற இந்த அரசு, அந்த விவசாயிகள் பாதிக்கப்பட்டு இன்றைக்கு சங்கடத்தில் இருப்பதை நீக்குவதற்கும் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவந்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேயிலையினுடைய விலை, நீலகிரி மாவட்டத்தில் மிகவும் குறைந்திருக்கிறது. விலையில் ஏற்பட்டுள்ள இந்த மந்த நிலை, நிரந்தரமான ஒன்று; இது தற்காலிகமான ஒன்று அல்ல. தேயிலை அதிகமாக உற்பத்தியானதால், ஏற்பட்டுள்ள மந்த நிலையும் இதற்குக் காரணமல்ல. தேயிலையினுடைய உற்பத்தி குறைவாகத்தான் இருக்கிறது என்பதையும் நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மத்திய அரசினுடைய ஏற்றுமதி—இறக்குமதிக் கொள்கையால், விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதகமான சூழ்நிலைதான் இதற்கான முதல் காரணம். ஒரு கிலோ இலை 17 ரூபாய்க்கு விற்றது, இன்றைக்கு 4 ரூபாய் 50 பைசா என்று குறைந்திருக்கிறது என்பதையும் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆனால், தொழிலாளர்களினுடைய ஊதியம்,

[திரு. ச. அழகிரி] [2000 ஏப்ரல் 29

விவசாய இடுபொருட்களினுடைய விலை, இவைகளிலே எந்தவித மாற்றமும் இல்லை; அவை அப்படியே இருக்கின்றன. எனவே, இலையினுடைய விலை குறைந்து, இடுபொருட்களினுடைய விலை அப்படியே இருக்கிற காரணத்தினால் விவசாயிகளினுடைய வாழ்க்கை நிலை பாலைவனமாக மாறி இருக்கிறது என்பதையும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

தேயிலையினுடைய விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதே தவிர, சந்தையிலே, தேயிலையினுடைய விலையிலே எந்தவிதமான குறைவும் ஏற்படவில்லை. அதே விலைக்குத்தான் தேயிலைத்தூள் இருக்கிறது. இந்த முரண்பாட்டிற்குக் காரணம் என்ன என்பதையும் அரசு உணர்ந்து பார்க்க வேண்டும். ஆனால், ஒன்று புரிகிறது. மத்திய அரசினுடைய ஏற்றுமதி, இறக்குமதிக் கொள்கையால், தேயிலை உற்பத்தி செய்யும் விவசாயியும் பயனடையவில்லை; தேயிலையைப் பயன்படுத்துகிற நுகர்வோரும் பயனடையவில்லை. அப்படியென்றால் இதிலே பயனடைந்திருக்கிறவர்கள் யார் என்று தமிழக அரசு மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுத் தெளிவுபெற வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசினுடைய Exim Policy தான், அவர்களுடைய ஏற்றுமதி—இறக்குமதிக் கொள்கைதான் அவர்களுக்கு first casualty. இத்தகைய பாதிப்புக்குள்ளாகி இருக்கிற முதல் மாநிலமாகத் தமிழகம்தான் இருக்கிறது என்பதனையும் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

நீலகிரி மாவட்ட விவசாயிகள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர். தேயிலையைப் பறிப்பதற்கான கூலிகூட தேயிலையை விற்பதன் மூலமாக அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்பதனை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எனவே, அவர்கள் பல தோட்டங்களிலே தேயிலை பறிப்பதையே கைவிட்டு விட்டார்கள் என்பதையும், அங்கே பட்டினிச் சாவுகள் ஏற்படுவதற்கான ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்பதனையும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். உடனடியாக மாநில அரசு ஒரு கிலோ தேயிலையை ரூ. 17 என்று வாங்கி, அதனை கூட்டுறவு விவசாய ஆலைகளுக்கு வழங்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வற்புறுத்த விரும்புகிறேன்.



2000 ஏப்ரல் 29] [திரு. ச. அழகிரி]

எல்லாவற்றுக்கும் மேலாக, இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இருக்கிற ஒரே வழி; இலங்கையிலே இருந்து இறக்குமதி செய்யப்படுகிற தேயிலையை உடனடியாகத் தடை செய்வதற்குத் தமிழக அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த ஒரு காரியத்தைத் தவிர, வேறு எந்தக் காரியமும் நீலகிரி மாவட்ட விவசாயிகளுக்குப் பயனளிக்காது. இறக்குமதி வரியாக 80 சதவிகிதம் நீங்கள் போட்டாலும்கூட, இங்கே இருக்கிற வியாபாரிகள், இலங்கை தேயிலையைத்தான் வாங்குவார்கள். உதாரணமாக, நாம் அந்தத் தேயிலைக்கு 7 ரூபாய் கொடுக்கிறோம் என்றால், நாணய மதிப்பிலே இருக்கிற வேறுபாடுகள் காரணமாக, 12 ரூபாய் இலங்கையிலே இருக்கிற விவசாயிகளுக்குக் கிடைக்கிறது. எனவே, 80 சதவிகிதம் நீங்கள் வரி உயர்த்திப் போட்டாலும்கூட, இலங்கை விவசாயிகளுக்கு அது இலாபமாகத்தான் அமைகிறது. எனவே, இலங்கையிலே இருக்கிறவர்கள் இங்கே இறக்குமதி செய்வதைத்தான் விரும்புவார்கள். எனவே, அதனைத் தடை செய்ய அரசாங்கம் முன்வர வேண்டும்; மத்திய அரசை வற்புறுத்த வேண்டும். முதலமைச்சர் தன்னுடைய செல்வாக்கை மத்திய அரசின்மீது திணிக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-50*

மேலும் ஒரு வழி இருக்கிறது. இராணுவத்திற்குத் தேவையான தேயிலையை உள்நாட்டிலேயிருந்துதான் அவர்கள் பெற வேண்டுமென்று இராணுவ அமைச்சகத்தை, இந்திய அரசை நம்முடைய மாநில அரசு கேட்டுக்கொள்ளலாம். அப்படிக் கேட்டுக்கொள்வதன் மூலமாக, உற்பத்தியிலே 10 சதவிகித தேயிலை இராணுவத்திற்குப் பயன்படும் என்பதையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சகோதரர் முபாரக் சொன்னதுபோல ரேஷன் கடைகளிலேகூட, அவற்றை விற்பனை செய்யலாம்.

உலக வர்த்தக அமைப்பு இவற்றுக்கெல்லாம் காரணமாக இருக்கிறது. World Trade Organisationதான் நம்முடைய மத்திய அரசின்மீது தமது செல்வாக்கைச் செலுத்தியிருக்கிறார்கள். உலக வர்த்தக அமைப்பினுடைய செல்வாக்கிற்கு மத்திய அரசு பலியாகியிருக்கிறது. உதாரணமாக, அவர்களை எதிர்த்துப் பேசுகின்ற துணிவு நம்முடைய அமைச்சர்களுக்கு இல்லை; மத்திய அரசுக்கு இல்லை.

[திரு. ச. அழகிரி] [2000 ஏப்ரல் 29

அமெரிக்க அரசாங்கம், உலக வர்த்தக அமைப்பின் மூலமாக, ஜப்பானுக்கு ஒரு நெருக்கடியை ஏற்படுத்தியது. அமெரிக்காவிலே உற்பத்தியாகிற கார்களில் ஒரு குறிப்பிட்ட சதவிகித கார்களை ஜப்பான் பெற்றே தீர வேண்டும்; வாங்கித் தீர வேண்டும். ஜப்பான் மார்க்கெட்டிலே அவை விற்பனை செய்யப்பட வேண்டும் என்று உலக வர்த்தக அமைப்பு, அவர்களுக்கு ஒரு நெருக்கடியை ஏற்படுத்தியபோது, ஜப்பான் அதனை வாங்க மறுத்தது. அந்த ஒப்பந்தத்திலே கையெழுத்திட மறுத்தது. அதனை நிராகரித்தது. அதனுடைய விளைவாக அமெரிக்க கார்கள் ஜப்பான் மார்க்கெட்டுக்குள் நுழைய முடியவில்லை.

அதேபோல தேயிலை விஷயத்திலும் நாம் செய்யலாம். தேயிலையிலே தன்னிறைவு பெற்றிருக்கிற ஒரு நாடு, இந்திய நாடு. இங்கே அதிகமான உற்பத்தி இருக்கிறது. எனவே, தேயிலை இறக்குமதியை நாங்கள் தடை செய்கிறோம். அதற்கு நாங்கள் ஒத்துக்கொள்ள மாட்டோம் என்று நம்முடைய வர்த்தக அமைச்சரும், இந்திய அரசாங்கமும், உலக வர்த்தக அமைப்புக்குச் சொல்ல வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே இந்த அவையைக் கேட்டுக்கொள்கிறேன். முடியும் என்றால், முதலமைச்சர் விரும்பினால், இந்த அவையினுடைய ஏகோபித்த தீர்மானமாகக்கூட போட்டு, மத்திய அரசாங்கத்திற்கு நாம் அதனை அனுப்ப வேண்டும். உலக வர்த்தக அமைப்பினுடைய கட்டுப்பாட்டிற்கு, இந்த ஒரு விஷயத்தில் நாம் பணியக் கூடாது. ஏகபோகமாக எல்லாவற்றையும் திறந்துவிடுவது என்பது, ஏகபோகமாக இந்திய சந்தைகளை, அந்நிய ஆதிக்கத்திற்கு உட்படுத்துவது என்பது ஏற்புடையதல்ல. உள்நாட்டிலேயே வளர்ந்துவருகிற தரமான தொழில்களுக்குப் போட்டியாக, பிற நாடுகளிலிருந்து வருகின்ற இறக்குமதியைத் தடை செய்கின்ற விதத்திலே, தமிழக அரசு உறுதியாக இருக்க வேண்டும். இந்த உறுதியிலே நாம் குறைவு காட்டுவோமேயானால், இதை அலட்சியமாக எடுத்துகொள்வோமேயானால், இந்தத் தேயிலை விலை வீழ்ச்சி என்பது நிரந்தரமாக ஆகிவிடும். நீலகிரி மாவட்ட விவசாயிகளை மட்டுமல்ல, இந்தியா முழுவதும் இருக்கின்ற தேயிலை உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதனை, அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அரசு இதன்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கூறி அமர்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.



2000 ஏப்ரல் 29]

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 9 ஆண்டு காலத்திற்கு முன்னர், நாம் வினையை விதைத்தோம், இப்போது வினையை அறுவடை செய்து கொண்டிருக்கின்றோம். இந்தியாவில், கடந்த 9 ஆண்டு காலத்திற்கு முன்னர், 1991 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கையின் நேரடி தீய விளைவுதான் இது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

சாதாரணமாக, பிளேக் நோயை நாம் இப்போது பார்ப்பது இல்லை. பிளேக் நோய் தொடங்கிவிட்டால், ஏதாவது ஒரு வீட்டிலே எலிகள் செத்து விழும் என்று நான் கேள்விப்பட்டு இருக்கிறேன். பார்த்தது இல்லை. அதுபோல இன்றைக்கு, நீலகிரி தேயிலை விலை வீழ்ச்சி என்ற ஒரு நிலை ஏற்பட்டிருப்பதை பிளேக் நோய் முழு வீச்சாகத் தொடங்குவதற்கு முன்னர், செத்து விழுகின்ற எலிகளின் முதல் எலியாகத்தான் நான் பார்க்கிறேன்.

ஏதோ இந்த நிலைமையில் ஆளுகிற கட்சி அல்லது எதிர்க் கட்சி என்று மட்டுமே, வெறும் பிரதிவாதங்களைச் செய்துகொண்டிருப்பதால் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. பிரச்சினையினுடைய மையமான அம்சம் என்னவென்பதையும் கவனத்திலேகொண்டுதான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். இதனை, வெறும் பச்சைத் தேயிலைக்கு விலை வீழ்ச்சி ஏற்பட்டுவிட்டது என்று பிரச்சினையை ஒரு சிமிழுக்குள் அடைத்துப் பரிசீலிக்க முயல்வது அதனுடைய முழு விஸ்வரூபத்தைக் காணுவதாக இருக்காது. எனவே நான் இங்கே குறிப்பிட விரும்புவது, 1991 ஆம் ஆண்டு இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட, புதிய பொருளாதாரக் கொள்கையினுடைய தொடர் விளைவுகள்தான் இன்றைக்கு, ஒவ்வொன்றாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவற்றில் ஒரு அம்சமாகத்தான் நீலகிரியிலே, பச்சைத் தேயிலையின் விலை வீழ்ச்சி அடைந்திருக்கின்ற அம்சத்தை நாம் பார்க்கிறோம். இதே நிலை இன்னும் இரண்டு, மூன்று வருடங்களில் தொழில் துறையில், வேறு பல துறைகளில், தன்னுடைய கோர முகத்தைக் காட்டவிருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிட வேண்டாம். இத்தகைய நிலைமைகள் வருவது தேசிய பொருளாதாரத்தை முற்றிலும் தகர்க்கத் தொடங்கியிருக்கிற ஓர் அபாயகரமான அடையாளம் இது என்று நாம் பார்க்கத் தவறினால், பிரச்சினைக்கு நம்மால் தீர்வு காண முடியாது. இன்றைக்கு இந்த நிலை ஏற்பட்டிருப்பதற்குக் காரணமாக இருப்பது, நான் சொல்வது போல புதிய பொருளாதாரக் கொள்கை என்ற அந்த அடித்தளத்தில் நின்று சிந்தித்தால்தான் பிரச்சினையின் தாரதம்மியங்களைப் புரிந்து தீர்வு காண முடியும்.

*முற்பகல் 10-55*

நீலகிரியில் பச்சைத் தேயிலை விலை இன்றைக்கு வீழ்ச்சி அடைந்திருக்கிறது என்றால் இதில் அந்தத் தேயிலைப் பிரச்சினை மட்டும் நம் கண்ணுக்குத் தெரிகிறது. இன்னும் கண்ணுக்குப் புலப்படாமல் இருக்கிற தொழில் துறை ஆகட்டும், சமூகப் பொருளாதாரத்தின் பல்வேறு அம்சங்களாகட்டும், அவற்றில் எல்லாம் இந்தப் பிரச்சினைகள் மறைந்து கிடக்கின்றன. இவற்றை வெளிக் கொண்டுவருவதற்கு வெறும் அரசியல் நிலைகளிலே இருந்து மட்டும் தீர்வு காண முடியாது. அடிப்படையான பிரச்சினை ஒரு கட்சி பிரிதொரு கட்சிக்கு எதிராக அல்லது ஆதரவாக கருத்துக்களைச் சொல்லித் தீர்வு காணவே முடியாது.

உலக அளவில் தாராளமயம், தனியார்மயம் மற்றும் உலகமயம் என்று சொல்லி W.T.O.-வுடைய நிர்பந்தங்கள் பலவற்றிற்கு நாம் கட்டுப்பட்டு, கையெழுத்திட்டு, அப்படிக் கையெழுத்திட்டதினுடைய விளைவு ஒரு நாளில் நடந்துவிடவில்லை. தொடர்ச்சியாகத்தான் நடந்து கொண்டிருக்கிறது. அப்படி நடந்திருப்பதில் நான் இப்பொழுதும் கவனத்தோடு சொல்கிறேன். அந்நிய முதலீடே தவறு என்று நான் குறிப்பிடவில்லை அல்லது அந்நிய தொழில்நுட்ப உதவி பெறுவதே தவறு என்று நான் குறிப்பிடவில்லை.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல அந்நிய உதவி என்பது கழுத்துக்கு மாலையாக இருக்க வேண்டுமே தவிர, அதுவே கழுத்திற்குச் சுருக்குக் கயிறாக மாறிவிடக் கூடாது என்கிற பொருத்தமான எச்சரிக்கையைத்தான் மீண்டும் நான் இங்கே நினைவு படுத்த விரும்புகிறேன்.

இந்தத் தேயிலை விலை வீழ்ச்சியில் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று;இந்தியாவினுடைய பொருளாதாரத்தைத் தகர்க்கிற அந்நிய முதலீடுகளை நாம் அனுமதிக்கிற வரை இந்த மாதிரி சிறப்புக் கவன ஈர்ப்பு நிறைய வரும். நாடாளுமன்றத்தில் இருந்து பல்வேறு மாநிலச் சட்டமன்றங்கள் வரை இந்தியாவினுடைய சமூகப் பொருளாதாரக் கட்டமைப்பு முற்றிலும் சல்லடைக் கண்களாகத் துளைக்கப்பட்டுவிடும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

இன்றைக்கு இங்கே விலை வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது, அதற்கெப்படித் தீர்வு காணப் போகிறோம்? விலை வீழ்ச்சிக்கு எது காரணம்? இறக்குமதிக்



கொள்கைதான். இறக்குமதிக் கொள்கை என்பது இந்திய தற்சார்பை தகர்க்கிறது. ஜவஹர்லால் நேரு தொடங்கி வைத்த, மறக்க முடியாத அந்த மனிதர் தொடக்கி வைத்த, அந்தப் பொதுத் துறையை தாராளமயம், தனியார்மயம், உலகமயம் என்ற பெயரால் அந்நிய முதலீடுகள் தகர்க்கத் தொடங்கியிருக்கின்றன. நான் மிக எளிமையாகச் சொல்ல விரும்புகிறேன், நன்றாக நடந்துகொண்டிருக்கின்றவனுடைய முழங்கால்களைச் கடப்பாறையால் அடித்து முறித்துவிட்டு, ஊன்றி நடப்பதற்கு அமெரிக்காவில் இருந்து ஊன்றுகோலை இறக்குமதி செய்வதைப்போல இந்தியாவின் சொந்தத் தொழில்களை, இந்தியாவின் சொந்த வளங்களைச் சூறையாடுவதற்குரிய வாய்ப்பை அளித்துவிட்டு, இத்தகைய பிரச்சினைகள் வரும் என்பதை முன்கூட்டியே சிந்திக்காமல் இருந்துவிட்டது, உண்மையில் தேசிய அரசியல் பொருளாதார நலன்களைப் பார்க்கத் தவறியதால்தான். எனவே, நான் இந்த சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் வாயிலாகக் குறிப்பிட விரும்புவது, இது வெறும் நீலகிரித் தேயிலை விலை வீழ்ச்சி மட்டுமல்ல. இந்தியாவின் எல்லா அம்சங்களையும் பாதிக்கப்போகிற ஒரு விஷயம்.

நாம் எதிர்க்க வேண்டிய ஒன்று இது. இந்த புதிய பொருளாதாரக் கொள்கை கைவிடப்படுகிற வரை, புதிய பொருளாதாரக் கொள்கை நிராகரிக்கப்படுகிற வரை, புதிய பொருளாதாரக் கொள்கைக்கு எதிராக ஒவ்வொரு மனித நெஞ்சத்திலும் நெருப்பைப் பற்ற வைக்கிற வரை, இந்தியரவின் பொருளாதாரம் சர்வ நாசம் ஆக்கப்படும்; இந்தியாவின் பொருளாதாரத்தை சூறையாடுவதற்கு அந்நிய முதலீடுகளை நாம் அனுமதித்திருப்பது தேச விரோதச் செயல் என்றே நான் குறிப்பிட விரும்புகிறேன். எனவே, இத்தகைய செயலுக்கு எதிராக இந்த வாய்ப்பை நான் பயன்படுத்த விரும்புகிறேன். எனவே, மாநில அரசு இதில் செய்ய வேண்டிய ஒன்று; துரதிருஷ்டவசமாக மத்தியில் பிரதமரைச் சந்திக்க இயலாமல் போய்விட்டது அவருடைய உடல்நலக் குறைவின் காரணமாக என்று நான் கருதுகிறேன். முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய செல்வாக்கைச் செலுத்தி, இந்தத் தேயிலை விலை வீழ்ச்சிக்கு ஓர் இடைக்கால ஏற்பாடாகவாவது அந்நிய தேயிலை இறக்குமதியை முற்றிலும் தடை செய்ய வேண்டும். அது தடை செய்யப்படாத வரை, இந்திய மார்க்கெட்டை அந்நிய தேயிலைக் கம்பெனிகள் கைப்பற்ற அனுமதிக்கப்படுகிற வரை, இந்திய மார்க்கெட்டில் இந்தியத் தேயிலைகள் நிலைக்காது. இந்திய மார்க்கெட்டை அந்நிய கம்பெனிகள் கைப்பற்ற அனுமதிப்பது, இந்தியாவின் சொந்த கம்பெனிகளை அழிக்க, தற்கொலை

செய்ய நிர்பந்திக்கிற நடவடிக்கை ஆகும். எனவே, இந்த முறையைக் கைவிட வேண்டும், புதிய பொருளாதாரக் கொள்கை கைவிடப்பட வேண்டிய ஒன்று என்பதை மாநில அரசு வற்புறுத்துமா என்பதைக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

*முற்பகல் 11-00*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் பச்சைத் தேயிலையினுடைய விலை கடந்த ஆறு மாத காலமாக கிலோ ஒன்றுக்கு ரூ.20-லிருந்து இன்றைக்கு ரூ.5/- என்ற அளவிலே விற்றுக்கொண்டிருக்கிறது. இதனால் அங்கே இருக்கின்ற விவசாயிகள் எல்லாம் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்ற செய்தியை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இங்கே எடுத்துக் கூறினார்கள். அதிலே என்னுடைய கருத்தையும் இணைத்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நேரத்தின் அருமை கருதி, சுருக்கமாக ஓரிரு கருத்துகளை மட்டும் கூறி விடைபெறுகின்றேன்.

இதே நிலைமை நீலகிரி மாவட்டத்தில் நீடித்தால், ஆந்திராவிலே பருத்தி உற்பத்தி செய்த விவசாயிகள் தங்களுடைய பருத்திக்குக் கட்டுப்படியாகின்ற விலை கிடைக்காத காரணத்தினால் தற்கொலை செய்துகொண்ட நிலைதான் தற்போது நீலகிரி மாவட்டத்திலும் ஏற்படும் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு முக்கிய காரணம் மத்தியிலே ஆளுகின்ற பாரதிய ஜனதா அரசு; மத்தியிலே புதிதாகப் பொறுப்பு ஏற்றிருக்கிற வர்த்தகத் துறை அமைச்சர், மாண்புமிகு முரசொலி மாறன் அவர்களுடைய புதிய ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கைதான் இதற்குக் காரணம் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 714 பொருட்களுக்கு இறக்குமதி தாராளமயமாக ஆக்கப்பட்டது. குறிப்பாக விவசாயப் பொருட்கள், அது பால் பவுடராக இருந்தாலும் சரி, அது தேங்காய்க் கொப்பரையாக இருந்தாலும் சரி, இப்படி விவசாயப் பொருட்கள் அனைத்துக்குமான புதிய இறக்குமதிக் கொள்கையினால் விவசாயிகளே நடுத்தெருவில் நிற்கின்ற சூழ்நிலைதான் இருந்துகொண்டிருக்கிறது.

இன்றைக்கு இறக்குமதிபற்றிக் கூறினார்கள். இலங்கையிலிருந்து இறக்குமதி செய்கின்ற தேயிலைக்கு 80 சதவிகிதம் வரி விதிக்க



வேண்டுமென்றுகூடக் கூறினார்கள். 80 சதவீதம் அல்ல; நூற்றுக்கு நூறு சதவீதம் நீங்கள் வரி போட்டீர்களேயானால்கூட, இங்கே விலை உயராது என்ற கருத்துத்தான் இருந்துகொண்டிருக்கிறது. இந்த நிலைமை கடந்த ஆறு மாத காலமாக இருந்துகொண்டிருக்கிறது.

அங்கே உற்பத்தி செய்துகொண்டிருக்கிற விவசாயிகள் அனைவரும் மாவட்ட நிர்வாகத்தை அணுகி, தங்களுடைய பிரச்சினைகளைப் பல்வேறு கோணங்களில், பல்வேறு போராட்டங்களின் வாயிலாக அங்கே வலியுறுத்தினார்கள். ஆனால் கடந்த ஆறு மாத காலமாக மாநில அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால்தான் அந்தக் கூட்டுக் குழு சேர்ந்து ஒரு முடிவை எடுத்து, வருகின்ற மே மாதம் 20 ஆம் தேதி, 21 ஆம் தேதி மேதகு ஆளுநர் அவர்கள் நீலகிரிக்குச் செல்லும்போது அவருக்குக் கறுப்புக் கொடி காட்ட வேண்டும்; அங்கே மாநில அமைச்சர்கள் வந்தால்கூட அவர்களுக்குக் கறுப்புக்கொடி காட்ட வேண்டும் என்று அங்கே தேயிலை உற்பத்தி செய்துகொண்டிருக்கின்ற விவசாயிகளுடைய வீடுகள் அனைத்திலும் இன்றைக்குக் கறுப்புக்கொடியை ஏற்றியிருக்கின்றார்கள். அப்படி என்றால் ஒட்டுமொத்தமாக அங்கேயிருக்கின்ற 3 இலட்சம் தேயிலைப் பயிர் செய்து கொண்டிருக்கக்கூடிய விவசாயிகள் அனைவருமே ஒன்று சேர்ந்து தங்களுடைய வீடுகளிலே எல்லாம் கறுப்புக் கொடி ஏற்றியிருக்கிறார்கள். ஆளுநருக்கு கறுப்புக்கொடி காட்டுவோம் என்று கூறியிருக்கிறார்கள் என்றால் அந்த விவசாயிகளுடைய நிலைமை எவ்வளவு மோசமாக ஆகியிருக்கின்றது என்பதைப் பார்க்க வேண்டும். இந்த அரசு இதுவரை எந்தச் செவி கொடுத்தும் கேட்காமல் இருக்கிறது என்பதைத்தான் இது தெள்ளத் தெளிவாகக் காட்டுகின்றது.

இங்கே முபாரக் அவர்கள் கூறினார்கள், "நாங்கள் டில்லி சென்று வர்த்தகத் துறை அமைச்சரைப் பார்த்தோம், பிரதமரைப் பார்க்க முடியவில்லை" என்று நீங்கள் சென்றீர்கள். ஆனால் உங்களுக்கு உண்மையிலேயே அக்கறை இருந்திருந்தால், மாநில முதல்வரை அணுகி, இந்தச் சட்டமன்றத்தில் ஒரு தீர்மானம் போட்டு, இங்கே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துச் சென்று, உங்களுடைய கண்டனத்தைத் தெரிவித்து, கோரிக்கையை நிறைவேற்றியிருப்பீர்கள். ஆனால் ஏதோ விளம்பரத்திற்காகத்தான் நீங்கள் செய்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நான் அனுமதி கொடுக்கவில்லை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே மாண்புமிகு முதல்வர் 1957 ஆம் ஆண்டு கன்னிப் பேச்சில் விவசாயிகளைப்பற்றிப் பேசிவிட்டால் மட்டும் பிரச்சினை தீர்ந்துவிடாது. உள்ளப் பூர்வமாக.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். முதலமைச்சர் கருத்தை ஆதரிக்கிற உறுப்பினர்கள் பேசுகிறார்கள். நீங்கள் உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அது தப்பு என்று சொல்லவில்லை. நீங்கள் பேசிவிட்டால் மட்டும் போதாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவருடைய இஷ்டம். உங்கள் இஷ்டப்படி நீங்கள் வேறு ஏதாவது சொல்லுங்கள். உங்கள் தலைவி கருத்தைச் சொல்லுங்கள். எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நான் அதைத்தான் சொல்கிறேன். இந்த நீலகிரி மாவட்டத்திலே பயிர்செய்கின்ற அந்தத் தேயிலை விவசாயிகளுக்காக முதன் முதலில் குரல் கொடுத்தவர் எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக இருக்க வேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இங்கே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. முபாரக் (சிரிப்பு) ஆளும் கட்சி கொறடா முபாரக் அவர்களும் த.மா.கா....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இப்போது சுருக்கமாகப் பேசவில்லையென்றால் உட்காரச் சொல்வேன். அவர், இவர் என்று சொல்வதெல்லாம் தேவையில்லாதவை. உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.





**திரு. பி.ஆர். சுந்தரம்:** இப்போது அதைத்தான் சொல்கிறேன். இங்கே த.மா.கா. உறுப்பினர் அழகிரி அவர்களும், சுப்பராயன் அவர்களும் - அவர்கள் அனைவருமே எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள் தெரிவித்த கருத்தைத்தான் தெரிவித்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) ஆகவே அவர்கள் கூறிய கருத்தின்படி இலங்கையிலிருந்து தேயிலை இறக்குமதி செய்வது கடும் கண்டனத்திற்குரியது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அந்தப் பேப்பரைப் படிக்க என்னிடம் அனுமதி கேட்கவில்லை. உங்கள் பேச்சினை முடியுங்கள். உங்கள் தலைவி சொல்லித்தான் அழகிரிக்கே தெரியும்; சுப்பராயனுக்கே தெரியும் என்று நீங்கள் சொல்லிவிட்டீர்கள். சரி, உட்காருங்கள். (குறுக்கீடு) இன்னும் வேறு என்ன சொல்லப் போகிறீர்கள்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லி முடித்துவிட்டீர்களே. அந்த அம்மாதான் முதன்முதலில் இந்தப் பிரச்சினையைக் கிளப்பினார்கள் என்று சொல்லிவிட்டீர்கள். ரெக்கார்டு ஆகிவிட்டது, உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இன்னும் இரண்டு Points இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு points இருக்கின்றனவா? சரி, சீக்கிரம் சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தேங்கிக் கிடக்கும் தேயிலைத் தூள்களை அரசே கொள்முதல் செய்து ரேஷன் கடைகள் மூலமாக விற்பனை செய்ய வேண்டும். இந்த அவையிலே அந்த இறக்குமதிக் கொள்கையைக் கைவிட வேண்டும் என்று நீங்கள் ஒரு தீர்மானம் போட்டு மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்தைச் சொல்லி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் முழுவதும் இன்றைக்கு பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டிருப்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆளுநர் அவர்கள் வழக்கமாகச்

சென்று அங்கே தங்குவது கூட சிரமமாக்கப்பட்டிருக்கிறது. அதற்கான மாற்றுக் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது என்ற அளவுக்கு இந்தப் பிரச்சினை இன்றைக்கு மிகப் பெரிய பிரச்சினையாக உருவாகியிருக்கிறது. பொதுவாக நீலகிரி மாவட்டம் என்று சொன்னால் அங்கே கடந்த காலத்தில் காய்கறிகளை அந்த மாவட்ட மக்கள் உற்பத்தி செய்வார்கள். வெளியிலேயிருந்து செல்லக்கூடியவர்கள் எல்லாம் நீலகிரி மாவட்டத்திலேயிருந்து காய்கறிகளை வாங்கி வருவதை ஒரு பழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் *1975* வாக்கில் அந்த மாவட்டத்தில் தேயிலை உற்பத்தி அதிக உற்சாகம் பெற வேண்டும், ஊக்கம் பெற வேண்டும் என்ற அடிப்படையில் ‘TANTEA’ போன்ற நிறுவனங்கள் எல்லாம் கூட அங்கே சட்டப்பூர்வமாகவே உருவாக்கப்பட்டு அந்த நிறுவனம் இப்போது அங்கே செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அவர்கள் அதிக ஊக்கத்தை அளிக்க உற்பத்தியைப் பெருக்க கவனம் செலுத்தினார்களே தவிர செய்யப்படுகிற உற்பத்தியை எப்படி விற்பனை செய்வது, மார்க்கெட்டிங் என்ன என்பதைப்பற்றி அதிக கவனம் செலுத்தவில்லை என்றுதான் இப்போது தெரிய வருகிறது. ஓரளவுக்கு உற்பத்தி பெருகியிருக்கிறது. அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். *1998-99* ஆம் ஆண்டு இந்த பசுந்தேயிலை என்ற இந்தத் தேயிலை ஏறக்குறைய *419* இலட்சம் கிலோ உற்பத்தி செய்யப்பட்ட நிலை மாறி *1999-2000* ஆம் ஆண்டில் அது *500* இலட்சம் கிலோவாக உயர்ந்திருக்கிறது என்று குறிப்புகள் சொல்கின்றன.

நடப்பாண்டில் அது மேற்கொண்டும் *20* இலட்சம் கிலோ அதிகமாக உற்பத்தியாகும் என்று சொல்லப்படுகிறது. எனவே அவர்கள் பெற்ற புதிய ஊக்கத்தின் காரணமாக காய்கறிகளை விடுத்து புதிய நிலப்பரப்பில்கூட இந்தத் தேயிலை உற்பத்திக்காக அதிக கவனம் செலுத்தினார்கள் என்பது நன்கு தெரிய வருகிறது.

ஆனால், அப்படி செய்யப்பட்ட அந்த உற்பத்தியை எப்படி விற்பது, price stability-க்கு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது என்பதற்கான விவரங்கள் நமக்குத் தெரியவில்லை. அதே நேரத்தில் அங்கே ஒரு syndicate செயல்படுவதாகவும் நமக்குக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர், நம்முடைய அரசுக் கொறடா முபாரக் அவர்களுடைய பேச்சிலிருந்து அங்கே ஒரு syndicate அதாவது பெரிய உற்பத்தியாளர்கள் monopolist tendency-யை அங்கே உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரிய வருகிறது. எனவே,



இவற்றையெல்லாம் கட்டுப்படுத்தி விவசாயிகளுக்கு உரிய விலை கிடைப்பதற்கு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று நினைத்தவர்கள் ஏன் அவர்களுக்கு நியாயமான விலை கிடைப்பதற்கு வழிவகை செய்யவில்லை என்பதுதான் இன்று உருவாகி இருக்கிற புரட்சிப் பிரச்சினைக்கு அடிப்படை என்று நான் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*முற்பகல் 11-10*

இதற்குக் காரணம், வெளிநாட்டவர்கள் அவர்களுடைய உற்பத்தியை நம்முடைய நாட்டில் விற்பனை செய்வதற்கு முறை இல்லை, வரையறையில்லை என்ற நிலை உருவாக்கப்பட்டிருப்பது மட்டுமல்ல, இறக்குமதி செய்வதற்கு இன்றைக்கு நிலைமை தாராளம் ஆக்கப்பட்டிருக்கிறது. வெளிநாட்டில் உற்பத்தியாகிற தேயிலையை விற்பனை செய்வதற்கு இங்குக் கதவுகள் திறந்துவிடப்பட்டிருக்கின்றன என்ற காரணத்தினால்தான் இந்த நிலை நீலகிரி மாவட்டத்தில் உருவாகியிருக்கிறது என்று நமக்குத் தெரிய வருகிறது. எனவே, மத்திய அரசினுடைய கொள்கையா அல்லது மாநில அரசினுடைய மெத்தனப் போக்கா என்பதைப் பற்றி எல்லாம் நான் இப்போது ஆராய விரும்பவில்லை. நான் உங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, புதிய பகுதிகளில் எல்லாம் தேயிலை உற்பத்திக்காக அதிகக் கவனம் செலுத்தி, காய்கறிகளை உற்பத்தி செய்வதைக்கூட குறைத்துக்கொண்டு இன்றைக்கு தேயிலை உற்பத்தியில் கவனம் செலுத்தியிருக்கிற நம்முடைய நீலகிரி மாவட்ட விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க நாம் என்ன நடவடிக்கை மேற்கொண்டோம் என்பது தான் அதிலே கொஞ்சம் கவனம் செலுத்தவில்லையோ என்றுகூட நான் நினைக்கிறேன். எனவேதான் இந்த monopoly என்னும் ஏகபோக உரிமையைக் கொண்டாடக் கூடியவர்களால் market manoeuvrability அங்கு அதிகமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் நமக்குத் தெரிய வருகிறது. பெரிய திமிங்கலங்கள் இருந்துகொண்டு சிறிய மீன்களை விழுங்குவதைப்போல நம்முடைய உற்பத்தியாளர்களுக்கு விலை கிடைக்காத அளவுக்கு அவர்கள் manoeuvre செய்கிறார்கள் என்பது இன்றைக்கு உறுதி செய்யப்பட்டிருக்கிறது, அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் பேசிய பேச்சிலேயிருந்து.

எந்த அளவுக்கு நீங்கள் இந்த இறக்குமதியை அனுமதிக்க வேண்டும்? நுகர்வோர்களுக்கு சௌகரியம் ஏற்பட வேண்டும், நியாய விலையில்

தேயிலை கிடைக்க வேண்டும் என்று நீங்கள் இந்த இறக்குமதியை அனுமதித்திருந்தால், அப்படி அனுமதிப்பதற்கு முன்பு நம்முடைய தேசத்தில் உற்பத்தி செய்கின்றவர்களுக்கு எந்த அளவுக்கு அது பாதகம் ஏற்படுத்தும் என்று கணிப்புச் செய்த பிறகுதான் இதைச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால், வெளிநாட்டிலேயிருந்து செய்யப்படுகிற இறக்குமதியைக் கட்டுப்படுத்த வேண்டும். நான் தடை செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை. அது நுகர்வோர்களைப் பாதிக்கும். எனவே, அதைக் கட்டுப்படுத்தி, ஒழுங்குபடுத்த வேண்டும். அதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அதனால் பாதகம் ஏற்படுகிறது என்றால் தயவுசெய்து இந்த இறக்குமதியைக் கட்டுப்படுத்துங்கள் அல்லது மட்டுப்படுத்துங்கள் அல்லது தடை செய்யுங்கள். இந்த *3* நிலைகளிலுமே அதைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், நுகர்வோர்களையும் நாம் மறந்துவிடக் கூடாது. உற்பத்தியாளர்களை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு நுகர்வோரையும் நாம் மறந்துவிடக்கூடாது. market stability, price stability-க்கு என்ன நடவடிக்கையை நீங்கள் எடுத்தீர்கள் என்பதுதான் இந்தப் பிரச்சினை உருவாவதற்கு அடிப்படையாக அமைந்திருக்கிறது. எனவே, அதைப்பற்றி நீங்கள் தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்த விற்பனையை அவர்கள் செய்யும்போது பெரிய உற்பத்தியாளர்களெல்லாம் ஒன்று சேர்ந்து விலையை அவர்கள் தங்களுடைய கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறதே, அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்தது? TANTEA போன்ற நிறுவனங்கள் தயவு செய்து சொல்ல வேண்டும்; உற்பத்தியைப் பெருக்குவதற்கு நீங்கள் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு ஏற்ப, இந்த உற்பத்தி செய்யப்பட்ட பொருளுக்கு சரியான விலை கிடைப்பதற்கு என்ன நடவடிக்கையை நீங்கள் மேற்கொண்டீர்கள் என்பதை TANTEA போன்ற நிறுவனங்கள் விளக்க வேண்டும். இல்லாவிட்டால் இன்றைக்கு நமக்குத் தெரிகிறது, எல்லோரும் கொடியேற்றி வைத்திருக்கிறார்கள்; கறுப்புக் கொடி, மாவட்டம் முழுவதும் பறப்பதாகச் சொல்கிறார்கள். விவசாயிகள் கறுப்பு பாட்ஜ் அணிந்து கொண்டிருப்பதாகவும் சொல்கிறார்கள். நம்முடைய மேதகு ஆளுநர் அவர்கள்கூட அங்கே செல்ல முடியாத அளவிற்கு அவர்கள் அங்கே தங்கியிருக்கிறார்களே, அதற்குக் கூட ஒரு கேள்வி எழுப்பப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள்.

அமைச்சர்கள் சென்றால் அவர்களும் ஒருவேளை மக்களுடைய எதிர்ப்பைச் சந்திக்கக்கூடிய நிலைமை உருவாகலாம். எனவே தயவுசெய்து





இந்தப் பிரச்சினையை ஒரு மிகப்பெரிய பொருளாதாரப் பிரச்சினையாக எடுத்துக்கொண்டு அரசியலுக்குக்கூட அப்பாற்பட்டு நான் அரசைக் கேட்டுக்கொள்வது தயவுசெய்து நீலகிரி மாவட்டத்தினுடைய அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினை இது. நாமே அவர்களுக்கு ஊக்கமளித்துவிட்டு, உற்சாகம் கொடுத்துவிட்டு, அவர்கள் உற்பத்தி செய்த பிறகு *15* ரூபாய்க்கு விற்க வேண்டிய அந்தப் பசும் இலைகளை நாம் *6* ரூபாய்க்கு, *5* ரூபாய்க்கு, *4.50* ரூபாய்க்கு விற்க வேண்டும் என்ற நிலைமை உருவாகியிருப்பது மிகப்பெரிய பாரதூரமான பொருளாதார விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒன்று. எனவே அரசு இதிலே முனைந்து செயல்பட்டு முறையான நடவடிக்கையை மேற்கொண்டு நல்ல கொள்கைகளை வகுத்து, எதனால் இந்த நிலை உருவாகியது என்பதை ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி அமர்கிறேன்.

*முற்பகல் 11-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

*** திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்திலே உற்பத்தி செய்யப்படுகின்ற தேயிலை இலையினுடைய விலை மிகவும் குறைந்துவிட்ட நிலையில் அங்கிருக்கின்ற விவசாயிகள் அதைப் பறித்தால் கூலி கொடுக்கின்ற அளவிற்குக்கூட அதிலே வருமானம் இல்லை என்கின்ற நிலையிலே தேயிலை இலைகளைத் தோட்டத்திலிருந்து பறிப்பதற்குக்கூட முன்வராது அங்கிருக்கின்ற விவசாயிகளும் அதைப்போல அந்தத் தொழிலை மேற்கொண்டிருக்கின்ற கூலித் தொழிலாளர்களும் மிகுந்த துன்பத்திலே ஆட்பட்டிருக்கின்ற இந்த நிலையிலே, இங்கு எல்லோரும் சுட்டிக்காட்டியதைப்போல, மத்திய அரசினுடைய தாராள இறக்குமதிக் கொள்கையின் மூலமாகத்தான் இந்தப் பாதிப்புகள் விளைந்திருக்கின்றன என்பதை நாம் இன்றைக்கு உணர்ந்து கொண்டிருக்கிறோம்.

இப்போது மத்தியிலே, மாநிலத்திலே இருக்கின்ற அரசுகள் எல்லாம் சற்றுப் பின்னோக்கிச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் இந்த நாடு சுதந்திரம் பெற வேண்டுமென்பதற்காக வெள்ளையர்களோடு போராடிக் கொண்டிருந்த காலத்தில்கூட காந்தியடிகள் போன்றவர்கள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்கின்றவற்றை எல்லாம் நாம் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற முறையிலே அன்றைக்கு அந்நிய

நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட துணிகளையெல்லாம் ஒன்று சேர்த்து எரித்து தங்களுடைய போராட்டத்தை நடத்தினார்கள். அதற்கும் காரணம் இந்த நாட்டினுடைய பொருளாதாரம் அந்நிய நாட்டிற்குச் செல்லக் கூடாது. இந்த நாட்டில் உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் உரிய வாய்ப்புகளை அளிக்க வேண்டும் என்கிற நிலையை எடுத்துக்காட்டுவதற்காகத்தான் அன்றைக்கே அதை எல்லாம் செய்து காட்டினார்கள். ஆனால் இப்போது சுதந்திரத்தைப் பெற்று, சுதந்திரத்தின் வாயிலாக ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற நாம் எல்லாம் இப்போது அந்நிய நாடுகளுக்குக் கதவைத் திறந்துவிட்டதால் நமது பொருளாதாரம், நமது நாட்டிலே உற்பத்தி செய்கிற விவசாயிகள், தொழிலாளர்கள் எல்லாம் நலிந்து கொண்டிருக்கின்ற ஒரு நிலைமையை நாம் பார்க்கிறபோது உண்மையிலேயே அது உள்ளத்திலே மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்துகின்றது. இங்குக் குறிப்பிட்டுக் காட்டியதைப்போல அந்த மாவட்டத்தில் இருக்கின்ற விவசாயிகள், சிறு ஆலைகள், இந்தத் தேயிலைக் கொழுந்தைப் பக்குவப்படுத்துகின்ற ஆலைகள் எல்லாம் ஓடாத நிலையிலே இருக்கின்றன.

கடந்த நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்னால் ஆந்திர மாநிலத்திலே எப்படிப் பருத்தியினை விவசாயம் செய்த விவசாயிகள், தங்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்தின் காரணமாகத் தற்கொலை செய்துகொள்கின்ற அளவுக்கு அவர்களுக்கு நிலைமை ஏற்பட்டதோ அதேபோன்ற நிலைமை இப்போது நீலகிரி மாவட்டத்திலே தேயிலைத் தொழிலை மேற்கொண்டிருக்கின்ற விவசாயிகளும், தொழிலாளர்களும் எடுக்கக்கூடிய ஒரு அபாயமான சூழ்நிலை எல்லாம் இருக்கிறது என்பதை அங்கிருந்து வருகின்றவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

அங்கு நடக்கவிருக்கின்ற மலர்க் கண்காட்சியின்போது அங்கிருக்கின்ற விவசாயிகள் எல்லாம் மறியல் செய்ய வேண்டும் என்கின்ற நிலையைக்கூட எடுத்திருக்கிறார்கள். தங்கள் வாழ்க்கைக்காகப் போராடிக் கொண்டிருக்கின்ற நேரத்திலே இப்படிப்பட்ட ஆடம்பரமான கண்காட்சிகள் எல்லாம் தேவைதானா என்ற கேள்வியைக்கூட எழுப்பிக்கொண்டிருக்கிறார்கள் என்கிற செய்திகள் எல்லாம் வந்து கொண்டிருக்கின்றன.



முற்பகல் 11-20

எனவே, இதிலே மாநில அரசு மிகுந்த அக்கறையோடு விவசாயிகளினுடைய நலனிலேயும், அங்கு தொழில் செய்கிற தொழிலாளர்களினுடைய நலனிலேயும் அக்கறை கொண்டு, இறக்குமதி செய்யப்படுகின்ற தேயிலைக்கு முழுமையாகத் தடை விதிப்பதோடு, அங்கிருக்கின்ற விவசாயிகள் முழுமையாகப் பயன் பெறுகின்ற அளவிலே அவற்றை இந்த அரசாவது விலை கொடுத்து வாங்கி அவர்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தேயிலைத் தொழில் ஒரு பெரிய நெருக்கடியைச் சந்தித்துக்கொண்டிருக்கின்றது. நம்முடைய நீலகிரி மாவட்ட சட்டமன்ற உறுப்பினர் திரு. முபாரக் அவர்கள் இப்போது நீலகிரி மாவட்டத்திலே ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடியினுடைய ஆழத்தைப் பற்றி இங்கு எடுத்து வைத்தார்கள். அவர்களால் தெரிவிக்கப்பட்டிருக்கிற அந்த உணர்வோடு நான் எனது உணர்வுகளையும் இணைத்துக்கொள்கிறேன். இப்போது மற்ற மாவட்டங்களிலே, அதாவது தேயிலை உற்பத்தி செய்கிற மதுரை மாவட்டத்திலேயோ, நெல்லை மாவட்டத்திலேயோ ஏற்படாத ஒரு பிரத்தியேகமான நிலைமை நீலகிரி மாவட்டத்திலே இருந்துகொண்டிருக்கிறது. ஏனென்றால், சிறு குறு உற்பத்தியாளர்கள், சிறு விவசாயிகள் அதிகமான தேயிலை உற்பத்தி செய்கிற ஒரு மாவட்டமாகும் அது. 16 கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் செயல்பட்டுக்கொண்டிருந்தன என்பதிலிருந்து எந்த அளவிற்கு சிறு குறு உற்பத்தியாளர்கள் அங்கே இந்தத் தேயிலைத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. இன்று இந்த நெருக்கடி ஏற்பட்டதைத் தொடர்ந்து அநேகமாக அந்தக் கூட்டுறவு ஆலைகள் எல்லாம் செயலற்ற நிலைக்கு வந்துகொண்டிருக்கின்றன என்பது அரசுக்கும் தெரியும் என்று நான் நினைக்கின்றேன்.

இப்போது அந்த மாவட்டத்தைப் பொறுத்தளவிலே மட்டுமல்ல தேயிலை உற்பத்தியோடு சம்பந்தப்பட்டிருக்கிற, தமிழகத்தினுடைய மற்ற மாவட்டங்களிலே இருக்கிற உற்பத்தியாளர்களுக்கும் இது ஒரு பெரிய பிரச்சினையாக இப்போது மாறியிருக்கிறது. இப்போது தேயிலை 5 ரூபாய் விலைக்குக் கொடுக்கப்படுகிற நிலையிலே, அவர்களால் வாழ்க்கையை நடத்திக்கொள்ள முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது என்பது மட்டுமல்ல; இது நாளைய அரசையும் பாதிக்கக்கூடிய நிலைமைய

ஏற்படுத்தும் என்று நான் ஐயப்படுகிறேன். ஏனென்றால், 10 ஆயிரத்திற்கும் அதிகமான தொழிலாளிகளுக்கு வேலை கொடுக்கிற TANTEA என்ற அரசு நிறுவனம் இப்போது நீலகிரி மாவட்டத்திலே செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. இந்தத் தேயிலை நெருக்கடி தொடர்ந்து ஏற்படுமேயானால், அந்தத் தொழிலாளிக்கும் பாதிப்பு ஏற்படுவது என்றால் அது ஸ்ரீலங்காவிலிருந்து இங்கு வந்த Repatriates-களைப் பொறுத்த அளவிலே ஏற்படுகிற நெருக்கடி என நாம் நன்கு அறிவோம். ஆகவே, மத்திய அரசினுடைய இறக்குமதி ஏற்றுமதிக் கொள்கையின் காரணமாக, புதிய பொருளாதாரக் கொள்கையின் காரணமாக ஏற்படுகிற நெருக்கடி இது என்று நாம் சொல்லிவிடுவதால் மட்டும் இந்தப் பிரச்சினை முடிந்துவிடப்போவதில்லை. அந்த மக்களுக்கு நல்ல வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய கட்டாயமான பொறுப்பிலே நாம் இருந்துகொண்டிருக்கிறோம் என்பதை மறந்துவிட முடியாது.

ஆகவே, இப்போது தேயிலைக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலை கொடுக்கப்பட வேண்டுமேயானால் தேயிலை இறக்குமதி தடை செய்யப்பட வேண்டும். SAARC நாடுகளுக்கிடையே ஏற்பட்டிருக்கிற ஒப்பந்தத்தின்படி தரம் குறைந்த தேயிலையை இப்போது இந்திய நாட்டிற்குக் கொண்டு வந்து விற்பதற்குண்டான சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இப்படிப்பட்ட இறக்குமதிக் கொள்கை ஒரு பக்கத்திலேயிருந்தாலும் சிறு தொழில்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கு சில தடைகளை மத்திய அரசு போட்டிருக்கிறது என்று தெரிகிறது. உதாரணமாக, கறிக்கோழி இப்போது கொண்டு வருவதிலே சில தடைகளை அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதேபோன்று நம்முடைய தேயிலைத் தொழிலைப் பாதுகாத்துக்கொள்வதற்கு மத்திய அரசு சில நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள முடியும். அப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு இந்தச் சட்டமன்றப் பேரவை தகுந்த அளவிலே ஒரு தீர்மானத்தையே நிறைவேற்றி மத்திய அரசை நாம் நிர்ப்பந்தப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது இந்த மாநிலத்திலே இருக்கிற தேயிலைத் தொழிலைப் பாதுகாத்துக்கொள்வதற்கு மத்திய அரசு முன்வரவேண்டும். அந்தக் கடமை இந்த மாநில அரசினுடைய கடமை மட்டுமல்ல, மத்திய அரசினுடைய கடமையும் ஆகும் என்று வலியுறுத்தி, மத்திய அரசு இப்போது இந்த மாநிலத்திலே இருக்கிற ஆயிரக்கணக்கான



தேயிலை உற்பத்தியாளர்களைப் பாதுகாப்பதற்கு தகுந்த அளவிலே உள்ள நடவடிக்கைகளை, தேவைப்பட்டால் தேயிலை வெளிநாடுகளிலேயிருந்து இந்திய நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படக்கூடாது என்ற ஒரு நிலையை நாம் எடுத்துக்கொள்ளக்கூடிய முறையிலே என்ன செய்ய முடியுமோ அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அதற்கு நாம் அவர்களை வலியுறுத்தவேண்டும். அல்லது அவர்களை ஒன்றும் செய்யமுடியவில்லை என்றால், இன்று நம்முடைய அரசு, அரிசிக்கு மானியம் கொடுப்பதைப் போல, மத்திய அரசு தேயிலைக்கு மானியம் கொடுக்கட்டும். இங்கே இருக்கிற உற்பத்தியாளர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் வாழ்க்கையை நடத்திக் கொள்வதற்கான தகுந்த நிலையை ஏற்படுத்துவதற்கு நாம் மத்திய அரசைக் கட்டாயப்படுத்தித்தான் ஆகவேண்டும். இது தமிழ்நாட்டில் இருக்கிற ஆயிரக்கணக்கான சிறு சிறு தேயிலை உற்பத்தியாளர்களுடைய வாழ்க்கைப் பிரச்சினை என்பதை நான் வலியுறுத்திச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த முறையில் நடவடிக்கைகளை நாம் அனைவரும் சேர்ந்து எடுக்கவேண்டும்.

*முற்பகல் 11-25*

அதேபோன்று, கொறடா திரு. முபாரக் அவர்கள் ஒருசில கருத்துகளை இந்தத் தேயிலைத் தொழிலைப் பாதுகாப்பதற்காக இங்கே எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கருத்துக்களை நானும் ஆதரிக்கிறேன். இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு சில வரிக் குறைப்புகள் வழியாக சில உதவிகளைச் செய்யமுடிந்தால் அதை இந்த அரசு செய்ய வேண்டும். அது நம்முடைய அரசினுடைய கடமை என்ற முறையில் இது பார்க்கப்படவேண்டும். இந்தத் தேயிலைத் தொழிலுக்கு நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கிற மிகப்பெரிய நெருக்கடியிலிருந்து அந்த மாவட்டத்தில் இருக்கிற ஏழை எளிய விவசாயிகளைப் பாதுகாப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க முடியுமோ அதை எடுக்கவேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்ட சட்டமன்ற உறுப்பினரும் நம்முடைய அரசு கொறடாவுமான மாண்புமிகு உறுப்பினர் திரு. முபாரக் அவர்கள் உள்ளூர்ப் பிரச்சினையை மிகத் தெளிவாகத் தெரிந்து, சிறப்பாக இங்கே எடுத்துரைத்தார்கள்.

ஆக, இந்த விவசாயிகளுடைய பிரச்சினை என்பது நமக்கு ஒரு நிரந்தரப் பிரச்சினையாக இருக்கிறது. காரணம் ஒவ்வொருவரும் அவரவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களுக்குத் தாங்களே விலை நிர்ணயிக்கக்கூடிய நிலை இருக்கிறது. ஆனால் விவசாயிகள் மட்டும் தாங்கள் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களுக்கு தங்களால் விலை நிர்ணயம் செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல; இவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய விவசாய உற்பத்திப் பொருட்களை மூலதனமாக வைத்து அதிலிருந்து செய்யக்கூடிய மற்றப் பொருட்களுக்குக்கூட அந்த உற்பத்தியாளர்கள் விலை நிர்ணயிக்க முடிகிறது. எனவே உழவர் சந்தையில் இருப்பதுபோன்று, இதிலும் தரகர் பிரச்சினையை இல்லாமல் போக்குவதற்குக் கவனம் செலுத்தினால்கூட நல்ல நிலையை நாம் ஏற்படுத்த முடியும் என்று கருதுகின்றேன். பொதுவாக இந்தத் தேயிலைத் தோட்டங்களை நம்பித்தான் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய இலட்சக்கணக்கான தமிழர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். எனவே அந்தத் தமிழர்களுடைய வாழ்க்கை பாதிக்காத அளவுக்கு மாநில அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து தேயிலைத் தோட்ட உற்பத்தியாளர்களுக்குக் கட்டுப்படியான விலைகிடைக்க ஆவன செய்யவேண்டுமென்று அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, நீலகிரி, கோவை, நெல்லை, தேனி ஆகிய மாவட்டங்களில் உருவாகியுள்ள தேயிலை குறித்த பிரச்சினை பற்றி ஒரு தீர்மானம் கொண்டுவந்து விவாதித்தால், அதற்காக எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்ளப்படுமோ, அந்த அளவுக்கு ஏறத்தாழ ஒரு மணி நேரம் இந்தப் பிரச்சினைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. முபாரக், திரு. அழகிரி, திரு. சுப்பராயன், திரு. சுந்தரம், திரு. அப்துல் லத்தீப், திரு. சந்தானம், திரு. ஹேமச்சந்திரன், திரு. வேலாயுதன் ஆகியோர் தங்களுடைய கருத்துகளை இங்கே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.

அநேகமாக எல்லோருமே, திரு. சுந்தரம் ஒருவரைத் தவிர, இதை ஒரு கட்சிப் பிரச்சினையாக, அரசியல் பிரச்சினையாக ஆக்காமல், ஒரு மனிதாபிமான பிரச்சினையாக, ஒரு பொருளாதாரப் பிரச்சினையாகக் கருதி, தங்களுடைய அரிய கருத்துகளை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.





இதுபற்றி ஒரு குறிப்பை இந்த மாமன்றத்திலே வைக்க நான் விரும்புகின்றேன்.

தமிழ்நாட்டில், நீலகிரி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, தேனி ஆகிய மாவட்டங்களில் தேயிலை சாகுபடி நடைபெறுகின்றது. இதில் அதிக அளவு தேயிலை சாகுபடி, நீலகிரி மாவட்டத்திலே நடைபெற்று வருகின்றது. நீலகிரி மாவட்டத்திலே மாத்திரம் சுமார் ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் ஏக்கர் பரப்பளவில் தேயிலை சாகுபடியாகிறது. இதில் சுமார் ஐம்பதாயிரம் ஏக்கர் அளவுக்கு ஏறத்தாழ 25,000 சிறு விவசாயிகள் தேயிலை சாகுபடியிலே ஈடுபட்டிருக்கின்றார்கள்.

வழக்கமாக, தமிழகத்தில் சாகுபடி செய்யப்படும் தேயிலை ஆண்டு ஒன்றுக்கு சுமார் 100 மில்லியன் கிலோ அளவுக்கு ரஷிய நாட்டிற்கு ஏற்றுமதி ஆகிக்கொண்டு இருந்தது, நீலகிரி தேயிலைக்கு ரஷிய நாட்டில் நல்ல கிராக்கி இருந்தது. ஆனால் சமீப காலங்களில், இதற்குச் சமமான தேயிலை மலிவான விலையில் கென்யா நாட்டிலிருந்து கிடைக்கின்ற காரணத்தால் ரஷிய நாட்டிற்கு அவ்வளவாக நீலகிரித் தேயிலை ஏற்றுமதி ஆவதில்லை. மேலும் தேயிலை சாகுபடி செய்யப்படும் பரப்பளவு கடந்த சில ஆண்டுகளில் அதிகரித்துள்ளதோடு தேயிலை சாகுபடியில் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட குளோனிங் போன்ற நவீன தொழில்நுட்பங்களின் காரணமாக தேயிலை விளைச்சலும் அதிகமாகி இருக்கின்றது.

முற்பகல் 11-30

வெளிநாடுகளிலிருந்து தேயிலையை இறக்குமதி செய்து, இந்திய தேயிலையுடன் கலந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இதனாலும் தென்னிந்திய தேயிலையின் மார்க்கெட் குறைந்துவிட்டது. தேயிலையின் உற்பத்தி அதிகரித்துள்ள நிலையில், இதுபோன்ற காரணங்களினால் தேயிலை விலையில் வீழ்ச்சி ஏற்பட்டது. இதனால் தேயிலை சாகுபடி செய்யும் சிறு விவசாயிகள் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றார்கள்.

தேயிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை உணர்ந்து 2000 ஆண்டு ஜனவரி மாதத்திலேயே மத்திய அரசுக்கு இங்கிருந்து கடிதங்கள் அனுப்பப்பட்டன.

27-1-2000 அன்று மத்திய அரசின் நிதி அமைச்சர் திரு. யஷ்வந்த் சின்காவிற்கும், வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சர் திரு. முரசொலி மாறனுக்கும் நான் எழுதிய கடிதத்தில், இடுபொருட்களின் உயர்ந்து வரும் விலையின் காரணமாகவும், தேயிலையின் விலை குறைந்து வருவதன் காரணமாகவும், தேயிலைத் தொழிலில் ஏற்பட்டுவரும் நெருக்கடியான நிலையை அவர்களுடைய நேரடி கவனத்திற்குக் கொண்டுவருவதாகவும், மத்திய அரசின் 1999 நிதிநிலை அறிக்கையின் தொடர்ச்சியாக தேயிலையின் மீது கிலோ ஒன்றுக்கு இரண்டு ரூபாய் என்று விதிக்கப்படும் சுங்க வரியும் ஏற்கெனவே உள்ள துன்பத்தை மேலும் அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிட்டு அதனைத் தீர்க்க நல்ல முடிவு காண வேண்டுமென்று வலியுறுத்தி இருந்தேன்.

தொடர்ந்து, 21-4-2000 அன்று இந்தியப் பிரதமருக்கும் மத்திய அரசின் நிதி அமைச்சருக்கும், சுங்க வரியை முழுமையாக விலக்கிக்கொள்ள வேண்டுமென்றும், தேயிலை இறக்குமதியைத் தடை செய்ய முடியவில்லை என்றாலும் தேயிலையின் மீதான இறக்குமதி வரியை அதிகப்படுத்திட வேண்டுமென்றும் வலியுறுத்தியிருந்தேன்.

தேயிலைத் தொழிலில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைப் பற்றி அனைத்துத் தரப்பினரின் கவனத்தை ஈர்ப்பதற்காக 10-4-2000 அன்று உதகமண்டலத்தில் நீலகிரி மாவட்ட அரசியல் கட்சிகளின் கூட்டு நடவடிக்கைக் குழுவினர் சார்பாகப் பேரணியும் நடத்தப்பட்டுள்ளது. அந்தக் குழுவினர் சென்னைக்கு வந்து என்னிடம் நேரடியாகத் தேயிலைத் தொழிலில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைப் பற்றி விவரித்தார்கள். இவர்கள் பேசியதன் தொடர்ச்சியாக மத்திய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சருடனும் தொலைபேசியிலே தொடர்பு கொண்டு மத்திய அரசு இந்தப் பிரச்சினையில் உடனடியாகத் தலையிட்டுத் தேயிலை விவசாயிகளின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தினேன்.

நீலகிரி மாவட்ட அரசியல் கட்சிகளின் கூட்டு நடவடிக்கைக் குழுவினர் சார்பில் திரு. உச்சி கவுடர், திரு. கிருஷ்ணமூர்த்தி, திரு. ராமச்சந்திரன், திரு. மாஸ்டர் மாதவன், எம்.பி., திரு. முபாரக், எம்.எல்.ஏ., திரு. குண்டன், எம்.எல்.ஏ., திரு. ரங்கநாதன், எம்.எல்.ஏ., ஆகியோர் புது டில்லிக்குச் சென்று மத்திய நிதி அமைச்சர் திரு. யஷ்வந்த் சின்கா அவர்களையும் மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சர் அவர்களையும் 26, 27 ஆகிய நாட்களில் நேரில் சந்தித்து தேயிலை விவசாயிகளுடைய பிரச்சினை குறித்து விரிவாகப் பேசியிருக்கிறார்கள்.



குழுவின் கோரிக்கைகளைக் கேட்ட மத்திய அமைச்சர்கள் இந்தப் பிரச்சினை குறித்து உடனடியாகக் கவனித்து ஆவன செய்வதாகவும் உறுதி கூறியுள்ளார்கள்.

குழுவின் தலைவரான தமிழ் மாநில காங்கிரசைச் சேர்ந்த திரு. உச்சி கவுடர் மத்திய அமைச்சர்களைச் சந்தித்ததற்குப் பிறகு விடுத்துள்ள அறிக்கையில் "எங்களுடைய அனைத்துக் கோரிக்கைகளையும் ஏற்றுக்கொண்டு மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் எங்களிடம் கூறும்போது, நீலகிரியிலே பச்சைத் தேயிலை விலை வீழ்ச்சி, தேயிலை விலை வீழ்ச்சி குறித்து முக்கிய தேயிலை வர்த்தகர்களிடம் கலந்து ஆலோசிப்பதாகவும், இறக்குமதி செய்யப்படும் தேயிலையைக் கட்டுப்படுத்துகின்ற வகையிலே இறக்குமதித் தேயிலைக்கு அதிக இறக்குமதி வரி விதிப்பதற்கும் உடன் நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதி அளித்தார்" என்று உச்சி கவுடர் அவர்கள் தன்னுடைய அறிக்கையிலே குறிப்பிட்டுள்ளார்கள்.

மத்திய அரசிடமும் குறிப்பாக மத்திய அமைச்சர்களிடமும் நமது அரசின் சார்பாகத் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வரும் இந்தப் பிரச்சினையில் வெகுவிரைவில் மத்திய அரசு உரிய சுமுகமான முடிவுகளை எடுத்து அறிவிக்கும் என்று நம்புகின்றேன். கடந்த ஆட்சிக் காலத்திலும்—சுந்தரத்திற்காகச் சொல்கின்றேன், கடந்த ஆட்சிக்காலத்திலும்—இதுபோன்ற நெருக்கடி நிலை 1994-95-ல் ஏற்பட்டது. அப்பொழுது கிலோ ஒன்றுக்குத் தேயிலை விலை ரூபாய் 4.40 என்ற அளவுக்குச் சரிந்து போனது. ஆனால் அந்த நிலையில் அன்றைய ஆட்சியாளர்கள் தேயிலை விவசாயிகளின் பிரச்சினையைப் பற்றிக் கண்டுகொள்ளாமலே காலம் கடத்தினார்கள் என்பது நாட்டுக்கு மிக நன்றாகத் தெரியும்.

முற்பகல் 11-35

நீலகிரித் தேயிலை விற்பனையாகாமல் தேங்கியுள்ள இன்றைய நிலையில் இந்திய இராணுவத்தின் தேவைக்காக 3,000 மெட்ரிக் டன் அளவுக்குக் குன்னூரில் உள்ள தேயிலைத் தொழில் கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து வாங்குவதற்கான ஏற்பாடுகளை உடனடியாகச் செய்திட வேண்டுமென்று மத்திய அரசின் பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்களுக்கும் நான் கடிதம் எழுதியிருக்கிறேன். நேரிலும் அதைப்பற்றி அவரிடத்திலே கூறியிருக்கின்றேன்.

அத்துடன் தேயிலைத் தொழிலுக்கு உடனடியாக நிவாரணம் அளித்திடும் எண்ணத்தோடு தமிழக அரசின் சார்பில் தற்போது தேயிலை மீது விதித்து வரும் எட்டு சதவிகித விற்பனை வரியை இந்தப் பிரச்சினைக்கு நல்லதோர் விடிவு வருகின்ற வரையில் அதாவது சுமார் ஆறு மாத காலத்திற்கு நான்கு சதவிகிதமாகக் குறைக்கவும் முடிவு செய்துள்ளோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 3. அறிவிப்பு

### அடுத்து எடுக்கப்பட வேண்டிய பொருள் நேரமின்மை கருதி பிறிதொரு நாள் எடுத்துக்கொள்ளப்பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்களையும் கலந்து, அடுத்து எடுக்கப்பட வேண்டிய அறிவிப்புகளை கால அவகாசம் இல்லாததால் வருகின்ற செவ்வாய்க்கிழமை எடுத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைய மானியக் கோரிக்கைகள் இரண்டும் பெரிய மானியக் கோரிக்கைகள். ஆகவே வழக்கமாக நாம் 1-30 மணிக்கு அவையை ஒத்திவைப்பதற்கு மாறாக, 2-30 மணி வரை இன்று அவை நடத்தப்படும். இங்கே மதிய உணவு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அளிக்கப்படும் என்று கூறுகிறேன்.

## 4. அறிக்கை அளித்தல்

### அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்கள் அறிக்கை அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. கே. ரவி அருணன், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் பதினாறாவது முதல் இருபத்து நான்காவது வரையிலான அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.





## 5. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 35—பாசனம்**
**(ஆ) கோரிக்கை எண் 38—பொதுப் பணிகள் - கட்டடங்கள்**
**(இ) கோரிக்கை எண் 54—பாசனம் குறித்த மூலதனச் செலவு**
**(ஈ) கோரிக்கை எண் 55—பொதுப் பணிகள் - கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு**
**(உ) கோரிக்கை எண் 44 - காட்டுவளத் துறை**
**(ஊ) கோரிக்கை எண் 58 - காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு**

### (அ) கோரிக்கை எண் 35—பாசனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2000-2001 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 35—பாசனம், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 221,13,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்." எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1928, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் பாலாற்றின் குறுக்கே வேலூர் பகுதியில் பெரிய அணை கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 221,13,68,000-ல் ரூ. 100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4160, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.221,13,68,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1654, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் ஆண்டிப்பாளையம் பரம்பிக்குளம்-ஆளியாறு பாசனம் கடைமடைப் பகுதி வாய்க்காலில் தூர் எடுத்து அகலப் படுத்தி அதில் தண்ணீர் தடையின்றி செல்ல உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.221,13,68,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3578, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.221,13,68,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2620, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.221,13,68,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1270, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.221,13,68,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3515, திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதி, சிவகாமசுந்தரி ஓடையில் தூர் வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.221,13,68,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3036, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம் பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் மேட்டுத் தெருவிலிருந்து பிரிந்துவரும் அரசலாற்றில் உள்ள காட்டாமணக்குகளை அழித்து தூர் எடுப்பதுபற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.221,13,68,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2743, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இவ்வருடம் தொகுதிக்கு இரண்டு ஏரிகள் எனத் தேர்ந்தெடுத்து அவற்றில் தூர் வாரி செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.221,13,68,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3086, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, "To discuss the need to take necessary steps to desilt all the Tanks in Hosur Taluk, Dharmapuri District" I move—

"that the sum of Rs.221,13,68,000 allocated under Demand No.35 - Irrigation, be reduced by Rs.100/-."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 180, திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், ஜம்பு நதி அணைத் திட்டத்தை செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.221,13,68,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3726, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.221,13,68,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2816, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கைப் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.221,13,68,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2441, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் சிற்றாறு—பட்டணம்கால்வாய்க்குட்பட்ட, 30 ஆண்டுகளாகத் தூர் வாரப்படாமல் உள்ள சுமார் 50 குளங்களை தூர் வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.221,13,68,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1998, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை போளுவரம்பட்டி கிராமத்திலும், நாசிபுரம் கிராமத்திலும் உள்ள நீலி வாய்க்காலில் தூர் எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.221,13,68,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3560, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.221,13,68,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5078, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கைப் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.221,13,68,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1894, திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி குளம், 3-ம் மடைக் கால்வாய்களைத் தூர் வாரி அகலப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.221,13,68,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4113, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராசிபுரம் தொகுதியிலுள்ள அனைத்து பாசன ஏரிகளிலும் தூர் வாரி பாசன வசதியை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.221,13,68,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2344, திரு. ச. புரட்சிமணி.

**திரு. ச. புரட்சிமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், மங்களூர் தொகுதியில் உள்ள வெல்லிங்டன் நீர்த்தேக்கத்தின் கரைப் பகுதிகளை சீர்செய்து அதை ஆழப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.221,13,68,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4221, திரு. சு. சிவராஜ்

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ரிஷிவந்தியம் ஒன்றியம், சாத்தனூர் அணையில் இருந்து இடதுபுறக் கால்வாயின் மூலம் வரும் தண்ணீர் சிர்ப்பணந்தல் ஏரிக்கு வருவதற்கு ஏதுவாக புதிய வரத்து வாய்க்கால் கட்டுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.221,13,68,000-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 583, திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.



**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் மாவட்டம், நங்காஞ்சி ஆற்றின் குறுக்கே Check Dam கட்டி பாசன வசதிகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.221,13,68,000-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

### (ஆ) கோரிக்கை எண் 36-பொதுப் பணிகள் - கட்டடங்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 36-பொதுப் பணிகள் - கட்டடங்கள், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பொதுப் பணிகள் - கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.87,41,79,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."
எனக் கோருகிறேன்.

முற்பகல் 11-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1926, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தையொட்டி சுற்றுலா மாளிகை கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப்பணிகள் - கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,41,79,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4161, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள் - கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,41,79,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1658, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள் - கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,41,79,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3574, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள் - கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,41,79,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2625, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள் - கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,41,79,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3520, திரு. ஏ.வி.ஏ. நாசர்.



**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட பிண்ணனூர் அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் மற்றும் புவனகிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளிக் கட்டடம் ஆகியவை நல்ல தரமுள்ளதாக இருக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள் - கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,41,79,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3026, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் சுவாமிமலை அரசு மேல்நிலைப் பள்ளியில் பொதுப் பணித் துறை மூலம் கட்டடம் கட்டுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள் - கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,41,79,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3080, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, "To discuss the need to construct required number of buildings to all the schools in the State"- I move—

"that the sum of Rs.87,41,79,000 allocated under Demand No.36-Public works-Buildings be reduced by Rs.100/-."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 181, திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, செங்கோட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஓடுகள் வேயப்பட்டிருக்கும்

கட்டடத்திற்கு பதில் கான்கிரீட்கூரை கட்டடமாகக் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள் - கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,41,79,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3725, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள் - கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,41,79,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2813, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள் - கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,41,79,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2470, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பணகுடியில் செயல்பட்டு வரும் கால்நடை மருத்துவமனைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட ...ண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் ...னத்தை மொழிகிறேன்:



"பொதுப் பணிகள் - கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,41,79,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1999, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாநகராட்சிக்குள் செல்லும் சங்கனூர் பள்ளத்தின் கரைகள் அடிக்கடி இடிந்து விடுவதால் அக்கரைகளை வலுப்படுத்த இருமருங்கிலும் சுவர் (revetment) கட்டப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள் - கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,41,79,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3556, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பாபநாசம் மணிமுத்தாறு அணை இணைப்புக்கு tunnel அமைப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள் - கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,41,79,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3339, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1888, திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி தொகுதி, காரைக்குளம், ஆலடிபூதூர்க் குளம் ஆகிய இரண்டு குளங்களையும் தூர் வாருவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. எஸ்.வி. கிருஷ்ணன்] [2000 ஏப்ரல் 29

"பொதுப் பணிகள் - கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,41,79,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4115, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொதுப் பணித் துறை மூலம் கட்டப்படும் கட்டடங்களை நல்ல முறையில் பராமரிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்—கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,41,79,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**(இ) மானியக் கோரிக்கை எண் 54—பாசனம் குறித்த மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 54-பாசனம் குறித்த மூலதனச் செலவு, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.466,21,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2890, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் உள்ள ஏரிகளைத் தூர் வாரிக் கரைகளைப் பலப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,21,18,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."



2000 ஏப்ரல் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3153, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,21,18,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3669, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,21,18,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2694, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,21,18,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1297, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.466,21,18,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3537, திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காட்டுமன்னார் கோவில் வட்டம், லால்பேட்டையில் உள்ள கிண்டிவடி வாய்க்காலினைத் தூர் வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,21,18,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3682, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பாபநாசம் தொகுதியில் உள்ள பெரிய குளங்களைத் தூர் எடுத்து அவற்றில் மழைத் தண்ணீரைத் தேக்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,21,18,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 192, திரு. கே. ரவி. அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், தென்காசி நகராட்சிப் பகுதியில் உள்ள சிற்றார் கால்வாய்களை மராமத்துச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,21,18,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2795, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,21,18,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5089, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,21,18,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

### (ச) கோரிக்கை எண் 55—பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 55—பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.129,31,94,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2889, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள (P.W.D. quarters) கட்டடங்கள் மிகவும் பழையனவாக உள்ளதை அகற்றிவிட்டு நவீன புதுக் குடியிருப்புகளைக் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.129,31,94,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3152, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.129,31,94,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3667, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள் - கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.129,31,94,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2698, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள் - கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.129,31,94,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3536, திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதியில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிக் கட்டடங்கள் பராமரிப்புச் செய்யப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

223314



"பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.129,31,94,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3782, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் சட்டமன்றத் தொகுதி, காவிரி ஆற்றின் குறுக்கே ஒரு bed dam அமைத்து வளையப்பேட்டை, மாங்குடி ஆகிய ஊர்களுக்குப் பாசன வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள் - கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.129,31,94,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 207, திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், தென்காசி அரசு தலைமை மருத்துவ மனையில் கூடுதல் கட்டட வசதிகள் செய்து கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள் - கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.129,31,94,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2794, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.129,31,94,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5088, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள் - கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.129,31,94,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-45

### (உ) கோரிக்கை எண் 44—காட்டுவளத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 44—காட்டுவளத் துறை, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.103,04,71,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1910, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம் காவலூர், ரெட்டியூர், நாயக்கனூர், மந்தாரக்குட்டை பகுதி கிராமங்களில் காட்டு யானைகள் ஊருக்குள் நுழைந்து பயிர்களைச் சேதப்படுத்துவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.103,04,71,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4167, திரு. நா. பெரியசாமி.



**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.103,04,71,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2875, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.103,04,71,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3564, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.103,04,71,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2655, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.103,04,71,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1272, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.103,04,71,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3717, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டத்தில் ஆற்றின் கரை ஓரங்களில் மரக்கன்றுகள் நட்டு மண் வளத்தைக் காக்க வேண்டியதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.103,04,71,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3140, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.103,04,71,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3077, திரு. பி. வெங்கடசாமி.

**Thiru B. Venkatasamy:** Hon. Speaker Sir, "to discuss the need to plant tamarind, sandal wood and Teak trees in the Forests of Tamil Nadu" I move—

"that the sum of Rs.103,04,71,000 allocated under Demand No. 44-Forest Department be reduced by Rs.100/-."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 185, திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



"திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் பகுதியில் வன வளத்தைப் பெருக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.103,04,71,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2809, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.103,04,71,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2428, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கோட்டை கருங்குளம், கஸ்தூரி ரெங்காபுரம் ஆகிய ஊராட்சி மன்றப் பகுதிகளில் சமூக நலக் காடுகள் மூலம் வளர்க்கப்பட்டு வரும் கருவேல மரங்கள் மூலம் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதி ஊராட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.103,04,71,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1986, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறையில் உள்ள புல் மலைகளுக்குச் செல்வதற்கு நிரந்தரமான தார்ச் சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. வி.கே. லட்சுமணன்] [2000 ஏப்ரல் 29

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.103,04,71,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5080, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.103,04,71,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4121, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சமூகக் காடுகள் வளர்ப்புத் துறையின் மூலம் தனியார் காடு வளர்ப்பதற்கு அதிக ஊக்கத் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.103,04,71,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3612, திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**Thiru J. HEMACHANDRAN:** Hon. Speaker Sir,

"to discuss the need to take steps for functioning and development of the Arasu Rubber Corporation with headquarters at Nagercoil" I Move—

"that the sum of Rs.103,04,71,000 allocated under Demand No. 44-Forest Department be reduced by Rs.100/-."



2000 ஏப்ரல் 29]

**(ஊ) கோரிக்கை எண் 58—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 58 - காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு. மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.108,45,13,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2885, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், காவலூரில் வன விலங்குகளுக்குச் சரணாலயம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,45,13,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3151, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,45,13,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3665, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளம் குறித்த முலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிகையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,45,13,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

[2000 ஏப்ரல் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2704, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,45,13,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3540, திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,45,13,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 205, திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டத்தில் யானைகள் கொல்லப்படுவதைத் தடுக்க தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,45,13,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2793, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



2000 ஏப்ரல் 29] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

"காட்டுவளம் குறித்த முலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,45,13,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5041, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,45,13,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாசனம், பொதுப் பணிகள், கட்டடங்கள், பாசனம் குறித்த மூலதனச் செலவு, பொதுப் பணிகள் கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு, காட்டுவளத் துறை மற்றும் காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு ஆகியவை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில், தமிழிலுள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏராளமான உறுப்பினர்கள் இந்த முக்கியமான துறையின் விவாதத்திலே பங்கெடுத்துக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துகின்றார்கள். ஆளும் கட்சி சார்பிலேயும் 30 பேர் என்னிடம் வந்து கேட்டிருக்கின்றார்கள். ஆனால், குறைந்த அளவிலேதான் கொடுக்க முடியும். ஆகவே, பேசுகின்ற உறுப்பினர்கள்

@ 213 முதல் 455 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

யாருமே 10 நிமிடத்திற்குமேல் பேசக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த அளவில் பேச்சை அமைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்று பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது அன்பான வேண்டுகோளை வைத்து, திரு. ஓ.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் விவாதத்தைத் தொடங்குவார் என்று அறிவிக்கின்றேன்.

***திரு. ஓ.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில தினங்களுக்கு முன்னாலே, எங்கள் பகுதியிலே முல்லைப் பெரியாறு அணையைப்பற்றிப் பேச வந்தபொழுது, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் முல்லைப் பெரியாறு பாசனத்தின் முதல் மரியாதைக்காரர்கள் கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் என்ற ஒரு கூற்றினைத் தெரிவித்தார்கள். அந்த விவசாயிகளுடைய பிரதிநிதியாக, தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் போன்ற ஐந்து மாவட்டங்களிலே முல்லைப் பெரியாறு பாசனத்தை நம்பி இருக்கின்ற 65 இலட்சம் விவசாயிகளுடைய ஏக்கப் பெருமூச்சினை வெளிக்காட்டும் விதமாக இங்கே பேச விழைகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

*முற்பகல் 11-50*

முல்லைப் பெரியாறு அணையானது 1889-லே பென்னிகுயிக் என்ற மனிதநேயம் மிக்க ஆங்கிலப் பொறியாளரின் மூளையிலே உதித்து, அடிக்கடி வறட்சியால் பாதிக்கப்பட்ட அன்றைய மதுரை, இராமநாதபுரம் பகுதிகளை வளமைப்படுத்துவதற்காகக் கொண்டுவந்து செயல்படுத்தப்பட்ட திட்டம். அந்தத் திட்டத்தின்கீழே அணை கட்டப்பட்டு 1979 ஆம் ஆண்டு வரை 152 அடி தண்ணீரை அந்த அணையிலே தேக்குகின்ற உரிமையைப் பெற்று இருந்தோம் நாம். மத்திய நீர்வளக் கமிஷனிடம் கேரள அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க அணையின் பலம் போதாது; அணையிலே கசிவு ஏற்படுகின்றது; எனவே, அணை உடைகின்ற அபாயம் இருக்கிறது; எனவே, நீர் நிறுத்துவதை 152 அடியிலிருந்து 136 அடியாகக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க, மத்திய நீர் வளக் கமிஷனுடைய பரிந்துரையின் பேரில் தமிழக அரசு 1979-லே 136 அடியாகக் குறைத்தது.

இப்பொழுது காவிரிக்கும், பெரியாறுக்கும் உள்ள பிரச்சினையினுடைய தன்மையை நாம் இந்த நேரத்திலே உற்றுநோக்குவது நன்றாக இருக்கும் என்று எண்ணுகிறேன். காவிரியைப் பொறுத்த அளவிலே நமக்கு நீர்ப் பிரச்சினை. ஆனால் பெரியாறைப் பொறுத்த அளவிலே நமக்கு அணை



பிரச்சினை; நீர்ப் பிரச்சினை இல்லை. ஏனென்றால், பெரியாற்றிலே இருந்து கிடைக்கின்ற ஒவ்வொரு சொட்டு நீரும் தமிழகத்திற்குத்தான் பயன்படுகிறது. அதில் ஒரு சொட்டு நீர்கூட கேரளத்துக்காரர்கள், கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் விவசாயத்திற்குப் பயன்படுத்த முடியாது என்பதுதான் இன்றைய உண்மையான நிலை. ஆக, அந்த அணையைப் பலப்படுத்த 1979-லே ஒத்துக்கொண்டு நாம் கடந்த 21 ஆண்டுகளாக பல கோடி ரூபாயைச் செலவழித்து அணையைப் பலப்படுத்தி இருக்கின்றோம். ஆனால் அதை கேரள அரசு ஒத்துக்கொள்ள மறுக்கிறது. அணையை நீங்கள் பலப்படுத்தியது போதாது; எங்களுக்கு திருப்தி இல்லை; மீண்டும் அணை உடைகின்ற அபாயம் இருக்கின்றது. பெரியாறு அணை உடையுமேயானால், அது இடுக்கி அணையைப் பாதிக்கும்; இடுக்கி அணையும் சேர்ந்து உடையுமேயானால், கேரளத்திலே 3 மாவட்டங்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்ற வகையிலே இந்த விபரீதம் நடக்கும் என்று சொல்லி நீர் மட்டத்தை உயர்த்துவதைத் தடுத்து இருக்கிறார்கள்; நிறுத்தி வைத்து இருக்கின்றார்கள். இது எந்த விதத்திலே நியாயம் என்று நமக்குத் தெரியவில்லை. நாமோ செலவழித்து இருக்கின்றோம்; நாமோ அவர்கள் சொன்ன முறைப்படி அணையைக் கட்டி இருக்கின்றோம். அவர்கள் ஒப்பந்தக்காரர்களுக்குக் கொடுத்த தொல்லையோ, மிக அதிகம். அத்தனையையும் மீறி கடந்த 21 ஆண்டு காலமாக இந்த அணை பலப்படுத்தப்பட்டு இருக்கிறது. அதையும் மீறி அவர்கள் தண்ணீர் தர மறுப்பது ஏதோ உள்நோக்கம் உடைய அரசியல் விளையாட்டு என்றுதான் இந்த நேரத்திலே நாம் அதை எடுத்துக்கொள்ளவேண்டும்.

இந்த நேரத்திலே கேரள முதல்வர் மாண்புமிகு நாயனார் அவர்கள் தெரிவித்த ஒரு கருத்தை இங்கே கூறுவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கின்றேன். அவர், 'பேச்சுவார்த்தை ஒன்றும் முறியவில்லை; பேசுவதற்கு இன்னும் வாய்ப்பு இருக்கின்றது' என்ற தொனியிலே பேசி இருக்கின்றார். அப்படித்தான் கேரள பத்திரிகைகளிலே வெளி வந்து இருப்பதாக நமது கேரள நண்பர்கள் சொல்கிறார்கள். அவர்கள் சொல்கின்ற கருத்து, பேச்சுவார்த்தையை நாங்கள் முறித்துக்கொள்ளவில்லை; பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லி இருக்கும்பட்சத்தில், மத்திய அரசிலே செல்வாக்கு உடைய நம்முடைய முதல்வர் ஏன் பிரதமரை நடுவராக வைத்து, பிரதமர் முன்னிலையிலே இரண்டு முதல்வர்களும் மீண்டும் ஒரு பேச்சுவார்த்தை நடத்தி இருக்கலாமோ; அதன் மூலமாக நமக்கு ஏதாவது பலன் கிடைத்திருக்குமோ என்ற ஓர் ஆதங்கம் இந்த 5 மாவட்டங்களைச்

சேர்ந்த விவசாயிகள் மத்தியிலே இருப்பதுதான் உண்மை. சரி, அதுதான் நடக்கவில்லை; போய்விட்டது; நாம் உச்சநீதிமன்றத்திற்கு பிரச்சினையை எடுத்துச் சென்றுவிட்டோம். ஆனால், உச்ச நீதிமன்றத்திலே இருக்கின்ற பிரச்சினைகுறித்து விரைவில்—நீங்கள் காவிரிக்குக் கொடுத்த முக்கியத்துவத்தைப் பெரியாறுக்கும் கொடுத்து, அதே வேகத்தோடு, அதே விறுவிறுப்போடு, இந்த முல்லைப் பெரியாறு பிரச்சினையையும்—அணுகி அதற்கு ஒரு நல்ல தீர்வு காண வேண்டும் என்று இந்த 5 மாவட்டங்களிலே பாதிக்கப்பட்டு இருக்கின்ற விவசாயிகள் சார்பாக தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, எங்கள் பகுதியிலே சண்முகா நதித் திட்டம் என்ற ஒரு திட்டம் இருக்கிறது. இது கடந்த 15 ஆண்டுகளாக நடந்து கொண்டே இருக்கின்றது; இன்னும் முடிந்தபாடில்லை. கம்பம் பள்ளத்தாக்கு என்றால், அந்தப் பள்ளத்தாக்குதான் பாசன வசதி பெறுகின்றது; அவை நஞ்சை நிலங்கள். கம்பத்துக்கு கிழக்கே இருக்கின்ற மேட்டுப் பகுதியும், கம்பம் பள்ளத்தாக்குக்கு மேற்கே இருக்கின்ற மேட்டுப் பகுதியும் புஞ்சை நிலங்களால் ஆனவை. இந்தக் கிழக்குப் பகுதியை வளப்படுத்துவதற்காகப் போடப்பட்ட திட்டம்தான் சண்முகா நதித் திட்டம். கடந்த 10, 15 ஆண்டுகளாக அந்தத் திட்டம் இன்னும் முடிக்கப்படாமல் இருக்கின்றது; அதை எதிர்நோக்கி கம்பம் தொகுதி மட்டுமல்லாமல், கம்பம், தேனி, ஏன் ஆண்டிப்பட்டி தொகுதியைச் சேர்ந்தவர்கள்கூட ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கின்ற ஒரு நிலை இன்னும் நிலவிக் கொண்டிருக்கிறது. அதற்குரிய நிதியை பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்து, அந்தத் திட்டத்தினை விரைவிலே முடிக்க ஆவன செய்ய வேண்டுமென்று இந்தச் சூழ்நிலையிலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-55*

நமது முதல்வர் அவர்கள் 18 ஆம் கால்வாய்த் திட்டத்தை கம்பம் தொகுதியிலே கோம்பைப்பேரூரிலே தொடங்கி வைத்தார்கள். இந்த 18 ஆம் கால்வாய்த் திட்டம் என்பது பெரியாறு அணையிலே பென்னிக் குவிக் அவர்கள் மற்றும் அதற்குப் பின்னால் வந்தவர்கள் 17 கால்வாய்களை ஏற்படுத்திவிட்டு, கம்பம் பள்ளத்தாக்கினுடைய மேற்குப் பகுதியை விட்டு விட்டார்கள்—மேட்டுப் பகுதியான மேற்குப்



பகுதியிலுள்ள பூஞ்சை நிலங்கள் பயனடைகிற வகையிலே அமைக்கப்பட்ட ஒரு திட்டம்தான் இந்த 18 ஆம் கால்வாய்த் திட்டம்.

கடந்த 100 ஆண்டு காலமாக இந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல் கிடப்பிலே இருந்தது. கடந்த ஆண்டு நமது முதல்வர் அவர்கள் அந்தத் திட்டத்திற்கான பணியைத் தொடங்கி வைத்தார்கள். அதற்கான முழு முயற்சி எடுத்தவர்கள் நமது சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள். அந்தப் பகுதி விவசாயிகள் சார்பாக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், நமது சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனாலும்கூட, இந்தத் திட்டத்தினை நிறைவேற்றுவதில் சுணக்கம் இருப்பதாக நான் அறிகிறேன். அலுவலகத்திற்கான இடம் தேர்வு செய்யப்படவில்லை. அலுவலகத்தினை பாளையத்திலே அமைப்பதா, கம்பத்திலே அமைப்பதா என்று முடிவெடுப்பதில் சுணக்கம் இருப்பதாகத் தெரியவருகிறது. நிலத்தைக் கையகப்படுத்துவதில் சில இடர்பாடுகள் இருப்பதாகத் தெரியவருகிறது. இவற்றிற்கெல்லாம் முன்னுரிமை கொடுத்து, சீக்கிரமாக இந்தத் திட்டத்தினை நிறைவேற்றி அந்தப் பகுதி மக்களுடைய, அதுவும் குறிப்பாக, நஞ்சையை விட்டு புஞ்சையை மட்டும் நம்பியிருக்கிற மக்களுடைய வயிற்றிலே பால் வார்க்கும் வண்ணம் விரைவிலே இந்தத் திட்டத்தினை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தினுடைய கால்வாய்கள் 27 கிலோ மீட்டர் கம்பம் தொகுதியிலே பயணப்பட்டு, அதற்குப் பிறகு போடி தொகுதிக்குச் செல்கிறது. போடி தொகுதிக்கும், கம்பம் தொகுதிக்கும் இடைப்பட்ட இடத்திலே தேனி தொகுதி வருகிறது. தேனி தொகுதியில் புலிக்குத்தி என்ற ஊர் இருக்கிறது. அந்தப் பகுதியில் ஒரு பெரிய கண்மாய் இருக்கிறது. அந்தக் கண்மாய்க்கும் இந்த நீர் சேர வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் நீண்ட நாட்களாகக் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். எனவே, 18 ஆம் கால்வாயை வெட்டி, அதனுடைய பணியை நிறைவேற்றி, அதனுடைய கடைமடைப் பகுதியிலே ஒரு துணைக் கால்வாயை அமைத்து, அதன் மூலம் தேனி தொகுதியில் உள்ள புலிக்குத்தி ஊருக்கும் நீர் சென்றடையும் வண்ணம் செய்யப்படுமானால், ஏறத்தாழ கம்பம் பள்ளத்தாக்குப் பகுதிகள், முற்றிலுமாகப் பாசனம் பெற்று முழுமை அடையும் என்பதை இந்த நேரத்திலே அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்து, குளங்கள் சீரமைப்பு. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் கடிதத்தின் வாயிலாக (மணியடிக்கப்பெற்றது) 'ஒவ்வொரு ஆண்டும் நீங்கள் சொல்கின்ற ஒரு குளத்தைச் சீரமைத்துத் தருவோம்' என்று சொன்னார்கள். கடந்த 3 ஆண்டுகளாக நான் என் தொகுதியிலே இருக்கிற 3 குளங்களைச் சீரமைத்துத்தர வேண்டுமென்று பரிந்துரை செய்தும்கூட, இதுவரை ஒரு குளம்கூட சீரமைக்கப்படவில்லை. ஆகவே, அவற்றைச் சீரமைத்துத்தர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்லணை, பம்பன் அச்சன்கோவில், பாண்டியாறு—புன்னம்புழா, மேட்டூர் வலது இடது கரை போன்ற பணிகளை சீக்கிரம் துரிதப்படுத்தி அறந்தாங்கி, விருதுநகர், திருநெல்வேலி, அவினாசி, ஈரோடு, நாமக்கல், சேலம் போன்ற மாவட்டங்களினுடைய வறட்சிப் பகுதிகளை வளப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதற்கான பணிகளைத் துரிதப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப் பணித் துறையிலே பாசன உதவியாளர்கள்தான் அதாவது Irrigation Assistants பாசனப் பணிகளினுடைய முதுகெலும்பாகக் கருதப்படுகின்றார்கள். ஏனென்றால், பாசன நேரத்திலே வாய்க்கால் நீரை ஒழுங்குபடுத்துவது, வெள்ளம், புயல் போன்ற காலங்களில் வாய்க்கால்கள் உடைந்து போகாமல் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுப்பது, தண்ணீர் திருடப்பட்டால் அதைத் தடுப்பது போன்ற முக்கியமான பணிகளைச் செய்து வருகிறார்கள் இந்தப் பாசனப் பணியாளர்கள். 1997-98-லே இந்தப் பாசனப் பணியாளர்கள் இடம் 1,089 காலியிருப்பதாக இந்த அவையிலே நமது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். Regular Mazdoor-ஆகப் பணி செய்கின்றவர்களை, பதவி உயர்வு செய்து நிரப்ப இருப்பதாக 1997-98 மானியக் கோரிக்கையிலே சொன்னார்கள். ஆனால் நிரப்பவில்லை. அதற்கு மாறாக, 1998-99 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை குறித்த விவாதத்திலே பேசும்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் "தலைமைப் பொறியாளர் (பொது)—C.E. (General)—ஒரு கடிதம் எழுதியிருக்கின்றார், அந்தக் கடிதத்திலே Regular Mazdoor-ஆகப் பணியாற்றுகின்ற பணியாளர்களை Irrigation Assistants-ஆக, அதாவது பாசன உதவியாளர்களாக நியமிப்பதற்குண்டான தகுதி அவர்களுக்கு இல்லை. எனவே, வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து 500 பாசன உதவியாளர்கள்



பதவிக்குத் தகுதியானவர்களைக் கேட்டுப்பெற்று பணியில் அமர்த்தலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, அதைப் பின்பற்றி 4-6-1998-லே வெளியிடப்பட்ட ஜி.ஓ.177 பேரிலே Employment Exchange-லிருந்து வாங்கி நியமிக்கிறோம்" என்று சொன்னார்கள் நமது பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் 1998-99-லே. ஆனால், அப்படி Employment Exchange-லிருந்து வாங்கியும் பணியில் நியமிக்கவில்லை.

நண்பகல் 12-00

1999-2000-லே மானியக் கோரிக்கையிலே பேசும்போது, நமது பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் நாங்கள் தினக் கூலி அடிப்படையிலேதான் இந்த 500 பணியிடங்களை நிரப்பப் போகிறோம் என்று சொன்னார்கள். 1998-99-லே Employment Exchange-லிருந்து வாங்கி நிரப்பப் போகிறோம் என்று சொன்ன நமது பொதுப் பணித் துறை அமைச்சர் அந்த நிலையை 1999-2000-ல் மாற்றிக்கொள்ள வேண்டிய சூழ்நிலை என்ன? 1997-98-ல் 1,089 பணியிடங்கள் காலியாக இருந்தன. இது 2000-வது ஆண்டு. அது மேலும் கூடியிருக்கும். ஆக இன்று 1,500 பணியிடங்களாவது காலியாக இருக்கும். இது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 4-5-1999-லே ஒரு கடிதம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எழுதியிருக்கிறார்கள். மீண்டும் நினைவூட்டுக் கடிதம் 29-6-1999-லே எழுதியிருக்கிறார்கள். இதுகுறித்து எந்தப் பதிலும் வரவில்லை.

1967-லே களப் பணியாளர்கள் மொத்தம் 18,000 பேர். அவர்களை மேற்பார்வை செய்த தலைமைப் பொறியாளர் 2 பேர். ஆனால், இன்றைக்குத் தலைமைப் பொறியாளர்கள் 12 பேர், களப் பணியாளர்கள் 7,000 பேர். வீரர்கள் குறைவாகவும், தளபதிகள் அதிகமாகவும் ஆகிவிட்ட நிலையைத்தான் இன்று காணுகிறோம். களப் பணியாளர்கள் இல்லாமல் எப்படி பொதுப் பணி நிறைவேறும் என்பதை முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். (மணியடிக்கப்பெற்றது) பேசி முடித்து விடுகிறேன். ரொம்ப முக்கியமான விஷயம். இதற்கெல்லாம் காரணம் N.M.R. என்கிற ஒரு முறை, அது ஏன் இன்னும் இருக்கிறது என்று தெரியவில்லை. டி-4-ல் ஃபாரம் 59, அதாவது துறை விதி பத்தி 59 என்று ஒன்று இருந்தது, அதன்படி இந்தப் பொறியாளர்கள் தனக்கு வேண்டியவர்களைக் கல்வித் தகுதியில்லாமல், வயது வரம்பு இல்லாமல், Technical Qualification இல்லாமல் நியமித்துக்கொள்ளலாம் என்ற விதி இருந்தது. நமது முதல்வர் அவர்கள்தான், இது ஜனநாயகத்திற்கு

[திரு. ஓ.ஆர். இராமச்சந்திரன்] [2000 ஏப்ரல் 29

விரோதமானது என்று 30-5-1973-லே இரத்து பண்ணியிருக்கிறார்கள். ஆனால், அது மறைமுகமாக, பின்புறமாக, பின்கதவு வழியாக N.M.R. என்கிற முறையிலே வந்து எப்படி 1973-லே சென்னை மாநகராட்சியிலே muster roll என்கிற பெரிய ஊழல் நடந்ததோ, அதையும் மிஞ்சும் வண்ணமாக நடந்து கொண்டிருக்கிறது. இதை முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். தயவுசெய்து நீங்கள் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணைக் கமிஷன் ஒன்றை ஏற்படுத்துவீர்களேயானால், நாங்கள் சொல்கின்ற இந்தக் குற்றச்சாட்டை நிரூபிக்கத் தயார். ஏன் சொல்கிறேன் என்றால், நமது முதல்வர் அவர்கள்தான் ஓய்வு பெற்ற நீதியரசர் இராமானுஜம் தலைமையிலே நிர்வாகச் சீரமைப்பு மற்றும் ஊழல் தடுப்பு பற்றிய அறிக்கை தயார் பண்ணச் சொல்லி, ஒரு கமிட்டி போட்டார்கள். அவர்கள் அந்த அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையிலே, முதல் அறிக்கையிலே, அவர் முதலாவதாக எடுத்துக்கொண்ட துறையே பொதுப் பணித் துறைதான். அதில் ஊழல் இருக்கிறது என்று விலாவாரியாகச் சொல்லியிருக்கிறார்கள். நேரம் இன்மையின் காரணமாக, இவற்றையெல்லாம் வாசிக்க இயலவில்லை. அவர் சொன்ன பரிந்துரைகளைக்கூட ஏற்று நடக்கவில்லை. அதுதான் இன்று இருக்கிற மிகப் பெரிய சோகம். ஊழல் தடுப்புக்கு நாம் கமிஷன்களைப் போட்டிருக்கிறோம். அதிலே அவர் சொன்ன பரிந்துரைகளைக் கேட்டு நடக்கவில்லை இந்த அதிகாரிகள் என்பதுதான் இங்கே நடந்திருக்கிற பெரிய சோகம். மக்களுடைய வரிப்பணம் சுரண்டப்பட்டிருக்கிறது. அது அரசின் கவனத்திற்கு வராமலேயே சுரண்டப்படுகிறது என்பதற்கு ஓர் உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த N.M.R. என்கிற முறையை எப்படிப் பண்ண வேண்டுமென்று பல அறிவுறுத்தல்கள் அரசிடமிருந்து வந்திருக்கின்றன; Chief Engineer-ரிடமிருந்து வந்திருக்கின்றன; P&AR துறையிடமிருந்து வந்திருக்கின்றன; இராமானுஜம் கமிட்டியிலும் சொல்லியிருக்கிறார்கள். இத்தனையையும் தூக்கி எறிந்துவிட்டு, அவர்கள் இஷ்டத்திற்கு போடுவதற்குக் காரணம் வேலை செய்யாதவர்களை வேலை செய்தவர்களாகப் போடுகிறார்கள். P&AR-துறையில் என்ன சொல்கிறார்கள் என்றால், ration card-ல் இருக்கிற விலாசம்தான் அந்த ரோலில் குறிப்பிடப்பட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால், நூற்றுக்கு 80 சதவிகிதம் ration card-ல் இருக்கும் விலாசம் muster roll-ல் இருப்பதில்லை. இதை நிரூபிக்கத் தயார். இவர்களே மாற்றி மாற்றிக் கையெழுத்து போட்டுக்கொண்டு



2000 ஏப்ரல் 29] [திரு. ஓ.ஆர். இராமச்சந்திரன்]

(மணியடிக்கப்பெற்றது) இதைக் குறிப்பிட ஒரு நிமிடம் அனுமதி கொடுங்கள். நமது சென்னையிலே மெரினா டிவிஷன் Chepauk Section என்பது தலைமைப் பொறியாளர் அலுவலகத்திற்கு நேர் கீழ் இருக்கிறது. அங்கே ஒரு நாளைக்கு இந்த N.M.R-களை வைத்து அவசரப் பணி நிமித்தம் என்ற வகையில் 90 நாட்களுக்குத்தான் போட வேண்டும். அது அரசு விதி. புயல் நேரத்தில், வறட்சிக் காலத்தில், வெள்ளக் காலங்களில்தான் போட வேண்டும். அதையும் மீறி, ஆண்டு முழுவதும் போட்டிருக்கிறார்கள். 1-5-1999-லிருந்து 31-5-1999 வரைக்கும் 27 N.M.R. தினக் கூலி பணியாளர்கள் வேலை செய்ததாக நம் Chepauk Division-லே கணக்கு எழுதி muster roll தயாரித்திருக்கிறார்கள். தயாரித்து ரூ. 61,000 பட்டுவாடா பண்ணப்பட்டிருக்கிறது. 61,000 ரூபாய் பட்டுவாடா பண்ணப்பட்டிருந்தால் 2½% அதற்கு allowed. அப்போது குறைந்தது 15 இலட்ச ரூபாய், 20 இலட்ச ரூபாய்க்கு பணி Chepauk Section-லே மட்டும் நடந்திருக்க வேண்டும். அப்படி என்ன பணி நடந்தது? தெரியவில்லை.

பிற்பகல் 12-05

மே மாதம் 1 ஆம் தேதி உழைப்பாளர் தினம்; அன்றைக்கு நம்முடைய அரசு விடுமுறை அளித்திருக்கிறது. அன்றைக்குப் பணியில் இருந்து வேலை பார்த்ததாகச் சம்பளம் வாங்கியிருக்கிறார்கள். பேரவைத் தலைவரிடம் கொண்டுபோய்க் கொடுத்தேன். இன்றைக்கு, நேரம் இல்லாததால், சபையில் சொல்ல வேண்டும் என்பதற்காக இங்கே சொல்லவேண்டிய சூழ்நிலை உருவாகிவிட்டது. அதையும் நாங்கள் நிரூபிக்கத் தயார். மிகப் பெரிய ஊழல். எப்படி muster roll ஊழல் சென்னை மாநகராட்சியிலே நடந்ததோ, எப்படி அதை வெளிக்கொண்டுவர-Political will-எந்த அரசியல் தெம்போடு நீங்கள் நடவடிக்கை எடுத்தீர்களோ, அதே தெம்போடு இந்த N.M.R. ஊழலையும் வெளிக்கொணர முதல்வர் அவர்கள் உறுதி அளித்து, 'விசாரணை கமிஷனை அமைப்பேன்' என்ற உறுதிமொழியை இந்த அவையில் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எல். மூக்கையா.

**திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை மற்றும் வனத் துறை மானியக்

கோரிக்கையில் பேசுவதற்கு அனுமதி அளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு பொதுப் பணித் துறைமீது ஒருசில கருத்துகளையும், ஒருசில கோரிக்கைகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றையதினம், இந்த நாட்டினுடைய முதுகெலும்பாக விளங்கக் கூடியவன் விவசாயி. அந்த விவசாயி உழைத்து உணவை உற்பத்தி செய்து இந்த நாட்டு மக்களை வாழவைக்கிறான். இந்த நாட்டு மக்களை வாழ வைக்கக்கூடிய விவசாயியை வாழவைக்கின்ற, பாதுகாக்கின்ற ஒரு துறையாக விளங்குகின்ற துறைகள்தான் வேளாண்மைத் துறையும், பொதுப் பணித் துறையும். அந்தப் பொதுப் பணித் துறை கடந்த கால ஆட்சியில் இலஞ்ச ஊழலால் புரையோடிப் போய், முடமாகிப் போனதை யாரும் மறுத்துவிட முடியாது. அந்தத் துறைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கணிசமான நிதியை ஒதுக்கி, இலஞ்ச ஊழலையெல்லாம் ஒழித்து, கடந்த கால ஆட்சியிலே கிடப்பில் போடப்பட்ட திட்டங்களையெல்லாம் எடுத்து, இன்று அந்தப் பணிகள் எல்லாம் வேக வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஓ.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் "15 ஆண்டு காலமாக சண்முகா நதி அணைத் திட்டத்தைக் கட்டிக் கொண்டே இருக்கிறார்கள்" என்று சொன்னார்கள். அதற்கு எல்லாம் யார் காரணம் என்பதை அவர்களே நன்றாக அறிவார்கள். அப்படிப்பட்ட திட்டங்களை 10, 15 ஆண்டு காலமாக கிடப்பிலே போட்ட அல்லது தொய்வாகச் செயல்பட்டுக்கொண்டிருந்த அந்தத் திட்டங்களுக்கு எல்லாம் இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, நிதியினை ஒதுக்கி, அந்தத் திட்டப் பணிகள் வேக வேகமாக நடந்துகொண்டிருக்கின்றன என்பதை விவசாயிகள் நன்கு உணர்வார்கள். இந்த நாட்டு மக்கள் நன்கு உணர்வார்கள்.

பிற்பகல் 12-10

பெரியகுளத்திற்கு மேற்கேகூட வராக நதியின் குறுக்கே 1983 ஆம் ஆண்டு சோத்துப்பாறை என்கிற அணைக்கட்டுக்கான கட்டுமானப் பணி தொடங்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.ஆர். இராமச்சந்திரன் குறிப்பிட்டதைப்போல, 17 ஆண்டு காலமாக அந்த அணையைக் கட்டிக் கொண்டே இருக்கிறார்கள். அந்த அணைக்கட்டின்



கட்டுமானப் பணி, கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் பல நேரங்களில் முடக்கப்பட்டுக் கிடந்தது; தொய்வாக இருந்தது. அதற்கு என்ன காரணம் என்றால் அங்கே இருக்கின்ற ஒப்பந்தக்காரர்களுக்கும், அமைச்சர்களுக்கும் இடையே நடந்த commission பேரத்தில், அந்த பேரம் முடிவடையாத காரணத்தால் பல நேரங்களில் அந்தப் பணி சோத்துப்பாறை அணைப்பணிகூடச் சுணங்கிப் போனது; முடங்கிக் கிடந்தது. இன்று அந்த அணைக்கட்டுக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 31 கோடி ரூபாய் ஒரே தடவையில் ஒதுக்கி, 17 ஆண்டு காலமாக—கடந்த கால ஆட்சியில் கட்டப்பட்டு, மூன்றில் ஒரு பங்கு—முடங்கிக் கிடந்த பணியைச் செயல்படச் செய்தார். கடந்த ஆட்சிக் காலத்தில் அணை கட்டப்படுகின்றபோது, அந்தத் துறையினுடைய அமைச்சர்கூட அந்த அணைக்கட்டுப் பணியைப் பார்வையிட வரவில்லை. ஆனால், நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் 1989 ஆம் ஆண்டு நமது கழக ஆட்சி இருந்தபோது, அந்த அணைக்கட்டை வந்து பார்த்தார்கள். அதிகாரிகளை அழைத்து அதன் பணியை துரிதப்படுத்தினார்கள். ஆனால், அ.தி.மு.க. ஆட்சியில் எந்த அமைச்சரும் வந்து பார்க்கவில்லை. அப்படிக் கிடப்பில் போடப்பட்ட அணைத் திட்டத்திற்கு இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 31 கோடி ரூபாயை ஒரே நேரத்தில் ஒதுக்கி, கட்டுமானப் பணிகள் வேகவேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இன்னும் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். கடந்த காலத்தில் ஒரு துறையினுடைய அமைச்சர்கூட வந்து பார்க்காத இந்த சோத்துப்பாறை அணைத் திட்டத்தை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே பார்வையிட்டு, இன்று வேகவேகமாக வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 17 ஆண்டு காலமாக நடந்த கட்டுமானப் பணி மூன்றில் ஒரு பங்குதான். ஆனால், இப்போது 3 ஆண்டுகளில், மூன்றில் இரண்டு பங்கு கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு, இன்னும் ஓராண்டு காலத்தில் அந்த அணை திறக்கப்படும் என்கிற ஒரு நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த அளவிற்கு சோத்துப்பாறை அணைக்கட்டின் கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வாய்க்கால் வெட்டுகின்ற வேலைகூட இப்போது வேகவேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த வாய்க்கால் மூலம் வடபுதுப்பட்டி ஊராட்சி விவசாயிகளுக்குப் பாசன வசதியைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எல். மூக்கையா] [2000 ஏப்ரல் 29

அதைப்போல, கம்பம் பள்ளத்தாக்கில், ராயப்பன்பட்டிக்கு அருகில் 695 இலட்சம் மதிப்பீட்டில் சண்முகா நதித் திட்டம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. கடந்த காலத்தில் கிடப்பிலே போடப்பட்ட இந்தத் திட்டம், தொய்வான திட்டம்; இந்தத் திட்டத்திற்கு 695 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, இன்று அந்த வேலைகள் வேகவேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் ஓ.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் அறிவார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, கம்பம், போடி, விவசாயிகளுடைய நீண்ட நாள் கோரிக்கை அந்தப் பகுதியிலே 18 ஆம் கால்வாய்த் திட்டம் வேண்டுமென்ற கோரிக்கையாகும். அந்தப் பகுதி விவசாயிகள் 200 அடி கிணறு தோண்டினார்கள். கிணற்றிலே 200 அடியில் போர் போட்டார்கள், தண்ணீர் கிடைக்கவில்லை. அவர்கள் விளைவித்த விவசாயப் பயிர்கள் எல்லாம் காய்ந்துபோய் பெருத்த நட்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். தேவாரம், கோம்பை, பண்ணைப்புரம் போன்ற பகுதிகளில் இருக்கக்கூடிய விவசாயிகள் விளைவித்த பயிர்கள் எல்லாம் காய்ந்து பெருத்த நட்டத்திற்கு ஆளாகி, பலபேர் திருப்பூருக்குக் குடிபோகின்ற நிலையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கை—வெள்ளைக்காரன் காலத்தில் வைக்கப்பட்ட கோரிக்கை—18 ஆம் கால்வாய் வேண்டுமென்ற கோரிக்கை, அந்தக் காலத்தில் நிறைவேறவில்லை. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தினார்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் நிறைவேற்றப்படவில்லை. போடியிலே, முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா போட்டியிடுகின்றபோது, அந்தப் பகுதி விவசாயிகளிடத்திலே வாக்குறுதி தந்தார். 'நான் வெற்றிபெற்றால் 18 ஆம் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றுவேன்' என்று முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா வாக்குறுதி வழங்கினார். வெற்றியும் பெற்றார். இந்த நாட்டினுடைய முதலமைச்சராகவும் ஆனார். ஆனால், அந்த 18 ஆம் கால்வாய்த் திட்டம் வரவில்லை. ஆனால், இப்போது மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுடைய முழுமையான முயற்சியின் காரணமாக, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்கு வந்து, விவசாயிகளிடம் கலந்து ஆலோசித்து, இந்த 18 ஆம் கால்வாய்த் திட்டத்தினுடைய அவசியத்தை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி, இன்றையதினம் 23 கோடி ரூபாய் அளவுக்கு நிதி ஒதுக்கப்பட்டு, அந்தப் பணிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட அந்தத் திட்டத்தினைப் பற்றி, பெரியகுளம் நாடாளுமன்றத் தொகுதியினுடைய உறுப்பினர் தினகரன் ஒரு பொதுக் கூட்டத்திலே பேசும்போது, '18 ஆம் கால்வாய்த் திட்டத்திற்கு முதல்வர் அடிக்கல் நாட்டியிருப்பது ஒரு கண் துடைப்பு. 18 ஆம் கால்வாய்த் திட்டம் வரவே வராது' என்று பேசி விவசாயிகளிடத்திலே ஒரு குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார். இந்த நேரத்தில் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டத்திற்கு நிதியையும் ஒதுக்குங்கள், 'உடனடியாக வேலை தொடங்கப்படும்' என்று உங்களுடைய பதிலுரையிலே அறிவியுங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட அறிவிப்பை போடி, கம்பம் தொகுதிகளிலுள்ள விவசாயிகள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். 18 ஆம் கால்வாய்த் திட்டத்தினுடைய வேலை உடனடியாகத் தொடங்கப்படும் என்று உங்கள் பதிலுரையிலே நீங்கள் அறிவிக்க வேண்டுமென்று அந்தப் பகுதி விவசாயிகள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



2000 ஏப்ரல் 29] [திரு. எல். மூக்கையா]

அதைப்போல, பெரியகுளத்திற்கு வடக்கே கும்பக்கரை அருவிக்கு மேலே வற்றாத ஜீவநதியாக கொடைக்கானலிலிருந்து ஓடி வந்துகொண்டிருக்கிற அந்த பாம்பாற்றின் குறுக்கே, வெளவால்துறை என்ற இடத்தில் அணை கட்டித்தர வேண்டுமென்பது பெரியகுளம் விவசாயிகளுடைய நீண்ட நாள் கோரிக்கை. அது பொதுப் பணித் துறையால் ஆய்வு செய்யப்பட்டுவிட்டது; திட்ட மதிப்பீடுகள் எல்லாம் தயார் செய்யப்பட்டுவிட்டன. அந்த அணை கட்டப்படுமானால் 2 ஆயிரம் ஏக்கர் நிலம் இருபோக சாகுபடி நிலமாக மாறும். புதிதாக 1500 ஏக்கர் மானாவாரி நிலங்கள் விளைச்சல் நிலங்களாக மாறும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெரியகுளத்திலே, பாம்பாற்றின் குறுக்கே, வெளவால்துறை என்கிற இடத்திலே ஒரு அணையைக் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

அதைப்போல, பெரியகுளத்தில் ஜி. கல்லுப்பட்டி விவசாயிகளுடைய கோரிக்கை; பச்சிலை நாச்சியம்மன் அணைக்கட்டு கட்டித்தர வேண்டுமென்ற ஒரு கோரிக்கை இருக்கிறது. அந்த அணையையும் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே ஒரு தாழ்மையான வேண்டுகோள். பொதுப் பணித் துறையின் மூலமாக தரைப்பகுதி விவசாயிகளுக்குப் பல திட்டங்களை நிறைவேற்றுகிறோம். ஆனால், கொடைக்கானல் மேல்மலைப் பகுதி மக்கள், விவசாயிகள், அவர்களுக்கு கிணற்றுப் பாசனமும் இல்லை, ஆற்றுப் பாசனமும் இல்லை, வாய்க்கால் பாசனமும் இல்லை. ஏனோ தெரியவில்லை; பொதுப் பணித் துறை அங்கேயுள்ள, மலைப்பகுதி விவசாயிகளை ஏறிட்டுக்கூடப் பார்ப்பதில்லை. அவர்கள் மானாவாரியாகத்தான் பூண்டு, கோசு, உருளைக்கிழங்கு, பீன்ஸ், பட்டர் பீன்ஸ் போன்ற பயிர்களை விவசாயம் செய்கிறார்கள். மழை பொய்த்துவிடுகின்றபொழுது, அந்த விவசாயிகள் பெருத்த நட்டத்திற்கு ஆளாகிறார்கள். எனவே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், கொடைக்கானல் மேல்மலைப் பகுதியில் மன்னமனூர் என்கிற கிராமத்திலே உருளிக்கொம்பு நீர்த்தேக்கம் கட்டித்தர வேண்டுமென்று அந்த விவசாயிகள் நீண்ட நாட்களாகக் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதேபோல, கவுஞ்சியில் அறம்பள்ளிப்பாறை நீர்த்தேக்கத்தைக் கட்டித்தர வேண்டுமென்பது ஒரு நீண்ட காலக் கோரிக்கை. அதேபோல, பூம்பாறை கிராமத்திலே குண்டம்பச்சி நீர்த்தேக்கத்தைக் கட்டித்தர வேண்டுமென்பது ஒரு நீண்ட காலக் கோரிக்கை. அதேபோல, கூக்கால் கிராமத்திலே பேரிஜம் என்கிற நீர்த்தேக்கத்தைக் கட்டித்தர வேண்டுமென்பது நீண்டகாலக் கோரிக்கை. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரிடத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்; நீங்கள் பொதுப் பணித் துறை மூலமாகக் கட்டித் தாருங்கள். இன்று, வனத் துறைக்கும் நீங்கள் அமைச்சராக இருக்கின்ற காரணத்தினால், ஏதோ சொல்கின்றார்கள், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் — Hill Area Development Scheme — என்று சொல்கின்றார்களே, அந்தத் திட்டத்திலாவது, அந்த மலைப்பகுதி விவசாயிகளுடைய கோரிக்கைக்கு ஏற்ப, நான் குறிப்பிட்ட நீர்த்தேக்கங்களைக் கட்டித்தர வேண்டுமென்று இங்கே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பெரியகுளத்திலே வடகரை, தென்கரை என்று பிரிக்கின்ற வகையிலே ஓடிக்கொண்டிருக்கிற நதி வராக நதி. அந்த வராக நதியைத் தூர் வார வேண்டுமென்பது, ஒட்டுமொத்த மக்களுடைய கோரிக்கை. ஏறத்தாழ 18 கிலோ மீட்டர் தூரம் ஓடிக்கொண்டிருக்கிறது. அந்த வராக நதியைத் தூர் வாரித் தாருங்கள் என்று உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



கடந்த இரண்டு ஆண்டுகளாக, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரின் பரிந்துரையின் பேரில், ஒவ்வோர் ஆண்டும் ஒரு கண்மாயைத் தூர் வாருவதற்கு நிதி ஒதுக்கித் தந்தீர்கள். அதைப்போல, இந்த ஆண்டும் பெரியகுளம் கண்மாயைத் தூர் வார, தாமரைக்குளம் கண்மாயைத் தூர் வார, பெரியகுளத்திற்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய நந்தியாபுரம், புதுக்குளம் போன்ற கண்மாய்களைத் தூர் வார நீங்கள் நிதியை ஒதுக்கித் தாருங்கள் என்று உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல,...(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கைளின்மீது சில கருத்துகளைத் தெரிவிப்பதற்கும், முன்மொழிந்துள்ள வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்துவதற்கும் தாங்கள் வழங்கியுள்ள வாய்ப்பிற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் முதலாவதாக, வனத் துறை குறித்து சில கருத்துகளைத் தெரிவிக்க விரும்புகின்றேன். இயற்கைச் சூழலைச் சமப்படுத்துவதற்கும், உயிரின வாழ்க்கையைப் பாதுகாப்பதற்கும், அதற்கான சூழலைப் பாதுகாக்கும் வகையில் செயல்படக்கூடிய இந்தத் துறை, போதுமான அளவிற்குக் கவனம் செலுத்தி வருகிறதா என்பதைப் பற்றி நாம் கவனம் செலுத்த வேண்டும். அண்மையிலே வெளியிடப்பட்டிருக்கிற இயற்கை தொலையுணர்வுத் தொடர்புத் துறை (IRSIP) சார்பாக நடத்தப்பட்ட ஆய்வில், ஆண்டுதோறும் 2500 சதுர கிலோ மீட்டர் அளவிற்குக் காடுகள் சுருங்கி வருவதை அது தெரிவித்திருக்கின்றது. மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கு அடர்ந்த காடுகளாக இருந்தால்தான், ஆண்டுதோறும் நாம் பெறக்கூடிய பருவ மழை, காலம் தவறாமல் பெறக்கூடிய அளவிற்கு வாய்ப்பு ஏற்படும் என்று அறிவியல் ரீதியாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. ஆனால், இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. என்றாலும், தேவையான அளவிற்கான முயற்சிகளை இங்கே பார்க்க முடியவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

*பிற்பகல் 12-20*

ஜப்பான் நாட்டு உதவியோடு 1997-98 முதல் ஐந்து கட்டமாக நிறைவேற்றப்பட்டு வருகின்ற வன வளர்ப்புத் திட்டம், வன அபிவிருத்தித்

திட்டம். கடந்த மூன்று ஆண்டுகளிலே முழுமையாக முடிக்கப்பட்டு, நான்காவது ஆண்டாக அந்தத் திட்டம் தொடரப்படுகிறது. இந்த மூன்று ஆண்டுகளிலுமாகச் சேர்த்து செலவழிக்கப்பட்டிருக்கின்ற தொகையையும், அதிலே கிடைத்திருக்கிற அனுபவத்தையும் பார்க்கவேண்டும். 1997-98 ஆம் ஆண்டில் 200 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, 61,014 ஹெக்டேர் பரப்பளவில் 42 கோடி ரூபாய் அளவிற்கு வன வளர்ப்புப் பணிகள் நடைபெற்றிருக்கின்றன.

அதற்கு அடுத்த ஆண்டு, 1998-99 இல் அதே 200 கிராமங்கள் என்கிற அளவில், அதற்கான விஸ்தீரணம் என்று தேர்வு செய்யப்பட்ட அளவு, 88.548 ஹெக்டேர் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. இதற்காக ஒதுக்கப்பட்ட நிதியொதுக்கம் ரூ. 95.20 கோடியாகும். கடந்த ஆண்டு, 1999-2000 ஆண்டில், அதே 200 கிராமங்கள் என்று தேர்ந்தெடுக்கப்பட்டு, 74.450 ஹெக்டேர் அளவுக்கு, 96.93 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்து, பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால், இந்த ஆண்டு, 75.450 ஹெக்டேர்; சென்ற நிதியாண்டில் என்ன ஒதுக்கீடு செய்யப்பட்டதோ, அதே அளவு தேர்வு செய்யப்பட்ட நிலத்தின் பரப்பளவு இருக்கிறது. ஆனால், ஒதுக்கப்பட்ட தொகையின் அளவோ ரூ. 109.40 கோடி. கடந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட அதே ஹெக்டேர் அளவுக்கு, வன வளத்திற்குக் கூடுதலாக 13 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது, நல்ல செய்தி என்றாலும், ஒரே ஒரு ஹெக்டேருக்கு அவ்வளவு கூடுதலாகச் செலவாகிறதா என்கிற மதிப்பீட்டையும் மறு ஆய்வு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், வன வளர்ப்பு மற்றும் அபிவிருத்திப் பணியில் மலையக மக்களையும், மலை சார்ந்த மக்களையும் ஈடுபடுத்த வேண்டும். இயற்கை தொலையுணர்வுத் தொடர்புத் துறை (IRSIP) மூலமாகக் கண்டறியப்பட்ட ஒரு செய்தியின் மூலமாக, மீண்டும் நமக்குக் கிடைக்கிற தகவல், நாட்டிலேயே மிக அதிக அளவு வன வளர்ப்புப் பணியைச் சிறப்பாகச் செயல்படுத்துவது, மேற்குவங்கம், குஜராத் போன்ற மாநிலங்கள் என்று இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு, தமிழ்நாட்டையும் மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்துப் பார்த்தீர்களேயானால், இன்று வனத் துறையிலே பல்வேறு இடங்களிலே பொது மக்களுக்குத் தேவையான காரியங்களைச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலையை மாற்றுவதற்கு



மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேவையான அளவுக்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். பல விவரங்கள் இருந்தாலும், திருநெல்வேலி மாவட்டம், பொதிகைமலை பக்கத்தில் மேலணை பகுதியிலே காணியக்காரன் சமுதாய மக்களுக்காக உண்டு உறைவிடப் பள்ளிக் கட்டடம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. உண்டு உறைவிடப் பள்ளி; ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மூலமாக, அது செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த உண்டு உறைவிடப் பள்ளிக்குத் தேவையான கட்டட வசதியை விரிவுபடுத்துவதற்காக ஆதிதிராவிடர் நலத் துறை ரூபாய் 21.50 இலட்சம் நிதியொதுக்கம் செய்தும், மத்திய அரசு பல்வேறு வகையிலே நிதியொதுக்கம் செய்தும், ஏறத்தாழ ரூபாய் 50 இலட்சம் நிதியொதுக்கம் பெற்றும்கூட, அங்கே பணிகள் மேற்கொள்ளப்படாத நிலை இருக்கிறது; வனத் துறையின் அனுமதியில்லாமல், தாமதிக்கப்பட்டு இருக்கின்றன. பல்வேறு செட்டில்மெண்ட் பகுதியிலே இருக்கின்ற மலையக மக்கள், ஆதிவாசிகள், அடிப்படை வசதிகளை மேம்படுத்திக் கொள்வதற்கு, மின் இணைப்புகூட கிடைக்காத பல செட்டில்மெண்ட் குடியிருப்புகள் இருக்கின்றன. பக்கத்திலே ஒரு கிலோ மீட்டர் தொலைவிலே இருக்கிற மக்கள் மின் இணைப்புப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் மலையக மக்கள், செட்டில்மெண்ட் பூமி என்பதனாலே, அவ்வாறு மின் இணைப்புப் பெறாத சூழ்நிலை, பல்வேறு செட்டில்மெண்ட் பகுதிகளில் இருக்கின்றன. இன்றைக்கும் மனிதன் குகைகளில் வாழக்கூடிய சூழ்நிலைகூட பல்வேறு இடங்களிலே மலைப் பகுதிகளிலே இருக்கிறது.

ஈரோடு மாவட்டத்திலேகூட, பர்கூர் பகுதியிலேயும், தாளவாடி பகுதியிலேயும், இருக்கிற மலையக மக்களுக்கு பல்வேறு அடிப்படைக் கோரிக்கைகள் இருக்கின்றன. வனத் துறையைப் பொறுத்தவரையில், மற்ற துறைகளோடு இணைந்து எப்படி அவர்களுக்கான காரியங்களை உடனடியாகச் சிரமமின்றி நிறைவேற்ற முடியும் என்பதற்கான வழிமுறையைக் கண்டறிய வேண்டும். ஏன் இப்படிக் குறிப்பிடுகிறேன் என்றால், வனப் பகுதியிலே சாலை அமைத்தால் திருட்டுப் போகும் என்கிறார்கள். இன்றைக்கு அறிவியல் வளர்ந்திருக்கிற சூழ்நிலையில், சாலை அமைத்தால் திருட்டுப் போகும் என்று கூறக்கூடிய கருத்து, ஏற்புடைய கருத்தாக இல்லை. அதைத் தடுப்பதற்கான வழிமுறைகள் ஏராளமாக உண்டு. அந்த அடிப்படையிலே, வனத் துறை, ஒரு சிறப்பு

நேர்வாக இதைக் கருதி, மலையக மக்களுக்கு எந்தவகையிலே உதவிட முடியும் என்பதைப்பற்றி, மாண்புமிகு அமைச்சர் பெருமளவுக்கு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பொதுப் பணித் துறையைப் பற்றி ஒருசில வார்த்தைகள் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஈரோடு மாவட்டத்தில் உள்ள பாசன அமைப்புகளைச் சீரமைப்பதற்காக ஓர் உயர்நிலைக் குழுவை அமைத்து, அந்த உயர்நிலைக் குழுவிலே ஓர் உறுப்பினராகச் செயல்படுவதற்கான வாய்ப்பும் எனக்குக் கிடைத்து, அதிலே நல்ல அனுபவங்களைப் பெற்றிருக்கிறேன். அந்த அனுபவங்களைப் பெறுவதற்கான வாய்ப்பை வழங்கிய அரசுக்கும், மாண்புமிகு முதலமைச்சருக்கும், அமைச்சருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதனுடைய அறிக்கையும்கூட அரசுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்று நான் நம்புகிறேன். அதிலே உள்ள ஒரே ஒரு விஷயத்தை மட்டும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அந்தத் திட்டத்தைப் பற்றி அல்ல; குளங்கள் மராமத்து செய்யக்கூடிய பணிகள் குறித்து. பொதுப்பணித் துறைக்கு உரிய குளங்களை மராமத்து செய்கிறபோது, 3 ஆண்டுகளுக்குத் தொடர்ச்சியாக அதிலே நீர் வரத்து ஓடி இருந்தால்தான் மராமத்து செய்ய வேண்டுமென்று Standing Order-லே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த Standing Order அப்படி இருக்குமானால், அதை மாற்றி அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்க வேண்டும். ஆண்டுதோறும் தேவையான அளவிற்கு மராமத்துப் பணிகளைச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*பிற்பகல் 12-25*

அடுத்து பாண்டியாறு-புன்னம்புழா திட்டம்; நீண்டகாலமாக ஈரோடு மாவட்ட விவசாயிகளும், கோவை மாவட்ட விவசாயிகளும் வலியுறுத்தி வருகிற திட்டம். இந்த பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் குறித்துத்தான் ஒருமுறை 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற இடைத் தேர்தலின்போது, நூற்றுக்கணக்கான விவசாயிகள் வேட்பு மனு தாக்கல் செய்ய முன் வந்ததும், பிறகு அப்போதைக்கு அதில் தீர்வு ஏற்படுத்தப்பட்டதும், பிறகு 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியிலே 1,330 விவசாயிகள் வேட்புமனு தாக்கல் செய்ததும், அதனால் வாக்குப் பதிவுப் பணியை தள்ளிப் போட்டு நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதும், உங்களுக்கு நன்றாகத்



தெரியும். இந்த பாண்டியாறு புன்னம்புழா திட்டம் என்பது இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்பதாலும், பன்மாநில தண்ணீர் தொடர்புடைய பிரச்சினை என்பதாலும், உடனடியாகத் தீர்வு ஏற்படுத்தக்கூடிய ஒன்றாக இல்லை என்றாலும், இதன் மூலமாகத்தான் அப்பகுதி விவசாயிகளுடைய மறுமலர்ச்சியும், மறு வாழ்க்கையும் இருக்கிறது என்ற காரணத்தினாலே, இந்த பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தை விரைந்து நிறைவேற்றுவதற்கு எடுத்து வருகிற முயற்சிகளை மேலும் முனைப்பாக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் வலியுறுத்த விரும்புகின்றேன்.

அதுபோல, ஈரோடு மாவட்ட விவசாயிகளுக்கு மட்டும் இல்லாமல், தமிழ்நாட்டிலே பல்வேறு பகுதிகளில் உள்ள பாசனத்தை உறுதிப்படுத்துவதற்கான, பெருமளவிற்கான வாய்ப்புகளுக்கு வெளி மாநிலத்திலேயிருந்து கிடைக்கக் கூடிய நீர் ஆதாரத்தை நம்பித்தான் நாம் இருக்க வேண்டியிருக்கிறது. காவிரி நதி நீர்ப் பிரச்சினையானாலும் அல்லது சென்னை மாநகர மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்குகிற தெலுங்கு-கங்கைத் திட்டமானாலும் அல்லது மேற்கு நோக்கி ஓடுகிற நதிகளை, கிழக்கு நோக்கித் திருப்பி விடுகிற திட்டமானாலும், முல்லைப்-பெரியாறு அணைப் பிரச்சினையானாலும், இப்படி எல்லாத் திட்டங்களும், பல்வேறு மாநிலங்கள் தொடர்புடைய பிரச்சினையாக இருப்பதனால், உடனடியாகத் தீர்வு ஏற்படாத சூழ்நிலை இருக்கிறது. ஆனால் அதிலே போதுமான முயற்சிகள், சில நேரங்களில் சிலவற்றை முன்னிலைப்படுத்துவதும், சில பிரச்சினைகளில் போதுமான கவனம் செலுத்தாத போக்கும் தென்படுகிறது. அதை மாற்றியமைத்து எல்லாப் பிரச்சினைகளிலும், எல்லாக் கோரிக்கைகளிலும் சம அளவிற்கு கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

கடைசியாக ஒன்றே ஒன்று. முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், அதிலே தண்ணீரை எந்த அளவிற்குத் தேக்க வேண்டுமென்பதைப் பற்றி, ஒத்தக் கருத்தை உருவாக்க வேண்டுமென்பதிலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாறுபாடு கொள்ளவில்லை.

தமிழ்நாடு அரசோடு, குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகம் எடுக்கிற முயற்சியோடு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி-காவிரி நதிநீர்ப் பிரச்சினையானாலும், வேறு பல பிரச்சினைகளாக இருந்தாலும், எந்த அளவிற்கு அணுகுமுறை கொண்டிருக்கிறது என்பதை நான் கூறி,

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அளவில் இல்லை என்று நான் கருதுகின்றேன். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சமீபத்திலே கம்பம், தேனி போன்ற இடங்களுக்குச் சென்று, பொதுக் கூட்டங்களிலே பேசுகின்றபோது, "இங்கே இருக்கிற கம்யூனிஸ்ட்டுகள் கேரளாவிற்குச் சென்று இப்போதைக்குத் தண்ணீரை வழங்காதீர்கள் என்று, அந்த அரசுக்குச் சொல்லிவிட்டு வந்து விட்டதாக" கூறியிருக்கிறார்கள். நான் மிகவும் வருத்தப்படுகிறேன். தண்ணீர்ப் பிரச்சினை போன்ற ஒரு பொதுப் பிரச்சினையிலே குறுகிய அரசியல் கண்ணோட்டத்தோடு, அதை அரசியலாக்கி ஆதாயம் தேடுகிற அற்பத்தனமான காரியங்களில் என்றைக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஈடுபட்டதில்லை. இதுபோன்ற நிலைமைகள் தமிழ்நாட்டு மக்களுடைய, ஒட்டுமொத்தக் கருத்துகளை உருவாக்குவதற்குப் பொருத்தமாக அமையாது என்ற கருத்தைத் தெரிவித்து, நாம் நம்முடைய மாநிலத்தினுடைய உரிமையை நிலைநாட்டுவதற்காக, எந்த அளவிற்கு நாம் அதிலே கவனம் செலுத்த முடியுமோ அந்த அளவிற்குச் செலுத்த வேண்டும். இங்கே கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதே மாமன்றத்தில் நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்திற்குப் பதில் அளிக்கிறபோது, அங்கே இருக்கிற கேரள முதலமைச்சர் மாண்புமிகு நாயனார் அவர்கள்கூட, இந்தப் பிரச்சினையிலே எப்படி இருப்பார், அங்கே உள்ள அரசியல் சூழ்நிலை எப்படியிருக்கிறது என்பதைப் பற்றியெல்லாம் மிகுந்த நிதானத்தோடு அணுகினார்கள். அந்த நிதானத்தை மற்றவர்களும் பின்பற்ற வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறேன்.

இறுதியாக ஒன்றே ஒன்று. மேட்டூர் வலது கரை, இடது கரை வாய்க்கால்களில் 47,000 ஏக்கர் பாசனம் உண்டு. அந்தப் பாசனத்திற்குத் தேவையான அளவிற்கு இன்றைக்கு மேட்டூரிலே தண்ணீர் இருக்கிறது. இருக்கிற தண்ணீரைத் திறந்து விட்டீர்களேயானால் 50 ஆண்டு காலம் பயன்பட்ட விவசாயிகள், உங்கள் காலத்திலும் பயன்படுவார்கள் என்பதை வலியுறுத்தி, அந்தத் தண்ணீரைத் திறப்பதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்கு ஒரு ஏரி என்று ஒதுக்கீடு செய்திருப்பதை, மேலும் உயர்த்த முடியுமா என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருதிப் பார்க்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைக் கூறி, வார்த்தையை நிறைவு செய்கின்றேன். வணக்கம்.



பிற்பகல் 12-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுப. தங்கவேலன்.

**திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இளமைக் காலம்தொட்டு, ஜமீன்தார் ஏரியாவிலே பிறந்த காரணத்தினால், வேளாண்மை, நீர்ப்பாசனம் போன்ற பிரச்சினைகளில் தீவிரமான கவனம் செலுத்தி, போராட்டங்களை நடத்தி, பல்வேறு வெற்றிகளைக் கண்டிருக்கக்கூடிய என்னை, இந்த மாமன்றத்திற்குள் கொண்டுவந்து, இங்கேயும் விவசாயிகளுடைய பிரச்சினைகளைப் பேச வைத்த எங்களுடைய அன்புத் தலைவர், தமிழக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்றைக்கு, பாசனம், கட்டடம், மற்றும் வனத் துறை மீதான மானியக் கோரிக்கையில் நான் கலந்து கொண்டு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகின்றேன்.

கடந்த இரண்டு, மூன்று ஆண்டு காலமாக, மிகவும் பிற்படுத்தப்பட்ட இராமநாதபுரம் மாவட்டத்தில், பாசனத்தை மேம்பாடு அடையச் செய்ய வேண்டும் என்பதற்காக, என்றைக்கும் அந்த மாவட்டத்தின்மீது, தனிப் பற்றும் பாசமும் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய முதலமைச்சர் அவர்கள், நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய தொகுதியான முதுகுளத்தூர் தொகுதிக்கும், என்னுடைய தொகுதிக்கும் பயன்படுகின்ற வகையில், பல ஆண்டு காலமாக தேங்கிக் கிடந்த மலட்டாறு அணைக்கட்டுத் திட்டத்தை, 22 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து அறிவித்தார்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், அங்கே வருகை தந்து Regulator என்று சொல்லக்கூடிய மதகு அணை கட்டினால், வருகின்ற நீரைத்தான் பிரித்து அனுப்ப முடியும், ஆனால், Dam-ஆகக் கட்டி, நீரைத் தேக்கினால்தான், இந்தப் பகுதிக்குக் குடிநீருக்காகவாவது பயன்படும் என்று, அதற்கு மேலும் எத்தனை கோடி தேவைப்பட்டாலும் பரவாயில்லை என்று சொல்லி கொளுத்துகின்ற வெயிலில், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் ஸ்தலத்திற்கே வந்து பார்வையிட்டார்கள். பார்வையிட்ட பின்னர் தொழில்நுட்ப ரீதியாக அதை அணைக்கட்டாக மாற்ற முடியவில்லை, மதகு அணையாகத்தான் மாற்ற முடிகிறது, அதைச் செய்ய முடியும் என்று சொல்லி, இன்றைக்கு 22 கோடி ரூபாய் செலவில் வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல ரகுநாத காவேரிக்கு 5 கோடி 75 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சிறப்பான முறையில் வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ரகுநாத காவேரிக்கு ஒரு கோடி 5 இலட்சம் ரூபாய், சங்கரதேவன் கால்வாய்க்கு 65 இலட்சம் ரூபாய், ஒதுக்கியதற்காக என்னுடைய நன்றியை இந்த மாவட்ட மக்களின் சார்பிலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்து, வைகை ஆற்றிலே கட்டப்பட்டிருக்கக் கூடிய பார்த்திபனூர் மதகு அணைக்குக் கீழே, வைகை இடது, வலது பிரதானக் கால்வாய்கள் சீரமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த வலது, இடது பிரதான கால்வாயிலிருந்து பிரிந்து செல்கின்ற மிகப் பெரிய கால்வாய்களான, சாலைக்கிராமம் கால்வாய், மேலநாட்டார் கால்வாய், கீழநாட்டார் கால்வாய், அதைப் போல, களறிக் கால்வாய், போன்ற கால்வாய்களை எல்லாம், அற்புதமாக, இன்றைக்குச் சீரமைத்து, வேலைகள் நடைபெற்று முடியும் தருவாயில் இருக்கின்றன. பல கால்வாய்ப் பணிகள் முடிந்துவிட்டன. அதிலே, ஒன்றே ஒன்று கூத்தங்கால்வாய். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நீதிமன்றத் திறப்பு விழாவிற்கு வருகை தந்தபோது, இந்தக் கூத்தங்கால்வாயும் சீரமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பின்படி, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள், இந்த நிதியாண்டிலே அதனைச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, வைகை ஆற்றில் 1998 ஆம் ஆண்டு மிகப் பெரிய வெள்ளம் வந்த காரணத்தால், அதனுடைய இடது பிரதானக் கரைகளில், பல இடங்களிலே உடைப்பு ஏற்பட்டது. இன்றைக்கு அந்த உடைப்புகள் அடைக்கப்பட்டுவிட்டன. ஏராளமான கண்மாய்களில் உடைப்பு ஏற்பட்டது. அந்த உடைந்த உடைப்புகளில் வலது கரையில் Ring-bund போட்டு, குளத்திலே நீரைத் தேக்கி சாகுபடிக்கு நாம் உதவி செய்தோம். ஆனால், இன்றைக்கும் நேர்க்கரை போடப்படவில்லை. அதிலே வேலை செய்தவர்களுக்கும் 32 இலட்சம் ரூபாய் இன்னும் நிலுவைத் தொகை இருக்கிறது என்றும், ஒரு கோடியே 32 இலட்சம் ரூபாய் தேவையென்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கோரியிருக்கின்றார்கள். எனவே, அடுத்து வரக்கூடிய மழைக் காலத்திற்கு முன்பாக, அந்தக் கரைகள் அனைத்தையும், நேர்க்கரைகளாக, உடைப்புகளை அடைத்து, வருகின்ற மழைக்காலத்தில் நீரைத் தேக்குவதற்கு வழிவகை செய்ய வேண்டும். அதற்காக, ஒரு கோடி ரூபாயும் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



இராமநாதபுரம் பெரிய கண்மாய் இரண்டேகால் கோடி ரூபாய் செலவில் அற்புதமாகச் சீரமைக்கப்பட்டு வருகிறது. அதற்கும் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழ்நாட்டிலே மூன்றாவது மிகப் பெரிய ஏரியான ஆர்.எஸ். மங்கலம் பெரிய கண்மாய்; அந்தக் கண்மாயைத் தூர் வாருவதற்கு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, இராமநாதபுரத்திற்கு அருகே, இருக்கக்கூடிய சக்கரக்கோட்டைக் கண்மாய், மிகப் பெரிய கண்மாய். அதையும் தூர் வார வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இருதயம் கண்ணுக்கு தெரியாத இடத்தில் இருப்பதைபோல, என்னுடைய தொகுதியில் போக்குவரத்து இல்லாத ஒரு பகுதி களறிக் கண்மாய் என்று மிகப் பெரிய கண்மாய் இருக்கிறது. அது ஆர்.எஸ். மங்கலம் பெரிய கண்மாயைவிட சிறியது, இராமநாதபுரம் பெரிய கண்மாயைவிட பெரியது. 1971-ஆம் ஆண்டு, அந்தப் பகுதிக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வருகை தந்து, அந்தக் கண்மாயினுடைய கரைகளில் ஏறத்தாழ 300 மீட்டர் தூரம் வரைக்கும் நடந்தே சென்று, அந்தக் கரைகளைத் தூர் வாருவதற்கு உத்தரவிட்டார்கள். அதற்குப் பிறகு வேலை நடைபெறவில்லை. 97 இலட்சம் ரூபாய் செலவில் அதைத் தூர் வாருவதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அரசின் ஒப்புதலைப் பெறுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதையும் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

அடுத்து, என்னுடைய தொகுதியில் உள்ளது செஞ்சிடைநாதபுரம்; பெயர்தான் செஞ்சிடைநாதபுரம். கங்கையைத் தலையின் மேல் கொண்டிருக்கக் கூடிய சிவனுடைய பெயராலே அந்தக் கிராமம் இருக்கிறதே ஒழிய, அந்த ஊரிலே குளங்களோ அல்லது ஊருணிகளோ, கண்மாய்களோ கிடையாது. அந்தக் கிராமத்து மக்கள் அனைவரும் கட்டபொம்மனுடைய நேரடி வாரிசுகள்; அவர்கள் மட்டுமே வாழ்கின்ற கிராமம் அந்தக் கிராமம். அந்தக் கிராமத்திற்குச் சென்று, கிராமத்து மக்களை எல்லாம் அழைத்துப் பேசி 147 ஏக்கர் நிலங்களை, விவசாயிகளுக்குச் சொந்தமான நிலங்களை, ஆளுநர் பெயராலே எழுதி வாங்கிக் கொடுத்து இருக்கிறேன். அந்த 147 ஏக்கர் நிலத்திலேயும் new dam formation புதிய கண்மாயை உருவாக்குவது அதற்குப் பின்னாலே

இருக்கக்கூடிய புஞ்சை நிலங்களை நஞ்செய் நிலங்களாக மாற்றித் தருவது, அதன் மூலமாகக் கூடுதல் உணவு உற்பத்தியைப் பெருக்குவது என்கின்ற திட்டத்தின் அடிப்படையில் அதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். அதில் சட்டமன்ற உறுப்பினருடைய கடுமையான உழைப்பும், பொதுமக்களுடைய ஒத்துழைப்பும் இருக்கின்றது. வெறும் 36 இலட்சம் ரூபாய்தான். இரண்டாம் பாக வேலைத் திட்டத்திலே சேர்ப்பதற்காகப் பரிந்துரை செய்யப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே, தயவு செய்து இந்தக் கூட்டத் தொடரிலேயே அதற்கான அறிவிப்பைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

செங்கணிநாதபுரம், கடலாடி வட்டத்தைச் சேர்ந்தது. அதைப்போல சுஞ்சம்பட்டி ஓடை; விளாத்திகுளம் வட்டம், அருப்புக்கோட்டை வட்டம், திருச்சி வட்டம் ஆகிய இந்தப் பகுதிகளிலே பெய்கின்ற மழைநீர் ஒரு காட்டாறாக மாறி வந்து எங்கள் பகுதியிலே இருக்கக்கூடிய விவசாய நிலங்களை அழிக்கின்றது. அந்தப் பகுதியிலே commercial crops என்று சொல்லக் கூடிய பருத்தி, மிளகாய், எள், மல்லி போன்ற இனங்களை எல்லாம் அழித்துவிட்டுக் கடலுக்குச் செல்கிறது. எனவே, அவற்றையெல்லாம் ஒழுங்குபடுத்துவதற்காக 28 இலட்சம் ரூபாய் செலவில் அந்தக் கால்வாயைச் சீரமைப்பதன் மூலமாக, 10,12 கண்மாய்களுக்குக் கிளைக் கால்வாய் மூலமாகத் தண்ணீரைக் கொண்டு வந்து சேர்த்து, கடலிலே வீணாகச் சென்று கலக்கின்ற அந்தக் காட்டாற்றைத் தடுத்து நிறுத்தி வடிகால் ஆகவும், அதே நேரத்திலே பாசனக் கால்வாய் ஆகவும் ஒரே கல்லில் இரண்டு மாங்காய்போல அதை மாற்றியமைப்பதற்குத் தேவை, வெறும் 28 இலட்சம் ரூபாய்தான். அதையும் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது தமிழகத்திலே மிக முக்கிய பிரச்சினையாக இருக்கக் கூடியது முல்லைப் பெரியாறு; அதை முல்லைப் பெரியாறு என்றும் அழைக்கலாம். வைகைப் பெரியாறு என்றும் அழைக்கலாம். ஆங்கிலேயருடைய காலத்திலேயிருந்து இன்றைய தேதி வரைக்கும் அது வைகைப் பெரியாறு என்றுதான் அழைக்கப்படுகிறது. எனவே, வைகைப் பெரியாறு என்றுதான்--வைகைப் பெரியாறு செயற் பொறியாளர் அலுவலகம்--வைகைப் பெரியாறு Executive Engineer Office—என்றுதான் இன்றைக்கும் அங்கே பெயர் இருக்கிறது. 1882 ஆம் ஆண்டு அந்தப் பெரியாறு அணை கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டு (மணியடிக்கப்பெற்றது) மிக முக்கியமான பிரச்சினை. 1882 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டு நிதி கிடைக்காத காரணத்தினால் நான் இந்த மன்றத்திலே



குறிப்பிட்டதைப்போல, பென்னிகுயிக் லண்டனுக்குச் சென்று அவருடைய சொத்துகளையெல்லாம் விற்று வந்து, 1885 ஆம் ஆண்டு இந்தப் பணியைத் தொடங்கி 1889-லே தான் முடிந்தது. ஆனால், 1881 ஆம் ஆண்டுதான் அதற்கான பாசன விதிமுறைகள் உருவாக்கப்பட்டன. அதுவரைக்கும் எங்களுக்கு வைகையும் பெரியாறும் ஒன்றாகத்தான் இருந்தது. வைகை அணை கட்டுகின்றபோது முல்லை ஆற்றின் மூலமாக அந்தத் தண்ணீர் வைகையிலே கொண்டு வந்து சேர்க்கப்பட்டது. 1957-க்குப் பிறகுதான் வைகை அணை கட்டுகின்ற அந்த முயற்சிகளை மேற்கொண்டு இந்த மாமன்றத்திலே அதற்கான திட்டத்தைத் தாக்கல் செய்து போட்டபோது, அன்றைக்கு ஆளும் கட்சி உறுப்பினர்களாக இருந்த மிகுந்த செல்வாக்கு பெற்ற உறுப்பினர்களாக இருந்த மாண்புமிகு உறுப்பினர்கள் ஆர்.வி. சுவாமிநாதன், கே.டி. கோசல்ராம் ஆகியவர்கள் எல்லாம் வெட்டுப் பிரேரணைகளைக் கொடுத்து, இந்த அணையைக் கட்டினால் கிழக்கு இராமநாதபுரத்தினுடைய, மதுரை கிழக்குப் பகுதி எல்லாம் பாதிக்கப்படும் என்று வெட்டுப் பிரேரணைகளைக் கொண்டு வந்து கருத்துகளை வழங்கினார்கள். ஆனால், அணை கட்டப்பட்டது. அதன் பிறகுதான் வைகைத் தண்ணீர் என்றும், பெரியாற்றுத் தண்ணீர் என்றும் புதிய அக்கவுண்டுகள் திறக்கப்பட்டன. நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்வது எல்லாம், நேரம் அதிகமாகிவிட்ட காரணத்தினாலே சுருக்கமாகச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். எங்களுடைய முக்கியமான நோக்கம் எவ்வளவு நேரம் விளக்கங்களைச் சொன்னாலும்கூட, நான் பேசினாலும் கூட, வைகைத் தண்ணீர் பெரியாற்றுத் தண்ணீர் என்று சொல்வதில் மிகப் பெரிய குழப்பமான நிலையிருக்கிறது. வைகை அணையைக் கட்டுகிறபோது அதனுடைய பாசனப் பரப்பளவு எவ்வளவு? இன்றைக்கு அதனுடைய பாசனப் பரப்பளவு எவ்வளவு? பெரியாறு அணை கட்டுகின்றபோது 0.52 ஹெக்டேர் நிலம்தான் அன்றைக்கு பாசனப் பரப்பளவு. இன்றைக்கு 1.10 இலட்சம் ஹெக்டேர் நிலம் புதிய பாசனப் பரப்பாக உருவாக்கப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 12-40

திண்டுக்கல் மாவட்டத்திலே கொட்டாம்பட்டி; அந்தப் பகுதியிலே சிவகங்கை மாவட்டத்திலே சிங்கம்புணரி, திருப்பத்தூர் பகுதிகள்; சிவகங்கை பகுதியிலே பெரும் பகுதிகள்; அதைப்போல மேலூர் வட்டம் முழுவதும்; உசிலம்பட்டி, திருமங்கலம் பகுதிகள் முழுவதும்; இப்படி எங்கெல்லாமோ தண்ணீரைக் கொண்டுபோய் இருக்கிறார்கள். எனவே, நான் சொல்ல வருகின்ற கருத்து பெரியாற்றுத் தண்ணீர் வைகைத் தண்ணீர் என்று

பெரிய குழப்பம் எங்களுடைய இரண்டு பகுதி பாசன விவசாயிகள் மீதும் திணிக்கப்பட்டிருக்கிறது. Expand பண்ணுகிறீர்கள். 152 அடி உயரத்தில் நிரப்ப வேண்டிய தண்ணீரை 136 அடிதான் நிரப்ப வேண்டும் என்று சொல்கிறபோதுகூட விஸ்தரிக்கிறோம். அதற்குள்ளே போக விரும்பவில்லை. மாறி வருகின்ற அரசியல் சூழ்நிலைகளை எங்களைப் போன்ற மக்கள் பிரதிநிதிகள் எடுத்துச் சொல்கிறபோது புதிய திட்டங்களை உருவாக்குகின்றீர்கள். புதிய சாகுபடி கொண்டு வருகிறார்கள். அதன்மூலமாகக் கூடுதல் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்கின்ற அந்த இலக்கின் காரணமாகக் கூட இருக்கலாம். நான் உள்ளே போக விரும்பவில்லை. எனவே, நீர் ஆதாரம் இல்லாமல் விஸ்தரித்துக் கொண்டுபோன காரணத்தினால், மூன்று போக சாகுபடி நிலங்களுக்கு ஒரு போக சாகுபடிக்குக்கூட தண்ணீர் கிடைக்காத அளவிற்கு ஒரு மிகப் பெரிய துரதிருஷ்டவசமான நிலைமை இருக்கிறது. ஆனால், இந்த நேரத்தில்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், கேரள மாநிலத்திற்குச் சென்று, அந்த மாநிலத்தினுடைய முதலமைச்சரைச் சந்தித்து, மீண்டும் 152 அடி என்று இல்லை. இன்றளவிற்கு நாங்கள் எந்த அளவிற்கு பலப்படுத்தியிருக்கிறோமோ, அதற்கேற்றவாறு 145 அடியை அங்கே கட்ட வேண்டும். அதற்கு அனுமதி தாருங்கள் என்று போய்க் கேட்டார்கள். அந்த அனுமதிக்கு அங்கே பேச்சு வார்த்தையிலே முன்னேற்றம் ஏற்படாத காரணத்தினால் திரும்ப வந்து மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இதே மன்றத்திலே அறிக்கை தாக்கல் செய்திருக்கிறார். இதனால் கோபப்பட்ட, கம்யூனிஸ்டு கட்சி ஆளுகின்ற கேரள மாநிலத்தில் இப்படி நடைபெறலாமா என்று மதுரை மாவட்டத்து மக்களும், தேனி மாவட்டத்து மக்களும், சிவகங்கை மாவட்டத்து மக்களும், இராமநாதபுரம் மாவட்டத்து மக்களும் கொதித்தெழுந்து, நாங்கள் கேரளாவிற்கு அரிசி அனுப்ப மாட்டோம், கேரள மாநிலத்திற்கு காய்கறி அனுப்ப மாட்டோம் என்று அங்கே வீர சபதம் எடுத்து, முழக்கமிட்டு, அந்தத் தீர்மானங்களையெல்லாம் பத்திரிகைகளுக்குத் தந்தார்கள். இதுதான் இப்போது கேரள மாநிலத்தினுடைய முதலமைச்சரையும், அமைச்சரையும் பிடரியைப் பிடித்துக் குலுக்கி அவர்களுக்கு மறு சிந்தனையை உருவாக்கி, மீண்டும் தமிழக முதலமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுத வேண்டுமென்ற அளவிற்கு, என்றைக்கும் பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருக்கின்றோம்-என்று எழுதுகின்ற அளவிற்குத்தூண்டி அவர்கள் குரல் கொடுத்திருக்கிறார்கள். எனக்கு இருக்கின்ற வருத்தம் எல்லாம் தஞ்சைத் தரணியில் காவிரிப் பிரச்சினை வருகின்றபோதெல்லாம் குரல் கொடுத்தோமே, அப்போது இல்லாத அவசரமும், அவசியமும் இப்போது ஏன் வந்தது? எங்களுடைய கவனத்தைத் திருப்புகின்ற வகையிலே நீங்கள் கடன் பாக்கியைத் தள்ளிப் போட வேண்டும், கூட்டுறவுக் கடனை இரத்து செய்ய வேண்டும் என்று ஒரு புதிய போராட்டத்தை உருவாக்கி, விவசாயிகளுடைய கவனத்தைத் திருப்பினீர்களே, விவசாயக் கூலித் தொழிலாளர்களை வைத்து, அது நியாயம்தானா என்று அதற்குத் துணை போன அரசியல் கட்சிகளை நான் கேட்கின்றேன், அந்த மாவட்டத்து விவசாயிகளுடைய சார்பிலே. இது நியாயம்தானா? (மணியடிக்கப்பெற்றது)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நானே மணியடித்து விட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை, உட்காருங்கள். ஆறு மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன. இன்னும் நிறையப் பேர் பேச வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் பேச வேண்டும், உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** அரசியல் கண்ணோட்டத்தோடு, தஞ்சை மாவட்டம் என்று அவர் தெரிவித்ததால், ஒரே ஒரு விஷயத்தைப் பற்றி மட்டும் சொல்லிவிடுகிறேன். ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

*** திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நம்முடைய வனம் மற்றும் பொதுப்பணி சம்பந்தமான மானியக் கோரிக்கைகள் மீது சில விஷயங்களை மட்டும் சுருக்கமாகச் சொல்ல விரும்புகின்றேன்.

காடுகளைப் பாதுகாக்க வேண்டுமென்ற உயரிய நோக்கத்தை நான் ஆதரிக்கின்றேன். அதேநேரத்தில் காடுகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கான வனக் காவலர்கள் இன்றைக்கு எந்த அளவிற்குக் குறைவாக இருக்கிறார்கள் என்பது நம்முடைய மாண்புமிகு அமைச்சருக்கே தெரியும். எனவே, காடுகளைப் பாதுகாத்துக் கொள்வதற்குத் தேவையான வனக் காவலர்களை நாம் உரிய காலத்திற்குள் நியமனம் செய்வதும், அவர்களுக்கு ஆயுதங்கள்-'Armed Police'-ல் இருக்கிற மாதிரி, அந்த அளவிற்கு வழங்க ஒரு ஏற்பாடு செய்வது என்பதும் மிக நல்லது.

இரண்டாவது, களியல் கிராமத்திலே இருக்கின்ற ஒரு Checkpost-லேகூட அந்தப் பகுதி முழுவதும் சுற்றிப் பார்ப்பதற்கு வாகனம் இல்லாத ஒரு நிலை இருக்கின்றது. அந்தக் களியல் Checkpost-ஐயேகூட திருடர்கள் கூட்டம் ஒருமுறை கொள்ளையடித்தது. சரியான வழக்குப் போடப்படவில்லை அந்த வழக்கைச் சரிவர நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, மர மண்டிகளில் தேங்கிக் கிடக்கின்ற விலையுயர்ந்த மரங்கள்; அதுவும் கன்னியாகுமரி மாவட்டத்தைப் பார்த்தீர்கள் என்று சொன்னால், தேக்கு, ஈட்டி போன்ற விலையுயர்ந்த மரங்கள், மர மண்டிகளிலே தேங்கிக் கிடக்கின்றன. அவற்றைக் காலாகாலத்தில் விற்பனை செய்வதன் மூலமாக அரசுக்கு அதிகப்படியான வருமானம் வரக்கூடும்.

அதுபோல், மருதம்பாறை பகுதியிலே ரூ. 4 லட்சம் மதிப்புள்ள இரண்டு ஈட்டி மரங்கள் வீழ்ந்து, சில ஆண்டுகளாகிவிட்டன. அதை எடுத்து வந்து, மர மண்டியில் வைத்து, ஏலம் போட்டால், ரூ. 4 அல்லது ரூ.5 லட்சம் கிடைக்கும். அதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும்.

அதுபோன்று, பேச்சிப்பாறையில் ஒரு பஞ்சாயத்து இருக்கிறது. அந்த பஞ்சாயத்து பூராவும் வனப் பகுதிக்குள்ளே இருக்கிறது. குடிக்கத் தண்ணீர் எடுக்க வழியில்லை. மின்சாரம் கொண்டுசெல்ல வழியில்லை. இது ஒரு கொள்கைப் பிரச்சினையாக மாறியிருக்கின்ற நேரம்.

அதுபோல், வலியஏலாவில் 44-வது ஆண்டிலேயே பயிர் செய்த விவசாயிகளுக்கு, இன்றைக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீரைக் கொண்டு செல்ல முடியாத நிலை; மின்சாரம் கிடைக்காத நிலை; இப்படி இருக்க அந்த விவசாயிகளைப் பாதுகாப்பது எந்தவகையிலே, அவர்களுடைய அடிப்படை உரிமைகளைப் பெற அடிப்படைப் பிரச்சினைகளில் தீர்வுகாண்பது எப்படி என்பதை அரசு சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

அதுபோன்று, கடையாலுமூடு என்ற பேரூராட்சியிலே 5 வார்டுகள் பூராவும் இந்த வனப் பகுதியிலே உள்ளன. அங்கே அணைமுகம் என்ற ஓர் ஊர் இருக்கிறது. 1977-லே கட்டிய அணையில் ஒரு பாலம் உடைந்துபோய்விட்டது. அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கான முயற்சியிலே



இப்போது ஈடுபடுகின்றபோது வனத் துறையினர் அங்கே தடுத்திருக்கிறார்கள். ஆறுகாணி–அணைமுகம் சாலையிலே வருகின்ற பாலத்தைக் கட்டுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லை. மலைப் பாங்கான பகுதி என்ற காரணத்தினாலே ஓரிடத்திலே நம்முடைய குடிநீர்த் துறையைச் சார்ந்தவர்கள் 3 போர்வெல் எடுத்தார்கள். எந்த மரத்திற்கும் அங்கே பாதகம் ஏற்படவில்லை. அந்த போர்வெல்லிலிருந்து தண்ணீர் எடுக்கக்கூட அனுமதிக்கவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது ஒரு கொள்கைப் பிரச்சினை என்ற முறையிலே தலையிட்டுத் தீர்வு ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய அரசு ரப்பர் கழகம்; கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஒரு தொழில்; 2,500 பேருக்கு வேலை வாய்ப்புத் தருகின்ற அந்த ரப்பர் கார்ப்பரேஷன் இன்று பெருவாரியான மரங்களை முறித்துவிட்டது. திரும்ப அந்த மரக்கன்றுகளை நடுவதற்கான எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. அந்த 2,500-க்கு அதிகமான தொழிலாளர்களையும், ஊழியர்களையும் வீட்டிற்கு அனுப்புகின்ற ஒரு கொள்கையை இந்தத் துறை மேற்கொண்டதாகப் பேசப்படுகின்றது. அப்படி இருந்தால் அது சரியான நடவடிக்கை இல்லை. எனவே, அந்தத் தொழிலைப் பாதுகாத்துக்கொள்வதற்கும், re-plantation செய்வதற்கும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, இந்த அரசு ரப்பர் கழகத்திலே கொஞ்சம் மரங்களை எல்லாம் விற்பனை செய்தார்கள். அப்படி விற்பனை செய்கின்ற முதல் ஏலம்; 8-1-1997-ல் நடந்தது. அப்போது ஒரு மரத்திற்கு 1,060 ரூபாய். கிடைத்தது. இரண்டாவது ஏலம் 7-10-1997-ல்; அப்போது 1,251 ரூபாய். மூன்றாவது ஏலம் 10-12-1998-ல்; கடைசி ஏலம் 7-10-1999-ல் அப்போது விலை 731 ரூபாய். இதிலே அதிகாரிகள் ஒரு பெரிய தவறைச் செய்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், அரசுக்குக் குறைந்தபட்சம் 2 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது, நஷ்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் இதுசம்பந்தமாக ஒரு சரியான விசாரணையை நடத்தி, யார் இதற்குப் பொறுப்பாளி என்று கண்டுபிடித்து அவர்கள் மீது உரிய

நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனால் நம்முடைய அரசுக்கு ரூ. 2 கோடிக்குமேல் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. எனவே, அந்தவகையிலே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வெளிநாடுகளிலிருந்து இங்கே மரங்களை நாம் இறக்குகின்றோம். வெளிநாடுகளிலிருந்து நம்முடைய துறைமுகத்திற்கு வருகின்றன. ஆனால், அதற்கு ஒரு வரி இருந்தது. பிற மாநிலங்களுக்கு பிற நாட்டுக்கு நாம் திருப்பி ஏற்றுமதி செய்கின்றபோது சுங்க வரி செலுத்த வேண்டும் என்று வைத்திருந்தார்கள். ஆனால், தற்போது அதை எடுத்துவிட்டார்கள். இதன் காரணமாக அரசுக்குப் பல இலட்சம் ரூபாய் ஓர் ஆண்டிலே நஷ்டம் ஏற்படுகிறது. எனவே, அந்த நிலையை மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய பொதுப் பணித் துறை சம்பந்தமாக சில புள்ளிவிவரங்களை நான் இங்கே நம்முடைய மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். முதலிலே இந்தத் துறையிலே N.M.R. என்ற ஒரு சாரார் இருக்கின்றார்கள். இதர ஊழியர்களும் கொஞ்சம் இருக்கிறார்கள். 5 வருடத்திலிருந்து 15 வருடம் வரை வேலை செய்யக்கூடிய ஊழியர்களும், N.M.R. தொழிலாளர்களும் இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையிலே ஒரு மாற்றத்தை ஏற்படுத்திக்கொள்வதற்கு அவர்களுடைய தகுதியின் அடிப்படையிலே அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்ததாக, நம்முடைய நீரோடி கடற்கரையில் போட்ட கல்; கடலோரத்தில் கல் போடுவதைப் பொறுத்தவரையில் இத் துறையினுடைய மாண்புமிகு அமைச்சரே ஒரு முறை சொன்னார்கள் "அது ஒரு வெள்ளை யானை மாதிரி" என்று. அந்த அடிப்படையிலே பார்க்கின்றபோது கடலிலே கல் போட்டால் கணக்கு வராது. எனவே தான் நீரோடியிலே போட்ட கல் அமுங்கிவிட்டது. அதற்குப் பக்கத்திலே மார்த்தாண்டம் துறையிலிருந்து அடுத்த கிராமம் வரையிலும் இந்தக் கல் போடப்படவில்லை. கொள்கைக் குறிப்பிலே கல் போட்டதாக இருக்கிறது. எனவே, அதைப் பரிசீலனை செய்து அந்த மார்த்தாண்டத்துறை பகுதியிலே 2 கிலோ மீட்டருக்குக் கல்லைப் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, நம்முடைய பேச்சிப்பாறை அணை. ஏற்கெனவே கடந்த மானியத்தின்போது தெளிவாக நான் சொன்ன விஷயம்தான்.



இருந்தாலும்கூட அது 100 ஆண்டுகளுக்கு மேலாகின்றது. அதற்கு ஒரு support அணை இல்லையென்று சொன்னால் நீண்டகாலம் அது இருக்குமா என்பது கேள்விக்குறி. அந்த பேச்சிப்பாறைக்குள்ளே 20 அடிக்குமேல் மண் இன்று நிரம்பி உள்ளது. இதனால் கொள்ளளவு குறைந்துபோய் உள்ளது. எனவே, இதையும்கூட அரசு பரிசீலனை செய்ய வேண்டும். அதுபோல, மழைக்காலங்களில் வரக்கூடிய தண்ணீரைத் தேக்கி பாதுகாத்துக் கொள்வதற்காக கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய குளங்களை, ஒரு ஏக்கரிலிருந்து அதற்கு மேலே பாசனம் தரக்கூடிய குளங்கள் வரை பூராவையும் தூர் வாரிச் செப்பனிடுவதற்காக பணம் அனுமதிக்க வேண்டும். எல்லாக் குளங்களிலும் இதுதான் நிலை. நம்முடைய மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் தொகுதியானாலும் சரி, எங்களுடைய தொகுதியானாலும் சரி எல்லாத் தொகுதிகளிலும் இருக்கக்கூடிய நிலை இது. எனவே, பொதுப் பணித் துறை இந்தக் குளங்களை எடுத்துக் கொள்வதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

*பிற்பகல் 12-50*

அடுத்து, ஆறுகள் என்று எடுத்தால் 3 ஆறுகள் ஓடுகின்றன. ஒன்று வள்ளியாறு; இரண்டாவது தாமிரபரணி ஆறு; இன்னொன்று பழையாறு. இவற்றில் வருகின்ற தண்ணீர் முழுவதுமே கடலில் வீணாகத்தான் போய்க் கலக்கிறது. எனவே, விவசாயிகளுக்குப் பயன்படக்கூடிய வகையிலேயும், நிலத்தடி நீரைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய வகையிலேயும் அங்கே (*மணியடிக்கப்பெற்றது*) 2, 3 இடங்களிலே check-dam கட்டுவதன் மூலமாக இந்தப் பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அந்த அடிப்படையில் குழித்துறை ஆற்றிலே, குழித்துறைப் பகுதியிலே ஒரு check-dam அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, முன்னாலே ஒரு lift irrigation வைத்துக் கொண்டிருந்தார்கள். விளாத்துறை lift irrigation என்பது அது. இன்று அது பலவிதமாகச் செயல்படாத ஒரு நிலையில் உள்ளது. அதையும் புனரமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய பல்லிக் கூட்டம் அணை. அது ஒன்றும் பெரிய அணை அல்ல; சிறிய அணைதான். அதன் மூலமாக 9 கிலோமீட்டரிலே இருக்கின்ற கால்வாய்கள் முழுவதிலும் மழைக் காலங்களிலே உடைப்பு ஏற்படுகின்றது. அவற்றைப் பாதுகாத்துக்கொள்ளக்கூடிய வகையிலே

அந்தப் பல்லிக்கூட்டம் அணையைக் கட்டுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அடுத்து, மடிச்சல் கால்வாய். அதன் வேலையைப் பொறுத்தவரை 5, 6 இலட்சம் ரூபாய்க்கான சமாச்சாரம்தான். அடுத்து, நெய்யாறு இடதுகரைக் கால்வாயினுடைய அடித்தளத்தை சிமெண்ட் அடித்தளமாக அமைக்க வேண்டும்.

ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய முயற்சியாலே ஒரு கோடியே 25 இலட்சம் ரூபாயிலே மண்ணை வாருகின்ற பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். அந்த வகையிலே, அந்தக் கால்வாயினுடைய அடித்தளத்தை சிமெண்ட் அடித்தளமாக அமைக்க வேண்டும்.

அடுத்து, கலிங்கராயபுரத்திலே சமத்துவபுரம் கட்டுமானத்திலே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்து அங்கே தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத்தை ஆரம்பித்தார்கள். எனக்கு அதிலே இருக்கக்கூடிய சங்கடம் எல்லாம் 32,000 ரூபாய் ஒரு வீட்டிற்குச் செலவாகியிருக்கிறது என்று கூறுகிறார்கள். இந்தக் கட்டுமானக் கழகம் என்பது எந்த அளவுக்குச் செயல்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. இன்றைக்கு நாம் கையாலே தள்ளினால்கூட அந்தக் கட்டடம் விழக்கூடிய நிலையில் இருக்கிறது. இந்தக் கட்டுமானக் கழகத்திலே பெரிய கோளாறு இருக்கின்றது. அதிலே, குறைந்தபட்சம் 15,000 ரூபாய்வரை செலவழித்திருப்பார்களா என்று எனக்கெல்லாம் சந்தேகமாக இருக்கக்கூடிய விஷயம். எனவே, இனியாகிலும் நீங்கள் செய்கின்ற இந்தப் பணி, நீண்டகாலம் அதிலே குடியிருப்பவர்களுக்கு அது பயனளிக்கக்கூடிய வகையிலே அதற்காக ஒதுக்கி வைக்கப்படுகின்ற பணத்தை முழுமையாகச் செலவழிக்கத் தக்க நடவடிக்கையை நாம் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த சில ஆண்டுகளாக, பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிஷம். பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான பல்வேறு கட்டடங்களிலே இன்று ஊழியர்கள் இருக்கிறார்கள்; அரசாங்க அதிகாரிகள் இருக்கின்றார்கள். ஆனால் சரியான பராமரிப்பு இல்லை. அவை பல மாவட்டங்களிலும் இருக்கின்றன. அதைப் பராமரித்தும், அதைப்போல அங்கே



நீண்டகாலமாகக் குடியிருக்கின்றவர்களுக்கு ஏதாவது ஒரு தொகையை நாம் பெற்றுக் கொண்டு அவற்றைக் கொடுப்பதன் மூலம் அவற்றைப் பாதுகாப்பதோடு, அவர்களுடைய குடியிருப்புகளை அங்கேயே அமைத்துக்கொள்ளவும் இயலும். அந்தவகையிலே நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒரேயொரு விஷயத்தைச் சொல்வதற்கு அனுமதிக்க வேண்டும். முல்லைப் பெரியாறு அணை சமாச்சாரத்தில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளை இங்கே சொல்லியிருக்கின்றார்கள். கேரள மாநிலம் என்றும் தமிழக மாநிலம் என்றும் சொல்வதிலே பெரிய வித்தியாசம் ஒன்றும் இல்லை. தமிழ்நாட்டு மக்களுக்குத் தேவையான தண்ணீரைத் தரவேண்டுமென்று கூறுவதில், கேட்பதில் இரண்டு விதமான கருத்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு இல்லை. ஆனால், அங்கே இருக்கின்ற பிரச்சினை என்பது, இதை அங்கே அரசியல் ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். அங்கே இருக்கின்ற காங்கிரஸ்காரர்களும், அங்கே இருக்கின்ற பி.ஜே.பி.க்காரர்களும். இதை அவர்களுடைய பாஷையிலே சொன்னால், என்னுடைய கையிலே இருக்கின்ற மலையாளப் பத்திரிகையிலே அந்தச் செய்தி வந்திருக்கின்றது. அதாவது, அதை மலையாளத்திலே சொல்கின்றேன். 'ஒரு துள்ளி வெள்ளம், முல்லைப் பெரியாறில் நிந்நும், அணையில் நிந்நும் தமிழ்நாட்டினு கொடுக்குகயாணெங்கில், ஈ சர்க்காரினெ முட்டு குத்திக்குந்ந நடபடி ஞங்ஙள் சீகரிக்கும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தச் சர்க்கார் எவ்வளவு சங்கடத்திலே இருக்கும் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். எனவேதான் (மணியடிக்கப்பெற்றது) இரண்டு அரசாங்கங்களும் பேசி, சுமூகமாக எந்த அளவுக்கு விட்டுத்தர முடியும், எந்த அளவுக்கு அந்தத் தண்ணீரை நமக்குத் தர முடியும் என்பதைச் சுமூகமாகப் பேசித் தீர்த்துக்கொள்வதுதான் நியாயமாக இருக்கும். அந்த அடிப்படையிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாட்டு மக்களுடைய நலனைப் பாதுகாத்துக்கொள்வதில் தவறாது; யார்பின்னாலும் செல்லாது. ஆனால் துரதிருஷ்டவசமாக நாயனாருடைய பொம்மையை எரிப்பதால் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டுவிடும் என்று நான் கருதவில்லை.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் சிலபேர் தவறான கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் சொல்வதற்கு எனக்கு நேரம்

இல்லை. நான் சொல்லவும் தயாராக இல்லை. எனவேதான் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்துக்கொள்வதற்கு இரண்டு அரசாங்கங்களும் மீண்டும் பேசி, இப் பிரச்சினைக்கான தீர்வை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமெனக் கேட்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

*** திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை, காட்டு இலாகா போன்ற துறைகளின் மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அதுவும், அன்பு அண்ணன் பொதுப் பணித் துறை அமைச்சர் மாண்புமிகு துரைமுருகன் அவர்களுடைய இலாகாவிலே பேசுவது எனக்கு மிகவும் சந்தோஷம். ஏனென்றால், அவரும் ஒரு எம்.ஜி.ஆர். ரசிகன்; நானும் ஒரு எம்.ஜி.ஆர். ரசிகன். எம்.ஜி.ஆராலே நன்றாகப் படிக்க வைக்கப் பெற்று, ஒரு வக்கீல் ஆகி, நல்ல degreeயெல்லாம் படித்தார். அதை அவரே ஒப்புக்கொண்டிருக்கிறார். எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருக்கும்போது...

பிற்பகல் 12-55

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதற்கும் இந்த மானியத்திற்கும் என்ன சம்பந்தம்? நீங்கள் மானியத்திலே பேசுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** இல்லை, இல்லை. subject-க்கு வருகிறேன். எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருக்கும்போது எம்.ஜி.ஆர்.-உடைய அந்த ஆட்சியைப் பற்றி இதே இடத்திலே வந்து நிறைய அவரைப் பற்றி விமர்சனம் செய்து, நன்றாகப் பேசுவார்கள். அப்போதிருந்தே அவர் பேசும்போது நான் மிகவும் நன்றாக ரசிப்பேன். நன்றாகப் பேசுவார்கள். எதிர்க்கட்சியாக இருந்தாலும், நான் ஆளும் கட்சியிலே இருந்து நன்றாக ரசிப்பேன். அவ்வளவுதூரம் அவருடைய ரசிகனாக இருந்தேன். அப்போது ஒருமுறை அவர் பேசிக் கொண்டிருந்தபோது திடீரென்று மயங்கிப் போய் விழுந்துவிட்டார். ஏனென்றால், Blood Pressure. விழுந்தவுடனே எம்.ஜி.ஆருக்கு அப்படியே உடம்பெல்லாம் புல்லரித்து, அவரே கூப்பிட்டுக் கொண்டுபோய் அந்த லாபியிலே தன் மடியிலே போட்டு Treatment பார்த்து அவரைக் குணமாக்கினார்கள். அப்படி எம்.ஜி.ஆரால் வளர்க்கப்பட்டவர். அப்படிப்பட்டவர் மந்திரியாக இருப்பது, தி.மு.க. அமைச்சரவையில் மந்திரியாக இருப்பது அதெல்லாம் மிகவும்



சந்தோஷம்தான். நாங்கள் எதற்குச் சொல்கிறோம் என்றால், அப்படிப்பட்ட எம்.ஜி.ஆர். அவர்களின் சமாதி அங்கே மெரினாக் கடற்கரையில் பராமரிப்பு இல்லாமல் இருக்கிறது. 30 Tube-lights எரியவில்லை, 11 Focus Lights எரியவில்லை. எம்.ஜி.ஆர். சமாதிக்கு முன்னால் 2 Focus Lights இருக்கின்றன. அதுவும் எரியவில்லை. நீங்கள் இப்படிச் செய்யலாமா? உங்கள் மேலே அவர் உயிரையே வைத்திருந்து, படிக்க வைத்து, அழகெல்லாம் பார்த்தாரே, இப்படி எரியாமல் வைத்திருக்கிறீர்களே ? நேற்று சாயந்திரம்தான் இதையெல்லாம் பார்த்தேன். சரி, அதை விடுங்கள். அண்ணாவின் தம்பி என்று சொல்கிறீர்கள்...

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.-உடைய சமாதியில் விளக்குகள் எரியவில்லை என்று இவராக ஒரு கணக்குப் போட்டுச் சொல்கிறார். அது எந்த அளவிற்கு உண்மை என்று தெரியவில்லை. ஆனால் ஒன்று. சமாதியில் விளக்கு எரியாமல் இருக்கக்கூடாது. அப்படி இருந்திருந்தால் அது உடனடியாக rectify செய்யப்படும் என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கோ விளக்கு எரியவில்லை என்றால்கூட அதற்கும் மந்திரிதானா? என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தீர்கள் என்றால், அதை நான் செய்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள், திரு. சுந்தரம் நீங்கள் உட்காருங்கள்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுந்தரம், உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசிக் கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** அவர் எப்போது Chance கிடைக்கும் என்று பார்த்துக் கொண்டிருக்கிறார். (சிரிப்பு) ஆகையால், அது அண்ணா சமாதியாக இருந்தாலும் சரி, எம்.ஜி.ஆர். சமாதியாக இருந்தாலும் சரி, பெருந்தலைவர் காமராஜருடைய நினைவிடமாக இருந்தாலும் சரி, ஆக, அங்கேயிருக்கின்ற விளக்குகள் எரிய வேண்டும்; அந்த இடங்கள் தூய்மையாக வைத்துக்கொள்ளப்பட வேண்டும் என்பதில் மாறுபட்ட கருத்து இல்லை. எனவே, மாண்புமிகு தாமரைக்கனி சொன்னது உண்மையாக இருக்குமானால் மாலைக்குள் அது சரிசெய்யப்பட்டு, விளக்குகள் எரியும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** இல்லை, கணக்குச் சொல்லவில்லை. நேற்று சாயந்திரம்தான் நான் பார்த்தேன். உண்மையிலேயே நான் சொல்கிறேன். 3 அழகு நீரூற்றுகளும் செயல்படாமல் இருக்கின்றன. ஏனென்றால், இலட்சக்கணக்கான மக்கள் அண்ணா சமாதிக்கும்,

எம்.ஜி.ஆர். சமாதிக்கும் வருகிறார்கள். அதிலும் எம்.ஜி.ஆர். தேசியத் தலைவர் அதுவும் நீங்கள் மந்திரியாக இருக்கும்போது, எம்.ஜி.ஆர். ரசிகர், நீங்கள் மந்திரியாக இருக்கும்போது, இப்படி ** எங்களுக்கெல்லாம் மனது வேதனைப்படுகிறது. அதனால் அதையெல்லாம் பார்த்துக்கொள்ளுங்கள்....

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எம்.ஜி.ஆர். சமாதியிலே விளக்கு எரியவில்லை, நீரூற்று செயல்படவில்லை, பார்த்தார்கள். பக்கத்திலேதான் அண்ணா சமாதி இருக்கிறது. அதில் ஏதாவது அப்படி எரியாமல் இருக்கிறதா? அதைப் பார்த்தார்களா? அது உண்மையா?

**திரு. இரா. தாமரைக்கனி:** ஆமாம். அண்ணா சமாதியைப் பார்த்தேன். 60 Tube-lights எரியவில்லை. 23 Focus Lights எரியவில்லை.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** Tube-lights கிடையாதுங்க. 60 Dome-lights எரியாமல் இருப்பதற்கு வாய்ப்பில்லை. 60 Dome-lights எரியவில்லை என்பதெல்லாம் தவறான கருத்து. Exaggerate பண்ணிச் சொல்லாதீர்கள். (குறுக்கீடு) நீங்கள் காலையிலே போய்ப் பார்த்தீர்களா? பொன்முடி கேட்கிறார், காலையிலே போய்ப் பார்த்தீர்களா என்று. (சிரிப்பு)

**திரு. இரா. தாமரைக்கனி:** நேற்று night இதற்காகவே போய்ப் பார்த்தேன். ஆமாம். பிறகு....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசும்போது எம்.ஜி.ஆர்-ஐ. ** இருக்கிறது என்று சொன்னீர்கள். அந்த வார்த்தை வேண்டாம். எடுத்துவிடலாம்.

**திரு. இரா. தாமரைக்கனி:** எம்.ஜி.ஆர்.-ஐ ** என்ற வார்த்தை வேண்டாம் என்றால் சரி. அவருக்கு ஒரு மரியாதையாகச் சொல்லிக்கொள்ளலாமா? அந்தமாதிரி அரசினர் தோட்டம் ஓமந்தூரார் தோட்டம் என்று சொல்லி நாம் பெயர் வைத்திருக்கிறோம். அந்த நுழைவு வாயிலில் போர்டு வைத்திருக்கிறோம். ** அளவிலே, ஏதாவது அரசியல் கட்சியினுடைய மகாநாடு, இதுமாதிரி நடக்கும்போது யாராவது தலைவர்கள் வருகிறார்கள் என்றால் பெரிய பெரிய banners அதை மறைக்கின்ற

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



ாதிரி வைத்துவிடுகிறார்கள். அவற்றையெல்லாம் நீங்கள் அப்புறப்படுத்த வண்டும். முன்னாலே நீங்கள் எதிர்க்கட்சியாக இருக்கும்போது M.L.A's ostel, அந்தத் தோட்டத்திலே எல்லாம் முழுவதும் wall posters ட்டுகிறார்கள் என்று சொல்லி, திரு. இரகுமான்கான் அண்ணன் ுவர்களே படம் எடுத்து, சட்டசபையில் வந்து காட்டுவார்கள். நான் டம் எடுக்கவில்லை. அங்கே முழுவதும் அரசியல் கட்சிகளுடைய wall osters எல்லாம் இருக்கின்றன. அரசினர் தோட்டத்திலே தோட்டமே டையாது. வெறும் காடாக இருக்கிறது. முழுவதும் அரசாங்க ஆபீஸாக ந்திருக்கிறது. அதை எல்லாம் கட்டுப்படுத்துங்கள். அங்கே முழுவதும் ப்பைக் கூளங்கள், இவைதான் கிடக்கின்றன. சாலை வசதி சரியாக ல்லை. தோட்டமே இல்லை. தோட்டத்திற்கு என்று சொல்லி 50 பேர் வலை பார்ப்பதாக ரெக்கார்டு வைத்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் ங்கே போய்விட்டார்கள் என்று தெரியவில்லை. ஆகையினாலே, அது ரசினர் தோட்டமாக இருக்க வேண்டும்; பூங்கா, பூங்காவாக இருக்க வண்டும். ஆகவே, அதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் ன்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எந்தத் தோட்டத்தைப் பற்றி ங்கள் சொல்கிறீர்கள்?

**திரு. இரா. தாமரைக்கனி:** அரசினர் தோட்டம்; ஓமந்தூரார் அரசினர் தாட்டம். கூவத்திலே படகு விடுவோம் என்று சொன்னீர்கள். இன்னும் டகு விடக் காணோம். கூவத்தை மணக்க வைப்போம் என்று சான்னீர்கள். இன்னும் மணக்கக் காணோம். காஷ்மீர் மாதிரி வத்திலே வீடு கட்டுவோம் என்று சொன்னீர்கள். shopping centre வப்போம் என்றெல்லாம் சில பேர் தி.மு.க. மேடையிலே எல்லாம் சினார்கள். அதை எல்லாம் எப்போது செய்யப்போகிறீர்கள். கடல் உள்ளே புகுந்து மேடாக இருக்கிறது. அந்தக் கடல் நீரைக் வத்திலே விட்டு அதையெல்லாம் சுத்தமாக வைக்கப்போகிறோம் ன்றெல்லாம் சொன்னீர்கள். அதைச் சுத்தமாகச் செய்யுங்கள். கூவம் ற்றுக்கரையிலே நிறைய பேர் பட்டா போட்டுக் கொடுப்பதாகச் சால்கிறார்கள். அது உண்மையோ, பொய்யோ. நீங்கள் அதிலேயெல்லாம் னமாக இருந்து பட்டா போடப்பட்டதை நிறுத்த வேண்டிய )பாடுகளைச் செய்யுங்கள்.

அடுத்தது, சென்னைக்குக் கிருஷ்ணா நீர். கிருஷ்ணா நதி நீர் வந்துதான் சென்னையிலே எல்லோரும் தண்ணீர் சாப்பிடுகிறார்கள். அது ஏதோ, காவிரித் தாய் சிலை இருக்கிற மாதிரியும், சரவணா ஸ்டோர்ஸிலேயிருந்து 100 ரூபாய் கொடுத்து ஒரு குடம் வாங்கிக் கொண்டு வந்து, பாதித் தண்ணீரே காவிரியிலேயிருந்து வந்த மாதிரி ஊற்றி வைத்தார்கள். மேயர் தேர்தலுக்காக; 50 இலட்சம் ஓட்டுக்கள் வாங்குவதற்காக; வாங்கி மேயரும் வந்துவிட்டார். ஆனால், தண்ணீர் வரவில்லை. ஆந்திராவிலே பார்த்தீர்களானால் எல்லையிலே நான்காகப் பிரித்திருக்கிறார்கள். ஆரம்ப இடத்திலேயே 13 கிலோமீட்டருக்கு நாம் கால்வாயே வெட்டவில்லை. ஒப்பந்தக்காரர்களுக்குக் காசு கொடுக்கவில்லை. ஒப்பந்தக்காரர்கள் வரமாட்டேன் என்று சொல்லி, கால்வாயே வெட்டப்படாமல் இருக்கிறது. அன்றைக்கு எப்படிச் சொன்னீர்கள், ஏப்ரல் 15 ஆம் தேதி தண்ணீர் வரும் என்று; ஏப்ரல் 28 ஆம் தேதி வரும் என்று சொன்னீங்க. இப்படி சென்னை மக்களையே, எல்லோரையுமே-ஏப்ரல் ஃபூல் 1 ஆம் தேதி என்று சொல்றாங்க--அந்த மாதம் முழுவதும் ஏப்ரல் ஃபூல் ஆக்கிவிட்டீர். இதற்காக, அமைச்சர் சட்டசபை கூடிய போது ஆந்திராவுக்குப் போனீர்கள். அங்குள்ள பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளரைப் பார்த்தீங்க. அவர் 25 கிலோமீட்டர் கால்வாய் வெட்ட வேண்டும் என்று சொன்னார்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** என்ன சார் இது. ஏதாவது விவரம் தெரிந்து பேச வேண்டும். என்னமோ, தெருப்போக்கன் பேசுகிற மாதிரி என்னமோ, 'பேசறேன்னாங்க, போனேன்னாங்க, வந்தேன்னாங்க, வெட்றேன்னாங்க, சொன்னாங்க' என்று. என்ன இது? இது சட்டசபை Tell me exactly. உங்களுக்கு அதிலே என்ன வேண்டும்? என்ன குறை சொல்கிறீர்கள்? எங்கே தவறு சொல்கிறீர்கள்? விளக்கம் சொல்கிறேன். அதை விட்டு விட்டு சம்பந்தமே இல்லாமல், 'பேசறேன்னாங்க, போனேன்னாங்க, வந்தேன்னாங்க, இருக்கிறேன்னாங்க, என்று. *(சிரிப்பு)* It does not look nice on. இது சட்டசபை. என்ன தவறு? என்ன சொல்கிறீர்கள்? அதைச் சொல்லுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** சென்னைக்குக் குடிநீர் கொடுத்துவிட்டீர்களா? எந்தத் தேதியில்? மே 1, மே 8 என்று சொல்கிறீர்கள். எந்த வருடம் 1, எந்த வருடம் 8?



**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** உட்காருங்கள், ஏற்கெனவே தண்ணீர் கொடுத்தாயிற்று. இந்த ஆண்டு, அடுத்த மாதம் 1 ஆம் தேதி தண்ணீரைத் திறந்துவிடுகிறார்கள். அது வருகிறது, போதுமா?

**திரு. இரா. தாமரைக்கனி:** ஏற்கெனவே ஏப்ரல் 15 என்றும், 28 என்றும் சொன்னீர்கள். இதே சட்டசபையிலே சொன்னீர்கள். அது நடந்துவிட்டதா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** அதைத்தான் உங்களுக்குச் சொல்கிறேன். ஏற்கெனவே அங்கே பழுது பார்க்கும் வேலை நடந்துகொண்டிருக்கிறது. கடைசியிலே நேற்றுகூட-சென்ற வாரம்-மந்திரியைப் பார்த்துவிட்டு வந்தேன். Bulldozer வேலையெல்லாம் நடந்து முடிந்துவிட்டது. 1 ஆம் தேதி evening-க்குள் வருகிறது என்று சொன்னார்கள். 1 ஆம் தேதி திறப்பார்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** கால்வாய் வெட்டாமல் எப்படித் தண்ணீர் வரும்? . . . . .

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, clarification.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** எங்கே கால்வாய் வெட்டவில்லை என்று சொல்கிறார்கள்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி, நீங்கள் என்ன, எல்லாவற்றுக்கும் நேற்று, நேற்று என்று சொல்கிறீர்கள். நேற்று எம்.ஜி.ஆர். சமாதிக்குப் போனேன் என்று சொல்கிறீர்கள்; அதேமாதிரி கிருஷ்ணா நதிநீர் கால்வாய் வெட்டுகிற இடத்திற்குப் போனேன் என்று சொல்கிறீர்கள். எங்கேதான் போனீர்கள்? *(சிரிப்பு)*

*(திரு. இரா. தாமரைக்கனி ஒரு வீடியோ கேசட்டை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரிடம் காட்டினார்.)*

இப்போது ஒரு video cassette-ஐக் காட்டுகிறீர்கள்? இதற்கு என்னிடம் அனுமதியை வாங்கினீர்களா?

**திரு. இரா. தாமரைக்கனி:** வாங்குகிற மாதிரி...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதிலே கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லுங்கள். ஆந்திராவிலே கால்வாய் வெட்டுகிற இடத்திற்குப் போனீர்களா?

**திரு. இரா. தாமரைக்கனி:** ஆமாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எம்.ஜி.ஆர். சமாதிக்குப் போனீர்களா? இரண்டுக்கும் பதில் சொல்லுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** எம்.ஜி.ஆர். சமாதிக்குப் போய்விட்டு (சிரிப்பு) அதற்குப் பிறகு நான் ஆந்திராவிற்குப் போனேன். (சிரிப்பு) என்ன, இருட்டாக இருக்கும் என்று பார்க்கிறீர்களா? பெட்ரோமாக்ஸ் விளக்கு போன்ற எல்லாவற்றையும் கொண்டுபோனேன்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** அவர் கிருஷ்ணா நதிநீர் கால்வாய் வெட்டுகிற இடத்தை . இரவிலே video எடுத்திருப்பார். இருட்டிலே video எடுத்திருப்பார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** இல்லை. இருட்டிலேயும் படம் எடுக்கலாம். இருட்டிலேயும் விளக்கு வைத்துப் படம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். எனவே, நீங்கள் சென்னைக்குக் குடிநீர் கொடுக்கிற மாதிரியே இல்லை.

முதலமைச்சர் தொகுதியான சிந்தாதிரிப்பேட்டை வழியாக வரும்போது முழுவதும் பெண்கள். கியூ வரிசையில் பிளாஸ்டிக் குடங்களை வைத்து இருக்கிறார்கள். இப்படி சிந்தாதிரிப்பேட்டை, சைதாப்பேட்டை எல்லா இடங்களிலேயும். அதனால் எம்.ஜி.ஆர். இருக்கும்போது எப்படி இரயில் மூலமாக சென்னைக்குக் குடிநீர் கொண்டு வந்தார்களோ, அதுபோல நீங்களும் சென்னைக்கு குடிநீர் கொண்டுவர ஏற்பாடு செய்யுங்கள். மே 1-லும் தண்ணீர் வராது, மே 8 ஆம் தேதியும் தண்ணீர் வராது...

(மணியடிக்கப்பெற்றது) முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையில்...



பிற்பகல் 1-05

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** தண்ணீர் வரக்கூடாது என்பதுதான் அவருடைய நோக்கம் என்பதுபோல் தெரிகிறது. தண்ணீர் வரக்கூடாது என்று கருதுகிறார்களா?

**திரு. இரா. தாமரைக்கனி:** இல்லை. நீங்கள் பொதுமக்களை நான்கு வருஷமாக ஏமாற்றிவிட்டீர்கள். (குறுக்கீடு) இனிமேலும் தண்ணீர் வருமா? ஏப்ரலும் போயிற்று, மே மாதமும் போய்விட்டது. அதனால் ஏமாற்றியே பழக்கம். பொதுமக்களை ஏமாற்றியே உங்களுக்குப் பழக்கம். ஆகவே நிச்சயமாகத் தண்ணீர் வராது. முல்லைப் பெரியாறு அணை சம்பந்தமாக அங்குள்ள விவசாயிகள் காய்கறிகளைக் கேராளாவுக்கு அனுப்ப வேண்டாம் என்று சொன்னார்கள். இப்போது கேரள முதலமைச்சர் தமிழ்நாட்டு முதலமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். தமிழ்நாட்டு முதலமைச்சர் கேரள முதலமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். இருக்கும்போது பாரதப் பிரதமராக மொரார்ஜி தேசாய் இருந்தார்கள். அதனால் அப்போது கேரளாவில் மேற்கு நோக்கிப் பாய்கிற தண்ணீர் அரபுக் கடலில் போய்க் கலந்து வீணாகிறது, அதைத் திருப்பி தமிழ்நாட்டிற்குக் கொண்டுவர வேண்டுமென்று சென்னையில் வைத்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அதேமாதிரி பிரதமர் வாஜ்பாய் அவர்களை அழைத்து, அவர் முன்னிலையில் தமிழக முதலமைச்சரும், கேரள மாநில முதலமைச்சரும் சென்னையில் வைத்துப் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும். முல்லைப் பெரியாறு அணை விஷயமாக சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகவேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதனால் காலதாமதம் ஆகும். கிணற்றுக்குள் போட்ட கல் மாதிரி ஆகிவிடும். அதனால் சென்னையில் வைத்து பேச்சுவார்த்தை நடத்தி, அந்தப் பகுதி விவசாயிகளுடைய பிரச்சினையைப் பற்றிப் பேசவேண்டும். பிரதமருடன் பேசும்போது அந்தப் பகுதி விவசாயிகளுடைய பிரதிநிதிகளையும் அழைத்து வந்து பேசுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். (மணியடிக்கப்பெற்றது) இரண்டே நிமிடம்...

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** "பிரச்சினையை அரசாங்க அளவில் பேசும்போது விவசாயிகளுடைய பிரதிநிதிகளையும் வைத்துப் பேசவேண்டும்" என்றார்கள். 1979 ஆம் ஆண்டு பெரியாறு அணையின்

நீர் மட்டத்தைக் குறைக்க வேண்டுமென்று முடிவெடுத்த நேரத்தில், அன்றைக்கு (குறுக்கீடு) திருவனந்தபுரத்தில் ஒப்பந்தம் போட்டார்கள், உங்களுடைய ஆட்சியில். அப்போது கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகளுடைய பிரதிநிதிகளை வைத்துக்கொண்டா பேசினார்கள்?

**திரு. இரா. தாமரைக்கனி:** அது அணையை repair செய்வதற்கு நடந்தது. இப்போது அணையைப் பலப்படுத்துவதற்கும், தண்ணீர் கொண்டு வருவதற்கும் பேச்சுவார்த்தை நடத்தும்போது அவர்களையும் கூப்பிட்டு வைத்துப் பேசுவதால் என்ன குறைந்துவிடும்? அப்போது கூப்பிடவில்லை;. அதனால் இப்போது கூப்பிட மாட்டோம் என்று ஏன் விதண்டாவாதம் எல்லாம் பண்ணுகிறீர்கள்? ஒரு கோரிக்கை சொல்கிறோம். அதை ஏற்றுக்கொண்டால் ஏற்றுக்கொள்ளுங்கள், ஏற்றுக்கொள்ளாவிட்டால் போங்கள். எங்களுக்கு என்ன வந்தது?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு ஒதுக்கிய நேரம் முடிந்துவிட்டது. நீங்கள் இங்கே காட்டிய அந்த Video cassett-ஐ எனக்குக் கொடுங்கள். அது உண்மையா, ஆந்திராவுக்கு நேற்றுப் போய் நீங்கள் பார்த்தீர்களா, படம் எடுத்தீர்களா என்று நாங்கள் பார்க்கவேண்டும். (குறுக்கீடு) அவையில் காண்பித்து, காண்பித்து அங்கேயே உங்களிடமே வைத்துக்கொண்டால் என்ன அர்த்தம்?

**திரு. இரா. தாமரைக்கனி:** மாறிவிடக்கூடாது. துணை சபாநாயகர் அவர்கள் M.L.A.-க்களுக்குப் போட்டுக் காட்டுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. அதை முதலில் என்னிடம் காட்டுங்கள். அதைப் பார்த்துவிட்டு நான் சொல்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** நேரடியாக நான் அங்கே போய் எடுத்துக்கொண்டு வந்ததுதான்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரிடம் Video cassett கொடுக்கப்பட்டது.)*

**திரு. இரா. தாமரைக்கனி:** சந்தனக் கடத்தல் வீரப்பன் விஷயத்தில் ஒரு வெள்ளை அறிக்கை வைக்கவேண்டும். வனத் துறை அதிகாரிகள் எத்தனை பேர் இறந்தார்கள், போலீஸ் அதிகாரிகள் எத்தனை பேர் இறந்தார்கள், எவ்வளவு செலவு ஆகியிருக்கிறது, என்ன விஷயம் என்று



ஒரு வெள்ளை அறிக்கையை வைக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

எங்களுடைய தொகுதியில் இராஜபாளையம், ஸ்ரீவில்லிப்புத்தூர் பகுதிகளில் மேற்குத் தொடர்ச்சி மலை இருக்கிறது. அந்த மலைப் பகுதியில் சரணாலயம் எல்லாம் இருக்கிறது. அந்த சரணாலயத்தில் எந்த மிருகமும் இல்லை. பூராவையும் வேட்டை ஆடுகிறார்கள். சந்தன மரங்களைப் பூராவும் வெட்டிவிட்டார்கள். வனத் துறைக்குச் சொந்தமான நிலத்திலும் வெட்டிவிட்டார்கள், கோயில் நிலத்திலும் வெட்டிவிட்டார்கள். மரத்தைப் பூராவும் வேரோடு வெட்டிவிட்டுப் போய் விட்டார்கள். மிருகங்கள் பூராவையும் வேட்டையாடுகிறார்கள். இப்போது மரம் இல்லாமல் பூராவும் கஞ்சா பயிர் போட்டு, அரேபிய நாட்டுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஏற்றுமதி செய்கிறார்கள். சென்னையில் மட்டுமல்லாமல், மத்திய சிறைச்சாலைகள், மற்ற இடங்களுக்குப் பூராவும் கஞ்சா விற்பனை செய்கிறார்கள். இது சம்பந்தமாக முதலமைச்சரிடம் petition கொடுத்தேன். மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் petition கொடுத்தேன். உடனே சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமே விசாரணைக்கு வருகிறார்கள். கடைசியில் raid போகிற மாதிரி போலீசும் (மணியடிக்கப்பெற்றது)... நாட்டுக்குத் தேவையானதைப் பற்றி நான் பேசுகிறேன். உடனே ஆபீசர்கள் எல்லாம் ரெய்டு பண்ணுவது மாதிரிப் போய், அங்கே நாணல் பூராவுக்கும் தீ வைத்துவிட்டு வந்துவிடுகிறார்கள். இத்தனை கோடிக்கு கஞ்சாப் பயிர்களை அழித்துவிட்டோம்; அத்தனை கோடிக்கு அழித்து விட்டோம் என்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாகத் தலையிட்டு கஞ்சாப் பயிரை அழிக்கவேண்டும். இதில் அரசுக்குக் கெட்ட பெயரை ஏற்படுத்துகிற அளவுக்கு அதிகாரிகள் இருப்பதால், எந்த அதிகாரி மீது புகார் கொடுக்கிறோமோ அந்த அதிகாரிகளுக்கே தெரிவித்து petition-ஐ close பண்ணுகிறார்கள். ஆகவே, இதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. பாலசுப்பிரமணியம்.

**திரு. இரா. தாமரைக்கனி:** தொகுதிப் பிரச்சினையை மட்டும் பேசிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லையில்லை. நிறைய நேரம் பேசிவிட்டீர்கள், உட்காருங்கள். அவர் பேசட்டும்.

*பிற்பகல் 1-10*

**திரு. ப. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் தங்களுக்கும் எனது நன்றியினையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொதுப் பணித் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பேட்டில் தமிழகத்தினுடைய முதல்வர், கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் கழக ஆட்சி ஏற்பட்ட பிறகு தஞ்சை மாவட்டத்திலே நடைபெற்று வருகின்ற பொதுப்பணித் துறையினுடைய திட்டங்களைப் பார்க்கின்றபோது உண்மையிலேயே தஞ்சை மாவட்டத்தின் விவசாயிகள் மிகவும் பாராட்டுகிறார்கள்.

*2000-2001* ஆம் ஆண்டில் *1,213* எக்டேர் கூடுதல் நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கும் என்ற அளவிலே திட்டங்களைத் தீட்டுவதன் மூலமாக விவசாயத்தைப் பொறுத்தவரையில், கூடுதல் மகசூல் கிடைக்கும் என்று சொல்லியிருப்பதற்கு விவசாயப் பெருமக்களின் சார்பாக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல பாசனத் திட்டங்களுக்காக இந்த ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியளவு *544* கோடி ரூபாய் அளவிலே இருக்கிறது என்பதைப் பார்க்கும்போது உள்ளபடியே மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நமது ஆட்சி ஏற்பட்டபின் தஞ்சை, திருவாரூர், நாகை ஆகிய மாவட்டங்களில் நடைபெற்று வருகின்ற தூர்வாரும் பணிகளைப் பாராட்டாத விவசாய நெஞ்சங்களே இல்லை என்ற அளவிலே இந்த ஆண்டில் *20* கோடி ரூபாய்க்கு தூர்வாரும் பணி நடைபெற இருப்பதும் விவசாயிகளின் வயிற்றிலே பாலை வார்க்கும் என்ற அளவிலே இந்த அரசு செய்து கொடுத்திருக்கிறது. இந்த மாவட்டத்திலுள்ள ஆறுகள், கால்வாய்கள், கண்மாய்களில், தூர்வாரும் பணியைப் பொறுத்தவரை கிட்டத்தட்ட *57* கோடி ரூபாய் அளவிற்கு மதிப்பீடு செய்து பணிகள் தொடங்க இருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்திற்கு பொதுப் பணித் துறையின் மூலமாக நடைபெறுகின்ற வேலைகளுக்கு எல்லாம் உறுதுணையாக இருக்கின்ற எங்களுடைய மாவட்டத்தைச் சார்ந்த உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் அது கடைமடைப் பகுதி. என்னுடைய தொகுதியில் கடைமடைப் பகுதியாக இருக்கின்ற ஆத்திக்கோட்டை, வேப்பங்காடு, எட்டு புளிக்காடு, சேண்டாக்கோட்டை, கன்னியாகுறிச்சி, உலையக்குண்டம், பத்தங்காடு போன்ற இடங்களின் அருகிலே ஓடுகின்ற காட்டாற்றிலே நீர் இறைவைத் திட்டங்களை நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரத்தநாடு தொகுதியிலே தளிக்கோட்டை, தலையாமங்கலம், வல்லம்வாரி, ஒக்கநாடுகீழையூர் போன்ற இடங்களிலும் இந்த இறைவைப் பாசனத் திட்டத்தை இந்த ஆண்டு அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் பாட்டுவனாச்சியில் வாட்டாகுடி தாலுகாவில் ஒரு அணைக்கட்டையும், அதேபோல பல வருடங்களாக மங்கனங்காடு படுகை அணைத் திட்டத்தின் வேலை நடந்து கொண்டிருந்தாலும்கூட, இன்னும் முடியாமல் இருக்கின்ற அந்தத் திட்டத்தையும் இந்த ஆண்டு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் என்னுடைய தொகுதியில், ராஜாமடம் வாய்க்காலின் குறுக்கே வேப்பங்காட்டிலும், ஏனாதியிலும், எனது சொந்த கிராமத்திலும் இரண்டு பாலங்களைப் பொதுப் பணித் துறையின் மூலமாகக் கட்டிக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் தூர் வாரப்படாத எஞ்சியுள்ள ஆறு, ஏரி, குளங்களில், நெய்வேலி காட்டாமணிச் செடிகளை அழித்து தூர்வார இந்த ஆண்டு நீங்கள் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே வெண்டாக்கோட்டை அணையைப் பழுது நீக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேநேரத்தில் கடைமடைப் பகுதிகளுக்குத் தண்ணீர் செல்ல வேண்டுமென்று சொன்னால், மதகுகளுக்குப் பூட்டு இல்லை. அந்த அளவிலே பூட்டு திறப்பு அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். பாசன வாய்க்காலிலே பழுதடைந்த இடங்களைப் புதுப்பித்துக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, வெண்டாக்கோட்டைக்கு அருகே இடதுகரை வாய்க்காலில் நம்முடைய துவரங்குறிச்சி பக்கத்திலே இருக்கின்ற அய்யார் என்ற ஏரியில் அந்த வாய்க்காலினுடைய தண்ணீர் அளவு குறைக்கப்பட்டு, அதற்குப் பிறகு, அந்தத் தண்ணீர் கடைமடைப் பகுதியான மஞ்சனூர் போன்ற கிராமங்களுக்குச் செல்ல வேண்டிய காரணத்தால், அந்த குளத்திற்கு அருகே ஒரு வாய்க்காலை வெட்டி, கடைமடைப் பகுதிகளுக்கு தண்ணீர் செல்வதற்கு உண்டான சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய ஆத்தூர் சட்டமன்ற உறுப்பினருடைய ஒரு கோரிக்கையான இராமநாயக்கன்பாளையம், கல்லாறு திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பல்வேறு திட்டங்களையும் பொதுப் பணித் துறை மூலமாக தஞ்சை மாவட்டத்திற்கு வழங்கித் தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 1-15*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. புரட்சிமணி.

***திரு. ச. புரட்சிமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணி மற்றும் வனத் துறை மானியங்கள் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த எங்களுடைய மக்கள் தலைவர் அய்யா மூப்பனார் அவர்களுக்கும், தங்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துறையினுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே தொழுதூர்-பெலாந்துறை அணைக்கட்டுத் திட்டத்திற்காக 3.56 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை கடந்த ஆண்டே ஒதுக்கப்பட்டது. ஆனால் இதுவரை இந்தப் பணி செய்து முடிக்கப் படவில்லை. இந்தப் பணியை இந்த ஆண்டே செய்து முடித்திட வேண்டுமாய் நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று காலங்கள் கடத்துகின்ற நேரத்தில் திரும்ப அந்தப் பணியைச் செய்யும்போது, திருத்திய மதிப்பீடு போட வேண்டுமென்று சொல்லி, காலத்தை நீட்டித்துக்கொண்டே போய் விடுகிறார்கள். ஆதலால் இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி போதாமல் போய்விடுகிறது. எனவே, இந்தத் திட்டத்தை இந்த ஆண்டே செய்து தரவேண்டுமாய் இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோன்று என்னுடைய தொகுதியில் வெலிங்டன் நீர்த்தேக்கம் உள்ளது. அதன் கொள்ளளவு சுமார் 31 அடி ஆகும். அதன்மூலம் சுமார் ஒரு இலட்சம் விவசாயிகள் பயன்பெறுகிறார்கள். அந்த நீர்த்தேக்கத்தின் கரைப் பகுதி கடந்த ஆண்டு பெய்த கடும் மழையினால் சுமார் 10 அடி கீழே இறங்கிவிட்டது. அதைச் சரிசெய்வதற்காக அப்பொழுது தற்காலிகமாக 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு சரிசெய்தார்கள். ஆனால் மீண்டும் இந்த ஆண்டு சுமார் 5 அடி கீழே இறங்கிவிட்டது. அந்தக் கரை பலமாக இல்லை. அந்தக் கரையை இந்த ஆண்டு பலப்படுத்தித் தரவேண்டும். டான்டன் அவர்களும் வந்து பார்வையிட்டுச் சென்றுள்ளார்கள். அதையும் இந்த ஆண்டே சரிசெய்து தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, 29 துணை ஏரிகள் உள்ளன. இந்தத் துணை ஏரிகளில் தூர் எடுத்து அதனை ஆழப்படுத்தித் தரவேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, என் பகுதியில் சுண்ணாம்பு ஓடை உள்ளது. அந்தச் சுண்ணாம்பு ஓடை சிறுபாக்கம் பகுதியில் உள்ளது. அந்தச் சுண்ணாம்பு ஓடையில் வருகின்ற அந்தத் தண்ணீரெல்லாம் காட்டுப் பகுதிக்குச் சென்று வீணாகப் போகின்றது. அந்தச் சுண்ணாம்பு ஓடையின் குறுக்கே ஒரு அணையைக் கட்டி அதன் வாயிலாக சிறுபாக்கம் ஏரிக்குக் கொண்டு வந்தால் சுமார் 2 இலட்சம் மக்கள் பயன் பெறுவார்கள் என்று இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, அந்தச் சுண்ணாம்பு ஓடையின் குறுக்கே ஓர் அணையைக் கட்ட வேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, மதுரவல்லி கிராமத்தில் உள்ள புஞ்சை நிலங்களில் மழைக்காலங்களில் சுமார் 5 மாதங்களில் கழுதூர் ஓடையில் தண்ணீர் வந்து கொண்டிருக்கின்றது. அந்த மேலூர் அணைக்கட்டில் புதியதாக வாய்க்கால் வெட்டினால் அதன் மூலம் சிறுமங்கலம், கோவிலூர் ஆகிய கிராமங்கள் பயன்பெறும். ஆகவே புதியதாக அங்கே வாய்க்காலை வெட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, சேவூர்-மதுரவல்லி திட்டம். அந்தத் திட்டத்தையும் இந்த ஆண்டே செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, புலிவலம் என்ற கிராமம் உள்ளது. அந்த புலிவலம் கிராமத்தின் நடுவில் ஒரு சிறிய ஓடை சென்று கொண்டிருக்கிறது. அந்த ஓடையில் மழைக்காலங்களில் தண்ணீர்

ஓடுவதால், அந்தப் பகுதிக்குச் செல்ல முடியாத நிலைமை இருக்கிறது. ஆதலால் புலிவலம் கிராமத்தில் ஒரு பாலம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கணபதிகுறிச்சி கிராமத்தில் வசித்து வரும் மக்கள் ஆதிதிராவிட மக்கள். அவர்கள் அந்தக் கிராமத்திற்குச் செல்லவேண்டுமென்றால், கிட்டத்தட்ட 2 கி.மீ. சுற்றித்தான் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. ஆதலால் கணபதிகுறிச்சியில் பொதுப் பணித் துறையின் வாய்க்காலில் ஒரு பாலம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று கோடங்குடி கிராமம் இதுவரை பேருந்தே செல்லாத கிராமமாக இருக்கிறது. அந்த கோடங்குடி கிராமத்திற்கு ஒரு சிறிய பாலம் கட்டித் தர வேண்டும். அந்தப் பாலத்தின் வழியாகப் பேருந்து செல்ல முடியாது. ஆதலால், புதிய பாலம் கட்டித்தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

அதேபோன்று, தொரவளூர் என்ற கிராமத்தில் அரசு உயர்நிலைப் பள்ளி ஒன்று உள்ளது. அந்தப் பள்ளிக்குப் போதுமான கட்டட வசதியும், போதுமான விளையாட்டு மைதானமும் இல்லை. அதற்குத் தேவையான இடம் இல்லை. அந்தப் பள்ளிக்கு அருகிலே இந்தப் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான 5 ஏக்கர் நிலம் உள்ளது. அந்த நிலம் சும்மாதான் இருக்கிறது. அந்த நிலம் எதற்கும் பயன்படவில்லை. ஆதலால், அந்த நிலத்தை இந்தப் பள்ளிக்குக் கொடுத்திட வேண்டுமாய் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, டி.வி. புத்தூர் என்ற கிராமம் உள்ளது. அந்த டி.வி. புத்தூர் கிராமத்திற்கு அருகில் வெள்ளாறு என்ற ஒன்று உள்ளது. அதில் அதிகமான தண்ணீர் சென்றுகொண்டிருந்த அந்த நேரத்தில் அந்தக் கரைப் பகுதியில் அரிப்பு ஏற்பட்டு, அந்தக் கிராமமே அழிந்து விடுகின்ற அளவில் மிகக் கடுமையாக இருக்கிறது. ஆதலால், டி.வி. புத்தூர் கிராமத்தில் தடுப்புச் சுவர் கட்ட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, புதிய வீராணம், பழைய வீராணம் திட்டம். இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு வெகுகாலம் ஆகிறது. சேத்தியாத்தோப்பு பகுதியிலே இந்தப் புதிய வீராணத் திட்டம் மற்றும் பழைய வீராணத் திட்டம் ஆகியவற்றுக்கான சிமெண்ட் குழாய்கள் வீணாகக் கிடக்கின்றன.



பல காலமாக அந்த சிமெண்ட் குழாய்கள் எந்தப் பயனும் இல்லாமல், பல்லாயிரக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள அந்தக் குழாய்கள் சும்மா இருக்கின்றன. வீணாக இருக்கிற அந்த சிமெண்ட் குழாய்களை நம்முடைய அரசு வேறு ஏதாவது திட்டத்திற்கு பயன்படுத்தினால் நன்றாக இருக்குமென்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, தூர் வாரிய ஏரிகளில் கருவேல மரங்களை சமூக நலக் காடுகள் திட்டத்தில் திரும்பவும் நட்டு கிராமத்திற்கு வருவாய் உண்டாக்குகிற அளவுக்குச் செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

காட்டு வளத்தைப் பொறுத்தவரையில் Range Officer, A.C.F., இவர்களுக்கு பதவி உயர்வு கொடுக்கும்போது, இரண்டு ஆண்டுகள் அவர்கள் ரப்பர், தேயிலை கார்ப்பரேஷனில் பணியாற்ற வேண்டுமென்று G.O. உள்ளது. அது போன்ற G.O. மற்ற மாநிலங்களில் இல்லை. இங்கே 22 ஆண்டுகள் பணியாற்றியவர்களுக்கு பதவி உயர்வு இல்லை என்று தெரிவித்துள்ளார்கள். அந்த நிலையை மாற்றி, G.O.-வைத் தளர்த்தி அவர்களுக்கு பதவி உயர்வு கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, 1998-99ஆம் ஆண்டில் ரூ. 10 இலட்சத்தில் ஏரியை நவீனப்படுத்தும் திட்டம் ஒன்று அறிவிக்கப்பட்டது. இன்னின்ன சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு ஏரி என்று அறிவிக்கப்பட்டது. அதிலே பல ஏரிகளில் எந்த வேலையும் செய்யப்படவில்லை. செய்யப்பட்ட வேலைகளுக்கும் பணம் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு அந்தப் பணம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி சுப்புலட்சுமி செகதீசன்.

***திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000-2001ஆம் ஆண்டுக்கான பொதுப் பணிகள், பாசனங்கள் மற்றும் வனத் துறை மானியக் கோரிக்கைகளின் மீது சில கருத்துகளை எடுத்துச் சொல்கின்ற வாய்ப்பினைத் தந்த தங்களுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப்

பணித்துறை அமைச்சர் அவர்களுக்கும், முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*"வரப்புயர நீருயரும்*
*நீருயர நெல்லுயரும்*
*நெல்லுயரக் குடியுயரும்*
*குடியுயரக் கோலுயரும்*
*கோலுயுரக் கோனுயர்வான்."*

என்று ஔவைப் பாட்டி தெரிவித்தாள். ஔவைப் பாட்டியின் அறிவுரையை ஏற்று கடந்த காலத்திலே விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் வரப்பை உயரமாகக் கட்டிப் பார்த்தார்கள். ஆனால் வரப்புதான் உயர்ந்ததேயொழிய வயல்களிலே நீர் உயரவில்லை. எனவே, வயலுக்கு நீர் வராமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆய்வு செய்தார்கள். அதனுடைய விளைவாகத்தான் இன்றைக்கு காவிரி ஆறாக இருந்தாலும், பல்வேறு அணைகளிலிருந்து வருகின்ற கால்வாய்களாக இருந்தாலும், கிளைக் கால்வாய்களாக இருந்தாலும், கொப்பு வாய்க்கால்களாக இருந்தாலும், அவை கட்டப்பட்ட காலத்திலேயிருந்து பராமரிப்புச் செய்யப்படாமல் அவை எல்லாம் மண்மேடிட்டு, செடி கொடிகள் மண்டி, நீர்ப் போக்குவரத்தைத் தடுத்ததனுடைய விளைவாகத்தான் விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் போதுமான நீர் கிடைக்கவில்லை என்பதை உணர்ந்து, இன்றைக்கு அவற்றில் எல்லாம் தூர் வாருகின்ற பணியைத் துரிதப்படுத்தி, கடந்த நான்கு ஆண்டுகாலமாக எல்லா நீர்நிலைகளிலேயும் காவிரியிலிருந்து மற்றும் பல்வேறு கண்மாய்கள், ஏரிகள் குளங்கள், கிளைவாய்க்கால்கள், கொப்பு வாய்க்கால்கள் என்று நீர் ஆதாரங்களிலேயே எந்தவிதமான பாகுபாடும் இல்லாமல் எல்லா இடங்களிலேயும் இந்தத் தூர்வாருகிற பணிகளை, கரைகளை உயர்த்துகின்ற பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருவதன் மூலம், இன்றைக்கு விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் போதுமான அளவிற்கு நீர்ப்பாசனத்திற்குத் தண்ணீர் கிடைப்பதோடு மட்டுமல்ல; இப்படிப்பட்ட பணிகளை மேற்கொண்டிருப்பதன் மூலம் புதிய ஆயக்கட்டுகளையும் அந்த நீர் ஆதாரத்தோடு இணைத்து, புதிய ஆயக்கட்டுகளை இணைப்பதன் மூலம் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மிகச் சிறந்த பணியை இன்றைக்கு இந்த அரசு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.



*பிற்பகல் 1-25*

கொள்கை விளக்கக் குறிப்பில் மாநிலத்தின் மேற்பரப்பு நீரை அநேகமாக முழுவதையும் பயன்படுத்திவிட்ட நிலையில், பெரிய மற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்கான வாய்ப்புகள் இப்போது மிகவும் குறைவாக உள்ளன. இந்தச் சூழலில் தற்போதைய கால்வாய் பாசன முறையையும், ஏரிப் பாசன முறையையும் நவீனப்படுத்துவன் மூலம், நீர் வீணாகாமல் தடுப்பதுடன், நீரை சீரான வகையில் உரிய அளவுக்கு மட்டுமே பயன்படுத்துவதிலும் தற்போது அதிகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என்பதைச் சுட்டிக்காட்டி, ஏறத்தாழ 36 புதிய திட்டங்களை மேற்கொண்டு அவற்றின் மூலம் சிறப்பான முறையிலே பாசனத்தை மேற்கொண்டு வருகிறீர்கள்.

ஈரோடு மாவட்டம் முழுவதும் விவசாயத்தை நம்பி இருக்கக்கூடிய மக்கள் வாழ்கின்ற பகுதி. அந்தப் பகுதியில், ஏற்கெனவே இங்கே பெருந்துறை சட்டப் பேரவை உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப்போல, கடந்த காலங்களிலே விவசாயப் பெருங்குடி மக்கள் எத்தனையோ கோரிக்கைகளை வைத்தும், அந்த கோரிக்கைகள் எல்லாம் முழுவதும் புறக்கணிக்கப்பட்டும், நிராகரிக்கப்பட்டும் விவசாயிகள் மிகப் பெரிய வேதனையில் ஆழ்ந்திருந்தார்கள். எனவே, அந்த வேதனையை வெளிப்படுத்துகின்ற வகையிலேயும் அரசாங்கத்தினுடைய கவனத்தைத் தங்கள் பக்கம் ஈர்க்க வேண்டுமென்ற உணர்வோடும்தான் 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில், விவசாயிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் மொடக்குறிச்சி தொகுதியிலே தேர்தலிலே போட்டியிடுவதற்கான அந்த முயற்சியை மேற்கொண்டிருந்தார்கள். அன்றைக்கு அந்த விவசாயப் பெருங்குடி மக்கள் அரசுக்கு வைத்த கோரிக்கைகளில், பல்வேறு கோரிக்கைகள் கடந்த நான்கு ஆண்டு காலத்திலே நிறைவேற்றப்பட்டு விட்டன என்பதை இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடும் மனநிறைவோடும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அந்தக் கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றி வைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே தொகுதி மக்களின் சார்பாகவும், மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் சார்பாகவும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஈரோடு மாவட்ட விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று வேளாண் உயர்மட்டக் குழுவை அமைத்தீர்கள். அந்த வேளாண் உயர் மட்டக் குழு, மாவட்டத்தில் இருக்கக்கூடிய அனைத்து நீர்ப்பாசனப் பகுதிகளையும் பார்வையிட்டு, அங்கே செய்யப்பட வேண்டிய பல்வேறு பணிகளை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்த நேரத்தில் ஓர் உயர்மட்டக் குழுவை அமைத்ததோடு, அரசினுடைய கடமை முடிந்துவிட்டது என்று நீங்கள் கருதாமல், அந்த உயர் மட்டக் குழு தந்த ஆலோசனையை ஏற்று, சென்ற ஆண்டு பத்து கோடி ரூபாயும் இந்த ஆண்டு பத்து கோடி ரூபாயும் அந்த மாவட்டத்திற்கு ஒதுக்கித் தந்து, கீழ்பவானி பிரதானக் கால்வாயும், கிளைக் கால்வாய்களும், தடப்பள்ளி, அரசங்குட்டை போன்ற பாசனக் கால்வாய்களும் மற்றும் காளிங்கராயன் கால்வாயும் தூர் வாரப்பட்டு, உடைந்து கிடந்த மதகுகள் எல்லாம் சரிபார்க்கப்பட்டு, கடைக்கோடி விவசாயிகளுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு, தண்ணீர் போதுமான அளவிற்கு இப்போது விவசாயிகளுக்குக் கிடைத்து வருகிறது. அந்தப் பணியை அத்தோடு நிறுத்திவிடாமல், இன்னும் ஏறத்தாழ இந்தத் திட்டத்திற்காக *55* கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்று கொள்கை விளக்கக் குறிப்பிலேயே நீங்கள் சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள். எனவே, இரண்டாண்டு காலம் நடைபெற்றுக் கொண்டிருந்த இந்தப் பணி இன்னும் தொடர்ந்து நடைபெற வேண்டும். அதன் மூலம் அந்தப் பகுதிகள் எல்லாம் சிறப்பாகச் செப்பனிடப்பட வேண்டும்; பராமரிக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பாசனப் பங்கீட்டிலும் பாசனக் கால்வாய்ப் பராமரிப்பிலும் விவசாயிகளுக்கே உரிமை வழங்கும் அதிகாரத்தை ஆந்திர மாநிலத்திலே செயல்படுத்துவதைப் போல, தமிழகத்திலும் செயல்படுத்தவேண்டுமென்ற உயரிய நோக்கத்தோடு, அந்த அறிவிப்பைச் சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். இந்த அறிவிப்பு இன்றைக்கு விவசாயப் பெருங்குடி மக்கள் மத்தியிலே மிகுந்த வரவேற்பைப் பெற்றிருக்கிறது. அந்த உரிமையை அவர்களுக்கு வழங்குகின்ற வகையில் இந்த கூட்டத் தொடரிலேயே இந்த மசோதாவைக் கொண்டுவந்து நிறைவேற்றி, அந்த உரிமைகளை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வழங்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன். கீழ்பவானி பாசனப் பகுதி வெட்டப்பட்ட காலத்தில் ஏறத்தாழ அந்த பாசனப் பகுதியிலே, ஆயக்கட்டு



பகுதியிலே சேர்த்துக் கொள்ளப்பட்ட *23* ஆயிரம் ஏக்கர் பாசனப் பகுதியை இடையில் வேறு ஒரு பகுதிக்கு கால்வாய் வெட்ட வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு பாசனப் பகுதியிலிருந்து நீக்கிவிட்டு புதிய இடத்திற்கு பாசனம் செய்து தரப்பட்டது. இடையிலே நீக்கப்பட்ட அந்த பாசனப் பகுதிக்கு தாராபுரம் கட்டு என்று பெயர் இருந்தது. எனவே, அந்த தாராபுரம் கட்டினால் பாதிக்கப்பட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் பலமுறை உங்களைச் சந்தித்து மீண்டும் அந்தப் பகுதிகள் எல்லாம் ஆயக்கட்டிலே சேர்க்கப்பட வேண்டும் என்று வைத்த கோரிக்கையை ஏற்று, இன்றைக்கு கீழ்பவானி பாசனத் திட்டத்தில், தாராபுரம் கட்டு என்று ஒதுக்கி வைக்கப்பட்ட *23* ஆயிரம் ஏக்கர் நிலங்களையும் சேர்த்து, அரசு உத்தரவிட்டு இருக்கிறது. அதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நான் அந்த விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பாக நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவையின் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:** என்னுடைய மொடக்குறிச்சிப் பகுதியில் இருக்கக்கூடிய கொடுமுடி ஊராட்சி ஒன்றியம், மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம் ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றியங்களிலும் நிலத்தடி நீர் மட்டம் குறைந்ததால், அந்த இரண்டு ஒன்றியங்களும் Black list-ல் சேர்க்கப்பட்டுள்ளன. Black list-ல் சேர்க்கப்பட்டதன் காரணமாக, ஏற்கெனவே மின் இணைப்புப் பெற்ற விவசாயப் பெருங்குடி மக்கள் change over செய்வதற்குக்கூட இன்றைக்கு மின்சார இலாகா அனுமதி தராததன் காரணமாக, அவர்கள் கஷ்டப்பட்டு வெட்டிய கிணற்றிலிருந்து தண்ணீரை எடுத்து பாசனம் செய்வதற்குக்கூட வழியில்லாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். அந்த *2* யூனியன்களுமே கீழ்பவானி பாசனத் திட்டத்தின் மூலமும், காளிங்கராயன் பாசனத் திட்டத்தின் மூலமும் பயன்பெறுகிற பகுதி. அதுவும் காளிங்கராயன் பாசனம், ஆண்டிலே *10* மாத காலம் தண்ணீர் பாய்கின்ற பகுதி. எனவே, கோடை காலங்களிலே நிலத்தடி நீர் மட்டம் குறைந்தாலும், இந்தப் பாசனம் பெறுகின்ற காலங்களிலே மீண்டும் அது re-charge ஆகிவிடுகின்றது. நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துவிடுகிறது. எனவே, இப்படிப்பட்ட பாசனப் பகுதிகளை உள்ளடக்கிய அந்த இரண்டு ஒன்றியங்களையும் Black list-ல் இருந்து நீக்கி, பழையபடி விவசாயப்

பெருங்குடி மக்கள் மின் இணைப்புப் பெறவும், change over-க்கும் அனுமதி வழங்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

அரக்கன்கோட்டை பாசனப் பகுதி விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று அந்தப் பகுதியிலே இன்றைக்கு சிறப்பான முறையிலே பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. சித்திரை மாதம் 5ஆம் தேதி பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட வேண்டும். ஆனால் அந்த பராமரிப்புப் பணிகள் நடைபெற்றதன் காரணமாகத் தண்ணீர் எப்பொழுது திறந்துவிடப்படும் என்று தேதி அறிவிக்காத நிலையில் அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய பாசன விவசாயிகள் தண்ணீர் திறந்துவிடப்படுகின்ற தேதியை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பத்து நாட்களுக்கு முன்பாக அந்தத் தேதி அறிவிக்கப்பட்டால்தான், அவர்கள் நாற்று விடுகின்ற பணியிலே தங்களை ஈடுபடுத்திக்கொள்ள முடியும். அதேநேரத்தில் அரக்கன்கோட்டை வாய்க்காலில் ஒரு பகுதியில் கரை இல்லாத காரணத்தால், கரைக்கு அருகிலேயே, வாய்க்காலுக்கு அருகிலேயே கிணற்றை வெட்டி முறையற்ற பாசன முயற்சியிலே இன்றைக்கு பலர் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக பெருமுகை அத்தாணி கிளை வாய்க்கால் மூலம் 2,200 ஏக்கர் பாசனப் பகுதியிலே இருந்தும்கூட இப்படி முறையற்ற பாசனத்தால், நீரேற்றுப் பாசனத்தால் 1,200 ஏக்கர் கூட பாசனம் பெற முடியவில்லை என்று அந்தப் பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் தெரிவித்து இருக்கிறார்கள். எனவே, அவற்றை எல்லாம் ஒழுங்குபடுத்தித் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

காவிரியில் பல இடங்களிலே மணல் திட்டுகளை அகற்றி அங்கு இருக்கக்கூடிய மரம் செடி கொடிகளை அகற்றுகின்ற வகையில் சென்ற ஆண்டு நீங்கள் குளித்தலையில் ஏறத்தாழ 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, அந்தப் பணியை மேற்கொண்டீர்கள். என்னுடைய தொகுதியில் கொடுமுடிக்கு அருகில் காவிரி ஆற்றிலே மணல் திட்டுகள் மட்டுமல்ல; இலாகாவிலே jungle removal என்று சொல்வார்கள், செடி கொடிகளை அகற்றுவதற்கு; ஆனால், காவிரியிலே இருப்பது, கொடுமுடியிலே இருப்பது jungle அல்ல; ஒரு forest அளவுக்கே மரம் செடி கொடிகள் எல்லாம் வளர்ந்து இருக்கின்றன. எனவே, இந்த ஆண்டு அந்தப் பகுதியிலே 10 கிலோமீட்டர் தூரத்தைத் தேர்வு செய்து, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மணல் திட்டுகளையும் மற்றவற்றையும்



நீங்கள் அப்புறப்படுத்தித் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே உங்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இந்தத் துறையைப் பொறுத்த அளவில் ஒப்பந்தம் கோருவதில் இருக்கக்கூடிய ஒளிவு மறைவற்ற தன்மையை இன்றைக்கு சிலர் ஏளனம் செய்து கொண்டிருக்கிறார்கள். கடந்த காலத்தில் nomination முறை என்ற அடிப்படையில் என்ன வேலை யாருக்கு கொடுக்கப்பட்டது; எத்தனை இலட்ச ரூபாய்க்குக் கொடுக்கப்படுகிறது என்பதெல்லாம் இரகசியமாக வைக்கப்பட்டு nomination முறையிலே அனைத்து இலாகாக்களினுடைய ஒப்பந்தங்களும் தரப்பட்டு, கோடி கோடியாகக் கொள்ளை அடித்த ஒரு கொள்ளைக் கும்பலோடு இன்றைக்கு உடன்பாடு வைத்துக் கொண்டு, இந்த அரசாங்கத்தினுடைய ஒளிவு மறைவற்ற ஒப்பந்தத்தை நீங்கள் விமர்சனம் செய்வதன் மூலம் பொது மக்கள் மத்தியிலே ஒரு காட்சிப் பொருளாக ஆக வேண்டாமென்று, உங்கள் மீதுள்ள பாசத்தின் காரணமாக நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-5௦

"போற்றுவோர் போற்றட்டும், புழுதி வாரித்
தூற்றுவோர் தூற்றட்டும்."

என்று கருதி இந்த அரசு மேற்கொண்டிருக்கிற இந்தப் பயணத்தில் உறுதியாக, நிலையாக தொடர்ந்து பணி செய்து இந்த நாட்டு மக்களுக்கு நன்மைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த அடிப்படையில்தான் வள்ளுவப் பெருந்தகை சுட்டிக்காட்டினார்.

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்."

என்று. அதைப்போல, இன்றைக்கு அனைத்துத் தரப்பு மக்களுடைய கோரிக்கையை ஏற்று, முறையோடு செயல்படுவதன் காரணமாகத்தான் இந்த நாட்டு மக்கள் இன்றைக்கு எங்களுடைய ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை, இந்த நாட்டினுடைய முதல்வரை தெய்வமாகக் கருதி வணங்குகிறார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, இந்த வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு நன்றி தெரிவித்து, விடைபெற்றுக் கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்புலட்சுமி செகதீசன் அவர்கள் பேசுகிறபோது, ஏதோ கொள்ளையடித்த கூட்டத்தோடு, நாங்களெல்லாம் சேர்ந்துகொண்டு காட்சிப் பொருளாக ஆகிவிடக்கூடாது என்று பாசத்திலே கூறுவதாகச் சொன்னார்கள்.

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்

கெடுப்பா ரிலானுங் கெடும்."

என்பதுதான் வள்ளுவனுடைய வாக்கு. யார் தவறு செய்தாலும் சுட்டிக் காட்டி தமிழ் மாநில காங்கிரஸ் பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக அந்தக் காலத்திலும் இருந்தது. இந்தக் காலத்திலும் இருந்து கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுப் பணித் துறையில் இருக்கக்கூடிய, ஆங்காங்கு இருக்கக்கூடிய குறைகளைச் சுட்டிக்காட்டுவது நிச்சயமாக ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒன்று. ஜனநாயகத்திலே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.என். வல்லரசு.

***திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை மற்றும் வனத் துறை குறித்த மானியக் கோரிக்கைகள்மீது ஒருசில கருத்துகளை முன்வைக்க நான் விரும்புகிறேன். தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய அமைச்சரவையில் பல்வேறு அமைச்சர்கள் பந்தயக் குதிரை போல் செயல்பட்டு வருகிறார்கள். அவர்களில் முன்னணி பந்தயக் குதிரையாகத் திகழ்பவர் பொதுப் பணித் துறை அமைச்சர், மாண்புமிகு துரைமுருகன் என்றால் அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அப்படிப்பட்ட பந்தயக் குதிரையைப் பொய்ப் புகார்கள் மூலம் ஒரு நொண்டிக் குதிரையாக, ஒரு சண்டிக் குதிரையாக ஆக்கிவிடலாம் எனச் சிலர் திட்டமிட்டாலும், அப்படிப்பட்ட தடைகளையெல்லாம் சட்டைசெய்யாமல் தாண்டிச்சென்று வெற்றிக் கொடி நாட்டி வருபவர் தான் பொதுப் பணித் துறை அமைச்சர் என்றால் அது மிகையாகாது.

இந்தியா ஒரு மாபெரும் விவசாய நாடு. அதுபோல தமிழ் மாநிலமும் விவசாயத்தை முதலிடமாகக் கொண்டிருக்கிற ஒரு மாநிலமாகும். இந்தியா



உலக நாடுகளில் ஏனைய துறைகளில் முதலிடத்தினை வகிக்க முடியாவிட்டாலும், விவசாயத் துறையில் முதலிடத்தை வகிக்கின்ற ஆற்றல் பெற்ற நாடாக இருக்கிறது. அதுபோலவே தமிழகமும் இருக்கிறது. எனவே, நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், நமது தமிழகத்தையும், இந்தியாவையும் உலக நாடுகளிலே தலைசிறந்த விவசாய நாடாக ஆக்குகின்ற வகையில், கங்கை-காவிரி திட்டத்தை, மத்திய அரசு ஒரு நீண்டகாலத் திட்டமாக, தொலைநோக்குத் திட்டமாகச் செயல்படுத்திட கலைஞர் அரசு வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம், கங்கை-காவிரித் திட்டம் இந்தியாவிற்கு மட்டுமல்ல, தமிழகத்திற்கும் ஒரு வரப்பிரசாதம் என்றால் அது மிகையாகாது.

பொதுப் பணித்துறை மூலம் நடைபெற்று வருகின்ற தூர் வாருகின்ற திட்டம், அணைகள் கட்டுகின்ற திட்டம், கால்வாய்கள் வெட்டுகின்ற திட்டம் யாவும் தமிழ்நாட்டில் விவசாய மேம்பாட்டிற்கு மைல் கல்லாக அமைந்திருக்கின்றன என்றால் அதுவும் மிகையாகாது.

குறிப்பாக, தூர் வாரும் திட்டம் தமிழக விவசாயிகளை மிகவும் கவர்ந்திருக்கிறது. இப்படி பொதுப் பணித் துறையிலே நடைபெறுகிற பல்வேறு ஆக்கபூர்வமான பணிகள் இன்றைக்கு தமிழக மக்களின் ஓட்டு வங்கிகளைக் கவருகின்ற ஓர் ஆற்றல் பெற்ற சக்தியாகத் திகழ்கின்றது என்று சொன்னால், அதையும் மிகைப்படுத்திச் சொல்வதாக நான் எண்ணவில்லை.

என்னுடைய கோரிக்கையை ஏற்று எனது உசிலம்பட்டி தொகுதியில் 58 கிராம கால்வாய்த் திட்டத்திற்கு 34 கோடி ரூபாய் நிதியொதுக்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும் (மேசையைத் தட்டும் ஒலி) பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன். காரணம், மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபு மக்களை கைதூக்கிவிட வேண்டும், ஏழ்மையான அந்த மக்களை வாழ வைக்க வேண்டுமென்ற நல்ல உள்ளத்தோடு மிகப் பெரிய திட்டத்தினை வழங்கிய டாக்டர் கலைஞர் அவர்களை மீண்டும் என் தொகுதி மக்களின் சார்பாக மனதார நான் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு இந்த 58 கிராம கால்வாய் வெட்டுகிற பணி 50 சதவீதம் முடிந்திருக்கிறது. அதுவும் ஒரு மகிழ்ச்சியான செய்தி. சிலர் திட்டம் போடுவார்கள். ஆனால் பணம் ஒதுக்க மாட்டார்கள். ஆனால் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் திட்டமும் போட்டு, நிதியையும்

ஒதுக்கி, 50 சதவீதம் வேலைகளையும் முடித்திருக்கிறார்கள் என்றால் அதைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

*பிற்பகல் 1-40*

உசிலம்பட்டிக்கு தெற்கே விடுபட்டுப்போன 6, 7 கண்மாய்களுக்கு நீர்ப்பாசன வசதி வழங்கிட ஒரு திட்டம் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கும் அரசு நிதியொதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உசிலம்பட்டி பகுதியில் செட்டியபட்டி, தொட்டப்பநாயக்கனூர் வட்டாரத்தில் 30 கிராம மக்களுக்கு பயன்படக்கூடிய அசுவமா நதி அணையைக் கட்ட வேண்டுமென்பது எங்களுடைய நீண்டகாலக் கோரிக்கையாகும். அசுவமா நதி அணைத் திட்டம் 3 கோடி ரூபாய் திட்டமாகும். 34 கோடி ரூபாய்க்கான 58 கிராம கால்வாய்த் திட்டத்தைத் தந்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் 3 கோடி ரூபாயிலான இந்த அசுவமா நதித் திட்டத்தை அவசியம் நீங்கள் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அசுவமா நதி அணை கட்டுவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உசிலம்பட்டியில் இரண்டு முறை பொதுமக்களிடம் வாக்குறுதி தந்திருக்கிறார்கள். அதுபோல என்னுடைய தொகுதியிலே மாநாடு போல நடைபெற்ற பூச்சம்பட்டி சமத்துவபுர விழாவிலே நமது பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அசுவமா நதித் திட்டத்தை கட்டித் தருவேன் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, அதைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அன்று அ.தி.மு.க. ஆட்சியில் 58 கிராம கால்வாய்த் திட்டத்தினை நிறைவேற்றக் கோரி சென்னை கோட்டையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தேன். அன்று "சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க வேண்டாம், நான் ஆட்சிக்கு வருவேன். நிச்சயமாக 58 கிராம கால்வாய்த் திட்டத்தைத் தருவேன்" என்று தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களே, நீங்கள்தான் சொன்னீர்கள்; உண்ணாவிரதத்தை முடித்து வைத்தீர்கள். எனவே, இந்த அசுவமா நதித் திட்டத்தை - 3 கோடி ரூபாய் திட்டம் ஒரு பெரிய காரியமே அல்ல அதை - நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திருமங்கலம் பிரதான கால்வாய்க் கரையை இரண்டு அடி உயர்த்திக் கட்ட வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். திருமங்கலம் பிரதானக்



கால்வாயைக் கட்டுகின்றபோது—10,000 ஏக்கர் நீர்ப்பாசன வசதி பெற்றது. இப்போது 25,000 ஏக்கர் நீர்ப்பாசன வசதி பெற்றிருக்கிற காரணத்தால் — திருமங்கலம் பிரதான கால்வாயை இரண்டு அடி உயரமாக உயர்த்த வேண்டும். தற்போது அதனுடைய கடைமடைப் பகுதியான சிந்துபட்டி, தும்பக்குண்டு போன்ற கண்மாய்கள் நிரம்பாமல் அங்கே விவசாயம் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

முல்லைப் பெரியாறு அணை நீர் மட்டத்தை 152 அடி உயர்த்துவதற்கு சட்டபூர்வமான அனைத்து நியாயங்களும் நம்மிடம் உள்ளன. நமக்கு ஆதரவாக 999 ஆண்டுகளுக்கு சட்ட பூர்வமான ஒப்பந்தம் உள்ளது. கேரள அரசு, தமிழக அரசு மற்றும் மத்திய அரசு ஆகிய மூன்று அரசுகளும் சேர்ந்து நடத்திய முத்தரப்பு ஒப்பந்தத்தின்படி முதல் இரண்டு கட்டப் பணிகளை, அணையைப் பலப்படுத்தும் பணியை முடித்துவிட்டாலே நாம் 145 அடி தண்ணீர் வைத்துக் கொள்ளலாம். நாம் இன்று மூன்று கட்டப் பணிகளையும் முடித்திருக்கிறோம். சட்டப்படி இன்று 152 அடி உயர்த்த முடியும். ஆனால் கேரள அரசு 152 அடியாக உயர்த்தவிடாமல் மறுப்பது நியாயமற்ற செயல். அரசியல் உள்நோக்கம் கொண்ட செயல். 152 அடியாக உயர்த்தும் விஷயத்தில் ஓரிரு அரசியல் கட்சிகள் இன்று அக்கறை செலுத்தாமல் இருப்பது வேதனைக்குரியது. ஒரு எலி செத்தால்கூட, ஒரு பூனை செத்தால்கூட அது எப்படிச் செத்தது, ஏன் செத்தது என்று கூறி ஒரு விசாரணை கமிஷன் போட வேண்டுமென்று சொல்பவர்கள்கூட, தினம் தினம் அறிக்கை கொடுப்பவர்கள்கூட இன்றையதினம் ஒரு மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிற இந்த முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தைப் பற்றி ஒரு நாள்கூட அறிக்கை விடவில்லை. ஒருநாள்கூட எடுத்துச் சொல்லவில்லை. அப்படியென்றால் தென் மாவட்ட விவசாயிகளை அவர்கள் புறக்கணிக்கிறார்களா என்று விவசாயிகள் வேதனைப்படுகிறார்கள். முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், கேரள முதல்வர் திரு. இ.கே. நாயனார் அவர்களைச் சந்திப்பதற்கு முன்பே தமிழ்நாட்டிலிருந்து ஓரிரு தலைவர்கள் சென்று அவரைச் சந்தித்திருக்கிறார்கள். அதனுடைய மர்மம் என்ன என்று தெரியவில்லை. அப்படிச் சந்தித்தது தமிழகத்திற்கு சாதகமா அல்லது பாதகமா என்று தெரியவில்லை. குதிரை கீழேயும் தள்ளி விட்டு குழியும் பறித்த கதையாக, தென் மாவட்ட விவசாயிகளுக்குத் துரோகம் செய்வது நல்லதல்ல என்று கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை மானியத்தின்மீது என்னுடைய ஒருசில கருத்துக்களைச் சமர்ப்பித்துக்கொள்கிறேன். பொதுவான கருத்தையும் என்னுடைய தொகுதியைக் குறித்த சில கோரிக்கைகளையும் வைப்பதற்கு முன்பு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கோதர் மைதீன் அவர்களுடைய பாளையங்கோட்டை தொகுதி குறித்த ஒரு கோரிக்கையை நான் வைக்க விரும்புகிறேன். இந்தத் தொகுதியிலுள்ள 20 கிராமங்களைச் சேர்ந்த, 35 குளங்களைச் சேர்ந்த சுமார் 3,375 ஏக்கர் நிலங்கள் வடக்குப் பச்சையாறு பாசனத்திற்கு உரிமை பெற்றவை. இது தாமிரபரணி வடிநிலைக் கோட்ட கோப்புகளிலும் வருவாய்த் துறை ஆயக்கட்டு கோப்புகளிலும் உள்ளது. தற்போது இந்த உரிமையை மாற்றி, சம்பந்தம் இல்லாத சில பகுதி நிலங்களை வடக்குப் பச்சையாறு திட்டத்தில் சேர்க்க முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. எனவே, கடந்த 100 ஆண்டுகளாக உரிமையுடைய பாளையங்கோட்டை தொகுதி நிலங்களை வடக்குப் பச்சையாறு திட்டத்தில் சேர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். தொடர்புடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் கேட்டுக் கொள்கிறார்கள்.

பிற்பகல் 1-45

எங்களுடைய இந்த பாசனத் திட்டத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிக நல்ல சுறுசுறுப்பானவர். சிந்தித்துச் செயல்படக்கூடியவர். இன்னும் சொல்லப் போனால் ஒரு காரியத்தை எடுத்தால் அதை நிறைவேற்ற வேண்டும் என்பதில் முழுக் கவனம் செலுத்தக் கூடிய ஒரு நல்ல துடிப்புள்ள அறிவார்ந்த ஓர் அமைச்சர் என்பதை இப்போதல்ல, அவருடைய இளமைக் காலம் தொட்டு நான் மிக நன்றாக அறிவேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எந்தக் காரியத்தை எடுத்தாலும் செம்மையாகச் செய்வார்கள் என்பதில் எனக்கு எப்போதுமே நம்பிக்கை உண்டு. அவர் பாலாற்றங்கரையிலே பிறந்தவர். எனவே, அந்தப் பாலாற்றங்கரையினுடைய பெருமைகளை, அதனுடைய வளத்தைத் தக்க வைத்துக் கொள்வதில் என்னை விட அவருக்கு அதிக அக்கறை உண்டு என்று நான் மிகவும் நன்றாக அறிவேன். இது ஒன்று.

அண்மையிலேகூடச் சில பத்திரிகைகளும் இவற்றைச் சுட்டிக்காட்டி இருக்கின்றன. பாலாற்றை நாம் காப்பாற்ற வேண்டும். ஏதோ பாலாறு



பாழாறு என்ற ஒரு கருத்து நாட்டில் சில இடங்களில் இருந்து கொண்டு இருக்கிறது. ஆனால் அந்த பாலாறுதான்—சென்னை வரையிலே— சென்னையில் உள்ள ஆலந்தூர் மக்களுக்கும் நீர் வழங்கிக் காப்பாற்றுகின்றது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. அந்தப் பாலாற்றினுடைய நிலையை நாம் காப்பாற்றித் தருவது நம்முடைய கடமை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பல இடங்களிலே ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்பு, பாலாற்றினுடைய அடிப்படைத் தன்மையையே மாற்றி அதனுடைய நீர்வளத்தைக் குறைத்திடும் வகையில், இன்றைக்கு அதிலே ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. இது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். வாணியம்பாடியிலிருந்து சிறிது தூரம் பாலாற்று ஆக்கிரமிப்புகளையெல்லாம் அகற்றி கரைகளைச் செம்மைப்படுத்திடும் நடவடிக்கையை அரசு மேற்கொண்டிருக்கிறது. அது தொடர்ந்து ஆம்பூருக்கு நீண்டு, பிறகு சதுரங்கப்பட்டினம் வரையிலே பாலாறு சீர்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நான் வைக்கிறேன்.

பாலாற்றுக்குப் பக்கத்திலே இருந்த சில நதிகள் இப்போது அந்தர்யாமி ஆகி விட்டிருக்கின்றன. கண்ணுக்குக்கூட காணக் கிடைக்கவில்லை என்ற நிலை உருவாகியிருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்களேகூட மாலை நேரத்தில் உட்கார்ந்து தன்னுடைய நண்பர்களோடு அளவளாவிக் கொண்டிருந்த வேகவதி ஆறு இப்போது எங்கே என்றுகூட நம்முடைய கண்ணுக்குத் தெரியவில்லை. காஞ்சிபுரத்திற்குச் சென்று பாலாற்றைத் தேடினால் மிகச் சிரமப்பட்டு அதை நாம் பார்க்க முடியும். ஆனால் வேகவதி ஆறு எங்கே என்று சொன்னால் எவ்வளவு வேகத்தைக் காட்டினாலும் வேகவதி ஆற்றைக் காண முடியவில்லை என்ற அளவுக்கு, மிக வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த ஆறு முழுவதும் இன்றைக்கு ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது. அதனை அகற்றுவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பாலாறு கர்நாடகத்தில் இருந்து தோன்றி ஆந்திராவிற்குள் நுழைந்துதான் தமிழகத்திற்கு வருகிறது. நம்முடைய ஆறுகளின் தோற்றுவாய்கள் எல்லாம் மற்ற மாநிலங்களில்தான் இருக்கின்றன. அதனாலே அதனுடைய நீர் நமக்கு வந்து சேர்வதிலே எப்போதும் சிரமம் ஏற்படுகிறது. பாலாற்றிலேகூட ஏற்கெனவே வேத்தமங்கலத்திலே நீர் நிலையினை கட்டியிருக்கின்ற கர்நாடக அரசு மேற்கொண்டு பல ஏரிகளை, நீர் நிலைகளை வேத்தமங்கலத்திற்குப் பிறகும், இன்றைக்கும் கூடக் கட்டிக்கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், ஆந்திராவிலும் பாலாற்றிற்குக் குறுக்கே அணை கட்டுகின்ற முயற்சி தொடர்ந்து நடைபெறுகிறது. எனவே, அதைக் குறித்தும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மற்ற மாநிலங்கள் செய்கின்ற இந்த வேலைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு இன்றைக்கு நமக்கு சட்டபூர்வமாக அதிகாரம் இல்லையென்றாலும் பேச்சுவார்த்தையின் மூலமாகத்தான் இதை நடத்த வேண்டிய கட்டாயங்கள் நமக்கு இருக்கின்றன. ஆனால் ஒரு வருத்தப்படக்கூடிய விஷயம் என்னவென்றால் நம்முடைய நாடு சமஸ்டி நாடு. நாம் ஒன்றை ஒன்று தொடர்புடைய மாநிலங்களாக இருந்துகொண்டு இருக்கிறோம். ஆனால் இந்த மாநிலங்கள் இந்த மாதிரியான பிரச்சினைகள் வரும்போது, நீர்ப் பிரச்சினை வரும்போது, ஏதோ ஆந்திரா ஒரு தனி நாடு, தமிழ்நாடு ஒரு தனி நாடு, கர்நாடகா ஒரு தனி நாடு என்ற உணர்வோடுதான் இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனவே தவிர, ஒட்டுமொத்தமாக இந்திய நாடு ஒரே நாடு என்ற உணர்வோடு யார் செயல்படுகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும் பேச்சுவார்த்தையின் மூலமாகத்தான் இதைத் தீர்க்க முடியும் என்பது ஒன்று. நம்முடைய நதிகளை எல்லாம் தேசியமயமாக்க வேண்டும். நதிநீரை தேசியமயமாக்கும் ஒரு கருத்து நம்முடைய நாட்டிலே தொடர்ந்து இருந்து வருகிறது. இது தொடர்பாக, உருவாகின்ற மத்திய அரசுகள் அல்லது தொடர்புடைய மாநில அரசுகள் பேசுகின்றனவே தவிர, முறையாக மாநிலங்களுக்கிடையே ஏற்படுகின்ற சிக்கல்களை நிரந்தரமாகத் தீர்த்துவைத்திடும் வகையில் நதிகளை தேசியமயமாக்க வேண்டுமென்று சொல்வதோடு நின்றுவிடாமல், அவற்றை முறைப்படுத்தி, வரைப்படுத்தி, அதே நேரத்தில் முறையாக தேசியமயமாக்க வேண்டிய ஒரு முயற்சியிலே ஈடுபட்டு அதிலே வெற்றி காணவேண்டும். இல்லையென்றால் மாநிலங்களுக்கு உள்ளே இருக்கக்கூடிய மோதல்கள் தொடர்ந்துகொண்டுதான் இருக்கும்.

பிற்பகல் *1-50*

முல்லைப் பெரியாறு அணையைப் பொறுத்தவரையில் நான் தமிழக அரசைப் பாராட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். காரணம், பல ஆண்டுகளுக்கு முன்பு, ஏறத்தாழ 1000 ஆண்டுகளுக்கு ஒரு உரிமத்தை வழங்கி ஓர் ஒப்பந்தம் ஏற்பட்ட நிலையில் நாம் பேச்சுவார்த்தையின் மூலமாகத்தான்—ஏனென்றால் நம்முடைய அணை அவர்களுடைய அதிகாரத்திற்கு உட்பட்ட நிலத்திலே இருக்கிறது—



மிகுந்த பொறுமையுடன், பொறுப்புடன் நாம் இந்தப் பிரச்சினையை அணுக வேண்டியவர்களாக இருக்கிறோம். எனவே, நம்முடைய அணுகுமுறையைப் பொறுத்தவரையில் பேச்சுவார்த்தையை முறையாக நடத்தியிருக்கிறோம். கேரள மாநில முதலமைச்சர் நாயனார் அவர்கள்கூட நேற்றைக்கு முன்தினம் ஓர் அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையை ஏன் கொடுத்தார் என்பதெல்லாம் பத்திரிகையிலே வந்திருக்கின்றன. அவர்களுக்கு நாம் வழக்கமாக வழங்கும் அரிசி போன்ற பொருட்களை நிறுத்திவிடுவோம் என்று நம்முடைய விவசாயிகள் சொல்கிறார்கள். அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று தமிழக முதலமைச்சருக்கு அவர் வேண்டுகோள் விடுக்கும் வகையில் ஓர் அறிக்கையைக் கொடுத்திருக்கிறார். நாம் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்துவதிலே எந்தவிதமான தொய்வையும் காட்டவில்லை. இருந்தாலும் உணர்வுகளை நாம் புரிந்து கொண்டுதான் செயல்பட வேண்டும். எடுத்தேன், கவிழ்த்தேன் என்று பேசுவது, இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கிவிடும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள்கூட, மலையாளப் பத்திரிகையிலே வந்த, நம்முடைய நாயனார் அவர்களுடைய ஒரு கருத்தை, அதே நேரத்திலே, அங்கே பேசப்பட்ட ஒரு கருத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஏனென்றால், அரசியல் எந்த இடத்தில் புகுகிறதோ, அந்த இடத்தில் சிக்கல்கள் நிச்சயமாக உருவாகும். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் அரசியலை விடுத்து யதார்த்த நிலையை நாம் கருத்தில் கொண்டுதான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேச்சுவார்த்தை தோல்வி அடைந்துவிட்டது. உச்சநீதிமன்றத்திற்குச் சென்றுதான் நாம் இதற்குத் தீர்வுகாண வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். அலமாட்டி அணை தொடர்பாக, 3 மாநிலங்களுக்கிடையே வந்தது ஒரு மிகப் பெரிய கருத்து வேறுபாடு; கர்நாடகம், ஆந்திரம், மராட்டியம் ஆகிய இந்த 3 மாநிலங்களுக்கும் தொடர்ந்து இருந்துகொண்டிருக்கிறது. ஆனால், உச்சநீதிமன்றம் இப்போது ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறது. அந்தத் தீர்ப்பைப் பெற்று அதை நடைமுறைப்படுத்துவதற்கு பதிலாக 3 மாநிலங்களும் ஒன்றை ஒன்று தாக்கிக் கொள்ள முடியாது, அல்லது போர் செய்து கொள்ள முடியாது. அந்த வகையிலேதான் இந்த முல்லை-பெரியாறு அணை பிரச்சினையையும் அமைதியாகவும், அதே

நேரத்தில் நம்முடைய கொள்கையில் உறுதியாகவும் இருந்து நாம் போராட வேண்டும்; சட்டபூர்வமாகப் போராட வேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* அது கிருஷ்ணா நீராக இருந்தாலும் அல்லது வேறு விஷயமாக இருந்தாலும் Inter-State Disputes என்று சொல்லக்கூடியவற்றை இத்தகைய அடிப்படையிலேதான் அணுக வேண்டும். ஆகையினால் நம்முடைய அரசு எடுத்துக்கொண்ட நிலையை நான் முழுமனதோடு ஆதரிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவது என்னவென்றால், கிராம ஏரிகளில், இதுவரையில் சமூக நலக் காடுகள் திட்டம் என்பதை அடிப்படையாகக் கொண்டு கருவேல மரங்களை நாம் நட்டு வருகிறோம். அதன் அடிப்படையிலே, இதிலே இருந்து வருகின்ற வருமானம் ஏறக்குறைய 60 சதவீதம் பஞ்சாயத்து ஊராட்சிகளுக்குக் கிடைக்கின்றது. அது கூடாது என்று சொல்லிவிட்டால், ஒன்று ஏரிகளில் ஆக்கிரமிப்புகள் ஏற்படும், இரண்டாவது பஞ்சாயத்துகளுக்குக் கிடைக்கக்கூடிய வருமானம் நின்றுவிடும். எனவே, அது கூடாது என்ற ஒரு நிலையை மறுபரிசீலனை செய்து, மீண்டும் இந்தத் திட்டத்தை நாம் கைக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது எங்களுடைய மாவட்டத்தில் இருக்கின்ற தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பாலாற்றிலே நிலத்தடி நீர்தான் உண்டு. ஆனால் நிலத்திற்கு மேலே நீர் வேண்டுமென்று சொன்னால், நம்முடைய கானாறுகளை நாம் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். எத்தனையோ திட்டங்களை வகுத்திருக்கிறோம். செண்பகத்தோப்புத் திட்டம், ராஜாதோப்புத் திட்டம், ஆண்டியப்பனூர் திட்டம், குப்பநத்தம் திட்டம், பத்திரப்பள்ளித் திட்டம் என்று நம்முடைய திட்டங்களை நாம் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். மோர்தானா திட்டம். அது எப்பொழுதுதான் நிறைவேறும் என்று எங்களுக்குத் தெரியவில்லை. நீண்ட நாட்களாக மோர்தானா திட்டம் இருந்து கொண்டிருக்கிறது. அதனை தயவுசெய்து துரிதப்படுத்த வேண்டும்.

*பிற்பகல் 1-55*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டின் இறுதிக்குள் மோர்தானா திட்டத்திற்கான திறப்பு விழா நடைபெறும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அதிலே



வந்து கலந்துகொள்ளலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைப்பார்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மகிழ்ச்சி, நன்றி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் வந்து — நாங்கள் நீண்ட நாளாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்; ஆம்பூர் பகுதிக்குத் தண்ணீர் வழங்கக்கூடிய ஒரே திட்டம் வெள்ளைக்கல் திட்டம். There is no other alternative; அந்தத் திட்டத்திற்கு நீங்கள் உங்கள் குறிப்பிலே அனுமதி வழங்கியிருக்கிறீர்கள். ஆகவே நான் கேட்டுக்கொள்வது—தயவுசெய்து முதலமைச்சர் அவர்களும் வந்து அவருடைய திருக்கையாலேயே அங்கே அடிகோல வேண்டும். வெகுவிரைவிலே செய்ய வேண்டும். *(மணியடிக்கப்பெற்றது).*

அதோடு, எங்களுடைய நிம்மியம்பட்டு பகுதியிலே ஒரு தொழிற்சாலை; இங்கே பார்க்கிறேன், உங்களுடைய குறிப்பிலே பார்த்தால்கூட, இந்த சந்தனம், ஊருக்கெல்லாம் பயன்படுகிற எங்களுடைய சந்தனம் திருட்டுப் போகிறது. கோடிக்கணக்கான ரூபாய்க்குத் திருட்டுப் போகிறது என்று உங்களுடைய குறிப்பே சொல்கிறது. அதுமட்டுமல்ல, எவ்வளவு விளைகிறது? அதிலேயிருந்து வருகிற வருமானத்தைப் பொறுத்தவரை நீங்கள் ஒரு வருடத்திற்கு 12 அல்லது 15 கோடி ரூபாய் பெற்றால், அதிலே — நான் பல ஆண்டுகளாகச் சொல்லிக்கொண்டு இருக்கின்றேன்— நான்கைந்து கோடி ரூபாயைப் பயன்படுத்தி ஒரு பெரிய தொழிற்சாலையை எங்களுடைய நிம்மியம்பட்டு கிராமத்திலே நீங்கள் ஏற்படுத்தித் தந்தால், அந்த மலைவாழ் மக்களுக்கு வேலைவாய்ப்பு அதிகமாகும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நான் நன்றியோடு இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்; மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதற்கு முந்தைய ஆண்டு, இதிலே என்ன ஆனாலும் சரி, நஷ்டம் ஏற்பட்டாலும், இலாபம் ஏற்பட்டாலும், இந்த அரசு அந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்தும் என்ற உறுதியான, இறுதியான வாக்குறுதியை இந்த அவையிலே வழங்கியிருக்கிறார்கள். அதை முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். உங்களிடத்திலே நான் இப்பொழுது கோரிக்கை வைப்பது, தயவு செய்து நீங்களே வாருங்கள். எங்கள் பகுதிக்கு வந்து நீண்ட நாட்கள் ஆகிவிட்டன. எனவே, நீங்களே வந்து, நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களோடு வந்து, அதற்கு அடிகோலுங்கள்; விரைவிலே செய்யுங்கள் என்று உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன். நிம்மியம்பட்டு சந்தனத் தொழிற்சாலை, அதிலே உங்களுடைய கைப்பட அதற்கு அடிகோலி,

உங்களுடைய வாக்குறுதியை விரைவிலே நிறைவேற்றுங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதோடு அன்றைக்கே இந்த வெள்ளைக்கல் அணைத் திட்டத்திற்கும் அந்த ஆணை பிறப்பிக்கப்பட்டதற்குப் பிறகு - நீங்கள் வந்து உங்களுடைய திருக்கையால் அதற்கு அடிகோலுங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது, அதற்கான முறையான அறிவிப்பை உங்களுடைய பதிலிலே, தயவுசெய்து நீங்கள் வழங்க வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

இரண்டு ஆண்டுகளுக்கு முந்தைய நிதியாண்டில் ஒவ்வொரு தொகுதியிலும் தூர் வாருவதற்கு, சட்டமன்ற உறுப்பினர்கள் குறிப்பிடும் ஏரிகளைத் தூர் வாருவது பற்றி நீங்கள் சொன்னீர்கள். அது கடந்த ஆண்டு இல்லாமல் போய்விட்டது. தயவு செய்து அது தொடர்ந்திட வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் குறிப்பிடும் அந்த ஏரிகளைத் தூர் வாரக்கூடிய அந்தத் திட்டத்தை நீங்கள் மீண்டும் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏரிகளெல்லாம் நம்முடைய முன்னோர்கள் ஏற்படுத்தியவை. இன்றைக்கு இருக்கிற பொறியாளர்கள் போல் அன்றைக்கு பொறியாளர்கள் இல்லாமலே நுணுக்கமான ஏரிகளை நம்முடைய முன்னோர்கள் இந்த நாட்டிலே ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவையெல்லாம் தூர்ந்து போய்விட்டன. வரத்துக் கால்வாய்கள் எல்லாம் ஆக்கிரமிப்பிற்கு ஆளாகிவிட்டன. தயவுசெய்து நான் கேட்டுக்கொள்வது, வரத்துக் கால்வாய்களிலே இருக்கிற ஆக்கிரமிப்புகளை அகற்றி, மழை பெய்யும்போது, அந்த மழை நீரெல்லாம் ஏரியில் சென்று தேங்கும் வகையில் நீங்கள் ஒரு முறையான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். வரத்துக் கால்வாய்களிலே இருக்கக்கூடிய ஆக்கிரமிப்புகளையெல்லாம் அகற்றுவதற்கு நீங்கள் முனைப்பான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். நான் உங்களுக்குச் சொல்கிறேன். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஏரியில் தண்ணீர் இருந்தால்தான் தண்ணீர் இருக்கும்; கேணியில் தண்ணீர் இருந்தால்தான் கேணியில் நீர் கிடைக்கும்; பாசனத்திற்கு நீர் கிடைக்கும் என்ற நிலை இருக்கிறது. எனவே, இப்பொழுது மழை பொய்த்துவிட்ட காரணத்தால், மிகப் பெரிய பயங்கரமான சூழ்நிலையிலே இருக்கின்றன நம்முடைய வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்; எனவே, நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்; இதற்கான முறையான நடவடிக்கை எடுத்து, அங்கே இருக்கிற விவசாயிகளுக்கு நீங்கள் நிம்மதியைத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



வனத்தைப் பொறுத்தவரையிலே, இப்போது இருக்கிற வனப் பரப்பளவு போதாது. அதைக் காப்பாற்றுவதற்கு இப்போது விரிவுபடுத்த வேண்டும். இப்போது, 50 சதவிகிதம்கூட வனம் இல்லை. தேசியக் குறியீடு ஒன்று இருக்கிறது. அந்தத் தேசியக் குறியீட்டின் அடிப்படையிலே 50 சதவிகிதம்கூட இல்லை. அதை விரிவாக்குவதற்கு என்ன நடவடிக்கை என்று பார்க்க வேண்டும். நீங்கள் நீர்ப்பிடிப்பு இடங்களிலே இந்த வன விரிவாக்கத் திட்டத்தை வகுத்திருக்கிறீர்கள். பாலாற்றிலேயும் செய்திருக்கிறீர்கள். தயவுசெய்து, அந்த மரம் நடும் திட்டத்தைக் கண்காணிப்போடு நடத்த வேண்டும். அந்த மரங்கள், செடிகளாக வருகின்றன; ஆனால், அவை நிலங்களிலே பதிக்கப்படுவதில்லை. இதற்குப் பணம் செலவாகிறது. ஆனால், எந்தப் பயனும் இல்லாத நிலை இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) அதை நிலைப்படுத்த முக்கிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நன்றி தெரிவித்து என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

பிற்பகல் 2-00

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். இன்னும் 3 உறுப்பினர்கள் பேசி, எதிர்க்கட்சித் தலைவர் பேசி, அமைச்சர் பதில் அளிக்க வேண்டும். தயவுசெய்து உட்காருங்கள். திரு. சி. வேலாயுதன்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** ஒரே ஒரு clarification. ஒரு நிமிடத்திலே கேட்டு முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது. உட்காருங்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, .....

**திரு. பி. ஆர். சுந்தரம்:** ஒரே ஒரு நிமிடம். இந்நேரம் கேட்டு முடித்திருப்பேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன clarification ? யார் பேசியதிலே? எதிலே?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** திரு. வல்லரசு பேசியதிலே.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதை இப்போதா கேட்கப் போகிறீர்கள்? அவர் பேசி, அடுத்த உறுப்பினர் பேசிய பிறகா? நான் 2½ மணிக்குள் அலுவலை முடித்தாக வேண்டும். இன்னும் 2 உறுப்பினர்கள் பேசி, எதிர்க்கட்சித் தலைவர் பேசி, அமைச்சர் பதிலளிக்க வேண்டும்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வல்லரசு பேசும்போது, சந்தானம் காட்டிய ஜாடையிலேயே, அப்பொழுதே எழுந்து பேசியிருக்க வேண்டும். பேசாதது உறுப்பினரின் தவறு.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பார்வார்டு பிளாக் கட்சியின் உறுப்பினர் மாண்புமிகு திரு. வல்லரசு அவர்கள் பேசும்போது, முல்லைப் பெரியாறு அணையை உயர்த்துவது சம்பந்தமாக எங்களுடைய கட்சி எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை; எங்களுக்கு அக்கறை இல்லை என்ற விதத்திலே பேசினார். அந்த அணையினுடைய உயரத்தை உயர்த்துவதற்கு எங்களுடைய கழகப் பொதுச் செயலாளர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அன்றைக்கே வேண்டுகோள் விட்டிருக்கிறார்கள். வருகின்ற ஜூன் மாதம் 6ஆம் தேதியன்று, பெரியகுளம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தினகரன் அவர்களுடைய தலைமையில், தேனி, பெரியகுளம், கம்பம் ஆகிய பகுதிகளிலே இருக்கின்ற விவசாயிகள் அனைவரும் சேர்ந்து ஒரு பெரிய போராட்டத்தை நடத்த இருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவருடைய தலைவி ரொம்ப அக்கறையோடு இருந்ததாக அவர் சொன்னார். அவர் ஐந்தாண்டுகளாக முதலமைச்சராக இருந்தார்; பெரியாறு அணையிலே 152 அடி தண்ணீர் நிரப்ப வேண்டுமென்று அவர் கேரள முதலமைச்சருக்கு வற்புறுத்தி எழுதியது ஒரே ஒரு கடிதம்தான், ஐந்தாண்டுகளில். ஆனால், நான்காண்டுகளிலே, 17 கடிதங்களை எழுதியிருக்கக்கூடியவர், இங்கே அமர்ந்திருக்கிற முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஐந்தாண்டு காலத்திலே



பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தவர் ஒரு கடிதம்கூட எழுதவில்லை. நான், பத்துக்கும் மேற்பட்ட கடிதங்களை என்னுடைய Counter part-க்கு எழுதியிருக்கிறேன். (குறுக்கீடு)

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்று சென்னை வந்த மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் முரளி மனோகர் ஜோஷி அவர்கள், தமிழ் மொழியைச் செம்மொழியாக்கவும், 2000 ஆண்டைத் தமிழ் ஆண்டாக அறிவிக்கவும் முயற்சி எடுத்துக்கொள்வோம் என்று கூறியதற்கு முதலில் அவருக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, பொதுப் பணித் துறை மானியத்தில் பேச வாய்ப்பளித்தமைக்காக உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாசனக் கருத்தரங்கு ஒன்று நடைபெறுகிறது என்றால் பொதுப் பணித் துறையின் அல்லது விவசாயிகள், பாசனம், இவைமீது அக்கறையுள்ள யாரும் அதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இந்த ஒரு செயல், அனைத்துத் துறைகளுக்கும் ஒரு உதாரணமாக அமைந்திருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. உண்மையிலேயே, நாகர்கோவிலில் அந்தப் பாசனக் கருத்தரங்கில் நானும் கலந்துகொள்ள வாய்ப்புக் கிடைத்தது. அனைத்து அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும், அனைத்து விவசாயச் சங்கத் தலைவர்களும் கலந்துகொண்டோம். அவர்களையெல்லாம் அழைத்து வைத்து, உள்ளூரில் விவசாயிகளுக்கு உண்டான பிரச்சினைகளை, அமைச்சரோடும், அதிகாரிகளோடும் கலந்து பேசி, அந்த நிகழ்ச்சியிலே, அதிகாரிகளும் அமைச்சரும் அதற்குண்டான பதிலைச் சொல்லி, சாத்தியமானவற்றை உடனே செய்து கொடுத்து, சாத்தியமாகாதவைகளைப் பொறுத்தவரை ஏன் சாத்தியமில்லை என்பதை விளக்கிக் கொடுத்த அந்த ஒரு நிகழ்ச்சி இருக்கிறதே, உண்மையிலேயே, அரசுக்கும் மக்களுக்கும் உள்ள தொடர்பு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு அது ஒரு உதாரணமாக அமைந்தது. இதேபோல் மற்ற அனைத்துத் துறை அமைச்சர்களும் ஆண்டிற்கு ஒரு தடவையாவது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வந்து இதுபோன்ற ஒரு நிகழ்ச்சியை ஏற்படுத்தினால் மக்களுக்கும் நமக்கும் உள்ள தொடர்பை மீண்டும் அதிகப்படுத்திக்கொள்வதோடு, மக்களுடைய தேவைகளை நாமே புரிந்து

செய்யக்கூடிய ஒரு வாய்ப்பும் ஏற்படும். அதற்கு மற்ற துறைகளும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நல்ல வேளையிலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாம்பழத்தாறு அணைக்கு அடிக்கல் நாட்டினார்கள். பூர்வாங்கப் பணிகள் தொடங்கியாகி விட்டன. அதனுடைய பணியை வேகப்படுத்தி, பணியை உடனே விரைந்து முடிக்க அரசாங்கமே ஆவன செய்ய வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய அந்தமாகிய ஆரல்வாய் மொழியிலிருந்து 25 கி. மீட்டருக்கு மேல் வந்துதான் அந்த இடத்திற்கு வர வேண்டியிருக்கிறது. ஆனால், இந்த அலுவலகத்தை ஆரல்வாய் மொழியில் வைத்துவிட்டு, தினசரி போக வர மொத்தம் 50 கி.மீ. தூரம் சென்று அதிகாரிகளைப் பார்க்கிறார்கள். அந்த 50 கி.மீட்டருக்கு செல்லக்கூடிய நேரம், டீசல், பெட்ரோல் எல்லாம் வேஸ்ட். இதனைப் போக்குவதற்காக, மாம்பழத்தாறு அணையினுடைய பக்கத்திலேயே வில்லுக்குறியில் தேசிய நெடுஞ்சாலையை ஒட்டியே பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான கட்டடம் இருக்கிறது. அதையே, இந்த மாம்பழத்தாறு அணைத் திட்டத்திற்கான அலுவலகமாகப் பயன்படுத்தினால் அதை விரைந்து கவனிக்க ஏதுவாக அமையும்.

*பிற்பகல் 2-05*

கன்னியாகுமரி மாவட்டத்தில் எங்கு பார்த்தாலும் உப்புத் தண்ணீர் என்ற நிலைமை வந்துவிட்டது. அதிகமாக மழை பெய்யக்கூடிய மாவட்டம்; மழை பெய்த ஒரு சில மணி நேரத்திலேயே அவ்வளவு தண்ணீரும் கடலுக்குச் சென்று சேர்ந்துவிடுகிறது. எனவே, வள்ளியாற்றில், இரணியல் பக்கத்தில் ஒரு Check-Dam கட்டக்கூடிய வாய்ப்பிருக்கிறது என்று 10 ஆண்டுகளுக்கு முன்னாலேயே பொதுப் பணித் துறையினுடைய அறிக்கையிலே உள்ளது. அதிலே ஒரு Check-Dam கட்ட வேண்டும். அதேபோன்று, அதே வள்ளியாற்றின் மேல் பகுதி முட்டைக்காட்டில் ஏற்கெனவே இருந்தது கூக்கறை அணை என்று சொல்லக்கூடிய ஒரு அணை. சின்ன அணைதான். அந்த அணை உடைந்துபோய் விட்டது. அந்த அணையை உடனே அரசாங்கம் பழுதுபார்த்து, பொதுமக்களுக்குப் பயன்படக்கூடிய வகையிலே செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

என்னுடைய ஊராகிய கருப்புவெட்டுக் குளத்திற்குத் தண்ணீர் வரக்கூடிய குதிரைப்பாய்ந்தான் குளத்தினுடைய வடக்குப் புறமாக



உள்ள கால்வாய் ஆக்கிரமிக்கப்பட்டு, பொது மக்களாகிய நாங்களே, என்னுடைய ஊரைச் சேர்ந்த அனைவருமே சென்று, 1990 ஆம் ஆண்டு அந்த வாய்க்காலைத் திரும்பவும் பழுதுபார்த்துச் செப்பனிட்டோம். ஆனால் 1992 ஆம் ஆண்டு வந்த பெருமழையால், திரும்பவும் உடைந்துவிட்டது. பழுதுபார்க்க சுமார் 5 இலட்சம் ரூபாய் வரை மதிப்பீடு ஆகும் என்று சொல்கிறார்கள். அதை பொதுப் பணித் துறை உடனே அனுமதித்து, அதைக் கட்டித்தர வேண்டுமென்று அன்பாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, திற்பரப்பு அருவி பக்கத்தில் உள்ள சேனலில் ஒரு பெரிய உடைப்பு ஏற்பட்டு, பாரதீய ஜனதா கட்சியினுடைய மாநிலச் செயற்குழு அங்கே நடைபெற்ற அந்தச் சமயத்தில் டூரிஸ்ட் வேன் ஒன்று அதிலே விழுந்து பெரிய சேதம் ஏற்பட்டது. எனவே, அந்த உடைப்பை உடனே சரிசெய்து கொடுக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, ஏ.வி.எம். கால்வாய். ஏ.வி.எம். கால்வாயைச் சீரமைப்பதற்காக உலக வங்கி உதவியோடு ஒரு திட்டம் தீட்டப்பட்டது. அது தற்போது செயலாக்கப்படாத நிலையில் உள்ளது. அதையும் செயல்படுத்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையில் தண்ணீர்ப் பிரச்சினை பெரும் பிரச்சினையாக இருக்கிறது. நெய்வேலியில் நிலக்கரி எடுக்கக்கூடிய இடத்தில் அதிகமான தண்ணீர் வருகிறது. அந்தத் தண்ணீர், நெய்வேலியைச் சுற்றியுள்ள பகுதிகளில் பாய்ந்து, அது நிலத்தில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய வகையில் சதுப்பு நிலமாக மாறிக்கொண்டிருக்கிறது. எனவே, அந்த நிலத்திலே பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய தண்ணீரை, சென்னைக்குக் கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுபோன்று ஜெயங்கொண்டானில் அடுத்த நிலக்கரிச் சுரங்கம் ஏற்படவிருக்கிறது. அங்கும் அதிகமாகத் தண்ணீர் கிடைக்கக்கூடிய வாய்ப்பிருக்கிறது. எனவே, அந்தத் தண்ணீரை சென்னைக்குக் கொண்டு வந்தால், அதிகமான மக்கள் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பு ஏற்படும்.

அதேபோன்று, பொதுப்பணித் துறையில் 400 பேர் தமிழ்நாடு முழுவதும் 10 ஆண்டுகளாக temporaryஆகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைத் தகுதி அடிப்படையில் நிரந்தரப்படுத்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குமரி மாவட்டத்தில், வனத் துறை மூலமாக ரப்பர் தொழில் ஆரம்பிக்கப்பட்டு, இலங்கை அகதிகளுக்கும், அதுபோன்று மலைவாழ் மக்களுக்கும் பணி கிடைக்கக்கூடிய வகையில் சுமார் 3000 பேருக்கு பணி கொடுத்திருக்கிற அந்தத் துறை இப்போது நலிந்துகொண்டே வருகிறது. காரணம் என்னவென்று சொன்னால், ரப்பர் தடி முற்றியதற்குப் பிறகு முறிக்கின்றார்கள். முறித்த பல ஆண்டுகளுக்குப் பிறகும்கூட, அங்கே கன்றுகளை வைக்காமல் விட்டுவிடுகிறார்கள். சாதாரணமாக, சொந்தமாக ரப்பர் வைத்திருக்கக்கூடியவர்கள், முறித்த உடனேயே அதில் கன்றுகளை வைத்துவிடுகிறார்கள். சில ஆண்டுகளில் அது வளர ஆரம்பித்துவிடுகிறது. எனவே, அரசாங்கமும், ரப்பரை முறித்தவுடன், அங்கு கன்றுகளை வைத்து, அடுத்த பலன் தரக்கூடிய வகையில் ஆவன செய்ய வேண்டும்.

அதுபோன்று வனத் துறைக்குச் சொந்தமான இடங்களில் 62 கிராமங்கள் இருக்கின்றன. பொன்மனை பஞ்சாயத்து, கடையால் பஞ்சாயத்து, சுருளோடு பஞ்சாயத்து போன்ற பஞ்சாயத்துகளுக்கு உட்பட்ட 62 கிராமங்கள் இருக்கின்றன. அந்த 62 கிராமங்களில் வாழக்கூடிய மக்களுக்கு மின்சாரம், போக்குவரத்து, குடிதண்ணீர், போன்ற எந்த வசதியும் கிடையாது. 1986, 1988 ஆம் ஆண்டு வாக்கிலே, மத்திய அரசாங்கம், Working Plan என்று ஒரு திட்டத்தை ஏற்படுத்தி, கேரள மாநிலத்தில் வனத் துறைக்கு உட்பட்டிருந்த அத்தனை கிராமங்களுக்கும் அனைத்து வசதிகளும் செய்யப்பட்டு ஆகிவிட்டன. அதையே பின்பற்றி தமிழ்நாட்டிலும்கூட, அனைத்துக் கிராமங்களுக்கும் மின் இணைப்புக் கிடைக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 2-10*

மேலும், பல கருத்துகள் இருந்தாலும்கூட, நேரம் இல்லாத காரணத்தால், பாரதிய மஸ்தூர் சங்கத்தினுடைய, கோரிக்கைகள் எல்லாம் என் கைவசம் இருக்கின்றன. அவற்றை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கையில் கொடுத்து, தக்க நடவடிக்கை எடுக்கக் கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர், வாழிய பாரதமணித் திருநாடு, வந்தே மாதரம், வந்தே மாதரம், பாரத் மாதா கி ஜே.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில். *நீங்கள் 5 நிமிடம்தான் கேட்டு இருக்கிறீர்கள்.*

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாசனம், பாசனம் குறித்த மூலதனச் செலவுகள், பொதுப் பணிகள், கட்டடங்கள் மற்றும் காட்டு வளம் குறித்த மூலதனச் செலவுகள் குறித்த மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி எனது உரையைத் தொடங்குகின்றேன்.

தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் சார்பாக, எனது கருத்துகளை இங்கே எடுத்து வைக்க முன்வருகின்றேன். கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி தொகுதியைச் சார்ந்த, எனது பள்ளப்பட்டி நகரத்திற்கு, நங்காஞ்சி ஆற்றின் பகுதியிலே ஒரு அணை கட்டுவதற்காக, Check-Dam கட்டுவதற்காக அனுமதி வழங்கிய, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், முதலில் எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, நங்காஞ்சி ஆற்றின் அருகே, தொடர்பான பணி இடைக்கோட்டிலிருந்து கட்டப்பட்டு வருகின்ற அணை 4 ஆண்டுகளாகத் தாமதமாகிக்கொண்டிருக்கிறது; நிதி இல்லை என்ற நிலையிலே, தேக்கி வைத்திருக்கின்றார்கள். அருள்கூர்ந்து அதற்கு நிதியை வழங்கி, விரைவிலே அதைக் கட்டிக்கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

நொய்யல் ஆற்றின் குறுக்கே, ஒரு பாலம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 37/8-ல் எனது தொகுதியிலே இருக்கக்கூடிய, துக்காச்சிபுதூர், மொடக்குறிச்சி, பனைப்பாளையம், ஆகிய சுற்றுப்புற கிராமங்களை இணைக்கக்கூடிய மிக அத்தியாவசியமான பாலமாக இருக்கின்ற காரணத்தால் அதையும் கட்டிக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சின்னதாராபுரம் அமராவதி ஆற்றிலே, நடைபாலம் ஒன்றை கட்டிக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். இதனால் சுற்றுப்புற இடங்களில் இருக்கின்ற, மூலப்பட்டி, சுண்டக்காம்பாளையம், ஆயக்கவுண்டம்பாளையம், மேட்டுப்பாளையம், லட்சுமிபுரம், கருப்பநாயக்கன்புதூர், மாலமேடு கிராமங்கள் இதனால் பயன்பெறும். இந்தக் கோட்டத்திற்கு உட்பட்ட பரமத்தி ஒன்றியத்தைச் சார்ந்த, சின்னதாராபுரம் முதலிய பகுதிகளிலுள்ள விவசாயப் பெருங்குடி

மக்களுக்கு இது மிக அத்தியாவசியமான பாலமாக இருக்கிறது. அதனையும் கட்டிக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏரிகளைத் தூர்வாருகின்ற பணிகளில், செய்து கொடுக்கப்படுகின்ற அந்தப் பணிகளை விரிவுபடுத்தி, ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக இருக்கின்ற ஏரிகளையும் தூர்வாருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்து கொடுத்தால், விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வசதியாக இருக்கும் என்ற கருத்தினைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, என்னுடைய தொகுதியிலே, குடகனாறு மற்றும் நங்காஞ்சி ஆற்றின் மத்தியிலே கருப்பசாமி அணை, முனியப்பன் அணை, ஓட்டணை, ஓமப்பட்டி அணை போன்ற சிற்சில அணைகள் எல்லாம் சிதலமடைந்து கிடக்கின்றன. இந்த அணைகளை எல்லாம் சீர்செய்து செப்பனிட்டுக் கொடுப்பட:5ற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்து கொடுப்பார்களேயானால், அந்தப் பகுதியிலுள்ள விவசாய மக்களுடைய துயரைத் துடைப்பதற்கு வசதியாக இருக்குமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிரிக்கப்படாத திருச்சி மாவட்டமாக இருந்த நேரத்திலே, கரூர் மாவட்டத்திலே இருக்கக்கூடிய, — மாண்புமிகு முதலமைச்சர் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த நேரத்திலே, — எல்.பி.பி. அணையில் பரமத்தி ஒன்றியம், தாராபுரம்கட்டு வாய்க்காலில், மைல் 124.2, 500-ஆர் 23 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு புதிதாக பாசன வசதி செய்துதர ஆயக்கட்டிலே சேர்த்துக்கொள்ள வேண்டுமாய், விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலேயும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடத்திலேயும் என்னுடைய கோரிக்கையை எடுத்து வைத்திருந்தேன். ஆகவே, அந்தக் கோரிக்கையை ஏற்று, லோயர் பவானி திட்டத்தில் சர்வே செய்யப்பட்டு 23 ஆயிரம் ஏக்கர் சேர்க்கப்படும்பொழுது, அப்பகுதியிலே 1500 ஏக்கர் சர்வே செய்யப்பட்டு, அது 23 ஆயிரம் ஏக்கரிலே சேர்க்கப்படாமல் விடுபட்டுவிட்டது என்ற தகவல் குறித்து மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரிடத்திலே, கடந்த 1-3-2000 தேதியிலே, விவசாயிகள் சார்பாக மனு கொடுத்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவோடு ஏற்றுக்கொண்டு, அதை உடனடியாகச் சேர்த்துக் கொள்வதற்காக, துறையினுடைய அதிகாரிகளிடத்திலே அவர்கள் அனுப்பி வைத்து, அது



இப்போது கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலே சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியிலே வாழக்கூடிய என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும், விவசாயப் பெருங்குடி மக்கள் சார்பாகவும், தமிழகத்தினுடைய தன்மானத் தலைவர், கலைஞர் அவர்களுக்கும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியையும், நல்வாழ்த்துக்களையும் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவ்வாறு சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்ற நிலையில் அதற்கான வேலையைத் தொடங்குவதற்கு அரசினுடைய நிதி பற்றாக்குறையாக இருந்தாலும்கூட, விவசாயப் பெருங்குடி மக்கள், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய கால்வாயை வெட்டுவதற்கு தங்களுடைய நிதிநிலையைப் பயன்படுத்தி, அவர்கள் செலவு செய்வதற்குத் தயாராக இருக்கின்றார்கள் என்பதையும் சொல்லி, அந்த வாய்க்கால் வெட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவிலே அனுமதி வழங்கி, ஏழை விவசாயிகளுடைய துயர் துடைப்பதற்கு, கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், விவசாயிகளுடைய கண்ணீரைத் துடைத்து வருகின்ற இந்த நேரத்திலே, அந்தப் பகுதியிலே வாழக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இதைச் செய்து கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே, என்னுடைய தொகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் சார்பாக வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, ஆற்றுப்பாலம்; காருள்ளி பஞ்சாயத்திலே இருக்கக்கூடிய ஊராட்சி ஒன்றியத்திற்கு சம்பந்தப்பட்ட அணைக்கட்டு காருள்ளி நொய்யலாற்றுப்பாளையம்; அந்த ஆற்றுப் பாலத்தில் நமக்கு நாமே திட்டத்திலே நாங்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, விவசாயிகள் இன்றையதினம் தூர் வாரி எடுத்திருக்கின்றார்கள். ஆகவே, அந்தத் திட்டத்தை வகுத்துக் கொடுத்ததற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் விவசாயிகள் சார்பாக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த ஆற்றுப் பாலத்தின் அணைக்கட்டிலே 25 மதகுகள் உள்ளன. அந்த மதகுகளுடைய கதவுகள் எல்லாம் பழுதடைந்திருக்கின்றன. மெயின் ஷட்டர் கால்வாய் மதகு பழுதுபார்க்கப்பட வேண்டிய நிலையில் இருக்கிறது. இப்பகுதியிலே இருக்கக்கூடிய 3 கிலோ மீட்டர் ரோடு நடக்க முடியாமல் ஜல்லிகளாக, சைக்கிள்கூடச் செல்ல முடியாத அளவிற்கு மிகவும் சின்னாபின்னமாக இருக்கிறது. அந்தப் பகுதியிலே

உள்ள 3 கிலோ மீட்டர் ரோடுகளை உடனடியாகப் போட்டுத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 2-15*

கடந்த 4 ஆண்டுகளாக மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே மனு கொடுக்கப்பட்டு அதுவும் ஆய்விலே இருக்கிறது. இந்த நிதியாண்டிலே அதைச் செய்து கொடுக்க வேண்டுமாய்ப் பணிவன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப் பணித் துறையில் ஒப்பந்தப் பணிக்குத் தேவையான கட்டுமானப் பொருட்களை எல்லாம் ஒப்பந்தக்காரர்களே வெளிச் சந்தையில் வாங்கி உபயோகித்துக்கொள்ளலாம் என்று அரசு ஆணை உள்ளதால், பொதுப் பணித் துறையில் சுமார் 15 ஆண்டுகளாகப் பணிபுரிந்தவர்களை — Store-keeper — பண்டகசாலைக் காப்பாளர்கள் பதவி உயர்வு உபரியாக உள்ளதால் வேறு மாற்றுப் பணிக்கு மாறுதல் செய்ய இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். காலம் கருதி அவர்கள் பேச்சை அமைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுப் பணித் துறை தொடர்பாக 3 பிரச்சினைகளை இந்த அவையிலே பேசுவதற்கு தனக்கு அனுமதி வேண்டும் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் காலையிலே என்னிடம் கேட்டார்கள். அந்தப் பிரச்சினைகள் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டன. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அந்தப் பிரச்சினைகள் குறித்து பதில் சொல்லத் தயாராக இருப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பக்கூடிய பிரச்சினைகளுக்கு நான் அனுமதி அளிக்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இன்று பொதுப் பணித் துறை மிக முக்கியமான துறை என்கின்ற முறையில் இந்தத் துறையில் நானும் பேச வேண்டுமென்று



விரும்பி நம்முடைய பேரவைத் தலைவரிடம் அனுமதி கேட்டபோது, அவர்கள் எனக்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். அதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று தமிழ்நாட்டில், ஆந்திர மாநிலத்திலிருந்தும், கேரளத்திலிருந்தும், கர்நாடகத்திலிருந்தும் நமக்கு பல பிரச்சினைகள் வந்துகொண்டிருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் தமிழகத்தினுடைய எதிர்காலம் என்ன ஆகுமோ என்ற கவலை இன்று ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் இன்று நம்முடைய பொதுப் பணித் துறை எப்படிச் செயல்படுகிறது என்று அதில் உள்ள சில குறைபாடுகளை இங்கே எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

பாலாறு பேசின் M.C. 3 இடது பிரதானக் கால்வாய் வெட்டு மராமத்து வேலைக்கு டெண்டர் விட்டதில் 11,24,51,693 ரூபாய்க்குக் கேட்டவருக்கு, அதாவது மௌலி பில்டர்ஸ்க்குக் கொடுக்காமல் 12,22,82,892 ரூபாய் கேட்டவருக்கு அதாவது Nagarjuna Constructions என்ற ஒப்பந்தக்காரர்களுக்கு நம்முடைய அரசு கொடுத்திருக்கிறது. அதாவது, 98,31,199 ரூபாய் குறைவாகக் கேட்ட மௌலி பில்டர்ஸ்க்குக் கொடுக்காமல் Nagarjuna Constructions-க்குக் கொடுத்ததில் அரசுக்கு நஷ்டம் கிட்டத்தட்ட 1 கோடி ரூபாய். அதுமட்டுமல்லாமல், இந்த மௌலி பில்டர்ஸ்காரர்கள் இந்த டெண்டரை ஒரு மாதத்திற்குள் செட்டில் பண்ணிக் கொடுத்தால் 7 சதவிகிதம் அதாவது 78,71,620 ரூபாய் ரிபேட் தருவதாகவும் கூறியிருந்தார்கள். அதையும் சேர்த்தால் 1,77,02,818 ரூபாய் ஒரு கான்ட்டிராக்ட்டிலேயே நம்முடைய அரசுக்கு மிகப் பெரிய நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சொல்கிறீர்களா, பிறகு சொல்கிறீர்களா? (குறுக்கீடு) சரி, நான் பேச்சை முடித்துக் கொண்ட பிறகு சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் இப்போது இதிலே ஆரம்பித்தீர்கள் என்றால் முடியாது. (குறுக்கீடு) நீங்கள் கடைசியாக உங்கள் பதிலுரையிலே சொல்லுங்கள். இடையிலே இந்த வாக்குவாதமே வேண்டாம். அவர் பேசி முடித்துக்கொள்ளட்டும்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அதேபோல பாலாறு பேசின் ஆறு இடது பிரதானக் கால்வாய் வெட்டு மராமத்து வேலைக்கு, மௌலி பில்டர்ஸ் 3,38,76,452 ரூபாய்க்குக் கேட்ட அவர்களுக்கு இந்த வேலையைக்

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [2000 ஏப்ரல் 29

கொடுக்காமல் 3,72,72,590 ரூபாய்க்குக் கேட்ட நரேந்திரரெட்டி அவர்களுக்கு டெண்டர் கொடுத்ததில் 33,96,138 ரூபாய் இந்த அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதுபோன்று தினக்கூலியைப் பற்றி இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஓ.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் மிகத் தெளிவாக, நல்லமுறையிலே பேசிவிட்டார்கள். அதை நான் திரும்பப் பேச விரும்பவில்லை. ஆனால், இந்த தினக்கூலி என்பது மிகப் பெரிய அளவிற்கு தமிழகத்தில் இதுவே ஒரு மிகப் பெரிய மோசடி போன்று நடந்துகொண்டிருக்கிறது என்பதற்குப் பல ஆதாரங்கள் என்னிடம் இருக்கின்றன. என்.எம்.ஆர். ரிஜிஸ்டர் ஒவ்வொரு அலுவலகத்திலேயும் இருக்கும். அந்த அலுவலக ரிஜிஸ்டரிலிருந்து பட்டியலை இந்த அவைக்கு நீங்கள் வைக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதிலேயிருந்து எல்லாமே தெரிந்துவிடும்.

*பிற்பகல் 2-20*

இதற்கு இணங்காத அதிகாரிகள் பல தொல்லைகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள். திருநெல்வேலியில் ஒரு அதிகாரி, அதாவது ரத்தினமணி என்கின்ற ஒரு அதிகாரி இந்த என்.எம்.ஆர். பொய் ரிக்கார்டு தயார் பண்ண முடியாது என்று சொன்னதற்காக, அவருக்கு மாறுதல் கொடுத்தார்கள். அவருடைய 9 வயது மகள் கன்னியாகுமரியிலிருந்து திருநெல்வேலி வரை பாதயாத்திரையாகச் சென்று நீதி கேட்ட வரலாறு எல்லாம் பத்திரிகையிலே வந்தது. இன்னொரு அதிகாரி ஆல்பர்ட் என்பவர் அடித்தே கொல்லப்பட்டார் என்றும்கூட பத்திரிகையிலே செய்தி வந்தது. ஆகவே இந்த N.M.R. விஷயத்தில் நம்முடைய அரசு மிகக் கவனமாக இருக்க வேண்டும். பல முறைகேடுகள் நடந்திருக்கின்றன. இப்போதுகூட புதுக்கோட்டை மாவட்டம், பொதுப் பணித் துறை கீரனூர் sub-division-ல் ரூ. 1,50,360-க்கு வேலையே செய்யாமல் N.M.R.-ஆகப் போட்டுக்கொண்டு, பணத்தை எல்லாம் எடுத்துவிட்டார்கள் என்கின்ற ஒரு புகார் வந்திருக்கிறது. இதற்கெல்லாம் Cheque book, M.book எல்லாவற்றையும் தெளிவாகக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே இது ஒரு மிகப் பெரிய குற்றச்சாட்டு.

அதுமட்டுமல்லாமல் நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு மிக வேண்டிய ஒரு contractor, P.S. Construction. ஏற்கெனவே நம்முடைய பொதுப் பணித் துறையில் ஒரு சட்டம் இருக்கிறது.



2000 ஏப்ரல் 29] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

" The person/firm should have not more than 3 current and incompleted contracts running under Government or any Agency, so that should they win the current bid, the total under Government contract or other agencies, put together in hand would not exceed four."

அதாவது "ஒரு நபரோ அல்லது நிறுவனமோ, அரசு அல்லது அரசைச் சார்ந்த நிறுவனத்தின் ஒப்பந்த வேலைகளை மூன்றுக்கு மேல் வைத்திருக்கக் கூடாது. அவ்வாறு மூன்று வேலைகளை வைத்திருக்கும் அவருக்கு நான்காவது வேலை கொடுக்கக் கூடாது" என்று சட்டம் தெளிவாக இருக்கிறது. ஆனால் இந்த P.S. Construction என்கின்ற contractor-க்கு ஏழு வேலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. திருவண்ணாமலை போன்ற இடங்களில் பல வேலைகள் — 7 வேலைகள் — கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதுவும் ஒரு மிகப் பெரிய முறைகேடு.

அதுமட்டுமல்லாமல், நம்முடைய வனத் துறையில் நம்முடைய அரசு ஆட்சிக்கு வந்தவுடன் ஜப்பான் நாட்டிலிருந்து ரூ. 500 கோடி பணம் பெற்று, வனத் துறையை விரிவுபடுத்துவதற்காகத் திட்டங்கள் போட்டார்கள். 1996-97-ல் ஒரு கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டிருப்பதாக நமக்கு பட்ஜெட்டிலே சொல்லப்பட்டிருக்கிறது. 1997-98-ல் ரூ. 50 கோடி செலவழித்து இருக்கிறார்கள். 1998-99-ல் ரூ. 104 கோடி செலவழிக்கப்பட்டிருக்கிறது. 1999-2000-ல் ரூ. 96.73 கோடி செலவழிக்கப்பட்டிருக்கிறது. இதனுடைய திட்டம் என்னவென்று சொன்னால், தமிழ்நாடு வன வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் வனப் பகுதிக்கு அருகேயுள்ள 200 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, 2 ஆண்டுகளில் சுமார் 1,50,000 எக்டேர், அதாவது கிட்டத்தட்ட 5 லட்சம் ஏக்கர் பரப்பில் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். 'மேற்கொள்ளப்பட்டுள்ளன' என்று நம்முடைய குறிப்பிலே கொடுக்கப்பட்டு இருக்கிறது. இது எனக்குக் கிடைத்த தகவல்படி ஏற்கெனவே நம்முடைய அரசு 30 ஆண்டு காலமாக `Social forest' என்று சொல்லக்கூடிய அந்த வனப் பகுதியைத்தான் இதற்கும் பயன்படுத்தி, இந்தப் பணத்தை ஒரு முறைகேடாகப் பண்ணிவிட்டார்கள் என்கின்ற செய்தி வந்திருக்கிறது. இதற்கு ஒரு வெள்ளை அறிக்கையை இந்த அவையில் வைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 2-25*

அடுத்ததாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் நம்முடைய அருமைத் தலைவர் காமராஜர் அவர்களால் 1962 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட

ரப்பர் தோட்டம் இன்று மிக மோசமான சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. 11,000 ஏக்கரில் அமைந்துள்ள ரப்பர் தோட்டத்தில் கிட்டத்தட்ட 2500 தொழிலாளர்கள் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் அங்கே 20-க்கு மேற்பட்ட தனியார்கள் தோட்டங்களை வைத்திருக்கிறார்கள். இலாபகரமாக நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்த அரசு தோட்டத்தில் மட்டும் நட்டம் வருகிறது என்று சொன்னால் அதில் பல அதிகாரிகள் ஏராளமான ஊழல் செய்திருப்பதாக ஏற்கெனவே அவர்கள்மீது வழக்கு எல்லாம் நடந்துகொண்டிருக்கிறது. இருந்தும்கூட எந்த அதிகாரியும் மாற்றப்படவில்லை. இதன் காரணமாக அந்தத் தொழிற்சாலை இனறு மூடுகின்ற ஒரு மோசமான சூழ்நிலையில் இருக்கிறது. ஆகவே, இதற்கு உடனடியாக நம்முடைய அரசு, அரசு ரப்பர் கழக ஊழல் சம்பந்தமாக ஒரு விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டும். அவசியமற்ற முறையில் இருக்கும் அதிகாரிகளையும், பணியாளர்களையும் குறைத்து செலவைக் குறைக்க வேண்டும். அரசு ரப்பர் கழகத்தைக் கலைத்துவிட்டு வனத் துறையின் நேரடி நிர்வாகத்தில் கொண்டுவந்து ரப்பர் தோட்டங்களையும், தொழிலாளர்களையும் பாதுகாக்க வேண்டும். கீரிப்பாறை, பரளியாறு டிவிஷனில் மரம் வெட்டப்பட்ட பிறகு இப்பொழுது ரப்பர் மரத்தைப் புதிதாக நடுவதற்கு அரசு தயாராக இல்லை என்று சொல்கிறார்கள். உடனடியாக அந்தப் பகுதிகளில் எல்லாம் மறுபடியும் ரப்பர் கன்றுகள் நட வேண்டும் என்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டு பொதுப் பணியோடு கட்டடங்களும் இணைந்த பொதுப் பணித் துறை மற்றும் வனத் துறை ஆகிய இலாகாக்களின் மானியக் கோரிக்கைகளுக்கு இம்மாமன்றத்திலே பதில் அளிக்கின்ற வாய்ப்பினை இந்த ஆண்டும் எனக்கே வழங்கியிருக்கிற என் தலைவர், என் வழிகாட்டி, என் ஆசான் கலைஞர் அவர்களுக்கு என் வணக்கத்தை, முதல் மரியாதையைச் செலுத்திவிட்டு என் உரையைத் தொடங்குகின்றேன். காரணம், சாதாரண துரைமுருகனாக இருந்த என்னை பொதுப் பணி துரைமுருகனாக மாற்றிய பெருமை என்னுடைய தலைவர் கலைஞர் அவர்களைத்தான் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆற்றுப் பணிக்கு என்னை ஆட்படுத்தியதோடு ஆற்றுக்கு அந்தப் பக்கம்



இருக்கின்ற காட்டுப் பணிக்கும் என்னைக் கடமை ஆற்ற வைத்திருக்கிறவர் என்னுடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

அவர் முதன் முதலாக அமைச்சரானவுடன் அவர் ஏற்றுக்கொண்ட இலாகா பொதுப் பணித் துறை. அந்தத் தடந்தோள் சுமந்த பொறுப்பை இந்த இளம் தோளின்மீது சுமத்தி அழகு பார்க்கின்ற என் தலைவருக்கு நான் நன்றியோடு என் வணக்கத்தைச் செலுத்துகின்றேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறைக்கு மட்டுமல்ல, எங்கள் பொது வாழ்க்கைத் துறைக்கும் அவர்தான் வழிகாட்டி. (மேசையைத் தட்டும் ஒலி)

சூரியன் விழிப்பதற்கு முன்னால் சேவல் விழித்து விடுகிறது. சேவல் விழிப்பதற்கு முன்னால் இந்தக் காவல் தலைவர் விழித்துக்கொள்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் பல நேரங்களில் எங்களுக்கும் சேர்த்தே விழித்திருக்கிறார்.

தமிழ்நாட்டில் அத்தனை பத்திரிகைகளின் முதல் வாசகரே கலைஞர்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு இரகசியம் தெரியுமா தலைவர் அவர்களே, நீங்கள்கூட அடிக்கடி கேட்பீர்களே, "எப்படி இவ்வளவு இளமையாக, இருக்கிறீர்கள், நீங்கள் எல்லாம்" என்று. கலைஞரின் நிர்வாக வேகத்திற்கு ஈடுகொடுத்து ஓடுவதால்தான் நாங்கள் இன்னும் சற்று இளமையாக இருக்கிறோம். நாங்கள் மட்டுமல்ல, தலைவர் அவர்களே, 33,000 அடி உயரத்தில் பறந்தாலும் தேநீர் கோப்பையிலிருந்து ஒரு துளியும் சிதறாமல் பறக்கும் விமானம்போல, விரைந்து பணியாற்றும்போதும், சிறு துளி அளவு தவறும் நேராமல் சீராகச் செல்கிறது இந்தச் செந்தமிழ் அரசு. எங்கள் பைலட்டின் திறமையால்தான் நாடு பத்திரமாகப் பயணித்துக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-30

இந்தத் துறைக்கு நான் நான்காவது முறையாகப் பதிலளித்து உரையாற்றிக்கொண்டிருக்கின்றேன். இந்தத் துறை சாதித்த சாதனைகள் அதிலே கலைஞர் காட்டியிருக்கின்ற, வழங்கியிருக்கின்ற அறிவுரைகள், தமிழ்நாடு பெற்ற பலன், இன்னும் இந்தத் துறை ஆற்ற வேண்டிய பணி இவற்றையெல்லாம் நான் எடுத்து உங்களுக்கு விளக்குவதற்கு முன்னால் மதிப்பிற்குரிய மாண்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்மீது, என் இலாகாவின்மீது சுமத்தியிருக்கிற குற்றச்சாட்டுக்கு நான் பதில் அளிப்பது என்னுடைய தலையாய கடமை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் ஒன்று சொன்னார். "மோர்தானாவில் M.C..3 என்று ஒரு ஒப்பந்தம், M.C.6 என்று ஒரு ஒப்பந்தம், இந்த இரண்டு ஒப்பந்தங்களிலும் குறைத்துக் கேட்டவர்களுக்கு வேலை தராமல் அதிகமாகக் கேட்டவருக்கு வேலை கொடுத்துவிட்டார்கள், இது முறைதானா" என்பது அவர் குற்றச்சாட்டு.

பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் மீது எனக்குக் கோபம் இல்லை. ஆனால், யாரோ அவருக்கு இப்படிப்பட்ட தவறான செய்திகளையே தந்துவிடுகிறார்கள். அதனால், அவர் உள்ளம், ஓஹோ இது இருக்குமோ என்று நம்பித்தான் என்மீது குற்றத்தைச் சாட்டியிருக்கிறார்கள். சிரிக்கிறார்; ஆகவே கோபம் இல்லை என்பது போல்தான் இருக்கிறது, பரவாயில்லை. அரசியலில் இவையெல்லாம் எதிர்பார்த்து இருப்பவைதான்.

நான் அவருக்கு ஒன்றைத் தெரிவிக்கிறேன். M.C. யினுடைய 3 என்பது ஒரு கால்வாய் வெட்டுகிற பணி. அந்தப் பணியை மௌலிக்குக் கொடுக்காமல் நாகார்ஜுனாவுக்குக் கொடுத்துவிட்டார்கள் என்பது அவருடைய குற்றச்சாட்டு. அதனுடைய மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு தெரியுமா? 14 கோடியே 66 இலட்சம் ரூபாய். இதிலே மௌலி போட்டது 12 கோடியே 65 இலட்சம் ரூபாய். அந்த 14 கோடியே 66 இலட்சம் ரூபாய் வேலையை, மௌலி சொல்கிறார் "12 கோடியே 65 இலட்சம் ரூபாய்க்குச் செய்கிறேன்" என்று. அப்படியானால் minus 13.88%. அடுத்து, எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்ட அந்த நாகார்ஜுனா, அவர் என்ன சொல்கிறார் என்றால் "நான் 12 கோடியே 13 இலட்சத்திற்குச் செய்கிறேன்". அதாவது, "12.13 crores-க்கு நான் செய்கிறேன்." என்று. அப்படியானால் எவ்வளவு minus ? 17.24 பர்சன்ட். நான் இந்த மாமன்றத்தில் இருக்கிறவர்களைக் கேட்கிறேன், minus 17.24% க்குக் கொடுப்பதா? மைனஸ் 13.88-க்குக் கொடுப்பதா? யாருக்குக் கொடுப்பது? (குறுக்கீடு) நாகார்ஜுனாவுக்குத்தான் தர வேண்டும்.

*பிற்பகல் 2-35*

அவர் இன்னொன்றையும் சொன்னார்; அப்படியில்லை, அவர் "rebate கூடத் தருகிறேன்" என்று சொன்னதாகச் சொன்னார், 7%. அதை அவர்கள் ஏற்றிருந்தால் இன்னும் குறைவாகப் போய் இருக்கும் என்ற அந்தக் கணக்கிலேதான் போட்டுக் காட்டினார். அதைக்கூடத் தவறாகச் சொன்னார். மௌலி "7 % discount தருகிறேன்" என்று சொல்லவில்லை, "11 %. தருகிறேன்" என்று சொன்னார். ஆனால், இதிலே ஒரு சங்கடம்



என்னவென்றால் இது World Bank Tender. உலக வங்கியினுடைய சார்பில் நடைபெறும் tender. அந்த tender conditions impose பண்ணக்கூடாது. ஆனால், இவர் மௌலி என்ன செய்தார் என்று கேட்டால், ஒரு கடிதத்தைக் கொடுத்தார். அதிலே M.C. 3, M.C. 6 என்று இரண்டு contract. "அந்த இரண்டும் சேர்த்து எனக்கே கொடுத்தால், அதுவும் 20 நாளைக்குள் எனக்கு வேலை செய்வதற்கு work order கொடுத்தால் நான் 11 சதவிகிதம் discount தருகிறேன்." என்று சொன்னார். ஆனால், உலக வங்கியினுடைய சட்டப்படி tender, tender-ஆக இருக்க வேண்டுமே தவிர அதற்கு conditions போடக்கூடாது. ஆனால் conditions போட்டார், ஆகையினாலே மௌலிக்குக் கிடைக்கவில்லை என்பது மட்டுமல்ல; அவர் நாகார்ஜுனாவைவிடக் குறைந்த புள்ளியில் இருக்கிறார். ஆக மௌலியைவிட நாகார்ஜுனா குறைவாக அதாவது minus 17%-ல் இருக்கிறார். மௌலி minus 13% ல் இருக்கிறார். எனவே ஒன்று நியாயப்படியும் மௌலிக்குக் கிடைக்காது, conditions போட்ட வகையிலும் மௌலிக்குக் கிடைக்காது. ஆகையினாலே M.C. 3 மௌலிக்குக் கிடைக்கவில்லை. நாகார்ஜுனாவிற்குக் கிடைத்திருக்கிறது. இதை இங்கே இருக்கிற Tender Committee. இங்கே இருக்கின்ற Chief Engineer, Finance Secretary இவர்கள் எல்லாம் பரிந்துரை செய்து உலக வங்கிக்கு அனுப்புகிறார்கள். இங்கே இருந்து recommendation செய்யலாம். உலக வங்கி — வாஷிங்டன் — வரையிலே சென்றுதான் approval வாங்குகிறார்கள். எனவே, அந்த வகையில்தான் மௌலிக்குக் கிடைக்கவில்லையே தவிர, நாங்கள் யாரும் இதிலே ஊழல் செய்வது என்றோ உள் ஒன்று வெளி ஒன்று என்றோ பிரச்சினை இல்லை. இரண்டாவதாக இன்னொன்றையும் சொன்னார், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர். M.C. 6 நரேந்திர ரெட்டிக்கு.....

**திரு. ச. அழகிரி:** ஒரு clarification.

**HON. THIRU DURAIMURUGAN:** No clarification. Please sit down. I am not yielding. அவர் இன்னொன்று கேட்டார். இரண்டாவது Tender-ல் அவருடைய மதிப்பீடு என்ன? 4 கோடியே 47 இலட்சம். அதிலே மௌலி எவ்வளவு கேட்டிருக்கிறார்? "3 கோடியே 82 இலட்சத்திற்கு வேலை செய்கிறேன்" என்று கேட்டிருக்கிறார். நரேந்திர ரெட்டி எவ்வளவிற்குக் கேட்கிறார்? 3 கோடியே 74 இலட்சத்திற்குக் கேட்கிறார். அப்படியானால் மௌலி, minus 14.57 சதவிகிதம். நரேந்திர ரெட்டி, minus 16.32 சதவிகிதம். அதிலேகூட நரேந்திர ரெட்டிக்குதான் நியாயப்படி இது கிடைக்க வேண்டும். ஆனால், குறைவான tender-ஐப்

போட்டிருந்தால்கூட நரேந்திர ரெட்டிக்கு உலக வங்கியில் சில technical flaws, அதிலே இருக்கின்ற காரணத்தினால் அவர்கள், இங்கு இருப்பவர்கள் நரேந்திர ரெட்டிக்குத் தருவது பற்றிச் சொல்லியிருந்தும்கூட உலக வங்கி அதற்கு மறு tender கோரும்படி செய்திருக்கிறது. ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் "நரேந்திர ரெட்டிக்கு அந்த tender-ஐக் கொடுத்துவிட்டார்கள்" என்று சொல்லியிருக்கிறார். ஆக இரண்டு குற்றச்சாட்டுக்கள் சொன்னீர்கள். இரண்டிலும் உண்மை இல்லை. உண்மைக்குப் புறம்பாக வேண்டுமென்றே இட்டுக்கட்டிக் காட்டப்பட்டது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

மூன்றாவதாக ஒரு குற்றச்சாட்டு சொன்னார். யாராவது ஒரு Contractor-ஐப் பிடிக்க வேண்டியது; நம்முடைய துரைமுருகனுக்கு வேண்டியவரை. நான் கோட்டையிலே உட்கார்ந்திருக்கிற, இங்கேயே உட்கார்ந்திருக்கிற பொதுப் பணித் துறை அமைச்சர் அல்ல. நான் Field-க்குப் போகிறவன். Field-க்குப் போகிறபோது வேலையைப் பார்க்கிறபோது அந்த contractor களும் இருப்பார்கள். ஆகவே எங்களுடைய பொதுப் பணித் துறையிலே பெரும் பெரும் வேலைகளைச் செய்கிறபோது contractor களை நான் அறிவேன். இல்லையென்று சொல்லவில்லை. காரணம், அப்போதுதான் ஏன் இன்னும் இப்படி இருக்கிறது, ஏன் இன்னும் முடிக்கவில்லை என்று கேட்பதற்குக்கூட வசதியாக இருக்கும். அந்த வகையிலே யாரோ ஒரு பெயரைச் சொன்னார். அது பற்றி இல்லை. அவர் சொன்னார் 7, 8 contract கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று. யாருக்கோ 4 தான், 3 தான் கொடுக்க வேண்டும் என்று சொன்னார். அதிலே கூட ஒரு தவறான தகவலை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவருக்குத் தந்திருக்கிறார்கள். Buildings Division-லேதான் Pre-qualification நடத்துவார்கள். Buildings division-லே நடத்தும்போது 1 கோடி ரூபாய்க்கு மேலே போகிற வேலைக்குத்தான் Pre-qualification செய்வார்கள். அந்த Buildings division-லே செய்யும்போது என்ன சொல்கிறார் என்றால், அவர் படித்ததை நான் திருப்பிச் சொல்கிறேன்.

"The person/firm should have not more than 3 current and incompleted contracts running under Government or any Agency so that should they win the current bid, the total under Government contract, or other agencies put together in hand would not exceed four."

அவன் அவனே நிறைய எடுத்து எடுத்து வைத்துக்கொள்வான். அதனால் ஒரு condition போட்டிருக்கிறார்கள். ஒரு கோடி ரூபாய்க்கு



மேலே இருக்கிற contract-களில் எல்லாம் நான்கு வேலைக்கு மேலே இருக்கிறதா? Incomplete-ஆக வைத்திருக்கிறாயா? நீ ஏற்கெனவே வைத்திருக்கிறாயா, அப்படி என்றால் நான்காவது வேலை கிடையாது. 3 வேலைக்கு மேலே 4-வது வேலை கொடுக்கலாம். மூன்று அல்ல, நான்கு கொடுக்கலாம். அதனாலே கொடுத்திருக்கிறேன். ஆனால், இன்னும் யாரோ ஒரு contractor-க்கு "7 கொடுத்திருக்கிறார்கள், 8 கொடுத்திருக்கிறார்கள், திருவண்ணாமலையில் கொடுத்திருக்கிறார்கள்" என்று மட்டும் சொல்லி நிறுத்திவிட்டார்.

பிற்பகல் 2-40

நான் ஒன்றைச் சொல்கிறேன். அப்படி ஏதாவது ஒன்றுக்கு மேற்பட்டு யாருக்காவது கொடுத்திருப்பார்களேயானால் அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு நான் தயாராக இருக்கிறேனே தவிர, எங்களுக்கு, மடியிலே எந்தக் கணமும் இல்லை, ஆகவே, என்ன பயம்? எனவே, எங்களுக்கு எந்தப் பயமும் இல்லை. ஆகையினாலே இந்த மூன்று குற்றச்சாட்டுகளை இன்றைக்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இந்த அவையிலே எடுத்துவைத்தார். மூன்று குற்றச்சாட்டுகளையும் நான் இந்த இடத்திலே மறுத்திருக்கிறேன். என்னுடைய மறுப்பை எதிர்க்கட்சித் தலைவர் ஏற்றுக்கொள்வார் என்ற நம்பிக்கையில் இருக்கிறேன். நான் அரசியலுக்குள்ளே நுழைய விரும்பவில்லை. ஆனால், ஒன்று மட்டும் உறுதி. நான் பணிவன்போடு இந்த மன்றத்திலே சொல்கிறேன். தேர்தல் காலங்கள் நெருங்கலாம். ஏதாவது இப்படி வாரி இறைக்கலாம் என்று கருதிச் சொல்லலாம். தயவுசெய்து சொல்கிறேன், சூரியனுக்குக் கரும்புள்ளி குத்த முயற்சிக்காதீர்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) ஆகையினாலே, அது தவறான செய்தி என்பதை நான், பேரவைத் தலைவர் அவர்களே, உங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வந்து காட்டுகிறேன்.

அடுத்ததாக இன்னொன்று சொன்னார். Rubber Corporation (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன, அதாவது அந்த வேலையில் contract-னுடைய மதிப்பிற்கும் நீங்கள் சொல்வதற்கும் வித்தியாசம் இருக்கிறது. அதனாலே சபாநாயகரிடம் அந்த பைல்களை எல்லாம் கொடுத்தீர்கள் என்றால் நாம் இரண்டு பேருமே பார்த்துவிடலாம். ஏனென்றால் வித்தியாசங்கள் நிறைய இருக்கின்றன. அதனாலே சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** வித்தியாசம் வரும். உங்களுக்கும் எனக்கும் வித்தியாசம் வரும். எப்படி என்று கேட்டீர்கள் என்றால் உங்களிடம் எப்படிக் கணக்கு போட்டுச் சொல்லியிருக்கிறார்கள் என்றால், 7% நாங்கள் discount கொடுக்கிறோம் என்று சொன்னால், அப்போது இந்த route-க்கு *7 %* என்ன ஆகும் என்று கணக்குப் போட்டுப் பார்த்து அந்த route-ஐச் சொல்கிறீர்கள். நான் document-லேயிருந்து சொல்கிறேன். தலைவர் அவர்களே, தங்களிடத்திலே நான் எல்லாவற்றையும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். ஏனென்றால் நான் இன்னும் விளக்கமாக. நீளமாகப் போகக்கூடாது என்பதற்காகச் சொன்னேன். தாராளமாகக் கொடுத்து விடுகிறேன். No botheration.

*** மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே கூறியவாறு அந்தப் பத்திரங்களையும், ஆவணங்களையும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தருகின்ற ஆவணங்களையும் — இங்கே எடுத்து பயன்படுத்திக் காட்டிய ஆவணங்களையும் — இந்த ஆவணங்கள், இரண்டையும், இப்போதே தாங்கள் வாங்கி வைத்துக்கொள்ளுங்கள். தாங்கள் இரண்டு பேரையும் அழைத்து, உட்கார வைத்து அதிலே யார் சரி, யார் சரி அல்ல என்று சொல்லித் தீர்ப்பளித்து, — யாரையும் குற்றம் சாட்டுகின்ற வகையிலேகூட நான் அதிலே போக வேண்டும் என்று விரும்பவில்லை, — நாட்டுக்கும் அவைக்கும் உண்மை தெரிய வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கின்றேன். இரண்டையும் வாங்கி, இரண்டு பேரையும் அழைத்து, வேண்டுமானால் அவருடைய தரப்பிலேயிருந்து ஒருவர், ஆளுங்கட்சித் தரப்பிலேயிருந்து ஒருவரையும் உட்கார வைத்து, அவர்களிடத்திலே விவாதித்து இதனை ஒரு முடிவிற்குக் கொண்டு வாருங்கள். இல்லாவிட்டால் இது ஒரு தொடர்கதை மாதிரி, ஒவ்வொரு மானியத்திலேயும் ஒரு தொடர்கதை போல் நடந்துகொண்டே இருப்பது நல்லதல்ல என்பதற்காக இதைச் சொல்கின்றேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** நான் கொடுத்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் வாங்கிக் கொள்கிறேன்.



**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** இல்லை, இப்போதே கொடுத்துவிடுகிறேன். அன்றைக்கு இப்படித்தான் சொன்னார்...

*(மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் தன்னிடம் இருந்த ஆவணங்களை சட்டமன்றப் பேரவைச் செயலாளர் மூலமாக மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் அளித்தார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஐயா, உங்களுடையதையும் கொடுத்துவிடுங்கள்.*

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** *நான் ஏற்கெனவே உங்களிடம் கொடுத்துவிட்டேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அதுதானா? அது தவிர வேறு இல்லையா?*

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** *அதைத்தவிர வேறு இல்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சரி. மாண்புமிகு அமைச்சர் பேசுங்கள்*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** *ரப்பர் தோட்டங்களைப் பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார். இந்த ரப்பர் தோட்டங்களை மூடிவிட்டு மீண்டும் காட்டு இலாகாவிற்கே தரலாம் என்றார்கள். நான் திரும்பிப் பார்த்தேன் திரு. ஹேமச்சந்திரனை, ஒத்துக்கொள்கிறாரா என்று. பலமாக மறுத்துத் தலையை ஆட்டினார். காரணம், அங்கிருக்கிற ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை போய்விடும். அதை ஆரம்பித்ததே கலைஞர்; அந்தக் காலத்தில் அங்கிருப்பவர்களுக்கு வேலை தரப்பட வேண்டும் என்பதற்காகவும், இலங்கையிலேயிருந்து அகதிகளாக வந்து இருப்பவர்களுக்காகவும் செய்யப்பட்ட ஒன்றாகும். எனவே, அவற்றைக் கொஞ்ச நாட்களுக்கு, தொழிலாளிகளுக்காகச் சில சங்கடங்களைத் தாங்கிக்கொள்ள வேண்டுமே தவிர, நஷ்டம் வந்துவிட்டது என்ற ஒரே காரணத்திற்காக மூடுகிற நிலை இல்லை என்பதை மட்டும் நான் மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.*

*பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து இந்தப் பொதுப் பணித் துறையைப் பொறுத்தவரையில் கலைஞருடைய இந்த ஆட்சியின் நான்கு ஆண்டுகாலம் மிகப்பெரிய ஒரு பொற்காலம்; சரித்திர காலம்; சாதனைகளைப் புரிந்த காலம் என்றெல்லாம் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, என்னைப் பொறுத்தவரையில் இந்தத்*

தூர் வாருதல் என்பது ஒன்று. இந்தத் தூர் வாருதலை, 1997-க்கு முன்னால் யாராவது ஆற்றில் தூர் வாருவது, கால்வாயில் தூர் வாருவது, வடிகால்களில் தூர் எடுப்பது என்று சொன்னால் சிரிப்பார்கள். "இதுவெல்லாம் நடக்கக்கூடிய காரியமா, எவ்வளவு பெரிய ஆறு, நூற்றுக்கணக்கான கிலோமீட்டர் தூரமுள்ள கால்வாய்கள், இவற்றைத் தூர் வாருவதாவது, வாரிய மண்ணை எங்குப் போய்க் கொட்டுவது" என்றெல்லாம் வியாக்யானம் செய்திருப்பார்கள். ஆனால், இன்றைக்கு அந்த நிலைமைகள் எல்லாம் மாற்றப்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் மாற்றியதற்குக் காரணம்; தூர் வாருவது என்ற எண்ணம் கலைஞருடைய எண்ணத்திலே உதித்த ஒன்று. 1976 ஆம் ஆண்டு வெள்ளம். நானும் அண்ணன் கோ.சி. மணியும், வீரபாண்டி ஆறுமுகமும் வெள்ளத்திலே நின்றுகொண்டிருக்கிறோம். திரும்பி வந்தபொழுது அவர்கள் கேட்டார்கள். "எப்படி ஆறுகள் எல்லாம் உடைந்துவிட்டன, கோரையாறு, மரக்காற்றையும் தவிர? ஏன் அவை மட்டும் உடையவில்லை?" என்று கேட்டார்கள். அவற்றைத் தூர் வாரியிருந்தார்கள் என்று சொன்னோம். "அதே பணியைச் செய்தால் என்ன" என்று கேட்டு, "உனக்கு முதல் முறையாக ரூ. 12 கோடியைத் தருகிறேன்" என்று சொன்னார்கள். அதிலே ஆரம்பித்ததுதான். தூர் வாரப்பட்டது.

பிற்பகல் 2-45

தூர் வாருவது என்பது, கலைஞருக்கு இந்த மண்ணைத் தூர் வாருவது மட்டுமல்ல, அவருக்குத் தூர் வாருகிற எண்ணமும் உண்டு; பழந்தமிழைப் புதுப்பித்து இலக்கியத்திற்கு தமது தூரிகையைக் கொண்டு தூர் வாரியவர் நமது முதல்வர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தனது பேனா என்னும் பேரணையில் இருபது நூற்றாண்டுத் தமிழாற்றைத் தேக்கி வைத்திருப்பவர் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமது பேச்சுத் தமிழ் எனும் பாசனத்தால் கருவேலங்காடுகளையும் கற்பகச் சோலைகளாக்கியவர் கலைஞர். இப்படித் தமிழ் இலக்கியத்திற்கே தூர் வாரியவருக்கு, பைந்தமிழ் நாட்டு ஆறுகளைத் தூர் வாருகின்ற எண்ணம் வராமலா போய்விடும்? அப்படித் தூர் வாரப்பட்டவைதான் இந்தத் தமிழ்நாட்டிலே இருக்கின்ற ஏரிகள், குளங்கள் என்று சொல்வேன். நினைத்துப் பார்க்கிறேன், எவ்வளவு தூரம் என்று. காவிரியில் மட்டுமல்ல, காவிரி டெல்டா பகுதியிலே மட்டும் ஆறுகள், வடிகால்கள், வாய்க்கால்கள், இவை மொத்தமும் சேர்ந்து 17,190 கிலோமீட்டர். இவை அத்தனையையும் புதுப்பிக்கப்பட வேண்டுமானால் 154 கோடி ரூபாய் தேவை. ஆனால்



1997-98, 1998-99, 1999-2000 ஆம் ஆண்டுகளிலே மட்டும் கிட்டத்தட்ட 9,756 கிலோமீட்டர் தூரத்திற்கு ஆறுகள் எல்லாம், வடிகால்கள் எல்லாம் தூர் வாரப்பட்டன.

இதே மன்றத்திலே பேசுகின்றபோது, தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள், — எப்போது பொதுப் பணித் துறை மானியம் என்று சொன்னாலும் — நானும் 1971-ல் M.L.A. வாக வந்ததிலிருந்து பார்க்கிறேன். "கடைமடைப் பகுதிக்குத் தண்ணீர் வரவில்லை, தலைஞாயிறுக்குத் தண்ணீர் வரவில்லை, பயிர்கள் காய்ந்துகொண்டிருக்கின்றன" என்றுதான் சொல்வார்கள். நான் பெருமையோடு சொல்கிறேன். கலைஞருடைய இந்த நான்காண்டு கால ஆட்சியில்தான் கடைமடைப் பகுதிப் பிரச்சினையே கரைந்துபோய் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). அதைப் பற்றிப் பேசுவதற்கு இப்போது யாருமே இல்லை. அந்த விவரமெல்லாம் இருக்கிறது. அதுமட்டுமல்ல. தஞ்சாவூரில் மட்டுமா? தமிழகம் முழுவதும், நான்காண்டு காலத்தில் 8 கோடி ரூபாய் செலவில் புதிதாக வெட்டப்பட்ட கால்வாய்களின் நீளம் 131 கிலோமீட்டர். 112 கோடி ரூபாய் செலவில் தூர் வாரப்பட்ட கால்வாய்களின் நீளம் 13,500 கிலோமீட்டர். 124 கோடி ரூபாய் செலவில் lining செய்யப்பட்ட கால்வாய்களின் நீளம் 1,468 கிலோமீட்டர். ரூ. 32 கோடி செலவில் பழுதுபார்க்கப்பட்ட மதகுகள், புதிய shutter-களின் எண்ணிக்கை 4,333. ரூ. 34 கோடி செலவில் தூர் வாரப்பட்ட ஏரிகளினுடைய எண்ணிக்கை 793. ரூ. 17 கோடி செலவில் புதிதாக வெட்டப்பட்ட ஏரிகள், இவற்றின் மூலம் 22 இலட்சம் ஏக்கர் நிலங்கள் பாசனம் பெற்றிருக்கின்றன.

அதுமட்டுமல்லாமல், ஐரோப்பிய பொருளாதாரத் திட்டம் மூலம் 148 ஏரிகள் தூர் வாரப்பட்டிருக்கின்றன. 40 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் அதனால் பயனடைந்திருக்கின்றன. இங்கு மட்டுமல்ல, வைகை ஆற்றிலிருந்து பிரியும் 5 கால்வாய்களைச் சீரமைக்கும் பணிக்காக ரூபாய் ஒரு கோடியே 20 இலட்சம்; நிலையூர் கடைமடையிலிருந்து ரூ. 4 கோடியே 64 இலட்சம் செலவில் கம்பிக்குடி கண்மாய் கால்வாய் மூலம் 90 கண்மாய்களுக்குத் தண்ணீர்; 9,948 ஏக்கர் நிலங்களுக்குப் பாசனம்; விரகனூர் மதகுக்குக்கீழ் வைகை ஆற்றிலே கரையெல்லாம் உடைப்பு; கவனிப்பார் இல்லை. ஆனால், கலைஞர் ஆணையிட்டு, 43 கிலோமீட்டர் தூரத்திற்கு இடது வலதுபுறக் கால்வாய்களுக்காக ரூ. 43 கோடி செலவில் இன்றைக்குக் கரைகள் கட்டப்பட்டிருக்கின்றன. அதன்மூலம் 34,200 ஏக்கர்கள் பாசனம் பெறுகின்ற நிலைமை உருவாகியிருக்கிறது. அதேபோன்றுதான், பரம்பிக்குளம்-ஆளியாறு

திட்டத்திற்கு ஒப்பந்தம் போட்ட காலத்திற்குப் பிறகு அது புதுப்பிக்கப்படவேயில்லை. பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தைப் போய்ப் பார்த்தவர்களுக்குத் தெரியும். காட்டூர் canal என்பார்கள். சர்க்கார் பதியிலிருந்துதான் தண்ணீரை திருமூர்த்தி அணைக்குக் கொண்டு வரவேண்டும். அந்தக் கால்வாய் உடைந்துபோய், ஆண்டு ஒன்றுக்கு 5 T.M.C. தண்ணீர் கீழே போய்க்கொண்டிருந்தது. இன்றைக்கு அவற்றில் 9 அணைகள், 10 கால்வாய்கள், 4,710 ஏக்கர் பாசனம் என்று இவை அத்தனையையும் சீரிட்டு பிரதானக் கால்வாய்களை எல்லாம் செப்பனிடுவதற்காக 113 கோடி ரூபாய் செலவு செய்து, வேலைகள் முடிக்கப்பட்டிருக்கின்றன.

பிற்பகல். 2-50

அதுபோன்றுதான் கீழ்பவானி, 45 ஆண்டு காலத்திற்கு முன்னால் கட்டப்பட்டது. காளிங்கராயன், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, குழி கர்வேரி, இதிலேயும் பழுதில்லை. நீங்கள் அந்தப் பக்கம் போனால், அரக்கன்கோட்டை பகுதியில் எது கரை, எது சாலை என்று தெரியாது. காளிங்கராயனுக்கும், வயலுக்கும் வரப்புக்கும் வித்தியாசம் தெரியாது. சென்ற ஆண்டு 10 கோடி ரூபாயை கலைஞர் ஒதுக்கினார். இந்த ஆண்டு 10 கோடி ரூபாய்க்கு மேலே அந்தப் பகுதிப் பணிக்காக ஒதுக்கியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அங்கு மட்டுமல்ல. இதே சென்னை மாநகரத்திலே மழை பெய்தால் சாலையெல்லாம் வெள்ளம் ஆகும், வீடெல்லாம் நீராகும், இது வடிய பல நாளாகும். அப்படிப்பட்ட காரணத்தால், கூவம், பக்கிங்காம், அடையாறு, ஓட்டேரிநல்லா கேட்டன் கால்வாய், மாம்பலம் கால்வாய் போன்ற கால்வாய்களையெல்லாம் சீரமைப்பதற்காக இப்போது 300 கோடி ரூபாயை நம்முடைய சென்னை மாநகரத்தினுடைய மேயர் இளைஞர் மு.க. ஸ்டாலின் அவர்கள் NABARD-லே பெற்று அதிலே கிட்டத்தட்ட 282 கோடி ரூபாய்க்கு மேலே பொதுப் பணித் துறையினிடத்திலே ஒப்படைத்திருக்கிறார்கள். அப்படி ஒப்படைத்ததிலே அடையாறு சீரமைப்புக்காக ரூ. 35 கோடி, பக்கிங்காம் கால்வாய்க்கு ரூ. 26 கோடி, கூவம் சீர்பெற ரூ. 25 கோடி, வடிகால் வகைப்படுத்த ரூ. 25 கோடி; இதிலே கூவத்திலே மட்டும் இன்னும் பணி தொடங்கப்படவில்லை. காரணம், அங்கே metro water; இருக்கிற கழிவு நீரையெல்லாம் தடுத்து நிறுத்தி, கூவத்தில் விழாமல் ஒரு treatment area-விற்குக் கொண்டு சென்று அவற்றை எடுத்துச் செல்வதற்காக 18 மாத காலம் தவணை கேட்டிருக்கிறார்கள். எனவே, கூவத்தில் வேலை நடைபெறவில்லை. ஆனால், அடையாறிலே நீங்கள்



பொழிச்சலூரிலேயிருந்து பார்த்தால் தெரியும், தணிகாசல நகர் வெள்ளக் காலத்தில் மூழ்கிப்போய் இருக்கும். அங்கே பார்த்திருந்தால் தெரியும். அதேமாதிரி, பக்கிங்காம் கால்வாயில் இப்போது பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. சற்றுநேரம் ஓய்வு இருந்தால் நின்றுபார்க்க வேண்டுமென்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோன்றுதான் கட்டடப் பிரிவு. கட்டடப் பிரிவு சாதித்த சாதனைகள்; கடந்த 4 ஆண்டு காலத்தில் 29 மாவட்டங்களில் 9,401 கட்டடங்கள் ரூ. 930 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. முன்பெல்லாம் கட்டடங்கள் கட்டினால் 2 வருடம், 3 வருடம். இப்போது அப்படி இல்லை. விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் 11 மாதங்களிலே கட்டி முடிக்கப்பட்டு இருக்கிறது. அதிலேகூட கலைஞர் ஒரு சாதனை செய்திருக்கிறார், வேறு எந்தக் காலத்திலும் அவ்வாறு நடக்காது. இங்கே பாருங்கள். தேனி, கரூர், திருவண்ணாமலை, திருவள்ளூர், நாகப்பட்டினம், திருவாரூர், நாமக்கல் ஆகிய 7 மாவட்டங்களில் ஒரே நேரத்திலே பணிகள் நடக்கின்றன. இதுவொரு பெரிய அதிசயம். நான் முன்பே குறிப்பிட்டதைப்போல, கோதையாற்றிலிருந்து பேச்சிப்பாறையிலிருந்து இங்கிருக்கிற பொன்னேரி கரை வரையிலே இருக்கிற அவ்வளவு இடங்களிலும் ஆறுகளிலும், அணைகளிலும் ஒரே நேரத்திலே வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய அந்த மகத்தான திட்டத்தை இந்தப் பகுதிகளிலே கலைஞர் அவர்கள் செய்திருக்கிறார்கள்.

ஆனால், ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். இவ்வளவு வேலைகள் நடைபெறுகின்றன; கோடிக்கணக்கான பணத்தைச் செலவு செய்து இருக்கிறோம். நான் இந்த மன்றத்திலே கொஞ்சம் பெருமையாகச் சொல்லிக்கொள்கிறேன். சென்ற ஆட்சியிலே ஒரு tender போட்டால் +45%; மிகக் குறைத்ததுதான், எங்கேயோ 30%. எல்லா வேலைகளுக்கும் 30% தான் above. Minus என்பதே கிடையாது. நான் இந்த மன்றத்திலே ஒரு சின்ன கணக்கைத் தருகிறேன். எங்கள் கலைஞர் எப்படி எங்களை இதிலே பயிற்றுவித்திருக்கிறார், எப்படி கவனிக்கிறார், எப்படி நாங்கள் அவர்கீழ் வேலை பார்க்கிறோம் என்பதற்கு ஒரேயொரு உதாரணம்.

மோர்தானா அணை, சற்று முன்னால் சொன்னார்களே, அந்த அணை, 54 கோடி ரூபாய். ஆனால் tender போனதிலே plus-ஆ minus-ஆ ? minus 14.78% அதனாலே அரசாங்கத்திற்கு எவ்வளவு இலாபம் தெரியுமா? 7 கோடியே 98 இலட்சம். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரேயொரு tender. பொய்கையாறு, அதனுடைய மதிப்பீடு எவ்வளவு தெரியுமா? 5 கோடியே 98 இலட்சம். ஆனால் tender plus-லே போனதா? இல்லை; (-)8.03% இலாபம் 48 இலட்சம்.

கொடுமுடியாறு, எவ்வளவு மதிப்பீடு? ரூ. 22 கோடியே 14 இலட்சம். tender விட்டோம். எவ்வளவு போய் இருக்கிறது தெரியுமா? (-)27.28%, சர்க்காருக்கு எவ்வளவு இலாபம் தெரியுமா? 6 கோடியே 4 இலட்சம்.

வடக்குப் பச்சையாறு, 43 கோடியே 12 இலட்சம். எவ்வளவு minus தெரியுமா, tender-ல் 18.18%; சர்க்காருக்கு எவ்வளவு இலாபம் தெரியுமா? 7 கோடியே 84 இலட்சம்.

பிற்பகல் 2-55

அடவிநயினார்கோயில் நீர்த்தேக்கம்; 58 கோடியே 11 இலட்சம் estimate. எவ்வளவு minus தெரியுமா? 2.13%. அரசுக்கு இலாபம் 1 கோடியே 24 இலட்சம்.

சோத்துப்பாறை நீர்த்தேக்கம்;28 கோடியே 98 இலட்சம். tender. விட்டோம், எவ்வளவு minus தெரியுமா? 13.65%. அரசுக்கு எவ்வளவு இலாபம்? 3 கோடியே 95 இலட்சம்.

வரட்டாறு-வள்ளி மதுரை; எவ்வளவு tender.? 15 கோடியே 70 இலட்சம். எவ்வளவு minus? 6.11%. அரசுக்கு இலாபம் 95 இலட்சம்.

சாத்தனூர்;10 கோடியே 25 இலட்சம். minus 12.88%. அரசுக்கு இலாபம் 1 கோடியே 20 இலட்சம்.

சென்னைப் பெருநகர்—நான் இங்கே சொன்னேனே—100 கோடியே 67 இலட்சம். இந்த நான்கும் சேர்த்து, எவ்வளவு minus தெரியுமா? 24.62%. சர்க்காருக்கு இலாபம் எவ்வளவு தெரியுமா? 24 கோடியே 62 இலட்சம். (மேசையைத் தட்டும் ஒலி) tender. விலையிலே 100 கோடி சர்க்காருக்கு மீதம்.

சடையநேரிக் கால்வாய்;9 கோடியே 12 இலட்சம். minus 20.38%. சர்க்காருக்கு இலாபம் 1 கோடியே 86 இலட்சம்.

கடனா நீடிப்புத் திட்டம்;16 கோடியே 52 இலட்சம். எவ்வளவு minus தெரியுமா? 37.5%. சர்க்காருக்கு இலாபம் 6 கோடியே 14 இலட்சம்.



நல்லதங்காள் ஓடை; 21 கோடி. எவ்வளவு minus? 20.57%. அரசுக்கு இலாபம் 4 கோடியே 32 இலட்சம்.

இந்த நான்கு ஆண்டுகளில், நான் ஒரு சிறிய கணக்கைச் சொல்லுகிறேன். இப்படி எத்தனையோ கணக்கு போகிறது. இந்த நான்கு ஆண்டுகளில் 267 பணிகளுக்கு tender விட்ட estimate தொகை 573 கோடி ரூபாய். tender எடுத்த தொகை எவ்வளவு தெரியுமா? அதே 573 கோடி ரூபாய். அதாவது tender value, Contract value இரண்டும் ஒன்று. இந்தப் புதுமையை இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலே கலைஞர் ஆட்சியிலே மட்டும்தான் பார்க்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் கேட்கிறேன், இவ்வளவு கோடிக்கணக்கான பணங்களை இவ்வளவு minus-லே செய்திருக்கிறோமே, என்ன இதயசுத்தியோடு நாங்கள் செய்திருப்போம். எங்களைப் பார்த்து சுண்ணாம்பு அடிக்கிறவனோடு தொடர்பு, துடைப்பம் எடுத்துப் பெருக்குபவனோடு தொடர்பு என்று சொல்கிறபோது, நாங்களும் உங்களைப் போல் ஓர் அரசியல்வாதிதான். நாங்கள் வேண்டுமானால் சாதாரணக் குடும்பத்திலே பிறந்திருக்கலாம். எங்களுக்கு பந்தாக்கள் இல்லாமல் இருக்கலாம். ஆனால் ஒன்றை மட்டும் உறுதியாக வைத்துக்கொள்ளுங்கள். நான் முறையாக அரசியலிலே 45 ஆண்டு காலம் எங்கள் கட்சி மேடையிலே பேசிப் பேசி, அந்தக் கட்சிக்காரன் போட்ட சோற்றைத் தின்று, அவன் கொடுத்த வேட்டி, சட்டையை கட்டிக் கொண்டு நின்று கொண்டிருக்கிறவன். என்னை இளம் வயதிலிருந்து கூட்டிக் கொண்டு போய் வளர்த்தவர்-- ஒரே ஒரு ஆசை மட்டும் எனக்கு. இருக்கிற வரையிலே தூய்மையாகப் பணியாற்றிவிட்டு, அவர் -- கண் மூடுவதை நான் பார்க்கக்கூடாது. ஆனால், நான் கண் மூடுவதைப் பார்த்து 'போய்விட்டான் துரைமுருகன்' என்று ஒரு வார்த்தை அவர் சொன்னால், அது போதும் என்று கருதிக்கொண்டிருக்கிறவன் நான். கேவலப்படுத்துகிறீர்களே, முறைதானா? நெஞ்சம் இருக்க வேண்டாமா? நல்லதல்ல.

அதுபோன்றுதான் நீங்கள் கேட்கலாம், "இவ்வளவெல்லாம் நீங்கள் விட்டுவிடுகிறீர்களே, ஆனால் வேலையிலே தரம் இருக்காது போல் இருக்கிறது, ஆகையால்தான் நீங்கள் இப்படிச் செய்து இருக்கிறீர்கள்" என்று. நான் அதற்கும் சொல்கிறேன், உள்ளூர் certificate அல்ல, பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியில் எங்களுக்கு certificate கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொரு team வருகிறபோதும். 1997 ஆம் ஆண்டு உலக வங்கி team வந்தது. அவர் சொன்னார்,. "The Mission appreciates the positive steps.." என்று. நான் சொன்னேனே,

அடவிநயினார்கோயில் நீர்த்தேக்கம். அந்த வேலையைச் சொல்கிறார். "The Mission appreciates the positive steps taken by the Government of Tamilnadu to weigh the process of strengthening construction, quality control and quality assurance." என்று.

1997-ல் ஐந்தாவது ஆய்வுக் குழு வந்தது. அது என்ன சொல்கிறது என்றால், 'Overall the construction quality was observed to be reasonably good. The Mission appreciates this.' என்று.

*பிற்பகல் 3-00*

ஆறாவது குழு வருகிறது. அவர் என்ன சொல்கிறார்? "Good construction quality is being obtained on Nambiar and Sothuparai work, observed by the visited Mission." அடுத்தது இடைக்காலத்தில் 1998-ல் ஒன்று; "The Construction, quality of scheme completion, rehabilitation, silt works was observed by the Mission, by and large good"

ஏழாவது அறிக்கை, 1998-ல்: "Quality Control-Everyting is good"

கடைசியில் சொல்கிறார். "By and large Construction quality on Mordhona Vadakku Pachaiyar Dam was observed as of acceptable standard."

அதற்கு மேலே கடைசியில் சொல்கிறார்: Discussion note-ல் சொல்கிறார் "Implementation—The implementation performance is rated highly satisfactory. This is the highest rating of the World Bank."

உலக வங்கியினுடைய பாராட்டு நாங்கள் செய்த வேலைக்குக் குவிந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி இதேபோன்றுதான் இன்னும் எங்களுடைய பணிகளை நான் எடுத்து, எடுத்து விளக்கிக்கொண்டிருக்க முடியும்.

ஆக, அதேபோல், நாங்கள் எடுத்திருக்கிற பணி, கிருஷ்ணா வாட்டரைப் பற்றிக்கூடச் சொன்னார்கள். அதிலே நான் நேருக்கு நேர்கூடக் கேட்கிறேன். ஏனென்று கேட்டால், இன்னொரு மாநிலத்திலே நடைபெறுகிற வேலை; இன்னொரு மாநிலத்தோடு இருக்கிற வேலை. நெளிவு சுளிவுகள், சில நேரங்களில் சங்கடங்கள், உண்டு. நீங்கள் பரவாயில்லை, வேகமாகப் பேசலாம். ஆனால், நான் நிருவாகத்தில் இருப்பவன். மீண்டும் நான் அவர்களைச் சந்திக்க வேண்டியவன். ஆனால், எப்படியும் இந்தத் தமிழ்நாட்டுக்குத் தண்ணீரைக் கொண்டுவந்து



விட வேண்டும் என்பதிலே தணியாத ஆசை இருக்குமே தவிர, வராமல் போகட்டும் என்றா இருப்போம். அதற்காக T.V.-யில் எடுத்துப் போடுவது. "ஆயிரம் கோடி ரூபாயைக் கொட்டிக் கொடுத்துவிட்டார்கள்" என்பது; நான் இந்த மன்றத்திலே கேட்கிறேன். T.V..-யிலே பேசுகிறீர்களே, இங்கே எழுந்து "ஆயிரம் கோடி கொடுத்தீர்களா" என்று என்னை ஒரு வார்த்தைக் கேட்க வேண்டாமா? இன்னும் சிலர் "இது Political fraud" என்று என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் ஒருவர்கூடச் சொன்னார். ஆனால், அந்த வார்த்தையை நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால், நாங்கள் Political fraud செய்யவில்லை. இன்னும் சொல்லப்போனால், யாரோ, எவரோ ஆரம்பித்து, விட்ட அந்த வேலையை (மேசையைத் தட்டும் ஒலி) தோள் மீது தூக்கிப் போட்டுக்கொண்டு, எப்படியும் நடைமுறைப்படுத்திவிட வேண்டும் என்பதற்காக கலைஞர் எடுத்திருக்கிற நடவடிக்கைகளிலே அது ஒன்று. எனவே, நிருவாகத்திலே சில நேரங்களிலே சங்கடங்கள் ஏற்படும். அதை இங்கே உட்கார்ந்து கொண்டே, பேசிக்கொண்டே போய்விடலாம். எனவே, அதுவல்ல, இந்தத் துறையின் மீதான கருத்துகளை இதோடு நிறுத்தி, காட்டு இலாகா குறித்து ஓரிரு வரிகளைச் சொல்லிவிட்டு நான் முடித்துவிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று கலைஞருடைய ஆட்சியில் காடு எப்படி இருக்கிறது? இதற்கு முன்னாலே காட்டு இலாகா எப்படி இருந்தது என்றால், சிலருக்கு வேட்டைக்காடாக இருந்தது. "ஓங்கிய மரம் இருக்கக் கூடாது. வெட்டு" என்பான். "கூப் என்ற பெயரிலே இறக்கு" என்பான். மடையெல்லாம் மண் திட்டாகவே இருந்தது. சிரிக்கிறார் தாமரைக்கனி; காரணம் அன்றைக்கு opposition-லிருந்து நான் பேசிய பேச்சுக்கள் அவருக்கு ஞாபகம் இருக்கும். ஆனால், தி.மு.க. ஆட்சி வந்ததற்குப் பிறகு இந்தக் காடு எப்படி இருக்கிறது என்பதற்கு ஒரு சின்ன புள்ளிவிவரம்: தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் (Tamil Nadu Tea Plantation Corporation) என்று எங்களிடம் ஒரு Corporation இருக்கிறது. இதனுடைய நிலைமை என்ன என்று பாருங்கள். 1991-92-ல் loss 292 இலட்சம்; 1992-93-ல் 221 இலட்சம்; 1993-94-ல் எப்படியோ குருட்டு நாய்க்குக் கொழுக்கட்டை கிடைத்த மாதிரி, சுமார் 72 இலட்சம் மிச்சம் வந்துவிட்டது. 1994-95-ல் 556 இலட்சம் Minus-loss தான். 1995-96-ல் 168 இலட்சம் நஷ்டம். 1996-97-ல், நாங்கள் கடைசியில் அல்லவா வந்தோம்—206 இலட்சம் நஷ்டம். அடுத்து கலைஞர் ஆட்சி, லகானை correct-ஆக 1997-98-ல் பிடித்தது எவ்வளவு தெரியுமா? 2,658 இலட்சம், அதாவது 26 கோடியே 58 இலட்சம் plus. (மேசையைத் தட்டும் ஒலி) run way-ல் flight-ஐ

கிளப்பியமாதிரி கிளப்பினார் கீழேயே ஓடிவந்து சட்டென்று 26 கோடி ரூபாய். அடுத்து 1998-99-ல் 12 கோடி ரூபாய். இது Tamil Nadu Tea Plantation Corporation.

பிற்பகல் 3-05

அடுத்து, TAFCORN, அதனுடைய நிலைமை என்ன? 1994-95-ல் ஒரு சின்ன, சிறு குடும்பம், பெருங்குடும்பம்; ஒரு கோடியே 28 இலட்சம் ரூபாய் இலாபம். 1995-96-ல் ரூபாய் 6 இலட்சம் இலாபம். 1996-97-ல் 5, கோடியே 39 இலட்சம் இலாபம் 1997-98-ல் அப்போதுதான் நம்முடைய ஆட்சி, 3 கோடியே 65 இலட்சம் ரூபாய் இலாபம். 1998-99-ல் ரூபாய் 7, கோடியே 88 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது. இதுதான் இவ்வளவு நேரம் பேசினார்கள் எல்லோரும்.

இவ்வளவுக்கும் மேலாக இன்னொரு முக்கியமானது என்ன என்று கேட்டீர்கள் என்றால், இதுதான் உங்களிடம் இருக்கக்கூடிய (சிரிப்பு)..சந்தன மரம். ஆம். இது சந்தனமரம் என்று சொல்லி எந்த மரத்தையும் வெட்டுகிறார்கள் எங்கள் ஊரிலே..... (சிரிப்பு) அதை நான் சொல்ல வரவில்லை. ஏதோ வெட்டிவிட்டான், சந்தன மரம் என்று. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் பாய் அவர்கள், எனக்குத் தெரிந்ததிலேயிருந்து அந்த நிம்மியம்பட்டைக் கேட்காமல் விட்டதில்லை. கலைஞரை "நீங்கள் அந்தக் காலத்தில் முல்லைக்கோம்பை போவீர்கள், அங்கு தான் நிம்மியம்பட்டு இருக்கிறது" என்ற பழைய வரலாற்றை எல்லாம் சொல்லி, "நீங்கள் எல்லாம் வரவேண்டும், கலைஞர் வரவேண்டும், நீங்கள் எல்லாம் வந்து ரொம்ப நாள் ஆயிற்று" என்றார். அவர் வராமல் இல்லை. அவர் இப்போதுகூட வாணியம்பாடிக்கு வந்தார். நீங்கள்தான் இல்லை. (சிரிப்பு) எனவே, அந்த சந்தன மரத்தினுடைய நிலைமையைப் பாருங்கள். 1991-92 அவர்களுடைய ஆட்சி. என்ன இருக்கிறது? அதிகமாகிக்கொண்டே வந்தது. 22 கோடி வருவாய். 1992-லே 5 கோடி. 1993-லே 13 கோடி. 1994-95-லே 18 கோடி. 1995-96-லே 13 கோடி. நாம் ஆட்சிக்கு வந்தோம். எவ்வளவு பாருங்கள். 1996-97-லே 46 கோடி; 1997-98-லே எவனும் கேட்காமல் போய்விட்டான். மரத்தை எடுத்துக்கொண்டு ஏமாற்றிவிட்டுப் போய்விட்டான். அதற்குப் பிறகு auction இல்லை. stopped. 1998-99-லே 25 கோடி. இந்த 2000-லே நண்பர்களே, சந்தனக் கட்டை ஏலம் விட்டதன் மூலம் இந்த ஆட்சிக்கு 102 கோடி ரூபாய் வருமானம் கிடைத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நேற்றைக்கு ஏலம் விட்டதிலேகூட சுமார் 25 கோடி ரூபாய்—26 கோடி ரூபாய் நேற்று ஏலம் விட்டதிலே வந்திருக்கிறது. ஆகவே, இந்த



நடப்பாண்டிலேகூட இனி வரப்போகிற நிதி ஆண்டிலேகூட 100 கோடியை எட்டக்கூடிய நிலையிலே இருக்கிறது. எனவே, காட்டிலாகா கவனிக்கப்படுகிறது என்று பொருள்; காடு பாதுகாக்கப்படுகிறது என்று பொருள். காட்டினுடைய பொருட்கள் எல்லாம் பத்திரமாக இருக்கின்றன என்று பொருள். காரணம், அந்த Pilot-ன் திறமையால்தானே இந்தப் பயணம்-விமானம்-சரியாகப் போகிறது? அதிலே இதுவும் ஒன்று.

இறுதியாக ஒன்று; உங்களிடையே இவ்வளவும் சொல்லி, சொல்ல வேண்டிய சில அறிவிப்புகளை நான் சொல்லிவிட்டு, என்னுடைய உரையை நிறைவு செய்யலாம் என்று கருதுகிறேன். வனத் துறையைப் பொறுத்தவரையில் கலைஞர் தலைமையில் ஒன்றே ஒன்று. மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் பாய் அவர்கள் நீண்டகாலமாக "இன்னொரு சந்தன பேக்டரியைப் போட்டால் என்ன" என்று கேட்கிறார்கள். தெற்குப்பட்டியில் ஒரு சந்தன ஆலை இருக்கிறது. அதிலே ஒரு கோடி ரூபாய்க்கு மேலே, 1½ கோடி ரூபாய்க்கு மேலே இலாபம் வந்திருக்கிறது. ஆனால், அதிகாரிகள்—என்னைப் பொறுத்த அளவிலே, கலைஞர்கூடக் கேட்டார், அதிகாரிகள்—இன்னொரு ஆலை போடக்கூடாது என்று சொல்கிறார்கள். ஆனால், அதில் எனக்கு மாறுபட்ட கருத்து உண்டு. காரணம், பாண்டிச்சேரியிலே சந்தன மரமே கிடையாது. ஒரு ஆலைக்கு மூன்று ஆலை போட்டிருக்கிறான். குப்பத்திலே சந்தன மரம் கிடையாது. 3 ஆலை போட்டிருக்கிறான். கர்நாடகா, ஆந்திரா, கேரளத்திலே 5 ஆலை போட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த பாண்டிச்சேரி ஆலையும் நம்மிடமிருந்து ஏதோ சிதறுவதிலிருந்துதான் ஓடுகிறது. எனவே, நாங்கள் இன்னொரு ஆலை போட்டால் ஓடும் என்ற நம்பிக்கைதான் எனக்கு இருக்கிறது. எனவே, அது குறித்து அரசு அந்த வகையிலே சிந்திக்கும் என்ற உறுதியை மட்டும் நான் மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். முதல்வரிடத்திலே கலந்து அதுகுறித்து நான் அடுத்த நடவடிக்கை எடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சந்தன மரம். (குறுக்கீடு) அதுதான் நாங்கள் எடுத்துக் கொண்டோமே. அதிலே வனத் துறைப் பிரச்சினை இருக்கிறது. அது விரைவிலே முடிந்து விடும். நானே போய்ப் பார்த்துவிட்டு வந்தேன். நீங்கள் வரவில்லை. அவர் வந்தார். இரண்டு பேரும் போய்ப் பார்த்துவிட்டு வந்து விட்டோம்.

கலைஞர் தலைமையிலே இந்த அரசு உருவான பின் சந்தன மரத் திருட்டை முறையாகத் தடுத்து நிறுத்தியதால், 1999-2000 ஆம் ஆண்டு மட்டும் சந்தன மர விற்பனையில் அரசுக்கு 102 கோடி ரூபாய்

கிடைத்துள்ளது. சந்தன மரத்தைத் திருடுகிறவர்கள் புத்தம் புதிய வாகனங்களைப் பயன்படுத்துகிறார்கள். வனத் துறையினர் பழைய வாகனங்களை வைத்துக்கொண்டு அவர்களை விரட்டிப் பிடிப்பதில் உள்ள சிரமத்தை உணர்ந்த தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் இந்த ஆண்டு ரூபாய் 84 இலட்சம் மதிப்பீட்டில் 21 பெட்ரோல் வாகனங்களை வாங்குவதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) அனுமதி அளித்துள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, நமது மாநிலத்தில் மொத்த வனப் பரப்பு 22,84,500 ஹெக்டேர் ஆகும். இந்த மொத்த வனப் பரப்பானது பாதுகாப்புக்காக 2,884 பிட்டுகளாகப் பிரிக்கப்பட வேண்டும். தற்போது 1,295 பிட்டுகளுக்கு மட்டும் பாதுகாப்புப் பணியாளர்கள் உள்ளனர், வனப் பாதுகாப்பை முன்னிட்டு மேலும் 20 பிட்டுகளுக்குப் பாதுகாப்புப் பணியாளர்களை நியமிக்க முதல்வர் கலைஞர் அவர்கள் அனுமதி வழங்கி இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-40

அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா ஆசியாவிலேயே மிகப் பெரிய ஒன்று. ஆண்டுதோறும் இந்தப் பூங்காவிற்கு சுமார் 8 இலட்சம் பார்வையாளர்கள் வருகிறார்கள். மேலும் இந்தப் பூங்காவைச் சரியான முறையில் பராமரிப்பதற்காகப் பல்வேறு திட்டங்களுக்காக ரூ. 9 இலட்சம் இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் புகழ்பெற்ற பறவைகள் சரணாலயமான வேட்ந்தாங்கல் பகுதியில் பல்வேறு அபிவிருத்திப் பணிகளைச் செய்வதற்கு ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்பதையும் மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வன விலங்குகளால் மனித உயிர்களுக்கு இழப்பு ஏற்பட்டாலோ அல்லது நிரந்தர உடல் ஊனம் ஏற்பட்டாலோ மேற்படி குடும்பத்திற்கு இதுவரையில் ரூ. 50 ஆயிரம் இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. இனிமேல் இந்தத் தொகையை ரூ. 1 இலட்சமாக உயர்த்தித்தர முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், வன விலங்குகளால் மனிதர்களுக்கு பெரும் காயம் ஏற்பட்டால், மதிப்பீட்டுத் தொகையாக இதுவரையில் அவர்களுக்கு



ரூ. 10 ஆயிரம் வழங்கப்பட்டு வந்தது. இனி அந்தத் தொகை 20 ஆயிரமாக உயர்த்தித் தரப்படும் என்று முதல்வர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள்.

வன விலங்குகளால் பயிர்களுக்குச் சேதம் ஏற்பட்டால் இதுவரையிலே ரூ. 2,500 நஷ்டஈடு வழங்கப்பட்டு வந்தது. இனிமேல் இந்தத் தொகையை அதிகபட்சமாக ரூ. 15 ஆயிரமாக உயர்த்தித்தர முதல்வர் அவர்கள் உத்தரவிட்டு இருக்கிறார்கள் என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் வன விலங்குகளால் குடிசைகளுக்குச் சேதம் ஏற்பட்டால் இதுவரையில் ரூ.2500 கொடுக்கப்பட்டு வந்தது. இனிமேல் இது ரூ. 5,000 ஆக உயர்த்தித் தரப்படும்.

அதேபோன்று வனப் பாதுகாப்புப் பணியாளர்கள் இரவு நேரக் காவலில் ஈடுபடும்போது அவர்களுக்கு 5 செல் கொண்ட 250 பேட்டரி விளக்குகள் இந்த ஆண்டு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்குத் தொடர்ச்சி மலையில் பணியாற்றும் வனத் துறை களப் பணியாளர்கள் ஆயிரம் பேருக்கு மழைக் கோட்டுகள் வழங்க முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய நிதிநிலை அறிக்கையில் தெரிவித்தபடி, கிழக்குக் கடற்கரைச் சாலையோரப் பகுதியில் உள்ள மாவட்டங்களில்—கடலூர், திருவாரூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில்—கடலை ஒட்டியுள்ள சதுப்பு நிலக் காடுகளை நல்ல தரமுள்ள மாங்குரோவ் காடுகளாக மாற்றுவதற்கு ரூ. 17.55 கோடி செலவில் ஒரு திட்டம் மத்திய அரசு உதவியுடன் இவ்வாண்டு முதல் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜப்பான் கூட்டுறவு வங்கி உதவியுடன் நடைபெற்று வரும் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் மூலம் இந்த ஆண்டு ரூ. 107.06 கோடி செலவில் 200 கிராமங்களில் சுற்றியுள்ள வனப் பகுதிகள் மேம்படுத்தப்படும். இது சம்பந்தமாக சட்டமன்ற உறுப்பினர்கள் ஆக்கபூர்வமான அறிவுரைகளை வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், இதுவரையிலே அந்தக் கிராமங்களை

எடுக்கிறபோது, சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்து ஆலோசிக்கவில்லை என்றுதான் பெரும்பாலோர் என்னிடத்திலே சொன்னார்கள். எனவே, இனிமேல் அந்தப் பகுதிகளில் அந்தக் கிராமங்களை எடுக்கிறபோது சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்து ஆலோசிக்க வேண்டும் என்று அவர்களுக்குத் தெரிவித்து இருக்கிறோம்.

அடுத்து ஜப்பான் நாட்டு உதவியுடன் நடைபெறும் காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 326 இலட்சம் செலவில் துறை மேம்பாட்டிற்காக கணினி வழங்கப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

புயல் மற்றும் இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் சேதத்தைத் தவிர்க்க கடற்கரை ஓரங்களில் இயற்கை அரணாக மரங்களை நட ரூ. 28 கோடி செலவில் திட்டம் தீட்டி மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பொதுப் பணித் துறையில் இருக்கின்ற சில அறிவிப்புகள். தமிழ்நாட்டில் மொத்தம் 39 ஆயிரம் ஏரிகள் இருக்கின்றன. சுமார் 9 ஆயிரம் ஏரிகள் பொதுப் பணித் துறையைச் சார்ந்தவை. இந்த ஏரிகளும் ஆண்டாண்டு காலமாகப் பராமரிப்பு இன்றி தூர்ந்தும், கரைகள் பழுதுபட்டும், மதகுகள் பழுது அடைந்தும் இருப்பதால், ஏரிகளில் தேங்க வேண்டிய தண்ணீர் தேங்காமல் வீணாகிக் கொண்டிருக்கிறது. இந்த நிலை மாற தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணைக்கிணங்க ஒரு தொகுதிக்கு ஒரு ஏரி என்று எடுத்து கடந்த இரண்டு ஆண்டுகளில் 400 ஏரிகள் சீரமைக்கப்பட்டு இருக்கின்றன. ஐரோப்பிய பொருளாதாரத் திட்டத்தில் 148 ஏரிகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால், இப்போது நீங்களேகூடக் கேட்டீர்கள். எல்லோரும், தங்களுக்கு, "தொகுதிக்கு ஒரு ஏரி வேண்டும்" என்று கேட்டார்கள். அவர்களுக்கு நான் மகிழ்ச்சிகரமாக ஒன்று சொல்கிறேன். இதுவரையிலும் முதல்வர் அவர்கள் ஒரு ஏரி கொடுத்தார்கள்; அதற்கான செலவுக்கு நாம் ரூ. 10 இலட்சம்தான் கொடுத்தோம். ஆனால், இப்போது NABARD நம் பொதுப் பணித் துறைக்குப் பணம் கொடுத்து இருக்கிறார்கள். ஆகவே, முதல்வர் அவர்கள் இப்போது அந்தத் திட்டத்தை இந்த நிலையில் அறிமுகப்படுத்தச் சொல்லி இருக்கிறார்கள். இதனடிப்படையில் முதல் கட்டமாக 44 ஏரிகளைச் சீரமைக்க ரூ. 18.69 கோடி வழங்கப்பட்டிருக்கிறது.



பிற்பகல் 3-15

இதேபோல், இரண்டாவது கட்டத்தில் 126 ஏரிகளைச் சீரமைக்க ரூபாய் 63.6 கோடி வழங்க NABARD உத்தரவாதம் அளித்து இருக்கிறது. இந்தப் பணத்தைக் கொண்டு ஏரிகளை நவீனப்படுத்துதல், தரத்தை உயர்த்துதல், நீர்ப்பாசனத் திறத்தை மேம்படுத்துதல், மதகுகளைப் பழுதுபார்த்தல், கலன்களைச் சீரமைத்தல், வாய்க்கால்களைத் தூர் எடுத்தல் ஆகியவற்றைச் செய்ய வேண்டும். ஆனால், இதில் ஒரேயொரு கஷ்டம்; என்னவென்று கேட்டீர்கள் என்றால், கிராமச் சபை அமைத்து, அங்கிருக்கிற விவசாயிகள் கையில்தான் இந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட வேண்டும். அதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டும். ஆகையால் இந்தமுறை எடுக்கப்படுகிற 44 ஏரிகள் என்னென்ன என்கிற பட்டியல் என்னிடத்திலே இருக்கிறது. இந்தப் பட்டியலில் தங்களுடைய தொகுதி ஏரியின் பெயர் கிடைக்காதவர்கள் நாளைக்கு வந்து என்னைப் பார்க்கக் கூடாது. மீதியிருப்பவர்கள் நாளை என்னிடத்திலே வந்து பார்த்துக்கொள்ளலாம். நேரமில்லாத காரணத்தால் அதைப் படிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசாணை எண் 302, பொதுப் பணித் துறை 26-5-1998-ன்படி சிமெண்ட் மற்றும் இரும்புப் பொருட்கள் அரசு வேலைகளுக்காகப் பொது நிறுவனங்களிடமிருந்து, அரசே கொள்முதல் செய்து ஒப்பந்தக்காரர்களுக்கு அளிக்கும் முறையில் உள்ள சிக்கல்களை முழுமையான அளவில் தவிர்க்கும்பொருட்டு, அவற்றை ஒப்பந்தக்காரர்களே நேரடியாக வெளிச் சந்தையிலிருந்து கொள்முதல் செய்து, அரசு வேலைகளுக்குப் பயன்படுத்த ஆணை வழங்கப்பட்டு உள்ளது. இவ்வாணை நடைமுறைப்படுத்தப்பட்டதால் நல்ல பலன் கிடைக்கப்பெற்றதைக் கருத்தில் கொண்டு, தற்போது பொதுப் பணித் துறை மின் பிரிவு சார்ந்த மின்பொருட்களைப் பொது நிறுவனங்களிடமிருந்து அரசே கொள்முதல் செய்து ஒப்பந்தக்காரர்களுக்கு அளிப்பதற்குப் பதிலாக ஒப்பந்தக்காரர்களே நேரடியாக வெளிச் சந்தையிலிருந்து கொள்முதல் செய்து, அரசு ஒப்பந்தப் பணிகளுக்கு பயன்படுத்த இந்த அரசு முடிவு செய்திருக்கிறது.

அதிகார வரம்பு; பொதுப் பணித் துறையில் மேற்கொள்ளப்படும் வேலைகளில் ஒப்பந்தம் முடிவு செய்யும் அதிகார வரம்பினை உயர்த்தி தலைமைப் பொறியாளர் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர் ஆகியோருக்கு ஏற்கெனவே ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது செயற் பொறியாளருக்கு இருக்கும் அதிகார வரம்பினை ரூபாய் 2

இலட்சத்திலிருந்து 10 இலட்சமாக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வாறே உதவி செயற் பொறியாளருக்குரிய ஒப்பந்தம் முடிவு செய்யும் அதிகார வரம்பும் ரூபாய் 20,000-லிருந்து 50,000 ஆக உயர்த்தப்படும் என்பதை அறிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று பொதுப் பணித் துறையில் மின் பிரிவு உதவி செயற் பொறியாளர்களுக்குரிய ஒப்பந்தம் முடிவு செய்யும் அதிகாரம் ரூ. 10,000-க்குள் அளிக்கப்படும்.

ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், புஞ்சை கலாமங்கலம் கிராமத்திலே குரங்கம்பள்ளம் ஆயக்கட்டு சுமார் 2,500 ஏக்கர் ஆகும். இது ஏற்கெனவே கசிவு நீர் ஆயக்கட்டில் தண்ணீர் போதாத காலங்களில் L.B.P. கால்வாயிலிருந்து தண்ணீர் பெற்று வருவதாலும் தாராபுரம் ஆயக்கட்டில் உள்ள பகுதிகளில் வீட்டுமனைகள் உருவாகி இருப்பதாலும் இந்த குரங்கம்பள்ளம் ஆயக்கட்டை L.B.P. ஆயக்கட்டில் சேர்க்க வேண்டுமென்ற நீண்ட நெடுநாளைய கோரிக்கையை ஏற்று இவ்வரசு L.B.P. ஆயக்கட்டில் குரங்கம்பள்ளத்தைச் சேர்க்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் கீழ்பவானி திட்டம்–L.B.P. பிரதானக் கால்வாயில் 41-வது மைல் 2-வது பர்லாங்கில் பிரியும், கிளை வாய்க்கால் 1/5, 120 வேலம்பாளையம் கிளைக் கால்வாயில் ஒரு முறைப் பாசனத்தினை, இருமுறைப் பாசனமாக்கி 2,000 ஏக்கர் நிலத்தை மாற்றியமைத்து, வருடத்திற்கு 1,000 ஏக்கர் மாறி, மாறிப் பாசனம் பெற அனுமதி கோரியதை அரசு ஏற்றுக்கொள்கிறது. இதற்கு, கிளை வாய்க்காலைக் கரை உயர்த்தி, குறுக்குச் சுவர் கட்டவும் சுமார் 10 இலட்ச ரூபாய் அனுமதிக்கிறது.

அறிஞர் அண்ணா மற்றும் எம்.ஜி.ஆர். நினைவிடத்தில் பணிபுரியும் ஊழியர்கள் அந்தப் பகுதியைப் பாதுகாப்பதோடு, வருகிற பார்வையாளர்களை கவனிக்கவும், பார்வையாளர்கள் அந்தப் பகுதியில் ஏதும் சேதம் ஏற்படுத்தாமல் பார்த்துக்கொள்ளவும் பணியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இந்தப் பணியாளர்களுக்கு என்று தனியாகச் சீருடைகள் வழங்கவில்லை. இதனால் சில நேரங்களில் பார்வையாளர்களுடன் சர்ச்சை ஏற்படுகிறது. இவற்றைத் தவிர்க்கும் வண்ணம் இங்கு பணிபுரியும் ஊழியர்களுக்கு இரண்டு செட் சீருடைகள் வழங்க முதல்வர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, இந்த அறிவிப்புகளோடு பொதுப் பணித் துறை நிற்கிறது. இன்னும் என்னுடைய பொதுப் பணித் துறையிலே பல்வேறு சங்கங்கள் உண்டு. பல்வேறு பிரிவுகள் உண்டு. இங்கே நம்முடைய



இராமச்சந்திரன் எடுத்துச்சொன்ன N.M.R. பிரச்சினைகள் உண்டு. பாசனக் காவலர்களுடைய பிரச்சினை உண்டு. நான் ஒவ்வொரு சங்கத்தையும் தனித்தனியாக அழைத்துப் பேசியிருக்கிறேன். நான் அவர்களிடத்திலே தெரிவித்திருக்கிறேன். இருக்கிற நிதி நிலைமைக்கு ஏற்ப ஒவ்வொன்றும் செய்யப்படும் என்று நான் தெரிவித்திருக்கிறேன். அதையும் அவர்கள் ஏற்றிருக்கிறார்கள்.

எனவே, வனத் துறையிலும் சரி, பொதுப் பணித் துறையிலும் சரி, இரண்டு துறைகளிலும் இருக்கிற அத்தனை சங்கங்களிலும் இருக்கிற நண்பர்களையும், அதன் தலைவர்களையும் கேட்டுக்கொள்கிறேன், "இந்த அரசு தொழிலாளருடைய பிரச்சினையை அனுதாபத்தோடு கவனிக்கக்கூடியது. இந்த 4 ஆண்டு காலத்தில் எந்த நம்பிக்கையோடு எங்களோடு இருந்தீர்களோ, அந்த நம்பிக்கையை வைத்து நீங்கள் இலாகா வளர பாடுபட வேண்டும்" என்று நான் இந்த நேரத்திலே அவர்களிடத்திலே என்னுடைய பொதுவான வேண்டுகோளை விடுகிறேன்.

பிற்பகல் 3-20

இங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் பல திட்டங்களைப் பற்றி எல்லாம் என்னிடத்திலே தெரிவித்திருக்கிறார்கள். அப்பாவு, "இரைவைப் பாசனம் என்ன ஆயிற்று ?" என்று கேட்டார். நம்முடைய கோதர் மைதீன் பல கிராமங்களைக் கொடுத்து இவற்றையும் நாங்கள் சேர்க்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். இவையெல்லாம் தனித் தனியாகச் செய்யவேண்டியது; அதிகாரிகளிடம் கொடுத்து அதை ஏற்றுக்கொள்ளச் செய்வது; இது அறிவிப்பில் வராது. அதனால் நீங்கள் கொடுத்தது இன்னும் என்னுடைய டைரியில்தான் இருக்கிறது. அதுபோல பல திட்டங்களை உறுப்பினர்கள் கேட்டார்கள். "பாசுமுத்தான் ஓடை அது என்ன" என்று கேட்பார், "ஆனைவிழுந்தான் ஓடை, அது என்ன" என்று கேட்பார்; "பக்ளின் ஆற்றுக்கு வருகிறதா" என்றெல்லாம் கேட்பார். ஒன்றை மட்டும் நான் சொல்கிறேன். கலைஞர் அவர்கள் இந்த முறை 57 கோடி ரூபாய் தூர் வாருவதற்குக் கொடுத்திருக்கிறார்கள்—57 கோடி ரூபாய்—அதில் காவிரி கழிமுகப் பகுதியில் 20, 25 கோடி ரூபாய் போக மீதியை "தமிழ்நாட்டில் எங்கெங்கு தூர் வார வேண்டிய நிலைமை உள்ளதோ எங்கெங்கு நீர்ப் பாசனத்திற்கு அபிவிருத்திப்பணி தேவையோ அவற்றையெல்லாம் எடுத்துக்கொண்டு செய்யுங்கள்" என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, காவிரி கழிமுகப் பகுதிக்கு விட்டது போக மீதி இருப்பவை—4 மண்டலங்கள். அந்த 4 மண்டலங்களில் உள்ள பொறியாளர்களோடு பேசி, எது முக்கியம் என்பது பற்றி முடிவு

செய்யப்படும். இங்கே வெட்டுத் தீர்மானங்களில் நீங்கள் கொடுத்திருக்கிற கோரிக்கைகள், நீண்ட நெடுங்காலமாக என்னிடத்திலே நீங்கள் தெரிவித்திருக்கிற கோரிக்கைகள்; எனக்கு மனப்பாடம். எந்த எந்த இடத்தில் யார் யாருக்கு என்னென்ன கோரிக்கை என்று பார்த்து அதையெல்லாம் வருகிற நிதிக்குட்பட்டு நான் எடுத்திருக்கிறேன். அது ஒரு பெரிய பட்டியல். வேண்டுமானால் இந்தக் கூட்டத் தொடர் முடிவதற்கு முன்னால் மீண்டும் அதை அவையில் ஒரு நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதை எடுத்துக் கூறுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். இந்த நேரத்தில் நான் மீண்டும் "எங்களை நம்புங்கள். நாங்கள் பணியாற்ற வந்திருக்கிறோம்" என்பதை மட்டும் உங்களுக்குத் தெரிவித்துக்கொண்டு நீங்கள் கொடுத்த வெட்டுப் பிரேரணைகளையெல்லாம் வாபஸ் பெற்றுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நீங்கள் உறுதுணை புரிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. (குறுக்கீடுகள்) 50 பேர் எழுந்து நிற்கிறீர்கள். (குறுக்கீடு) திரு. அப்பாவு, நீங்கள் உட்காருங்கள். எனக்கே கேள்வி இருக்கிறது. உங்களுக்கு மட்டும் இல்லை, எனக்கே கேள்வி இருக்கிறது, நான் கேட்க முடியவில்லை. விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**(அ) கோரிக்கை எண் 35—பாசனம்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 35—பாசனம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. நா. பெரியசாமி, இருக்கையில் இல்லை. திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. க. மணிவர்மா இருக்கையில் இல்லை. திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. பி. வெங்கடசாமி, இருக்கையில் இல்லை. திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கே. ரவி அருணன், இருக்கையில் இல்லை. திரு. கே. ரவி அருணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. பா. வேல்துரை, இருக்கையில் இல்லை. திரு. பா. வேல்துரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ச. புரட்சிமணி.

**திரு. ச. புரட்சிமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. புரட்சிமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூபாய் 221,13,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்." என்னும் மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஆ) கோரிக்கை எண் 36—பொதுப் பணிகள்—கட்டடங்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 36—பொதுப் பணிகள்—கட்டடங்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. நா. பெரியசாமி, இருக்கையில் இல்லை. திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



திரு. பி. வெங்கடசாமி, இருக்கையில் இல்லை. திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கே. ரவி அருணன், இருக்கையில் இல்லை. திரு. கே. ரவி அருணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. பா. வேல்துரை, இருக்கையில் இல்லை. திரு. பா. வேல்துரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ். வி. கிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பொதுப்பணிகள்—கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 87,41,79,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(இ) கோரிக்கை எண் 54—பாசனம் குறித்த மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 54—பாசனம் குறித்த மூலதனச் செலவு வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. க. மணிவர்மா, இருக்கையில் இல்லை. திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. ரவி அருணன், இருக்கையில் இல்லை. திரு. கே. ரவி அருணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 466,21,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(ச) கோரிக்கை எண் 55—பொதுப் பணிகள்—கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 55-பொதுப் பணிகள்—கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. ரவி அருணன், இருக்கையில் இல்லை. திரு. கே. ரவி அருணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பொதுப் பணிகள்—கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 129,31,94,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பிற்பகல் 3-25

(உ) கோரிக்கை எண் 44—காட்டுவளத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 44—காட்டுவளத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. நா. பெரியசாமி, இருக்கையில் இல்லை. திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறபடுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. க. மணிவர்மா, இருக்கையில் இல்லை. திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.



**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. பி. வெங்கடசாமி, இருக்கையில் இல்லை. திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கே. ரவி அருணன், இருக்கையில் இல்லை. திரு. கே. ரவி அருணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், ரூ. 103,04,71,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(ஊ) கோரிக்கை எண் 58—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 58—காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.



**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. ரவி அருணன், இருக்கையில் இல்லை. திரு. கே. ரவி அருணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், ரூ. 108,45,13,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் செவ்வாய்க்கிழமை (2-5-2000) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3-27 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6.பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

153. சமய நிறுவனங்களைச் சேர்ந்த சொத்துக்களை நிருவகித்துப் பாதுகாப்பது குறித்த விதிகளில் திருத்தம் செய்தது குறித்து தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறையின் 7-12-1999 ஆம் நாளிட்ட 588ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

160. அரசு உறுதிமொழிக் குழுவின் பதினாறாவது அறிக்கை (1999-2000)

161. அரசு உறுதிமொழிக் குழுவின் பதினேழாவது அறிக்கை (1999-2000)

162. அரசு உறுதிமொழிக் குழுவின் பதினெட்டாவது அறிக்கை (1999-2000)

163. அரசு உறுதிமொழிக் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை (1999-2000)

164. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபதாவது அறிக்கை (1999-2000)

165. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்து ஒன்றாவது அறிக்கை (1999-2000)

166. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்து இரண்டாவது அறிக்கை (1999-2000)

167. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்து மூன்றாவது அறிக்கை (1999-2000)

168. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்து நான்காவது அறிக்கை (1999-2000)



## இணைப்பு I

(95ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### கோரிக்கை எண் 35, 36, 54 மற்றும் 55 - பாசனம் மற்றும் கட்டடங்கள்

### கொள்கை விளக்கக் குறிப்பு 2000-2001

**1. முன்னுரை**

பழமையும், பெருமையும் வாய்ந்த பொதுப்பணித் துறையின் "பாசனம் மற்றும் கட்டடங்கள்" மீதான கோரிக்கையை இம்மாமன்றத்தின்முன் வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். பொதுப்பணித் துறையானது. பெரியதும், நடுத்தரமானதும், சிறிய அளவிலானதுமான பாசனத் திட்டங்களை வகுத்து செயல்படுத்துவதற்கும், அவற்றை பராமரிப்பதற்கும், மாநில அரசுத் துறைகளுக்கும் அரசின் இதர முகமைகளுக்கான கட்டடங்களை கட்டிக் கொடுப்பதற்கும், பராமரிப்பதற்குமான பொறுப்பை வகிக்கின்றது. நீர்த் தேவையைக் கோரும் எல்லா பகுதியினரும் பயன்பெறும் வகையில் நில மேற்பரப்பு நீரையும், நிலத்தடி நீரையும் நன்கு நிர்வகித்து, அறிவார்ந்த அறிவியல் ரீதியில் பங்கீடு செய்து அதன் மூலம் வேளாண்மை உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் பெருக்குவதே பொதுப்பணித் துறையின் நீர்வள ஆதார அமைப்பின் நோக்கமாகும். நல்ல தரமான கட்டடங்களை சிறந்த தொழில்நுட்ப உதவியின் துணையோடு குறைந்த செலவில் கட்டுவதும், கட்டிய கட்டடங்களை நிறைவு தரும் வகையில் பராமரிப்பதும் கட்டட அமைப்பின் நோக்கமாகும்.

**2. நீர்வள ஆதார அமைப்பு**

நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தை செயலாக்குவதில் முதற்படியாகவும், அதனைத் திறம்படச் செயலாக்குவதன் பொருட்டும், தனித்தன்மையுடன் செயல் புரியவும் பொதுப்பணித் துறை நீர்வள ஆதார அமைப்பு எனவும், கட்டடங்கள் அமைப்பு எனவும் 1995 டிசம்பர் முதல் பிரிக்கப்பட்டது.

இம்மாநிலத்தின் நீர் பங்கீட்டு நிர்வாகம், நீர்வள ஆதார அமைப்பின் கீழ் வடிநில வாரியாகப் பிரித்து பரவலாக்கப்பட்டு, சென்னை

திருச்சிராப்பள்ளி, பொள்ளாச்சி, மதுரை என நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டலமும் ஒரு வடிநில மேலாளர் என்பவரைத் தலைவராகக் கொண்டுள்ளது. இவர் தலைமைப் பொறியாளர் பதவி நிலையில் பணியாற்றுகிறார். ஒவ்வொரு மண்டலத்தின் கீழ் உள்ள வடிநிலப் பகுதி, கிளையாறு, கிளையாற்றின் கிளையாறு விவரங்கள் இணைப்பு - I ல் கொடுக்கப்பட்டுள்ளன.

நீர்வள ஆதார அமைப்பானது கீழே குறிப்பிட்டுள்ள தலைமைப் பொறியாளர்களுடன் செயல்படுகிறது.

1. முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, சென்னை (நீர்வள ஆதார அமைப்பின் தலைவர் மற்றும் கொள்கை உருவாக்கும் அலுவலர். நீர்வள ஆதார அமைப்பின் முழு நிர்வாகத்திற்கும் பொறுப்பு வகித்தல், திட்டப் பணிகள் நிறைவேற்றப்படுவதை கண்காணித்தல்; வரவு செலவுத் திட்டத்தை நிர்வகிக்கும் அதிகாரி.)

2. தலைமைப் பொறியாளர், திட்ட உருவாக்கம், சென்னை (திட்டங்களின் ஆயத்த அறிக்கை, சாத்திய மற்றும் விரிவான அறிக்கை தயாரித்தல்; திட்டங்களில் சுற்றுப்புறச் சூழலினால் ஏற்படும் விளைவுகளைக் கணக்கிடு செய்தல்)

3. தலைமைப் பொறியாளர், வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம், சென்னை (வடிவமைப்புகளின் தரங்களை இன்றைய சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் உயர்த்துதல், திட்டங்களுக்கு வடிவமைப்பு மற்றும் வரைபடம் தயாரித்தல்; ஏரிகள் நவீனப்படுத்தும் திட்டத்தை செயலாக்குதல் மற்றும் மண்டலத் தலைமைப் பொறியாளருக்கு கட்டுமான ஆதாரம் குறித்து உதவுதல்.)

4. தலைமைப் பொறியாளர், இயக்கம் மற்றும் பராமரிப்பு, சென்னை (நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்வழங்கு அமைப்புகளின் இயக்கம் மற்றும் பராமரிப்புக்கான கொள்கைகள், விதிமுறைகள் மற்றும் தரம் வகுத்தல்; நீர்வளத் தொகுப்புத் திட்டத்தின் கீழ் விவசாயிகள் அமைப்பு மற்றும் அதன் பங்கு இவற்றை வகுத்தல்; நீர்வள ஆதார அமைப்பின் பணிமனை நிறுவனங்களுக்கும் பொறுப்பு வகித்தல்.)

5. தலைமைப் பொறியாளர், நிலத்தடி மற்றும் நிலமேற்பரப்பு நீர் ஆதார விவர மையம், சென்னை (மேற்பரப்பு, நிலத்தடி நீர் மற்றும்



வானிலை விவரங்கள் ஆகியவற்றை சேகரித்து, சரிபார்த்து, பராமரித்தல்; உலக வங்கி உதவியுடன் கூடிய நீரியல் திட்டத்தை செயலாக்குதலுக்கு பொறுப்பு வகித்தல்.)

6. தலைமைப் பொறியாளர், சென்னை மண்டலம், சென்னை (சென்னை மண்டலத்தில் உள்ள வடிநிலங்களின் கீழ் வரும் அனைத்து பாசன திட்டங்களை செயலாக்குதல்; பிற துறைகளுடன் தொடர்பு கொண்டு அவைகளின் நீர்த்தேவைகளை பூர்த்தி செய்தல்.) கிருஷ்ணா குடிநீர் வழங்கு திட்டம் மற்றும் சென்னை பெருநகர நீர் வழிகளை செப்பனிட்டுச் சீரமைக்கும் திட்டம் (புதிய நூற்றாண்டின் தொடக்கத் திட்டம்) ஆகியவற்றிற்கும் இவர் பொறுப்பு அலுவலர்.

7. தலைமைப் பொறியாளர், திருச்சிராப்பள்ளி மண்டலம், திருச்சிராப்பள்ளி (திருச்சிராப்பள்ளி மண்டலத்தில் உள்ள வடிநிலங்களின் கீழ் வரும் அனைத்து பாசன திட்டங்களை செயலாக்குதல்; பிற துறைகளுடன் தொடர்பு கொண்டு அவைகளின் நீர்த்தேவைகளை பூர்த்தி செய்தல்.)

8. தலைமைப் பொறியாளர், பொள்ளாச்சி மண்டலம், பொள்ளாச்சி (பொள்ளாச்சி மண்டலத்தில் உள்ள வடிநிலங்களின் கீழ் வரும் அனைத்து பாசன திட்டங்களை செயலாக்குதல்; பிற துறைகளுடன் தொடர்பு கொண்டு அவைகளின் நீர்த்தேவைகளை பூர்த்தி செய்தல்.)

9. தலைமைப் பொறியாளர், மதுரை மண்டலம், மதுரை (மதுரை மண்டலத்தில் உள்ள வடிநிலங்களின் கீழ் வரும் அனைத்து பாசன திட்டங்களை செயலாக்குதல்; பிற துறைகளுடன் தொடர்பு கொண்டு அவைகளின் நீர்த்தேவைகளை பூர்த்தி செய்தல்.)

10. இயக்குநர் மற்றும் தலைமைப் பொறியாளர், நீர் ஆய்வு நிறுவனம், தரமணி, சென்னை (மாநிலத்தில் உள்ள அனைத்து வடிநிலங்களுக்கும் நீர்வளத் திட்டம் தயார் செய்தல்; தமிழ்நாடு நீர்வளக் கொள்கை சம்பந்தப்பட்ட விவரங்களுக்கு பொறுப்பு அலுவலர்; நீர்வள ஆதார கட்டுப்பாடு மற்றும் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்-செயலர்.)

11. இயக்குநர் மற்றும் தலைமைப் பொறியாளர், பாசன மேலாண்மை பயிற்சி நிலையம், திருச்சிராப்பள்ளி (நீர்வள ஆதார அமைப்பின் தேவைகளுக்கு ஏற்ப பயிற்சித் தேவைகளைக் கண்டறிந்து அலுவலர்களுக்கும் வேளாண் பெருமக்களுக்கும் பயிற்சி அளித்தல்.)

[2000 ஏப்ரல் 29

**3. பாசன நிலை:**

புவியியல் அடிப்படையில் 130 இலட்சம் எக்டேர் நிலப் பரப்பளவு கொண்டுள்ள தமிழ்நாடு இந்திய மாநிலங்களில் 11-ஆம் இடத்தை வகிக்கிறது. தமிழ்நாட்டில் பயிரிடப்படும் நிலத்தின் பரப்பு சுமார் 60 இலட்சம் எக்டேர் ஆகும். இதில் சுமார் 30 இலட்சம் எக்டேர் பரப்பு, அதாவது 50 விழுக்காடு கீழே குறிப்பிட்டுள்ள நீர் ஆதாரங்களிலிருந்து பாசன வசதியைப் பெறுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | கால்வாய்கள் | : | 9.50 இலட்சம் எக்டேர் |
| 2. | ஏரிகள் | : | 9.00 இலட்சம் எக்டேர் |
| 3. | கிணறுகள், குழாய்க் கிணறுகள் | : | 11.50 இலட்சம் எக்டேர் |

**4 தமிழ்நாட்டின் பாசன வளர்ச்சி:**

4.1. தமிழ்நாட்டில் பெரியது மற்றும் நடுத்தரமான நீர் ஆதாரங்களிலிருந்து பாசன வசதி பெறக்கூடிய பாசனப் பரப்பானது 15 இலட்சம் எக்டேர் என தேசிய வேளாண்மைக் குழு 1976-ஆம் ஆண்டில் மதிப்பிட்டுள்ளது. முதல் ஐந்தாண்டு திட்ட துவக்கத்தில் 23 பெரிய மற்றும் நடுத்தர திட்டங்களின் மூலம் 11 இலட்சம் எக்டேர் பகுதிகளுக்குப் பாசன வசதி அளிக்கப்பட்டது. ஒன்பதாவது திட்ட காலத்தில் 1999-2000 முடிய பாசனம் பெறும் பகுதி 26.25 இலட்சம் எக்டேராக உயர்ந்தது.

2000-2001 ஆம் ஆண்டில் 1,213 எக்டேர் கூடுதல் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**4.2. அண்டை மாநில வடிநிலப் பகுதியிலிருந்து தமிழ்நாட்டிற்கு நீர் திருப்பி விடுதல்:**

4.2.1. தமிழ்நாடு அனேகமாக தனது மேற்பரப்பு நீர்வளம் முழுவதையும் பயன்படுத்திவிட்டது. ஆனால் அண்டை மாநிலங்களான கர்நாடகம், கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகியவை நல்ல நீர்வளம் பெற்றுள்ளன. தமிழ்நாட்டின் நீர்வளத்தை மேலும் பெருக்குவதற்கு அண்டை மாநில வடிநிலப் பகுதகளில் உள்ள மிகை நீரையே நம்பியிருக்க வேண்டியுள்ளது. இதனை கருத்தில் கொண்டு அண்டை மாநிலங்களின் வடிநில மிகை நீரை தமிழ்நாட்டுக்குத் திருப்பி விடுவதற்கு மத்திய அரசு உருவாக்கிய தேசிய நீர்வள மேம்பாட்டு முகமையை தமிழ்நாடு அணுகியுள்ளது.



2000 ஏப்ரல் 29]

4.2.2. தேசிய நீர்வள மேம்பாடு முகமையானது இந்திய தீபகற்பத்திலுள்ள ஆற்று நீர்வள மேம்பாட்டுத் திட்டங்களை ஆய்வு செய்கிறது. மதுரை, இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் வறட்சியான பகுதிகள் பயன்பெறும் வகையில் கேரள மாநிலத்தில் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளான பம்பா மற்றும் அச்சன்கோவில் ஆறுகளின் மிகை நீரைத் திருப்புதலும் இதில் அடங்கும். இவ்வரசு இதுபற்றி கேரள அரசுடனும் மத்திய அரசுடனும் தொடர்பு கொண்டு மேல் நடவடிக்கை எடுத்து வருகிறது.

4.2.3. மகாநதி - கோதாவரி - கிருஷ்ணா - பெண்ணாறு - பாலாறு - காவிரி - வைகை இணைப்புகளில் மிகுதியான நீரை திருப்புதல் குறித்தும் தேசிய நீர்வள மேம்பாட்டு முகமையின் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அத்திட்டங்களின் சாத்தியக் கூறுகள் பற்றிய முன்னோடி அறிக்கையும் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

4.2.4. இதனையன்றி பாண்டியாறு - புன்னம்புழா ஆறுகளில் பாசனம் மற்றும் புனல் மின் உற்பத்தித் திட்டத்தை நிறைவேற்ற கேரள அரசுடன் முழுமூச்சாக தொடர்பு கொள்ளப்பட்டு வருகிறது.

**4.3 பாசன நீர் பயன்பாட்டில் சிக்கனம்:**

4.3.1. மாநிலத்தின் மேற்பரப்பு நீர் அனேகமாக முழுவதும் பயன்படுத்தப்பட்டுவிட்ட நிலையில், பெரியது மற்றும் நடுத்தர பாசன திட்டங்களுக்கான வாய்ப்புகள் இப்போது மிகவும் குறைவாகவே உள்ளன. இந்தச் சூழலில், தற்போதைய கால்வாய் பாசன முறையையும், ஏரிப்பாசன முறையையும் நவீனப்படுத்துவதன் மூலம் நீர் வீணாகாமல் தடுப்பதுடன், நீரை சீரான வகையில் உரிய அளவிற்கு மட்டுமே பயன்படுத்துவதிலும் தற்போது அதிக கவனம் செலுத்தப்படுகிறது. இம்முயற்சியால் சேமிக்கப்படும் நீரைக் கொண்டுதான் புதிய பகுதிகளில் பயிர் சாகுபடி செய்யவும், ஏற்கெனவே சாகுபடி செய்யப்படும் பகுதிகளில் கூடுதலாக சாகுபடி செய்யவும் இயலும்.

4.3.2. இந்நோக்கத்துடன் பெரியாறு - வைகை பாசன அமைப்பை நவீனப்படுத்தும் பணி உலக வங்கி நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது. இதேபோல் தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ், உலக வங்கி உதவியுடன் சாத்தனூர், கோதையாறு,

[2000 ஏப்ரல் 29

தாமிரபரணி, கம்பம் பள்ளத்தாக்கு, அமராவதி பழைய கால்வாய்கள், சேத்தியாத்தோப்பு, மருதா நதி போன்றவற்றுடன் இதர பாசனப் பரப்பு அமைப்புகளின் செயல் திறனை மேம்படுத்த பாசன கட்டுமானங்களைப் புனரமைத்தும், நவீனப்படுத்தியும், நீர் வினியோக அளவை முன்கூட்டியே அறிந்து கொள்ளும் வகையிலும் ஆயக்கட்டு முழுமைக்கும் சரிசமமாக பாசன நீர் வழங்கும் முறையைப் பின்பற்றியும் உற்பத்தியளவையும் பண்ணை வருவாயையும் பெருக்கும் நோக்கத்தோடு செயல்படுத்தப்பட்டது. தேசிய நீர் மேலாண்மை திட்டத்தைப் போலவே பொறியியல் சிறப்பியல்புகளும் வேறு பல சிறப்பியல்புகளும் கூடுதலாக உள்ள தமிழ்நாடு நீர்வளத் தொகுப்பு திட்டமானது 1995-96 முதல் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**5. நிதி ஒதுக்கீடு:**

பெரியது மற்றும் நடுத்தர பாசன திட்டங்களுக்கு 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.408.15 கோடி ஒதுக்கப்பட்டது. இதில் 220.71 கோடி தமிழ்நாடு நீர்வளத் தொகுப்புத் திட்டத்திற்கு அடங்கும். 2000-2001 ஆம் ஆண்டிற்கு, தமிழ்நாடு நீர்வளத் தொகுப்புத் திட்டத்திற்கு ரூ.219.82 கோடி உட்பட ஒதுக்கப்பட்ட நிதியளவு ரூ.544.65 கோடி ஆகும்.

**6. பெரிய நீர்ப்பாசன திட்டங்கள்:**

மாநிலத்தில் மேற்பரப்பு நீர் அனேகமாக முற்றிலும் பயன்படுத்திவிட்ட நிலையில் பெரிய நீர்ப்பாசன திட்டங்கள் எதுவும் தற்போது செயலாக்கத்தில் இல்லை.

**7 நடுத்தர மற்றும் சிறிய பாசனத் திட்டங்கள்:**

1999-2000ஆம் ஆண்டு தொடக்கத்தில் பின்வரும் நடுத்தர மற்றும் சிறிய பாசனத் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வந்தன.

1. பெரியாறு அணையை வலுப்படுத்துதல் (பீர்மேடு, கேரள மாநிலம்)
2. நங்கஞ்சியாறு நீர்த்தேக்கம் (திண்டுக்கல் மாவட்டம்)
3. இருக்கன்குடி நீர்தேக்கம் (விருதுநகர் மாவட்டம்)
4. பொய்கையாறு நீர்த்தேக்கம் (நீ.ஆதொ.தி.) (கன்னியாகுமரி மாவட்டம்)



2000 ஏப்ரல் 29]

5. நம்பியாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி) (திருநெல்வேலி மாவட்டம்)
6. இராஜாதோப்புகானாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி) (வேலூர் மாவட்டம்)
7. கவுண்டின்யாநதி (மோர்தானா) நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி) (வேலூர் மாவட்டம்)
8. அடவிநயினார்கோயில் நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி) (திருநெல்வேலி மாவட்டம்)
9. அத்திக்குளம் கிராமத்தில் கிருதமால் ஆற்றின் குறுக்கே அணை கட்டுதல் (நீ.ஆ.தொ.தி) (விருதுநகர் மாவட்டம்)
10. வடக்குப் பச்சையாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி) (திருநெல்வேலி மாவட்டம்)
11. கொடுமுடியாறு நீர்த்தேக்கத் திட்டம் (நீ.ஆ.தொ.தி.) (திருநெல்வேலி மாவட்டம்)
12. (வராகநதி) சோத்துப்பாறை நீர்த்தேக்கம் (மதுரை மாவட்டம்) (நீ.ஆ.தொ.தி.)
13. சண்முகாநதி நீர்த்தேக்கம் (தேனி மாவட்டம்)
14. மலட்டாறு அணைக்கட்டுத் திட்டம் (இராமநாதபுரம் மாவட்டம்)
15. உசிலம்பட்டி வட்டத்தில் 58 கிராமங்களுக்குப் பாசன வசதி அளித்தல் (மதுரை மாவட்டம்)
16. ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்கம் (வேலூர் மாவட்டம்)
17. செண்பகத்தோப்பு நீர்த்தேக்கம் (திருவண்ணாமலை மாவட்டம்)
18. வரட்டாறு-குப்பத்துஓடை நீர்த்தேக்கம் (திருநெல்வேலி மாவட்டம்)
19. பத்தலபள்ளி-மலட்டாறு நீர்த்தேக்கத் திட்டம் (வேலூர் மாவட்டம்)
20. குப்பநத்தம் நீர்த்தேக்கத் திட்டம் (திருவண்ணாமலை மாவட்டம்)

[2000 ஏப்ரல் 29

21. வரட்டாறு-வள்ளிமதுரை நீர்த்தேக்கத் திட்டம் (தர்மபுரி மாவட்டம்)

22. கால்வாய்-சடையநேரி திட்டம் (தூத்துக்குடி மாவட்டம்)

23. நாராயண காவேரி வாய்க்காலை புனரமைத்தல் (இராமநாதபுரம் மாவட்டம்)

24. உப்பாறு ஓடையின் குறுக்கே புதிய குளம் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)

25. முதலை முத்துவாரியின் குறுக்கே புதிய குளம் (தஞ்சாவூர் மாவட்டம்)

26. கடானா விரிவாக்கத் திட்டம் (திருநெல்வேலி மாவட்டம்)

27. நாயோடையின் குறுக்கே புதிய குளம் (திண்டுக்கல் மாவட்டம்)

28. இராமக்கல் ஓடை மற்றும் ஆனைவிழுந்தான் ஓடைகளின் குறுக்கே புதிய குளம் (திண்டுக்கல் மாவட்டம்)

29. நல்லதங்காள் ஓடையின் குறுக்கே நீர்த்தேக்கம் (ஈரோடு மாவட்டம்)

30. ஆண்டி ஓடையின் குறுக்கே அணை கட்டுதல் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)

31. சாஸ்தாகோயில் அருகே நகரியாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் (விருதுநகர் மாவட்டம்)

32. வெள்ளக்கால் கானாறு நீர்த்தேக்கம் (வேலூர் மாவட்டம்)

33. சிறுமலையாற்றின் குறுக்கே புதிய குளம் (திண்டுக்கல் மாவட்டம்)

34. கொடகனார் நீர்த்தேக்கத்திலிருந்து வெள்ளியணை மற்றும் மூன்று கண்மாய்களுக்குப் பாசன வசதி அளித்தல்

35. நீர்த்தேக்கங்களில் உள்ள பூங்காக்களை மேம்படுத்தி அழகு படுத்துதல்

36. வண்டியூர் குளத்தைத் தூர் எடுத்து நவீனப்படுத்துதல் (மதுரை மாவட்டம்)



2000 ஏப்ரல் 29]

குறிப்பு: மொத்தம் 36 திட்டங்களில் 9 திட்டங்கள், (வரிசை எண் 4 முதல் 12 வரை) பத்தி 12-ல் விவரிக்கப்பட்டுள்ள நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின்கீழ் "நடைபெறும் நீர்த் தேக்கத் திட்டப் பணிகள் முடிவாக்கம்" என்ற தலைப்பின் கீழ் செயலாக்கப்படுகின்றன.

**8. நடைபெற்றுவரும் நடுத்தர பாசன திட்டப் பணிகளின் செயலாக்க நிலை**

**8.1 பெரியாறு அணையை வலுப்படுத்துதல்**

தேக்கடிக்கு அருகில் உள்ள பெரியாறு அணை தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களில் 84,269 எக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கும் முக்கிய பாசன ஆதாரமாகும்.

1886ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட 999 ஆண்டுகளுக்கான குத்தகை ஒப்பந்தத்தின்படி 152 அடி அளவுக்கு நீரைத் தேக்கக் கூடிய வகையில் பெரியாறு அணை 1887-1895ஆம் ஆண்டுகளுக்கிடையில் கட்டி முடிக்கப்பட்டது.

1979ஆம் ஆண்டு அணையின் உறுதி மற்றும் பாதுகாப்பு குறித்த கவலை எழுந்தபோது இதுகுறித்து மைய நீர்க் குழுமத்தின் கருத்து மற்றும் ஆலோசனை கேட்கப்பட்டது. மைய நீர்க் குழுமம் இரு மாநில அதிகாரிகளுடன் கூட்டாகப் பேச்சுவார்த்தை நடத்தியபின், பின்வரும் தீர்வு நடவடிக்கைகளுக்கு யோசனை தெரிவித்தது:

1. உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் (Emergency measures)

அ. அணையின் தலைப் பகுதியில் கற்காரை இட்டு தலைப் பகுதியை 6 அடி கூடுதல் அகலப்படுத்துதல்

ஆ. கூடுதல் நீர்ப்போக்கிகளை அமைத்தல்

2. நடுத்தர காலப் பணிகள் (Medium term measures)

மிக உயர்தரமுள்ள இருப்பு கம்பிகளை அணையின் தலைப் பகுதியிலிருந்து கடைக்கால் பகுதி வரை செலுத்தி பாறையுடன் சேர்த்துப் பொருத்துதல்.

3. நீண்ட காலப் பணிகள் (Long term measures)

அணையின் பின்புறத்தில் கற்காரை இட்டு வலுப்படுத்துதல்.

4. நிவர்த்திப் பணிகளைச் செயல்படுத்த ஏதுவாக நீர்த்தேக்கத்தின் நீர்ப்போக்கி.

5. கதவுகளை முழுமையாக உயர்த்தி நீர்மட்டத்தை தற்காலிகமாக 136 அடியில் நிறுத்தி வைத்தல்.

தொடர்ந்து சிற்றணையை வலுப்படுத்துதல், கைப்பிடிச் சுவர்களை உயர்த்துதல் மற்றும் வேகத் தடைகளை அமைத்தல் போன்றவைகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. மைய நீர் குழுமம் பரிந்துரைகளின்படி அணையின் உடனடிப் பணிகளும் நடுத்தரகாலப் பணிகளும் செய்யப்பட்ட பின்பு 145 அடி உயரம் வரை தண்ணீரைத் தேக்கவும் அனைத்து வலுப்படுத்தும் பணிகள் முடிவுற்றபின் முழு அளவான 152 அடி உயரத்திற்கு தண்ணீரைத் தேக்கவும் இயலும்.

மைய நீர் குழுமத்தின் கருத்து தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. மைய நீர் குழுமத்தினால் முதலில் பிரிந்துரைக்கப்பட்டவாறு 1979-ல் அணை வலுவூட்டும் பணிகள் அனைத்தும் ரூ.13 கோடி செலவில் முடிக்கப்பட்டன. தொடர்ச்சியாக பரிந்துரைக்கப்பட்ட மூன்று கூடுதல் பணிகள் அதாவது (1) சிற்றணையை வலுவூட்டும் பணி, (2) மூன்று கூடுதல் நீர்ப்போக்கிகளின் கீழ் நீர்வேகக் கட்டுப்பாட்டு கட்டுமானம் (3) கைப்பிடிச் சுவர்களை உயர்த்துதல் ஆகியவை நிறைவடையவில்லை.

சிற்றணையை வலுவூட்டும் கருத்துரு 1987-லேயே வடிவமைப்பு மற்றும் வரைபடங்களுடன் கேரள அரசின் முறைப்படியான இசைவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசினால் பலமுறை நினைவூட்டப்பட்டும் கேரள அரசு தனது இசைவைத் தர முன்வரவில்லை. தொழில்நுட்ப விவரங்களின்மேல் கேரள அரசின் இசைவை எதிர்நோக்குவது முறைப்படியானது என்றாலும் அதற்காக நேரத்தை வீணாக்காமல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு ஒப்பந்தம் இறுதியாக்கப்பட்டது. ஆனால் கேரள அரசு ஒப்பந்தக்காரரை பணியைத் தொடங்க அனுமதிக்காததால், பின்னவர் அவரது மனக்குறைக்கு பரிகாரம் தேட நீதிமன்றம் சென்றார். மூன்று கூடுதல் நீர்ப்போக்கிகளின் கீழ் உள்ள வேகத்தடை அமைப்புகள் முன்பே முடிந்து இருக்க வேண்டும். ஆனால் இப்பணிக்கான 'குவாரி'களுக்கு கேரள வனத் துறை தடையாய் இருந்ததால் பணிகள் முடிவு பெறவில்லை. கேரள உயர்நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பின்படி இப்பணிக்கான சரளைக்



கற்கள், தமிழ்நாட்டு எல்லையில் சேகரிக்கப்பட்டு பணி நடைபெறும் இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு இப்பணி திரும்ப தொடங்கப்பட்டது. இதேமாதிரி 1987-ல் தொடங்கப்பெற்ற "கைப்பிடிச் சுவர் உயர்த்தும் ப்ணி" கேரள அரசால் உடன் நிறுத்தப்பட்டது. இப்பணியும் நடைமுறைகளைப் பின்பற்றி செயல்படுத்தப்பட வேண்டும்.

முடிவுறாத இப்பிரச்சினையைத் தீர்வு செய்திட கேரள அரசுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் எழுத்துமூல கோரிக்கை மற்றும் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் நேரடித் தொடர்பு இவை தவிர, அமைச்சர்கள் அளவிலான இரண்டு கூட்டங்கள், 28-11-1996 அன்று சென்னையிலும் 13-8-1998-ல் திருவனந்தபுரத்திலும் நடந்தன. 26-5-1998-ல் தமிழ்நாடு மற்றும் கேரள அரசுச் செயலர்களுடன் மைய அரசின் நீர்வளத் துறைச் செயலரால் கூட்டம் நடத்தப்பட்டது. முன்னிருந்த நிலைக்கே அணையில் நீரைத் தேக்க எழுந்துள்ள இப்பிரச்சினைக்குத் தீர்வு காண உதவிட பிரதமர் அவர்களிடம் தமிழக முதல்வர் அவர்கள் தனிப்பட்ட முறையில் விண்ணப்பித்துக் கொண்டதற்கிணங்க இந்தக் கூட்டம் கூட்டப்பட்டது.

13-8-1998-ல் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற அமைச்சர்கள் அளவிலான கூட்டத்தில், இரு அரசுகளும் தத்தம் மாநிலத்தில் தொழில்நுட்பக் குழு ஒன்றை அமைப்பது என்றும், அக்குழு தொழில்நுட்பக் கருத்துருக்களை விரிவான முறையில் விவாதித்து தத்தம் அரசிற்கு அறிக்கை சமர்ப்பிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது. இதன் தொடர்ச்சியாக பெரியார் அணையில் முன்னிருந்த நிலைக்கே 152 அடி உயரத்திற்கு தண்ணீரைத் தேக்க எழுந்துள்ள பிரச்சினைக்கு இரு மாநில முதல் அமைச்சர்களும் சந்தித்து விவாதித்து தீர்வு காண உள்ளனர்.

இருமாநில அரசுகளும் தொழில்நுட்பக் குழு அறிக்கைகளை 28-1-2000 அன்று திருவனந்தபுரத்தில் கேரள அரசின் பாசனச் செயலர் அலுவலகத்தில் பரிமாறிக் கொண்டன.

5-4-2000 தேதியன்று திருவனந்தபுரத்தில் மாண்புமிகு தமிழ்நாடு மற்றும் கேரள முதலமைச்சர்களுக்கிடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது. அதில் உடன்பாடு ஏதும் காண இயலவில்லை. தமிழக அரசு பாரத உச்ச நீதிமன்றத்திற்கு இந்தப் பேச்சுவார்த்தையின் விவரங்களைத் தெரிவித்து உரிய தீர்வைக் கோரும்.

[2000 ஏப்ரல் 29

### 8.2 நங்காஞ்சியாறு நீர்த்தேக்கத் திட்டம் (திண்டுக்கல் மாவட்டம்)

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், இடையன்கோட்டை கிராமத்தினருகில் அமராவதியாற்றின் கிளையாறான நங்காஞ்சியாற்றின் குறுக்கே இந் நீர்த்தேக்கம் ரூ.20.70 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டத்திலுள்ள இடையன்கோட்டை, வளயபட்டி, சின்னக்காமா பட்டி, கிராமங்களிலும் மற்றும் கரூர் மாவட்டம், கரூர் வட்டத்திலுள்ள சேந்தமங்கலம் கிராமத்திலும் 24 எக்டேர் பழைய பாசன நிலம் பாசன உறுதியும் 2530 எக்டேர் புதிய நிலம் பாசன வசதியும் பெறும்.

இத்திட்டத்தில் தடையில்லா நீர்வழிந்தோடி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மண் அணை அமைக்கும் பணியும் பிரதானக் கால்வாய் வெட்டும் பணியும் முடிவடையும் நிலையில் உள்ளன. பகிர்மாணக் கால்வாய் வெட்டும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. மொத்தத்தில் சுமார் 75 விழுக்காடு வேலைகள் முடிவடைந்துள்ளன. இத்திட்டத்திற்கான திருத்திய மதிப்பீடு ரூ.37.36 கோடிக்கு அரசு மே 1998-ல் ஒப்புதல் அளித்துள்ளது. புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு அநேகப் பணிகளுக்கு ஒப்பந்தக்காரர்கள் நியமிக்கப்பட்டுவிட்டனர். பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 8.3 இருக்கன்குடி நீர்த்தேக்கம் (விருதுநகர் மாவட்டம்)

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், இருக்கன்குடி கிராமத்தினருகே வைப்பாற்றின் குறுக்கே ரூ.28.70 கோடி மதிப்பீட்டில் இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளம் வட்டத்தில், இராஜாபட்டி, மாசர்பட்டி, சக்கிகாப்பட்டி, தப்பாத்து, கீழநாட்டுகுறிச்சி, மேல்கரண்டை, செங்கோட்டை, கீழ்கரண்டை, வடமலபுரம், வெளவால் தொத்தி, வேடப்பட்டி ஆகிய கிராமங்களில் மொத்தம் 3,705 எக்டேர் புன்செய் நிலத்திற்கு புதிய பாசன வசதியும், 254 எக்டேர் நிலத்திற்குப் பாசன உறுதியும் 255 எக்டேர் விடுபட்ட நிலத்திற்குப் பாசன வசதியும் கிடைக்க வழிவகை செய்கிறது.

அர்ஜுனா மற்றும் வைப்பாறு நதிகளின் குறுக்கே கல்லணை கட்டும் பணி பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது. கால்வாய் கட்டும் பணி 70 விழுக்காடு முடிவடைந்துள்ளது. கால்வாயில் குறுக்குக் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.



2000 ஏப்ரல் 29]

### 8.4 பொய்கையாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி.) (கன்னியாகுமரி மாவட்டம்)

இந்நீர்த்தேக்கம் கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம் ஆரல்வாய்மொழி கிராமத்தின் அருகே பொய்கையாற்றின் குறுக்கே அமைக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினால் தோவாளை வட்டத்தில் செண்பகராமன் புதூர், ஆரல்வாய்மொழி கிராமங்களிலும், இராதாதபுரம் வட்டத்தில் பழவூர் கிராமத்திலும் மொத்தமாக 202 எக்டேர் புதிய புன்செய் நிலம் பாசன வசதியும், 192 எக்டேர் நிலம் பாசன உறுதியும் 57 எக்டேர் விடுபட்ட நிலம் பாசன வசதியும் பெறும். இதுதவிர தோவாளை ஊராட்சி ஒன்றியத்தின் கீழ்வரும் 4 கிராமங்களுக்கு குடிநீர் தேவைக்காக 20 மி.கன அடி தண்ணீர் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

மண் அணையின் ஒரு பகுதி மாநில நிதியுடன் செயலாக்கப்பட்டது. மண் அணை அமைப்பதில் நிலுவையிலுள்ள பணிகள், குறுக்குக் கட்டுமானப் பணிகள் உட்பட புதிய பிரதான கால்வாய், உபரி நீர்க் கால்வாய், இணைப்புக் கால்வாய் வெட்டுதல் ஆகிய பணிகள், சாலை அமைத்தல், கைப்பிடிச் சுவர் கட்டுவது போன்ற பணிகள் நீர்வள ஆதார தொகுப்பு திட்டத்தின்கீழ் ரூ.9.46 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தில் மண் அணை, உபரி நீர் வழிந்தோடி, கால்வாய் மதகு, ஆற்றின் மதகு, உபரி நீர்ப்பாதையில் மட்டம் தாழ்த்தும் மதகுகளில் முதல் நான்கு பணிகள் முடிந்துவிட்டன. புதிய பிரதான கால்வாய் வெட்டுதல் மற்றும் கற்காரை பூசுதல், குறுக்குக் கட்டுமானப் பணிகள் ஆகியவை முடிந்துள்ளன. எல்.எஸ்.330 மீ-இல் ஒற்றைப் பாதை பாலம் கட்டுதல் உட்பட எல்.எஸ்.280 மீ. முதல் 330 மீ. வரை உபரிநீர் கால்வாய் வெட்டும் பணி மற்றும் ஆற்றுப் பகுதியில் மண் அணை கட்டுவதில் உள்ள எஞ்சிய பணிகள் நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின்கீழ் நடைபெற்று வருகின்றன. மண் அணை அமைக்கும் பணி முடிந்தவுடன் சாலை அமைத்தல், கைப்பிடிச் சுவர் கட்டும் பணி ஆகியவை மேற்கொள்ளப்படும்.

### 8.5 நம்பியாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி.) (திருநெல்வேலி மாவட்டம்)

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டத்தில் நம்பியாற்றின் குறுக்கே இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினால், இராதாபுரம் வட்டத்தில் கோட்டை கருங்குளம், உருமாங்குளம், இராமநாதபுரம், கரைசிட்டிப்புதூர், கஸ்தூரி ரங்கபுரம், குமாரபுரம், முத்து மோதுமொழி மற்றும் திசையன்விளை கிராமங்களில் மொத்தமாக 152 எக்டேர் புதிய புன்செய் நிலத்திற்குப் பாசன வசதியும், 185 எக்டேர் விடுபட்ட நிலத்திற்குப் பாசன வசதியும், 369 எக்டேர் நிலத்திற்குப் பாசன உறுதியும் கிடைக்கும்.

இத்திட்டத்தில் மண் அணை அமைத்தல், வலதுபுறக் கால்வாய் மதகு கட்டுதல் மற்றும் வலதுபுற பிரதான கால்வாய் வெட்டுதல் போன்ற பணிகள் முடிவடைந்துள்ளன. எஞ்சிய பணிகள் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் ரூ.14.28 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மணல் போக்கியுடன் கூடிய தடையில்லா நீர்வழிந்தோடி, இடதுபுற பிரதானக் கால்வாய் மதகு கட்டுதல் ஆகிய பணிகள் முடிவுற்றன. மண் அணை அமைத்தல், தடையில்லா நீர்வழிந்தோடி, எல்.எஸ். 0 மீ. முதல் 1800 மீ. வரை, இடதுபுற பிரதானக் கால்வாய் வெட்டும் பணி, அதன் குறுக்கு கட்டுமானப் பணிகள், வலதுபுற பிரதானக் கால்வாய் குறுக்கு வடிகால் கட்டுமானப் பணிகள், கிளைக் கால்வாய் மற்றும் அதனுடைய பிரிவுக் கால்வாய்கள் வெட்டும் பணிகள், அகவுறை செய்யும் பணிகள் ஆகியவை நடைபெற்று வருகின்றன.

### 8.6 இராஜாத்தோப்புகானாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி.) (வேலூர் மாவட்டம்)

வேலூர் மாவட்டத்தைச் சார்ந்த குடியாத்தம் வட்டத்தில் செஞ்சி கிராமத்திற்கு அருகில் இராஜாத்தோப்புகானாறு ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது.

இத்திட்டத்தினால் குடியாத்தம், வேலூர் மற்றும் வாணியம்பாடி வட்டங்களில் செஞ்சி, லத்தேரி, விழுந்தக்கால், ஒய்யாத்தூர் மற்றும் சேனூர் கிராமங்களில் மொத்தம் 202 எக்டேர் நிலப் பரப்பிற்கு பாசன உறுதியும் 17 எக்டேர் விடுபட்ட நிலப்பரப்பிற்கு பாசன வசதியும் ஏறபடும்.

இத்திட்டத்தில் மண் அணை, உபரி நீர் போக்கி, உபரி நீர்ப்பாதை, கால்வாய் மதகு 0 மீ. முதல் 5000 மீ. வரை குறுக்கு வடிகால், கட்டுமானப் பணி உட்பட கால்வாயில் கற்காரை பூசும் பணி மாநில நிதியில் ஏற்கெனவே முடிக்கப்பட்டுள்ளன.



நிலுவையிலுள்ள அணை கட்டும் பணி, லத்தேரி, விழுந்தக்கால், ஒய்யாத்தூர் ஏரிகளுக்கு நீர் வழங்கும் இணைப்புக் கால்வாய் மற்றும் கால்வாயில் 5,000 மீட்டர் நீளத்திற்கு கற்காரை பூசுதல், குறுக்கு வடிகால் பணிகள் ஆகியவை நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின் கீழ் ரூ.2.56 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளன.

நிலுவையில் உள்ள அணை கட்டும் பணி மற்றும் குறுக்கு வடிகால் கட்டுமானப் பணிகளுடன் கூடிய கால்வாயில் 5,000 மீட்டர் நீளத்திற்கு கற்காரை பூசும் பணிகள் ஆகியவை ஏற்கெனவே முடிக்கப்பட்டன. லத்தேரி, விழுந்தக்கால் மற்றும் ஒய்யாத்தூர் ஏரிகளுக்கு நீர் வழங்கும் இணைப்புக் கால்வாய் வெட்டும் பணி நடைபெற்று வருகிறது.

### 8.7 கவுண்டின்யாநதி (மோர்தானா) நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி.) (வேலூர் மாவட்டம்)

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டத்தில், மோர்தானா கிராமத்திற்கு அருகே கவுண்டின்யா நதியின் குறுக்கே இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் குடியாத்தம், வேலூர் வட்டங்களில் 1152 எக்டேர் நிலங்களுக்கு கூடுதல் பாசன வசதி அளிப்பதுடன், 2585 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசன வசதியும், 285 எக்டேர் விடுபட்ட நிலத்திற்குப் பாசன வசதியும் ஏற்படும்.

நீர்த்தேக்கம் கட்டுதல், ஜிட்டப்பள்ளியில் எடுப்பு அணை (பிக் அப் அணை) கட்டுதல், எடுப்பு அணையிலிருந்து ஒரு பொது கால்வாய் செறுவாஞ்சியிலிருந்து களிஞ்சூர் வரை இடது புற பிரதான கால்வாய், மேலும் செறுவாஞ்சியிலிருந்து பாலாறு வெளிப்போக்கி மற்றும் பாலாறு குறுக்கிலிருந்து செதுப்பேரிவரை வலதுபுற பிரதான கால்வாய் வெட்டுதல், மோர்தானாவிலிருந்து சயனகுண்டா வரையுள்ள அணுகு சாலை மேம்படுத்தும் பணிகள் நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின் கீழ் ரூ.28.48 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. எஞ்சிய நீர்த்தேக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஜிட்டப்பள்ளியில் எடுப்பு அணை கட்டும் பணி மற்றும் எடுப்பு அணையிலிருந்து கால்வாய் வெட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

### 8.8 அடவிநயினார்கோவில் நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி.) (திருநெல்வேலி மாவட்டம்)

திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டத்திலுள்ள மேக்கரை கிராமத்தில் அனுமநதி ஆற்றின் குறுக்கே இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது.

[2000 ஏப்ரல் 29

இத்திட்டத்தினால் செங்கோட்டை மற்றும் தென்காசி வட்டங்களில் வடகரை கீழ் பிடாகை, வடகரை மேல் பிடாகை, பன்மொழி, அச்சன் புதூர், நெடுவயல், கொடிக்குறிச்சி, நயினார் அகரம், கீழங்காடு மற்றும் ஆயக்குடி கிராமங்களில் 1562 எக்டேர் நிலத்திற்குப் நிலையான பாசன வசதியும், 616 எக்டேர் விடுபட்ட ,நிலத்திற்குப் பாசன வசதியும், 93 எக்டேர் நிலத்திற்கு புதிய பாசன வசதியும் ஏற்படும்.

கல்லணை, கால்வாய் பணிகள் ஆகியவை நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின்கீழ் ரூ.61.50 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளன.

இத்திட்டத்தின்கீழ் கல்லணை கட்டும் பணி நடைபெற்று வருகிறது. கால்வாய் வெட்டும் பணி மற்றும் கட்டடங்கள் கட்டும் பணி முடிந்துள்ளன.

### 8.9 அத்திக்குளம் கிராமத்தில் கிருதமால் ஆற்றின் குறுக்கே அனைக்கட்டுதல் (நீ.ஆ.தொ.தி) (விருதுநகர் மாவட்டம்)

இத்திட்டம் விருதுநகர் மாவட்டம் அத்திக்குளம் கிராமத்தின் அருகிலுள்ள கிருதமால் ஆற்றின் குறுக்கே நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின்கீழ் ரூ.3.47 கோடி மதிப்பீட்டில் அணை கட்டி இடது, வலது புற கால்வாய்கள் வெட்டும் திட்டமாகும்.

இத்திட்டம் திருச்சுழி வட்டத்தில் இருஞ்சிறை, உலக்குடி மற்றும் இதர ஆறு கண்மாய்கட்கு நீர் வழங்கி அதன்மூலம் அத்திக்குளம், மானூர், மறையூர், உலக்குடி, நரிக்குடி, இருஞ்சிறை, ஆதித்தனேந்தல் மற்றும் வரிசையூர் கிராமங்களில் 943 எக்டேர் நன்செய் நிலங்களுக்கு நிலையான பாசன வசதியும் 323 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்கு பாசன வசதியும் அளிக்கும்.

அனைக்கட்டு பணி முடிவடைந்தது. இடது மற்றும் வலது புற பிரதான கால்வாய் வெட்டும் பணி நடைபெற்று வருகிறது.

### 8.10 வடக்குப் பச்சையாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி) (திருநெல்வேலி மாவட்டம்)

இத்திட்டம் திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டத்திலுள்ள மஞ்சுவிளை கிராமம் அருகே பச்சையாற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைப்பது ஆகும்.



2000 ஏப்ரல் 29]

இத்திட்டத்தினால் நாங்குனேரி வட்டத்தில் உள்ள களக்காடு, நாங்குனேரி, உள்ளாங்குளம், இல்லான்குளம் மற்றும் புறப்பாடி கிராமங்களில் 574 எக்டேர் நிலத்திற்கு நிலையான பாசனமும், 464 எக்டேர் விடுபட்ட நிலத்திற்குப் பாசன வசதியும் மற்றும் 45 கண்மாய்களின்கீழ் உள்ள 769 எக்டேர் நிலங்களுக்கு புதிய பாசன வசதியும் செய்ய வழி வகுக்கப்பட்டுள்ளது. மேலும், ஒரு போகமே விளையும் 1568 எக்டேர் நிலங்களுக்கு இரண்டாவது போகமாக புன்செய் பயிர்கள் சாகுபடி செய்யவும் பாசன வசதி செய்யப்படும்.

திருப்பு மதகு, நீர் ஊட்டுக் கால்வாய், மண் அணை, தடையில்லா நீர் வழிந்தோடி, உபரி நீர் பாதை, கால்வாய் மதகு, ஆற்றை கடக்கும் ஏற்பாடு உட்பட இணைப்புக் கால்வாய் இவற்றுடன் நாங்குனேரிகால், சீவலப்பேரிகால், பாதனேரிகால், தேவநல்லூர் கால்வாய் இவற்றைச் செப்பனிட்டுச் சீரமைத்தல், மடத்து அணைக் கால்வாயிலிருந்து இணைப்புக் கால்வாய் அமைத்தல், தேவநல்லூருக்குக் கீழே ஒரு புறவழி கால்வாய் வெட்டுதல், 45 ஏரிகளுக்கு நீர் வழங்க நாங்குநேரி ஏரிக்குக் கீழே ஒரு புறவழிக் கால்வாய் வெட்டுதல், இணைப்புச் சாலை அமைத்தல் மற்றும் கட்டடங்கள் கட்டும் பணிகள் நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின்கீழ் ரூ.56 கோடி திருத்திய மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளன.

பச்சையாற்றின் குறுக்கே திருப்பு மதகு அமைக்கும் பணி மற்றும் ஊட்டுக்கால்வாய் வெட்டும் பணி முடியும் தருவாயில் உள்ளன. இணைப்புச் சாலை மற்றும் கட்டடங்கள் கட்டும் பணி முடிவுற்றது. (1) நாங்குனேரி கால்வாய், பாதனேரி கால்வாய், தேவநல்லூர் கால்வாய், பாலம்பத்து கால்வாய் இவற்றைச் செப்பனிட்டுச் சீரமைத்தல், (2) மடத்து அணைக்கட்டு கால் கடைக்கோடியிலிருந்து பீச்சர்லம்குளம் கால்வாய் பிரியும் இடம் வரை இணைப்புக் கால்வாய் வெட்டுதல் மற்றும் தேவநல்லூருக்குக் கீழே ஒரு புறவழி கால்வாய் வெட்டுதல் ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 8.11 கொடுமுடியாறு திட்டம் (நீ.ஆ.தொ.தி.) (திருநெல்வேலி மாவட்டம்)

திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டத்தில் திருக்குருங்குடி கிராமத்தில், கொடுமுடியாறும், கோம்பையாறும் கூடுமிடத்தில் இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினால் இராதாபுரம், நாங்குனேரி வட்டங்களில் உள்ள மயிலாடி, எருவாடி, நம்பித் தலைவன் பட்டயம், வடக்கு வள்ளியூர்,

தெற்கு வள்ளியூர், இராஜாக்கமங்கலம், அச்சம்பாடு, தலைக்குளம், ஆனைக்குளம், தெற்கு களிக்குளம், சண்முகரெங்காபுரம், கும்பிகுளம், ஆழங்கிணறு திருமாலபுரம் மற்றும் இராதாபுரம் கிராமங்களில் 791 எக்டேர் நிலையான பாசன வசதியும், 779 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசனமும் 193 எக்டேர் ஒருபோக நிலங்களுக்கு இருபோக பாசன வசதியும் கிடைத்திட வழி செய்யப்பட்டுள்ளது.

மண் அணை அமைத்தல், தடையில்லா நீர் வழிந்தோடி, கால்வாய் மதகு, ஆற்று மதகு, உபரி நீர் பாதை, தாமரை அணைக்கட்டை மேம்படுத்துதல், ஏற்கெனவே உள்ள அலுவலர் குடியிருப்புகளுக்கு மின் வசதி செய்தல், ஆனையடி கோவிலை இடப்பெயர்ச்சி செய்தல் ஆகிய பணிகள் நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 24.60 கோடி திருத்திய மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளன.

கால்வாய் மேம்பாட்டுப் பணிகள் முடிவடைந்துவிட்டன. நீர்த்தேக்க பிரதான கட்டுமானப் பணிகள் நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள உள்ளன. மண் அணை கட்டுதல், தடையில்லா உபரிநீர் வழிந்தோடி, கால்வாய் தலைப்பு மதகு மற்றும் ஆற்றின் தலைப்பு மதகு ஆகியவற்றிற்கான ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புக்கொள்ளப்பட்டு அப்பணிகள் மிக விரைவில் செயல்படுத்தப்பட உள்ளன. தாமரை அணை மேம்படுத்தும் பணி மற்றும் உபரிநீர் பாதை பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

**8.12 [illegible] [illegible])**

மதுரை மாவட்டம், பெரியகுளம் வட்டத்திலுள்ள தென்கரை கிராமத்தின் அருகில் வராக நதியின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைப்பதற்கு இத்திட்டம் வகை செய்கிறது.

இத்திட்டத்தினால் பெரியகுளம் வட்டத்தில் உள்ள தென்கரை மற்றும் தாமரைக்குளம் கிராமங்களில் 739 எக்டேர் நன்செய் நிலத்திற்கு நிலையான பாசனமும் 27 எக்டேர் விடுபட்ட நிலத்திற்குப் பாசனமும், 405 எக்டேர் புன்செய் நிலத்திற்குப் புதிய பாசன வசதியும் அளிக்கப்படும்.

இத்திட்டத்தில் மாநில நிதித் தொகுப்பின்கீழ் கல்லணை கட்டும் பணி ஒரு பகுதி முடிவடைந்துள்ளது. கல்லணையில் எஞ்சிய பணிகள், கால்வாய்கள், வாய்க்கால்கள், கட்டடப் பணிகள் ஆகியவை நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின்கீழ் ரூ.30.42 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.





கல்லணை கட்டும் பணி, கால்வாய் வெட்டும் பணி, குறுக்குச் கட்டுமானப் பணிகள், கிளை கால்வாய்கள் வெட்டும் பணி, கட்டடப் பணிகள் ஆகியவை நடைபெற்று வருகின்றன.

**8.13 சண்முகாநதி நீர்த்தேக்கம் (தேனி மாவட்டம்)**

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்திலுள்ள இராயப்பன்பட்டி கிராமத்தருகே சண்முகாநதியின் (வரட்டாறு) குறுக்கே நீர்த்தேக்கம் அமைப்பதற்கு இத்திட்டம் வகை செய்கிறது.

இத்திட்டத்தினால் கம்பம் வட்டத்திலுள்ள இராயப்பன்பட்டி கிராமம், உத்தமபாளையம் வட்டத்திலுள்ள மல்லிங்கபுரம், சின்ன ஓவலாபுரம், இரசக்கநாயக்கனூர், கன்னிசேர்வைப்பட்டி, அழகாபுரி, ஓடைப்பட்டி மற்றும் சீபாலகோட்டை கிராமங்களில் 664 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதியளிக்கப்படும்.

அரசு 1986 ஆம் ஆண்டு மே திங்களில் இத்திட்டத்திற்கான மதிப்பீட்டிற்கு ரூ. 6.95 கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தில் மண் அணை, கல்லணை, வழிந்தோடா பிரிவு, தடையில்லா நீர் வழிந்தோடி, தலை மதகு மற்றும் தேவையான கட்டமைப்புகளுடன் கூடிய கால்வாய்கள் அடங்கும்.

இத்திட்டத்தில் மண் அணை அமைக்கும் பணி பெரும் பகுதி முடிவடைந்துள்ளது. தடையில்லா நீர் வழிந்தோடி, தலை மதகு கட்டும் பணி. கல்லணை கட்டும் பணி, கால்வாய் பணி, குறுக்கு கட்டுமானப் பணிகள் ஆகியவை நடைபெற்று வருகின்றன. 1998 அக்டோபர் திங்களில் அரசு இப்பணிக்கான திருத்திய மதிப்பீட்டிற்கு ரூ.14.70 கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது.

**8.14 மலட்டாறு அணைக்கட்டுத் திட்டம் (இராமநாதபுரம் மாவட்டம்)**

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டம், செங்கப்பாடி கிராமம் அருகில், கமுதி நீர் கட்டுப்பாட்டு மதகிற்கு கீழ்ப்புறமாக கிருதமால் மற்றும் பரளையாறுகள் மலட்டாற்றுடன் சங்கமிக்கும் இடத்திற்குக் கீழ் மலட்டாற்றின் குறுக்கே அணை கட்ட இத்திட்டம் வகை செய்கிறது.

இத்திட்டத்தின் மூலம் கடலாடி மற்றும் கமுதி வட்டங்களிலுள்ள ஓ.கரிசல் குளம், வேப்பங்குளம் (கமுதி வட்டம்), பம்மனேந்தல்,

அரியமங்கலம், புன்னவாசல், வேப்பங்குளம் (கடலாடி வட்டம்), மீனன்குடி, ஓரிவாயல் மற்றும் கடுகுசந்தை கிராமங்களில் உள்ள 1758 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசனமும், கமுதி மற்றும் கடலாடி வட்டங்களில் 54 கண்மாய்களின்கீழ் 156 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

அரசு 1994 பிப்ரவரி திங்களில் இத்திட்டத்திற்கான மதிப்பீட்டிற்கு ரூ.15.40 கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது. கல்லணை, இரண்டு தலைமதகுகள், கட்டமைப்புகளுடன் கூடிய வலது மற்றும் இடது பிரதானக் கால்வாய்கள் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய அங்கங்களாகும்.

அரசு தொடக்கத்தில் அணை கட்டுவதற்குப் பதிலாக நீர்த்தேக்கம் அமைக்க இயலுமா என பரிசீலனை செய்ததால் இத்திட்டம் செயல்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டது. முதலில் தீர்மானிக்கப்பட்டது போலவே அணை கட்ட அரசு இறுதியாக மார்ச் 1998-ல் ஆணை வழங்கியது. இத்திட்டத்தில் எல்.எஸ்.200 மீ. முதல் 385 மீ. வரை அணை தடுப்புச் சுவர் கட்டும் பணி, வலதுபுற தலைமதகு கட்டும் பணி மற்றும் மணல்போக்கி மதகு கட்டும் பணி நடைபெற்று வருகின்றன. இதர பணிகள் ஒப்பந்தக்காரர் நியமனம் செய்தபின் விரைவில் தொடங்கப்படும்.

## 8.15 உசிலம்பட்டி வட்டத்தில் 58 கிராமங்களுக்குப் பாசன வசதி அளித்தல் (மதுரை மாவட்டம்)

உசிலம்பட்டி வட்டத்தில் 58 கிராமங்களுக்குப் பாசன வசதி அளிக்கும் பொருட்டு வைகை அணையின் வழிந்தோடியிலிருந்து 2425 மீட்டர் தொலைவில் வைகை அணையின் வலது கோடியில் ஓர் உயர் மட்டக் கால்வாய் 27.26 கி.மீ. நீளத்திற்கு அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது. கற்காரை பூசப்படாத இக்கால்வாய், இராமநாதபுரம் பெரிய கண்மாய் மற்றும் வைகை அணை நிரம்பி வழியும்போது உபரி வெள்ள நீரைப் பயன்படுத்தி உசிலம்பட்டி வட்டத்தில் உள்ள 58 கிராமங்களுக்கு பாசன வசதியளிக்க உள்ளது. இத்திட்டத்தில் மூன்று புதிய கண்மாய்கள் அமைப்பதும் அடங்கியுள்ளது. இத்திட்டத்திற்கு அக்டோபர் 1996-ல் அரசு ரூ.33.81 கோடி அனுமதி அளித்துள்ளது. இத்திட்டச் செயலாக்கத்தினால் 570 எக்டேர் நன்செய் நிலத்திற்கு நிலையான பாசன வசதி கிடைக்கிறது. மேலும் உசிலம்பட்டி வட்டத்தில் உள்ள மூன்று கசிவுநீர் குட்டைகள், 29 கண்மாய்களின்கீழ் உள்ள 128



எக்டேர் விடுபட்ட நன்செய் நிலங்கள் பயனடையும். இவைதவிர புதியதாக உருவாக்கப்படவுள்ள 3 கண்மாய்கள் மூலமாக 227 எக்டேர் புதிய நன்செய் நிலமும் பாசன வசதி பெறும்.

இத்திட்டத்தில் நிலம் கையகப்படுத்தும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. பதினான்கு பணிகளில் பத்து பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

## 8.16 ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்கம் (வேலூர் மாவட்டம்)

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டத்தில் ஆண்டியப்பனூர் கிராமத்தினருகே ஆண்டியப்பனூர் ஓடையின் குறுக்கே 112 மில்லியன் கன அடி கொள்ளளவில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது.

அரசு செப்டம்பர் 1996-ல் இத்திட்டத்தை நிறைவேற்ற ரூ.18.28 கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் வாணியம்பாடி வட்டத்தில் ஆண்டியப்பனூர் மற்றும் இருனாப்பட்டு கிராமங்களின் 810 எக்டேர் நிலம் நேரடியாக இருபோக புன்செய் சாகுபடியின்கீழ் வரும்.

இத்திட்டத்திற்கு 39.69 எக்டேர் வனத் துறை நிலம் பொதுப்பணித் துறைக்கு மாற்றவும், 15 எக்டேர் புறம்போக்கு நிலம் மற்றும் 100.245 எக்டேர் பட்டா நிலம் கையகப்படுத்தவும் வேண்டியுள்ளது.

நிலம் கையகப்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. முதற்கட்டப் பணிகளான அணுகுசாலை அமைத்தல் மற்றும் முகாம் காலனி பணிகள் முடிவுற்றன. கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பிரதானப் பணிக்கு ஒப்பந்தக்காரர் நியமிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

## 8.17 செண்பகத்தோப்பு நீர்த்தேக்கம் (திருவண்ணாமலை மாவட்டம்)

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டத்தில் செண்பகத்தோப்பு கிராமத்தில் கமண்டலாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது.

அரசு 1996 அக்டோபர் திங்களில் இத்திட்டத்திற்கான மதிப்பீட்டிற்கு ரூ.21.33 கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது.

[2000 ஏப்ரல் 29

இத்திட்டத்தினால் போளூர் வட்டத்திலுள்ள வள்ளூர், கங்காரமந்தல், சாந்தவாசல், நாரமங்கலம், இலுப்பகுப்பம், பார்வதி சரகம், அலியாபாத், எந்துவம்பாடி கிராமங்களிலும், ஆரணி வட்டத்திலுள்ள குப்பம், காமாடுக்கூர், ஆரணி, மாமண்டூர், கல்பூண்டி, முன்னிப்பட்டு, பையூர் கிராமங்களிலும், ஆற்காடு வட்டத்திலுள்ள வாழப்பந்தல், மேல்புதுப்பாக்கம், மாம்பாக்கம், மேல்பலந்தை, அரூர், சுரையூர் மற்றும் பொன்னம்பலம் கிராமங்களிலும், செய்யாறு வட்டத்திலுள்ள திருமணி, முனுக்கப்பட்டு, மேல்புத்தூர் மற்றும் மேல் சேவுமங்கலம் கிராமங்களிலும், வந்தவாசி வட்டத்தில் அன்மருதை கிராமத்திலும் மொத்தம் 2067 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசன வசதியும், 642 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் கிடைக்கும். இத்திட்டம் நிறைவேற்றப்படுவதால் இந்தப் பிற்பட்ட பகுதியின் நீண்டநாள் கோரிக்கை நிறைவேறும்.

இத்திட்டம் "நபார்டு" (தேசிய வேளாண்மை மற்றும் கிராம வளர்ச்சி வங்கி) கடன் உதவியுடன் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணி மற்றும் வனத் துறை நிலங்கள் பொதுப்பணித் துறைக்கு மாற்றப்பட வேண்டிய பணி முடிவுற்றவுடன் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும். முதற்கட்டப் பணிகளான சேமிப்புக் கிடங்கு கட்டும் பணி, அலியாபாத்தில் வேலி அமைக்கும் பணி உள்ளிட்ட இதர பணிகள் முடிவுற்றன.

இத்திட்டத்திற்கு 96.62 எக்டேர் வனத் துறை நிலமும், 21.50 எக்டேர் தனியார் பட்டா நிலமும் மற்றும் 3.25 எக்டேர் புறம்போக்கு நிலமும் தேவைப்படுகின்றன.

நிலம் கையகப்படுத்தும் பணி இறுதிகட்ட நிலையில் உள்ளது. பணி 2000-2001 ஆம் ஆண்டில் தொடங்கப்படும்.

### 8.18 வரட்டாறு - குப்பத்து ஒடை குறுக்கே நீர்த்தேக்கம் (திருநெல்வேலி மாவட்டம்)

இத்திட்டம் திருநெல்வேலி மாவட்டத்தில் வரட்டாறு மற்றும் குப்பத்து ஓடை என்ற காட்டாறுகளின் குறுக்கே ரூ.8.78 கோடி மதிப்பீட்டில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்க வகை செய்கிறது.

இத்திட்டம் நிறைவேற்றப்படுவதால் தென்காசி வட்டத்தில் கிருஷ்ணாபுரம் மற்றும் சொக்கம்பட்டி கிராமங்கள் மற்றும் வி.கே.புதூர் வட்டத்தில் மடத்துப்பட்டி கிராமம் ஆகியவற்றில் 165 எக்டேர் விடுபட்ட நிலம் பாசன வசதியும், 77 எக்டேர் நிலம் பாசன உறுதியும் பெறும். மேலும் நிலத்தடி நீர்ப்பெருக்கத்தால் 375 எக்டேர் நிலமும் பயனடையும்.



2000 ஏப்ரல் 29]

இத்திட்டத்தின் விரிவான ஆய்வுப் பணிக்கு (எடுத்துக்கொள்ள) சிலர் எதிர்ப்பு தெரிவித்து நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது. எனவே பணி மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

### 8.19 பத்தலப்பள்ளி-மலட்டாறு நீர்த்தேக்கத் திட்டம் (வேலூர் மாவட்டம்)

இத்திட்டமானது வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், பத்தலப்பள்ளி கிராமம் அருகே மலட்டாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கப்படுவதாகும். அரசு இத்திட்டத்திற்கு நவம்பர் 1997-ல் ரூ.29.55 கோடி ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டத்தினால் குடியாத்தம் வட்டத்தில் பாலூர் மச்சம்பட்டு, வசனம்பள்ளி, நரியாம்பட்டு, ரெட்டிமாள்குப்பம், சாரங்கல், கைலாசகிரி, ஆயுதம்பட்டு, சாதம்பாக்கம், ராஜக்கால், ஆளியங்குப்பம், மால்முருங்கை, மேல்பட்டி, குளித்திகை, சின்ன தொட்டாளம், உள்ளி, கோதகுப்பம், அரங்காநல்லூர், ஓகடசி மற்றும் சிட்லாத்தூர் கிராமங்களில் மொத்தம் 1064 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 61 எக்டேர் விடுபட்ட பாசன நிலங்களுக்கு பாசனமும் கிடைக்கப்பெறும். இத்திட்டத்தில் பேரணாம்பட்டு நகரம் மற்றும் வழியில் அமைந்துள்ள கிராமங்களுக்கு குடிநீர் வசதியும் மற்றும் தொழிற்சாலைகளுக்கு நீர் வழங்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் தோல் பதனிடும் தொழிற்சாலைகளினால் பாதிக்கப்பட்ட கிணறுகள் காலப்போக்கில் மீண்டும் நல்ல நீரை வழங்க ஏற்றதாக மாறும்.

மண் அணை, உபரி நீர் வழிந்தோடி, ஆற்றுமதகு, 'பிக்கப்' அணைக்கட்டு மற்றும் நீர்தணிவு அமைத்தல் இத்திட்டத்தின் அங்கங்களாகும்.

இத்திட்டத்திற்கு 36.98 எக்டேர் பட்டா நிலமும், 17.81 எக்டேர் வனத் துறை நிலமும் மற்றும் 11.32 எக்டேர் புறம்போக்கு நிலமும் தேவைப்படுகின்றன. நிலம் கையகப்படுத்தும் பணி மற்றும் திட்ட செயலாக்கத்தின் தொடக்கப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

### 8.20 குப்பநத்தம் நீர்த்தேக்கத் திட்டம் (திருவண்ணாமலை மாவட்டம்)

இத்திட்டமானது திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், குப்பநத்தம் கிராமம் அருகே செய்யாற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதாகும். இத்திட்டத்திற்கு அரசு ஜூன் 1997-ல் ரூ.35.46 கோடி ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டத்தினால் செய்யாற்றின் குறுக்கே உள்ள ஐந்து அணைகளின் கீழுள்ள 22 ஏரிகள் மற்றும் இரண்டு நேரடி கால்வாய்களின் மூலம் செங்கம் வட்டத்தில் காயம்பட்டு, எலையம்பட்டு, தண்டப்பட்டு, கரையமங்கலம், வடங்குப்பம், மேல்வணக்கம்பாடி, மேல்புழுதியூர், பெரும்பட்டம், பக்கிரிபாளையம், துக்கம்பேட்டை, மேமலூர், காயம்பட்டு, சுங்காரவரன், சென்ன சமுத்திரம், பொன்னேரி, சின்னசமுத்திரம், படியகரம், நரசிங்கநல்லூர், தொரப்பாடி, முன்னூர் மங்கலம், நாச்சிப்பட்டு, குஞ்சிலம், பெரியஏரி, உண்ணாமலைபுரம், புதுச்செங்கம், அன்வர்பாத், ஆலப்புதூர், தாமரைப்பாக்கம் மற்றும் அரிதாரை மங்கலம் கிராமங்களிலும் திருவண்ணாமலை வட்டத்தில் முன்னூர் மங்கலம், கரியாந்தல், ஆனந்தாள், மேல்புஞ்சை, வாசுதேவன் பட்டு மற்றும் கிழித்தூர் கிராமங்களிலும், போளூர் வட்டத்தில் கடலாடி, குணத்தூர், கீழத்தூர் கிராமங்களிலும் மொத்தம் 2528 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 580 எக்டேர் விடுபட்ட பாசன நிலங்களுக்குப் பாசன வசதியும் கிடைக்கப்பெறும்.

மண் அணை, கற்கட்டு நீர் வழிந்தோடி, ஆற்று மதகு ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய அங்கங்கள் ஆகும்.

இத்திட்டத்திற்கு 190.42 எக்டேர் புன்செய் பட்டா நிலமும், 103.75 எக்டேர் புறம்போக்கு நிலமும், 13.34 எக்டேர் வனத் துறை நிலமும் கையகப்படுத்த வேண்டியுள்ளது. வனத் துறை நிலங்களுக்கு ஈடாக இழப்பீடு நிலங்கள் கண்டறியப்பட்டுள்ளன. நியமப்படி மத்திய அரசிடமிருந்து அனுமதி பெறப்பட்டுள்ளது. பட்டா நிலம் கையகப்படுத்தும் பணி மற்றும் புறம்போக்கு நிலம் மாற்றும் பணி நடைபெற்று வருகிறது.

தொடக்கப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

### 8.21 வரட்டாறு-வள்ளி மதுரை நீர்த்தேக்கத் திட்டம் (தர்மபுரி மாவட்டம்)

தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம், வள்ளி மதுரை கிராமம் அருகே வரட்டாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது. அரசு 1997 ஏப்ரல் திங்களில் இத்திட்டத்திற்கு ரூ.19.20 கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தினால் அரூர் வட்டத்தில் உள்ள வள்ளிமதுரை, தத்தவளசி, சோமநாதன், கீரைப்பட்டி, குடிமியாம்பட்டி, அச்சல்வாடி மற்றும் சோமநாதம் புதூர் கிராமங்களில் கீரைப்பட்டி அணைக்கட்டு,





எல்லப்புடயாம்பட்டி அணைக்கட்டு மற்றும் மாங்குப்பம் ஏரி ஆகியவற்றின்கீழ் பாசனம் பெறும் 110 எக்டேர் நஞ்சை நிலங்களுக்கு பாசன உறுதி மற்றும் 1047 எக்டேர் ஒருபோக புன்செய் பயிர் செய்வதற்கு வகை செய்யும்.

இத்திட்டமானது மண் அணை, உபரி நீர்ப்போக்கி, தலை மதகுகள் மற்றும் கால்வாய் அமைக்கும் பணிகளை உள்ளடக்கியதாகும்.

இத்திட்டத்திற்கு 94.31 எக்டேர் புன்செய் பட்டா நிலமும், 24.87 எக்டேர் வனத் துறை நிலமும் மற்றும் 23.82 எக்டேர் புறம்போக்கு நிலமும் கையகப்படுத்த வேண்டியுள்ளது.

பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

### 8.22 கால்வாய் சடையனேரி திட்டம் (தூத்துக்குடி மாவட்டம்)

இத்திட்டத்தின் பணிகளுக்காக அரசு ரூ.12.33 கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது.

ஏற்கெனவேயுள்ள கால்வாய் சடையனேரி வாய்க்காலை கால்வாய் ஏரி வரையில் அகலப்படுத்துதல் மற்றும் ஏற்கெனவேயுள்ள சடையனேரி வாய்க்காலை அகலப்படுத்துதல், சடையனேரி விரிவு வாய்க்கால் வெட்டுதல், கருமேனியாற்றிலிருந்து வைரவன் தருவை வரையில் ஏற்கெனவேயுள்ள முதலூர் ஓடையை மேம்படுத்துதல் மற்றும் வைரவன் தருவை முதல் புத்தன் தருவை வரையில் ஓர் இணைப்புக் கால்வாய் வெட்டுதல் ஆகியன இத்திட்டத்தில் அடங்கும்.

இத்திட்டத்தின் மூலம் தாமிரபரணி ஆற்றின் உபரி நீரைக் கொண்டு சடையனேரி கால்வாயின் கீழுள்ள 12 ஏரிகள் மற்றும் தங்கை குளத்தின் கீழ் 314 எக்டேர் நிலங்களுக்கு நீர் வழங்கவும், இரு ஏரிகளை நிரப்புவதன் மூலம் 4 கிராமங்களில் உள்ள 634 கிணறுகளில் நிலத்தடி நீர் அதிகரிப்பதால் 875 எக்டேர் தென்னந்தோப்புகளும் பயன்பெறும். இத்திட்டத்தினால் திருச்செந்தூர் மற்றும் சாத்தான்குளம் வட்டங்களில் கால்வாய், வெள்ளூர், உடையார் குளம், வெள்ளமடம், பிடனேரி, எழுவாரிமுக்கி, மங்கைமொழி, சாத்தான்குளம், சாஸ்தாவிநல்லூர், குமடிக்கோட்டை, திரிப்பணிபுத்தன் தருவை, பாட்டக்குறிச்சி ஆகிய கிராமங்கள் பயன்பெறும்.

இத்திட்டம் மாநில நிதி தொகுப்பின்கீழ் தற்போது எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான பணிக்கு ஒப்பந்தக்காரர் நியமிக்கப்பட்டுள்ளார். பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

**8.23 நாராயண காவேரி வாய்க்காலை புனரமைத்து சீர் செய்தல் (இராமநாதபுரம் மாவட்டம்)**

அரசு 1998 மே திங்களில் இராமநாதபுரம் வட்டத்தில் உள்ள நாராயண காவேரி வாய்க்கால் மற்றும் அதன்கீழ் உள்ள (சாயல்குடி மற்றும் 33 கண்மாய்களுக்கு பாசன வசதி அளிக்கும்) மண்டல மாணிக்கம் அணைக்கட்டு புனரமைத்து சீர்செய்ய ரூ.5.75 கோடி மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் கமுதி வட்டத்திலுள்ள மண்டலமாணிக்கம், கமுதி, மண்டல்நாடு, கே.நெடுங்குளம், சீமானேந்தல், குண்டுக்குளம், கே.வேப்பங்குளம், ஓகரிசல்குளம், கோவிலாங்குளம், கம்பூதி, எம்புதுக்குளம் மற்றும் வில்லாநேந்தல் கிராமங்களிலும், திருச்சுழி வட்டத்திலுள்ள கல்லகரி கிராமத்திலும், கடலாடி வட்டத்திலுள்ள சாயல்குடி, எம்.கரிசல்குளம், என்.கரிசல்குளம், எ.உசிலங்குளம், [illegible]குளம், பிள்ளையார்குளம், எஸ்.இரண்டை மற்றும் கீழ அல்லிகுளம் ஆகிய கிராமங்களிலும் 1942.97 எக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கும்.

இத்திட்டப்பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

**8.24 உப்பாறு ஓடையின் குறுக்கே புதிய குளம் அமைத்தல் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)**

அரசு 1998 ஜூன் திங்களில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், காணக்கிளிய நல்லூர் உள்கிடைக் கிராமமான சிறுவையூர் அருகே உப்பாறு ஓடை நந்தியாற்றுடன் கலக்கும் இடத்திற்கு மேலே, ஓடையின் குறுக்கே ரூ.4.18 கோடி மதிப்பீட்டில் புதிய குளம் அமைக்க ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் காணக்கிளிய நல்லூர் கிராமத்தில் 152 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கும்.

மண் அணை, உபரி நீர் போக்கி, மூன்று பாசன மதகுகள் மற்றும் மூன்று கால்வாய்கள் இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

ஒப்பந்தங்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன. பணிகள் விரைவில் தொடங்க உள்ளன.



**8.25 முதலைமுத்துவாரியின் குறுக்கே ஒரு குளம் அமைத்தல் (தஞ்சாவூர் மாவட்டம்)**

அரசு 1998 ஜூன் திங்களில் தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டத்தில் உள்ள சென்னம்பட்டி கிராமத்தில் முதலை முத்துவாரியின் குறுக்கே ரூ.9.73 கோடி மதிப்பீட்டில் ஒரு புதிய குளம் அமைக்கும் பணிக்கு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டத்தினால் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள சென்னம்பட்டி, வல்லம்புதூர் கிராமங்கள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கரும்பூண்டி கிராமம் இவற்றில் 110 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசன வசதியும், 9 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் மற்றும் 364 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதியும் கிடைக்கும்.

2300 மீ. நீளத்திற்கு மண் கரை, தடையில்லா நீர்வழிந்தோடி மற்றும் 4 தலை மதகுகள் இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும். ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன. பணிகள் விரைவில் தொடங்க உள்ளன.

**8.26 கடானா விரிவாக்கத் திட்டம் (திருநெல்வேலி மாவட்டம்)**

அரசு 1998 ஜூன் திங்களில் திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்தில் ஏற்கெனவே உள்ள கடானா அணையின் வலதுபுறத்தில் ரூ. 18.82 கோடி மதிப்பீட்டில் ஒரு விரிவாக்க நீர்த்தேக்கத்தை அமைக்க அனுமதி அளித்தது.

இத்திட்டம் அம்பாசமுத்திரம் வட்டத்தில் உள்ள சிவசைலம், மேல் ஆம்பூர், கீழ் ஆம்பூர், மன்னார்கோவில் ஆகிய கிராமங்களில் 511 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 187 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் மற்றும் 67 எக்டேர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதியும் அளிக்கும்.

930 மீ. நீளத்திற்கு மண் கரை, ஒரு பாசன தலைமதகு, 18.71 மீ. நீளத்தில் 3 கிளை கால்வாய்களுடன் பிரதானக் கால்வாய், உபரி நீர் வழிந்தோடியிலிருந்து 120 மீ. நீளத்திற்கு இணைப்பு நீர்வழி ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

இத்திட்டப் பணிக்கு ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டு, பணி முன்னேற்றத்தில் உள்ளது.

[2000 ஏப்ரல் 29

### 8.27 நாயோடையின் குறுக்கே ஒரு புதிய குளம் அமைத்தல் (திண்டுக்கல் மாவட்டம்)

அரசு 1998 ஜூன் திங்களில் திண்டுக்கல் மாவட்டம் மற்றும் வட்டத்தில் உள்ள கன்னிவாடி கிராமத்தில் மங்கறியாற்றின் உபநதியான நாயோடையின் குறுக்கே ரூ. 3.50 கோடி மதிப்பீட்டில் ஒரு புதிய குளம் அமைக்க அனுமதி அளித்தது.

இத்திட்டத்தினால் திண்டுக்கல் மாவட்டம் மற்றும் வட்டத்திலுள்ள கன்னிவாடி, ஆலந்துராரான்பட்டி, வீரப்புடையான்பட்டி மற்றும் தெட்டுப்பட்டி கிராமங்களிலுள்ள 148 எக்டேர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதி கிடைக்கும்.

620 மீ. நீளத்திற்கு மண் கரை, 30 அடி நீள அதிவேக நீர்ப்போக்கி, ஒரு தலை மதகு மற்றும் 4120 மீ. நீளம் கண்ணி வாய்க்கால் இவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

இத்திட்டத்திற்கான மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட உள்ளது. பணிகள் விரைவில் தொடங்க உள்ளன.

### 8.28 இராமக்கல் ஓடை மற்றும் ஆனைவிழுந்தான் ஓடைகளின் குறுக்கே ஒரு புதிய குளம் அமைத்தல் (திண்டுக்கல் மாவட்டம்)

அரசு 1998 ஜூன் திங்களில் திண்டுக்கல் மாவட்டம் மற்றும் வட்டத்திலுள்ள எ.வெள்ளோடு மற்றும் கிழக்கோட்டை கிராமங்களில் குடகனாற்றின் உபநதிகளான இராமக்கல் ஓடை மற்றும் ஆனைவிழுந்தான் ஓடை இவைகளின் குறுக்கே ரூ.3.55 கோடி மதிப்பீட்டில் புதிய குளம் அமைக்கும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் திண்டுக்கல் மாவட்டம் மற்றும் வட்டத்திலுள்ள எ.வெள்ளோடு மற்றும் கிழக்கோட்டை கிராமங்களில் 107.65 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கும்.

480 மீ. நீளத்திற்கு மண் கரை, இராமக்கல் ஓடையில் உள்ள உபரி நீர்ப் போக்கியுடன் இணைக்க உபரி நீர் கால்வாயுடன் ஓர் உபரி நீர்ப் போக்கி, தலை மதகு, ஆற்று நீர்ப் போக்கி மதகு மற்றும் கண்ணி வாய்க்கால்கள் இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட உள்ளன. பணிகள் விரைவில் தொடங்க உள்ளன.



2000 ஏப்ரல் 29]

### 8.29. நல்லதங்காள் ஓடையின் குறுக்கே புதிய நீர்த்தேக்கம் (ஈரோடு மாவட்டம்)

அரசு 1998 ஜூன் திங்களில் ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம் பொன்னிவாடி கிராமத்தில் ஈஸ்வரன் கோயில் அருகே நல்லதங்காள் ஓடையின் குறுக்கே ரூ. 31.01 கோடி மதிப்பீட்டில் புதிய நீர்த்தேக்கம் அமைக்க ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டத்திலுள்ள நல்லான்பாளையம், ஆலம்பாளையம், பொறாமியம்துாரம்பாடி, மூலனூர் மற்றும் பொன்னிவாடி கிராமங்களில் 1919.87 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கும்.

3450 மீ. நீளம் மண் கரை, தடையிலா நீர்வழிந்தோடி, தலை மதகு மற்றும் ஆற்று மதகு இவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

### 8.30 ஆண்டி ஓடையின் குறுக்கே ஓர் அணை கட்டுதல் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)

அரசு 1998 ஜூன் திங்களில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், கல்லகம் கிராமத்திற்கு அருகே ஆண்டி ஓடையின் குறுக்கே ரூ. 1.21 கோடி மதிப்பீட்டில் ஓர் அணை கட்ட ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டத்திலுள்ள கல்லகம் கிராமம் மற்றும் பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் வட்டத்திலுள்ள பூண்டி கிராமம் இவைகளில் 82 எக்டேர் நஞ்சை நிலங்களுக்குப் பாசன உறுதியும் 84 எக்டேர் புன்செய் நிலங்களுக்குப் புதிய பாசன வசதியும் அளிக்கும்.

36 மீ. நீளம் கல்லணை, தலை மதகு, 3350 மீ. நீளம் குறுக்கு கட்டுமானப் பணிகளுடன் பிரதான வாய்க்கால் (இடதுபுறம்) மற்றும் 700 மீ. நீளம் வெள்ளத் தடுப்புக் கரை ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய அங்கங்கள் ஆகும்.

இத்திட்டத்தின் பணி நடைபெற்று வருகிறது.

### 8.31 சாஸ்தாகோவில் அருகே நகரியாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் (விருதுநகர் மாவட்டம்)

அரசு 1998 ஜூன் திங்களில் விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம் சாஸ்தா கோவில் அருகே நகரியாற்றின் குறுக்கே ரூபாய் 7.97 கோடி மதிப்பீட்டில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்கும் பணிக்கு ஒப்புதல் அளித்தது.

[2000 ஏப்ரல் 29

இத்திட்டம் இராஜபாளையம் வட்டத்திலுள்ள வடக்கு தேவதானம், தெற்கு தேவதானம், சேத்தூர், முத்துசாமிபுரம், கோவிலூர், நல்லமங்கலம் மற்றும் செட்டியார்ப்பட்டி கிராமங்களில் 13 கண்மாய்களின் மூலம் ஏற்கெனவே பாசனம் பெறும் 1016 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும் 184 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் அளிக்க வகை செய்கிறது.

1600 மீ. நீளம் மண் கரை, தடையிலா நீர்வழிந்தோடி, ஆற்று மதகு மற்றும் உபரி நீர்க் கால்வாய் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்களாகும்.

இத்திட்டத்தின் ஒப்பந்தப்புள்ளி கருத்துரு பரிசீலனையில் உள்ளது. பணிகள் விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளன.

**8.32 வெள்ளக்கால் கானாறு நீர்த்தேக்கம் (வேலூர் மாவட்டம்)**

அரசு 1998 ஆகஸ்டு திங்களில் வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், விண்ணமங்கலம் கிராமத்தினருகே வெள்ளக்கால் கானாறின் குறுக்கே ரூ.7.70 கோடி மதிப்பீட்டில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்கும் பணிக்கு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் வாணியம்பாடி வட்டத்திலுள்ள கண்ணாடிகுப்பம், பெரியன்குப்பம், சானார்குப்பம், மேல்கிருஷ்ணாபுரம், ஆம்பூர், சாமனாபுரம், கருண்வரம், வடபுதுப்பட்டு, கீழ் முருகி, தொட்டாலம், மடமூர் மற்றும் காட்டாம்பாக்கம் ஆகிய கிராமங்களில் 431 எக்டேர் நிலங்களுக்குப் பாசன. உறுதியும் 57 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப், பாசன வசதியும் அளிக்கும்.

320 மீ. நீளம் மண் அணை, 40 மீ. நீளம் உபரி நீர்ப் போக்கி ஆற்று மதகு ஆகியன இப்பணியின் அங்கங்களாகும். இத்திட்டத்திற்கு 35.82 எக்டேர் வனத் துறை நிலம் தேவைப்படுகிறது. வனத் துறை நிலங்களுக்கு ஈடாக இழப்பீடு நிலங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

நிலம் கையகப்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**8.33 சிறுமலையாற்றின் குறுக்கே ஒரு புதிய குளம் (திண்டுக்கல் மாவட்டம்)**

அரசு 1998 செப்டம்பர் திங்களில் திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், இராஜதானிக்கோட்டை அருகில் சிறுமலையாற்றின குறுக்கே ரூ.4.91 கோடி மதிப்பீட்டில் ஒரு புதிய குளம் அமைக்கும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.



2000 ஏப்ரல் 29]

இத்திட்டம், நிலக்கோட்டை வட்டத்திலுள்ள ஒருதட்டு கிராமத்தில் 128 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கும்.

975 மீ. மண் கரை, 40 மீ. நீளம் உபரி நீர்ப்போக்கி, ஒரு தலை மதகு மற்றும் 60 மீ: நீளம் உபரி நீர். கால்வாய் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்களாகும்.

பணி நடைபெற்று வருகிறது.

**8.34. குடகனாறு நீர்த்தேக்கத்திலிருந்து வெள்ளியணை மற்றும் மூன்று கண்மாய்களுக்குப் பாசன வசதி அளித்தல் (கரூர் மாவட்டம்)**

அரசு 1998 அக்டோபர் திங்களில் குடகனாறு நீர்த்தேக்கத்திலிருந்து கரூர் மாவட்டம் மற்றும் வட்டத்தில் உள்ள வெள்ளியணை மற்றும் மூன்று கண்மாய்களுக்கு ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் பாசன வசதி அளிக்க ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் கரூர் மாவட்டம் மற்றும் வட்டத்திலுள்ள வெள்ளியணை, உப்பிடமங்கலம், வீரராக்கியம் மற்றும் வளையல்காரன் புதூர் கிராமங்களில் 440 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும் 116 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் அளிக்கும்.

53.50 கி.மீ. நீளமுள்ள வலது பிரதானக் கால்வாயைப் புனரமைத்து மேம்படுத்துதல், ஏற்கெனவே உள்ள குறுக்குக் கட்டுமானப் பணிகளை பழுது பார்த்தல் மற்றும் ஐந்து உள்வரத்து மதகுகள் கட்டுதல் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

இத்திட்டத்தின் பணிகள் 25 விழுக்காடு முடிவடைந்துள்ளன.

**8.35. நீர்த்தேக்கங்களில் உள்ள பூங்காக்களை மேம்படுத்தி அழகுபடுத்துதல்**

அரசு 1998 செப்டம்பர் திங்களில் நீர்த்தேக்கங்களில் உள்ள பூங்காக்களை மேம்படுத்தி அழகுபடுத்துவதற்கான திட்டத்தை ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் கிருஷ்ணகிரி, சாத்தனூர், அமராவதி, வைகை, ஆழியாறு, பவானிசாகர், மணிமுத்தாறு, வீடூர் மற்றும் முக்கொம்பு ஆகிய அணைப் பகுதிகளில் செயல்படுத்த ஒப்புதல் அளித்தது.

கிருஷ்ணகிரி, சாத்தனூர், வைகை வீடூர் மற்றும் முக்கொம்பு ஆகிய அணைப் பகுதிகளின் பூங்காக்களை மேம்படுத்தி அழகுபடுத்தும் பணி

முடிவடைந்துள்ளது. அமராவதி, ஆழியாறு, பவானிசாகர் மற்றும் மணிமுத்தாறு ஆகிய அணைப் பகுதிகளில் இப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

**8.36 வண்டியூர் குளத்தை தூர் எடுத்து நவினப்படுத்துதல் (மதுரை மாவட்டம்)**

அரசு 1998 அக்டோபர் திங்களில் வண்டியூர் குளத்தை ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் தூர் எடுத்து நவீனப்படுத்தி பூங்கா அமைத்து அழகுபடுத்தும் பணிக்கு ஒப்புதல் அளித்தது.

இப்பணியில் 65 விழுக்காடு முடிவடைந்துள்ளது. எஞ்சிய பணி நடைபெற்று வருகின்றது.

**9. 1999-2000 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் முன்னேற்ற விவரம்**

**9.1 மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட திட்டங்கள்**

**9.1.1 தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம் 18-ஆம் கால்வாய் அமைக்கும் திட்டம்**

அரசு 1999 மே திங்களில் தேனி மாவட்டம் உத்தமபாளையம் வட்டத்தில் ரூ.26.52 கோடி மதிப்பீட்டில் 18-ஆம் கால்வாய் அமைக்கும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டத்தினால் உத்தமபாளையம் வட்டம், தெம்புச்சேரி, ட்டி. சிந்தளச்சேரி, பண்ணைபுரம், கோம்பை, சங்கராபுரம், வெம்பக்கோட்டை, தேவாரம், லட்சுமிநாயக்கன்பட்டி, போத்தைபுரம், மீனாட்சிபுரம், கூடலூர் மற்றும் உத்தமபாளையம் கிராமங்களில் 511.16 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 73.90 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் மற்றும் 22.81 எக்டேர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதியும் ஏற்படும்.

தலைப்பு மதகு கட்டுதல், 38.90 கி.மீ நீளமுள்ள கால்வாய் வெட்டுதல் மற்றும் 4 புதிய ஏரிகள் அமைத்தல் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

நிலம் கையகப்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.



**9.1.2 திருச்சிராப்பள்ளி மாவட்டம் காவிரி மேலணையில் (முக்கொம்பு) மேற்புறம் மற்றும் கீழ்புறம் கான்கிரீட் சுவர்கள் மற்றும் தூண்கள் பலப்படுத்துதல்**

அரசு 1999 மே திங்களில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், காவிரி மேலணையில் (முக்கொம்பு) மேற்புறம் மற்றும் கீழ்புறம் கான்கிரீட் சுவர்கள் மற்றும் தூண்களை ரூ.6.00 கோடி மதிப்பீட்டில் பலப்படுத்த ஒப்புதல் அளித்தது.

ஒப்பந்தக்காரர் நியமிக்கப்பட்டவுடன் பணி விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**9.1.3 கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டத்தில் மாம்பழத்துறையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம்**

அரசு 1999 ஜூன் திங்களில் கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டத்தில் வில்லுக்குரி கிராமத்தின் அருகே மாம்பழத்துறையாற்றின் குறுக்கே ரூ.9.50 கோடி மதிப்பீட்டில் நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டத்தினால் கல்குளம் வட்டம், கல்குளம் மற்றும் வில்லுகுரி கிராமங்களில் 3.57 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 25.82 எக்டேர் ஒரு போக பயிர் மற்றும் 18.14 எக்டேர் இருபோக பயிர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதி மற்றும் 308.98 எக்டேர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதியும் ஏற்படும்.

295 மீ நீளம் மண் அணை, 50 மீ நீளம் உபரி நீர் வழிந்தோடி, மதகு கட்டுதல் மற்றும் வலது மற்றும் இடதுபுறக் கால்வாய்கள் வெட்டுதல் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

வடிவமைப்பு இறுதியாக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**9.1.4. நிலையூர் கால்வாய் நீட்டித்தல் (மதுரை மாவட்டம்)**

அரசு 1999 ஜூன் திங்களில் மதுரை, விருதுநகர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள கம்பிக்குடி கண்மாய் தொடர்குளங்களுக்கு நீர் வழங்க ரூ.8.94 கோடி மதிப்பீட்டில் பெருங்குடி மேல்ஓடையிலிருந்து நிலையூர் கால்வாய் நீட்டிக்கும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டத்தினால் மதுரை தெற்கு வட்டம், வலையபட்டி தோதிப்பட்டி, சின்ன உலகானி, வலையன்குளம், நெடுமதுரை,

குட்கோவில், வெள்ளாரகுளம், பெரிய ஆலங்குளம், சம்பாகுளம், கொம்பாடி, அய்யம்பட்டி, எலியார்ப்பட்டி, மொச்சிப்பட்டி, பாறைபட்டி, புளிச்சங்குளம், ஆனைக்குளம், சங்குமடை, சல்லாங்குரினி, நல்லூர், வடக்குபீரிக்குளம், பாப்பானோடை, இராமன்குளம், கலுவன்குளம், விரதனூர், முத்தான்குளம், பனைக்குளம், எம். ஆலங்குளம், நெடுங்குளம், சாத்தான்குளம், சகடதட்டி, சின்னஉடப்பு, குதிரைகுட்டி, கோடல்செங்குளம், கொசரன்குண்டு, உடைக்குளம், கொசரபட்டி மற்றும் கொண்டாகுளம் கிராமங்களிலும், திருமங்கலம் வட்டம், சின்ன உலகானி, விருசன்குளம், விடாதகுளம் மற்றும் கிலஉட்பிலிகுண்டு கிராமங்களிலும், கரியபட்டி வட்டம், கடம்பன்குளம், ஆவியூர், பூலப்பட்டி, மாங்குளம், குராஜி, உடைக்குளம், அரசகுளம், இராயர்பட்டி, கம்பிகுடி, பாப்பன்குளம், எஸ். ஆலங்குளம், அன்மால்பெருங்கி, சத்திரம்புலம்குளம், பண்ணைவளத்தாள்பட்டி, வெற்றிலைமுறிச்சான்பட்டி மற்றும் அல்லாலப்பேரி கிராமங்களிலும், மானாமதுரை வட்டம், கன்சரன்குளம், வலையன்குளம், சூரம்பட்டி, திரலியார் முக்குடி, இலந்தைகுளம், வீரன்குளம் கரன்கலகுடி, இராக்கன்குளம், செங்குளம், வடக்கூர், பரையன்குளம் மற்றும் உசலன்குளம் கிராமங்களிலுள்ள 2696.53 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், மற்றும் 1126.03 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் ஏற்படும்.

தலைப்பு மதகுடன் கூடிய ரெகுலெட்டர், 7.850 கி.மீ. நீளம் பிரதானக் கால்வாய் வெட்டுதல், குறுக்கு கட்டுமானங்கள் உட்பட 3.00 கி.மீ நீளம் இணைக் கால்வாய் வெட்டுதல் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. பணி விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

## 9.1.5. பாலையூர் மற்றும் வாளமலையாற்றின் குறுக்கே உள்ளாறு நீர்த்தேக்கம் (திருநெல்வேலி மாவட்டம்)

அரசு 1999 ஜூலை திங்களில் திருநெல்வேலி மாவட்டம், சிவகிரி வட்டம் மற்றும் கிராமத்தின் அருகே பாலையூர் மற்றும் வாளமலையாற்றின் குறுக்கே ரூ.39.20 கோடி மதிப்பீட்டில் உள்ளாறு நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டத்தின் மூலம் சிவகிரி வட்டம், இராயகிரி, சிவகிரி, தென்மலை, திருமேலபுரம், நாரணபுரம், கோட்டையார், சிந்தாமணிப்பேரி, கூடலூர் மற்றும் இராமநாதபுரம் கிராமங்களிலும், சங்கரன்கோவில்





வட்டம், பனையூர், வயலி, மரதோணி, திருவேங்கடம், சத்திரப்பட்டி மற்றும் கரிசாத்தான் கிராமங்களிலும் 971.95 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும் மற்றும் 595.18 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் ஏற்படும்.

மண் அணை, நீர்வழிந்தோடி, இரண்டு மதகுகள் கட்டுதல், இராசிங்க பெரியாறு மற்றும் குலசேகர பெரியாறு பகுதிகளாக பிரிக்கும் சுவர் கட்டுதல் மற்றும் கண்மாய்கள், அணைகள் மேம்படுத்துதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

திட்டத்தின் துவக்கப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

## 9.1.6 மிருகண்டாநதியின் குறுக்கே நீர்த்தேக்கம் (திருவண்ணாமலை மாவட்டம்)

அரசு 1999 ஜூலை திங்களில் திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், மேல்சோழ குப்பம் கிராமம் அருகே மிருகண்டாநதியின் குறுக்கே ரூ.16.79 கோடி மதிப்பீட்டில் நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டத்தின் மூலம் திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், மேல்சோழங்குப்பம், கங்காவரம், சேனேந்தல், நல்லான்பிள்ளைபெற்றான், கங்கமலதேவி, கேட்டவரம்பாளையம், சிறுவல்லூர், எர்ணாமங்கலம் மற்றும் சோளவரம் கிராமங்களிலுள்ள 778.05 எக்டேர் நிலங்களுக்கு பாசன உறுதியும், 81.10 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் ஏற்படும்.

670 மீ. நீளம் மண் அணை, கட்டுப்பாடில்லா உபரி நீர் வழிந்தோடி, ஒரு தலைப்பு மதகு மற்றும் ஓர் ஆற்று மதகு கட்டுதல் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

இத்திட்டத்திற்கு 80.82 எக்டேர் பட்டா நிலமும் மற்றும் 23.37 எக்டேர் புறம்போக்கு நிலமும் கையகப்படுத்த தேவைப்படுகிறது.

நிலம் கையகப்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

## 9.2 1999-2000 ஆம் ஆண்டில் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட திட்டங்கள்

### 9.2.1. கீழ்பவானி பாசன அமைப்பை புனரமைத்து நவீனப்படுத்துதல் மற்றும் கீழ்பவானி பாசனப் பரப்பில் 23,000 ஏக்கர் நிலங்கள் சேர்த்தல்—மதிப்பீடு ரூ.55.00 கோடி

[2000 ஏப்ரல் 29

காளிங்கராயன் கால்வாய் மற்றும் கீழ்பவானி திட்டக் கால்வாய்களின் பணி முடிக்கப் பெற்றது.

அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி கால்வாய்களின் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

கீழ்பவானி பாசனப் பரப்பில் 23,000 ஏக்கர் நிலங்கள் சேர்க்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**9.2.2. 10,000 ஏக்கருக்குப் பாசன வசதி அளிக்கும் பொருட்டு மோர்தானா நீர்த்தேக்கத்திலிருந்து 100 கி.மீ. நீளத்திற்கு இடது மற்றும் வலது கரை வாய்க்கால் அமைத்தல்**

*மதிப்பீடு ரூ.40 கோடி*

நீர்வளத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் இப்பணி எடுத்துக் கொள்ளப்பட்டு, முன்னேற்றத்தில் உள்ளது.

**9.2.3. கூடுதல் நிதியில் கும்பகோணம் நகர எல்லைக்குள் உள்ள நான்கு வாய்க்கால்களை புனரமைத்தல் - மதிப்பீடு ரூ.1.91 கோடி.**

பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**9.2.4. உய்யக்கொண்டான் வாய்க்கால், குடமுருட்டி ஆறு, அரியாறு, கோரையாறு தூர் வாருதல் மற்றும் திருச்சி நகரத்தில் வெள்ள சேதத்தைப் பாதுகாக்கக் கரைகளை வலுப்படுத்துதல்-மதிப்பீடு ரூ.2.50 கோடி**

ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, பரிசீலனையில் உள்ளன.

**9.2.5. திருச்சியிலிருந்து கரூர் வரை காவிரியில் கருவேல மரங்கள் மற்றும் காட்டாமணக்குச் செடிகளை அகற்றுதல்**

*மதிப்பீடு ரூ.10 இலட்சம்*

3.00 கி.மீ நீளத்திற்கான பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்பளிக்கப்பட்டுள்ளன. பணி தொடங்கப்பட உள்ளது.

**9.2.6. மாசுபட்ட நொய்யல் ஒரத்துப்பாளையம் நீரை திருப்பிவிட புகலூர் கால்வாய் நீர்க்குழி கட்டுதல்-மதிப்பீடு ரூ.35 இலட்சம்**

ஒப்பந்தப்புள்ளி ஒப்புக்கொள்ளப்பட்டு, பணி தொடங்கப்படவுள்ளது.



2000 ஏப்ரல் 29]

**9.2.7. கரூர் மாவட்டம், பள்ளப்பட்டி அருகே நங்காஞ்சியாறு ஓடையின் குறுக்கே உள்ள அணைக்கட்டு புனரமைத்தல் - மதிப்பீடு ரூ.33 இலட்சம்**

ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, பரிசீலனையில் உள்ளன.

**9.2.8 திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கதிரியின்குளம் மற்றும் அதன் வாய்க்கால்கள் தூர் வாருதல்—மதிப்பீடு ரூ.50 இலட்சம்**

ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, பரிசீலனையில் உள்ளன.

**9.2.9 சென்னம்பட்டி அணைக்கட்டு, திட்டக் கால்வாயில் உள்ள எஞ்சிய பணிகள்—மதிப்பீடு ரூ.15 இலட்சம்**

பணி முடிவுற்றது.

**9.2.10 மேலூரிலிருந்து மரவன்மங்கலம் குளம் வரை பெரியார் பிரதானக் கால்வாயில் உள்ள எஞ்சிய பணிகள் - மதிப்பீடு ரூ.1.00 கோடி**

ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, பரிசீலனையில் உள்ளன.

**9.2.11 குழித்துறை ஆற்றின் விளாத்துறை நீரேற்றுப் பாசனத் திட்டத்தைப் புனரமைத்தல்-மதிப்பீடு ரூ.5.00 இலட்சம் (நீர்வளத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டது)**

பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**9.3 1999-2000 ஆம் ஆண்டில் பகுதி II திட்டத்தின் கீழ் ஒப்பளிக்கப்பட்ட சிறுபாசனத் திட்டங்களின் முன்னேற்ற விவரம்**

**9.3.1. ராஜகம்பீரம் ஏரியும் மற்றும் அதன்கீழ் அமைந்துள்ள 15 இதர ஏரிகளும் நீர் வசதி பெற வைகை வெள்ள நீரை திருப்பி விடுதல் திட்டம் (சிவகங்கை மாவட்டம்)**

அரசு 1999 மே திங்களில் சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டத்திலுள்ள ராஜகம்பீரம் ஏரியும் மற்றும் அதன்கீழ் அமைந்துள்ள 15 இதர ஏரிகளும் ரூ.3.09 கோடி மதிப்பீட்டில் நீர் வசதி பெற வைகை வெள்ள நீரை திருப்பி விடுதல் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் மானாமதுரை வட்டத்திலுள்ள எம். கரிசல்குளம், சின்னக்கண்ணனூர், ராஜகம்பீரம், கிளங்காட்டூர், அன்னவாசல் மற்றும் அரிமண்டபம் ஆகிய கிராமங்கள் மற்றும் பரமக்குடி வட்டத்திலுள்ள

[2000 ஏப்ரல் 29

வேலனேரி, கள்ளிகுடி மற்றும் பிடாரிசேரி கிராமங்களில் 1039.61 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 198.99 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் மற்றும் 8.25 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதியும் கிடைக்கும்.

வைகையாற்றின் எல்.எஸ். 32,050 கி.மீட்டரில் தலைப்பு ரெகுலெட்டர் கட்டுதல், வலது பிரதானக் கால்வாய் எல்.எஸ். 32,050 மீ. முதல் 33,900 மீ. வரை அடித்தளம் மற்றும் பக்கங்களுக்கு அகவுறை செய்தல், எல்.எஸ். 33,885 மீட்டரில் ரெகுலேட்டர் கட்டுதல் மற்றும் வலது பிரதானக் கால்வாய் எல்.ஸ்.33,870 மீட்டரில் தலைப்பு மதகு கட்டுதல், வழங்கு வாய்க்கால் 2.20 கி.மீ வெட்டுதல் மற்றும் குறுக்கு வடிகால் கட்டுமானப் பணிகள் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

முன்தகுதி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, பரிசீலனையில் உள்ளன.

**9.3.2. கள்ளாற்றின் குறுக்கே ஆணைக்கட்டி பஞ்சாத்தி மற்றும் தொடர் கண்மாய்களுக்கு நீர் வசதி அளித்தல் (புதுக்கோட்டை மாவட்டம்)**

அரசு 1999 மே திங்களில் புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம். ஆளபிறந்தான் கிராமத்தில் வெள்ளாற்றின் குறுக்கே ஆணைக்கட்டி பஞ்சாத்தி மற்றும் தொடர் கண்மாய்களுக்கு ரூ.141.00 இலட்சம் மதிப்பீட்டில் நீர் வசதி அளிக்கும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் பஞ்சாத்தி, அமான்ஜி, குண்டகவயல், கீழச்சேரி, சிவந்தன்காடு மற்றும் பெருனாவலூர் கிராமங்களில் 672.14 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும் மற்றும் 35.11 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் கிடைக்கும்.

அணை கட்டுதல், வழங்கு கால்வாய் வெட்டுதல், வெள்ளக்கரை அமைத்தல் மற்றும் கண்மாய்கள் மேம்பாடு செய்தல் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

மேற்கண்ட திட்டத்திற்கு பிப்ரவரி 2000-ல் ரூ.348 இலட்சத்திற்கான திருத்திய ஆட்சி ஒப்புதல் அரசிடமிருந்து கோரப்பட்டுள்ளது. ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.



2000 ஏப்ரல் 29]

**9.4. 1999-2000 ஆம் ஆண்டின் பகுதி II திட்டத்தின்கீழ் ஒப்பளிக்கப்பட்ட சிறப்பு சிறுபாசனத் திட்டங்களின் முன்னேற்ற விவரம்**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) | குறிப்புகள் |
|---|---|---|---|
| 1. | வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம் காரபட்டு கிராமத்தின் உள்கடை கிராமமான பொன்னார்—பள்ளி அருகே கானாற்றின் குறுக்கே ஒரு புதிய குட்டை அமைத்தல் | 15.90 | இப்பணிக்கு நிலம் கையகப்படுத்த நில வரை படம் மற்றும் அட்டவணைகள் வருவாய்த் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளன. பணி விரைவில் தொடங்கப்படும். |
| 2. | வேலூர் மாவட்டம், ஆற்காடு வட்டம், புங்கனூர் கிராமத்தின் உள்கடை கிராமமான வண்டிக்காலின் தேவனாசிமலை மற்றும் ரெட்டி திப்பைக்கிடையில் உள்ள கானாற்றின் குறுக்கே அணை கட்டுதல். | 67.87 | இப்பணிக்கு நிலம் கையகபடுத்த நில வரை படம் மற்றும் அட்டவணைகள் வருவாய்த் துறைக்கு அனுப்பப் பட்டுள்ளன. பணி விரைவில் தொடங்கப்படும். |
| 3. | வேலூர் மாவட்டம் குடியாத்தம் வட்டத்திலுள்ள கல்யாணப்பெரியகுப்பம் ஏரியை புனரமைத்தல். | 25.00 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 4. | வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டத்திலுள்ள பள்ளத்தூர் கிராமத்தில் ஒரு புதிய குட்டை அமைத்தல் | 17.60 | இப்பணிக்கு ஒப்பந்தக் காரர் நிர்ணயிக்கப்பட்டது. பணி விரைவில் தொடங்கப்படும். |
| 5. | திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் வட்டம், சோமாசிபாடி கிராமத்தில் ஒரு புதிய குட்டை அமைத்தல். | 4.20 | இப்பணிக்கு ஒப்பந்தக்காரர் நிர்ணயிக்கப்பட்டது. பணி விரைவில் தொடங்கப்படும். |

[2000 ஏப்ரல் 29

| | | |
|---|---|---|
| 6. திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் வட்டம், ஆரப்பாக்கம் கிராமத்தில் ஒரு புதிய குட்டை அமைத்தல் | 5.00 | நிலம் கையகப்படுத்த நில வரைபடம் மற்றும் அட்டவணைகள் வருவாய்த் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளன. இப்பணிக்கு ஒப்பந்தக்காரர் நிர்ணயிக்கப்பட்டது. பணி விரைவில் தொடங்கப்படும். |
| 7. தர்மபுரி மாவட்டம், பாலக்காடு வட்டத்தில் பூலப்பட்டி ஆற்றின் ஜம்பு ஏரி அணையிலிருந்து நீர் வழங்குதல் | 20.40 | ஒப்பந்தப்புள்ளி ஒப்புக்கொள்ளப்பட்டது. உடன்படிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். பணி விரைவில் தொடங்கப்படும். |
| 8. கோயம்புத்தூர் மாவட்டம் பல்லடம் வட்டம், செஞ்சேரி புதூர் கிராமம் சர்வே எண் 274-ல் ஒரு குட்டை அமைத்தல். | 23.00 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 9. பெரம்பலூர் மாவட்டம் மற்றும் வட்டம், தேனூர் கிராமத்தின் அருகே ஆனைவாரி ஓடை குறுக்கே ஒரு படுகை அணை கட்டி மோரன்குளம் ஏரிக்கு நீர் வழங்குதல் | 14.00 | உடன்படிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. பணி விரைவில் தொடங்கப்படும். |
| 10. திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், புத்தனாம்பட்டி கிராமத்தில் குட்டையை புதுப்பித்தல் | 7.20 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 11. கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், டி. இடையப்பட்டி கிராமத்தின் உள்கடை கிராமமான கோட்டக்கரை அருகே உள்ள வாரியின் குறுக்கே ஒரு புதிய குட்டை அமைத்தல். | 10.80 | பணி தொடங்கப்பட்டது. |



2000 ஏப்ரல் 29]

| | | |
|---|---|---|
| 12. புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், மருகுடி கிராமத்தில் மருதன்குடியாற்றின் குறுக்கே அணைகட்டி, விளதாவயல், முருக்கன்குளம் மற்றும் பாப்பன்குளம் ஏரிகளுக்கு நீர் வழங்குதல் | 33.50 | உடன்படிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. பணி விரைவில் தொடங்கப்படும். |
| 13. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன் சத்திரம் வட்டம், கொல்லப்பட்டி கிராமம் சர்வே எண் 94, 98, 99 மற்றும் 100-ல் ஒரு புதிய ஏரி அமைத்தல் | 96.70 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 14. விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டம், பண்ணை மூன்றடைப்பு கிராமத்தில் உள்ள மூன்றடைப்பு ஏரிக்கு நீர் வழங்குதல். | 29.90 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 26. | சமகோட்டு கால்வாய் 15.84 கி.மீ. முதல் 22.80 கி.மீ. வரை புனரமைத்தல் | கால்வாயில் தளம் மற்றும் பக்க காங்கிரீட் பூச்சு, கால்வாயை தரப்படுத்துதல், கால்வாயை கருங்கல் சுவர் கட்டி உயர்த்துதல், நடைபாலம் அமைத்தல், கட்டுமானங்களை மராமத்து செய்தல் | 1260.00 | 93% பணி முடிவுற்றது. எஞ்சிய பணி நடைபெற்று வருகிறது. |
| 27. | சமகோட்டு கால்வாய் 25.45 கி.மீ. முதல் 25.49 கி.மீ. வரை புனரமைத்தல் | கால்வாயில் தளம் மற்றும் பக்க காங்கிரீட் பூச்சு, கால்வாயை கருங்கல் சுவர் கட்டி உயர்த்துதல், நடைபாலம் அமைத்தல், கட்டுமானங்களை மராமத்து செய்தல் | 1260.00 | 93% பணி முடிவுற்றது. எஞ்சிய பணி நடைபெற்று வருகிறது. |
| 28. | பரம்பிக்குளம் பிரதானக் கால்வாய் 64.00 கி.மீ. முதல் 68.00 கி.மீ. வரை புனரமைத்தல் | கால்வாயை தரப்படுத்துதல், கால்வாயில் தளம் மற்றும் பக்க கம்பி காங்கிரீட் பூச்சு, பழைய காங்கிரீட் தளத்தை மராமத்து செய்தல், கட்டுமானங்களை மராமத்து செய்தல், கல் சாலை அமைத்தல் | 37.37 | பணி முடிக்கப் பட்டது. |
| 29. | தனி வாய்க்காலும் அதன் 7 ஏரிகளும் மற்றும் வேலபாளையம் வாய்க்கால் புனரமைத்து நவீனப்படுத்துதல் | கரையை உயர்த்துதல், கல் பாவுதல், கட்டுமானங்களை மராமத்து செய்தல், வாய்க்கால் தளம் மற்றும் பக்க காங்கிரீட் பூச்சு, மதகு மற்றும் மணல் போக்கி மதகு கட்டுதல், மதகுகளின் கதவுகளை மராமத்து செய்தல் | 137.00 | 54% பணி முடிவுற்றது. எஞ்சிய பணி நடைபெற்று வருகிறது. |



2000 ஏப்ரல் 29]

| வ. எண். | பணியின் பெயர் | சிறப்பியல்புகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | பணியின் நிலவரம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 30. | பரம்பிக்குளம் பிரதானக் கால்வாயின் 2-1-0 மைல் முதல் 3-4-500 வரை வலதுபுறம் பிரியும் பகிர்மானக் கால்வாய்களை புனரமைத்தல் | கால்வாயை ஒட்டி விரிவடையாத மண் கொண்டு தரப்படுத்துதல், கட்டுமானங்கள் மராமத்து செய்தல், கால்வாயின் தளம் மற்றும் பக்க காங்கிரீட் பூச்சு. | 55.96 | 97% பணி முடிவுற்றது. எஞ்சிய பணி நடைபெற்று வருகிறது. |
| 31. | பரம்பிக்குளம் பிரதானக் கால்வாய் 28.60 கி.மீ. முதல் 39.50 கி.மீ. முடிய புனரமைத்தல் | கால்வாயை ஒட்டி விரிவடையாத மண் கொண்டு கட்டுமானங்களை மராமத்து செய்தல், தளம் மற்றும் பக்க காங்கிரீட் பூச்சு, கல் சாலை அமைத்தல் | 720.32 | 99% பணி முடிவுற்றது. எஞ்சிய பணி நடைபெற்று வருகிறது. |
| 32. | பழைய ஆழியாறு வாய்க்காலை புனரமைத்தல் | அணைக்கட்டுகள் அதன் கட்டுமானங்கள் புனரமைத்தல், கால்வாயை தரப்படுத்துதல், கட்டுமானங்களை மராமத்து செய்தல், நடைபாலம், சிறுபாலம் நீர்ப் போக்கி தடுப்புச் சுவர் கட்டுதல், மதகுகளுக்கு பலகை கதவு மற்றும் திருகு கதவுகளைப் போடுதல் | 192.25 | 62% பணி முடிவுற்றது. எஞ்சிய பணி நடைபெற்று வருகிறது. |
| 33. | கொடுவாய், அழகுமலை, நாகலிங்கபுரம் கிளைக் கால்வாய்களின் மற்றும் பரம்பிகுளம் பிரதானக் கால்வாயில் உள்ள பகிர்மானக் கால்வாய்களை புனரமைத்தல் | கால்வாயை தரப்படுத்துதல், கட்டுமானங்களை மராமத்து செய்தல், கால்வாயின் தளம் மற்றும் பக்க காங்கிரீட் பூச்சு, தடுப்புச் சுவர் கட்டுதல் | 49.99 | 85% பணி முடிவுற்றது. எஞ்சிய பணி நடைபெற்று வ்ருகிறது. |

[2000 ஏப்ரல் 29

| வ. எண் | பணியின் பெயர் | சிறப்பியல்புகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | பணியின் நிலவரம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 34. | குண்டடம் கிளை மற்றும் அதன் உட்கிளை பகிர்மானக் கால்வாய்களை புனரமைத்தல் | கால்வாயை தரப்படுத் துதல், கட்டுமானங்களை மராமத்து செய்தல், கால்வாயின் தளம் மற்றும் பக்க காங்கிரீட் பூச்சு. | 310.32 | 99% பணி முடிவுற்றது. எஞ்சிய பணி நடைபெற்று வருகிறது. |
| 35. | பல்லடம் நீட்டிப்பு கால்வாய் மற்றும் அதன் பகிர்மானக் கால்வாய்களை புனரமைத்தல் | கால்வாயில் தளம் மற்றும் பக்க காங்கிரீட் பூச்சு. கால்வாயை தரப்படுத்துதல், கட்டுமானங்களை மராமத்து செய்தல், மதகுகளுக்கு பலகை கதவுகளுக்குப் பதிலாக திருகு கதவுகள் போடுதல் | 210.57 | பணி முடிக்கப் பட்டது. |
| 36. | பரம்பிக்குளம் பிரதானக் கால்வாய் 39.50 கி.மீ. முதல் 46.98 கி.மீ. வரை புனரமைத்தல் | கால்வாயை ஒட்டி விரிவடையாத மண் கொண்டு தரப்படுத்துதல், கட்டுமானங்களை மராமத்து செய்தல், கால்வாயின் தளம் மற்றும் பக்க காங்கிரீட் பூச்சு, பழைய காங்கிரீட் தளத்தை மராமத்து செய்தல் | 870.54 | 98% பணி முடிவுற்றது. எஞ்சிய பணி நடைபெற்று வருகிறது. |
| 37. | கோமங்களம் பகிர்மானக் கால்வாய் மற்றும் பூலாங்கிணறு, புதுப்பாளையம் கிளைக் கால்வாய்களின் பகிர்மானக் கால்வாய்களை புனரமைத்தல் | கால்வாயை ஒட்டி விரிவடையாத மண் கொண்டு தரப்படுத்துல், கால்வாய் தளம் மற்றும் பக்க காங்கிரீட் பூச்சு, மதகுகளுக்கு திருகு பலகை பொருத்துதல் | 529.00 | பணி முடிவுற்றது. |



2000 ஏப்ரல் 29]

| வ. எண் | பணியின் பெயர் | சிறப்பியல்புகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | பணியின் நிலவரம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 38. | வேட்டைக்காரன் புதூர் கால்வாயின் பகிர்மானக் கால்வாய்களை புனரமைத்தல் | கால்வாயை தரப்படுத்துதல், கட்டுமானங்களை மராமத்து செய்தல், கால்வாயின் தளம் மற்றும் பக்க காங்கிரீட் பூச்சு, மதகுகளுக்கு திருகு பலகை பொருத்துதல் | 200.43 | ஒப்பந்த அனுமதி குழு இப்பணிக் கான ஒப்பந்தப் புள்ளிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. தடையின்மைச் சான்று உலக வங்கி வழங்கியுள்ளது. உடன்படிக்கை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| 39. | பொள்ளாச்சி கால்வாயின் பகிர்மானக் கால்வாய்களை புனரமைத்தல் | கால்வாயை தரப்படுத்துதல், கட்டுமானங்களை மராமத்து செய்தல், கால்வாயின் தளம் மற்றும் பக்க காங்கிரீட் பூச்சு, மதகுகளுக்கு திருகு பலகை பொருத்துதல் | 341.43 | 31% பணி முடிவுற்றது. எஞ்சிய பணி நடைபெற்று வருகிறது. |
| 40. | சேத்துமடை கால்வாயின் பகிர்மானக் கால்வாய்களை புனரமைத்தல் | கால்வாயை தரப்படுத்துதல், கட்டுமானங்களை மராமத்து செய்தல், கால்வாயின் தளம் மற்றும் பக்க காங்கிரீட் பூச்சு, மதகுகளுக்கு திருகு பலகை பொருத்துதல் | 66.60 | 20% பணி முடிவுற்றது. எஞ்சிய பணி நடைபெற்று வருகிறது. |

[2000 ஏப்ரல் 29

| வ. எண் (1) | பணியின் பெயர் (2) | சிறப்பியல்புகள் (3) | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) (4) | பணியின் நிலவரம் (5) |
|---|---|---|---|---|
| 41. | பரம்பிக்குளம் பிரதானக் கால்வாய் 1.20 கி.மீ. முதல் 23.60 கி.மீ. வரை உள்ள கிளை கால்வாய்கள் மற்றும் பகிர்மான கால்வாய்களை புனரமைத்தல் | கால்வாயை தரப்படுத்துதல் கட்டுமானங்களை மராமத்து செய்தல் கால்வாயின் தளம் மற்றும் பக்க காங்கிரீட் பூச்சுப் மதகுகளுக்கு திருகு பலகை பொருத்துதல் | 231.41 | 98% பணி முடிவுற்றது. எஞ்சிய பணி நடைபெற்று வருகிறது. |
| 42. | ஆழியாறு ஊட்டுக் கால்வாய் மற்றும் அதன் பகிர்மான கால்வாய்களைப் புனரமைத்தல் | | 338.15 | 59% பணி முடிவுற்றது. எஞ்சிய பணி நடைபெற்று வருகிறது. |
| 43. | பெருந்தொலைவு கிளை கால்வாய் புனரமைத்தல் | | 102.24 | பணி முடிக்கப் பட்டது. |
| 44. | பரம்பிக்குளம் பிரதானக் கால்வாயின் இடதுபுற பகிர்மான கால்வாய்கள் 23 முதல் 39.50 கி.மீ வரை மற்றும் கோவில்பாளையம் மற்றும் வடசித்தார் கிளை கால்வாய்களின் பகிர்மான கால்வாய்களைப் புனரமைத்தல் | | 460.00 | 80% பணி முடிவுற்றது. எஞ்சிய பணி நடைபெற்று வருகிறது. |



2000 ஏப்ரல் 29]

| வ. எண் (1) | பணியின் பெயர் (2) | சிறப்பியல்புகள் (3) | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) (4) | பணியின் நிலவரம் (5) |
|---|---|---|---|---|
| 45. | பரம்பிக்குளம் பிரதானக் கால்வாயின் பெரிய குமாரபாளையம், வரும்வேடம் பாளையம் கிளை கால்வாயில் எல்.எஸ். 52.70 முதல் 82.62 கி.மீ. வரை பிரியும் இடதுபுற பகிர்மான கால்வாய்கள் புனரமைத்தல் | | 48.51 | 98% பணி முடிவுற்றது. எஞ்சிய பணி நடைபெற்று வருகிறது. |
| 46. | பரம்பிக்குளம் பிரதானக் கால்வாய் கி.மீ. 88/0 முதல் 102/800 கி.மீ. வரையுள்ள பகிர்மான கால்வாய்கள் மற்றும் நேரடி பாசன மதகுகள் மற்றும் திருப்பூர் கிளை கால்வாயின் முத்தம்பாளையம் ஆகியவற்றை புனரமைத்தல் | | 145.25 | 91% பணி முடிவுற்றது. எஞ்சிய பணி நடைபெற்று வருகிறது. |
| 47. | பரம்பிக்குளம் பிரதானக் கால்வாயின் எல்.எஸ். 113.00 முதல் 134.00 கி.மீ. வரையுள்ள பகிர்மான கால்வாய்களைப் புனரமைத்தல் | | 131.99 | 95% பணி முடிவுற்றது. எஞ்சிய பணி நடைபெற்று வருகிறது. |
| 48. | உடுமலைப்பேட்டை பிரதானக் கால்வாயின் பகிர்மான கால்வாய்களைப் புனரமைத்தல் | | 210.26 | 75% பணி முடிவுற்றது. எஞ்சிய பணி நடைபெற்று வருகிறது. |
| 49. | சர்கார்பதி நீட்டு கால்வாய்க்கு கற்காரையிலான (ஆர்.சி.சி.) மூடிப்பலகை அமைத்தல் | | 32.67 | 30% பணி முடிவுற்றது. எஞ்சிய பணி நடைபெற்று வருகிறது. |

[2000 ஏப்ரல் 29

| வ. எண் | பணியின் பெயர் | சிறப்பியல்புகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | பணியின் நிலவரம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 50. | உப்பாறு அணையின் இடது மற்றும் வலது கரை கால்வாய்களைப் புனரமைத்தல் | | 222.94 | ஒப்பந்த அனுமதிக் குழு இப்பணிக்கான ஒப்பந்தப் புள்ளிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. தடையின்மை சான்று கோரி உலக வங்கிக்கு அனுப்பப் பட்டுள்ளது. |
| 51. | 32.8 முதல் 51.205 கி.மீ வரையில் பிரியும் வாய்க்கால்கள் மற்றும் ஜெ. கிருஷ்ணாபுரம் கிளை வாய்க்காலின் பகிர்மான வாய்க்கால்கள் புனரமைத்தல் | | 173.10 | 65% பணி முடிவுற்றது. எஞ்சிய பணி நடைபெற்று வருகிறது. |
| 52. | திருப்பூர் கிளைக் கால்வாய் மற்றும் வடசின்னாரி பாளையம் கிளை வாய்க்கால்களின் பகிர்மான கால்வாய்கள் புனரமைத்தல் | | 209.36 | 70% பணி முடிவுற்றது. எஞ்சிய பணி நடைபெற்று வருகிறது. |
| 53. | உப்பாறு அணையின் இடது மற்றும் வலதுபுற கால்வாய்களைப் புனரமைத்தல் | | 72.21 | ஒப்பந்த அனுமதிக் குழு இப்பணிக்கான ஒப்பந்தப் புள்ளிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. தடையின்மை சான்றிதழ் கோரி உலக வங்கிக்கு அனுப்பப் பட்டுள்ளது. |



2000 ஏப்ரல் 29]

## 13. சிறுபாசனம்

### 1 ஐரோப்பிய குழும உதவியுடன் ஏரிகள் நவீனப்படுத்தும் திட்டம்

**முதல் கட்டம்**

இத்திட்டத்தின் முதல் கட்டத்தில் 200 எக்டேருக்குக் குறைவான பாசனப் பரப்புடைய 206 மானாவாரி ஏரிகள் ரூ. 52.44 கோடி செலவில் நவீனப்படுத்தப்பட்டன. இத்திட்டம் 1984 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் துவக்கப்பட்டு 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் நிறைவுற்றது. இதன் மூலம் மொத்தம் 28,740 எக்டேர் நிலங்கள் பயன்பெற்றன.

இத்திட்டம் கீழ்க்கண்ட மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது:

1. காஞ்சிபுரம்
2. திருவள்ளூர்
3. வேலூர்
4. திருவண்ணாமலை
5. கடலூர்
6. விழுப்புரம்
7. புதுக்கோட்டை
8. சிவகங்கை
9. இராமநாதபுரம்
10. விருதுநகர்

**இரண்டாம் கட்டம்**

இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் 100 எக்டேர் முதல் 200 எக்டேர் வரை பாசனப் பரப்புடைய மானாவாரி ஏரிகளையும், 4 எக்டேர் முதல் 50 எக்டேர் வரை பாசனப் பரப்புடைய முன்னாள் ஜமீன் ஏரிகளையும் நவீனப்படுத்தும் திட்டம் 1989 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் துவக்கப்பட்டது.

[2000 ஏப்ரல் 29

இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 125.00 கோடி ஆகும். இத்திட்டம் கீழ்க்கண்ட மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது:

1. காஞ்சிபுரம்
2. திருவள்ளூர்
3. வேலூர்
4. திருவண்ணாமலை
5. விழுப்புரம்
6. திருச்சி
7. பெரம்பலூர்
8. கரூர்
9. திண்டுக்கல்
10. தேனி
11. மதுரை
12. சிவகங்கை
13. இராமநாதபுரம்
14. விருதுநகர்
15. தூத்துக்குடி
16. திருநெல்வேலி
17. புதுக்கோட்டை

**பணி முன்னேற்றம்**

இத்திட்டத்தின்கீழ் 316 மானாவாரி ஏரிகளும், 80 முன்னாள் ஜமீன் ஏரிகளும் நவீனப்படுத்திட எடுத்துக்கொள்ளப்பட்டன. 1998-99 ஆம் நிதி ஆண்டு வரை 314 மானாவாரி ஏரிகளிலும் 80 முன்னாள் ஜமீன் ஏரிகளிலும் வேலைகள் நிறைவுற்றன. இதன்மூலம் 6,308 எக்டேர் பாசனப் பரப்பு கூடுதல் பாசன வசதி பெறுவதுடன் 44,880 எக்டேர் பாசனப் பரப்புடைய நிலங்கள் பயனடைந்தன. மீதமுள்ள 2 மானாவாரி ஏரிகளில் பணிகள் செப்டம்பர் 1999-ல் முடிக்கப்பட்டன. இதன்மூலம் 30 எக்டேர் பாசனப் பரப்பு கூடுதல் பாசன வசதி பெறுவதுடன், மொத்தம் 230 எக்டேர் பாசன நிலங்கள் பயனடைந்தன.



2000 ஏப்ரல் 29]

ஐரோப்பிய நாணய மாற்று உயர்வினால் கிடைத்த நிதியில் எடுத்துக்கொள்ளப்பட்ட 48 ஏரிகள் பாசனதாரர் சங்கங்கள்மூலம் செப்டம்பர் 1999-ல் முடிக்கப்பட்டன. இதனால், 358 எக்டேர் பாசனப் பரப்பு கூடுதல் பாசன வசதி பெறுவதுடன், மொத்தம் 2,370 எக்டேர் பாசன நிலங்கள் பயனடைந்தன.

**நிதிநிலை முன்னேற்றம்**

1998-99 வரை இத்திட்டத்தின் மொத்த செலவு ரூ. 119.93 கோடி. இத்திட்டத்திற்கு 1999-2000 ஆண்டிற்கு ரூ. 9.51 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டத்தில் பாசனதாரர் சங்கங்களை ஈடுபடுத்துதல்**

ஐரோப்பிய குழும உதவிபெறும் ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில், அந்தந்த ஏரியின் பாசனதாரர்களை, திட்டம் உருவாக்கும் நிலையிலிருந்தே ஈடுபடுத்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

ஏரிகள் நவீனப்படுத்தும் திட்டத்தில் பாசனதாரர் சங்கங்கள், ஏரியின் மேம்பாட்டுப் பணியை எடுத்துச் செய்ய ஊக்குவிக்கப்பட்டனர். இதுநாள் வரை 62 ஏரிகளில் கட்டுமானப் பணிகள் பாசனதாரர் சங்கங்களால் செயல்படுத்தப்பட்டுள்ளன.

**ஏரிகளின் பராமரிப்புப் பணிகளை பாசனதாரர் சங்கங்கள் மேற்கொள்ளல்**

நவீனப்படுத்தும் பணிகள் முடிவடைந்தவுடன் ஏரிகளின் பராமரிப்பில் ஈடுபட பாசனதாரர் சங்கங்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. பாசனதாரர் சங்கம் எக்டேருக்கு ரூ. 250 வீதம் வசூலித்து பிறகு அவர்கள் திருச்சி பாசன மேலாண்மை பயிற்சி நிலையம் மூலம் அரசிடமிருந்து சம ஈட்டுத் தொகை பெறவும் வழிவகுக்கப்பட்டுள்ளது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் 61 பாசனதாரர் சங்கங்கள் அரசிடமிருந்து சம ஈட்டுத் தொகையாக ரூ. 18.62 இலட்சம் உதவியைப் பெற்றுள்ளன.

**அரசு சாரா நிறுவனங்களின் செயல்பாடு**

அரசு சாரா நிறுவனங்களை ஈடுபடுத்தி பாசனதாரர் சங்கங்களை மும்முரமாக பங்கேற்க வைத்து ஏரிகளை நவீனப்படுத்துதல், இத்திட்டத்தின் ஒரு திட்டப் பகுதியாக அமைந்துள்ளது. பாசனதாரர் சங்கங்கள், பணிகளின் மதிப்பில் 10 விழுக்காடு பணமாகவோ,

[2000 ஏப்ரல் 29

பொருட்களாகவோ அல்லது வேலை மூலமாகவோ வழங்கி இத்திட்டத்தினை எடுத்துச் செயல்படுத்த ஊக்குவிக்கப்பட்டனர். அரசு சாரா நிறுவனங்களான "ஆசா" (A.S.A.) "ஸ்பீச்" (Speech) ஆகியவற்றை ஈடுபடுத்தி, பாசனதாரர் சங்கங்கள் மூலமாக 40 ஏரிகளின் பணிகள் முடிக்கப்பட்டன.

அரசு சாரா நிறுவனங்களான திருச்சியில் உள்ள "ஆசா" (A.S.A.), மதுரையில் உள்ள "ஸ்பீச்" (Speech) முதலியவை மூலமாக கீழ்க்கண்ட பணிகள் செய்யப்பட்டன:

1. 'ஆசா' (A.S.A.) 'ஸ்பீச்' (Speech) ஆகிய அரசு சாரா நிறுவனங்களை ஈடுபடுத்தி, பாசனதாரர் சங்கங்கள் மூலமாக மதுரையில் உள்ள நாஞ்சூர் மற்றும் வில்லூர் தொடர் ஏரிகள் மேம்படுத்தப்பட்டன.

2. மேற்குறிப்பிட்ட ஏரித்தொடரில் உள்ள பொதுப் பணித் துறையைச் சார்ந்த 13 ஏரிகளும், பஞ்சாயத்து யூனியனைச் சார்ந்த 28 ஏரிகளும் அரசு சாரா நிறுவனங்களை ஈடுபடுத்தி, பாசனதாரர் சங்கங்கள் மூலமாக ரூ. 1.06 கோடி செலவில் நவீனப்படுத்தப்பட்டன.

3. ஐரோப்பிய நாணய மாற்று உயர்வினால் கிடைத்த ரூ. 1.34 இலட்சம் நிதியின் மூலம், 8 ஏரிகளை நவீனப்படுத்தும் பணி பாசனதாரர் சங்கங்கள் மூலமாக நிறைவேற்றப்பட்டன.

**மாற்றுப் பயிர் செயல்முறை விளக்கம்**

அதிக வருவாய் ஈட்டும் பொருட்டு ஏரியில் உள்ள நீரை சிக்கனமாக பயன்படுத்தி ஐரோப்பிய குழும நிதி உதவியுடன் பயிர் மாற்று செயல்முறை விளக்கப் பண்ணைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1996-97 முதல் வேளாண் துறையின் மூலம் இரண்டாவது கட்டத்தில் 119 ஏரிகளின் ஆயக்கட்டில் பயிர் விளக்கப் பண்ணைகள் நடத்தப்பட்டன. இத்திட்டத்தின்கீழ், ஏரியின் பாசனதாரர்கள், இரண்டாம் போகத்தில் நீர் குறைவாகத் தேவைப்படும் பயிர்களாக பயறுவகை, பருத்தி, வேர்கடலை, பூச்செடிகள், காய்கறிகள் பயிரிட பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர்.



2000 ஏப்ரல் 29]

**பாசனதாரர்களுக்குப் பயிற்சி**

பாசனதாரர்கள் கீழ்க்கண்ட பயிற்சிகளில் பங்குகொண்டனர்:

| | | |
|---|---|---|
| 1. | வேளாண் துறை மூலமாக | 18 பயிற்சித் திட்டங்கள் |
| 2. | கே.வி.கே. காந்தி கிராமம், கிராமப் பல்கலைக் கழகம் மூலமாக | 3 பயிற்சித் திட்டங்கள் |
| 3. | திருச்சி பாசன மேலாண்மை பயிற்சி நிலையம் மூலமாக | 32 பயிற்சித் திட்டங்கள் |

இந்தப் பயிற்சி முகாம்களில் சுமார் 2500 பாசனதாரர் பங்குபெற்றனர். பாசனதாரர்களுக்கு ஏரி பராமரிப்பு, நீர் மேலாண்மை, மாற்றுப் பயிர் சாகுபடி, ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு இவைகளில் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. 1999-2000-ல் இப்பயிற்சித் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது.

**ஏரிகள் நவீனப்படுத்தும் திட்டம் டிசம்பர் 1999-ல் முடிவுற்றது**

### 13.2. சிறுபாசன ஏரிகள் பன்னாட்டு பொருளாதார கூட்டு நிதி (ஜப்பான்) உதவியுடன் கிராமப்புற முன்னேற்றத்திற்கான மேம்படுத்தும் திட்டம்

சிறுபாசன ஏரிகளைப் புனரமைக்கும் திட்டத்திற்கு திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான கருத்துருவை, ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுக் குழுவின் உதவிபெற டில்லியில் உள்ள ஜப்பான் தூதரகத்திற்கு அனுப்பிவைக்க, மைய அரசு நிதி அமைச்சகத்தைச் சார்ந்த பொருளாதாரத் துறைக்கு ஜூன் 1995-ல் அனுப்பிவைக்கப்பட்டது.

தொழில்நுட்ப ஒத்துழைப்பு திட்டங்களை செயல்படுத்துவதற்காக உள்ள "ஜப்பான் இண்டர்நேஷனல் கோவாபரேஷன் ஏஜன்ஸி" (ஜைகா) ஜூலை 1996-ல் தனது பார்வையாளர்கள் குழுவை அனுப்பிவைத்தது. அக்குழு இத்திட்டத்தின் நோக்கத்திற்கு ஒப்புதல் அளித்தது. மைய அரசு மற்றும் "ஜப்பான் இண்டர்நேஷனல் கோவாபரேஷன் ஏஜன்சி" ஆகஸ்டு 1996-ல் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டன. ஜப்பான் ஆய்வுக் குழுவானது முதல் கட்ட ஆய்வினை டிசம்பர் 1996-ல் தொடங்கி பிப்ரவரி 1997-ல் முடித்தது. இத்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கை எண் 1-ஐ பிப்ரவரி 1997-ல் அளித்தது. ஆய்வுக் குழு இரண்டாம் கட்ட ஆய்வினை நடத்தி முன்னேற்ற அறிக்கை எண் 2-ஐ ஜூலை 1997-ல் அளித்தது.

[2000 ஏப்ரல் 29

ஜப்பானிய ஆய்வுக் குழு தல ஆய்வுகளை முடித்து கீழ்க்கண்ட 5 மாவட்டங்களில் 2,093 ஏரிகளை சீரமைப்பு செய்ய ரூ. 890 கோடிக்கு திட்ட கருத்துருவினை தயாரித்து அனுப்பியுள்ளது.

1. காஞ்சிபுரம்
2. திருவள்ளூர்
3. சிவகங்கை
4. இராமநாதபுரம்
5. விருதுநகர்

மேற்கண்ட கருத்துருவினை பன்னாட்டுப் பொருளாதார கூட்டு நிதி (ஜப்பான்) உதவிபெற தமிழக அரசு நிதித் துறை செப்டம்பர் 97-ல் மைய அரசின் நீர்வள ஆதார அமைச்சகத்திற்கு அனுப்பி உள்ளது. அதன்பிறகு, 2000-2001ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க பரிசீலனை செய்ய பன்னாட்டுப் பொருளாதார கூட்டு நிதிக் குழு நினைவூட்டப்பட்டுள்ளது.

**13.3. உலக வங்கி நிதி உதவியுடன் நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின் மூலம் தமிழ் நாட்டில் உள்ள மானாவாரி சிறுபாசன ஏரிகள் மேம்படுத்தும் திட்டம்**

மொத்தம் 1,54,300 ஏக்கர் பாசனப் பரப்பினைக் கொண்ட தமிழ்நாட்டிலுள்ள 750 மானாவாரி சிறுபாசன ஏரிகளை மேம்படுத்த ரூ. 237 கோடி மதிப்பீட்டில் ஒரு கருத்துரு உலக வங்கிக்கு அவர்களது ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் ஊட்டுக் கால்வாய்களை மேம்படுத்தும் வேலை, கரைகளைச் சீரமைத்து மறு கட்டமைப்பு பணி செய்தல், மதகுகளை பழுதுபார்த்து சீரமைப்பு செய்தல், கலிங்குகளைச் (நீர்போக்கி) சீரமைத்தல் மற்றும் மேம்படுத்தல், கொப்பு வாய்க்கால்களுக்கு அகவுறை செய்தல், பாசன உழவர் சங்கக் கட்டடம் கட்டுதல், சமூக அமைப்புத் திட்டம் முதலிய இனங்கள் செய்யப்பட உள்ளன.

உலக வங்கியின் ஒப்புதல் பெற்ற பின்னர் இத்திட்டப் பணிகள் 2000-2001ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.



2000 ஏப்ரல் 29]

**13.4 'நபார்டு' வங்கி நிதி உதவியின் மூலம் சிறுபாசன ஏரிகளை நவீனப்படுத்துதல் மற்றும் பாசன மேலாண்மை பணிகளுக்கான திட்டம் - ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி 5 ஆம் கட்டம்**

**நபார்டு ஆர்.ஐ.டி.எப். V-முதல் கட்டம்**

தமிழ்நாட்டில் 23 மாவட்டங்களில் உள்ள 44 சிறுபாசன ஏரிகளை ரூ.18.69 கோடி மதிப்பீட்டில் 5,054 எக்டேர் நிலங்கள் பயன்பெறும் பொருட்டு நபார்டு வங்கி நிதி உதவியின் மூலம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் நபார்டு வங்கி அதன் 34-வது திட்ட ஒப்புறுதி வழங்கும் குழுக் கூட்டத்தில் 44 சிறுபாசன ஏரிகளை நவீனப்படுத்த ஒப்புறுதி வழங்கியது. (ஏரிகளின் பட்டியல் சேர்க்கை II-ல் இணைக்கப்பட்டுள்ளது.)

இத்திட்டத்தின் குறிக்கோளானது, ஏரிகளை நவீனப்படுத்தி தரத்தை உயர்த்தி, நீர்ப்பாசன திறனை உயர்த்துவதன்மூலம் வாய்க்கால்களுக்கு அகவுறை அமைத்தல், மதகுகளைப் பழுதுபார்த்து மேம்பாடு செய்து, கலிங்குகளைச் (நீர்ப்போக்கி) சீரமைத்தல், கரைகளை மேம்படுத்துதல் மற்றும் உள்வரத்து வாய்க்கால்களை சீரமைத்தல் போன்றவைகள் ஆகும்.

இத்திட்டம் மார்ச் 2000-ல் எடுத்துக்கொள்ளப்பட்டு ஏப்ரல் 2001-ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**நபார்டு ஆர்.ஐ.டி.எப்.V-இரண்டாம் கட்டம்**

தமிழ்நாட்டில் உள்ள 126 சிறுபாசன மானாவாரி ஏரிகளை 19,020 எக்டேர் நிலங்கள் பயன்பெறும் பொருட்டு "நபார்டு ஆர்.ஐ.டி.எப்.நிதி"-யின் சேமிப்புத் தொகையைப் பயன்படுத்தி, ரூ.63.70 கோடி மதிப்பீட்டில் (நபார்டு பங்கு ரூ.46.89 கோடி) மேம்பாடு செய்ய திட்டம் தயாரிக்கப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது. நபார்டு வங்கியின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றதும் திட்டப் பணிகள் துவங்கப்படும்.

**13.5 மாநில ஏரிப்பாசனத் திட்டம்**

தமிழ்நாட்டில் 8,939 பொதுப் பணித் துறை ஏரிகளும் 9,850 முன்னாள் ஜமீன் கண்மாய்களும் உள்ளன. ஏரிகளைத் தரப்படுத்தவும், நவீனப்படுத்தவும் மட்டுமே தமிழ்நாடு அரசு 1995-96-ல் இத்திட்டத்தினை அமல்படுத்தியது.

[2000 ஏப்ரல் 29

இத்திட்டம் இரு பிரிவுகளைக் கொண்டது. முதல் பிரிவு முன்னாள் ஜமீன் ஏரிகளைத் தரப்படுத்தி மேம்படுத்துவது ஆகும். இரண்டாவது பிரிவு பொதுப் பணித் துறையின் பொறுப்பில் உள்ள மற்ற ஏரிகளைத் தரப்படுத்துவதும் மேம்படுத்துவதும் ஆகும். அனைத்து முன்னாள் ஜமீன் ஏரிகளையும் தரப்படுத்திய பிறகு தொடர் பராமரிப்பிற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கோ அல்லது பொதுப் பணித் துறைக்கோ பாசனப் பரப்பிற்கு தகுந்தாற்போல் ஒப்படைக்கப்படும்.

இத்திட்டத்திற்கு *1999-2000* ஆண்டு ரூ.*8.85* கோடி கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது:

மாநில ஏரிப்பாசனத் திட்டம் .. ரூ.*4.22* கோடி

முன்னாள் ஜமீன் ஏரிகள்

மாநில ஏரிப்பாசனத் திட்டம் .. ரூ.*4.63* கோடி

**பொதுப் பணித் துறை ஏரிகள்**

*1998-99*ஆம் ஆண்டில் ரூ.*3.83* கோடி மதிப்பீட்டில் *251* பொ.ப.து. ஏரிகளும் ரூ.*2.85* கோடி மதிப்பீட்டில் *189* முன்னாள் ஜமீன் ஏரிகளும், தரப்படுத்தி மேம்படுத்த செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

மேலும் *1990-2000*ஆம் ஆண்டில் ரூ.*3.94* கோடி மதிப்பீட்டில் *199* பொ.ப.து. ஏரிகளும், ரூ.*3.48* கோடி மதிப்பீட்டில் *187* முன்னாள் ஜமீன் ஏரிகளும் தரப்படுத்தி மேம்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இப்பணிகளின் செயலாக்கம் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டத்திற்கு *2000-2001*ஆம் ஆண்டு ரூ. *8.85* கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**13.6 சிறப்பு சிறுபாசனத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் பாசன உறுதியளிக்கக்கூடியதும், கூடுதல் பாசனம் அளிக்கக் கூடியதுமான புது ஏரிகள் அமைத்தல், அணைக்கட்டு கட்டுதல், இணைப்புக் கால்வாய் வெட்டுதல், பழுதடைந்த ஏரிகளைப் புனரமைத்தல், குட்டைகள் அமைத்தல் போன்ற பணிகள் அடங்கும். தூர்வாரி புனரமைக்கும் திட்டங்களில் வண்டல் படிவினால் கொள்ளளவு குறைந்துபோன ஏரிகளைத் தூர்வாரும் பணியும், ஏரியின் எதிர்வாயில் உள்ள நிலம் ஏரித் தண்ணீரால் மூழ்காவண்ணம் நிலத்தை சீர் செய்யும் பணியும் அடங்கும்.



2000 ஏப்ரல் 29]

*1999-2000* ஆண்டில் சிறப்பு சிறுபாசனத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டுத் தொகை ரூ.*737.88* இலட்சம். (ரூ.*737.87* இலட்சம் மாநில திட்ட ஒதுக்கீடு மற்றும் *0.01* இலட்சம் 'நபார்டு' உதவி) இதனால் *550* எக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

*1999-2000*-ல் இத்திட்டத்தின்கீழ் *42* நிலுவையிலுள்ள பணிகள் செயலாக்கத்தில் இருந்தன. அரசு *1999-2000*-ல் *16* புதிய பணிகளுக்கு மொத்தம் ரூ.*4.37* கோடிக்கு ஒப்புதல் அளித்தது.

**13.7 ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்**

பழங்குடி மக்களின் தரத்தை உயர்தவும், அவர்களுக்கு மேம்பட்ட பாசன வசதிகளை அளிப்பதற்காகவும் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தை மத்திய அரசு உதவியுடன் மாநில அரசு தொடங்கியுள்ளது. தமிழ்நாடு அரசு வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், சேலம், நாமக்கல், தர்மபுரி, திருச்சிராப்பள்ளி, ஆகிய மாவட்டங்களில் உள்ள மலைப் பகுதிகளை "பழங்குடியினர் பகுதியாக" கண்டறிந்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ் மலைப் பகுதிகளில் பாசன வசதியை மேம்படுத்த தடுப்பு அணைகள் கட்டுதல், கசிவு நீர் குட்டைகள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

*1999-2000* ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ.*6.00* இலட்சம் ஆகும். இவ்வாண்டில் *3* பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

*2000-2001* ஆம் ஆண்டில் இப்பணிக்கு ரூ.*6.00* இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**13.8 மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் நீலகிரி மாவட்டத்தில் *1978-79* ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசின் *100* சதவிகித நிதி உதவியுடன் காட்டோடைகளின் குறுக்கே தடுப்பு அணைகள் கட்டப்படுகின்றன.

*1998-99*ஆம் ஆண்டில் ரூ.*65.00* இலட்சம் மதிப்பீட்டில் நீலகிரி மாவட்டத்தில் *24* பணிகள் செயலாக்கத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டதில், *23* பணிகள் முடிக்கப்பட்டன. மீதமுள்ள *1* பணி நடைபெற்று வருகிறது. *1999-2000* ஆண்டில் ரூ.*67.90* இலட்சம் மதிப்பீட்டில் *14* பணிகள்

[2000 ஏப்ரல் 29

ஒப்பளிக்கப்பட்டு தற்போது செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**13.9 மேற்கு தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டம்**

1986-87 ஆம் ஆண்டு முதல் கோயம்புத்தூர், ஈரோடு, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 24 வட்டங்களைத் தெரிந்தெடுத்து மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தடுப்பு அணைகள் கட்டுதல், குட்டைகள் அமைத்தல், வரத்துக் கால்வாய்களை மேம்படுத்துதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின்கீழ் செயல் படுத்தப்படுகின்றன.

இத்திட்டத்திற்கு 1999-2000 ஆண்டின் நிதி ஒதுக்கீடு ரூ.20.00 இலட்சம் ஆகும். 6 பணிகள் (கோவை மாவட்டத்தில் 2, திருநெல்வேலி மாவட்டத்தில் 4) முன்னேற்றத்தில் உள்ளன.

2000-2001 ஆம் ஆண்டிற்கு ரூ.3.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**14. பாசனக் கணிப்பு மற்றும் செயல் திட்டம் (நீர் வாரச் சந்தை)**

வேளாண் மக்களுக்கும் நீர்வள அமைப்பின் அலுவலர்களுக்கும் இடையே நெருங்கிய ஒத்துழைப்பையும் பிணைப்பையும் ஏற்படுத்தவும், பாசன ஏற்பாடுகளில் இணைந்து நிர்வகிப்பதற்கும் அரசு பாசனக் கணிப்பு மற்றும் செயல் திட்டம் (நீர்வாரச் சந்தை) திட்டத்தை அமல் படுத்தியது. இதன்படி—

1. பாசன கணிப்பு மற்றும் செயல்திட்டம் (நீர்வாரச் சந்தை) மழை நீரால் நிரம்பும் கண்மாய்கள் உள்பட எல்லா பாசன ஏற்பாடுகளிலும் துவக்கப்படும்.

2. பாசன ஏற்பாட்டை கவனிக்கும் பிரிவு அலுவலர் ஒவ்வொரு திங்கட்கிழமையும் பிற்பகல் 3.00 மணி அளவில் தனது பொறுப்பிலுள்ள பாசன அமைப்பை இயக்கவும், பராமரிக்கவும் உள்ள தனது பாசன அலுவலர்களுடன் அப்பகுதி வேளாண் மக்களைச் சந்திக்கத் தயாராக இருப்பார். இதன்பொருட்டு பிரிவு அலுவலகத்தில் ஒரு பதிவேடு பராமரிக்கப்பட்டு, அக்கூட்டத்தின் தீர்மான முடிவுகள் அப்பதிவேட்டில் குறிக்கப்படும்.



2000 ஏப்ரல் 29]

3. அப்பிரிவு அலுவலக எல்லைக்குட்பட்ட பாசன பகுதிகளுக்கு நீர் வழங்கும் பாசன ஆதாரங்களில் பாசன நீர் இருப்பு விவரம் அறிவிப்புப் பலகையில் தெரிவிக்கப்படும்.

4. பிரிவு அலுவலர் வேளாண் மக்களுக்கு பாசன ஏற்பாடுகளின் வெவ்வேறு கிளைகளில் கடந்த வாரம் செய்யப்பட்ட நீர் நிர்வாகத்தைப் பற்றியும் அன்றைய தினத்தில் பாசன ஏற்பாட்டில் நீர் இருப்பு விவரத்தையும் விளக்கி வேளாண் மக்களின் கருத்தை நடப்பு வாரத்தில் அமல்படுத்துவதற்குக் கோருவார்.

5. பிரிவு அலுவலர் வேளாண் மக்களிடையே கலந்து ஆலோசித்து அந்த வாரத்தில் செய்யப்பட வேண்டிய செயல் திட்டத்தைத் தயாரித்து அந்த இடத்திலேயே பாசன ஆய்வாளர்கள் மற்றும் பாசன உதவியாளர்களுக்கு தேவையான உத்தரவுகளை வழங்குவார்.

நீர் வாரச் சந்தைத் திட்டம் 1998 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் செயலாக்கத்திற்கு வந்துள்ளது.

**15. வேளாண் பெருங்குடி மக்களுக்கு பாசன மேலாண்மையில் பயிற்சியளித்தல்**

பாசனக் கட்டமைப்புகள், பராமரித்தல் மற்றும் பாசன நீர் மேலாண்மையில் வேளாண் பெருங்குடி மக்கள் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் வகையில், வேளாண் பெருங்குடி மக்களுக்கு பயிற்சி அளிக்கும் பெரும் பணியில் திருச்சி மாவட்டம் துவாக்குடியில் உள்ள பாசன மேலாண்மை மற்றும் பயிற்சி நிலையம் ஈடுபடுத்தப்பட்டு, 1999-2000 ஆண்டில் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் 985 வேளாண் பெருமக்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. 2000-2001-ம் ஆண்டிலும் சுமார் 5000 வேளாண் பெருமக்களுக்குப் பயிற்சி அளிக்க இத்திட்டம் தொடரப்படும்.

**16. மாவட்டந்தோறும் பாசன கருத்தரங்குகள் நடத்துதல்**

வேளாண் மக்களுடன் நல்ல தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளும் வகையிலும், பாசன வசதிகள் பற்றிய விவசாயிகளின் கருத்துக்களை அறிந்துகொள்ளும் வகையிலும் மாவட்ட அளவிலான நீர்ப்பாசனக் கருத்தரங்கு 1997-98-ல் நடத்தப்பட்டன. இக்கருத்தரங்குகள் பாசனம் மற்றும் நீர் விநியோகத்தில் அரசின் கொள்கைகளை வேளாண் குடிமக்கள் அறிய உதவுகின்றன. பாசன கருத்தரங்குகளை இவ்வாண்டிலும் (2000-2001) மாவட்டங்களில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2000 ஏப்ரல் 29

**17. காவிரி டெல்டா பகுதிகளில் கனரக இயந்திரங்களைக்கொண்டு தூர்வாரும் பணி**

காவிரியாற்றின் டெல்டா பகுதிகளில் ஆறுகள், கால்வாய்கள் மற்றும் வடிகால்களில் அவ்வப்போதைய வெள்ள நீர்வரத்து காரணமாக தூர் சேர்ந்து விடுகிறது. மேலும் நெய்வேலி காட்டாமணக்கு செடிகளின் அபரிமிதமான வளர்ச்சியும், நீர் ஆதாரங்களின் பாசன மேலாண்மையிலும், வெள்ளக்கட்டுப்பாடுப் பணிகளிலும் சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. இந்தச் தடங்கல்களினால் பாசன காலங்களில் கடைகோடி பகுதிக்கு பாசன நீர் கிடைப்பதில் குறைவும், வெள்ளக் காலங்களில் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கிவிடும் நிலைமையும் இருந்துவருகிறது.

எனவே, ஒவ்வோர் ஆண்டும் வேளாண்மைப் பொறியியல் துறையிலிருந்தும் மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்தும் "புல்டோசர்களை" வாடகை அடிப்படையில் தருவித்து தூர்வாருவதும், காட்டாமணக்குச் செடிகளை அகற்றுவதும் வாடிக்கையாய் உள்ளது.

இவ்வாறான பணிகளுக்கு ஆகும் செலவினை ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்படும் பராமரிப்பு நிதியில் செய்ய இயலாததால் 1997-98ஆம் ஆண்டு முதல் அரசால் இதற்கு சிறப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1997-98 ஆம் ஆண்டில் தஞ்சாவூர் டெல்டா பகுதிகளில் உள்ள ஆறுகள், கால்வாய்கள், வடிகால்கள் மற்றும் ஏரிகளைத் தூர்வாரவும் அவற்றில் உள்ள நெய்வேலி காட்டாமணக்குச் செடிகளை அகற்றவும், அரசு ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அப்பணிகள் 1997-98 லேயே முடிக்கப்பட்டன.

இதேபோல் 1998-99 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பணிகளுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது;

**1. காவிரி டெல்டா பகுதியில் தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் வட்டங்களில் தூர்வாருதல்**

நிதி ஒதுக்கீடு .. ரூ.20.00 கோடி

1998 நீரடைப்பு காலத்தில், ஆறு மற்றும் வடிகால்களில் 1165 கி.மீ. நீளத்திற்கும், மற்றும் ஏ.பி. வாய்க்கால்களில் 639 கி.மீ. நீளத்திற்கும் தூர்வாரும் பணி ரூ.19.62 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டது.



2000 ஏப்ரல் 29]

2. கடலூர் மாவட்டத்தில் சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார்கோவில் வட்டங்களில் காவிரி வடிநிலப்பரப்பிலுள்ள ஆறுகள், கால்வாய்கள் மற்றும் கண்மாய்களில் தூர்வாருதல்.

நிதி ஒதுக்கீடு .. ரூ.3.00 கோடி

1998 நீரடைப்பு காலத்தில், ஆறுகள் மற்றும் வடிகால்களில் 31.40 கி.மீ. நீளத்திற்கும், வாய்க்கால்களில் 93.10 கி.மீ. நீளத்திற்கும் தூர்வாரும் பணி செய்து முடிக்கப்பட்டது.

3. குளித்தலை அருகில் காவிரி ஆற்றில் உள்ள மண் திட்டுக்கள், நெய்வேலி காட்டாமணக்குச் செடிகள் மற்றும் புதர்கள் அகற்றுதல்.

நிதி ஒதுக்கீடு .. ரூ.50 இலட்சம்

இப்பணி ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் குளித்தலை அருகே குளித்தலை - முசிறி பாலத்திற்கு மேல் பகுதியிலும் கீழ் பகுதியிலும் 10 கி.மீ. நீளத்திற்கும், 1.6 கி.மீ. அகலத்திற்கும் காவிரி ஆற்றிலுள்ள புதர்களையும், மண் திட்டுக்களையும் அகற்றுவதாகும். இப்பணி முடிக்கப்பட்டது.

இந்தத் தூர்வாரும் பணியானது ஆறுகள் மற்றும் கால்வாய்களில் நீர் மேலாண்மை திறனை வெகுவாக உயர்த்தியுள்ளது. மேலும் கடைகோடி நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்க வகை செய்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் 22 மற்றும் 23-6-98 தேதிகளில் தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் நடைபெற்று வரும் தூர்வாரும் பணிகளைப் பார்வையிட்டு, இப்பணி காவிரி டெல்டாவில் எஞ்சிய பகுதிகளிலும் வரும் மூன்று ஆண்டுகளில் அனைவரும் பயனடையும்படி தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்று அறிவித்தார்.

எனவே, தூர்வாரும் பணிகள் 1999-2000, 2000-2001 மற்றும் 2001-2002 ஆகிய மூன்றாண்டுகளிலும் செய்ய திட்டமிடப்பட்டது.

[2000 ஏப்ரல் 29

இம்மூன்றாண்டுகளில் தூர்வார தீர்மானிக்கப்பட்டுள்ள பணிகளின் விவரம், அதற்கான உத்தேச மதிப்பீடு ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| வ.எண் | தூர்வார உத்தேசிக்கப் பட்டவை. | அளவு | 1999-2000 | 2000-01 | 2001-02 |
|---|---|---|---|---|---|
| 1. | ஆறுகள் | கி.மீ. | 472 | 167 | 109 |
| 2. | வடிகால்கள் | கி.மீ. | 1624 | 1196 | 306 |
| 3. | கால்வாய்கள் | கி.மீ. | 1816 | 1829 | 4357 |
| 4. | கண்மாய்கள் | எண்கள் | 136 | 147 | 130 |
| | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | | 54.28 | 57.00 | 28.93 |

1999-2000 ஆண்டில் காவிரி டெல்டாப் பகுதிகளில் தூர்வாரும் பணிக்காக அரசு ரூ.50.00 கோடி ஒப்புதல் அளித்துள்ளது. மொத்தத்தில் இப்பணியில் 60 விழுக்காடு முடிவடைந்துள்ளது. மீதமுள்ள பணி வரும் நீரடைப்பு காலத்தில் செய்து முடிக்கப்படும்.

காவிரி டெல்டா பகுதிகளில் தூர்வாரும் பணி வியக்கத்தக்க அளவில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டதைக் கருத்தில்கொண்டு தமிழகம் முழுவதும் இதுபோன்று தூர்வாரும் பணி செயல்படுத்த 2000-01 ஆம் ஆண்டிற்கு ரூ57.00 கோடிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

## 18. முதலமைச்சரின் ஏரிகள் தூர்வாரும் திட்டம்

தமிழக அரசு 200 கண்மாய்களை தூர்வாரி மேம்படுத்தும் பணிக்கு 1997-98-ல் ஒப்புதல் அளித்துள்ளது. ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் குறைந்தபட்சம் ஒரு கண்மாய் என்ற அடிப்படையில் கீழ்க்கண்ட வழிமுறையைப் பின்பற்றி கண்மாய்கள் தூர்வாருவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டன. அதாவது (1) பாசனப் பரப்பு 150 ஏக்கருக்குக் குறையாமல் உள்ள கண்மாய்கள் (2) பொருத்தமான இயந்திரங்களைக் கொண்டே தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். (3) இப்பணிக்கான மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்குக் குறையாமலும் ரூ.10.00 இலட்சத்திற்கு மிகாமலும் இருக்க வேண்டும். (4) கண்மாய்கரை, மதகு, மறுகால் வலிமைபடுத்தப்பட வேண்டும் (5) மதகின் நீர்ப்போக்கி



2000 ஏப்ரல் 29]

மட்டத்திற்கே மதகின் அருகில் தூர்வாரப்பட வேண்டும் (6). வெட்டி எடுக்கப்பட்ட மண், சாலை அமைக்கவும் மற்றும் கரை வலுப்படுத்தவும் பயன்படுத்தப்பட வேண்டும்.

1997-98 ஆம் ஆண்டில் 200 கண்மாய்களைத் தூர்வாரும் பணிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.19.91 கோடி ஆகும். இப்பணிகள் செப்டம்பர் 1997-ல் துவக்கப்பட்டு, 1997-98ஆம் ஆண்டில் ரூ.5.43 கோடி செலவிற்கான பணிகள் முடிக்கப்பட்டன.

இப்பணிகள் அதிகபட்சமாக பொருத்தமான கனரக இயந்திரங்களின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 1997-98-ல் ஒப்பளிக்கப்பட்ட 200 கண்மாய்களில் தூர்வாரும் பணியில் 193 கண்மாய்களில் பணிகள் முடிக்கப்பட்டன. எஞ்சியுள்ள கண்மாய்களில் பணிகள் 31-3-2000க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

1998-99ஆம் ஆண்டில் மேலும் 200 புதிய கண்மாய்களில் தூர்வாரும் பணி (ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட 200 கண்மாய்களில் தூர்வாரும் பணிகள் அல்லாமல்) செய்யப்படும் என்று அரசு அறிவித்து அதற்கான ஒப்புதலையும் வழங்கியுள்ளது. 1998-ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட இந்த 200 கண்மாய்களில் தூர்வாரும் பணியில் 144 கண்மாய்களில் பணிகள் முடிக்கப்பட்டன. எஞ்சியுள்ள கண்மாய்களின் பணிகள் 31-3-2000-க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 19. 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்ட வரைவு

**நோக்கம்**

இச்சட்டவரைவின் முக்கிய நோக்கமானது நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மையில் தமிழ்நாடு மாநிலம் முழுவதிலும் உள்ள விவசாயிகளைப் பங்கேற்கச் செய்வதாகும்.

**சட்டவரையின் முக்கிய அம்சங்கள்**
**சட்டவரைவின் பயன்கள்**

19.1 1 தேசிய சொத்தான நீர்வளத்தை அதிகபட்சமாக பயன்படுத்துவதை உறுதி செய்யும் வகையில் திறமையாகவும், சரிசமமாகவும் பங்கீடு செய்வதன் மூலம் தமிழ்நாட்டில் வேளாண் உற்பத்தியை மேம்பாடு செய்தல்.

[2000 ஏப்ரல் 29

2. நீர்ப்பாசன அமைப்பு முறையில் விவசாயிகளை ஈடுபடச் செய்வதன் மூலம் அவர்களிடையே அதற்கான உரிமையுணர்வை ஏற்படுத்துகிறது.
3. நீரைப் பயன்படுத்துபவர்களிடையே நீரானது பகிர்ந்தளிக்கப்படுகிறது.
4. நீர்ப்பாசன அமைப்பு முறை போதுமான அளவு பேணி வரப்படுகிறது.
5. வேளாண் உற்பத்திக்கு ஏற்ற வகையில் நீரினை திறமையாகவும், சிக்கனமாகவும் பயன்படுத்துவது உறுதி செய்யப்படுகிறது.
6. விவசாய அமைப்புகளின் மூலமாக மட்டுமே அறிவியல் சார்ந்த மற்றும் முறையான வளர்ச்சியும் பாசன கட்டுமானங்களை சிறந்த முறையில் பேணப்படுவதும் ஏற்படும்.
7. பயனுள்ளவாறும், நம்பகமாகவும் நீர் வழங்குவதற்கும் மற்றும் பகிர்ந்தளிப்பதற்காகவும், மேலாண்மை மற்றும் பராமரிப்புகளில் விவசாய அமைப்புகளுக்கு பெரும் பங்கு அளிக்கப்படும்.

**19.2 விவசாய அமைப்புகள்**

விவசாய அமைப்புகள் கீழ்க்கண்ட மூன்று அடுக்குகளில் அமைக்கப்படும்:

| | | |
|---|---|---|
| 1. நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம் (Water Users' Association) | : | பகிர்மான வாய்க்கால் மட்டத்தில். |
| 2. பகிர்மானக் குழு (Distributory Committee) | : | பல நீரினைப் பயன்படுத்துவோர். சங்கங்களைக் கொண்டது. |
| 3. திட்டக் குழு (Project Committee) | : | திட்டமட்டத்தில் பல பகிர்மான குழுக்களைக் கொண்டது. |

**பாசனப் பரப்பிடத்தை வரையறுத்தல்**

ஆட்சியர், மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பாசன அமைப்பின் பாசனப் பரப்பிடத்தை நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களாக



2000 ஏப்ரல் 29]

நீர்வழி எல்லை (hydraulic boundary) யின் அடிப்படையில் வரையறை செய்வார். இவ்வாறான வரையறை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளர்களால் வெளியிடப்படும். இந்த வரையறை அறிவிக்கையாக அரசிதழில் வெளியிடப்படும். இவ்வாறு அறிவிக்கையாக அரசிதழில் வெளியிடப்பட்ட வரையறையை ஆட்சியர் தானாகவோ அல்லது மனு மூலமாகவோ மேலாய்வு செய்யலாம் அல்லது திருத்தலாம்.

பகிர்மானக் குழுக்கள் மற்றும் திட்டக் குழுக்களுக்கான பாசனப் பரப்பிடங்களை அரசு வரையறை செய்யும்.

வரையறுக்கப்பட்ட விவசாய அமைப்புகளுக்கு, பிரிவு வாய்க்கால்கள், பகிர்மான வாய்க்கால்கள், குழாய் மதகுகள் மற்றும் உள்ள கட்டுமானங்கள், கிராம எல்லைகளுடன், வடிகால் பாசனப் பரப்பில் வரும் சாலைகள் போன்றவற்றையும், சர்வே எண்-படி உள்ள பாசனப் பரப்பு அல்லது பாசனத்திற்கு திட்டமிடப்பட்டுள்ள ஆயக்கட்டு இவைகளைக் காட்டும் வரைபடத்தை தயாரிக்க ஆட்சியர் நடவடிக்கை எடுப்பார்.

**19.3 நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்தை வரையறுத்தல், அமைத்தல், அதற்கான மேலாண்மைக் குழுவை அமைத்து, தலைவர் மற்றும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்**

நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம் ஒவ்வொன்றும் நான்கிற்குக் குறையாத, ஆனால், பத்திற்கு மேற்படாத ஆட்சி மண்டலத் தொகுதிகளாகப் (Territorial Constituencies) பிரிக்கப்படும்.

ஒவ்வொரு சங்கமும், பாசனத்திற்கு நீரைப் பயன்படுத்துவோர் எல்லோரையும் அங்கத்தினர்களாகக் கொண்டிருக்கும்.

**வரம்புரை 1:**

ஆனால் ஒரே நிலத்தை அதன் உரிமையாளரும், குத்தகைதாரரும் வைத்திருந்தால், குத்தகைதாரர்மட்டுமே நீரினைப் பயன்படுத்துவோராகக் கொள்ள வேண்டும்.

**வரம்புரை 2:**

ஆனால் நிலம் ஏதாவது ஒன்றை சட்டப்படி தன்வசம் வைத்திருக்கிற, துய்த்து வருகிற நபர் சாகுபடி ஆண்டில் தன்வசம் வைத்து துய்த்து வருவதை மெய்பித்தால் பதிவு நிலக்கிழாராக இருந்தாலும் சரி,

அவ்வாறில்லை என்றாலும் சரி உறுப்பினர் என்கிற தகுதியைக் கோரலாம்.

மேற்குறிப்பிட்டுள்ள உறுப்பினர்கள் அந்தந்த நீர் பயன்படுத்துவோர் சங்கத்திற்கான பொதுக் குழு உறுப்பினர்களாக இருப்பார்கள் என்பதோடு அத்தகைய உறுப்பினர்கள் மட்டுமே வாக்களிக்கத்தக்க உரிமையை உடையவராவர்.

ஒவ்வொரு நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்திற்கும் ஒரு மேலாண்மைக் குழு இருக்கும்.

**தலைவர்:**

மேலாண்மைக் குழுவின் தலைவர், மேற்கூறியவாறு வாக்குரிமை பெற்ற பொதுக் குழு அங்கத்தினர்களால் நேரடி தேர்தல் மூலமாகவும் மறைமுக வாக்கெடுப்பு மூலமாகவும் தேர்ந்தெடுப்பதற்கு ஆட்சியர் ஏற்பாடு செய்வார்.

**உறுப்பினர்:**

ஒவ்வொரு ஆட்சி மண்டல தொகுதியிலிருந்து மேலாண்மைக் குழுவின் அங்கத்தினரைத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்க ஆட்சியர் ஏற்பாடு செய்வார்.

**மற்ற அம்சம்:**

தலைவரும், உறுப்பினர்களும் திரும்பி அழைக்கப்படாதபட்சத்தில், முதல் கூட்டத்தின் நாளிலிருந்து 5 ஆண்டுகள் பதவியில் இருப்பார்கள்.

### 19.4 பகிர்மானக் குழு

ஒவ்வொரு நீர்ப்பாசன அமைப்பிலும் இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களின் பாசனப் பரப்பிடத்தைக் கொண்ட பரப்பு, பகிர்மானக் குழு பரப்பாக அரசால் வகுத்துரைக்கப்படும்.

நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களின் தலைவர்கள் பகிர்மானக் குழுவின் உறுப்பினர்களாவார்கள். இந்த அனைத்து உறுப்பினர்கள் பகிர்மானக் குழுவின் பொதுக் குழுவாக இருப்பார்கள்.



**தலைவர்:**

பகிர்மானக் குழுவின், மேலாண்மைக் குழுவின் தலைவரை அதன் பொதுக் குழுவிலிருந்து நேரடி தேர்தல் மற்றும் மறைமுக வாக்கெடுப்பின்மூலம் தேர்ந்தெடுக்க ஆட்சியர் ஏற்பாடு செய்வார்.

**உறுப்பினர்கள்:**

பகிர்மானக் குழுவின், மேலாண்மைக் குழுவின் உறுப்பினர்களை, ஐந்து பேருக்கு மிகுதியாகாமல் தேர்ந்தெடுக்க ஆட்சியர் ஏற்பாடு செய்வார்.

**மற்ற அம்சம்:**

தலைவரும், உறுப்பினரும் திரும்பி அழைக்கப்படாதபட்சத்தில் பொதுக் குழு உறுப்பினர்களின் பதவிக்கால அளவுடன் ஒருசேர முடிவடைவதாக இருத்தல் வேண்டும்.

### திட்டக் குழு

நீர்ப்பாசன அமைப்பொன்றின் பாசனப் பரப்பிடம் அல்லது அதன்பகுதி திட்டக் குழுவின் திட்டப் பரப்பிடம் என அரசால் வகுத்துரைக்கப்படும்.

பகிர்மானக் குழுவின் தலைவர்கள் திட்டக் குழுவின் உறுப்பினர் என்பதோடு, அவர்கள் அனைவரும் திட்டக் குழுவின் பொதுக் குழுவாக இருப்பார்கள்.

**தலைமையாளர்:**

திட்டக்குழுவின் மேலாண்மைக் குழு தலைவரை திட்டக் குழுவின் உறுப்பினர்களுக்கிடையே நேரடித் தேர்தல் மூலமும், மறைவான வாக்கெடுப்பின் வாயிலாகவும் தேர்ந்தெடுக்க ஆட்சியர் ஏற்பாடு செய்வார்.

**உறுப்பினர்:**

திட்டக் குழுவின் உறுப்பினர்களுக்கிடையே இருந்து மேலாண்மைக் குழுவின் உறுப்பினர்களை ஒன்பது பேர்களுக்கு மேற்படாமல் தேர்ந்தெடுப்பதற்காக ஆட்சியர் ஏற்பாடு செய்வார்.

[2000 ஏப்ரல் 29

**மற்ற அம்சம் :**

தலைவர், மற்றும் உறுப்பினர்களைத் திரும்பி அழைக்காதபட்சத்தில் பொதுக் குழு உறுப்பினர்களின் பதவிக்கால அளவுடன் ஒரு சேர முடிவடைவதாக இருத்தல் வேண்டும்.

**விவசாயிகள் அமைப்பில் துணைக் குழுக்களை உருவாக்குதல் (Sub Committees)**

விவசாயிகள் அமைப்பின் மேலாண்மைக் குழுவானது சங்கத்தின் அலுவல்களைக் கவனிப்பதற்காக அதன் உறுப்பினர்களிடமிருந்து தேவையான துணைக் குழுக்களை அமைத்து, உருவாக்கி அதன் பணிகளை கவனிக்கும். அதன்படி கீழ்க்கண்ட நான்கு துணைக் குழுக்கள் விவசாயிகள் அமைப்பின் ஒவ்வொரு அடுக்கிலும் உருவாக்கப்படும்.

1. நிதி ஆதார துணைக் குழு
2. பணிகள் துணைக் குழு
3. நீர் மேலாண்மைத் துணைக் குழு
4. கண்காணிப்பு/மதிப்பீடு மற்றும் பயிற்சி துணைக் குழு

**உயர்மட்டக் குழு (Apex Committee)**

அரசு அறிவிக்கையின் மூலமாக தலைவரையும், குழுக்கான உறுப்பினர் அடங்கிய உச்சநிலைக் குழுவை அமைத்து உருவாக்கும்.

**தலைமையாளர்:**

தலைமையாளரை அரசு அறிவிக்கும்.

**உறுப்பினர்கள்:**

உறுப்பினர்களை அரசு அறிவிக்கும்.

**மற்ற அம்சங்கள்:**

1. இக்குழு, சட்டவரைவின் வகைமுறை நடைமுறைப்படுத்துவதற்கான கொள்கைகளையும், வழிகாட்டு நெறிகளையும் வகுத்தமைத்து, அதிகாரங்களைச் செலுத்தியும், அலுவல்களை ஆற்றியும் வரலாம்.



2000 ஏப்ரல் 29]

2. இக்குழு குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தலைவரின் தலைமையில் கூடி, குறைந்தது மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்களை கொண்டு பிரச்சினைகளை விவாதிக்கும்.

**விவசாயிகள் அமைப்பின் அலுவல்கள்**

இதுகாறும் நீர்வள ஆதார அமைப்பு அலுவலர்கள் மட்டுமே பாசன அமைப்புகளின் இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளை கவனித்து வருகின்றனர். இந்தச் செயல்பாடுகளில் விவசாயிகளின் பங்கு ஏதும் இல்லை. விவசாயிகளின் மேலாண்மைச் சட்டவரைவில் பாசனதாரர்களுக்குச் சங்கங்கள்மூலம் கிளை/பகிர்மான வாய்க்கால்களின் இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளில் பங்கேற்க வகை செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் பாசன சேவை சிறப்பாக அமையவும், வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் அதிகமான வாய்ப்புகள் ஏற்படும்.

கீழ்க்கண்ட முக்கியமான அலுவல்களில் பொறுப்பேற்று செயல்படுத்த இச்சட்டவரைவு விவசாயிகளுக்கு வாய்ப்பளிக்கின்றது.

**19.5 பாசன வாய்க்கால்களின் இயக்கம் மற்றும் பராமரிப்பைத் திட்டமிடுதல்**

1. பாசன வாய்க்கால்களின் இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளை திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்துதல்.
2. நீர்வள ஆதார அமைப்பிடமிருந்து வாய்க்கால் தலைப்பில் வழங்கப்படும் நீரைப் பாசனதாரர் அனைவருக்கும் சமமாக உரிய நேரத்தில் பங்கிட்டு அளித்தல்.
3. சிக்கனமாக நீரைப் பயன்படுத்தத் தேவையான பணிகளைச் செயல்படுத்துதல்.
4. பாசனப் பரப்பில் நீர்ப் பங்கீடு பணிகளில் விவசாயிகளிடையே ஏற்படக்கூடிய பூசல்களைத் தீர்த்து வைத்தல்.
5. நிதி ஆதாரங்களைப் பெருக்குதல்.
6. கணக்குகளைப் பேணுதல்.
7. கணக்குகளுக்கான ஆண்டுத் தணிக்கை செய்தல்.
8. சங்கத்தின் அதிகார வரம்பிலுள்ள பரப்பிடங்களில் அமைந்துள்ள கால்வாய், வடிகால் மற்றும் குளம் புறம்போக்குகளின்மீது அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதை அகற்றுதல்.

[2000 ஏப்ரல் 29

9. பாசன அமைப்புகளுக்கும், கட்டுமானங்களுக்கும் ஏற்படுத்தப்படும் சேதாரங்களுக்குக் காரணமானவர்களிடமிருந்து பொதுக் குழுவின் மூலம் நஷ்டஈடு வசூலிக்க அதிகாரம் உண்டு.

10. அவ்வாறு சேதப்படுத்திய நபர்கள்மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவும் முடிவெடுக்க பொதுக் குழுவுக்கு உரிமை உண்டு ஆகியவை.

மேற்கண்ட பொறுப்புகளும் உரிமைகளும் அனைத்து நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம், பகிர்மானக் குழு மற்றும் திட்டக் குழு ஆகியவற்றுக்குப் பொருந்தும்.

## 19.6 விவசாயிகள் அமைப்பின் நிதியங்கள்

1. சட்டவரைவின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகவும், பல்வேறு பணிகளை ஆற்றுவதற்காகவும், விவசாயிகள் அமைப்புக்கு நீரைப் பயன்படுத்துவோரிடமிருந்து ஆண்டொன்றுக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.500-க்கு மேற்படாமல் வசூலிக்க அதிகாரம் உள்ளது. மேலும்-

2. நீர்க்கட்டணங்களின் பங்காக அரசிடமிருந்து வரப்பெற்ற மானியங்கள்.

3. பரப்பிடத்தின் மேம்பாட்டிற்காக அரசினால் வழங்கப்படக்கூடிய பிற நிதியங்கள்.

4. நிதி நிறுவனம் எதிலிருந்தும் பெறப்படும் நிதி ஆதாரங்கள்.

5. நீர்ப்பாசன முறையோடு சேர்ந்த சொத்துக்கள் மற்றும் உடைமைகளிலிருந்து அரசினால் வழங்கப்படும் வருமானம்.

6. பிற வழியிலிருந்து பெறப்படும் தொகைகள் ஆகியவை.

## 19.7 குற்றங்களும் பணத்தண்டங்களும்

கீழ்க்கண்ட செயல்கள் குற்றங்களாகக் கருதப்பட்டு அதற்கான தண்டனை வழங்கப்படும்:—

1. பாசன அமைப்பைச் சேதப்படுத்துதல், மாற்றுதல் போன்றவை.

2. நிர்ணயித்து வழங்கப்பட்ட நீரின் அளவை மாற்றுதல்.



2000 ஏப்ரல் 29]

3. தண்ணீரைத் திருடுதல்.

4. நீர் அளவு சாதனங்களிலுள்ள நீர்மட்ட அளவுகளைக் குறிக்கும் குறிகளை நீக்குதல் போன்றவை.

5. நீர்ப் பங்கீடு அல்லது ஒழுங்கு முறையை மீறுகிற எவருக்கும் இரண்டாண்டு சிறைத் தண்டனையுடனோ அல்லது ரூ.5000 வரை நீடிக்கலாகும் பணத்தண்டத்துடனோ அல்லது இரண்டுடனோ தண்டிக்கப்படுதல் வேண்டும்.

## 19.8 தகுதிவாய்ந்த அதிகாரியை நியமித்தலும் அவரது அலுவலங்களும் (Appointment of Competent Authority)

1. அரசு அறிவிக்கையின் மூலமாக விவசாயிகள் சங்கங்களுக்குப் பணிகளைச் செயலாக்கத் தேவையான உதவிகளைச் செய்யும் பொருட்டு நீர்வள ஆதார அமைப்பின் அலுவலரை தகுதிவாய்ந்த அதிகாரியாக நியமிக்கலாம்.

2. விவசாயிகள் அமைப்பினால் எடுக்கப்படும் முடிவுகளை நடைமுறைப்படுத்துவதிலும், நிறைவேற்றுவதிலும் அந்தத் தகுதிவாய்ந்த அதிகாரி பொறுப்பானவராக இருத்தல் வேண்டும்.

## 19.9 ஆணையரின் நியமனம் மற்றும் அலுவல்கள்

1. தகுதிவாய்ந்த அதிகாரிகள் மற்றும் ஆட்சியர்கள் ஆகியோரின் செயல்பாட்டுப் பணிகளை மேற்பார்வையிடுவதற்கும், பொதுக்கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்வதற்கும் அரசு அறிவிக்கையின்மூலம் ஆணையரை நிமிக்கலாம்.

2. ஆட்சியரின் உத்தரவின்பேரில் எழும் மேல்முறையீட்டின்மீது அது கிடைக்கப்பெற்ற ஒரு மாத காலத்திற்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. ஒரு பாசன அமைப்பின் பாசனப் பரப்பீடு ஒரு மாவட்ட எல்லைக்கப்பாற்பட்டு இருந்தால் தேர்தல் போன்ற பொதுவான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆணையர் தகுந்த ஒரு அதிகாரியை நியமிக்கலாம். இவ்வலுவலர், ஆட்சியருக்கு உண்டான அதிகாரங்களுடன் செயல்படுவார்.

[2000 ஏப்ரல் 29

**19.10 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயிகள் அமைப்புமுறை மேலாண்மை மசோதாவுக்கான பரவலான விளம்பரம்**

விவசாயிகளிடையேயும் பொதுமக்களிடையேயும் பரவலான விளம்பரத்தை ஏற்படுத்தும்பொருட்டு விளம்பரத்திற்குத் தேவையான கருத்துரு ஏற்கெனவே தயாரிக்கப்பட்டுவிட்டன. இந்த விளம்பரமானது செய்தித் தாள்கள், அகில இந்திய வானொலி, தொலைக்காட்சி, கைப்பிரதி, சுவரொட்டிகள் மூலம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

**19.11 தற்போதைய நிலை**

1999ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டமானது மசோதா எண் 38/1999-ன்படி 18-5-1999 அன்று சட்டப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த வரவு செலவுத் திட்டத் தொடரில் இந்த மசோதா நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**19.12 வரவு செலவுத் திட்டமும் செலவினங்களும்**

1999-2000 ஆம் ஆண்டிற்கு விவசாயிகள் அமைப்பு மற்றும் பொறுப்புகளை ஒப்படைக்கும் தலைப்பிற்கு வரவு செலவுத் திட்டத்தின் மதிப்பீடு ரூ.66.17 இலட்சமாகும். திருத்திய மதிப்பீடு ரூ.76.32 இலட்சத்திற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டு 1999-2000-ல் அரசு சாரா அமைப்புகளுக்கு பிப்ரவரி, 2000 வரை ரூ.47.97 இலட்சம் பணப் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. மொத்த ஒப்பந்தத் தொகை ரூ.102.10 இலட்சத்திற்கெதிராக இதுவரை ரூ.60.40 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டு 1999-2000-ல் முதுநிலை ஆலோசகருக்கு ரூ.2.41 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் ரூ.4.21 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**20. கிருஷ்ணா குடிநீர் வழங்குத் திட்டம்**

1983ஆம் ஆண்டு ஏப்ரல் 18ஆம் நாள் தமிழக அரசு ஆந்திரப் பிரதேச அரசிடம் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது. அதன்படி சென்னைப் பெருநகர் குடிநீர் வசதிக்காக கிருஷ்ணா நதியிலிருந்து ஆண்டில் 8 மாத காலங்களில் வழியில் ஏற்படும் இழப்பான 3 டி.எம்.சி. போக 12 டி.எம்.சி. ஆந்திர அரசால் தமிழ்நாடு-ஆந்திர எல்லையில் வழங்கப்படும். தமிழ்நாடு எல்லைக்குட்பட்ட பணிகள்



2000 ஏப்ரல் 29]

''கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டம்'' என்றும் ஆந்திர எல்லைக்குட்பட்ட பணிகள் "தெலுங்கு கங்கை திட்டம்" என்றும் அழைக்கப்படுகின்றன.

கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டத்தில் தமிழ்நாடு எல்லையில் செய்யப்படும் பணிகளுக்காக, அரசு முதன்முதலில் ஒப்பளித்த மதிப்பீட்டின் தொகை ரூ.46.44 கோடியாகும். இத்திட்டத்தின் திருத்திய மதிப்பீட்டின் தொகை ரூ.196.04 கோடியாகும். (1996-97 ஆண்டுக்குரிய விலைப் பட்டியலின்படி) ஜனவரி 2000 வரை ரூ. 178.00 கோடி இத்திட்டத்திற்காக செலவு செய்யப்பட்டுள்ளது.

தெலுங்கு கங்கை திட்டப் பணிகளின் மொத்த மதிப்பீடு ரூ.2311 கோடியாகும். இதில் தமிழ்நாட்டின் பங்கு ரூ.554.13 கோடியாகும்.

இதுவரை ஆந்திரப் பிரதேச அரசு ரூ.1752.30 கோடி செலவு செய்துள்ளது. தமிழக அரசு தன்பங்காக ரூ.512 கோடி ஆந்திரப் பிரதேச அரசுக்குக் கொடுத்துள்ளது. தமிழ்நாடு - ஆந்திர எல்லையில் கடந்த 29-9-1996 அன்று கிருஷ்ணா குடிநீர் வரப்பெற்றது. அதற்கான விழா மாண்புமிகு தமிழ்நாடு, ஆந்திர முதலமைச்சர்கள் மற்றும் மைய அமைச்சர்கள் கலந்துகொள்ள சிறப்பாக நடந்தேறியது.

கடந்த ஆண்டுகளில் கண்டலேறு அணையிலிருந்து திறந்துவிடப்பட்ட நீரின் அளவு மற்றும் தமிழ்நாட்டு எல்லையில் பெறப்பட்ட நீரின் அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| ஆண்டு | கண்டலேறு அணையிலிருந்து கே.பி. கால்வாயில் திறந்துவிடப்பட்ட நீரின் அளவு | தமிழ்நாட்டு எல்லையில் பெறப்பட்ட நீரின் அளவு | பெறப்பட்ட நீரின் அளவு(விழுக்காடு) |
|---|---|---|---|
| 1996 | 0.610 டி.எம்.சி | 0.076 டி.எம்.சி | 12.5% |
| 1997 | 4.339 டி.எம்.சி | 2.290 டி.எம்.சி | 52.80% |
| 1998 | 4.07 டி.எம்.சி | 2.810 டி.எம்.சி | 69.00% |

இந்த ஆண்டு 10-7-1999 அன்று கண்டலேறு அணையிலிருந்து கிருஷ்ணா நீர் திறந்துவிடப்பட்டு, 17-7-1999 அன்று தமிழ்நாட்டு எல்லையை வந்தடைந்தது. 11-11-1999 அன்று வரை 1.83 டி.எம்.சி. தமிழ்நாட்டு எல்லையில் பெறப்பட்டது.

[2000 ஏப்ரல் 29

கண்டலேறு அணையில் உள்ள நீர், கண்டலேறு பூண்டி கால்வாய் தலை ஒழுங்கியக்கியின் அடிமட்டத்தைவிட 3.5 மீட்டர் உயரம் இருந்தபோதிலும், அணுகுக் கால்வாயிலுள்ள தண்டகள் காரணமாக தலை ஒழுங்கியக்கியின் வழியாக போதிய அளவு நீர் தமிழ்நாடு எல்லையில் பெற இயலவில்லை.

இதைத் தொடர்ந்து, வடிவமைக்கப்பட்டபடி, அணுகுக் கால்வாயில் தூர் வாரும் பணி மேற்கொண்டு, கண்டலேறு அணையிலிருந்து தாராளமாக தண்ணீர் வர ஆவன செய்யுமாறு தமிழ்நாடு அரசு ஆந்திரப் பிரதேச அரசைக் கேட்டுக்கொண்டது.

அணுகுக் கால்வாயிலுள்ள தடைகளை விரைந்து அகற்றும்படி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 30-10-1999 அன்று மாண்புமிகு ஆந்திர முதல்வர் அவர்களுக்குக் கடிதம் எழுதினார். மேலும், தமிழக அரசின் மாண்புமிகு பொ.ப.து. அமைச்சர் மற்றும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் 30-11-1999 அன்று ஆந்திர அரசின் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மற்றும் மாண்புமிகு பாசனத் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்தனர். அச்சந்திப்பின்போது மாண்புமிகு தமிழக அமைச்சர்கள் அணுகுக் கால்வாயில் உள்ள தடைகளை அகற்றி கண்டலேறு அணையிலிருந்து விரைவில் தண்ணீர் திறந்துவிடும்படி கேட்டுக்கொண்டனர். மாண்புமிகு ஆந்திர முதல்வர் அவர்கள் உடனடி நடவடிக்கை எடுக்க ஒப்புக்கொண்டார். ஆந்திரப் பிரதேச பொறியியல் ஆலோசகர் 7-12-1999 அன்று கண்டலேறு அணையை ஆய்வு செய்து, அணுகுக் கால்வாயில் உள்ள தூர் வாரும் பணி மற்றும் அகலப்படுத்தும் பணிக்கான மதிப்பீட்டை ஆராய்ந்து, ரூ.46.00 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கி, மேல்நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆவன செய்தார்.

கடந்த 29-12-1999 அன்று ஐதராபாத்தில் தெலுங்கு கங்கை திட்டத்தின் உயர்மட்ட தொடர்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தின்போது அணுகுக் கால்வாய் தூர் வாரும் பணியை விரைந்து மேற்கொண்டு கண்டலேறு அணையிலிருந்து கிருஷ்ணா நீரைத் திறந்துவிட ஆந்திரப் பிரதேச அரசு அதிகாரிகள் ஒப்புக்கொண்டனர்.



2000 ஏப்ரல் 29]

## 21. புதிய வீராணம் திட்டம்

புதிய வீராணம் திட்டம் ஆகஸ்ட் 1993-ம் ஆண்டு உலக வங்கித் திட்டமாக "இரண்டாவது சென்னைக் குடிநீர் வழங்கும் திட்டம்" என்ற பெயரில் ரூ.464.00 கோடிக்கு ஒப்பளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் சென்னைக்கு ஒரு நாளைக்கு 190 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இவ்வொப்பளிப்பில் ரூ.60 கோடி, கீழ்க்கண்ட நீர் ஆதார மேம்பாட்டு வேலைகளை உள்ளடக்கியது.

(1) கீழ்க்கொள்ளிடம் அணைக்கட்டிலிருந்து வீராணம் ஏரிக்கு நீர் எடுத்துச் செல்லும் வடவாறு கால்வாயை மேம்படுத்தல்.

(2) வீராணம் ஏரியில் உள்ள திட்டுக்களை அகற்றுதல்; ஏரியின் உயரத்தை 2 அடி உயர்த்தி தற்போதைய கொள்ளளவான 935 மி.கன அடியிலிருந்து 1485 மி.கன அடியாக அதிகப்படுத்தல்.

(3) ஏரியின் மேற்கரையினை பலப்படுத்துதல்.

திருத்திய ஆட்சி ஒப்பளிப்பில் வடவாறு (1996 ஏப்ரல்) கால்வாயிலிருந்து பாசனத்திற்காக நீர் எடுத்துச் செல்லும் மற்ற கால்வாய்களை நவீனப்படுத்தும் உறுப்பும் இணைக்கப்பட்டு ரூ.110.95 கோடி நீர்வள ஆதார மேம்பாட்டு வேலைகளுக்கு ஒதுக்கப்பட்டது. இதன்மூலம் 56,034 ஏக்கர் (வடவாற்றில் 11,178 ஏக்கரும், வீராணம் ஏரியின் 44,856 ஏக்கரும் உள்ளடக்கியது) நிலத்திற்கு தடையின்றி பாசன வசதி செய்திட எதிர்நோக்கப்பட்டது.

முதலில் இப்பணி உலக வங்கியின் உதவியுடன் செயற்படுத்த திட்டமிடப்பட்டது. ஆனால், ஏரியிலிருந்து சென்னைக்கு நீர் எடுத்து வர ஆகும் செலவு மிகவும் அதிகமாக இருந்ததாலும், சென்னை நகருக்கு கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தின்மூலம் 12 டி.எம்.சி. (12.00 மி.கன அடி) எதிர்நோக்கப்பட்டதாலும், அரசு இத்திட்டத்தின் நோக்கத்தினை மாற்றி கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள வீராணம் ஏரியின் சார் நகரங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டமாகச் செய்து மாநில நிதியிலிருந்தே செயல்படுத்திட 1996 செப்டம்பரில் முடிவு

செய்தது. இத்திட்டத்தில் *25* தொகுப்புகள் உள்ளன. அவற்றின் மதிப்பீடுகளும் தற்போதைய நிலையும் கீழே தரப்பட்டுள்ளன:—

| வ. எண் | பணிகளின் விவரம் | தொகுப்பு களின் எண்ணிக்கை | மதிப்பு ரூபாய் கோடியில் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | வடவாறு கால்வாயினை மேம்படுத்துதல் | 6 | 27.15 | 5 தொகுப்புகளிலுள்ள வேலைகள் நடைபெறுகின்றன. ஒரு தொகுப்பின் ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யப்பட வேண்டும். |
| 2. | வீராணம் ஏரியின் முழு நீர்த்தேக்க மட்டத்தினை 2 அடி உயர்த்தி அதன் முக்கிய கரையினை பலப்படுத்துதல் | 4 | 12.58 | அனைத்து தொகுப்புகளிலும் வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. |
| 3. | தற்போதைய மேல்புறக் கரையினை பலப்படுத்துதல் மற்றும் புதிய மேற்புறக் கரை அமைத்தல் | 4 | 9.67 | அனைத்து தொகுப்புகளிலும் வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. |
| 4. | வடவாற்றின் 24 பாசனநீர் எடுத்துச் செல்லும் கால்வாய்களையும் வீராணம் ஏரியின் 34 கால்வாய்களையும் நவீனப்படுத்துதல் | 2 | 24.65 | மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. |
| 5. | வீராணத்தின் முக்கிய கரையின் மேல் தார்ச் சாலை அமைத்தல் | 2 | 4.58 | மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. |
| 6. | கீழ் அணைக்கட்டு மதகுகளை சீர்செய்தல் | 1 | 0.75 | பணி நடைபெற்று வருகிறது. |



| வ. எண் | பணிகளின் விவரம் | தொகுப்பு களின் எண்ணிக்கை | மதிப்பு ரூபாய் கோடியில் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 7. | வீராணத்தின் கீழ்மட்ட கலிங்கு, கோதாவரி வடிகால் மற்றும் மிகைபோக்கி மதகு மற்றும் யு.என்.எஸ். எஸ். மதகுகளை மேம்படுத்துதல், வடவாற்றின் குறுக்கே புதிய மதகினை அமைத்தல் | 4 | 30.83 | 2 தொகுப்புகளுக்கு மதிப்பீடு தயாரித்தலும், 2 தொகுப்புகளுக்கு ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்ய வேண்டிய நிலையில் உள்ளது. |
| 8. | பணியாளர் இல்லங்களை சீர்செய்தல் மற்றும் புதிய ஆய்வு மாளிகை கட்டுதல் | 2 | 0.74 | பணி கட்டட அமைப்பினால் செய்யப்பட்டு வருகிறது. |
| | **மொத்தம்** | **25** | **110.95** | |

மேற்கண்ட *25* தொகுப்புகளில், *15* தொகுப்புகளில் ரூ.*48.57* கோடிக்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. மேலும் *3* தொகுப்புகளுக்கு ரூ.*4.45* கோடிக்கான ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யும் தறுவாயில் உள்ளன. மீதமுள்ள ரூ.*57.93* கோடிக்கான *7* தொகுப்புகளுக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன.

## 22. மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையத்தின் கொள்கை விளக்கக் குறிப்பு

நிலநீர் வளத்தினை பல்வேறு வகைகளில் பெருக்குகின்ற மாநிலங்களில் முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு திகழ்கின்றது. பொதுப் பணித் துறையில் நீர்வள ஆதார அமைப்பின்கீழ் உள்ள மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையத்தின்கீழ், முறையான மற்றும் அறிவியல் பூர்வமான நிலநீர் ஆய்வு மற்றும் ஆய்வுப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், இம்மையம் விரிவான அறிவியல் ரீதியான நிலநீர் ஆய்வினை மேற்கொண்டு தமிழ்நாட்டில் நிலநீர் வளத்தினை தொடர்ந்து கணித்து வருகின்றது.

[2000 ஏப்ரல் 29

இவ்வகையில் சூலை 1997 வரை சுமார் 63 விழுக்காடு நிலநீர் வளம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்கருத்தினைக் குறிக்கோளாகக் கொண்டு பொதுப்பணித் துறையின்கீழ் இயங்கும் மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம், நிலத்தடி நீர் வளங்களை அவ்வப்போது •மதிப்பிடவும், பயன்படுத்தவும் நிலத்தடி நீர் நிர்வாகம் மற்றும் அதன் பெருக்கத்திற்கான ஆய்வுப் பணிகளை முறையாகவும் அறிவியல் அடிப்படையிலும் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இத்துறையினால் நடத்தப்பட்டு வரும் பலவகைப்பட்ட பணிகள் உள்ளடக்கிய நிலநீர் ஆய்வு பற்றிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

1. தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 1734 கிணறுகளில் (618 வறட்சிக் கிணறுகள் உட்பட) நீர் மட்டளவுகள் எடுக்கப்பட்டு, நீர் மட்ட ஏற்ற இறக்கம் பற்றிய அறிக்கைகள் தயாரித்தல். தமிழகத்தில் நிலநீரின் நிலைமை மற்றும் நீரின் தன்மை அறிவதற்காகவும், தொழிற்சாலை கழிவுநீர் மற்றும் விவசாயத்திற்கு உபயோகப்படுத்தும் உரம், பூச்சி மருந்து ஆகியவற்றால் நிலநீர் பாதிப்படைவதைக் கண்டறியவும், கடல்நீர் ஊடுருவலால் நீரின் தன்மை பாதிப்படைவதைக் கண்டறியவும் தமிழ்நாடு முழுவதற்கும் நீர் மாதிரிகள் சேகரிக்கும் கிணறுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அடிப்படை ஆய்விற்கு வருடத்திற்கு ஒரு முறையும், நிலநீர் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 3 மாதத்திற்கு ஒரு முறையும் நீர் மாதிரி சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்படுகிறது.

2. தமிழகத்தில் நிலநீரின் நிலைமை மற்றும் அதன் தன்மைகளை (3400 நீர் மாதிரிகள்) கண்காணித்தல்.

3. தமிழகத்தில் மண் பரிமாணத்திற்கு ஏற்ப 15 இடங்களில் நிறுவப்பட்ட நீர்ப்பிரி முகடுகளிலிருந்து நீரியல் மற்றும் வானிலைத் தொடர்பான விவரங்களைத் தொகுத்தல்.

4. மாநிலத்தின் பல்வேறு இடங்களில் உள்ள 445 மழையளவு நிலையங்களில் இருந்து காலந்தோறும் மழையளவு விவரங்களைச் சேகரித்து, மழை நீர் வரத்திற்கும் பூமியில் நீர் இழப்பிற்கும் உள்ள தொடர்பினைக் கண்டறிதல்.

5. புவியியல், புவி பௌதிகம் மற்றும் புவி மேற்பரப்பியல் ஆய்வுகளின் மூலமாக நிலநீர் வளம் உள்ள பகுதிகளைக் கண்டறிதல் (தீவிர ஆய்வு 85 ஒன்றியங்களில்).



2000 ஏப்ரல் 29]

6. வேளாண் மக்கள் அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு கிணறுகள் தோண்டுவதற்கு இடங்கள் தேர்ந்தெடுப்பதற்கும், ஏற்கெனவே உள்ள கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் ஆலோசனைகள் வழங்குதல்.

7. சிறுபாசனத் திட்டங்களை நிறைவேற்ற நிலநீர்ச் சான்று வழங்கல்.

8. கடலோரப் பகுதிகளில் உள்ள நீர்ப் படிவங்களில் (920 கி.மீ. அளவிற்கு) கடல்நீர் ஊடுருவலைச் சிறப்பாய்வு மூலம் கண்காணித்தல்.

9. நிலநீர் ஆய்விற்கான துளைக் கிணறுகள் (140 எண்கள்) துளையிடுதல்.

10. தமிழகத்திலுள்ள சுமார் 17,000 கிராமங்களில் நிலநீர் வளத்தினை மதிப்பிடும் பணியை தொடர்பணியாகச் செய்தல்.

2000-2001 ஆம் ஆண்டில் மேற்கண்ட பணிகளுக்காக ரூபாய் 1.14 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுமட்டுமல்லாமல், மற்ற திட்டப் பணிகளான அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பணியோடு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணி, நிலநீர் உபயோகிப்பவர்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல் மற்றும் புத்தூக்கப் பயிற்சிக்கான பணி, தன்மை மற்றும் மதிப்பீடு ஆய்வுப் பணி முதலியவற்றிற்கு ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்தில் மாநில திட்டக்கு ழுவினால் ஒப்புதல் வழங்கப்பட்டு, ரூபாய் 3 கோடி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப தேவைப் பணியுடன் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிக்காகவும், ரூபாய் 1.25 கோடி நிலநீர் உபயோகிப்பவர்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல் மற்றும் புத்தூக்கப் பயிற்சிப் பணிக்காகவும், ரூபாய் 10 இலட்சம் தன்மை மற்றும் மதிப்பீட்டு ஆய்வுப் பணிக்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 23. உலக வங்கி நிதியுதவியில் தமிழகத்தில் "நீரியல் திட்டம்"

தமிழகம் உட்பட எட்டு மாநிலங்கள் மற்றும் ஐந்து இந்திய அரசு நிறுவனங்களுக்கு நீரியல் திட்டம் ஒன்றினை உருவாக்கிச் செயல்படுத்த உலக வங்கி நிதி உதவ முன்வந்துள்ளது. இத்திட்டத்தின் குறிக்கோள் இந்திய அரசு நிறுவனங்கள் மற்றும் பங்குபெறும் மாநிலங்களில் உள்ள நீரியியல் சுழற்சி சம்பந்தப்பட்ட மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீரின் அளவு மற்றும் தன்மை பற்றிய விவரங்களையும் சேர்த்து விஞ்ஞானப் பூர்வமான எல்லா விவரக் குறிப்புகளையும் மேம்படுத்தி பயன்படுத்துவோர்க்கு பயன்பெறும் வகையில் கிடைக்கச் செய்வதாகும்.

[2000 ஏப்ரல் 29

இத்திட்டத்தினை தமிழகத்தில் செயல்படுத்த திட்டமிட்ட மதிப்பீடு ரூ.38.647 கோடி ஆகும். இத்திட்டத்திற்கான ஒப்பந்தம் உலக வங்கியுடன் 1995 செப்டம்பர் மாதம் ஏற்பட்டு டிசம்பர் 1995 முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் பருவம் 6 ஆண்டுகள் (1995-96 முதல் 2000-2001 வரை). இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.38.647 கோடிக்கு அரசு ஆட்சி ஒப்புதல் வழங்கியுள்ளது. தலைமைப் பொறியாளர் (நிலநீர்) பொ.ப.து. அவர்களின்கீழ் நீரியியல் திட்டம் செயல்படுத்த ஒரு மையம் (மாநில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்) ஏற்படுத்தப்பட்டு, செயல்பட்டு வருகின்றது. இத்திட்டம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

**மேற்பரப்பு நீர் பகுதி**

தமிழகத்தில் உள்ள ஆற்றுப் படுகைகளில் நீர்ப் போக்கு விவரங்களைச் சேகரிக்க 120 நீரளவு நிலையங்கள் அமைத்தல், 116 பெரிய ஏரிகளில் கொள்ளளவு மற்றும் நீரளவு அறிய தானியங்கி நீரளவு பதிப்பான் கருவிகள் பொருத்துதல், வானியல் தொடர்பான விவரங்களைச் சேகரிக்க 24 வானிலை தட்பவெப்ப நிலையங்கள், 42 மழை அளவு நிலையங்கள், 3 வானிலை நிலையங்கள் ஆகியவை அமைத்தல், நீரின் தன்மை சோதனை செய்ய 15 நீர் தன்மை பரிசோதனைச் சாலைகள் மற்றும் 15 வண்டல் மண் ஆய்வு நிலையங்கள் அமைத்தல், மேற்பரப்பு நீர் ஆய்வு செய்ய 71 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, நீர் மாதிரிகள் மாதம் ஒரு முறை ஆற்று நீர் பாயும் காலங்களில் சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்படுகிறது. அலுவலகக் கட்டடங்கள் (4 கோட்டங்கள், 12 உப கோட்டங்கள் மற்றும் 60 பிரிவு அலுவலகங்கள்) கட்டுதல், 41 தள கருவி பண்டசாலை கட்டடங்கள் கட்டுதல், 24 வாகனங்கள் வாங்குதல் போன்றவை நீரியல் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படவுள்ளன.

**நிலத்தடி நீர் பகுதி**

இத்திட்டத்தின்கீழ் தற்போதுள்ள ஆய்வுக் கிணறுகளில் நீர் மட்ட அளவுகளை சேகரிப்பது மற்றும் புதிதாக கடினப் பாறைப் பகுதிகளில் 669 ஆழ்துளைக் கிணறுகள், படிவப் பாறை பகுதியில் 65 ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து நிலத்தடி நீரின் தன்மை, நீர் நிலை மாற்றம் ஆகியவைகளைச் சேகரித்தல்.

10 தட்ப வெப்ப நிலையங்களை மேம்படுத்தி நீர் நிலை மாற்றங்களின் விவரம் சேகரித்தல், 4 ஆற்றுப் படுகைகளில் தட்பவெப்ப நிலையங்கள் ஏற்படுத்துதல், நீரின் தன்மை அறிய 4 புவிவேதியியல் ஆய்வகக் கட்டடங்கள் அமைத்தல், ஒருங்கிணைந்த புள்ளிவிவர மையக் கட்டடம் அமைத்தல், 30 வாகனங்கள் வாங்குதல் போன்றவை இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளன.



2000 ஏப்ரல் 29]

**சாதனை விவரம்**

**மேற்பரப்பு நீர் தொகுதி**

மொத்தமாக அமைக்கப்படவுள்ள 120 நீரளவு நிலையங்களில், 116 நிலையங்களின் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 4 பணிகள் 2000 மார்ச் மாதத்திற்குள் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மொத்தம் 116 ஏரிகள் நீர்மட்டம் கொள்ளளவு விவரம் சேகரிக்க ஏரிகளில் தானியங்கி நீரளவு பதிப்பான் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. அனைத்து மழையளவு நிலையங்கள், தட்ப வெப்ப நிலையங்கள், தானியங்கி வானிலை நிலையங்கள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. நீரியியல் திட்டத்தின்கீழ் எல்லா (15) நீரின் தன்மை மற்றும் (15) வண்டல் மண் ஆய்வு நிலையங்களும் தளவாடங்களும், பண்டசாலைகளும் (41) அமைக்கப்பட்டுள்ளன.

நீரியியல் திட்டத்தின்கீழ் இதுவரை 4 கோட்ட அலுவலகங்கள் 11 உப கோட்டங்கள், 58 பிரிவு அலுவலகக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, இயங்கி வருகின்றன. பூண்டி நீரியியல் ஆய்வு மையத்தில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**நிலநீர் தொகுதி**

கடினப்பாறை பகுதியில் அனைத்துக் ஆழ்துளைக் கிணறுகள் (669 எண்கள்) அமைக்கும் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. படிவப் பாறை பகுதியில் 65 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது. ஆழ்துளைக் கிணறுகளின் நீர்மட்டம் கவனிப்பதற்காக 603 தானியங்கி நீரளவு பதிப்பான் கருவிகள் வாங்கப்பட்டு 513 எண்கள் ஆழ்துளைக் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ளன. மீதி 90 கருவிகள் 2000 மார்ச் மாதத்தில் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நீரியியல் திட்டத்தின் கீழ் 4 புவிவேதியியல் பரிசோதனை சாலைக் கட்டடங்கள் முடிக்கப்பட்டு, இயங்கி வருகின்றன. பரிசோதனைச் சாலைகளில் தூய்மைக் கேடு பற்றி ஆராய உரிய கருவிகள் வைக்கப்பட்டுள்ளன.

[2000 ஏப்ரல் 29

**நிதிநிலை சாதனை**

1999-2000 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீடு ரூ.8.10 கோடி. பிப்ரவரி 2000 மாதம் முடிய ரூ.6.82 கோடி சிவில் பணிகள், கருவி தளவாடங்கள் மற்றும் தொடர் செலவினம் ஆகிய பணிகளுக்கு செலவிடப்பட்டுள்ளது. இதுவரை நீரியல் திட்டத்தில் . மொத்தமாக ரூ. 26.25 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

**2000-01 திட்டம்**

நீரியியல் திட்டத்தின்கீழ் கீழ்குறிப்பிட்டுள்ள பணிகள் நிலநீர் தொகுதி மற்றும் மேற்பரப்பு நீர் தொகுதி ஆகியவைகளில் மேற்கொள்ளப்படும்.

**நிலநீர் தொகுதி**

120 ஆழ்துளைக் கிணறுகள் கடினப்பாறை மற்றும் படிவப் பாறை பகுதிகளில் அமைக்கப்படும். மேலும், ஒரு வட்ட அலுவலகம், 5 கோட்ட அலுவலகக் கட்டடங்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. (செலவினம் ரூ.2.75 கோடி.)

**மேற்பரப்பு நீர் தொகுதி**

16 புதிய நீரளவு நிலையங்கள், 3 தானியங்கி தட்பவெப்ப நிலையங்கள், 2 முழு தட்பவெப்ப நிலையங்கள், 2 லெவல்-1 பரிசோதனைச் சாலை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. (செலவு ரூ. 10.00 இலட்சம்.)

மேலும், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளின்கீழ் அணைகளின் வண்டல் தன்மை, வெள்ளத்தை முன்கணிப்பது ஆகிய பணிகள் 2000-2001-ல் மேற்கொள்ளப்படும்.

**கொள்முதல் (நிலநீர் மற்றும் மேற்பரப்பு நீர் தொகுதி)**

ஏ பிரிவு கணினிகள் 26 எண்கள், பி பிரிவு கணினிகள் 2 எண்கள், ஆராய்ச்சி கருவிகள், 151 தானியங்கி நீரளவைப் பதிப்பான்கள், 2 தட்பவெப்ப நிலைய கருவிகள், 3 தானியங்கி தட்பவெப்ப அளவைக் கருவிகள், 2 ஊர்திகள் வாங்கப்படும். (செலவினம் ரூ. 3.20 கோடி.)



2000 ஏப்ரல் 29]

மேற்கூறிய பணிகள் செயலாக்குவதற்கு ரூ.9.36 கோடி 2000-2001 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது.

| | | | ரூ. கோடியில் |
|---|---|---|---|
| 1. | சிவில் பணிகள் (மேற்பரப்பு நீர் பகுதி) | .. | 0.100 |
| 2. | சிவில் பணிகள் (தரைநீர் பகுதி) | .. | 2.750 |
| 3. | கொள்முதல் (மேற்பரப்பு நிலநீர் பகுதி) | .. | 3.201 |
| 4. | தொடர் செலவினம் | .. | 3.308 |
| | மொத்தம் | | **ரூ. 9.359 (அ) 9.36 கோடி** |

**24 அணை பாதுகாப்பு திட்டம்**

தமிழ்நாட்டில் அணை பாதுகாப்பு திட்டம் 1991ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. கட்டுமான விதிமுறைகளுக்கு ஏற்ப அணைகளின் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் இத்திட்டம் தொடங்கப்பட்டது. செப்டம்பர், 1997-க்குள் முடிப்பதாக இத்திட்டம் திட்டமிடப்பட்டது. இத்திட்டம் உலக வங்கியின் நிதி உதவியுடன் எடுத்துக்கொள்ளப்பட்டது. ரூ.41.85 கோடிக்கான இத்திட்டம் தமிழக அரசினால் 1992ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டது.

இத்திட்டம் கீழ்க்கண்ட மூன்று பகுதிகளைக் கொண்டதாகும்:—

1. அணை பாதுகாப்பு இயக்கத்தினை பலப்படுத்துதல்
2. அணைகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல்
3. அணைகளைப் புனரமைத்தல்

அணை பாதுகாப்பு இயக்கத்தினை பலப்படுத்தலின்கீழ் உலக வங்கியின் பரிந்துரைகளின்படி தொழில்நுட்ப மற்றும் இதர அலுவலர்களுடன் இயக்ககம் உருவாக்கப்பட்டது. இந்த நிறுவனத்தின் முக்கிய பணிகள், உள்ளமைப்பு வசதிகள், பருவ கால அறிக்கைகள் மூலம் அணைக்கட்டுகளின் நிலைமைகளை பரிசீலித்தல் மற்றும் செயல்படுத்தப்படும் புனரமைப்புப் பணிகள்குறித்து பரிசீலித்து ஆலோசனை வழங்குதல் மற்றும் தீர்வு செய்தல் ஆகும்.

[2000 ஏப்ரல் 29

அணைகளுக்கு அடிப்படை வசதிகள் செய்தலின் கீழ் அணைகளுக்குக் கூடுதல் மின் வசதி செய்தல், அணுகு சாலைகள் அமைத்தல் விரைவு மற்றும் அதிவிரைவு தொலைத் தொடர்பு வசதிகள் செய்தல், நவீன பாதுகாப்பு மற்றும் சோதனைப் கருவிகளைப் பொருத்துதல் ஆகியவை செய்யப்பட்டன.

அணைகளைப் புனரமைத்தலின்கீழ் அணை பாதுகாப்பு மற்றும் மறு ஆய்வுக் குழுவின் பரிந்துரைகளின்படி நீரியல் மற்றும் கட்டுமானத் தேவைகளுக்கேற்ப புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

செப்டம்பர் 1998 முடிய 22.82 கோடி அணை பாதுகாப்பு நிர்வாக செலவுகள், விரைவு மற்றும் அதிவிரைவு தொலைத் தொடர்பு இணைப்புகளை அலுவலகங்கள் மற்றும் அணைகளுக்குக் கொடுத்தல், கூடுதல் மின்வசதி மற்றும் கால நிலை அறியும் நிலையங்கள் மற்றும் கருவிகள் அமைத்தல் மற்றும் புனரமைப்புப் பணிகள் செய்தல் ஆகியவற்றிற்காக செலவு செய்யப்பட்டது.

அணை பாதுகாப்பு திட்டத்திற்கான உலக வங்கியின் நிதியுதவி செப்டம்பர் 1998 வரை நீட்டிக்கப்பட்டது.

கோமுகி, சாத்தனூர், வீடூர், சோலையாறு, விலிங்டன் அணைகளில் மீதமுள்ள தொடர் புனரமைப்புப் பணிகள் மாநில நிதியுதவியினால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

'இந்நிலையில் மத்திய நீர் ஆணையம் (CWC) கேட்டுக் கொண்டபடி அணை பாதுகாப்பு மற்றும் புனரமைப்புப் பணிகளை ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ள உலக வங்கியில் நிதியுதவி கோரி, ரூ.118.50 கோடிக்கான திட்டம் தமிழக அரசினால் மத்திய நீர் ஆணையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

30-11-1999 தேதியிட்டு ஓர் கடிதம் மத்திய நீர் ஆணையத்திலிருந்து வரப்பெற்றது. அதில் அணை பாதுகாப்புத் திட்டம் 1-ஐ திருத்தியமைக்கப்பட்டபோது, எடுக்கப்படாமல் நீக்கப்பட்ட 10 அணைகளில் செய்யப்பட வேண்டிய புனரமைப்புப் பணிகளைச் செய்யத் தேவைப்படும் தொகை மற்றும் உலக வங்கி 30-9-1998-ல் நிறுத்திவிட்டபோது, இரு அணைகளில் செய்து முடிக்கப்பட வேண்டிய புனரமைப்புப் பணிகளின் தொகையையும் சேர்த்து ஒரு மதிப்பீட்டினை அனுப்பி வைத்தால் அணை பாதுகாப்புத் திட்டம்-11-ல் சேர்க்க ஏதுவாக இருக்கும் என்று தெரிவித்தது. அதன்படி ரூ.60 கோடிக்கு ஒரு கருத்துரு 24-12-1999-ல் மத்திய நீர் ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்கொண்டு உத்தரவு எதிர்பார்க்கப்படுகிறது.



2000 ஏப்ரல் 29]

## 25. பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் ஒப்பந்தம்-ஆய்வு

தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இரண்டு மாநிலங்களும் ஆனைமலையாறு, நீராறு, சோலையாறு, பரம்பிக்குளம்-பாலாறு ஆழியாறு மற்றும் இவற்றில் இணையும் ஆறுகளின் நீரை மின்சாரம் தயாரிக்கவும், பாசனத்திற்கும், குடிநீர் விநியோகத்திற்கும், தொழிற்சாலைகளுக்கும் பயன்படுத்த இவ்விரு அரசுகளுக்கிடையே 9-11-1958 முதல் செயல்படுத்தக்கூடிய ஓர் ஒப்பந்தம் 29-05-1970-ல் கையெழுத்தானது. ஒப்பந்த விதிகளின்படி 9-11-1958 முதல் ஒவ்வொரு 30 ஆண்டுகளுக்குப் பிறகும் அக்கால அனுபவத்தின் அடிப்படையில் இருசாரார் ஒப்புதலின்பேரில் ஒப்பந்தம் மறுபரிசீலனைக்குட்பட்டது.

இதன்படி இரு அரசுகளும் 21-9-1989 அன்று தங்களது ஆவணங்களை பரிமாற்றிக்கொண்டு அமைச்சர்கள் மட்டத்தில் பலமுறை பேச்சு வார்த்தைகள் நடத்தின. பரம்பிக்குளம், ஆழியாறு ஒப்பந்தத்தை ஆய்வு செய்து ஒரு விவரமான அறிக்கை தயாரிக்க இருமாநில அரசு அலுவலர்களைக் கொண்டு ஒரு குழுமம் அமைக்கப்பட்டது. இக்குழுமம் திருவனந்தபுரம் மற்றும் அட்டகட்டி ஆகிய இடங்களில் கூடி பேசியபோதிலும், எந்த முடிவுக்கும் வர இயலவில்லை. கேரள அரசு பரிசீலிக்க வேண்டியவை.

1. இடமலையாறு புனல் மின் திட்டத்தினை செயலாக்கியதன் முகமாக, ஒப்புக்கொண்டபடி 2.5 டி.எம்.சி தண்ணீரை ஆனைமலையாற்றிலிருந்து பரம்பிக்குளம்-ஆழியாறு பாசன அமைப்பிற்குத் திருப்பி விடுவதை ஏற்க வேண்டும்.

2. ஒப்பந்தத்தின்படி இடமலையாறு மற்றும் இடுக்கி திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதால், மேல் நீராறு தண்ணீர் முழுவதையும் எவ்வித தடையுமின்றி அக்டோபர் முதல் ஜனவரி முடிய தமிழகத்தில் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும்.

3. மனக்கடவு மதகிற்கு சேமித்து பாசன உறுதி செய்திடும் வகையில், ஒரு சமநிலை நீர்த்தேக்கம் அமைக்க கேரளம் இசைவு அளிக்க வேண்டும்.

4. மேல் நீராறு நீரை ஒரு குகைப் பாதை வழியாக நல்லாறு கொண்டுவந்து அங்கு ஒரு புனல் மின் நிலையம் அமைத்து வெளிவரும் நீரை திருமூர்த்தி அணைக்குத் திருப்புவதற்கான புதிய திட்டத்திற்கு இசைவு அளிக்க வேண்டும்.

[2000 ஏப்ரல் 29

*5. கேரளத்தில் சித்தூர்புழா வடிநிலத்தின் தேவைக்கு தமிழகத்திற்குரிய 2.5 டி.எம்.சிக்கு மேல் உள்ள நீரை ஆனைமலையாற்றிலிருந்தோ அல்லது தேக்கடியாற்றிலிருந்தோ திருப்பிக்கொள்ள வேண்டும்.*

கடந்த 28-11-1996-ல் மாநில அமைச்சர்கள் மட்டத்தில் சென்னையில் இருதரப்புப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மேற்கண்ட கோரிக்கைகளின் மீது எந்த முடிவும் எடுக்கப்படாததால் மீண்டும் கூடிப் பேச தீர்மானிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து தமிழக அரசு மீண்டும் கூடிப் பேச தீவிர முயற்சி எடுத்து வருகிறது. இதுவரை கேரள அரசு இக்கூட்டத்திற்கு நாள் நிர்ணயிக்கவில்லை. இதுகுறித்து தமிழக அரசு தொடர்ந்து முயற்சி எடுத்து வருகிறது.

**26. பாண்டியாறு-புன்னம்புழா திட்டம்**

பன்னாட்டு நதியான பாண்டியாறு-புன்னம்புழா தமிழ்நாட்டில் தோன்றி கேரள மாநிலத்தில் உள்ள சாளியாற்றில் கலக்கிறது. மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளான பாண்டியாறு - புன்னம்புழா நீலகிரி மலையில் உள்ள உயர்ந்த சிகரங்களில் தோன்றி கூடலூர் நகரத்திற்கு 5 கி.மீ. மேற்கே இணைகின்றன. இந்த இணைப்புக்குக் கீழ் இந்த ஆறு புன்னம்புழா என்று அழைக்கப்படுகிறது. இந்த ஆறு கேரள மாநிலத்தில் நிலாம்பூர் அருகே சாளியாற்றுடன் கூடுகிறது. கடைசியாக இந்த ஆறு "பேபூர்" என்ற இடத்தில் அரபிக்கடலில் கலக்கிறது. இந்தத் திட்டத்திற்கான தளம் ஊட்டி-மைசூர் நெடுஞ்சாலையில் அமைந்த கூடலூர் நகரம் ஆகும்.

தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்கள் 1965ஆம் ஆண்டு இணைந்து சம்மதித்தபடி பாண்டியாறு-புன்னம்புழா நீர் மின் திட்டம் மேற்கு நோக்கிப் பாயும் பாண்டியாறு-புன்னம்புழா ஆறுகளின் 171.38 ச.கி.மீ. (66.20 ச.மைல்) பரப்புடைய நீர்பிடிப்பு பரப்பிலிருந்து கிடைக்கப்பெறும் சராசரி 14 டி.எம்.சி. தண்ணீரை 500.50 மீ. (1642 அடி) உயரத்திலிருந்து கிடைக்கும் நீர் விசையைப் பயன்படுத்தி முதல் கட்டமாக 100 மெ.வா. (2 x 50 மெ.வா) மின்சாரம் தயாரிக்கவும், இறுதியாக 150 மெ.வா. மின்சாரம் தயாரிக்கவும் திட்டம் தீட்டப்பட்டது. இதனால் 409 மி.யூ. ஆண்டு சராசரி மின்சாரம் கிடைக்கும். திட்டக் குழுமம் இத்திட்டத்திற்கு 1968-ல் ஒப்புதல் அளித்தது.

அதன் பிறகு, கோவை மாவட்ட விவசாயிகள் பாண்டியாறு - புன்னம்புழா திட்டத்தினால் கிடைக்கும் தண்ணீரை தமிழ்நாடு



2000 ஏப்ரல் 29]

பயன்பெறும்வண்ணம் பவானி ஆற்றின் கிளையாறான மோயாற்றில் இணைக்கும் திட்டத்தைச் செயல்படுத்தவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயக் கேட்டுக் கொண்டதன்பேரில், பரிசீலனை செய்ததில் இந்தத் திட்டத்தையும் செயல்படுத்த முடியும் என்று தெரிந்தது. தமிழ்நாடு குறைந்தபட்சம் 7 டி.எம்.சி. தண்ணீரையாவது தமிழ்நாட்டிற்கு திருப்பிவிட விரும்பியது.

கடந்த 28-11-1996-ல் சென்னையில் நடைபெற்ற கேரளம் மற்றும் தமிழ்நாடு பாசனத் துறை அமைச்சர்கள் பேச்சுவார்த்தையின்போது, பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தில் மின் உற்பத்திக்குப் பிறகு வெளியேறும் நீரில் கோயம்புத்தூர்-ஈரோடு மாவட்டங்களில் வறட்சிப் பகுதிகளில் குடிநீர் மற்றும் பாசனத்திற்குத் தேவையான நீர் எதிர்நோக்கி குறைந்தது 7 டி.எம்.சி.யாவது தமிழ்நாட்டுக்குத் திருப்ப அனுமதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது. திட்டத்திற்கான அறிக்கையை பரிசீலித்த பிறகு அதன் மீது கருத்து தெரிவிப்பதாக கேரளா தெரிவித்தது.

பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தை தமிழ்நாடு மின்வாரியம் இரண்டு கட்டங்களாக நிறைவேற்ற தயாரித்துள்ளது. முதல் கட்டத்தில் கிடைக்கும் 14 டி.எம்.சி. நீரில் 50 விழுக்காடான 7 டி.எம்.சி.யை பயன்படுத்தி 2 x 50 மெகா வாட் மின்சாரம் தயாரித்தபின் அந்த நீரை கேரளத்திற்குத் திருப்பிவிடுவது. அப்போதே 7 டி.எம்.சி. நீரை தமிழ்நாட்டிற்குத் திருப்பிவிடும் பணி தொடங்கப்படும். இரண்டாவது கட்டத்தில் திருப்பிவிடப்பட்ட 7 டி.எம்.சி. நீரை தமிழ்நாட்டில் சிகூர் வடிநிலத்தில் 2 x 30 மெகாவாட் மின்சாரம் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டது. மின் உற்பத்திக்குப்பின் வெளியேறும் நீர் தமிழ்நாட்டில் மோயார் ஆற்றில் கலக்கும். இரண்டு கட்டப்பணிகளும் ஒரே நேரத்தில் தொடர்ச்சியாக எடுத்து செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின்வாரியம் இதற்கான திட்ட அறிக்கையைத் தயார் செய்து, இத்திட்டச் செயலாக்கத்தினை கேரள அரசின் ஒத்திசைவிற்காக 1998 செப்டம்பரில் அனுப்பியது. கேரள அரசு தனது இசைவினை தெரிவிக்காததோடு கிழக்கு நோக்கி 7 டி.எம்.சி. தண்ணீரைத் திருப்பிவிடுவதற்கும் ஒத்துக்கொள்ளவில்லை. தமிழ்நாடு அரசு தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது. தமிழ்நாடு அரசு ஏப்ரல் 1998-ல் இத்திட்டத்தை தேசிய நீர்விசைக் கழகத்தை, எடுத்துச் செயல்படுத்துவதற்கு கேட்டுக் கொண்டது. தமிழ்நாடு அரசு இதுகுறித்தும் தொடர் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

[2000 ஏப்ரல் 29

## 27. தேசிய தொலைநோக்கு திட்டத்தில் தீபகற்ப ஆறுகள் இணைப்பு திட்டம்

### (அ) மகாநதி-கோதாவரி-கிருஷ்ணா-பெண்ணாறு-காவிரி-வைகை-குண்டாறு இணைப்புகள்

தென்னிந்திய நதிகளான மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணாறு, பாலாறு, காவிரி, வைகை மற்றும் குண்டாறு ஆகிய ஆறுகளை இணைக்கும் கருத்து மத்திய அரசு தயாரித்துள்ள தேசிய தொலைநோக்குத் திட்டத்தில் தீபகற்ப ஆறுகள் இணைப்புத் திட்டத்தில் இடம் பெறுகிறது. இவ்விணைப்புப் பணிகளுக்கான ஆய்வு அறிக்கைகளை தேசிய நீர்வளக் குழுமம் தயாரித்து வருகின்றது.

இதுவரை மகாநதி - கோதாவரி, கோதாவரி-கிருஷ்ணா, கிருஷ்ணா-பெண்ணாறு, பெண்ணாறு-காவிரி இணைப்புகளுக்கான முதல்நிலை அறிக்கையினை தேசிய நீர் மேம்பாட்டு முகமை தயாரித்துள்ளது. இம்முகமை உபரி மற்றும் பற்றாக்குறை படுகைகளைத் தெரிந்தெடுத்து மகாநதி மற்றும் கோதாவரி ஆறுகளிலிருந்து உபரி நீரை கிருஷ்ணா, பெண்ணாறு, காவிரி மற்றும் வைகை படுகைகளுக்கு திருப்பிவிடலாம் என்று தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தின்படி, மகாநதி மற்றும் கோதாவரி ஆறுகளின் உபரி நீர் ஆந்திரப் பிரதேசத்திலுள்ள பெண்ணாற்றுக்குத் திருப்பி விடப்படும். பெண்ணாற்றிலிருந்து காவிரிக்கு திருப்பிவிடப்படும் நீர் சுமார் 534 கி.மீ. நீளமுள்ள இணைப்புக் கால்வாய் வழியாக சோமசிலா அணைக்கட்டிலிருந்து, சுமார் 9455 மி.க.மீ (334 டி.எம்.சி.) பெண்ணாற்றின் உபரிநீர் காவிரி ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள கல்லணைவரை திருப்பப்படும். இணைப்புக் கால்வாய் ஆரம்பிக்கும் சோமசிலா அணை முதல் தமிழகத்தின் கல்லணைவரை இடைப்பட்ட ஆந்திரம் மற்றும் தமிழ்நாட்டு பகுதிகளின் பாசனம், குடிநீர் போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்யும். மேலும், சுமார் 3855 மி.க.மீ (136.1 டி.எம்.சி) அளவு நீர் கல்லணைப் பகுதியில் விடப்படும். அது காவிரி வடிநிலப்பகுதி மற்றும் காவிரி படுகைக்குத் தெற்கே அமைந்துள்ள பகுதிகளில் பாசனத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும்.

காவிரி-வைகை-குண்டாறு இணைப்பானது இணைப்புத் திட்டத்தின் கடைசி அங்கமாகும். இந்த இணைப்பின் நோக்கம் காவிரியில் கிடைக்கப்பெறும் 3855 மி.க.மீ. (136.1 டி.எம்.சி) அளவு நீரில் 2252 மி.க.மீ.



2000 ஏப்ரல் 29]

(79.5 டி.எம்.சி.) அளவு நீரை காவிரியின் தெற்கில் குண்டாறு வரையில் உள்ள பகுதிகளின் பாசனம் மற்றும் குடிநீர் வசதிகளுக்காகத் திருப்புவதே ஆகும்.

தீபகற்ப நதிகளின் இணைப்புத் திட்டத்தினை விரைவில் செயலாக்க தமிழ்நாடு அரசு மிகுந்த ஆர்வம் காட்டுகிறது. 30 ஆண்டு தொலைநோக்குத் திட்டத்தின் கால அளவினை விரைவுபடுத்தி நதிகளின் இணைப்புத் திட்டத்தைச் செயலாக்கிட தமிழ்நாடு அரசு தேசிய நீர் மேம்பாட்டு முகமையை கேட்டுக் கொண்டுள்ளது. பம்பா-அச்சன்கோவில்-வைப்பாறு, நேத்ராவதி, ஹேமாவதி, போன்ற சாத்தியமாகும் நதி இணைப்புத் திட்டங்களை அவற்றின் சாத்தியக் கூறு அறிக்கை தயாரானதும் தேவையான சம்பிரதாயங்களை உள்ளடக்கி, மற்ற பணிகளுக்கான சாத்தியக்கூறு அறிக்கைக்குக் காத்திராமல் செயலாக்கிடவும் கோரியுள்ளது. இதுதொடர்பாக தமிழக அரசு மகாநதியிலிருந்து வைகைக்கு நீர் கொண்டுவரும் கருத்துரு பற்றிய சுருக்க அறிக்கையின் மீது தனது முடிவான குறிப்புகளை அனுப்பியுள்ளது. அதில் பற்றாக்குறை வடிநிலங்களுக்கு ஆண்டுதோறும் பாசன மொத்த சாகுபடி பரப்பின் 30 விழுக்காடு அளவிற்காவது வழங்கப்பட வேண்டும் என்று நீர் மேம்பாட்டு முகமை ஏற்படுத்தியுள்ள கொள்கையை அடிப்படையாகக் கொண்டு பார்க்கின், காவிரி படுகைக்கு மட்டும் வந்து சேரும் தண்ணீரின் அளவு குறைவாக இருப்பதைச் சுட்டிக்காட்டி, ஏற்றுகொள்ளப்பட்ட குறைந்தபட்ச தண்ணீர் கிடைப்பதை உறுதி செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது. அத்துடன் காவிரியில் நீர் இருப்பை அதிகப்படுத்த மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளைத் திருப்பி விடும் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்றும், தற்போது நடைமுறையில் உள்ள ஒப்பந்தங்கள் மற்றும் தீர்ப்பாயத்தின் தீர்ப்பு ஆகியவற்றிற்குட்பட்டே நதிகளை இணைக்கும் திட்டக் கருத்துரு இருத்தல் வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இப்பொருள் குறித்து அரசு தீவிர தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும்.

### (ஆ) மேற்கு நோக்கிப் பாயும் கேரள ஆறுகளின் உபரி நீரைத் தமிழ்நாட்டிற்குத் திருப்புதல்

நீர்வள மேம்பாட்டுக்காக மைய அரசால் தயாரிக்கப்பட்டுள்ள தேசிய தொலைநோக்குத் திட்டத்தில் தீபகற்ப ஆறுகளை இணைத்தல் ஓர் அங்கமாக உள்ளது. அதில் மேற்கு நோக்கிப் பாயும் கேரள ஆறுகளின் உபரி நீரைத் தமிழகத்திற்குத் திருப்பும் திட்டமும்

அடங்கியுள்ளது. தீபகற்ப ஆறுகளை இணைக்கும் பணிக்காக திட்ட ஆய்வுகளை மேற்கொள்வதற்காக தேசிய நீர்வள குழுமத்தை மைய அரசு அமைத்துள்ளது.

இதன்படி தேசிய நீர்வளக் குழுமம் ஆறுகள் அனைத்திலும் ஆய்வினை மேற்கொண்டு இணைப்புத் திட்டத்திற்கான அறிக்கைகளைத் தயாரித்து வருகிறது. இதுவரை மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில் கேரளத்தில் பம்பா மற்றும் அச்சன்கோவில் ஆறுகளில் உபரி நீர்வளத்தை தமிழ்நாட்டுக்குத் திருப்பும் பம்பா-அச்சன்கோவில்-வைப்பாறு இணைப்புத் திட்டத்தை தேசிய நீர்வளக் குழுமம் தயாரித்துள்ளது.

பம்பா-அச்சன்கோவில்-வைப்பாறு இணைப்புத் திட்டத்தின்படி இரண்டு இயல்பான நீர்த்தேக்கங்கள், ஒரு விசை இறைப்பானால் நிரப்பப்படும். நீர்த்தேக்கம், மின்உற்பத்திக் கேந்திரங்கள் மற்றும் தமிழ்நாட்டுக்கு நீரைக் கொண்டு வருவதற்கு சுமார் 50 கி.மீ. நீளமுள்ள கால்வாய் ஆகியவை அமைக்கப்படும். திட்டத்தின்படி சுமார் 22 டி.எம்.சி. அளவு நீர் தமிழ்நாட்டிற்கு திருப்பப்பட்டு அதனால் கோவில்பட்டி, சங்கரன்கோவில், சிவகிரி, திருவில்லிப்புத்தூர், ராஜபாளையம், சாத்தூர் மற்றும் தென்காசி வட்டங்களில் சுமார் 91,400 எக்டேர் நிலம் பாசன வசதி பெறும். தமிழ்நாட்டிற்கு பாசன வசதியுடன் ஆண்டுக்கு சுமார் 1114 மில்லியன் யூனிட் மின் உற்பத்தியும் கேரளத்திலுள்ள வெம்பாடு ஏரியின் உப்புத் தன்மையைப் போக்கவும் மற்றும் கேரளத்தில் குடிநீர் வசதியும் இத்திட்டத்தில் சொல்லப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு சுமார் ரூ.1398 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டதுடன் இத்திட்டத்திற்கு தேசிய நீர்வளக் குழுமத்தின் ஒப்புதலைப் பெற நடவடிக்கை எடுத்துள்ளது.

இத்திட்டத்தினை கேரள அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. கேரள ஆறுகளில் உபரிநீர் ஏதும் இல்லையென்றும் கேரள ஆறுகளிலிருந்து நீரை வெளியே கொண்டு சென்றால் அதனால் கேரளத்தின் வளமும் சுற்றுச் சூழல் நிலையும் கெட்டுவிடும் என்றும் கேரளம் கருதுகின்றது.

ஆறுகள் இணைப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் மாநிலங்களின் கருத்தை மாற்றவும் இணைப்புத் திட்டங்களுக்கு சம்பந்தப்பட்ட மாநிலங்களின் ஒப்புதலைப் பெறவும் மத்திய அரசு ஒரு துணைக் குழுவை அமைத்துள்ளது. அக்குழுமம் பம்பா-அச்சன்கோவில்-வைப்பாறு



இணைப்புக்கு கேரளத்தின் ஒப்புதலைப் பெற நடவடிக்கை எடுக்கும் என தமிழ்நாடு அரசு எதிர்பார்க்கின்றது. இது தொடர்பாக ஜனவரி 1999-ல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், இந்த இணைப்பு கருத்துருவுக்கு கேரள அரசின் ஒத்திசைவைப் பெற்றுத்தர மாண்புமிகு பாரதப் பிரதமரை கோரியுள்ளார். தமிழ்நாடு அரசும் கேரள அரசின் ஒப்புதலைப் பெற தேவையான தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இத்திட்டத்தின் மேல் கேரள அரசு தனது கருத்தினைத் தெரிவிக்காமல் அதிக காலம் கடத்துவதை தமிழகம் சுட்டிக்காட்டியதைக் கருத்தில் கொண்டு 2-7-1999 அன்று டெல்லியில் நடைபெற்ற தேசிய நீர் மேம்பாட்டு முகமையின் தொழில்நுட்ப அறிவுரைக் குழுவினது 29-வது கூட்டத்தில், இவ்விணைப்புத் திட்டத்தின் நீர் இருப்பு அறிக்கையை ஏற்றுக் கொண்டது. இந்நிலையில் தமிழக அரசு மறுபடியும் தேசிய நீர் மேம்பாட்டு முகமைக்கு இவ்விணைப்புத் திட்டம் தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கையாக தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களுக்கிடையே தேவையான ஒப்பந்தம் செய்து கொள்ளவும், அதே நேரத்தில் விரைந்து செயல்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கையைத் தயார் செய்ய நடவடிக்கை எடுக்கவும் ஒரு கூட்டத்தை நடத்தக் கேட்டு எழுதியுள்ளது.

## 28. காவிரி டெல்டா பாசனத் திட்டத்தை நவீனப்படுத்துதல்

காவிரி டெல்டா பாசனம் சுமார் 2000 ஆண்டுகள் பழமையானது. இதிலுள்ள அடிப்படை வசதிகள் நவீனப்படுத்தப்பட்டால்தான் இப்பாசனத் திட்டம் திறம்பட செயல்படும். முதன் முதலில் 1970ஆம் ஆண்டில் தமிழக அரசு வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் வடிகால்கள் புனரமைப்பு உள்ளிட்ட காவிரி டெல்டா பாசனத் திட்ட நவீன மயமாக்கும் பணிக்கு ஒரு பெரும் திட்டம் (மாஸ்டர் பிளான்) தீட்டியது. பன்னாட்டு நிதியுதவி பெறும் நோக்கத்தில் இத்திட்டம் தயாரிக்கப்பட்டது. இருந்தாலும் மாநிலங்களுக்கிடையே பிரச்சினை உள்ளதால் இத்திட்டத்திற்கு மைய அரசின் நீர்வள அமைச்சகத்தின் இசைவு கிடைக்காமற் போனது. அதனால் இத்திட்டத்திற்கு வெளிநாட்டு உதவி ஏதும் கிடைக்கவில்லை. இருப்பினும் பாசனம், வெள்ளக் கட்டுப்பாடு, மற்றும் வடிகால்கள் இவற்றின் அவசரத் தேவைகளுக்காக காவிரி டெல்டா பகுதிகளில் சிறு பணிகள் அவ்வப்போது மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் நிறைவேற்றப்பட்டன. இம் முயற்சிகள் காவிரி டெல்டா பாசனத் திட்டத்தின் தேவைகளை முழுமையாக நிறைவு செய்யவில்லை.

எனவே, காவிரி டெல்டா பாசனப் பகுதியை நவீனமயமாக்கும் திட்டத்தை மூன்று பகுதிகளாக நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது இதன் முதற்பகுதியாக 460 கோடி ரூபாய்க்கு ஒரு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மைய அரசுக்கு உலக வங்கி உதவிக்காக அனுப்பும் பொருட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. முதற்பகுதியில் பின்வரும் பணிகள் உள்ளடங்கியுள்ளன:

1. 70,000 எக்டேர் பாசனப் பரப்பு பயனடையும் வகையில் 10 ஆறுகளை புனரமைப்பு செய்து நவீனமயமாக்குதல்.
2. 323 கால்வாய்களை புனரமைப்பு செய்து நவீனமயமாக்குதல்.
3. 109 வடிகால்களை மேம்படுத்துதல்.
4. ரூ.23.02 கோடி மதிப்பிற்கு வெள்ளத் தடுப்புப் பணிகளை நிறைவேற்றுதல்.
5. ஏனைய பல்வகைப் பணிகளை நிறைவேற்றுதல்.

## 29. காவிரி நதி நீர் தாவா

தமிழக அரசு, தொடர்ந்து பலமுறை காவிரி நடுவர் மன்றத்தை அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்து நீண்டகாலம் காத்திருந்த பின்னர், இறுதியில் 1990 ஆம் ஆண்டு மே திங்களில் உச்சநீதிமன்றம் ஆணை பிறப்பித்ததைத் தொடர்ந்து இந்திய அரசு, 1956 ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையேயான நீர்த் தகராறுகள் சட்டத்தின்கீழ், 1990 ஜூன் திங்களில், காவிரி நதிநீர் தகராறுகள் குறித்த நடுவர் மன்றத்தை நியமித்தது.

நடுவர் மன்றம் இறுதித் தீர்ப்பினை வழங்குவதற்கு இடைப்பட்ட கால அளவில் செயல்படுத்துவதற்காக, காவிரி நதிநீர் தகராறில் இடைக்கால நிவாரணம் ஒன்றை அறிவித்து ஆணை பிறப்பிக்க வேண்டுமென்பது தமிழ்நாடு அரசு, 1990 ஜூலை திங்களில், இந்நடுவர் மன்றத்தின் முன் வைத்த முதல் கோரிக்கையாகும். கர்நாடக அரசு, அதன் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிக்குள்ளேயே தண்ணீர் முழுவதையும் தேக்கிவைக்கும் தன்னிச்சையான போக்கினால், தமிழ்நாட்டிற்கு நீர் வரத்து ஏற்கெனவே குறைந்துவிட்டது என்ற நியாயமான காரணத்தினால் இவ்வாறு வலியுறுத்தப்பட்டது.

காவிரி நதிநீர் தகராறு நடுவர் மன்றம் தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த உரிமையியல் பல்வகை மனுவின் மீதான நீண்ட விசாரணைக்குப்



பின்னர் தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஏற்று 25-6-1991 அன்று இடைக்கால ஆணை ஒன்றைப் பிறப்பித்தது. அந்த ஆணையில் மேட்டூர் அணையில் ஒரு பாசன ஆண்டில் 205 டி.எம்.சி. தண்ணீர் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் கர்நாடக மாநிலம், அதன் நீர்த்தேக்கங்களிலிருந்து, தண்ணீரைத் திறந்துவிட வேண்டுமென்று கட்டளையிட்டது. மாதாந்திர, வாராந்திர வரையறைகளுக்கு உட்பட்டு, கர்நாடக அரசு தண்ணீரைத் திறந்துவிட வேண்டுமென்றும் அந்த ஆணை மேலும் கூறுகிறது. மேலும், இறுதித் தீர்ப்பு வழங்கப்படும் வரையில், கர்நாடக அரசே உறுதியாகத் தெரிவித்தவாறு 1990 ஜூன் திங்கள் நிலவரப்படி பாசனம் செய்யப்பட்ட நிலப்பரப்பான 11.2 இலட்சம் ஏக்கருக்கு மேற்படாமல் பாசனம் செய்யப்பட வேண்டும் என்றும் நடுவர் மன்றம் உச்ச வரம்பு நிர்ணயித்தது.

இந்த ஆணையினால் மனக்குறை கொண்ட கர்நாடக அரசு, அந்த ஆணையைச் செயல்படுத்தாது தடுப்பதற்கு பல வகையிலும் முயற்சிகளை மேற்கொண்டது. இத்தகைய முயற்சிகளில் ஒன்றாக கர்நாடகத்தின் முழுத் தேவையை நிறைவு செய்யும் வகையில் நதிநீரைப் பயன்படுத்திக்கொள்ள உதவும் பொருட்டு அவசரச் சட்டம் ஒன்றை பிறப்பித்ததுடன், நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைச் செல்லாது என்று அறிவிக்கக்கோரி உச்சநீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தது. இது குறித்து, இந்தியக் குடியரசுத் தலைவர், உச்சநீதிமன்றத்தின் கருத்தைக் கேட்டறிந்தபோது, இந்த அவசரச் சட்டம் மாநிலச் சட்டமன்றத்தின் அதிகாரவரம்பிற்கு அப்பாற்பட்டது என்றும், அரசியலமைப்புச் சட்டத்தை மீறுவதாகும் என்றும் தெள்ளத்தெளிவாகக் கூறியது. இடைக்கால நிவாரணம் வழங்க நடுவர் மன்றத்திற்கு அதிகாரம் உள்ளது என்றும், எனவே சம்பந்தப்பட்ட மாநிலங்கள் அவற்றைச் செயல்படுத்தவும் அவற்றைக் கட்டுப்படுத்தவும் இந்திய அரசு, அறிவிக்கை ஒன்றை வெளியிடுவது அவசியம் என்றும் தீர்ப்பளித்தது. இதனைத் தொடர்ந்து, வேறு மாற்று வழி ஏதுமில்லாத நிலையில், 10-12-1991ஆம் நாளன்று, இந்திய அரசு அதன் அரசிதழில் இடைக்கால ஆணையை வெளியிட்டது.

பிரச்சினை அத்துடன் முடியவில்லை. கர்நாடக அரசு நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணைக்கு இணங்கி செயல்பட மறுத்தது. 1956 ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையேயான நதிநீர் தகராறுகள் சட்டத்தின் 6-ஏ பிரிவில் கூறப்பட்டுள்ளவாறு, இடைக்கால ஆணையைச் செயல்படுத்துவதற்குரிய திட்டம் ஒன்றை வகுப்பதற்கான மேல் நடவடிக்கையை எடுத்திருக்க வேண்டிய இந்திய அரசு, அவ்வாறு

செய்ய முன்வரவில்லை. எனவே, தமிழ்நாடு அரசு, நடுவர் மன்றத்தின் ஆணையைச் செயல்படுத்துமாறு கர்நாடக மாநிலத்திற்குத் திட்டவட்டமான ஆணை பிறப்பிக்குமாறும், இந்த ஆணைக்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையில், திட்டம் ஒன்றைத் தயாரிக்க இந்திய அரசுக்குக் கட்டளையிடுமாறும் கோரி 1992 மே திங்களில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தது.

உச்சநீதிமன்றத்தில் இந்த வழக்கு பலமுறை விசாரணைக்கு வந்து, பலமுறை ஒத்தி வைக்கப்பட்ட பின்னர், இறுதியாக அரசியலமைப்புச் சட்ட ஆயம் இவ்வழக்கினை விசாரணை செய்தது. அப்போது இந்திய அரசின் சார்பில் வாதிட்ட மைய அரசின் தலைமை வழக்கறிஞர் அளித்த 9-04-1997ஆம் நாளிட்ட வாக்குமூலத்தில், இந்திய அரசு இச்சட்டத்தின்படி திட்டத்தினைத் தயாரிக்க ஒப்புக்கொள்கிறது என்றும், அதற்கு சிறிது கால அவகாசம் தேவை என்றும் தெரிவித்தார். இவ்வாறு இந்திய அரசு ஒப்புக்கொண்டுள்ள நிலையில், அது திட்டம் ஒன்றை தயாரித்து இதில் சம்பந்தப்பட்டுள்ள அனைத்து மாநிலங்களின் கருத்தினைக் கோரி, 1997, மே திங்களில், அதனை அனுப்பி வைக்க வேண்டியிருந்தது. கர்நாடக அரசு இந்த வரைவுத் திட்டத்தை விமர்சனம் செய்ததுடன், அத்திட்டத்தில் இடம்பெற்ற பல முக்கியமான பகுதிகளுக்கு மறுப்புத் தெரிவித்தது. அத்துடன் நில்லாமல், கர்நாடக அரசு தானே தன் சார்பில் திட்டத்தைத் தயாரித்து அதனைப் பரிசீலனைக்கு அளித்தது. கர்நாடக அரசு தண்ணீரை முறைப்படுத்துவதைக் கண்காணிக்கும் ஆலோசனைத் தன்மை கொண்ட ஒருங்கிணைப்புக் குழு அமைப்பதை மட்டும் ஏற்றுக்கொண்டது. தமிழ்நாடு அரசு சில பகுதிகளில் மிகச் சிறிய மாற்றங்களைத் தெரிவித்ததைத் தவிர்த்து, மற்றபடி இவ்வரைவுத் திட்டத்தை முழுவதுமாக ஏற்றுக்கொண்டது. கேரள அரசும், புதுச்சேரி அரசும் கூட, சிறு கருத்து மாற்றங்களுடன் இவ்வரைவுத் திட்டத்தை ஏற்றுக்கொண்டன. இவ்வாறு வேறுபட்ட கருத்துக்கள் எழுந்ததன் காரணமாக இந்திய அரசு அதற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்கீழ் இவ்வரைவுத் திட்டத்தை வெளியிட ஆர்வம் காட்டவில்லை.

இத்திட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுக்கும் முயற்சியில் இருந்து வருவதாகக் காரணம் காட்டி, இந்திய அரசு உச்சநீதிமன்றத்தில் மீண்டும் மீண்டும் வழக்கை ஒத்தி வைக்கக் கோரிக்கை விடுத்து வந்தது. ஒரு நிலையில், மாண்புமிகு தமிழக பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் உச்சநீதிமன்றத்தில் 10-11-1997ஆம் நாளன்று ஆணை





உறுதிமொழிப் பத்திரம் ஒன்றைத் தாக்கல் செய்தார். அதில் அவர் அளித்திருந்த வாக்குமூலத்தில், இத்திட்டத்தை இறுதி செய்து அறிவிக்கை வெளியிடுவதில் இந்திய அரசின் தரப்பில் காணும் செயலின்மையைக் குறித்து விளக்கிக் கூறியதுடன் இத்திட்டத்தை உடனடியாக வெளியிடுமாறு இந்திய அரசுக்குக் கட்டளையிடுமாறும் வேண்டிக்கொண்டார். தமிழகத்தின் மாண்புமிகு முதல்வர் அவர்களும் பிரதமர் அவர்களுக்கு அடிக்கடி கடிதம் எழுதியதுடன், நேரில் சந்தித்தும் இத்திட்டத்தை வெளியிடுமாறு கேட்டுக்கொண்டுள்ளார். மேலும், தமிழகத்தின் நாடாளுமன்றத்தில் இப்பிரச்சினையை எழுப்புமாறு, அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கேட்டுக்கொண்டு, இப்பிரச்சனையின் பின்புலம் பற்றிய குறிப்பினையும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சுற்றனுப்பியுள்ளார்.

இதற்கிடையில், 21-07-1998ஆம் நாளன்று இந்த வழக்கு குறித்து பரிசீலிக்கையில், மாண்புமிகு இந்திய நீதித் துறைத் தலைவர் இவ்வழக்கை மேற்கொண்டும் தள்ளிப் போடுவதற்கு இடமில்லையென்றும் இந்திய அரசு இத்திட்டத்தை இறுதி செய்து, 12-08-1998 ஆம் நாளன்று நீதிமன்றத்திடம் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டுமென்றும் தெளிவுபடுத்தினார். இந்திய அரசுக்கு இத்திட்டம் தொடர்பான நடைமுறை முழுவதையும் விரைந்து செயல்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லாமல் போயிற்று. அப்போதிலிருந்து பணிகள் மிக விரைவாக மேற்கொள்ளப்பட்டன. முடிவு ஒன்றை எடுப்பதற்காக மாண்புமிகு பாரதப் பிரதமர் இத்திட்டம் தொடர்பாக 06-08-1998 அன்று காவிரிப் படுகை முதலமைச்சர்கள் கூட்டம் ஒன்றைக் கூட்டினார். விவாதித்து முதல் நடவடிக்கையாக, 29-07-1998 அன்று அமைச்சரவைச் செயலாளர், தலைமைச் செயலாளர்களுடன் கூட்டம் ஒன்றைக் கூட்டினார். அக்கூட்டத்தில் விரிவான விவாதத்திற்குப் பின்னர் இறுதி வரைவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது. இவ்வாறு தயாரிக்கப்பட்ட இறுதி வரைவுத் திட்டம் 03-08-1998 ஆம் நாளன்று தமிழ்நாடு மாண்புமிகு முதலமைச்சரால் கூட்டப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டது. பாரதப் பிரதமரால் கூட்டப்படும் கூட்டத்தில் முதலமைச்சர் பங்கு கொள்வார் என்றும், இத்திட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுப்பதற்கும், நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை செயற்படுத்துவதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

[2000 ஏப்ரல் 29

காவிரிப் படுகையோர மாநிலங்களின் மாண்புமிகு முதலமைச்சர்கள், 1998 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 6 மற்றும் 7 ஆகிய நாட்களன்று மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களால் கூட்டப்பட்ட கூட்டத்தில் கலந்து கொண்டனர். இத்திட்டம் குறித்து, பல மணிநேர விவாதத்திற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சர்கள் இத்திட்டத்தின் சாராம்சத்தை ஏற்க ஒப்புக் கொண்டனர். பின்னர் அதற்கு இறுதி வடிவம் கொடுத்து 11-08-1998 ஆம் நாளன்று இது தொடர்பான அறிவிக்கை வெளியிடப்பட்டது.

12-08-1998 ஆம் நாளன்று இத்திட்டம் அறிவிக்கையிடப்பட்டதாகக் குறிப்பிட்டு, 17-08-1998 ஆம் நாளன்று இறுதியாகப் பரிசீலிப்பதற்காக அரசியலமைப்பு பிரிவின் முன்பு வைக்க உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது. இந்த இறுதி விசாரணையில், இத்திட்டம் தொடர்பான இந்த அறிவிக்கை மத்திய அரசால் வெளியிடப்பட்டதைக் கருத்திற்கொண்டு, தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த இவ்வழக்கிற்குத் தீர்வு காணுவதற்கு ஆணையிடப்பட்டது.

இந்த 1998 ஆம் ஆண்டு காவிரி நதி நீர்த் திட்டத்தை (1991 ஆம் ஆண்டு காவிரி நடுவர் மன்றத்தின் ஆணை மற்றும் அதனையடுத்து இது தொடர்பாக பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் அனைத்தையும் செயல்படுத்துதல்) இறுதி செய்வதற்கும், தமிழ்நாடு அரசு சார்பில் கணிசமான அளவிற்கு சீரிய முயற்சிகள் எடுக்க வேண்டியதாயிற்று. அதனை நதிநீர் சம்பந்தப்பட்ட ஏனைய மாநில அரசுகளும் உடன்பாடு மூலம் ஏற்றுக்கொண்டன. இத்திட்டத்தின்கீழ், வடிநில மாநிலங்களின் முதலமைச்சர்களை அங்கத்தினர்களாகவும், பிரதமரை தலைவராகவும் கொண்டு ஓர் ஆணைக் குழு அதாவது 'காவிரி நீர் ஆணைக் குழு' நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவுக்கு உதவ குழுவின் அங்கத்தினர்-செயலர் (மத்திய அரசு செயலர், நீர்வளத்துறை) தலைவராகவும், தலைமைச் செயலர்கள் மற்றும் வடிநில மாநிலங்களின் தலைமைப் பொறியாளர்கள் அங்கத்தினர்களாகவும் கொண்டு ஓர் 'கண்காணிப்புக் குழு' இயங்கி வருகிறது.

இதற்கிடையில், நடுவர் மன்றத்தில் இறுதித் தீர்ப்பு வழங்குவது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏனைய அனைத்து மாநிலங்கள், தமிழ்நாடு மாநிலத்தின் 9 சாட்சிகளையும்



2000 ஏப்ரல் 29]

மத்திய அரசு நேரடி ஆட்சிப் பகுதியான புதுச்சேரியின் ஒரு சாட்சியையும் குறுக்கு விசாரணை செய்த பின்னர், தமிழ்நாடு மாநில அரசு கர்நாடக மாநிலத்தின் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்வது 08-05-1997 அன்று மேற்கொள்ளப்பட்டது. முதல் 2 சாட்சிகளையும் குறுக்கு விசாரணை செய்யும் பணி பெரும்பாலும் முடிவடைந்து விட்டது. தமிழ்நாடு மாநிலமும், ஏனைய மாநிலங்களும், கர்நாடக மாநிலத்தின் மேலும் 4 சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்ய வேண்டியுள்ளது. கேரள மாநிலமும், தங்களுடைய சொந்த சாட்சிகளை குறுக்கு விசாரணைக்கு அனுப்பலாம். கேரள மாநிலம் 3 சாட்சிகள் அனுப்பப்படுமென தெரிவித்துள்ளது. காவிரிப் படுகை மாநிலங்கள் அனுப்பிய சாட்சிகள் அனைவரையும் குறுக்கு விசாரணை செய்யும் பணி முடிவடைந்த பின்னரே, காவிரிப் படுகை மாநிலங்களின் விவாதங்கள் தொடரக்கூடும். இந்த விவாதங்கள் முடிந்த பின்னர், காவிரி நதிநீர் தகராறு நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பைப் பெற இயலும்.

இந்தத் தகராறு எழுந்த நாளிலிருந்தே தமிழ்நாடு அரசு, தங்களால் இயன்ற முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ளது. தமிழ்நாடு மாநிலத்தின் காவிரி படுகை விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்கவும், நியாயம் வழங்கப்படுவதை உறுதி செய்யவும் எல்லா முயற்சிகளையும் அரசு தொடர்ந்து மேற்கொள்ளும்.

**30. சென்னை பெருநகர நீர் வழிகளைச் செப்பனிட்டுச் சீரமைக்கும் திட்டம் 21 ஆம் நூற்றாண்டின் தொடக்கத் திட்டங்கள்** (Millennium Projects)

தமிழக அரசு சென்னையின் நீர்வழிகளான அடையாறு, கூவம் ஆறு, பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி நல்லா, காப்டன் காட்டன் கால்வாய் மற்றும் சிறிய வடிகால்களிலிருந்து மணற்படிமங்கள் மற்றும் சேறு ஆகியவற்றை அகற்ற முடிவு செய்தது. இத்திட்டத்தின் நோக்கம் நகரத்தின் நீர்வழிகளைச் சுத்தப்படுத்தி தொடர்ந்து சுத்தமாக வைத்தலும் மற்றும் கழிவுநீர் ஆற்றில் கலந்துவிடாமல் செய்வதும் ஆகும்.

[2000 ஏப்ரல் 29

மேற்காணும் நோக்கத்தினை நிறைவேற்ற கீழ்கண்ட பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன:

1. **கீழ்கண்ட நீர்வழிகளில் தூரெடுத்தல், வெள்ளத்தடுப்பு மற்றும் புனர் வடிவமைக்கும் பணி மேற்கொள்ளுதல்.**

(அ) சென்னை மாநகர எல்லைகளில் உள்ள பெரிய வடிகால்கள்

(ஆ) எண்ணூரிலிருந்து முட்டுக்காடு வரை நீளமுள்ள பக்கிங்காம் கால்வாய்

(இ) அடையாறு

(ஈ) கூவம் ஆறு

மேற்காணும் நீர்வழிகளில் 'அ' முதல் 'இ' வரையிலானவற்றில் வேலைகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. இப்பணிகளின் மொத்த ஒப்பந்த மதிப்பீடு ரூ.51.47 கோடி. கூவம் ஆற்றில் பணிகள் 2001-2002 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்படும்.

2. **அடையாறு மற்றும் கூவம் ஆறு கடலோடு கலக்கும் இடங்களில் ஏற்பட்டுள்ள மணல் மேடுகளை அகற்றி மீண்டும் மணல் மேடு ஏற்படாவண்ணம் செய்தல்.**

கூவம் மற்றும் அடையாறு ஆறுகளின் முகத்துவாரத்தில் உருவாகும் மணல் மேட்டினை அகற்றி மீண்டும் உருவாகாமல் இருக்கும் வண்ணம் செய்ய கோரப்பட்ட உலகளாவிய ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப காரணங்களுக்காக ஏற்கப்படவில்லை. இதனிடையே சென்னையில் உள்ள தேசிய கடல் தொழில்நுட்ப நிறுவனம் (இந்திய அரசின் கடல் மேம்பாட்டுத் துறையினைச் சார்ந்த நிறுவனம்) இப்பணியினை தன் செலவிலேயே செய்து முடிக்க முன்வந்துள்ளது. அரசு தேசிய கடல் தொழில்நுட்ப நிறுவனத்தின் கருத்துருவினை ஏற்றுக்கொண்டுள்ளது. பணிகள் 2000-2001 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

3. சென்னை நீர்வழிகளில் நீர்வழிப் போக்குவரத்து, கரைகளில் பொழுது போக்கு, நில உடைமைகள் முதலியன மேம்படுத்துதல், ஒருங்கிணைந்த மூல திட்டம் தயாரிக்கும் நிறுவனத்தை தேர்ந்தெடுக்க உலகளாவிய ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு அவற்றின் தொழில்நுட்ப புள்ளிகள் மதிப்பாய்வு செய்யப்பட்டு முடிக்கப்பெற்றன. இப்புள்ளிகளின் நிதிப் புள்ளிகளை திறப்பதற்கான பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன. இப்பணி 'கட்டி - செயலாக்கி - மாற்றம்' (BOT) செய்யும் முறையின் மூலம் மேற்கொள்ளப்படும்.



2000 ஏப்ரல் 29]

## 31. கடலரிப்புத் தடுப்புத் திட்டங்கள்

தமிழ்நாட்டின் கடற்கரையின் நீளம் சுமார் 1000 கி.மீ ஆகும். இதில் 900 கி.மீ. வங்காள விரிகுடா கரையோரமாகவும், 100 கி.மீ. அரபிக் கடலோரமாகவும் அமைந்துள்ளது. கிழக்குக் கடற்கரை தொடர்ந்து கடலரிப்பிற்கு உள்ளாகிறது. சமீப ஆண்டுகளில் கடலரிப்பின் தாக்கம் அச்சம் தரும் விதமாக உள்ளது. இப்பிரச்சினையினைத் தீர்க்க அரசு பல பாதுகாப்பு முறைகளை அமல்படுத்தி வருகிறது.

மீன்பிடி துறைமுகத்திலிருந்து எண்ணூர் வரை செல்லும் எண்ணூர் விரைவுப் பாதை சுமார் 9.08 கி.மீ. நீளத்திற்கு கடுமையாக கடலரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ளது. இவ்விரைவுச் சாலையில் ஏற்படும் கடலரிப்பைத் தவிர்க்க பெருங்கற்களைக் கொண்டு கற்சுவர் அமைக்கும் பணி பல கட்டங்களில் நடைபெற்று வருகிறது.

இவ்வாண்டிற்கான திருத்திய மதிப்பீடு (1999-2000) ரூ. 1.86 கோடி கோரப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மற்றும் சென்னையில் மேற்கொள்ளப்பட்ட கடலரிப்பு தடுப்புப் பணிகள் முடிவு பெற்றுவிட்டன. அடுத்த நிதியாண்டில் (2000-2001) ரூ.2.22 கோடிக்கு இப்பணிகளுக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ரூ. 91.00 கோடிக்கான 'கடலரிப்பு தடுப்புப் பணிகள்' திட்டக் கருத்துரு அரசினால் தேசிய கடற்கரை பாதுகாப்புத் திட்டத்தில் இணைப்பதற்காக மத்திய நீர்வளத் துறை அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டு வெளிப்புற நிதி உதவிக்காக இந்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

எண்ணூர் நெடுஞ்சாலையில் கடலரிப்பைத் தடுக்க ஒரு நிரந்தர தீர்வு காண நெதர்லாந்து அரசிடமிருந்து தொழில்நுட்பம் மற்றும் நிதி உதவி பெறுவதற்கான ஒரு திட்டக் கருத்துரு நெதர்லாந்து அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி உள்ளது.

## 32. பாசன மேலாண்மை பயிற்சி நிலையம்

திருச்சி துவாக்குடியில் அமைந்துள்ள பாசன மேலாண்மை பயிற்சி நிலையம் நீர்வளத் துறையைச் சார்ந்த பொறியாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் நீர்வள ஆதாரத் திட்டத்தின்கீழ் பயிற்சி அளிப்பதற்காகத் தெரிந்து கொள்ளப்பட்ட அமைப்பாகும்.

[2000 ஏப்ரல் 29

வரும் நிதியாண்டில் இந்நிலையத்தின் மூலம் நீர்வளத் துறையைச் சார்ந்த 1,500 பொறியாளர்களுக்கு ரூ.40 இலட்சம் செலவிலும், நீர்வளத் துறையைச் சார்ந்த 100 களப்பணியாளர்களுக்கு ரூ.2 இலட்சம் செலவிலும் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், ரூ.20 இலட்சம் செலவில் மாநிலத்தில் கிராமப் பகுதிகளில் 5,000 விவசாயிகளுக்கு பயிற்சி அளிப்பதற்கு 100 பயிற்சி முகாம்கள் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிலையத்தின் மூலம் ரூ. 18 இலட்சம் செலவில் 50 பொறியாளர்களை ஹரியானா மாநிலத்தில் பல்லப்காரில் எம்.சி.சி.பி.எம். (MCCBM) நடத்தும் கான்கிரீட் கட்டுமானங்களில் தரக் கட்டுப்பாடு சம்பந்தப்பட்ட பயிற்சிக்கு அனுப்ப திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் ரூ. 95 இலட்சம் செலவில் 25 பொறியாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி அங்குள்ள பாசனத் திட்டங்களையும், அவை செயல்படும் விதங்கள் மற்றும் அவற்றின் பராமரிப்பு முறைகள் குறித்தும் நன்கு அறிந்து வர திட்டமிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட பயிற்சிகளுக்காக எதிர்பார்க்கப்படும் செலவு ரூ. 220.00 இலட்சத்திற்கான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

மேலும் இந்நிலையத்தின் மூலம் "ஐ.எம்.டி.ஐ. பொதுப் பயிற்சி"யின் கீழ் 15 பயிற்சிகளும், 1 கருத்தரங்கும் ரூ.5.50 இலட்சம் செலவில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**I. நீர்வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டப் பணிகள்.**

| | | | ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1. அ) பொறியாளர்கள் மற்றும் களப் பணியாளர்களுக்கான பயிற்சி | .. | 70 பயிற்சிகள் | 42.00 |
| ஆ) விவசாயிகளுக்கான பயிற்சி | .. | 100 பயிற்சிகள் | 20.00 |
| 2. அயல்மாநில பயிற்சி (என்சிசிபிஎம்) | .. | 2 பயிற்சிகள் | 18.00 |
| 3. அயல்மாநில பயிற்சி | .. | 15 பயிற்சிகள் | 45.00 |
| 4. வெளிநாடுகளில் பயிற்சி/கருத்தரங்கு | .. | 15 நபர்கள் | 60.00 |
| 5. வெளிநாடு பயிற்சிப் பயணம் | .. | 10 நபர்கள் | 35.00 |
| மொத்தம் | .. | | **220.00** |



2000 ஏப்ரல் 29]

**II. ஐ.எம்.டி.ஐ. பொதுப் பயிற்சி**

| | | | |
|---|---|---|---|
| 1) அ) நீர்வள ஆதார அமைப்பு, விவசாயப் பொறியியல் துறை மற்றும் விவசாய துறை அலுவலர்களுக்கான பயிற்சி | .. | 5 பயிற்சிகள் | 250 |
| ஆ) விவசாயிகளுக்கான பயிற்சி | .. | 10 பயிற்சிகள் | 2.00 |
| 2) கருத்தரங்கு | .. | 1 | 1.00 |
| மொத்தம் | | | **5.50** |

| | |
|---|---|
| **III. எதிர்பார்க்கப்படும் நிர்வாகச் செலவினங்கள் (Anticipated Establishment Charges)** | **150.53** |

## 33. நீர் ஆய்வு நிறுவனம்

சென்னை தரமணியில் உள்ள நீர் ஆய்வு நிறுவனம் தமிழகத்தின் நீர்வளத்தினை திட்டமிடும் பணிக்கு மையமாக அமையும் நிறுவனம் ஆகும். மேலும், இந்நிறுவனம் தமிழக அரசின் நீர்வள ஆதார அமைப்பின் தொழில்நுட்பச் செயலகமாகவும் விளங்குகிறது. நீர்வளத்தை விஞ்ஞான முறையிலே திட்டமிடவும், மதிப்பிடவும், மேலாண்மைக்கு வழிவகுக்கவும் இந்நிறுவனம் செயல்படும்.

தமிழ்நாட்டில் உள்ள ஆற்றுவடி நிலங்கள் 17 ஆற்றுப்படுகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன. காவிரி ஆற்று வடிநிலம் தவிர மற்ற ஆற்றுப்படுகைகளுக்கு பரந்த அளவிலே நீர்வளத்திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. மாநில நீர்வளத் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. உலக வங்கி குழுவினரின் வேண்டுகோளுக்கிணங்க துல்லிய அளவிலே ஒவ்வோர் ஆற்றுப்படுகையிலும் நீரின் இருப்பு, தேவை போன்றவற்றை அறிய திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி பாலாறு மற்றும் வைகை ஆற்றுப்படுகைகளுக்கான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இதன் ஆய்வில், கிடைக்கின்ற நில மேற்பரப்பு நீரும், நிலத்தடி நீரும் விஞ்ஞான முறையிலே கணக்கிடப்பட்டிருக்கின்றன. குடிநீர், விவசாயம், கால்நடைகள், தொழிற்சாலைகள், மின் உற்பத்தி ஆகியவற்றிற்குத்

[2000 ஏப்ரல் 29

தேவையான நீர் 1995-96ஆம் ஆண்டிற்கு கணக்கிடப்பட்டு, மேலும் வருங்கால ஆண்டுகள் 2000, 2005, 2010, 2020 மற்றும் 2045 ஆகியவற்றிற்கு தேவையான நீரும் கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வாண்டுகளில் நீர் மிகுதியும் நீர் பற்றாக்குறையும் கொண்ட ஆற்றுப்படுகைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதனால் வருங்காலத் திட்டங்கள் வகுக்க வழி வகைகள் ஏற்படுகின்றன. நீர் பற்றாக்குறையான ஆற்றுப்படுகைகளில் நீரை சேமிக்கவும், மாற்று வழிகளில் நீரைக் கொண்டுவரவும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

நீர்வள ஆதாரத் திட்டத்தின் கீழ், தமிழக அரசு நீர்வள ஆய்வு மேற்கொள்வதற்காக இஸ்ரேல் நாட்டில் "திருவாளர்கள் தகல் கன்சல்டன்ட்" என்ற ஒரு வல்லுநர் குழுவினர் நிறுவனத்திற்கு ரூ.26.83 கோடிக்கு அனுமதித்துள்ளது. அந்த வல்லுநர் குழு பாலாறு ஆற்றுப் படுகைக்கான ஆய்வு மேற்கொண்டுள்ளது. இதனைத் தொடர்ந்து வைப்பாறு மற்றும் கோதையாறு ஆற்றுப்படுகைகளுக்கும் ஆய்வு தொடரப்பட உள்ளது.

வகுக்கும் திட்டங்கள் உண்மையானதாக அமைய நீர் உரிமையாளர்களின் அறிவுரைகளும் கருத்துக்களும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. எனவே, வைகை ஆற்றுப்படுகையின் நீர் உரிமையாளர்கள் கூட்டத்தை மதுரையிலே நடத்தி அவர்களுடைய கருத்துக்கள் திட்டங்களிலே புகுத்தப்பட்டுள்ளன. இதுவரை தமிழகத்தின் ஆற்றுப்படுகைகளுக்கான 16 நீர் உரிமையாளர்கள் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

நீர்வள ஆதாரங்களில் சுற்றுச்சூழல் தொடர்பான பிரச்சினைகளில் அரசுக்கு ஆலோசனை அளிக்க, நீர் ஆய்வு நிறுவனத்தில் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் தகவல் சேமிக்கவும், நீர்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் ஒரு சுற்றுச்சூழல் பிரிவு செயல்பட்டு வருகிறது.

நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நீர்வளப் பிரிவிற்குத் தேவையான நடைமுறை சீர்திருத்தங்களுக்கான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு செயல்படுத்துவதற்காக "நீர்வள ஆராய்சி நிதி" ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஓர் ஆராய்ச்சி ஆலோசனைக் குழு ஆராய்ச்சிக்கான தலைப்பை தேர்ந்தெடுப்பதற்காக அமைக்கப்பட்டுள்ளது. தொடக்கத்தில் மூன்று ஆராய்ச்சி தலைப்புகள் தேர்வு செய்யப்பட்டு பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு விரிவான ஆய்வுகளுக்காக



2000 ஏப்ரல் 29]

கொடுக்கப்பட்டுள்ளன. செய்தித்தாள்களில் விளம்பரம் மூலமாக பெறப்பட்ட மற்ற ஆராய்ச்சி தலைப்புகள் ஆய்வுகளுக்காக பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

நீர் ஆய்வு நிறுவனத்தில் நீர்வளம் திட்டமிடுதல் மற்றும் மேலாண்மைத் திறனைப் பெருக்குவதற்காக ஒரு தொலையுணர்வு மையம் இயங்கி வருகிறது. தொலையுணர்வு தொழில் நுட்பத்தால் நோக்க ஆய்வு, வரைபடங்களான புவியியல் நில உபயோகம், புவி மேற்பரப்பு, நில சாய்வு, வடிகால் மண் வகை, நில வெடிப்பு, நீரியியல் வரைபடங்களை தயாரிக்கலாம். தொலையுணர்வு தொழில் நுட்பத்தைக் கொண்டு பாலாறு, வைகை, வைப்பாறு மற்றும் கோதையாறு படுகைகளுக்கு நில உபயோகம், நில வெடிப்பு, வடிகால், புவி மேற்பரப்பு போன்ற ஆய்வு வரைபடங்கள் தயாரிக்கப்பட்டன. இந்த வரைபடங்களின் உதவி கொண்டு ஆழ்குழாய் கிணறு துளையிடவும், திறந்த கிணறுகள் அமைப்பதற்கும் ஏற்ற சரியான இடங்களை தேர்ந்தெடுப்பதற்கும் மற்றும் கசிவு நீர் குட்டைகள், நீர்தடுப்பு அமைப்புகள் கட்டுவதற்கு தகுந்த இடங்களை தேர்ந்தெடுக்கவும் முடிகிறது. இந்த தொழில் நுட்பத்தின் உதவி கொண்டு, ஊராட்சி ஒன்றியம் வாரியாக நிலத்தடி நீரை பெருக்குவதற்கு, உரிய சாதகமான இடங்களை தேர்வு செய்ய ஆய்வு பணிகள் சிவகங்கை, பல்லடம், சீர்காழி, பெரம்பலூர் ஆகிய ஒன்றியங்களில் முடிக்கப்பட்டுள்ளன. கம்பம், உத்தமபாளையம், சின்னமனூர், தேனி, போடிநாயக்கனூர், ஆண்டிப்பட்டி ஆகிய ஒன்றியங்களில் ஆய்வு பணிகள் நடைபெற்று வருகின்றன. மாநில திட்டக் குழுவின் நிதியுதவியுடன் "பாலாறு படுகையில் நில நீர் தரம் மற்றும் நில உபயோக சூழ்நிலை" என்ற அறிக்கை தொலை உணர்வு தொழில் நுட்பத்தின் மூலம் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. "திருவாளர்கள் தகல் கன்சல்டன்ட்ஸ்"-ன் ஆலோசனையின்படி தொலை உணர்வு தொழில் நுட்பத்தின் மூலம் பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம், சேத்தியாதோப்பு, கோமுகி, கோதையாறு, வைகை மற்றும் வைப்பாறு ஆகிய திட்ட இடங்களில் உள்ள நில நீர்வள விவரங்களின் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

தொலை உணர்வு ஆய்வகத்தின் திறனை அதிகரிக்கும் பொருட்டு, நீர்வள ஆதார தொகுப்பு திட்டத்தின் கீழ் இன்டர்கிராப், ஏட்ராஸ்-இமேஜரிஸ் போன்ற நவீன மென்பொருட்கள் பெறப்பட்டு நிறுவப்பட்டுள்ளன. ஐதராபாத் தேசிய தொலையுணர்வு மையத்திலிருந்து IRS I-CID மற்றும் WIFS செயற்கைக் கோள்களிலிருந்து எடுக்கப்பட்ட

[2000 ஏப்ரல் 29

தமிழ்நாட்டு பரப்பில் வரும் செயற்கைகோள் புகைப்படங்கள் வாங்கப்பட்டுள்ளன.

சேத்தியாதோப்பு, கோமுகி திட்டப்பணிகளுக்காக, செயற்கைக் கோள் மூலம் பெறப்பட்ட வண்ணப்பட தொகுப்புகள் தயாரிக்கப்பட்டன. இந்த தொகுப்பு மூலம் பழைய மற்றும் புதிய நீர்பாசன திட்டப் பகுதிகளை கண்டறிதல் மற்றும் மண் மற்றும் நில வகைகளின் மாற்றத்தை தொலையுணர்வு புகைப்படத்தின் உதவியுடன் நவீன தொழில்நுட்ப கணிப் பொறிகளை பயன்படுத்தி நில பயன்பாட்டு வரைபடங்கள் தயாரிக்கப்பட்டன. துரிஞ்சிலாற்று படுகையின் நிலநீர் இருப்பு மற்றும் நீர்பிடிப்பு பகுதிகளை செயற்கைகோள் புகைப்படம் மற்றும் நவீன தொழில்நுட்ப சாதனங்களின் உதவியுடன் கண்டுபிடிப்பதற்கான திட்ட முன்னோடிகள் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டத்தில் அதிக நிலத்தடிநீர் பயன்படுத்தப்பட்ட பகுதிகளையும் செயற்கைக்கோள் புகைப்படத்தின் உதவியுடன் கண்டுபிடிக்க திட்ட முன்னோடிகள் தயாரிக்கப்பட்டது. இவ்விரு திட்ட முன்னோடிகளும் தமிழ்நாடு அரசு திட்டக் குழுவின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது.

**34. தமிழ்நாடு கொதிகல ஆய்வகம்**

இந்திய கொதிகல சட்டம் *1950*-ன்படி உற்பத்தியாகும் உயர் அழுத்த கொதிகலன்கள், உதிரி மற்றும் பொருட்கள், மேலும் அதிகபட்ச எண்ணிக்கையில் உள்ள கொதிகலன் உபரி அலகு, வார்ப்பட பட்டறை, உலைகளம், குழல் மற்றும் குழாய் உற்பத்திக்களம் உள்ளடக்கிய கொதிகலன் உற்பத்திக் களத்தில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகும்.

தமிழ்நாட்டின் கொதிகலன் மற்றும் கொதிகலன் உதிரி தொழில் இவற்றின் வளர்ச்சிக்கு தமிழ்நாடு கொதிகலன் ஆய்வகம் தனது திறமையான செயல்பாட்டால் முக்கிய பங்கு வகிக்கிறது.

தமிழ்நாடு அரசின் பொதுப்பணித் துறையின் ஓர் அங்கமாக இயங்கி வரும் தமிழ்நாடு கொதிகல ஆய்வகம், முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது.

இந்திய கொதிகலன்கள் சட்டம், *1923*, மாநில அரசுகளால் இணை பொறுப்பின்கீழ் அமலாக்கப்பட வேண்டியிருப்பதை ஒட்டி, மேற்படி



2000 ஏப்ரல் 29]

சட்டத்தினை தமிழகத்தில் செயல்படுத்தும் பொறுப்பினை தமிழ்நாடு கொதிகல ஆய்வகம் மேற்கொண்டு இயங்கி வருகிறது.

கொதிகலன்கள், கொதிகலன்களின் உதிரி பாகங்கள் மற்றும் இதர உயர் அழுத்த பாகங்கள், இந்திய கொதிகலன்கள் ஒழுங்குமுறை விதிகள் *1950*-ல் வரையறுத்துள்ளபடி நல்ல தரத்துடன் தயாரிக்கப்படுவதை உறுதி செய்வதில் தமிழ்நாடு கொதிகல ஆய்வகம் முக்கிய பொறுப்பு வகிக்கிறது.

மேலும், தமிழ்நாட்டில் பல்வேறு நிறுவனங்களில் இயங்கிவரும் கொதிகலன்கள் அனைத்தும் தேர்ச்சி பெற்ற கொதிகலன் பணியாளர்களாலும், தேர்ச்சி பெற்ற கொதிகலன் பொறியாளர்களாலும் இயக்கப்படுவது தொடர்பாக, தமிழ்நாடு கொதிகலப் பணியாளர் விதிகள், *1964* மற்றும் தமிழ்நாடு கொதிகல இயக்கப் பொறியாளர்கள் விதிகள், *1965* ஆகிய விதிகளை செயல்முறைப்படுத்தும் பொறுப்பும் இவ்வாய்வகத்தின் முக்கியப் பொறுப்புகளில் ஒன்றாக அமைந்துள்ளது.

கொதிகலன்கள் தயாரிப்பு நிறுவனங்கள், பழுதுபார்க்கும் நிறுவனங்கள் மற்றும் அனல் மின் நிலையங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் உயர் அழுத்த பற்றவைப்பாளர்கள் உரிய தரத்துடன் இருப்பதை உறுதி செய்யும் பொருட்டு, பற்ற வைப்பாளர்களுக்கான தேர்வுகளை நடத்தி, அதற்கான சான்றிதழ்கள் வழங்கும் பொறுப்பினையும் இவ்வாய்வகம் மேற்கொண்டு வருகின்றது.

இவ்வகையில், ஆசியாவிலேயே மிகப் பெரிய அளவில் கொதிகலன்களைத் தயாரிக்கும் பாரத மிகுமின் நிறுவனம், தமிழ்நாட்டில் உயர் அழுத்த கொதிகலன்கள் தயாரிப்பில் சிறந்து விளங்கும் நிறுவனங்களான சிதார் வெசல்ஸ் லிமிடெட், மாத்தூர், திருச்சிராப்பள்ளி, வீசன்ஸ் எனர்ஜி சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட், திருச்சிராப்பள்ளி, ஜி.பி. இன்ஜினியரிங் என்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிடெட், திருச்சிராப்பள்ளி, பிரிமியர் இண்டஸ்ட்ரீஸ், திருச்சிராப்பள்ளி, ரஜினி பேப், திருச்சிராப்பள்ளி, பைப்லைன்ஸ் அண்டு புராசஸ் எக்யூப்மெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், மாத்தூர், திருச்சிராப்பள்ளி, ஐ.ஏ.இ.சி. இண்டஸ்ட்ரீஸ் (மெட்ராஸ்) லிமிடெட், சென்னை, பின்னி இன்ஜினியரிங் டிவிஷன் லிமிடெட், சென்னை, ஐ.பி.ஐ.எல்.டெக் கும்மிடிப்பூண்டி, பாப்காக் போர்சிக் பவர் ஸிஸ்டம் லிமிடெட், பூவிருந்தவல்லி, ஜெயா அண்டு கம்பெனி, கோயம்புத்தூர், ஜெயா பாய்லர் (பி) லிமிடெட், கோயம்புத்தூர், ஸ்ரீவெங்கடேஸ்வரா

[2000 ஏப்ரல் 29

இன்ஜினியரிங் கார்ப்பரேஷன், கோயம்புத்தூர் முதலிய தயாரிப்பு நிறுவனங்களில் தயாரிக்கப்பட்ட ஏறத்தாழ 504 கொதிகலன்களை அனைத்து நிலைகளிலும் ஆய்வு செய்து அவற்றிற்கு தரச் சான்றிதழ்களை வழங்கி இந்தியாவிலேயே கொதிகலன்கள் தயாரிப்பில், தமிழகம் தொடர்ந்து முதல்நிலை வகிக்க வழிகோலியுள்ளது. கடந்த ஆண்டு மட்டும் 455 கொதிகலன்கள் தயாரிக்கப்பட்டு இவ்வாய்வகத்தால் தரச் சான்றிதழ் வழங்கப்பட்டு தொழில் வளர்ச்சி பன்மடங்கு பெருக வாய்ப்பு கூடியுள்ளது.

அனல்மின் நிலையங்களுக்குத் தேவையான சர்வதேச அளவில் தயாரிக்கப்படும் கொதிகலன்களுக்கு ஈடாக, 500 மெகாவாட் வரை மின்சாரம் தயாரிப்பதற்கு உகந்த பாரத மிகுமின் நிறுவனம், திருச்சிராப்பள்ளி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட பிரம்மாண்டமான உயர் அழுத்த கொதிகலன்களையும் இவ்வாய்வகம் வடிவமைப்புக்கு ஒப்புதல் அளிப்பதுடன் ஒவ்வொரு நிலையிலும் ஆய்வு செய்து, தரச் சான்றிதழ்களையும் வழங்கி, மேற்படி கொதிகலன்கள் எந்த ஒரு தயாரிப்புக் குறையும் சுட்டிக்காட்ட இயலாதவாறு, நம் நாட்டில் பல்வேறு மின் நிலையங்களில் மிகத் திறம்பட செயல்பட்டு வருவது சர்வதேச நிறுவனங்களுக்கு இணையாக தமிழ்நாடு கொதிகல ஆய்வகம் செயல்படுவதை உறுதிசெய்கின்றது. மேலும் தமிழகத்திலிருந்து தயாரிக்கப்படும் உயர் அழுத்த கொதிகலன்கள் ஒருசில அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும்போதும் அந்தந்த நாடுகளிலுள்ள தரக்கட்டுப்பாட்டிற்கிணங்க அவை தயாரிக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுவதையும் இவ்வாய்வகம் உறுதி செய்கின்றது.

இத்தகைய கொதிகலன்கள் தயாரிப்பு நிறுவனங்கள், புதியதாக, கொதிகலன்களைத் தயாரிக்க அனுமதி கோரி விண்ணப்பிக்கும்போது, இவ்வாய்வகம் அத்தகைய விண்ணப்பதாரர்களுக்கு தேவையான அனைத்துவித உதவிகளையும் வழங்கி, உரிய தொழில்நுட்ப நெறிமுறைகளையும் வழிகாட்டுவதன் மூலமாக, மேற்படி நிறுவனங்கள் எந்தவித இடர்பாடுமின்றி தொழிற்சாலைகளை தமிழகத்தில் தொடங்கவும், அவ்வாறு தொடங்கப்படும் தொழிற்சாலைகள் வெகுவிரைவாக உற்பத்திப் பணிகளை தொடங்கவும் இவ்வாய்வகம் அனைத்து உதவிகளையும் செய்து ஊக்குவித்து வருகின்றது. குறிப்பாக, தமிழ்நாட்டில் தொழில் தொடங்க முனைவோரின் எண்ணிக்கையை அதிகப்படுத்த பல்வேறு மாநிலங்களில் இயங்கி வந்த பல கொதிகலன்கள் தயாரிப்பு நிறுவனங்கள், தற்போது தமிழகத்தில் தங்கள் தயாரிப்புகளுக்கான



2000 ஏப்ரல் 29]

தொழிற்சாலைகளைத் தொடங்கி உற்பத்தி செய்து வருவது இதன் தொடர்பாக சிறப்பு அம்சமாக குறிப்பிடப்படுகிறது.

மின்நிலையங்கள் அமைப்பில் கொதிகலன்கள் பெரும்பங்கு வகிப்பதால், இவற்றின் நிர்மாணத்திற்கு கொதிகல ஆய்வகம் அனைத்து உதவிகளையும் நல்கி வருகின்றது. இவ்வாறு கொதிகல ஆய்வகத்தின் ஒப்புதலுடன் தொடங்கப்பெற்றுள்ள தனியார் அனல்மின் நிலையங்களில் தமிழ்நாடு கெமிகல் புராடக்ஸ் நிறுவனத்தாரால் கும்மிடிப்பூண்டியில் கடந்த ஆண்டு அமைக்கப்பட்டு தற்போது 63.75 மெகாவாட் திறன் உற்பத்தியுடன் தொடங்கப்பட்டுள்ள அனல்மின் நிலையம் குறிப்பிடத்தக்கதொன்றாகும். இம்மின் நிலையத்திற்கு தேவையான கொதிகலன் தென் ஆப்பிரிக்க நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. தற்போது இந்நிறுவனம் தன் சுயதேவைக்கான மின்சக்தியை பெற்றுக்கொள்வதுடன், கூடுதலாக உற்பத்தியாகும் மின்சக்தியை தமிழ்நாடு மின் வாரியத்திற்கும் வினியோகித்து உதவி செய்து வருகிறது. இதேபோன்று மேட்டூரில் மெட்ராஸ் அலுமினியம் கம்பெனி நிறுவனத்தாரால் அமைக்கப்பட்டு வரும் 25 மெகாவாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய 3 கொதிகலன்கள் முதன்முறையாக சீன மக்கள் குடியரசிலிருந்து கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டு, இக்கொதிகலன்கள் வடிவமைப்புக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, கொதிகலன்கள் நிறுவப்பட்டு வருகின்றன. மேலும், சென்னை பேசின் பிரிட்ஜில் ஜி.எம்.ஆர். வாசவி பவர் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தாரால் 200 மெகாவாட் டி.இ.பி.பி. மின் உற்பத்தி நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள நான்கு புதிய கொதிகலன்கள் இயக்கப்பட்டு வருவதால் மேற்படி நிறுவனம் தனது மின் உற்பத்திப் பணியினை தொடங்கியுள்ளது.

என்.எல்.சி. என பெருமையுடன் அழைக்கப்படும் நெய்வேலி அனல்மின் நிலையம், 210 மெகாவாட் மின் உற்பத்திக்குப் பயன்படும் இரண்டு மிகப் பெரிய கொதிகலன்களை இத்தாலிய நாட்டிலிருந்து இறக்குமதி செய்து நிறுவும் பணியை மேற்கொண்டுள்ளது. இக்கொதிகலன்கள் உடனடியாக நிறுவப்பட காலதாமதம் ஏதுமின்றி வரைபடங்கள் மற்றும் சான்றாவணங்களுக்கு உடனுக்குடன் ஒப்புதல் அளிக்கும் சீரிய பணியை இக்கொதிகல ஆய்வகம் திறம்பட நிறைவேற்றி வருகின்றது.

பெட்ரோலிய எண்ணெய் சுத்திகரிப்புப் பணியில் உலகத் தரம்வாய்ந்த "மெட்ராஸ் ரிபைனரீஸ் லிமிடெட், சென்னை" நிறுவனத்தில் மின்

[2000 ஏப்ரல் 29

உற்பத்தி சுயதேவை திட்டத்தின்கீழ் மின் உற்பத்தி செய்வதற்குகந்த கொதிகலனை மேற்கு ஜெர்மனி குடியரசிலிருந்து இறக்குமதி செய்ய திட்டமிடப்பட்டு, இக்கொதிகலனின் வடிவமைப்புக்கும் செயல்பாட்டுத் திறனை அங்கீகரிக்கவும் இக்கொதிகல ஆய்வகத்தின் மூத்த அதிகாரியான தலைமை கொதிகலன்கள் ஆய்வாளரால் மத்திய கொதிகல குழுமத்தின் செயலருடன் மேற்கு ஜெர்மனி குடியரசிற்கு பயணம் மேற்கொள்ளப்பட்டு இக்கொதிகலன் இறக்குமதிக்கு மிக விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இவ்வாறு தமிழ்நாட்டின் மின் உற்பத்திக்கு அடிப்படைத் தேவையான கொதிகலன்களை நிறுவும் பணிக்கும் மற்றும் அவற்றின் தங்குதடையற்ற செயல்பாட்டிற்கும் மிக துரித நடவடிக்கைகளை தமிழ்நாடு கொதிகல ஆய்வகம் தனது சீரிய தொழில்நுட்ப அணுகுமுறையுடன் ஒத்துழைப்பு அளித்து மேற்கொண்டு வருவதால், தமிழகத்தில் மின் பற்றாக்குறை மற்றும் மின் தட்டுப்பாடு நிலவாத நிலைமைக்கு இக்கொதிகல ஆய்வகம் உதவுகிறது.

இக்கொதிகல ஆய்வகம், *1999-2000* ஆம் ஆண்டில் தமிழகத்தில் புதியதாக *118* கொதிகலன்களுக்கும், அவற்றுக்கான நீராவி குழாயமைப்புகளுக்கும் ஒப்புதல் வழங்கி, அவற்றை பதிவு செய்ததன் மூலம் உற்பத்திப் பணிகள் தொடங்கப்பட்டு, தமிழகத்தில் தொழில் முன்னேற்றத்தில் பெரும்பங்கு வகித்து வருகின்றது.

மேற்படி கொதிகலன்கள் அரிசி ஆலைகள், எண்ணெய் ஆலைகள், துணியாலைகள், சாயத் தொழிற்சாலைகள், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள், சக்கரை ஆலைகள், உரத் தொழிற்சாலைகள், மருந்து பொருள் தயாரிப்பு நிறுவனங்கள், உருக்காலைகள், அனல்மின் நிலையங்கள் பொறியியல் கல்லூரிகள், மருத்துவமனைகள், நட்சத்திர உணவு விடுதிகள் போன்ற பல்வகைப்பட்ட நிறுவனங்களில் நிறுவப்பட்டுள்ளதிலிருந்து தமிழகத்தின் ஒட்டுமொத்த தொழில் வளர்ச்சியில் கொதிகல ஆய்வகம் பெரும்பங்கு வகிக்கிறது.

கொதிகலன்கள் தயாரிப்பு நிறுவனங்களைத் தவிர, கொதிகலன்கள் உதிரி பாகங்களான உயர் அழுத்த அடைப்பான்கள், குழாய்கள், பற்றவைப்புக் கம்பிகள் போன்ற உபகரணங்களைத் தயாரிக்கும் பெரும்பாலான நிறுவனங்களும் தமிழகத்தில் அமைக்கப்பட்டுள்ளதால், மேற்படி தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் உதிரிபாகங்கள்



2000 ஏப்ரல் 29]

அனைத்தும் பல்வேறு நிலைகளில் ஆய்வு செய்யப்பட்டு அவற்றிற்கு தரச் சான்றிதழ் வழங்கும் பணியினையும் இவ்வாய்வகம் மேற்கொண்டு வருகிறது. இவ்வாறு தயாரிக்கப்படும் உபகரணங்கள் நம் நாட்டின் மொத்த தேவையில் பெரும்பங்கு வகிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும். இவ்வகையில் உலகத் தரம் வாய்ந்த அடைப்பான்களை தயாரிக்கும் அட்கோ இந்தியா லிமிடெட் நிறுவனம், சென்னை, மணப்பாக்கத்தில் ஒரு தொழிற்சாலையுடன் தொடங்கி, தற்போது மறைமலைநகரில் ஒரு தொழிற்சாலையும் காஞ்சிபுரத்தில் ஒரு தொழிற்சாலையுமாக மூன்று தொழிற்சாலைகளாக தனது உற்பத்தித் திறனை விரிவுபடுத்தியுள்ளது. கொதிகல ஆய்வகம் தமிழகத்தின் தொழில் வளர்ச்சியில் ஆற்றிவரும் மிகப்பெரிய பங்கினை எடுத்துக்காட்டுகின்றது.

இதுபோன்றே, உயர் அழுத்தக் கொதிகலன்கள் தயாரிப்பில், திருச்சி பாரத மிகுமின் நிறுவனத்திற்கு அடுத்தபடியாக சிறந்து விளங்கும், சிதார் வெசல்ஸ் லிமிடெட் நிறுவனம், இவ்வாண்டில் தம்முடைய கொதிகலன்கள் தயாரிப்புப் பிரிவில் பல சிறப்பு வசதிகள் பொருந்திய மூன்றாவது பிரிவினை திருச்சிராப்பள்ளி மாவட்டம், பெரமங்கலம் என்னுமிடத்தில் நிறுவி, உற்பத்திப் பணியை தொடங்கியுள்ளது. இப்பிரிவுக்கு அங்கீகாரம் வழங்கியதன் மூலமாக தமிழகம் கொதிகலன்கள் உற்பத்தி நிலைக்கு மேலும் ஓர் அளவுகோலினை எட்டியமைக்கு இக்கொதிகல ஆய்வகம் வழி அமைத்துள்ளது.

உதிரி பாகங்கள் தயாரிப்பில், மேற்படி அட்கோ இந்தியா லிமிடெட், நிறுவனத்தைத் தவிர, விராலிமலையில் எப்.எம்.சி. சன்மார் லிமிடெட், சென்னையில் பிஷர் சோமாக்ஸ் சன்மார் லிமிடெட் நிறுவனம், கோவையில் கே.எஸ்.பி. பம்ப்ஸ் நிறுவனம், ஓசூரில் சிவானந்தா பைப் பிட்டிங்ஸ் நிறுவனம் ஆகியவை மிகப் பெரிய அளவில் உதிரி பாகங்கள் தயாரிப்பு நிறுவனங்களாக செயல்பட்டு வருகின்றன. *1999-2000* ஆம் ஆண்டில், கொதிகலன் உதிரி பாகங்கள் தயாரிப்பு நிறுவனங்களில் ஆய்வு மேற்கொண்டு, சுமார் *1,62,000* அடைப்பான்களுக்கான தரச் சான்றிதழ்களையும், நீராவிக் குழாய் அமைப்புச் சாதனத்தில் பொருத்தப்படும் சில வகை உபகரணங்களுக்கான *1,16,500* தரச் சான்றிதழ்களையும் மற்றும் புதிய கொதிகலன்கள் உட்பட அதன் பல்வேறு பாகங்கள் மற்றும் உபரி பாகங்களுக்காக *4,038* சான்றாவணங்களுக்கு ஒப்புதலையும் இந்திய கொதிகலன்கள் ஒழுங்குமுறை விதிகள், 1950-ன்கீழ் வழங்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

[2000 ஏப்ரல் 29

தமிழகத்தில் தயாரிக்கப்படும் கொதிகலன்கள் மற்றும் அதன் உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள், பழுது பார்க்கும் நிறுவனங்கள், கொதிகலன்கள் மற்றும் நீராவிக் குழாய் அமைப்பு நிறுவும் பணியை மேற்கொள்ளும் நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பற்ற வைப்பாளர்கள் அதற்குரிய முறையான தகுதி பெற்றிருப்பதன் மூலம் மேற்படி நிறுவனங்களில் தயாரிப்புகள் வரையறுக்கப்பட்ட தரத்தில் இருப்பதை உறுதி செய்யும்பொருட்டு இவ்வாய்வகம், உயர் அழுத்த பாகங்கள் பற்றவைப்பாளர்களுக்கு தேர்வுகள் நடத்தி, தேர்ச்சி பெறும் பற்றவைப்பாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வருகின்றது. இதன்படி 1999-2000 ஆம் ஆண்டில் சுமார் 734 பற்றவைப்பாளர்களுக்கு தேர்வு நடத்தி, அதில் தேர்ச்சி பெற்ற 685 பற்றவைப்பாளர்களுக்கு தரம் வாரியாக (பைப், ட்யூப் மற்றும் பிளேட் ஆகியவற்றில் அலாய் ஸ்டீல் மற்றும் கார்பன் ஸ்டீல்) சான்றிதழ்கள் வழங்கியுள்ளது. இதன் மூலம் கொதிகலன்கள் தயாரிப்பு நிறுவனங்களிலும், உதிரி பாகங்கள் தயாரிப்பு நிறுவனங்களிலும் தயாரிக்கப்படும் பொருட்களின் தரம் உறுதி செய்யப்படுகின்றது.

தமிழகத்தின் தொழில் வளர்ச்சியில் பெரும்பங்கு வகிப்பதுடன் இந்திய கொதிகலன்கள் சட்டம் 1923-ன் விதிகளை கொதிகலன்களைப் பயன்படுத்துவோர் பின்பற்றி கொதிகலன்கள் முறையாக இயக்கப்பட்டு வருவதை உறுதி செய்வதன் மூலம், பொது மக்களின் உயிர், உடைமைகளுக்கும், பொதுச் சொத்துக்களுக்கும் பேரிழப்பு ஏற்படாமல் கண்காணிக்கும் மிக முக்கிய பணியினையும் இவ்வாய்வகம் மேற்கொண்டு வருகின்றது. பல்வேறு தொழிற்சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள கொதிகலன்களை ஆண்டிற்கு ஒரு முறை சீரிய முறையில் ஆய்வு செய்து அவற்றின் இயக்கத்திற்கு வருடாந்திர சான்றிதழ்களை வழங்குவதன் மூலம் மேற்படி பணியினை தமிழ்நாடு கொதிகல ஆய்வகம் செவ்வனே நிறைவேற்றி வருகிறது. ஆண்டாய்வின் போது பழுதடைந்து இயக்கத்திற்கு அனுமதிக்கப்பட இயலாத கொதிகலன்களுக்கு சான்றிதழ்கள் மறுக்கப்பட்டு உரிய பழுதுகள் சீர் செய்யும் பணி முடிக்கப்பட்ட பின் மீண்டும் ஆய்வுகள் மேற்கொண்டு அதன் பின்னரே அவற்றின் இயக்கத்திற்கு உரிய சான்றிதழ்களை இவ்வாய்வகம் வழங்கி வருகிறது.

இவ்வகையில் 1999-2000 ஆம் ஆண்டில் சுமார் 2,795 கொதிகலன்கள் ஆய்வு செய்யப்பட்டு, அவற்றின் இயக்கத்திற்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்தகைய ஆய்வுகள் மேற்படி நிறுவனங்களில் உற்பத்தி பாதிப்பிற்கு இடமளிக்காத வகையில் மேற்கொள்ளப்பட்டு



2000 ஏப்ரல் 29]

வருவதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். கொதிகலன்கள் ஆண்டாய்வின் போது பழுதடைந்ததாகக் காணப்பட்ட சுமார் 110 கொதிகலன்கள் பழுதுகள் நீக்கப்பட தலைமைக் கொதிகலன்கள் ஆய்வாளர் அவர்கள் நிலையில் பழுதுகள் ஒப்படைக்கப்பட்டு அவற்றில் சுமார் 85 கொதிகலன்களின் பழுதுகள் சீர்செய்யப்பட்டு அவை இயக்கத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கொதிகலன்கள் நிறுவப்படவும், குழாய் அமைப்புப் பணிகள் அமைக்கப்படவும், பழுதுகள் சீர் செய்யப்படவும், தகுதிவாய்ந்த பல்வேறு நிறுவனங்களுக்கு ஒப்புதல் வழங்கும் பணியினையும் இவ்வாய்வகம் மேற்கொண்டு வருகிறது. மேற்படி நிறுவனங்களில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளையும் தகுதிவாய்ந்த உயர் அழுத்த பாகங்கள் பற்றவைப்பாளர்கள் பணியமர்த்தப்பட்டிருப்பதையும், மேற்படி நிறுவனங்களின் கொதிகலன்களின் தொழில்நுட்ப அனுபவத்தினையும் கருத்தில் கொண்டு பல்வேறு தரங்களில் இதற்கான ஒப்புதல்கள் அளிக்கப்படுகின்றன.

இந்திய கொதிகலன்கள் சட்டம், 1923-ன் விதிமுறைகளின்படி தேர்ச்சி பெற்ற கொதிகலப் பணியாளர்களே கொதிகலன்களை இயக்க அனுமதிக்கப்பட வேண்டும். இது தொடர்பாக தமிழ்நாடு அரசு கொதிகலன்கள் பணியாளர்கள் விதிகள், 1964 மற்றும் தமிழ்நாடு கொதிகலன்கள் இயக்கப் பொறியாளர்கள் விதிகள், 1965 ஆகியவற்றை செயல்படுத்தும் அமைப்பாகவும் இவ்வாய்வகம் செயல்பட்டு வருகின்றது. இதற்காக இந்த ஆய்வகம் கொதிகலப் பணியாளர்களுக்கெனவும் (நிலை-I, நிலை-II, மற்றும் நிலை-III) கொதிகலன்கள் இயக்கப் பொறியாளர்களுக்கெனவும் தேர்வுகளை நடத்தி, தேர்ச்சி பெறும் பணியாளர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு தகுதிச் சான்றிதழ்களை வழங்கி வருகின்றது. 1999-2000ஆம் ஆண்டில் கொதிகலன்கள் இயக்கப் பொறியாளர்கள் தேர்வு நடத்தப்பட்டுள்ளது. வரப்பெற்ற சுமார் 1,140 விண்ணப்பங்களில், தகுதி பெற்ற சுமார் 1,030 விண்ணப்பதாரர்கள் தேர்வுக்கு அழைக்கப்பட்டு, அவர்களில் 654 விண்ணப்பதாரர்கள் வாய்மொழி நேர்காணலுக்கு அழைக்கப்பட்ட பின்னர், அவர்களில் 469 விண்ணப்பதாரர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். 2000 ஆண்டின் முற்பகுதியில் கொதிகலப் பணியாளர்களுக்கான தேர்வு நடத்த இக்கொதிகல ஆய்வகத்தால் திட்டமிடப்பட்டு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழகத்திலிருந்து கொதிகலப் பணியாளர்கள் மற்றும் கொதிகலப் பொறியாளர்கள் தேர்வுச் சான்றிதழ்களை பெறுபவர்கள் வெளிநாடுகளிலும் வரவேற்பைப் பெறுவதிலிருந்து

[2000 ஏப்ரல் 29

இவ்வாய்வகம் நடத்தும் இத்தகைய தேர்வுகளின் தரம் எளிதில் விளங்கும். இவ்வாறு தேர்ச்சி பெற்ற கொதிகலப் பணியாளர்கள் மற்றும் கொதிகலப் பொறியாளர்களால் கொதிகலன்கள் பாதுகாப்பாக இயக்கப்படுகின்றனவா என்பதை கொதிகலன்கள் ஆண்டாய்வின்போது இவ்வாய்வகம் உறுதி செய்கின்றது.

பதிவு பெற்றுள்ள கொதிகலன்களைத் தவிர பதிவு பெறாமலும், சான்றிதழின்றியும் இயக்கப்படும் கொதிகலன்களைக் கண்டறிந்து, அவற்றின் இயக்கத்தை தடை செய்வதுடன் அத்தகைய கொதிகலன்களை பயன்படுத்துவோர் மீது இந்திய கொதிகலன்கள் சட்ட விதிகளுக்கு முரணாக பொது மக்களின் உயிர் மற்றும் உடமைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் கொதிகலன்களை அங்கீகாரமின்றி இயக்கி வருவதற்காக குற்றவியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பணியினையும் இவ்வாய்வகம் மேற்கொண்டு வருகின்றது.

தமிழ்நாடு கொதிகல ஆய்வகம், கண்காணிப்புப் பொறியாளர் நிலையிலுள்ள தலைமைக் கொதிகலன்கள் ஆய்வாளர் தலைமையில், மூன்று துணைத் தலைமைக் கொதிகலன்கள் ஆய்வாளர்களை சென்னை, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூரில் வட்டார நிலை அலுவலர்களாகக் கொண்டும், பதினொரு கொதிகலன்கள் ஆய்வாளர்களையும், பதினைந்து உதவி கொதிகலன்கள் ஆய்வாளர்களையும் கொண்டு தற்போது இயங்கி வருகின்றது.

இவ்வாய்வகத்தின் முக்கிய நோக்கமே இந்திய கொதிகலன்கள் சட்டம் *1923*-ன் விதிமுறைகளைச் செயலாக்குவதைத் திறம்பட கண்காணித்து பொதுமக்களின் உயிர் மற்றும் உடமைகளை பாதுகாப்பதுடன் பொதுச் சொத்துகளுக்கு சேதம் நிகழாவண்ணம் கொதிகலன்கள் பாதுகாப்புடன் இயங்குவதை உறுதி செய்வதுமே ஆகும். திறமையான மற்றும் சிறப்பான செயல்பாட்டினால் மேற்படி அடிப்படைக் கோட்பாட்டினை இக்கொதிகல ஆய்வகம் முழுமையாக நிறைவேற்றி வருகின்றது. இந்த நிர்வாக அறிக்கைக்குட்பட்ட கால அளவில் தமிழகத்தில் பதிவு செய்யப்பட்டு இயக்கத்திலுள்ள எந்தவொரு கொதிகலனும் விபத்துக்குள்ளாகாமல் இயங்கி வருவது இவ்வாய்வகம் சிறப்பாக செயல்பட்டு வருவதற்குச் சான்றாகும்.

இந்திய கொதிகலன்கள் ஒழுங்குமுறை விதிகள் *1950*-ன்கீழ் இந்தியாவிலேயே கொதிகலன்கள் மற்றும் உதிரி பாகங்கள் தயாரிப்பில் தொடர்ந்து தமிழகம் முதல்நிலை வகித்து வருவதால் தமிழ்நாடு



2000 ஏப்ரல் 29]

கொதிகலன்கள் ஆய்வகம் தனது சிறப்பான செயல் திறனால் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி மேலும் உத்வேகம் பெற உதவி, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் ஒரு முக்கிய அங்கமாகத் திகழ்கின்றது.

## பொதுப் பணித் துறை கட்டட அமைப்பு

### கொள்கை விளக்கக் குறிப்பு 2000-2001

பொதுப் பணித் துறை கட்டட அமைப்பு *01-04-1996* முதல் *16* வட்ட தனிப்பிரிவாக செயல்பட்டு வருகிறது. வட்டம் மற்றும் கோட்டம் பற்றிய விரிவான விவரங்கள் இணைப்புப் பகுதியில் உள்ளன.

தமிழ்நாடு பொதுப் பணித் துறை கட்டட அமைப்பு, அரசு துறைகளான வருவாய், சுகாதாரம் மற்றும் குடும்பநலம், கல்வி, உள்துறையைச் சார்ந்த நீதி, காவல், சிறை மற்றும் தீயணைப்பு ஆகியவற்றுக்காக, கட்டடங்கள் கட்டத் திட்டமிடுதல் மற்றும் வடிவமைத்தல், நிலம் கையகப்படுத்தல் மற்றும் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு திறம்பட செயல்பட்டு வருகிறது.

மேலும், மத்திய மற்றும் மாநில அரசு துறையைச் சார்ந்த கழகங்களான ஈ.எஸ்.ஐ. பல்கலைக்கழகங்கள், மலைவாழ் மேம்பாட்டுத் திட்டம், ஆடு வளர்ப்பு மேம்பாட்டுத் திட்டம், டேனிடா திட்டம், ஐரோப்பிய பொருளாதாரத் திட்டம், உலக வங்கித் திட்டம், ஐயூடிபி மற்றும் ஐ.டி.எம்.எஸ்.டி. பணிகள் ஆகியவை செலுத்துத் தொகை மற்றும் வைப்புத் தொகை மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் இக்கட்டட அமைப்பு, மாவட்ட ஆட்சித் தலைவரால் வழங்கப்படும், நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரை செய்யும் தொகுதி மேம்பாட்டுப் பணிகள் மற்றும் மாவட்ட சார்பு நிதியிலிருந்து அளிக்கப்படும் நிதி சார்பு பணிகளையும் மேற்கொள்கிறது. இது தவிர, இத்துறை, அரசு நினைவு இல்லங்கள், ஸ்தூபிகள் கட்டும் பணிகளையும் நிறைவேற்றுகிறது.

இத்துறை அரசு கட்டடங்கள், நினைவுச் சின்னங்கள், அரசினர் தோட்டம், ஆளுநர் மாளிகை, அமைச்சர்கள் மற்றும் மிக முக்கியமானவர்கள் இல்ல கட்டடப் பராமரிப்புப் பணிகளையும் மேற்கொள்கிறது. தமிழகத்தில் உள்ள பொதுப் பணித் துறை ஆய்வு

[2000 ஏப்ரல் 29

மாளிகைகள், சுற்றுலா மாளிகைகளின் பராமரிப்பு மற்றும் மெரினா கடற்கரை பராமரித்தல் போன்ற பணிகளையும் மேற்கொள்கிறது. மேலும் புயல், வெள்ளம் மற்றும் இயற்கைச் சீற்றத்தால் அரசு கட்டடங்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை செப்பனிடும் பணிகளையும் துரிதமாக மேற்கொண்டு செயல்படுத்துகிறது.

மேலும் கட்டடப் பிரிவு அலுவலர்கள், காவல் துறை புலனாய்வு குழுமம் நீதிமன்றங்கள் கோரும் வழக்கு சார்ந்த கட்டடங்கள் மற்றும் சொத்துக்களின் மதிப்பீடு தயார் செய்து தருகிறார்கள். மேலும், இக்கட்டட அமைப்பு, திரைப்பட அரங்குகள், பொதுக் கட்டடங்கள் ஆகியவற்றுக்கான உறுதிச் சான்றிதழ் வழங்குதல் மற்றும் அரசு அலுவலகங்களுக்கான வாடகை நிர்ணயச் சான்றிதழ் ஆகியவை வழங்குவதிலும் ஈடுபடுகிறது. மேலும் இவ்வமைப்பு மிக மிக முக்கியமானவர்கள் வருகையின்போது செய்யப்பட வேண்டிய சாலை ஓரத் தடுப்பு, கம்பி வேலி அமைப்புகள், மேடை அமைப்பு, ஒளி மற்றும் ஒலியமைப்புகளையும் செய்து வருகின்றது.

சென்னை தரமணியில் உள்ள கட்டட ஆராய்ச்சி மையம் கீழ்வரும் பணிகளை பொது மக்களுக்கு அளித்து வருகிறது:—

1. பொதுப் பணித் துறை கட்டட மையம் மூலம் பொறியாளர் மற்றும் கட்டடத் தொழில் வினைஞர்க்கான பயிற்சி வகுப்புகளை நடத்துகிறது.

2. பொதுப் பணித் துறை கட்டட மையம் கட்டட பணிகள் மற்றும் தொழில் நுட்ப ஆலோசனை வழங்கும் பணிகளையும் மேற்கொள்கிறது. கட்டடக் கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான விலை குறைந்த, தரம்வாய்ந்த கட்டுமானப் பொருள்கள், கருவிகள், தயார் செய்து சந்தைக்குக் கொண்டு வருவது மற்றும் கட்டுமானப் பணிகளில் உபயோகிப்பது ஆகிய பணிகளிலும் ஈடுபடுகிறது.

3. கட்டுமானப் பொருள்கள் தரப்பரிசோதனை செய்தல், அடிப்படை ஆய்வுப் பணி மற்றும் பயனீட்டு ஆய்வுப் பணிகளையும் நடத்துகிறது.

4. பழுதடைந்த கட்டடங்களை கூர்ந்த ஆய்வு செய்தல், தேவையான புனரமைப்புப், பணி சிபாரிசு செய்தல் மற்றும் அவற்றை பணிநிலைமைக்குக் கொண்டு வர தேவையான யுக்திகளைக் கையாளுதல் போன்ற சேவைகளையும் அளிக்கிறது.



2000 ஏப்ரல் 29]

**தலைமை கட்டடக் கலைஞர் பிரிவின் பணிகள்**

தலைமைப் பொறியாளர் மட்டத்தில், தலைமை கட்டடக் கலைஞரின் தலைமையில், கட்டட வரைகலைப் பிரிவு தனியாக இயங்கிக் கொண்டிருக்கிறது. இப்பிரிவு, பொதுப் பணித் துறையில் கட்டப்பட்டு வரும் அனைத்து அரசு கட்டடங்களுக்குத் தேவையான வரைபடங்களைத் தயாரிக்கிறது. மேலும் இப்பிரிவு புதிய கட்டடங்களுக்கான, முகப்புத் தோற்றம் மற்றும் வெட்டுத் தோற்றங்களைக் கொண்ட வரைபடங்களையும் தயாரிக்கிறது.

இக்கட்டடங்களுக்குத் தேவையான வண்ணப்பூச்சு பற்றிய விவரங்களையும் அறிவிக்கின்றது. இப்பிரிவு நினைவிடங்கள், மண்டபங்கள் மற்றும் பூங்காக்கள் ஆகியவற்றுக்கான வரைபடங்களை தயாரிப்பதோடல்லாமல் மிகப்பெரிய கட்டுமானப் பணிகளான புதிய மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் மற்றும் தலைமையிட அலுவகங்கள் உள்ளடங்கிய பெரும் திட்ட வளாகத்திற்குத் தேவையான உள்ளமைப்பு வரைபடங்களையும் தயாரிக்கின்றது. மேலும் தொகுப்பு அங்கீகாரம் மூலம் வழங்கப்படும் திட்டப் பணிகளான ஆரம்ப சுகாதார நிலையம், பள்ளிக்கூட கட்டடங்கள் ஆகியவற்றுக்கான மாதிரி வடிவமைப்பு வரைபடங்களையும் தயாரிக்கின்றது.

## 1999-2000 ஆண்டில் நடைபெற்று வரும் திட்டங்கள்

**1. சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறை**

**11 தமிழ்நாட்டில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் கட்டுதல்**

*1996-97* மற்றும் *1997-98* ஆம் ஆண்டுகளில் மாநிலத்தில் *652* ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்ட ரூபாய் *4968* இலட்சங்களுக்கு அரசால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. இதுவரை *599* கட்டடங்கள் நவீன வடிவமைப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. *9* கட்டடப் பணிகள் விரைவில் முன்னேற்றத்தில் உள்ளன. மீதம் *44* கட்டடப் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன. மேலும் தமிழ்நாட்டில் *200* துணை சுகாதார நிலையங்கள் கட்டுவதற்கு ரூபாய் *900* இலட்சத்திற்கு அரசால் அங்கீகாரம் அளிக்கப்பட்டதில், இதுவரை *187* துணை சுகாதார நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பதிமூன்று இடங்களில் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

[2000 ஏப்ரல் 29

**1.2 விபத்து மற்றும் அவசரக்கால சிகிச்சைப் பிரிவுகள்**

1997-98 மற்றும் 1998-99 ஆம் ஆண்டுகளில் 10 படுக்கைகள் கொண்ட விபத்து மற்றும் அவசரக் கால சிகிச்சை பிரிவு, அரியலூர், உசிலம்பட்டி, திருவள்ளூர், ஆம்பூர், திருவாரூர், திருமங்கலம், கொடைக்கானல், பல்லடம் மற்றும் ஜெயங்கொண்டம் ஆகிய மாவட்ட/தாலுகா தலைமையிட மருத்துவமனைகளில் கட்ட அரசால் ரூ.268.00 இலட்சத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது. மேற்கூறிய இடங்களில் நான்கு இடங்களில் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன மீதமுள்ள மாவட்ட/தாலுகா தலைமையிட மருத்துவமனைகளில் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

**1.3 காசநோய் சிகிச்சை நிலையங்கள்**

தமிழ்நாட்டில் காசநோய் சிகிச்சை நிலையங்கள், மாவட்ட தலைமை மருத்துவமனைகளான தென்காசி, இராமநாதபுரம், சிவகங்கை, திருப்பூர், உசிலம்பட்டி, திருவாரூர், நாமக்கல், நாகப்பட்டினம், கரூர், பெரம்பலூர் மற்றும் நாகர்கோயில் முதலிய பதினொன்று இடங்களில் கட்ட அரசு ரூ.330.00 இலட்சங்களுக்கு அங்கீகாரம் அளித்துள்ளது. மேற்கண்ட பதினொன்று இடங்களில் ஏழு இடங்கள் முறையே திருவாரூர், பெரம்பலூர், நாகப்பட்டினம், நாகர்கோவில், திருப்பூர், நாமக்கல் மற்றும் இராமநாதபுரம் ஆகியவற்றில் பணி முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள இடங்களில் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

**1.4 மருத்துவமனைகள் மேம்படுத்தல் திட்டம்**

மாவட்ட தலைமை, தாலுகா மற்றும் தாலுகா அல்லாத மருத்துவமனைகள் மேம்பாட்டுப் பணிகளுக்காக 1997-98ஆம் ஆண்டில் ரூ.250.00 இலட்சத்திற்கும், 1998-99 ஆம் ஆண்டில் ரூ.1840.00 இலட்சத்திற்கும், 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.134.00 இலட்சத்திற்கும் அரசால் அங்கீகாரம் அளிக்கப்பட்டது. இவை நூற்றி நாற்பத்திரெண்டு பணிகள் அடங்கியவையாகும். இவற்றில் எழுபத்தைந்து பணிகள் முடிக்கப்பட்டும், மீதமுள்ள பணிகள் விரைவான முன்னேற்றத்தில் உள்ளன.

**1.5 மருத்துவக் கல்வித் திட்டங்கள்**

1997-98ஆம் ஆண்டில் திருச்சியில், கி.ஆ.பெ. விஸ்வநாதன் மருத்துவக் கல்லூரி கட்ட ரூ.1273.00 இலட்சங்களுக்கு அரசால் அங்கீகாரம் அளிக்கப்பட்டது. இதில் கீழ்கண்ட பணிகள் அடங்கும்:—



2000 ஏப்ரல் 29]

| | | |
|---|---|---|
| 1. | நிர்வாக அலுவலகப் பிரிவு | 61.00 |
| 2. | அறிவியல் கட்டடப் பிரிவு "அ" மற்றும் "ஆ" பிரிவு | 540.00 |
| 3. | ஒரு அறைக்கு 150 மாணவர்கள் வீதம் 600 மாணவர்களுக்காக 4 விரிவுரையாளர் கூடம் | 119.00 |
| 4. | 400 மாணவர்களுக்கான விரிவுரையாளர் கூடம் | 59.00 |
| 5. | நூலகக் கட்டடம் | 70.00 |
| 6. | 100 மாணவர்களுக்கான விடுதி | 120.00 |
| 7. | 100 மாணவியர்களுக்கான சுற்றுச் சுவருடன் கூடிய விடுதி | 124.00 |
| 8. | அரங்கம் | 100.00 |
| 9. | வளாக வளர்ச்சிப் பணிகள் | 80.00 |
| | மொத்தம் .. | **1273.00** |

மேற்கூறிய கட்டடங்களில், நிர்வாக அலுவலகப் பிரிவுக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள பணிகளில், அரங்க கட்டடப் பிரிவைத் தவிர மற்ற பணிகள் விரைவான முன்னேற்றத்தில் உள்ளன. அரங்க கட்டடப் பிரிவு மட்டும் 31-07-2000-க்குள் கட்டி முடிக்கப்படும். இவ்வாண்டில் தூத்துக்குடியில் அரசு மருத்துவக் கல்லூரிக்கான புதிய கட்டடங்கள் கட்ட ரூ.1540.00 இலட்சத்திற்கு அரசால் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. தற்சமயம், தூத்துக்குடியில் அரசு தொழில் நுட்ப மையத்திற்கு அருகில் பணிதளம் தேர்வு செய்யப்பட்டு மருத்துவக் குழுவின் அங்கீகாரத்திற்குத் திட்டம் அனுப்பப்பட்டுள்ளது. பணிதளத்திற்கு மருத்துவக் குழுவின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றவுடன் பணிகள் எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு முதலமைச்சரின் நமக்கு நாமே திட்டத்தின்கீழ் சேலம் மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரியில் நான்கு தளங்கள் கொண்ட அறுவை சிகிச்சை பிரிவு கட்ட ரூ. 400.00 இலட்சத்திற்கு அரசால் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை நிறைவேற்றிட ரூ.100.00 இலட்சங்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டு சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரால் வைப்புநிதியில் வைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது இப்பணி தொடங்கப்பட்டுள்ளது.

மேலும் சித்தா மற்றும் ஹோமியோபதி மருத்துவ வளர்ச்சிக்காக கட்டடங்கள் கட்ட ரூ.141.00 இலட்சத்திற்கு அரசால் அங்கீகாரம் அளிக்கப்பட்டு, பணிகள் இவ்வாண்டு இறுதிக்குள் முடிக்கப்படும் நிலையில் உள்ளன.

**1.6. கண் பார்வை குறைவு தடுப்புத் திட்டம்**

தமிழ்நாட்டில் உள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளான இருபத்தைந்து இடங்களில், கண்புரை அகற்று சிகிச்சைப் பிரிவு கட்ட, உலக வங்கி நிதியுதவியின்கீழ் மத்திய அரசால் ரூ.1421.00 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, அனைத்து இடங்களிலும் இவ்வாண்டில் பணிகள் முடிக்கப்பட்டன. இரண்டாம் கட்டமாக மேலும் பத்து இடங்களில் ரூ.355.00 இலட்சத்தில் கண்புரை அகற்று சிகிச்சைப் பிரிவு கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

**2. வருவாய் துறை**

**2.1 மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம்**

புதியதாக உருவாக்கப்பட்ட ஏழு மாவட்டங்களான திருவாரூர், நாகப்பட்டினம், திருவண்ணாமலை, கரூர், திருவள்ளூர், நாமக்கல் மற்றும் தேனி ஆகிய இடங்களில் பெருந் திட்ட வளாகத்தின்கீழ் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்கள் கட்ட ரூ.3854.00 இலட்சத்திற்கு அரசால் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. விரைவான முன்னேற்றத்தில் உள்ள இப்பணிகள் யாவும் 30-09-2000-க்குள் முடிக்கப்படும்.

**2.2 வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம்**

நடப்பு ஆண்டில், பெரம்பலூர், திருச்செங்கோடு, திருவாரூர், உத்தமபாளையம், மதுராந்தகம் மற்றும் திருத்தணி ஆகிய இடங்களில் மொத்தம் ரூ.374.00 இலட்சத்தில் வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ரூபாய் 116.40 இலட்சத்தில், லால்குடி, உடையார்பாளையம், திருச்செந்தூர் மற்றும் கள்ளக்குறிச்சியில், வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. கூடிய விரைவில் முடிக்கப்படும்.



**2.3 வட்டாட்சியர் அலுவலகம்**

செந்துறை, குன்னம், அரவக்குறிச்சி, முதுகளத்தூர், பாப்பிரெட்டிபட்டி மற்றும் கமுதி ஆகிய ஆறு இடங்களில் வட்டாட்சியர் அலுவலகம் கட்ட ரூ.414.00 இலட்சத்திற்கு அரசால் அங்கீகாரம் அளிக்கப்பட்டு நடப்பு ஆண்டில் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டன.

அரசால், ரூ.669.00 இலட்சத்தில் வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்ட அங்கீகாரம் அளிக்கப்பட்ட கீழ்கண்ட இடங்களான தாம்பரம், அம்பத்தூர், ஆரணி, கடலாடி, திருவையாறு, ஒட்டன்சத்திரம், போச்சம்பள்ளி மற்றும் சிவகாசி ஆகியவற்றில் திருவையாறு, சிவகாசி, கடலாடி மற்றும் அம்பத்தூரில் அலுவலகங்கள் கட்டி முடிக்கப்பட்டன. மீதமுள்ள இடங்களில் பணிகள் விரைவான முன்னேற்றத்தில் உள்ளன.

**2.4 வருவாய்த் துறை அலுவலர் குடியிருப்பு**

விழுப்புரத்தில் மாவட்ட ஆட்சியர் குடியிருப்பு ரூ.43.00 இலட்சத்திலும், விழுப்புரம், தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் வருவாய் கோட்டாட்சியர் குடியிருப்பு ரூ.50.00 இலட்சத்திலும், விழுப்புரத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி அலுவலர் குடியிருப்பு ரூ.21.00 இலட்சத்திலும், சேலம், தர்மபுரி மற்றும் நீலகிரி மாவட்ட மலைப்பகுதிகளில் 22 இடங்களில் வருவாய் ஆய்வாளர் குடியிருப்புகளும் நடப்பு நிதியாண்டில் கட்டி முடிக்கப்பட்டன.

**2.5 பதிவறைகள் கட்டுதல்**

பத்தாவது நிதிக் குழுவின் பரிந்துரைப்படி, சென்னையில் பதிவறைக்காக மத்தியக் கிடங்கு ரூ.300.00 இலட்சத்திலும் மற்றும் பல்வேறு மாவட்டங்களில் முப்பத்தி மூன்று இடங்களில் பதிவறை ரூ.330.00 இலட்சத்திலும் கட்ட அரசால் ரூ.630.00 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணிகள் யாவும் முன்னேற்றத்தில் உள்ளன.

**3. உள் துறை:**

**3.1 நீதித் துறை**

ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள், விருதுநகரில் ரூ.310.00 இலட்சத்திலும், திருத்தணியில் ரூ.126.00 இலட்சத்திலும் சேலத்தில் இரண்டாவது கட்டமாக ரூ.393.00 இலட்சத்திலும், மற்றும் நீதிமன்றக் கட்டடமும் குடியிருப்பும் கோயம்புத்தூரில் ரூ.929.00 இலட்சத்திலும்,

உதகமண்டலத்தில் ரூ.789.00 இலட்சத்திலும், மதுரை மாவட்டம் நீதிமன்றக் வளாகத்தில் சட்ட வல்லுநர் அறைகள் ரூ.160.00 இலட்சத்திலும், சென்னையில் சட்ட வல்லுநர் அறை அச்சகக் கட்டடம் மற்றும் ஓவர்சியர் குடியிருப்பு ஆகியவை ரூ.1245.00 இலட்சத்திலும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இவற்றில் அச்சகக் கட்டடமும், ஓவர்சியர் கட்டடமும் கட்டி முடிக்கப்பட்டன.

நடப்பு ஆண்டில் சென்னை நீதிமன்ற வளாகத்தில் ஏற்கெனவே உள்ள நிர்வாக அலுவலகத்தில் கூடுதல் தளம் ரூ.70.00 இலட்சத்தில் கட்டவும், நீதிமன்ற வளாகத்தில் உள்ள இணைப்புக் கட்டடத்திலுள்ள கேரேஜ் பகுதியை அலுவலகமாக மாற்றி அமைக்க ரூ.38.00 இலட்சத்திற்கும் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் கூடிய விரைவில் தொடங்கப்படவுள்ளன.

தேவையான வசதிகளை அளிக்கும் வகையில் அட்கோ கடனுதவியுடன் ரூ.1365.00 இலட்சத்தில் சென்னையில் 30 நீதிபதி மாளிகைகள் கட்ட அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் கூடிய விரைவில் தொடங்கப்படவுள்ளன.

மேலும், ரூ.175.50 இலட்சத்தில் திருநெல்வேலியில் சட்டக் கல்லூரி கட்டடம் கட்டும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. மற்றும் திருச்சி சட்டக் கல்லூரியில் மாணவியர் விடுதி ரூ.78.90 இலட்சத்தில் கட்ட, பணி தொடங்கப்படவுள்ளது.

**3.2 காவல்**

**புதிய காவல் நிலையங்கள் கட்டுதல்**

1997-98 ஆம் ஆண்டில் அரசு ஆணை எண் 841/உள்துறை/நாள் 3-6-1997 மூலம் ரூ.1500.00 இலட்சத்தில் 79 காவல் நிலையங்கள் கட்ட ஒப்புதல் அளித்ததில், 64 இடங்களில் பணிகள் முடிக்கப்பட்டன. மீதமுள்ள பதினைந்து இடங்களில் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

1998-99 ஆம் ஆண்டில், மாண்புமிகு முதலமைச்சர் அறிவிப்பின்படி, அரசு ஆணை எண் 811/உள்துறை, நாள் 22-6-1998 மூலம் ரூ.277.05 இலட்சத்தில் பதினைந்து காவல் நிலையங்கள் கட்ட அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டதில் ஐந்து காவல் நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன, மற்றும் மீதமுள்ள பத்து இடங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளதால், 31-3-2000-க்குள் கட்டி முடிக்கப்பட்டுவிடும்.



1998-99 பகுதி-2 திட்டத்தின் கீழ், ரூ.461.75 இலட்சத்தில், 25 காவல் நிலையங்கள் கட்ட அரசாணை எண் 694/உள்துறை/நாள் 5-6-1998 மூலம் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டதில் 15 காவல் நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டன, மற்றும் மீதமுள்ள பத்து இடங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

மேலும் 1998-99 பகுதி-2 திட்டத்தின் கீழ் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட 3 பணிகள் முறையே:

1. ரூ.20.00 இலட்சத்தில் மருதம் வளாகம், சென்னையில் கூடுதல் தளம் கட்டுதல் (அரசாணை எண்691/உள்துறை/நாள் 5-6-1998) பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

2. ரூ.25.00 இலட்சத்தில் சென்னை எழும்பூரில் உள்ள காவல் அலுவலர் உணவக விடுதியில் கூடம் கட்டுதல் (அரசாணை எண்692/உள்துறை/நாள் 5-6-1998) ஒப்பந்தக்காரர் முடிவு செய்யப்பட்டு ஆரம்ப கட்டப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

3. விருதுநகரில் ரூ.15.00 இலட்சத்தில் காவல் கண்காணிப்பாளர் குடியிருப்பு கட்டுதல் (அரசாணை எண் 693/உள்துறை/நாள் 5-6-1998) பணி முடிக்கப்பட்டது.

1999-2000 ஆம் ஆண்டின் பகுதி-2 திட்டமாக, அரசாணை எண் 763/உள்துறை/நாள் 1-6-1999 முதல் ரூ.461.92 இலட்சத்தில் 20 காவல் நிலையங்கள் கட்ட அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டதில், பதினேழு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன, மூன்று பணிகள் பணிதளம் தேர்வு செய்யப்பட்டவுடன் எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

மேலும், மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பின்படி ரூ.200.28 இலட்சத்தில் 10 காவல் நிலையங்கள் கட்ட அரசாணை எண் 715/உள்துறை/25-5-1999-ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டதில், எட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன, மற்றும் இரண்டு பணிகள் பணிதளம் தேர்வு செய்யப்பட்டவுடன் எடுத்து கொள்ளப்படவுள்ளன.

வெளிப்பாளையத்தில், நாகப்பட்டினம் மாவட்டக் காவல் அலுவலகம் கட்ட ரூ.210.00 இலட்சத்தில் அரசாணை எண் 621/உள்துறை/நாள் 7-5-1999-ன்படி அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணி முன்னேற்றத்தில் உள்ளது.

[2000 ஏப்ரல் 29

### 3.3 சிறை

பத்தாவது நிதிக் குழுவின் பரிந்துரைப்படி சிறைச்சாலைகளின் நிலையினை உயர்த்த, ரூ.254.00 இலட்சத்திற்கு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இவற்றில் 84 பணிகள் அடங்கும், மற்றும் இப்பணிகள் யாவும் விரைவான முன்னேற்றத்தில் உள்ளதால், விரைவில் முடிக்கப்படும்.

மேலும் ரூ.20.11 இலட்சத்திற்கு, கீழ்க்கண்ட பணிகளுக்கு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | அரசாணை எண்/தேதி | நிர்வாக ஒப்புதல் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | சென்னை மத்தியச் சிறையில் கைதிகளைப் பார்க்கவரும் பார்வையாளர்களைச் சோதனை செய்யும் அறை கட்டுதல் | 743/உள்துறை 27-5-99 | 2.00 |
| 2. | மதுரை மத்தியச் சிறையில் ஊழியர்களின் குடியிருப்புக்குத் தனியாக மின் இணைப்பு வழங்குதல் | 740/உள்துறை 27-5-99 | 1.51 |
| 3. | சேலம் மத்தியச் சிறையில் ஊழியர்களின் குடியிருப்புக்குத் தனியாக மின் இணைப்பு வழங்குதல் | 741/உள்துறை 27-5-99 | 9.50 |
| 4. | வேடசந்தூர் துணை சிறையில் பெண் கைதிகளுக்காகக் குளியல் அறையும், கழிப்பிட வசதியும் செய்தல் | 742/உள்துறை 27-5-99 | 1.15 |
| 5. | வேலூர் மத்தியச் சிறையில் ஊழியர் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்தல் | 743/உள்துறை 27-5-99 | 5.00 |
| 6. | வேடசந்தூர் துணை சிறையில் மேல்நிலைத் தொட்டி வசதியுடன் குடிநீர் வசதி செய்தல் | 744/உள்துறை 27-5-99 | 0.95 |
| | மொத்தம் | | **20.11** |

மேற்கூறிய பணிகள் யாவும் முடிக்கப்பட்டு விட்டது



2000 ஏப்ரல் 29]

### 3.4 தீயணைப்புத் துறை

அரசாணை எண் 467/உள்துறை/நாள் 21-3-1997 மூலம் ரூ.100.00 இலட்சத்திற்கு தாம்பரத்தில், தமிழ்நாடு தீயணைப்புத் துறை மாநில பயிற்சிப் பள்ளி கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டது. இக்கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### 4. பதிவுத் துறை

நடப்பு ஆண்டில், இதுவரை வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த பத்து துணை பதிவு அலுவலகங்கள் முறையே பனங்குடி, திருவாடனை, அன்னியூர், பேராவூரணி, பேரையூர், கரம்பக்குடி, கருக்காலக்குடி தியாகதுருகம், தாமல் மற்றும் சின்னாளப்பட்டி ஆகிய ஊர்களில் புதிய கட்டடம் கட்ட ரூ.132.10 இலட்சத்திற்கு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேற்கூறியவற்றில், திருவாடனை தவிர மற்ற இடங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. திருவாடனைக்கு மாற்றாக திருவோணத்தில் பணிதளம் தேர்வு செய்யப்பட்டு பணி கூடிய விரைவில் தொடங்கப்படவுள்ளது.

### 5. கல்வித் துறை:

666 உயர் நிலைப்பள்ளிகளில் ரூ.225.00 இலட்சத்திற்கு கணினி கல்விக்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மாவட்ட ஆரம்ப கல்வி திட்டத்தின்கீழ் பெரம்பலூர், புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள 366 ஆரம்பப்பள்ளிகளில் ரூ.2003.00 இலட்சத்தில் வகுப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

ரூ.2560.00 இலட்சத்தில், 373 பள்ளிகளில். விஞ்ஞான ஆய்வுக் கூடம் கட்டும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டு, 370 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள மூன்று பணிகள் பணிதளம் தேர்வு செய்யப்பட்டவுடன் எடுத்துக் கொள்ளப்படும்.

ரூ.2560.00 இலட்சத்தில் 226 பள்ளிகளில் இரண்டு வகுப்பறைகள் மற்றும் ரூ.1000.00 இலட்சத்தில் 194 பள்ளிகளில், மூன்று மற்றும் நான்கு வகுப்பு அறைகள் கட்டும் பணியும் முடிக்கப்பட்டுள்ளன.

1998-99-ம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் சேலம் அரசு மகளிர் கலைக் கல்லூரியில் விடுதி கட்டும் பணி ரூ.180.00 இலட்சத்திலும்,

[2000 ஏப்ரல் 29

வகுப்பறைகள் கட்டும் பணி ரூ.42.00 இலட்சத்திலும் அரசு ஆண்கள் கலைக் கல்லூரியில் நூற்றாண்டு விழா கட்டடம் ரூ.61.35 இலட்சத்திலும் கட்ட அங்கீகாரம் அளிக்கப்பட்டன. இவற்றில் வகுப்பறைகள் கட்டும் பணி முடிக்கப்பட்டது. ஏனைய இரண்டு பணிகள் விரைவான முன்னேற்றத்தில் உள்ளன.

ஆத்தூர் அரசு கலைக் கல்லூரியில் ரூ.53.24 இலட்சத்திலும், விருத்தாசலம், கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரியில் ரூ.18.81 இலட்சத்திலும், மன்னார்குடி, இராஜகோபாலசுவாமி அரசு கலைக் கல்லூரியில் ரூ.10.56 இலட்சத்திலும், கூடுதல் வகுப்பறைகள் கட்ட அனுமதியளிக்கப்பட்டு, கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரியில் பணி முடிக்கப்பட்டது. ஏனைய இரு இடங்களிலும் பணிகள் விரைவான முன்னேற்றத்தில் உள்ளன.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம், சென்னையில், ரூ.90.00 இலட்சம் செலவில் நூலகம் கட்டப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**6. பொதுப் பணித் துறை**

அரசாணை எண் 203, பொதுப் பணித் துறை தேதி 5-5-1997-ல் ரூ.148.35 இலட்சத்திற்கு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, சென்னை, அடையார் கிரீன்வேஸ் சாலையில் மாண்புமிகு அமைச்சர்களுக்காக மூன்று மாளிகைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

அரசாணை எண் 336, பொதுப் பணித் துறை தேதி 4-6-1998-ல் ரூ.270.00 இலட்சத்தில் மாண்புமிகு அமைச்சர்களுக்காக ஐந்து மாளிகைகள் கட்டும் பணி எடுத்து கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

**7. பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்புத் துறை**

**7.1 பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவருக்கான புதிய விடுதிகள் கட்டுதல்**

1996-97 மற்றும் 1999-2000 ஆண்டில் தமிழ் நாட்டில் 47 இடங்களில் விடுதிகள் கட்ட ரூபாய் 903.10 இலட்சத்திற்கு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதில் முப்பத்தி ஒன்பது பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள எட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.



2000 ஏப்ரல் 29]

**7.2 பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவருக்கு ஏற்கெனவே உள்ள விடுதிகளில் மேம்பாட்டுப் பணிகள்**

1996-97 மற்றும் 1999-2000 ஆண்டில் ஏற்கெனவே 246 இடங்களில் உள்ள விடுதிகளில் மேம்பாடு படுத்தும் பணிக்காக ரூ.456.31 இலட்சத்திற்கு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதில் நூற்றி எழுபத்தி ஒன்று பணிகள் முடிக்கப்பட்டுள்ளன மற்றும் மீதமுள்ள எழுபத்தைந்து பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**8. சமூக நலத் துறை**

1997-98 மற்றும் 1998-99 ஆம் ஆண்டில் 5 இடங்களில் கட்டடம் கட்ட ரூபாய் 286.00 இலட்சத்திற்கு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதில் நான்கு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன, மற்றும் ஒரு பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**9. சட்டமன்ற உறுப்பினர் அலுவலகக் கட்டடம்**

அரசாணை எண் 638/சமபி/தேதி 25-10-1999-ல் ஒவ்வொரு அலுவலகமும் ரூ.4.50 இலட்சம் மதிப்பில் 234 சட்டமன்ற உறுப்பினர் தொகுதிகளில் அலுவலகம் கட்ட அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

**10. உலக வங்கி நிதியுதவியின் கீழ் நீர்வள ஆதார அமைப்புத் திட்டம் மற்றும் நீரியல் கட்டடப் பணிகள்**

நீர்வள ஆதார அமைப்பு கட்டடப் பணிகளுக்கு, திட்ட மதிப்பீடு கருத்துருவின்படி ரூ.4873.50 இலட்சம் ஒதுக்கப்பட்டது. அவற்றில் ரூ.4256.50 இலட்சம் மதிப்புள்ள பணிகள் இனங்கண்டுகொள்ளப்பட்டன. ரூ.2245.40 இலட்சம் மதிப்புள்ள கட்டடப் பணிகள் கட்டி முடிக்கப்பட்டன. ரூபாய் 998.30 இலட்சம் மதிப்புள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. ரூ.644.80 இலட்சம் மதிப்புள்ள பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பரிசீலனையில் உள்ளன. ரூ.78.00 இலட்சம் மதிப்புள்ள பணிகளுக்கு, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்படவுள்ளன. மீதமுள்ள ரூபாய் 289.90 இலட்சம் மதிப்புள்ள பணிகளுக்கு அந்த அந்த மண்டலத்தைச் சார்ந்த தலைமைப் பொறியாளரால் ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

[2000 ஏப்ரல் 29

(ரூ. இலட்சம்)

**சில முக்கிய பணிகளின் நிலை:**

**10.1 முடிக்கப்பட்ட பணிகள்**

| | | |
|---|---|---|
| 1. | நீர்வள ஆதார அமைப்பு, தலைமைப் பொறியாளருக்காக, சென்னை தரமணியில் நூலகம், கணினிமையம், சொற்பொழிவு அறை, வண்டிக்கொட்டில் ஆகியன உள்ளடக்கிய ஒருங்கிணைந்த கட்டடங்கள் கட்டுதல் | 191.80 |
| 2. | தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, திருச்சி மண்டல அலுவலகக் கட்டடம் கட்டுதல் | 122.00 |
| 3. | பூண்டி இயக்குநர் மற்றும் தலைமைப் பொறியாளருக்காக மின்தூக்கி அறை, 1,2,3 கட்டும் பணி | 265.31 |
| 4. | திருச்சியில், திருச்சி மண்டல நீர்வள ஆதார அமைப்பு, தலைமைப் பொறியாளர் மற்றும் அலுவலர்களுக்குக் குடியிருப்பு கட்டும் பணி | 67.71 |
| 5. | விருதுநகரில் ஒருங்கிணைந்த வட்ட அலுவலகம் மற்றும் வைப்பாறை பாசன திட்ட கோட்ட அலுவலகம் கட்டும் பணி | 71.50 |

**10.2 முன்னேற்றத்தில் உள்ள பணிகள்**

| | | |
|---|---|---|
| 1. | பொள்ளாச்சியில், மண்டல நீர்வள ஆதார அமைப்பு தலைமைப் பொறியாளர் அலுவலகம், தலைமைப் பொறியாளர் மற்றும் சார்நிலை அலுவலர்களுக்குப் குடியிருப்பு கட்டுதல் | 250.00 |
| 2. | பழனி சிவகிரி பட்டியில் நீர்வள ஆதார அமைப்பு கண்காணிப்புப் பொறியாளர் (சிறப்பு) வட்டம் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி | 68.00 |
| 3. | கொடைக்கானல் கோகினூர் மாளிகை வளாகத்தில் நீர்வள ஆதார அமைப்பு திட்ட கட்டடம் கட்டும் பணி | 109.80 |



2000 ஏப்ரல் 29]

(ரூ. இலட்சம்)

| | | |
|---|---|---|
| 4. | பொள்ளாச்சி எம்.கே. பட்டியில் உள்ள பரம்பிக்குளம் ஆழியாறு திட்ட குடியிருப்பில் மேம்பாட்டுப் பணிகள் | 100.00 |
| 5. | சென்னை தரமணியில் தரக்கட்டுப்பாடு பரிசோதனை மையம் அமைக்கும் பணி | 98.00 |

**10.3 ஒப்பந்தப் புள்ளி பரிசீலனையில் உள்ள பணிகள்**

| | | |
|---|---|---|
| 1. | சேப்பாக்கத்தில் பொதுப்பணித் துறை வளாகத்தில் சென்னை மண்டல நீர்வள ஆதார அமைப்பு தலைமைப் பொறியாளர் அலுவலகம், கொசஸ்தலையாறு ஆரணியாறு வடிநிலக் கோட்ட செயற்ப் பொறியாளருக்கான அலுவலகம், கணினி அறை முதலியன கட்டுதல் | 180.00 |

**10.4. நீரியியல் கட்டடங்கள்**

தமிழ்நாடு நீரியியல் திட்ட கட்டடங்களுக்காக 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.728.20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீட்டில், நான்கு ஆய்வகம், நான்கு கோட்ட அலுவலகம், 10 துணை கோட்ட அலுவலகம் மற்றும் 58 பிரிவு அலுவலகக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இரண்டு துணை கோட்ட அலுவலகம் மற்றும் இரண்டு பிரிவு அலுவலகம் முடியும் தருவாயில் உள்ளன.

ரூபாய் 210.00 இலட்சம் மதிப்புள்ள பணிகளான தஞ்சாவூரில் நிலத்தடி நீர் வட்ட அலுவலகம், கடலூர், வேலூர், திருநெல்வேலி, சேலம் மற்றும் திருச்சியில் நிலத்தடி நீர் கோட்ட அலுவலகம் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன.

**சில முக்கிய பணிகளின் நிலை:**

(ரூ. இலட்சம்)

**10.4.1 முடிக்கப்பட்ட பணிகள்**

| | | |
|---|---|---|
| 1. | தரமணியில் தலைமைப் பொறியாளர், நிலத்தடி மற்றும் நில மேற்பரப்பு நீர் ஆதார விவர மைய அலுவலகக் கட்டடம் கட்டும் பணி | 255.00 |

[2000 ஏப்ரல் 29

| | (ரூ. இலட்சம்) |
|---|---|
| 2. திருச்சியில் புவிசார் வேதியியல் பரிசோதனைக் கூடம், வட்டம், கோட்டம் மற்றும் பிரிவு அலுவலகம் கட்டும் பணி | 30.50 |
| 3. மதுரையில் புவிசார் வேதியியல் பரிசோதனைக் கூடம், வட்டம், கோட்டம் மற்றும் பிரிவு அலுவலகம் கட்டும் பணி | 36.00 |
| 4. பொள்ளாச்சியில் புவிசார் வேதியியல் பரிசோதனைக் கூடம், வட்டம், கோட்டம் மற்றும் பிரிவு அலுவலகம் கட்டும் பணி | 32.75 |
| 5. சென்னையில் புவிசார் வேதியியல் பரிசோதனைக் கூடம், வட்டம், கோட்டம் மற்றும் பிரிவு அலுவலகம் கட்டும் பணி | 60.00 |

**10.4.2 முன்னேற்றத்தில் உள்ள பணிகள்**

| | |
|---|---|
| 1. தஞ்சாவூரில் நிலத்தடி நீர் வட்ட அலுவலகக் கட்டடம் கட்டுதல் | 55.00 |
| 2. திருநெல்வேலியில் நிலத்தடி நீர் கோட்ட அலுவலகக் கட்டடம் கட்டுதல் | 25.00 |

**10.4.3 ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ள பணிகள்**

| | |
|---|---|
| 1. கடலூரில் நிலத்தடி நீர் கோட்ட அலுவலகக் கட்டடம் கட்டுதல் | 35.00 |
| 2. சேலத்தில் நிலத்தடி நீர் கோட்ட அலுவலகக் கட்டடம் கட்டுதல் | |
| 3. திருச்சியில் நிலத்தடி நீர் கோட்ட அலுவலகக் கட்டடம் கட்டுதல் | |



2000 ஏப்ரல் 29]

**11 நினைவகங்கள்:**

**11.1 பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் நினைவிடம்**

பட்டுக்கோட்டை திரு. கல்யாணசுந்தரம் அவர்களுக்கு ரூ.20.50 இலட்சம் மதிப்பில் நினைவிடம் அமைத்து, 15-12-1999 அன்று தமிழ்நாடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

**11.2 பகுத்தறிவு கவிராயர் உடுமலை நாராயண கவி நினைவிடம்**

உடுமலைபேட்டையில் ரூ.20.50 இலட்சம் மதிப்பில் உடுமலை நாராயண கவி நினைவிட கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

**11.3 காமராசர் மணிமண்டபம்**

கன்னியாகுமரியில் பெருந்தலைவர் காமராசர் அஸ்தி வைக்கப்பட்ட இடத்தில் ரூ.50.00 இலட்சம் மதிப்பில் மணிமண்டபம் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டு பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**11.4 குன்றக்குடி அடிகளார் நினைவிடம்**

குன்றக்குடியில் ரூ.22.00 இலட்சம் மதிப்பில் தவத்திரு குன்றக்குடி அடிகளாருக்கு நினைவிடம் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**11.5 அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபம்**

சென்னை, கிரீன்வேஸ் சாலையில், ரூபாய் 500.00 இலட்சத்தில் அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டும் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.

**11.6 சுற்றுலா வளர்ச்சிக் கழகப் பணிகள்**

சென்னை அரசினர் தோட்டத்தில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்காக நிர்வாகப் பகுதி வளாகம் கட்ட ரூபாய் 250.00 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. பணி கூடிய விரைவில் தொடங்கப்படும்.

[2000 ஏப்ரல் 29

# இணைப்பு - 1

## நீர்வள ஆதார அமைப்பு

### வடிநிலப்பகுதி வாரியாக பிரிக்கப்பட்ட விவரம்

### சென்னை மண்டலம்

| வடி நில எண் | வடிநில ஆறு | கிளையாறு | கிளையாற்றின் கிளையாறு |
|---|---|---|---|
| 1. | ஆரணியாறு | 1.1. இளம்காலவாய் | |
| 2. | கொரட்டலையாறு | 2.1 நகரியாறு | |
| | | 2.2 நந்தியாறு | |
| | | 2.3 அக்கூறு ஆறு | |
| 3. | கூவம் | | |
| 4. | அடையாறு | | |
| 5. | பாலாறு | 5.1 கல்லாறு | |
| | | 5.2 மலட்டாறு | 5.2.1. கொட்டார்வங்கா |
| | | | 5.2.2. கொட்டார்வங்கா |
| | | 5.3 கௌண்டன்யா நதி | 5.3.1. கொட்டாறு |
| | | 5.4 புண்ணிய தீர்த்த நதி | 5.4.1 குண்டகல்லன் ஆறு |
| | | 5.5 மலைகானாறு | |
| | | 5.6 பொன்னணையாறு | |
| | | 5.7 செய்யாறு | 5.7.1. கரவனாறு |
| | | | 5.7.2. காட்டாறு |
| | | | 5.7.3. கமண்டலாறு |
| | | | 5.7.3.1. நந்தியாறு |
| | | | 5.7.4. கலவைமடுவு |
| | | 5.8 கிளியாறு | |
| 6. | ஓங்கூர் ஆறு | | |
| 7. | வராக நதி | 7.1. தொண்டியாறு | |
| | | 7.2 பம்பையாறு | |



2000 ஏப்ரல் 29]

| வடி நில எண் | வடிநில ஆறு | கிளையாறு | கிளையாற்றின் கிளையாறு |
|---|---|---|---|
| சென்னை மண்டலம்—தொடர்ச்சி. | | | |
| 8. | மலட்டாறு | 8.1 மலட்டாறு | |
| 9. | பெண்ணையாறு | 9.1 சின்னாறு - 1 | |
| | | 9.2 சின்னாறு - 2 | |
| | | 9.3 மார்கண்ட நதி | 9.3.1 நாச்சிகுப்ப நதி |
| | | | 9.3.2. வேப்பம்பட்டி நதி |
| | | 9.4. புள்ளம்பட்டி ஆறு | 9.4.1 செம்மான்குப்பனாறு |
| | | 9.5. பாம்பாறு | 9.5.1 மட்டூர் ஆறு |
| | | | 9.5.2. பர்கூர் ஆறு |
| | | | 9.5.3 கானாறு |
| | | 9.6 வாணி ஆறு | 9.6.1. கல்லாறு |
| | | | 9.6.2 வரட்டாறு |
| | | 9.7 கல்லாறு | 9.7.1 கோவிலாறு |
| | | 9.8 பாம்பன் ஆறு | |
| | | 9.9 முகக்குந்தா நதி | |
| | | 9.10 துரிஞ்சலாறு | |
| 10. | கெடிலம் | | |
| 11. | வெள்ளாறு | 11.1 வசிஷ்ட நதி | 11.1.1 ஆனைமடுவாறு |
| | | | 11.1.2 கரிய கோவிலாறு |
| | | | 11.1.3 சிங்கபுரமாறு |
| | | | 11.1.4 மல்லியபரை ஆறு |
| | | | 11.1.5 மாங்கனியாறு |
| | | 11.2 கல்லாறு | 11.2.1 எட்டலாறு |
| | | | 11.2.2 சுவேதா நதி |
| | | 11.3 சின்னாறு | 11.3.1 கோனேரி ஆறு |
| | | | 11.3.2 ஏல ஊர் ஆறு |
| | | 11.4 காட்டோடை | |
| | | 11.5 மணி முக்தாநதி | 11.15.1 கோமுகி நதி |
| | | | 11.5.2 மயூரா நதி |

| வடிநில எண் | வடிநில ஆறு | கிளையாறு | கிளையாற்றின் கிளையாறு |
|---|---|---|---|
| **திருச்சி மண்டலம்** | | | |
| 12. | காவிரி | 12.1 சந்தான முத்து ஹல்லா | |
| | | 12.2 தொட்டஹல்லா ஆறு | |
| | | 12.3 சின்னாறு | |
| | | 12.6 பாலாறு | |
| | | 12.7 தொப்பூர் ஆறு | |
| | | 12.8 சரபங்கா நதி | |
| | | 12.12 பொன்னனியாறு | 12.12.1 திருமணிமுத்தாறு |
| | | 12.14 கரைப்பட்டாறு | |
| | | 12.15 புங்காறு | |
| | | 12.16 அய்யாறு | |
| | | 12.17 அரியவூராறு | 12.17.1 கோரையாறு |
| | | 12.18 குழையாறு | |
| | | 12.19 நந்தியாறு | |
| | | 12/2 காவேரி | |
| | | 12/2-1 குடமுருட்டி | |
| | | 12/2-2 அரசலாறு | |
| | | 12/2-3 வீரசோழனாறு | |
| | | 12/2-4 விக்ரமனாறு (கிளை நதிகள்) | |
| | | 12/3 வெண்ணாறு | |
| | | 12/3-1 வெட்டாறு | |
| | | 12/3-2 வடவாறு | |
| | | 12/3-3 கோரையாறு | |
| | | 12/3-4 பாமணியாறு | |
| | | 12/3-5 பாண்டவ ஆறு | |
| | | 12/3-6 வெள்ளையாறு | |
| | | 12/1 கொள்ளிடம் | |





| வடிநில எண் | வடிநில ஆறு | கிளையாறு | கிளையாற்றின் கிளையாறு |
|---|---|---|---|
| **திருச்சி மண்டலம்**—தொடர்ச்சி. | | (கிளை நதி) | |
| | | 12.20 ஆண்டி ஓடை | |
| | | 12.21 மருதயாறு | |
| 13. | அக்னியாறு | 13.1 மகாராஜசமுத்திரம் | |
| 14. | அம்புலியாறு | | |
| 15. | வெள்ளாறு | | |
| 16. | கொலுவனாறு | | |
| 17. | பாம்பாறு | | |
| **பொள்ளாச்சி மண்டலம்** | | | |
| | | | 12.12.3 உப்பார் ஓடை |
| 12. | காவிரி | 12.13 அமராவதி | 12.13.4 நல்லதங்கையாறு |
| | | | 12.13.5 வரட்டுகரை |
| | | | 12.13.6 வட்டமலைக்கரை |
| | | | 12.13.6 பெரும்பள்ளம் |
| | | | 12.13.7 ஆண்டான்கரை |
| | | | 12.13.8 நங்கஞ்சியாறு |
| | | | 12.13.8.1 ஓடைகரை |
| | | | 12.13.8.2 பரப்பலாறு |
| | | | 12.13.1 குதிரையாறு |
| | | | 12.13.2 சண்முகாநதி |
| | | | 12.13.2.1 பச்சையாறு |
| | | | 12.13.2.2 பொறந்தலாறு |
| | | | 12.13.2.3 பாலாறு |
| | | | 12.13.9 கொடகனாறு |
| | | | 12.13.9.1 சன்தனவர்த்தனி |
| | | 12.9 பவானி | 12.9.9 வறட்டுபள்ளம் |
| | | | 12.9.9.1 வழுக்குப்பாறைப் பள்ளம் |
| | | | 12.9.1 மோயாறு |

[2000 ஏப்ரல் 29

| வடி நில எண் | வடிநில ஆறு | கிளையாறு | கிளையாற்றின் கிளையாறு |
|---|---|---|---|
| **பொள்ளாச்சி மண்டலம்—தொடர்ச்சி** | | | |
| 12. | காவிரி —தொடர்ச்சி. | | 12.9.1.1 அம்பார் ஹல்லா |
| | | | 12.9.1.2 பைக்காரா |
| | | | 12.9.1.3 அவரை ஹல்லா |
| | | | 12.9.1.4 சிங்கூர் |
| | | | 12.9.1.5 கேதர் ஹல்லா |
| | | | 12.9.1.6 குண்டரஹட்ட ஹல்லா |
| | | | 12.9.1.7 குக்கல்துறை ஹல்லா |
| | | | 12.9.2 சிறுவாணி ஆறு |
| | | | 12.9.3 குந்தா |
| | | | 12.9.4 நிகலபள்ளம் |
| | | | 12.9.5 பில்லூர்பள்ளம் |
| | | | 12.9.7 பொம்புள்ளம் |
| | | | 12.9.8 குண்டேரிபள்ளம் |
| | | | 12.10 கொரங்கம்பள்ளம் |
| | | | 12.11.1 சின்னார் |
| | | | 12.11 நொய்யல் |
| | | | 12.11.2 சங்கனூர் பள்ளம் |
| | | | 12.11 3 நல்லார் |
| | | 12.4 பாலாறு | 12.4.1. கதலா ஹல்லா |
| | | | 12.4.2 தட்டஹல்லா |
| | | | 12.4.3 மணியார்ஹல்லா |
| | | 12.5 பெரியபள்ளம் | |

**34 மேற்கு நோக்கி பாயும் ஆறுகள்**

**மதுரை மண்டலம்**

| வடி நில எண் | வடிநில ஆறு | கிளையாறு | கிளையாற்றின் கிளையாறு |
|---|---|---|---|
| 18. | மணிமுத்தாறு | 18.1 விருகனி ஆறு | 18.1.1 பாலாறு |
| | | 18.2 திருமணிமுத்தாறு | |
| 19. | கோட்டக்கரை | 19.1 சருகணியாறு | |
| 20. | வைகை | 20.1 சுரளியாறு | |



2000 ஏப்ரல் 29]

| வடி நில எண் | வடிநில ஆறு | கிளையாறு | கிளையாற்றின் கிளையாறு |
|---|---|---|---|
| மதுரை மண்டலம் —தொடர்ச்சி. | | | |
| | | 20.3 மாவூத்து ஓடை | |
| | | 20.4 வராக நதி | |
| | | 20.5 மஞ்சளாறு | 20.6.1 மருதா நதி |
| 21. | உத்திரகோச-மங்கையாறு | | |
| 22. | குண்டாறு | 22.1 மரத்தனாறு | 22.11. கானல் ஓடை |
| | | 22.2 வேகவதி | 22.2 பரலையாறு |
| 23. | வேம்பாறு | | |
| 24. | வைப்பாறு | 24.1 சீவலப்பேரி | 24.2.1 தேவி ஆறு |
| | | 24.2 நீச்சப்புநதி | 24.3.1 மன்னர்கோட்டை |
| | | 24.3 அர்ச்சுன நதி | |
| 25. | கல்லார் | 25.1 மலட்டார் ஓடை | |
| 26. | கோரம்பள்ளம் ஆறு | | |
| 27. | தாமிரபரணி | 27.1 பாம்பார் | |
| | | 27.2 சேர்வலாறு | 27.3.1. பெரியாறு |
| | | 27.3 மணிமுத்தாறு | 27.3.2. கீழமணிமுத்தாறு |
| | | 27.4 கடானாநதி | |
| | | 27.5 பச்சையாறு | |
| | | 27.6 சித்தாறு | 27.6.1. கருப்பாநதி |
| | | | 27.6.2 உப்போடை |
| 28. | கரமணியாறு | | |
| 29. | நம்பியாறு | 29.1 கோம்பையாறு | |
| 30. | அனுமாநதி | | |
| 31. | பழையாறு | | |
| 32. | வள்ளியாறு | | |
| 33. | கோதையாறு | 33.1 பரவலாறு | |

[2000 ஏப்ரல் 29

# இணைப்பு-II

## நீர்வள ஆதார அமைப்பு

## பொதுப் பணித் துறை

"நபார்டு" வங்கி நிதி உதவியின் மூலம் எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் சிறு பாசன ஏரிகளின் பட்டியல்

ஊரக உள்கூட்டமைப்பு வளர்ச்சி நிதி - 5 - முதற்கட்ட திட்டப் பணிகள்

| வ. எண் | மாவட்டம் | வட்டம் | ஏரியின் பெயர் |
|---|---|---|---|
| 1. | திருவள்ளூர் | திருவள்ளூர் | ஆரன்வயல் |
| 2. | திருவள்ளூர் | திருவள்ளூர் | ஏலம்பாக்கம் |
| 3. | திருவள்ளூர் | திருவள்ளூர் | நெய்வேலி |
| 4. | திருவள்ளூர் | திருவள்ளூர் | நுங்கம்பாக்கம் கடப்பேரி |
| 5. | திருவள்ளூர் | திருவள்ளூர் | பெண்ணத்தூர்பேட்டை, சித்தேரி |
| 6. | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | ஆரப்பாக்கம் |
| 7. | காஞ்சிபுரம் | உத்திரமேரூர் | கவிதாண்டலம் |
| 8. | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | கீழம்பி |
| 9. | காஞ்சிபுரம் | செய்யார் | மேலப்பட்டு சிறுவேங்குனம் |
| 10. | தருமபுரி | தருமபுரி | அதமன்கோட்டை |
| 11. | தருமபுரி | தருமபுரி | கொலகளத்தூர் சோழராயம் |
| 12. | தருமபுரி | ஊதங்கரை | தீர்த்தகிரி வலசை |
| 13. | சேலம் | கங்காவள்ளி | வெரகனூர் |
| 14. | நாமக்கல் | நாமக்கல் | சிவநாயக்கன்பட்டி |
| 15. | கடலூர் | விருத்தாசலம் | எழுத்தூர் |
| 16. | கடலூர் | பண்ருட்டி | கீழூர்சோழனேரி |
| 17. | கடலூர் | கடலூர் | பரவட்டை |



2000 ஏப்ரல் 29]

| வ. எண் | மாவட்டம் | வட்டம் | ஏரியின் பெயர் |
|---|---|---|---|
| 18. | விழுப்புரம் | விழுப்புரம் | மேலகொண்டை |
| 19. | விழுப்புரம் | செஞ்சி | சொரத்தூர் |
| 20. | ஈரோடு | கோபிச்செட்டி பாளையம் | வெம்பந்தம்பாளையம் |
| 21. | கோயம்புத்தூர் | மேட்டுப்- பாளையம் | அன்சூர் பள்ளம் |
| 22. | கோயம்புத்தூர் | மேட்டுப்பாளையம் | பள்ளாத்தி |
| 23. | வேலூர் | வாலாஜா | சத்தியவாடி |
| 24. | வேலூர் | காட்பாடி | கீழாலத்தூர் |
| 25. | வேலூர் | வேலூர் | வேப்பம்பட்டு |
| 26. | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | கோதண்டவாடி பெரியஏரி |
| 27. | பெரம்பலூர் | உடையார்பாளையம் | பாண்டியனேரி |
| 28. | திருச்சிராப்பள்ளி | குளித்தலை | நல்லூர் |
| 29. | திருச்சிராப்பள்ளி | துறையூர் | நாகநாயக்கன்பட்டி |
| 30. | நாகப்பட்டினம் | கீவலூர் | கீரனேரி |
| 31. | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | செங்கரை மூலக்குடி |
| 32. | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | அச்சனேரி |
| 33. | புதுக்கோட்டை | ஆவுடையார் கோயில் | கரகாதிக்கோட்டை |
| 34. | புதுக்கோட்டை | முணமேல் கொண்டை | கானாடு |
| 35. | மதுரை | வாடிப்பட்டி | ஏரம்பட்டி |
| 36. | தேனி | போடி | ராஜபூபாளசமுத்திரம் |
| 37. | திண்டுக்கல் | பழனி | ஓடைக்குளம் |
| 38. | திண்டுக்கல் | திண்டுக்கல் | கடிமரசிங்கப்பெருமாள் குள |
| 39. | விருதுநகர் | அருப்புக்கோட்டை | தொப்பூர் |
| 40 | தூத்துக்குடி | விளாத்திகுளம் | எல். வெங்கடேசபுரம் |

[2000 ஏப்ரல் 29

| வ. எண் | மாவட்டம் | வட்டம் | ஏரியின் பெயர் |
|---|---|---|---|
| 41. | சிவகங்கை | சிவகங்கை | பிரவல்லூர் |
| 42. | இராமநாதபுரம் | இராமநாதபுரம் | நந்தை |
| 43. | இராமநாதபுரம் | கமுதி | முஸ்தாகுறிச்சி |
| 44. | இராமநாதபுரம் | பரமக்குடி | தடுத்தாளன்கோட்டை |

| | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|
| 1999-2000 ஆம் ஆண்டிற்கான மொத்த நபார்டு கடன் உதவி | .. 198.71 |
| 2000-01 ஆம் ஆண்டிற்கான மொத்த நபார்டு கடன் உதவி | .. 1121.15 |
| ஆக மொத்தம் | .. 1319.86 |
| அரசின் உதவி | .. 146.61 |
| மொத்த திட்ட மதிப்பு | .. **1466.47** |

## இணைப்பு - III

### தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்)

சென்னை அரசினர் தோட்டத்தில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்காக நிர்வாக பகுதி வளாகம் கட்ட ரூபாய் 250.00 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. பணி கூடிய விரைவில் தொடங்கப்படும்.

| | |
|---|---|
| 1. கட்டடங்கள் (பராமரிப்பு) வட்டம், சென்னை. | 1. வட மாநில கோட்டம், சென்னை, உபகோட்டங்கள்-4.<br>2. தென் மாநில கோட்டம், சென்னை, உபகோட்டங்கள்-2.<br>3. மெரினா கோட்டம், சென்னை, உபகோட்டங்கள்-3. |



2000 ஏப்ரல் 29]

| | |
|---|---|
| 2. கட்டடங்கள் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சென்னை. | 4. கட்டடங்கள் கட்டுமான கோட்டம்-1, சென்னை, உபகோட்டங்கள்-5. |
| 3. கட்டடங்கள் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், வேலூர். | 5. கட்டடங்கள் கட்டுமான கோட்டம்-2, சென்னை, உபகோட்டங்கள்-4.<br>6. கட்டடங்கள் கட்டுமான கோட்டம்-3, சென்னை, உபகோட்டங்கள்-5.<br>7. கட்டடங்கள் (க மற்றும் ப) கோட்டம் திருவள்ளூர், உபகோட்டங்கள்-4.<br>8. கட்டடங்கள் (க மற்றும் ப) கோட்டம், காஞ்சிபுரம், உபகோட்டங்கள்-4.<br>9. கட்டடங்கள் (க மற்றும் ப) கோட்டம், வேலூர், உபகோட்டங்கள்-4.<br>10. கட்டடங்கள் (க மற்றும் ப) கோட்டம், திருவண்ணாமலை, உபகோட்டங்கள்-4.<br>11. கட்டடங்கள் கட்டுமான கோட்டம், வேலூர், உபகோட்டங்கள்-3.<br>12. கட்டடங்கள் (க மற்றும் ப) கோட்டம், கடலூர், உபகோட்டங்கள்-3. |
| 4. கட்டடங்கள் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேலம். | 13. கட்டடங்கள் (க மற்றும் ப) கோட்டம், சேலம், உபகோட்டங்கள்-4.<br>14. கட்டடங்கள் (க மற்றும் ப) கோட்டம், நாமக்கல், உபகோட்டங்கள்-3.<br>15. கட்டடங்கள் (க மற்றும் ப) கோட்டம், தர்மபுரி, உபகோட்டங்கள்-5. |

[2000 ஏப்ரல் 29

| | |
|---|---|
| | 16. கட்டடங்கள் (க மற்றும் ப) கோட்டம், விழுப்புரம் உபகோட்டங்கள்-4. |
| 5. கட்டடங்கள் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், ஈரோடு | 17. கட்டடங்கள் (க மற்றும் ப) கோட்டம், ஈரோடு உபகோட்டங்கள்-5. |
| | 18. கட்டடங்கள் (க மற்றும் ப) கோட்டம், கோயம்புத்தூர், உபகோட்டங்கள்-5. |
| | 19. கட்டடங்கள் (க மற்றும் ப) கோட்டம், ஊட்டி, உபகோட்டங்கள்-5. |
| | 20. கட்டடங்கள் கட்டுமான கோட்டம், கோயம்புத்தூர் உபகோட்டங்கள்-56. |
| 6. கட்டடங்கள் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், திருச்சி | 21. கட்டடங்கள் (க மற்றும் ப) கோட்டம், திருச்சி, உபகோட்டங்கள்-3. |
| | 22. கட்டடங்கள் கட்டுமான கோட்டம், திருச்சி, உபகோட்டங்கள்-3. |
| | 23. கட்டடங்கள் (க மற்றும் ப) கோட்டம், புதுக்கோட்டை, உபகோட்டங்கள்-5. |
| | 24. கட்டடங்கள் (க மற்றும் ப) கோட்டம், கரூர், உபகோட்டங்கள்-3. |
| | 25. கட்டடங்கள் (க மற்றும் ப) கோட்டம், அரியலூர், உபகோட்டங்கள்-3. |



2000 ஏப்ரல் 29]

| | |
|---|---|
| 7. கட்டடங்கள் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், தஞ்சாவூர் | 26. கட்டடங்கள் (க மற்றும் ப) கோட்டம், தஞ்சாவூர், உபகோட்டங்கள்-4. |
| | 27. கட்டடங்கள் (க மற்றும் ப) கோட்டம், நாகப்பட்டினம், உபகோட்டங்கள்-4. |
| | 28. கட்டடங்கள் (க மற்றும் ப) கோட்டம், திருவாரூர், உபகோட்டங்கள்-3. |
| | 29. கட்டடங்கள் கட்டுமான கோட்டம், தஞ்சாவூர், உபகோட்டங்கள்-3. |
| 8. கட்டடங்கள் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்-1, மதுரை | 30. கட்டடங்கள் கட்டுமான கோட்டம், மதுரை, உபகோட்டங்கள்-4. |
| | 31. கட்டடங்கள் (க மற்றும் ப) கோட்டம், ராமநாதபுரம் உபகோட்டங்கள்-4. |
| | 32 கட்டடங்கள் (க மற்றும் ப) கோட்டம், சிவகங்கை உபகோட்டங்கள்-5. |
| 9. கட்டடங்கள் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்-2, மதுரை | 33 கட்டடங்கள் (பராமரிப்பு) கோட்டம், மதுரை, உபகோட்டங்கள்-4. |
| | 34. கட்டடங்கள் (க மற்றும் ப) கோட்டம், திண்டுக்கல் உபகோட்டங்கள்-4. |
| | 35. கட்டடங்கள் (க மற்றும் ப) கோட்டம், தேனி, உபகோட்டங்கள்-4. |
| 10. கட்டடங்கள் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், தூத்துக்குடி | 36. கட்டடங்கள் (க மற்றும் ப) கோட்டம், தூத்துக்குடி, உபகோட்டங்கள்-4. |

[2000 ஏப்ரல் 29

| | |
|---|---|
| | 37. கட்டடங்கள் (க மற்றும் ப) கோட்டம், விருதுநகர், உபகோட்டங்கள்-3. |
| | 38. கட்டடங்கள் (க மற்றும் ப) திருநெல்வேலி, உபகோட்டங்கள்-3. |
| 11. கட்டடங்கள் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், திருநெல்வேலி | 39. கட்டடங்கள் (க மற்றும் ப) கோட்டம், நாகர்கோவில், உபகோட்டங்கள்-4. |
| | 40. கட்டடங்கள் (க மற்றும் ப) கோட்டம், திருநெல்வேலி, உபகோட்டங்கள்-3. |
| 12. திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம், சென்னை | 41. கட்டடங்கள் மைய கோட்டம், சென்னை, உப கோட்டங்கள்-2. |
| | 42. கட்டடங்கள் ஆராய்ச்சி நிலையம், கோட்டம், தரமணி, உப கோட்டங்கள்-2. |
| 13. மின் வட்டம், சென்னை | 43. மின் கோட்டம்-1, சென்னை, உப கோட்டங்கள்-6. |
| | 44. மின் கோட்டம்-2, சென்னை, உப கோட்டங்கள்-5. |
| 14. மின் வட்டம், சேலம் | 45. மின் கோட்டம், சேலம், உப கோட்டங்கள்-3. |
| | 46. மின் கோட்டம், கோயம்புத்தூர், உப கோட்டங்கள்-3. |
| 15. மின் வட்டம், மதுரை | 47. மின் கோட்டம், மதுரை, உப கோட்டங்கள்-6. |
| | 48. மின் கோட்டம், திருநெல்வேலி, உப கோட்டங்கள்-3. |
| | 49. மின் கோட்டம், திருச்சி, உப கோட்டங்கள்-3. |
| 16. தொழிலாளர் மாநில ஈட்டுறுதி (பொறியியல் குழு) வட்டம், சென்னை. | 50. தொ.மா.ஈ. (பொ.கு), சேலம், உப கோட்டங்கள்-3. |
| | 51. தொ.மா.ஈ. (பொ.கு), மதுரை, உப கோட்டங்கள்-3. |



2000 ஏப்ரல் 29]

## இணைப்பு II

(95 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

**கோரிக்கை எண் 44-. காட்டு வளத் துறை**

**கோரிக்கை எண் 58—காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு**

நம் மாநிலத்தின் இயற்கைச் சூழலை நிலைப்படுத்தி பாதுகாப்பதிலும் ஊரக வளர்ச்சியிலும் வனங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. மக்களுக்குத் தொடர்ந்து பயனளிக்கும் வகையில் இயற்கை வளங்கள் கீழ்க்கண்ட குறிக்கோள்களுடன் மேம்படுத்தப்படும்:-

* சுற்றுச்சூழல் மற்றும் உயிரின வாழ்க்கைச் சூழலை நிலைப்படுத்தல்.
* நகர்ப்புறப் பகுதிகளை பசுமைப் பகுதிகளாக மாற்றுவதன் மூலம் காற்று மற்றும் நீரிலுள்ள நச்சுத்தன்மையைக் குறைத்து அப்பகுதி மக்களுக்குத் தூய்மையான காற்றையும் நீரையும் கிடைக்கச் செய்தல்.
* வளமிக்க பல்லுயிர்களான வன உயிரினங்களையும், தாவர இனங்களையும் பாதுகாத்தல்.
* மண்ணின் ஊட்டச்சத்தையும், நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் ஈரப்பதத்தினையும் மேம்படுத்த ஆறுகள், நீர்த்தேக்கங்கள், குளங்கள் ஆகியவற்றில் மண்வளப்பாதுகாப்பு முறைகளைச் செயல் படுத்துதல்.
* மாநில நிலப்பரப்பளவில் வனப்பரப்பை அதிகரிக்க சமுதாய மற்றும் தனியார் நிலங்களில் வனநிர்ணய பணிகளைத் துரிதப்படுத்துதல்.
* வனப் பகுதியில் சுற்றுச் சூழலை மீட்கவும் இயற்கை உயிரினச்சூழலை நிலை நிறுத்தவும் இயற்கை வளங்களை மேம்படுத்தவும் கூட்டு நிர்வாக முறையை ஊக்குவித்தல்.
* கிராமப்புற மற்றும் மலைவாழ் மக்களின் அன்றாடத் தேவைகளான விறகு மரங்கள், கால்நடைத் தீவனம் மற்றும் இதர வனப் பொருட்கள் குறைவின்றி கிடைக்கும் வகையில் தரமான மரங்களின் எண்ணிக்கையினை உயர்த்துதல்.
* வனப் பாதுகாப்பு உள்கட்டமைப்பை வலுப்படுத்தி விலை மதிப்புமிக்க அட்டவணை மர வனப் பொருட்களைப் பாதுகாத்தல்.

* கடலோரப் பகுதிகளின் நுட்பமான இயற்கைச் சூழலை நிலைப்படுத்தல்.
* வன வளத் தொழில்நுட்பங்களை நவீனமாக்குதல்.
* தொழிற்சாலைகள், வணிகம் மற்றும் உள்ளூர் துறைகளின் தேவைக்கேற்ப புதிய வன நுட்பவியல் வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்துதல்.
* வனத் துறையிலுள்ள அனைத்துப்பிரிவு பணியாளர்களுக்கும் பணியிடைப் பயிற்சி (Inservice Training) அளிப்பதன் மூலம் மனித வளத்தினை மேம்படுத்துதல்.
* சுற்றுச்சூழல் சுற்றுலாவை ஊக்குவிப்பதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி அதில் வரும் வருவாயை அங்குள்ள மக்களுக்கென செலவிடுதல்.

## 2. நோக்கங்கள்

### 2.1 வனங்களின் பரப்பளவு:

தமிழ்நாட்டின் மொத்தப் பரப்பில் 22,845 சதுர கிலோ மீட்டர் பரப்பு வனப்பகுதியாகும். இது மொத்தப் பரப்பில் 17.56 விழுக்காடாகும். வனப்பகுதி மற்றும் மரங்கள் அடங்கிய பகுதிகளை மாநிலத்தின் மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்காக உயர்த்த சீரிய முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சென்னை பெருநகரப்பகுதி, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி ஆகிய மாநகராட்சிப் பகுதிகளை பசுமைப் பகுதிகளாக மாற்றுவதன் மூலம் காற்று மற்றும் நீரிலுள்ள நச்சுத் தன்மையைக் குறைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 2,94,000 தரமான செடிகள் நடுவதற்காக ரூ.4.5.57 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் ரூ.4 கோடியை மைய அரசு சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகமும், ரூ.55.70 லட்சத்தை மாநில அரசும் வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. திருச்சி மாநகரப் பகுதியும் இத்திட்டத்தில் பயன்பெற தனியே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 2.2 உயிரினச்சூழலைப் பாதுகாத்தல்

உயிரினப் பரவல்கள் தமிழ்நாட்டில் செறிந்துள்ளன. மாநிலத்தின் மொத்த வனப்பரப்பில் 2,917 சதுர கிலோ மீட்டர் பரப்பில் 12.8



விழுக்காடு வனப்பகுதிகள். ஐந்து தேசிய உயிரினப் பூங்காக்கள், ஆறு வன உயிரினச்சரணாலயங்கள் மற்றும் பன்னிரெண்டு பறவைகள் சரணாலயங்களென வன உயிரினப் பாதுகாப்பிற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. சரணாலயங்களையும், தேசிய பூங்காக்களையும் வன உயிரினப் பாதுகாப்பிடங்களையும் உருவாக்குதல் மூலம் தாவர இனங்களையும், வன உயிரினங்களையும் பாதுகாத்தல் தொடர்ந்து நடத்தப்படும். மாநிலத்தின் மொத்த வனப்பரப்பளவில் பாதுகாக்கப்பட்ட பகுதிகளின் பரப்பளவை 25 விழுக்காடாக உயர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இப்பகுதிகளில் மருத்துவச்செடிகள் மற்றும் மரபியல் முக்கியத்துவம் வாய்ந்த செடிகள் பாதுகாக்கப்படும். பல்லுயிர்களான வன உயிரினங்களையும், கடல்வாழ் உயிரினங்களையும் தாவர உயிரினங்களையும் பாதுகாப்பதற்கென மன்னார் வளைகுடா பல்லுயிர் பாதுகாப்புப்பகுதி, நீலகிரி பல்லுயிர் பாதுகாப்புப்பகுதி என உருவாக்கப்பட்டு அங்குள்ள மக்களுக்கு நிலைத்த வருவாய் கிடைப்பதன் மூலம் இப்பகுதிகளைப் பாதுகாக்க திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

### 2.3 நீர்ப்பிடிப்புப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

தமிழகத்தில் 32 ஆறுகள், 11 பெரும் நீர்த் தேக்கங்கள், 2,679 கால்வாய்கள், 38,863 குளங்கள் உள்ளன. இவற்றின் பெரும்பாலான நீர்ப்பிடிப்புப் பகுதிகள் வனங்களில் அமைந்துள்ளன. வனவளங்களை மேம்படுத்த வனவளர்ப்பு தடுப்பாணைகள் கட்டுதல் மற்றும் கசிவு நீர்க்குட்டைகள் கட்டுதல் போன்ற நீர்ப்பிடிப்பு மேம்பாட்டுப்பணிகள் வாயிலாக நிலத்தடி நீரின் அளவை உயர்த்தி அதன் மூலம் தரமான வேளாண்மைக்கு உதவும் வழிவகை மேற்கொள்ளப்படும்.

### 2.4 வனவிரிவாக்க நிர்வாகம்:

தமிழ்நாட்டில் வேளாண்மையினை பாதிக்காத வகையில் தனியார் நிலங்களில் மரம் வளர்ப்புப் பணிகளை கூடுதலாக்க வாய்ப்புகள் மிகுதியாக உள்ளன. இவ்வனவிரிவாக்க முறையின் மூலம் மரம் வளர்த்தல் குறித்த செயல்பாடுகள், செய்திகள், உபகரணங்கள் மற்றும் பணிகளைத் தொடர்ந்து மக்களுடன் பரிமாறிக் கொள்ள இயலும். இது மாநிலத்தின் சூழ்நிலைக்குத் தக்கவாறு மரங்கள் மற்றும் காடுபடு பொருட்களின் தேவை மற்றும் விநியோகத்திற்கும் இடையேயுள்ள இடைவெளியினை குறைக்கும். தனியார் நிலங்களில் மரம் வளர்ப்பிற்குத் தடையாக உள்ள நடைமுறை கட்டுப்பாட்டு விதிகள் தளர்த்தப்பட்டு வருகின்றன.

## 2.5 கூட்டு வன நிர்வாக முறையில் உயிரினப் பரவல்களை மேம்படுத்துதல் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல்

தமிழ்நாட்டில் வனங்களின் அருகாமையில் அமைந்துள்ள சுமார் 3,072 கிராம மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதாலும், காலநடைகளின் மிதமிஞ்சிய மேய்ச்சலினாலும், சுமார் 7,000 சதுர கிலோ மீட்டர் வனங்கள் தரங்குன்றிவிட்டன. இத்தரங்குன்றிய வனப் பகுதியில சுற்றுச்சூழலை மீட்டு, இயற்கை உயிரினச் சூழலை நிலைநிறுத்தவும்,. இயற்கை வளங்களை மேம்படுத்தவும், "கூட்டு வன நிர்வாக முறை" அடிப்படையில் மக்கள் அதிக அளவில் பயன்களைப் பெறவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 2.6 பழங்குடி மக்களும் வனங்களும்

வனங்களில் வாழும் பழங்குடி மக்களின் சமூகப் பொருளாதார நிலை வன வளத்தினையே சார்ந்துள்ளது. பழங்குடியினருக்கு அதிக பலனளிக்கும் வகையில், பழங்குடியினர் வசிக்கும் இடங்கள் மற்றும் வனப் பகுதிகளில் மரங்கள் மற்றும் தாவர வளம்கொண்ட மூலதனச் சொத்துக்கள் உருவாக்கப்படும். பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வேலைவாய்ப்பு, பழங்குடியினருக்கு அடிப்படை உள்ளமைப்பு வசதிகள் மற்றும் கல்வி ஆகிய பணிகள் முனைப்புடன் செயல்படுத்தப்படும்.

## 2.7 வனப் பாதுகாப்பு

விலைமதிப்புமிக்க சந்தன மரங்கள் உள்பட அட்டவணையில் கண்ட மரங்கள் தொடர்ந்து அழிக்கப்படுவதைத் தடுக்க பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு நவீன ஆயுதங்கள், தொலைத் தொடர்பு சாதனங்கள் மற்றும் வாகனங்கள் அளிப்பதன்மூலம் பாதுகாப்பு உள் கட்டமைப்பை வலுப்படுத்த தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்படும். மேலும், காப்புக் காடுகளில் வசிக்கும் மக்களின் ஒத்துழைப்பை பெற்று மரங்களைப் பாதுகாக்க திட்டம் தீட்டப்படவுள்ளது.

சந்தன மரம் உள்ளிட்ட இதர விலை மதிப்புமிக்க அட்டவணையில் கண்ட மரங்கள் சமூக விரோதிகளினால் திருட்டுத்தனமாக கடத்தப்படுகின்றன. 1998-1999 மற்றும் 1999-2000 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட சந்தன மரக் குற்றங்களின் விவரம் பின்வருமாறு:-



| வருடம் | சந்தனமரக் குற்ற வழக்குகளின் எண்ணிக்கை | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | பிடிபட்ட வாகனங்கள் | குற்றவாளிகள் சட்டத்தின்படி கைது செய்யப் பட்டவர்கள் |
|---|---|---|---|---|
| 1998-99 | 2101 | 815.65 | 462 | 46 |
| 1999-2000 | 1135 | 512.67 | 164 | 23 |

## 2.8 கடலோரப் பகுதி மேம்பாடு

தமிழகத்தில் கடலோரப் பாதுகாப்பிற்கும், பெரும்புயலால் ஏற்படும் சேதத்தைத் தவிர்ப்பதற்கும் ஏற்றுவாறு மரங்கள் நடுவதற்கு (Shelterbelt) திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. நடுவண் அரசின் ஒத்துழைப்போடு இத்திட்டம் செயல்படுத்தப்படும். தமிழகத்தில் கிட்டத்தட்ட 1,000 கிலோ மீட்டர் அளவில் அமைந்துள்ள கடலோரப் பகுதிகள் மாறுபட்ட பல்வேறு இயற்கையின் சவால்களையும் உயிரினத் தலையீடுகளையும் தாங்கிக்கொண்டு நுண்ணிய உயிரினச்சூழல் அமைப்புகளை காத்து வருகின்றன. கடலோரங்களில் வீசும் அதிவேகக் காற்று மற்றும் புயல்களின் நாச விளைவுகளைக் குறைப்பதற்கும், மணற்குன்றுகளை நிலைப்படுத்தவும் மற்றும் அரிதான உயிரினப்பரவல்களில் நாரை மற்றும் நீர்வாழ் உயிரினங்களைப் பாதுகாக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 2.9 தரிசாக உள்ள சிறு குன்றுகளைப் பசுமையாக்குதல்

தரிசாக உள்ள சிறு குன்றுகள் சூரிய வெப்பத்தை அதிக அளவில் வெளிப்படுத்துவதால், அது சுற்றியுள்ள தாவர இனங்களையும் பாதிப்பதுடன் அருகிலுள்ள கிராமங்களின் சுற்றுச்சூழலையும் வெகுவாக பாதிக்கிறது. எனவே, 2000-2001 ஆம் ஆண்டு முதல் தரிசாக உள்ள சிறு குன்றுகளை, அவற்றைச் சுற்றியுள்ள கிராம மக்களின் பங்கேற்புடன் பசுமையாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.10 வன ஆராய்ச்சி

குறைந்த மழையளவைப்பெற்று வரும் தமிழக கிராமப்புறங்களில் மக்களின் பொருளாதாரத்தை அதிகரிக்க மிக அதிக மகசூல் கொடுக்கக்கூடிய தேக்கு, யூக்கலிப்டஸ், சவுக்கு, மூங்கில், சிகப்பு சந்தனம், சந்தனம், கடுக்காய், நெல்லி, வாகை போன்ற மர வகைகளை விதையில்லா இனப்பெருக்கத்தின் மூலம் உற்பத்தி செய்து வழங்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் நடுத்தர மக்கள் வீடு கட்டவும் மரச்சாமான்கள் செய்யவும் குறைந்த விலையில் மரவகைகள் கிடைக்க வன ஆராய்ச்சிப் பிரிவு பல்வேறு சோதனைகளை இவ்வாண்டு மேற்கொள்ள உள்ளது.

[2000 ஏப்ரல் 29

கடந்த இரண்டாண்டுகளில் 40 புதிய ஆய்வுகள் ஆராய்ச்சிப் பிரிவினால் நடத்தப்பட்டுள்ளன. அவற்றுள் உயர் மரபியல் தொழில் நுட்பத்தின்மூலம் சவுக்கு உற்பத்தியினைப் பெருக்குதல்; நுண்ணுயிர்கள், வாம், நூதன மண்கலவை மற்றும் சொட்டு நீர்ப் பாசனத்தின்மூலம் உயரமான நாற்றுகள் வளர்க்கும் தொழில் நுட்பத்தினை வகுத்தல், தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளிப்படும் கழிவினால் ஏற்படும் மாசினைக் கட்டுப்படுத்த விரைவாக வளரும் மரவகைகள் கண்டறிதல் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள ஆழியார் ஆராய்ச்சிக்கூடத்தில் மக்களுக்குப் பயன் தரும் மூலிகைச்செடி வகைகள் ஒட்டுமூலம் வளர்த்தல் ஆகியவை முக்கியமானவைகளாகும்.

### 2.11 மனித வள மேம்பாடு

வனத் துறை மாநிலத்தின் மிகவும் பழமைவாய்ந்த துறைகளில் ஒன்றாகும். கடந்த ஆண்டுகளில் தொழில் நுட்பம்வாய்ந்த மனித வளத்தின்மூலம் மாநிலத்தின் வன வளங்களை பாதுகாத்தலிலும் வளர்ச்சியிலும் அரிய சாதனைகள் செய்யப்பட்டுள்ளன. தக்க பயிற்சிகள் மற்றும் திறன் அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலம் இம்மனித வளத்திறன் மேலும் மேம்படுத்தப்படும்.

### 2.12 சுற்றுச்சூழல் சுற்றுலா

வனப் பகுதிகள், தேசிய உயிரினப்பூங்காக்கள் வன உயிரின சரணாலயங்கள், பறவைகள் சரணாலயங்கள் மற்றும் மன்னார் வளைகுடா பல்லுயிர் பாதுகாப்புப் பகுதி ஆகியவற்றில் சுற்றுச்சூழல் சுற்றுலாவை ஊக்குவிக்கும் வகையில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த சுற்றுலாத் துறையின் உறுதுணையோடு திட்டங்கள் திட்டப்பட்டு செயல்படுத்தப்படும்.

## 3. 1999-2000ஆம் ஆண்டின் சாதனைகள்

* நடப்பாண்டில் வனத் துறையின் முழு ஆட்சிப் பகுதியின் நிர்வாகத்திறனை மேம்படுத்தவும், மனித சக்தி மற்றும் மனித வளத்தை துறையின் நன்மைக்குப் பயன்படும் வகையில் நான்கு புதிய பிராந்தியங்களாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் தலைவராக தற்போதுள்ள தலைமை வனப் பாதுகாவலர்களை பிராந்தியத் தலைமை வனப் பாதுகாவலர்களாக நியமித்து அரசு ஆணையிட்டுள்ளது.



2000 ஏப்ரல் 29]

செயல்திறனை மேம்படுத்தவும், முடிவெடுப்பதில் காலதாமதத்தினைத் தவிர்க்கவும், எல்லைகள் ஒன்றுக்கொன்று மேல் அமைவதை தவிர்த்திடவும், வன வளர்ச்சித் திட்டங்களையும் விரைந்து செயல் படுத்தவும் ஏற்கெனவே இருந்த 13 மண்டலங்களை, 11 புதிய மண்டலங்களாக மாற்றியமைத்து அரசு ஆணையிட்டுள்ளது. இவ்வனப்பாதுகாவலர்கள், வன ஆராய்ச்சி தவிர மண்டலத்திற்குட்பட்ட மற்ற அனைத்துப் பணிகளையும் கவனித்துக்கொள்வார்கள்.

எட்டாவது அகில இந்திய வன விளையாட்டுப் போட்டிகள் 2000 ஆம் ஆண்டு பிப்ரவரி 10 முதல் 13ஆம் தேதி வரை சென்னையில் தமிழக அரசால் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

நடப்பாண்டில் ரூ.15.00 இலட்சம் செலவில் நிழல் தரும் மரங்கள் ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களிலுள்ள ஊராட்சி சாலைகளிலும் மற்றும் நகரங்களிலும் நட ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

ரூ.30.00 இலட்சங்கள் செலவில் 29 மாவட்டங்களில் 1.50 இலட்சங்கள் செடிகள் உற்பத்தி செய்து இலவசமாக பொதுமக்களுக்கும், நிறுவனங்களுக்கும் வழங்க ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் துறைக்கும் மக்களிடையேயும் மரம் வளர்த்தல் குறித்த செயல்பாடுகள், செய்திகள், உபகரணங்கள் மற்றும் பணிகளைத் தொடர்ந்து பரிமாறிக்கொள்ள மேலும் ஏழு 'வன விரிவாக்க மையங்கள்' ஏற்படுத்த நட ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

அரசின் தீவிர முயற்சியினால் 1999-2000ஆம் ஆண்டில் 7.16 ஹெக்டேரில் பயிரிடப்பட்டிருந்த ரூ.3.00 கோடி மதிப்புள்ள கஞ்சாச் செடிகள் அழிக்கப்பட்டுள்ளன.

வனப் பணியாளர்களுக்கு நவீன ஆயுதங்கள் வழங்குமுகமாக ஏற்கெனவே அரசினால் ஒப்பளிக்கப்பட்ட ரூ.38 இலட்சத்தைக் கொண்டு 200 கிளாக் 17 வகை 9 மி.மீ. கைத்துப்பாக்கிகள் ஆஸ்டிரியா நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட உள்ளது. இது தவிர, ஜெபல்பூர் மத்திய தளவாடங்கள் கிடங்கிலிருந்து ரூ.7.76 இலட்சத்தைக்கொண்டு 7.62 மி.மீ. ரைஃபிள்கள் 500 வாங்கப்பட உள்ளது.

வனத் துறையின் வருவாயினைப் பெருக்க சந்தன மர ஏலம், சீரான இடைவெளியில் நடத்தப்பட்டு வருகிறது. பிப்ரவரி 2000 வரையில் ரூ.91.64 கோடி மதிப்புள்ள 2330.5 மெட்ரிக் டன் சந்தன மரக்கட்டைகள் ஏலத்தில் விற்கப்பட்டுள்ளன.

மனிதவள மேம்பாட்டுக்கென நமது அரசு சிறப்பு நடவடிக்கை எடுத்து 29 அலுவலர்களுக்கும் 48 சார்நிலைப் பணியாளர்களுக்கும் பதவி உயர்வு வழங்கியுள்ளது.

[2000 ஏப்ரல் 29

**4. வன வருவாய் மற்றும் செலவு:**

**4.1 வன வருவாய்:**

1999-2000ஆம் ஆண்டில் மதிப்பீட்டு வருவாய் கீழ்க்கண்டவாறு ரூ.13,412.59 இலட்சங்களாகும்.

| வ.எண் | வருவாய் இனம் | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | சந்தன மரங்கள் .. | 9164.14 |
| 2. | தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருட்கள் வழங்குதல் .. | 124.64 |
| 3. | மரங்களல்லாத காடுபடுபொருட்கள் .. | 224.34 |
| 4. | தடிமரம், விறகு, மூங்கில், சவுக்கு, மென்மரம் மற்றும் வனவியல் பண்ணைத் தோட்டங்கள் மற்றவைகள் .. | 3899.47 |
| | மொத்தம் .. | **13412.59** |

2000-2001ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வருவாய் ரூ.11,689.57 இலட்சங்கள் ஆகும்.

**4.2 செலவினங்கள்:**

1999-2000ஆம் ஆண்டில் வன மேம்பாட்டிற்கான உத்தேச திட்டச் செலவு ரூ.14,138.44 இலட்சம். திட்டம் சாரா இனங்களுக்கான உத்தேச செலவு ரூ.5,664.56 இலட்சம். 2000-2001ஆம் ஆண்டிற்கான திட்டச் செலவு ரூ.14,616.14 இலட்சமாகும்.

**5. திட்டப் பணிகள்:**

*5.1.* 1998-99 ஆம் ஆண்டின் செலவு, 1999-2000ஆம் ஆண்டிற்கான உத்தேச திட்டச் செலவு மற்றும் 2000-2001ஆம் ஆண்டு செய்யக் கருதப்படும் திட்டச் செலவு ஆகியவற்றின் விவரங்கள் வருமாறு:



2000 ஏப்ரல் 29]

| திட்டம் | 1998-99 ஆம் ஆண்டின் திட்டச் செலவு | 1999-2000ஆம் ஆண்டின் உத்தேச திட்டச் செலவு (திருத்திய மதிப்பீடு) | 2000-2001 ஆம் ஆண்டின் செய்யக் கருதப்படும் திட்டச் செலவுகள் (வரவு-செலவு மதிப்பீடு) |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| மாநில வனத் திட்டம் | 12766.23 | 13411.62 | 14176.27 |
| மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் (100%) | 289.83 | 371.06 | 112.66 |
| மாநில அரசும் மத்திய அரசும் சம அளவில் பொறுப் பேற்கும் திட்டம் (50:50) | 458.15 | 428.98 | 388.13 |
| மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள் | 147.08 | 141.27 | 133.15 |
| மொத்தம் | **13661.29** | **14352.93** | **14810.21** |
| மத்திய அரசின் உதவித் திட்டம் 50% கழித்தது | 229.08 | 214.49 | 194.07 |
| நிகர மொத்தம் | **13432.21** | **14138.44** | **14616.14** |

[2000 ஏப்ரல் 29

**5.2 2000-2001-ஆம் ஆண்டின் மாநிலத் திட்டத்தின் கீழ் பின்வரும் திட்டங்கள் செயல் படுத்தப்பட உள்ளன.**

| வ. எண் | திட்டங்களின் பெயர் | 2000-2001ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | உள்ளூர் வனப் பாதுகாப்பு | 7432.70 |
| 2. | பரவலான நீர்ப்பிடிப்புப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் | 3678.51 |
| 3. | உயிரின பரவல் பாதுகாப்பு | 570.18 |
| 4. | வன ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு | 221.06 |
| 5. | கடலோரப் பகுதி மேம்பாடு | 143.78 |
| 6. | வன விரிவாக்கம் | 1116.07 |
| 7. | வனப் பாதுகாப்பு | 636.84 |
| 8. | பழங்குடியினர் மேம்பாடு | 180.45 |
| 9. | உற்பத்தி வனவியல் | 279.79 |
| 10. | மருந்து செடிகள் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு | 28.49 |
| 11. | மனித வள மேம்பாடு | 160.47 |
| 12. | தகவல் தொடர்பு வசதிகள் அடங்கிய உள்ளமைப்பு மேம்படுத்துதல் | 167.80 |
| | மொத்தம் | **14616.14** |



2000 ஏப்ரல் 29]

வன வளர்ச்சி பகுதி 2 திட்டத்தின்கீழ் ஏழு திட்டங்கள் 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.87.03 இலட்சங்கள் செலவில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | திட்டங்களின் விவரம் | 2000-2001-ல் முன்மொழிவுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | தேனி கோட்டத்தில் மரம் கள்ளத்தனமாக வெட்டப்படுவதையும் காட்டு விலங்குகளை வேட்டையாடுவதையும் தடுத்தல் | 4.43 |
| 2. | முக்கியமான பத்து சோதனைச் சாவடிகளுக்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதன் மூலம் சோதனைச் சாவடிகளை வலுப்படுத்துதல் | 20.00 |
| 3. | சென்னை நகரில் 20000 உயரமான மரக்கன்றுகள்/ நாற்றுகளை பொதுமக்களுக்கு விற்பதற்காக வளர்த்தல் | 11.00 |
| 4. | அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவை மேம்படுத்துதல் | 20.00 |
| 5. | கிண்டி தேசியப்பூங்காவை மேம்படுத்துதல் | 10.00 |
| 6. | கொடைக்கானல் கோட்டத்தில் மூன்று நிலையங்களுக்கு எரிபொருள் வழங்குவதன் மூலம் இயற்கை வளக்காடுகள் அழிக்கப் படுவதைத் தடுத்தல். | 6.00 |
| 7. | களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகத்தை நல்ல முறையில் பாதுகாக்க தற்போதுள்ள அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் | 15.00 |
| | மொத்தம் | **87.03** |

**6. தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டம்:**

நமது அரசு ஜப்பான் சர்வதேச கூட்டு வங்கியின் நிதியுதவியுடன் தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டம் எனும் தனித்தன்மைவாய்ந்த வன வளர்ப்புத் திட்டத்தினை ரூ. 499.20 கோடி செலவில் 1997-98 ஆம் ஆண்டு முதல் ஐந்து வருடங்களுக்கு செயல்படுத்தும் வகையில் தொடங்கியுள்ளது. இத்திட்டமானது கூட்டு வன நிர்வாக முறையில் காடுகளை ஒட்டியுள்ள கிராம மக்களின் ஒத்துழைப்புடன் திட்டமிடுதல், நடுதல், பாதுகாத்தல் மற்றும் லாபத்தில் பங்கு என்ற வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அப்பகுதிகளில் வாழும் மக்களின் தேவைகளான மரம், சிறுவனப்பொருட்கள் ஆகியவைகளைப் பூர்த்தி செய்தல், சுற்றுப்புறச்சூழலை நிலைநிறுத்துதல், பழங்குடி மக்களுக்கு வேலைவாய்ப்பளித்தல். மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி தரங்குன்றிய காடுகள்/சமுதாய நிலங்கள்/பட்டா நிலங்கள் ஆகியவற்றில் பெரிய அளவில் மரம் நடுதல், ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். கீழ்க்காணும் முக்கிய பணிகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1. கூட்டு வன நிர்வாக முறையில் உள்ளூர் வனங்களைப் பாதுகாத்தல்.
2. மழைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.
3. வன விரிவாக்கத் திட்டம்.
4. தடுப்புக்காடுகள் தோட்டங்கள்.

ஒவ்வோர் ஆண்டும் 200 கிராமங்கள் செயல்பாட்டிற்கென தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் முதலாம் ஆண்டில் (1997-98) ரூ.45.00 கோடி செலவில் 61.014 ஹெக்டேர் பரப்பில் வனவளர்ப்புப் பணியும் 200 கிராமங்களில் கிராம அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் இரண்டாம் ஆண்டில் (1998-99) ரூ.95.20 கோடி செலவில் 88.548 ஹெக்டேர் பரப்பில் வன வளர்ப்புப் பணியும் 200 கிராமங்களில் கிராம அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூன்றாம் ஆண்டில் (1999-2000) ரூ. 96.73 கோடி செலவில் 75.450 ஹெக்டேர் பரப்பில் வன வளர்ப்புப் பணிகளும் 200 கிராமங்களில் கிராம அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் நான்காம் ஆண்டான 2000-2001-ல் ரூ.109.40 கோடி



செலவில் 75.450 ஹெக்டேர் பரப்பில் வன வளர்ப்புப் பணிகளும், 200 கிராமங்களில் கிராம அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கூட்டு வன நிர்வாகத்தின் மூலம் திட்டமிடுதல், நடைமுறைப்படுத்துதல், பயன்களைப் பகிர்ந்துகொள்ளுதல், ஆய்வு மற்றும் மதிப்பிடுதல் போன்ற பணிகளில் மக்களை ஈடுபடுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய உத்திகளாகும். இத்திட்டத்தில் ஒரு முக்கிய இனமான இடைத்தொகுதியின் செயல்பாடுகள் மூலம் கிராமங்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. மாவட்ட நிர்வாகத்தின் ஒத்துழைப்புடன் சக துறைகளில் உள்ள திட்டங்களையும் இணைத்து, கிராம மக்களுக்கு அடிப்படை வசதிகளும் ஊக்கமும் வழங்க அத்துறைகள் வனத் துறையுடன் ஒருங்கிணைந்து செயலாற்ற உள்ளன.

**7. வன உயிரின சரணாலயங்கள்:**

1999 ஆம் ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் வடுவூர் பறவைகள் சரணாலயம் அமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மேலும், கொடைக்கானல், தர்மபுரி, விழுப்புரம், பவானிசாகர், கன்னியாகுமரி, பிச்சாவரம் மற்றும் கோடியக்கரை ஆகிய இடங்களில் பறவைகள் சரணாலயங்கள் மத்திய அரசுடன் ஆலோசித்து அமைக்கப்படவுள்ளன.

**8. உவர் சதுப்பு நிலக் காடுகள்:**

தமிழகத்தில் சுமார் 1,000 கிலோ மீட்டர் நீளமுள்ள கடலோரப் பகுதியில் சிதம்பரத்திற்கு அருகிலுள்ள பிச்சாவரம் உவர் சதுப்பு நிலக் காடுகளும் வேதாரண்யத்திற்கு அருகிலுள்ள முத்துப்பேட்டை மற்றும் இராமநாதபுரம் கடற்கரை ஓரங்களிலுள்ள உவர் சதுப்பு நிலக் காடுகளும் உயிரின இயற்கைச் சூழல் செறிந்த பகுதிகளில் குறிப்பிடத்தக்கவையாகும். ஆறு கடலுடன் கலக்கும் முகத்துவாரங்களிலும் உப்பங்கழியினை அடுத்துள்ள சேறு கலந்த சதுப்பு நிலங்களிலும் இக்காடுகள் செழித்து வளர்கின்றன. இப்பகுதியிலுள்ள உப்புநீரைப் பயன்படுத்திக்கொண்டு இக்காடுகள் செழுமையாக வளரும் தன்மை கொண்டவை. பூமிக்குள் இருக்கும் வேர்களிலிருந்து நூற்றுக்கணக்காய் சிறு ஈட்டிகளைப் போன்ற வேர்கள் மேல்நோக்கி கிளம்பி பூமியைத் துளைத்துக்கொண்டு காற்றில் நீட்டிக்கொண்டு இருக்கின்றன. இவற்றை சுவாசிக்கும் வேர்கள் என்று அழைக்கின்றனர். இவை தவிர, வேர்கள் நன்கு வளர்ந்து பூமியை நோக்கிச் சென்று சுற்றியுள்ள சேற்றில் ஊடுருவிக் கொள்கின்றன.

இவற்றைத் தாங்கு வேர்கள் என்பர். பிச்சாவரத்திலுள்ள இவ்வகைக் காடுகளில் 12 வகை மரங்கள் காணப்படுகின்றன. முத்துப்பேட்டை வனப் பகுதியில் பலவகை அரிய மீன் வகைகளும், இறால் வகைகளும், நண்டு, நத்தை மற்றும் சிப்பி இனத்தைச் சார்ந்த கடல்வாழ் உயிரினங்களும் காணப்படுகின்றன. அழிந்துவரும் இப்பகுதியினைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும், மற்றும் இப்பகுதியிலுள்ள சுற்றுச்சூழல் பாதிக்கப்படாமலிருக்க அரசு பெரும் திட்டங்கள் தீட்டி ரூ. 17.55 கோடி மைய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்த திட்டமிட்டுள்ளது. இதன்மூலம் சதுப்புநிலக் காடுகள் நன்கு பராமரிக்கப்பட்டு, மீன் வகைகளில் இறால் போன்றவைகளின் இனப்பெருக்கத்திற்கும், பறவையினங்கள் மற்றும் ஏனைய உயிரினங்கள் மூலம் சுற்றுலா முக்கியத்துவம் பெறுவதால் சுற்றியுள்ள கிராம மக்களின் வருவாயைப் பெருக்கவும் வழி வகுக்கப்படும்.

**9. தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம்:**

தொழிற்சாலைக்குத் தேவையான கூழ்மரங்கள் மற்றும் முந்திரித் தோட்டங்களை உற்பத்தி செய்து, தொடரும் அறுவடை அடிப்படையில் பராமரித்தல், பொது மக்களின் தேவையான விறகு மரங்கள் விநியோகம் செய்தல் போன்றவை இக்கழகத்தின் முக்கிய குறிக்கோளாகும். இக்கழகத்தின் பங்கு மூலதனம் முழுவதும் தமிழ்நாடு அரசால் செலுத்தப்பட்டுள்ளது. இக்கழகத்தின் ஆளுகையின்கீழ் உள்ள 71,013 எக்டேர் காப்புக்காடுகள் வனத் துறையிலிருந்து குத்தகைக்கு ஒப்படைக்கப்பட்டவையாகும். இக்கம்பெனியின் அதிகாரமளிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் பத்து கோடியாகும். செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் மூன்று கோடியாகும். இக்கழகத்தின் மொத்த வருவாயில் 30 விழுக்காடு குத்தகை வாடகையாக அரசுக்கு அளித்து வருகிறது. தற்போதைய நிலையில் இதன் ஆண்டு வருவாய் ரூ.5 முதல் ரூ.6 கோடியாகும். இக்கழகம் அதிகபட்சமாக 20 சதவிகிதம் மிகை ஊதியம் (போனஸ்) தொழிலாளர்களுக்கு கடந்த இரண்டாண்டுகளில் வழங்கி வருகின்றது. இதனால், இக்கழகத்திற்கு ஏற்பட்ட செலவு ரூ.28.00 இலட்சங்கள்.

**சாதனைகள்:**

1998-1999 மற்றும் 1999-2000 ஆம் ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்டு பாராமரிக்கப்பட்ட தோட்டங்களின் விவரம் பின்வருமாறு:



| வ. எண் | தோட்டங்களின் பெயர் | 1998-99 (பரப்பளவு | 1999-2000 ஹெக்டேரில்) |
|---|---|---|---|
| 1. | யூகலிப்டஸ் தோட்டங்களின் உற்பத்தி | 1507 | 1952 |
| 2. | முந்திரித் தோட்டங்களின் உற்பத்தி | 510 | 376 |
| 3. | சவுக்குத் தோட்டங்களின் உற்பத்தி | 71 | 59 |

**கூழ்மர விநியோகம்:**

இக்கழகம் 1998-99 ஆம் ஆண்டில் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்ட 95,000 மெட்ரிக் டன் அளவு கூழ்மரங்களின் அளவைக்காட்டிலும் 1999-2000 ஆம் ஆண்டில் 1,10,000 மெட்ரிக் டன் அளவு கூழ்மரம் விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இந்த 1,10,000 மெட்ரிக் டன்னில் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்திற்கு 90,000 மெட்ரிக் டன்னும் சேஷசாயி காகித மற்றும் ஆலை நிறுவனத்திற்கு 20,000 மெட்ரிக் டன்னும் கூழ்மர விநியோகம் செய்யப்பட்டது. 2000-2001-ல் 1,50,000 மெட்ரிக் டன் கூழ்மரங்களை நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்ய அரசு உத்தேசித்துள்ளது.

**சந்தன எண்ணெய் தொழிற்சாலை:**

இக்கழகத்தால் வேலூர் மாவட்டத்திலுள்ள தெக்குப்பட்டில் சந்தன எண்ணெய் தொழிற்சாலை மீண்டும் வியாபார நோக்குடன் 1-8-1997 அன்று முதல் தொடங்கப்பட்டு இதுவரை 6.50 டன்கள் சந்தன எண்ணெய் பிரித்தெடுக்கப்பட்டது. இதில் 4.15 டன்கள் சந்தன எண்ணெய் வெளிச்சந்தையில் விற்கப்பட்டும், 50 கிலோ சந்தன எண்ணெய் பிரான்சு நாட்டிற்கு ஏற்றுமதியும் செய்யப்பட்டுள்ளது. தற்போது, தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் கையிருப்பில் 2 டன்கள் சந்தன எண்ணெய் உள்ளது. எண்ணெய் விற்பனை செய்ய சர்வதேச ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டுள்ளது. இவ்வெண்ணெயின் தூய்மை மற்றும் சாண்டலின் அதிகமாக உள்ளதால் இதற்கு நல்ல வரவேற்பு உள்ளது. மேலும், தமிழ்நாடு வனத் தோட்டக்கழகம் 1,500 மெட்ரிக்டன்கள் சந்தனக்கட்டைகளை ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறது.

**விதையில்லாமுறை பெருக்கத்தொழில் நுட்பம்:**

இக்கழகம் 2000-2001 ஆம் ஆண்டில் விதையில்லா நாற்றுக்கள் மூலம் 1000 எக்டேர் பரப்பளவில் உயிரியல் திசு வளர்ச்சி மூலம் யூகலிப்டஸ் கலப்பினத் தோட்டங்கள் உற்பத்தி செய்யப்படவுள்ளன.

[2000 ஏப்ரல் 29

**2000-2001ஆம் ஆண்டின் திட்டங்கள்:**

2000-2001 ஆம் ஆண்டில் இக்கழகம் 2,500 எக்டேரில் வீரிய முறையில் பலன் தரும் கூழ்மரத் தோட்டங்களை உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் 1,000 எக்டேர் விதையில்லா திசு வளர்ச்சி முறையில் தோட்டங்கள் உற்பத்தி செய்யப்படும். 750 எக்டேர் பரப்பளவில் முந்திரித் தோட்டங்கள் உற்பத்தி செய்யப்பட உள்ளன. நுட்பவியல் ஒட்டு மூலம் 100 எக்டேர் பரப்பளவில் சவுக்குத் தோட்டங்கள் உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளன. 750 எக்டேர் முழுவதும் விதையில்லா திசு வளர்ச்சி முறையில் உற்பத்தில் செய்யப்படும்.

இக்கழகத்தின் 1998-99, 1999-2000 மற்றும் 2000-2001 ஆம் ஆண்டின் வரவு-செலவு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | வருவாய் | செலவுகள் | இலாபம் (+)/ நஷ்டம் (-) |
|---|---|---|---|
| 1998-1999 | 3,046.21 | 2,277.88 | (+) 768.33 |
| 1999-2000 | 3,313.00 | 2,353.28 | (+) 959.72 |
| 2000-2001 | 4,070.76 | 2,696.42 | (+) 1374.34 |

**10. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், குன்னூர்**

தற்போதுள்ள தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகமானது முந்தைய அரசு தேயிலைத் தோட்டமாகும். இக்கழகம் 1956ஆம் வருடத்திய கம்பெனி சட்டத்தின்கீழ் 22-08-1975 பதிவு செய்யப்பட்டு 01-04-1976 லிருந்து ஒரு கழகமாகச் செயல்படத்தொடங்கியது. நீலகிரி மாவட்டத்தின் பொருத்தமான நிலங்களில் தேயிலை உற்பத்தி செய்து வெளிநாடுகளிலிருந்து இந்தியா திரும்பிய தமிழ் அகதிகளுக்கு நிரந்தர வேலை அளித்து மறுவாழ்வு கொடுப்பதை இதன் முதல் மற்றும் முக்கிய நோக்கமாகக் கொண்டு தொடங்கப்பட்டது.

தோட்ட உற்பத்தி மற்றும் மறுவாழ்வுப் பணிகள் இக்கழகத்தால் பல்வேறு கட்டங்களில் தொடங்கப்பட்டது. இக்கழகத்தின் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனம் ரூ.10.00 கோடி ஆகும். இதன்



2000 ஏப்ரல் 29]

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.5.96 கோடி ஆகும். இக்கழகம் இதுவரை ரூ.11.74 கோடியை நிகர லாபமாக ஈட்டியுள்ளது. வருடந்தோறும் குத்தகை வாடகையும், லாப பங்குத் தொகை, உள்ளூர் வரிகள் போன்றவைகளுக்கு ரூ.10.00 கோடி செலுத்தி வருகிறது.

**பசுந்தேயிலை உற்பத்தி**

(இலட்சம் கிலோவில்)

| 1998-1999 (உற்பத்தி) | 1999-2000 (மதிப்பீடு) | 2000-2001 (மதிப்பீடு) |
|---|---|---|
| 419.66 | 500.00 | 520.50 |

**பதப்படுத்தப்பட்ட தேயிலை**

(இலட்சம் கிலோவில்)

| 1998-1999 (உற்பத்தி) | 1999-2000 (மதிப்பீடு) | 2000-2001 (மதிப்பீடு) |
|---|---|---|
| 98.43 | 115.00 | 119.75 |

**தொழிலாளர் நலன்கள்:**

கழகம் இதுவரை 2,445 குடும்பங்களுக்கு மறுவாழ்வளித்து, 6,659 தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பும் மற்றும் 6,000 தொழிலாளர்களுக்கு தினக்கூலி அடிப்படையில் வேலைவாய்ப்பும் வழங்கி வருகிறது. தொழிலாளர்களின் நலனை முன்னிட்டு அவர்களின் அடிப்படை வசதிகளான வீட்டுவசதி, மின்சாரம், பாதுகாக்கப்பட்ட குடிநீர், கழிப்பறைகள் மற்றும் விடுப்பு ஊதியம், மகப்பேறு, கடன்கள், தொழிலாளர் நலநிதி போன்ற நிதி பலன்களை வழங்கி வருகின்றது. தோட்டப் பகுதிகளில் மருந்தகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், தோட்டப் பகுதிகளில் இரண்டு மருத்துவமனைகள் இயங்கி நவீன வசதிகளைக் கொண்ட இரண்டு மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக தொழிலாளர்களின் நலனுக்காக கழகம் பள்ளிகளை தனியே இயக்கி வருகின்றது.

[2000 ஏப்ரல் 29

**வருவாய் மற்றும் செலவினங்கள்:**

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | தேயிலை விற்பனையில் பெறப்பட்ட வருவாய் | செலவு | வரி செலுத்திய பிறகு நிகர லாபம் (+) நஷ்டம் (-) |
|---|---|---|---|
| 1998-99 | 6417.39 | 5744.85 | (+) 672.54 |
| 1999-2000 | 6880.00 | 6198.00 | (+) 682.00 |
| 2000-2001 | 7226.00 | 6946.00 | (+) )280.00 |

**11. அரசு ரப்பர் கழகம், நாகர்கோவில்:**

அரசு ரப்பர் கழகம், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு வனத் துறையின் 4,279.88 எக்டேர் வன நிலங்களிலுள்ள ரப்பர் தோட்டங்களை குத்தகை எடுத்துள்ளது. 1956ஆம் ஆண்டின் கம்பெனி சட்டத்தின்கீழ் 20-08-1984. ஆம் நாள் அரசு ரப்பர் கழகமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கழகத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ.4 கோடியாகும். இக்கழகத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ2 கோடியாகும். தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் ரப்பர் பயிரிட மண் வளம். தட்பவெப்ப நிலை மற்றும் இட அமைப்பு பொருத்தமாக உள்ளது.

**உற்பத்தி மற்றும் விற்பனை:**

| வருடம் | கள உற்பத்தி அளவு (மெட்ரிக் டன்னில்) | விற்பனை | மதிப்பு (ரூபாய் (இலட்சங்களில்) |
|---|---|---|---|
| 1998-99 | 2985 | 3496.73 | 1184.52 |
| 1999-2000 | 2800 | 2940.00 | 995.85 |
| 2000-2001 | 2900 | 2950.00 | 999.23 |



2000 ஏப்ரல் 29]

**வருவாய் மற்றும் செலவுகள்:**

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | ரப்பர் விற்பனை மூலம் வருவாய் | செலவுகள் | லாபம் (+) நஷ்டம்(-) |
|---|---|---|---|
| 1998-99 | 1293.63 | 1857.86 | (-)564.23 |
| 1999-2000 (வரவு-செலவு பட்டியல்படி) | 1000.00 | 1731.93 | (-)731.93 |
| 2000-2001 (வரவு-செலவு பட்டியல்படி) | 1000.00 | 1689.81 | (-)689.81 |

**முடிவுரை:**

இம்மாநிலத்தில் வனங்களை நிர்வகிக்க "மாநில வனக் கொள்கையை" தமிழக அரசு கொண்டுவர உள்ளது. வனவியலை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றி வன நிர்வாகத்தில் ஒரு புதிய அத்தியாயத்தை இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது. இக்கொள்கையின் அடிப்படையில்தான் தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வனங்களின் அருகாமையிலுள்ள மக்களுக்கு அதிகாரம் அளித்து அவர்களது நம்பிக்கையை பெற்று, அவர்களை கூட்டு நிர்வாக முறையின் மூலம் திட்டமிடுதல் முதல் செயலாக்கம் வரை ஈடுபடுத்தி, அவ்வனங்களிலிருந்து பெறப்படும் பயன்களைப் பங்கிட்டு அளித்து இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டச் செயலாக்க கிராமங்களில், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். பொதுவாக, வனம் சார்ந்த பகுதிகளில், வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள மக்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்த்த இவ்வரசு உறுதி பூண்டுள்ளது.

இவை தவிர, நகர்ப்புற பகுதிகளில் பசுமைப் பகுதிகளை உருவாக்குவதன் மூலம் காற்று மற்றும் நீரிலுள்ள நச்சுத் தன்மையை குறைத்து அப்பகுதிவாழ் மக்களுக்குத் தூய்மையான நீரையும், காற்றையும் வழங்கி சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதிலும் வனத் துறை [illegible] தளராது அளித்திடவும் உறுதி பூண்டுள்ளது.

ஃ ஃ

22334

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.